|| பூரண பரமாத்மனே நமஹ||



# ஞான கங்கை



உயிர் நமது ஜாதி, மனித குலம் நமது மதம்,
இந்து, முஸ்லீம், சீக்கியர், கிறிஸ்துவம் என தனி மதம் இல்லை.

ஜகத்குரு தத்வதர்ஷி சந்த் ராம்பால் ஜி மகராஜின்
சொற்பொழிவுகளின் தொகுப்பான விலைமதிப்பற்ற புத்தகம்

# ‘‘ஞான கங்கை’’

வெளியீட்டாளர்:- பிரசாரம் மற்றும் அனைத்து பக்தகுழு
சத்லோக் ஆசிரமம், இஸ்ஸார்-டோகானா ரோடு, பர்வாலா,
இஸ்ஸார் மாவட்டம், (ஹரியானா)

அறக்கட்டளை விலை ரூ. 20/- மட்டுமே

சந்த் ராம்பால் ஜி மகராஜின் சத்சங்கத்தை (சொற்பொழிவு)

## அவசியம் பார்க்கவும்

| | |
|---|---|
| SADHNA T.V | இரவு 7:30 மணி முதல் 8:30 மணி வரை |
| SHRADDHA TV | மதியம் 2:00 மணி முதல் 3:00 மணி வரை |
| ISHWAR TV | காலை 6:00 மணி முதல் 7:00 மணி வரை |

## சத்லோக் ஆசிரமம்,

இஸ்ஸார்-டோகானா ரோடு, பர்வாலா, இஸ்ஸார் மாவட்டம்,
ஹரியானா (பாரதம்)

**தொடர்பு எண்:- 08222880541, 08222880542, 08222880543, 08222880544, 08222880545**

சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் இருந்து தீட்சை பெறுவதற்கு மற்றும்
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-
**9884644145, 9884644146**

**visit us at : www.jagatgururampalji.org**
**e-mail : jagatgururampalji@yahoo.com**

# பொருளடக்கம்

வரிசை எண். பக்கம் எண்.


முன்னுரை

1. பக்தியின் விதிகள் ........................................................ 1
- தீட்சை பெறுபவர்கள் அவசியம் அறியவேண்டியவை............ 8
- தீட்சை பெறுபவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்....... 9
- சடங்குகள் சம்மந்தமான ஒரு உண்மைக் கதை...................... 15

2. இயற்கையின் உருவாக்கம் ................................................ 21
- ஆன்மாக்கள் எப்படி காலனின் வலைக்குள் சிக்கியது ............ 24
- ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன் ஆகியோரின் பிறப்பின் தோற்றம்........................................................................ 28
- மூன்று குணங்கள் யாவை? ................................................ 30
- நான் வெளிப்படாமல் இருப்பேன் காலனின் (பிரம்) சபதம்...... 31
- பிரம்மா தனது தந்தை காலனை (பிரம்) அடைய முயற்சித்தல்.................................................................... 33
- அன்னை துர்க்கை பிரம்மாவிற்கு சாபம் தருதல்...................... 34
- விஷ்ணு தனது தந்தையை (கால் - பிரம்) அடைய புறப்படுதல் மற்றும் அன்னையின் ஆசி பெறுதல் ................. 36
- பரபிரம் உடைய ஏழு சங் பிரபஞ்சங்களின் படைப்பு............ 43
- புனித அதர்வண வேதத்தில் படைப்பின் ஆதாரம்.................. 45
- புனித ரிக்வேதத்தில் படைப்பின் ஆதாரம்............................ 49
- புனித ஸ்ரீமத் தேவி மஹாபுராணத்தில் படைப்பின் ஆதாரம்..... 55
- புனித சிவ மஹாபுராணத்தில் படைப்பின் ஆதாரம்................ 57
- புனித ஸ்ரீ மத் பகவத் கீதையில் படைப்பின் ஆதாரம்............. 57
- புனித பைபிள் மற்றும் புனித குர்ஆன் ஷெரீப்பில் படைப்பின் ஆதாரம் .................................................................... 61
- மதிப்பிற்குரிய கபீர் பரமேஸ்வரரின் (கவிர்தேவ்) அமுத உரைகளில் படைப்பின் ஆதாரம் ........................................ 63
- மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாகேப் ஜியின் அமுத உரைகளில் படைப்பின் ஆதாரம் ....................................................... 65
- மரியாதைக்குரிய குரு நானக் சாகேப் ஜியின் உரையில் படைப்பின் ஆதாரம் ....................................................... 71
- படைப்புகள் பற்றி மற்ற குருமார்கள் உருவாக்கிய கற்பனை கதைகள் ................................................................... 75

3. அனைவருக்கும் எஜமான் யார்? அவர் எப்படி இருப்பார்? .......... 77
- மரியாதைக்குரிய தரம்தாஸ் சாகேப் ஜி ‘கபீர் பரமேஸ்வரனின்’ சாட்சி ................................................................. 78

• மரியாதைக்குரிய தாது சாகேப் ஜி 'கபீர் பரமேஸ்வரனின்' சாட்சி ........ 79
• மரியாதைக்குரிய மலுக்தாஸ் சாகேப் ஜி ''கபீர் பரமேஸ்வரனின்'' சாட்சி ........ 80
• மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாகேப் ஜி ''கபீர் பரமேஸ்வரனின்'' சாட்சி ........ 80
• மரியாதைக்குரிய குரு நானக்ஜியின் ''குரு கிரந்த சாகேப்'' நூலில் ''கபீர் பரமேஸ்வரரின்'' ஆதாரம் ........ 82
• கபீர் பரமேஸ்வரர் சுவாமி ராமானந்தருக்கு தத்துவஞானம் போதித்தார் ........ 84

4. புனித சாஸ்த்திரங்களும் கபீர் பரமேஸ்வரரின் (கவிர்தேவ்) சாட்சி 96
5. கபீர் பரமேஸ்வரர் நான்கு யுகங்களிலும் வருகிறார் ........ 105
• சத்யுகத்தில் கவிர் தேவ் (கபீர் சாகேப்) சத்சுக்ரத் என்ற பெயரில் தோற்றம் ........ 105
• திரேதாயுகத்தில் கவிர்தேவ் (கபீர் சாகேப்) முனிந்தர் என்ற பெயரில் தோற்றம் ........ 111
• துவாபரயுகத்தில் கவிர்தேவ் (கபீர் சாகேப்) கருணாமய என்ற பெயரில் தோற்றம் ........ 114
• கலியுகத்தில் கபீர் சாகேப் ஜியின் (கவிர்தேவ்) தோற்றம்........ 118

6. பூரண குருவை அறிதல் (புனித சாஸ்திர நூல்கள் மூலம்).......... 124
• மூன்று முறையில் மந்திர ஜபம் தருவதற்கான ஆதாரம்.......... 127

7. குருவை துன்புறுத்தினால் தண்டனை........ 134
8. வழி தவறியவர்களுக்கு மார்க்கம் ........ 137
• இறை தாகம் கொண்ட வசந்த் சிங் சைனிக்கு வழி கிடைத்தது 137
• ஒரு அற்புத அதிசயம் ........ 141
• சாத்தியமில்லாததை சாத்தியமாக்கிய பரமேஸ்வரர் ........ 142
• இறைவன் என்றால் இப்படி ........ 144
• குரு என்றால் இப்படி அல்லவா ........ 146
• இறைவனின் அருளால் மகனின் உயிர் காப்பாற்றப்பட்டது .... 147
• பாவங்களை பரமேஸ்வரர் மட்டுமே அழிக்க முடியும் ........ 149

9. கபீர் சாகேப்ஜியுடன் காலனின் பேச்சு வார்த்தை ........ 154
10. உலகம் வென்ற குரு (சந்த் ராம்பால் ஜி மகராஜின் தலைமையில், இந்தியா உலக மத குருவாக போற்றப்படும்) ........ 157
• சந்த் ராம்பால்ஜி மகராஜ் பற்றி ''நாஸ்டர்டாமஸின்'' கணிப்புக்கள் ........ 157
• சந்த் ராம்பால் ஜி மகாராஜ் பற்றி மற்ற தீர்க்கதரிசிகளின் கணிப்புக்கள் ........ 162

- சந்த் ராம்பால்ஜி மகராஜ் பற்றி சுருக்கமான அறிமுகம் ........... 164

11. ஆதாரங்களுக்கு - போட்டோ காபி பார்க்கவும் ...................... 170

12. உண்மையான ஞானப்பிரகாச விஷயம் (பரமேஸ்வரனை பற்றி சாஸ்திரங்கள் கூறுவது என்ன?) ....................................... 186
    - புனித கீதையின் ஞானத்தை கூறியது யார்? ........................ 187
    - ஸ்ரீமத் பகவத் கீதையின் சாரம் ............................................ 194
    - மூன்று குணங்கள் யாவை? - ஆதாரங்களுடன்..................... 202
    - முக்குண மாயை ஆன்மாவை மோட்சம் அடைய விடாது ...... 205
    - மற்ற தெய்வங்களை (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) வழிபடுவது அறியாமை........ 208
    - புனித நான்கு வேதங்களில் உள்ள வழிபாட்டின் பலன் சொர்க்கம் மற்றும் மகாசொர்க்கம் அடைவது, முக்தி அல்ல ................. 209
    - சாஸ்திரத்திற்கு எதிரான வழிபாடு வீழ்ச்சிக்கு காரணம்........... 209
    - சிரார்த்தம் செய்பவர் பித்ருக்களை அடைவார் முக்தி அடையமாட்டார் .......................................................... 210
    - தத்துவஞானம் அடைந்த பிறகு பக்தி தொடங்குகிறது........... 214
    - கீதையை அருளிய (பிரம்) காலனின் கடவுளும் பூரண பிரம் பரமேஸ்வரர் ஆவார்....................................................... 215
    - பிரம் உடைய பக்தன் பிரம்ம காலனையும் பூரண பிரம் உடைய பக்தன் பூரண பரமேஸ்வரனை அடைகிறான் ..................... 216
    - பிரம்ம காலனின் (ஷர் புருஷ்) பக்தி உகந்ததல்ல................. 217
    - சந்தேகங்களுக்கு தீர்வு ..................................................... 221
    - குரு பதவி மற்றும் மகந்த் (மகான்களின்) பாரம்பரியம் பற்றிய விளக்கம்................................................................. 222
    - புனித யாத்திரை மற்றும் தீர்த்த ஸ்தலங்கள் பற்றிய விபரம்..... 224
    - சொர்க்கத்தின் விளக்கம் .................................................... 232
    - கீதையை அருளிய (பிரம்) காலனின் தோற்றம் பற்றிய குறிப்பு.................................................................. 239
    - கபீர் சாகேப் விபீஷணனையும் மண்டோதரியையும் சரணாகதியாக ஏற்று கொள்ளுதல்..................................... 241
    - துவாபரயுகத்தில் இந்திரமதியை சரணாகதியாக ஏற்றுதல்....... 244
    - புனித புராணங்களின் ரகசியம் .......................................... 248

13. சாஸ்திர விவாதத்தின் பொருள் ........................................... 267

14. வழி தவறியோருக்கு சத்திய மார்க்கம் ................................. 275


*****

# தேவநாகரி எழுத்துக்கள்

வடமொழிச் சொற்களைப் பிழையின்றி உச்சரிக்க, ஆங்கில எழுத்துக்களின் துணையுடன் 2, 3, 4 என்ற குறியீடுகளுடன் வடமொழி எழுத்துக்களுக்கு இணையான தமிழ் ஒலி வடிவங்கள் தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| க<br>KA | க$_2$<br>KHA | க$_3$<br>GA | க$_4$<br>GHA |
| ச<br>CA | ச$_2$<br>CHA | ஜ<br>JA | ஜ̣<br>JHA |
| ட<br>TA | ட$_2$<br>TTA | ட$_3$<br>DA | ட$_4$<br>DDA |
| த<br>THA | த$_2$<br>THHA | த$_3$<br>DHA | த$_4$<br>DHHA |
| ப<br>PA | ப$_2$<br>PHA | ப$_3$<br>BA | ப$_4$<br>BHA |
| ஷ<br>SHA | ஸ<br>SA | ஞ<br>GNA | க்ஷ<br>KSHA |

# முன்னுரை

ஆதிகாலத்திலிருந்தே மனிதன் பரமசாந்தி, சுகம் மற்றும் அழிவற்ற தன்மை தேடுவதில் நாட்டம் கொண்டுள்ளான். தன்னுடைய திறமையால் விடாமுயற்சி செய்தும் அவனால் அவைகளை அடைய முடியவில்லை. இவை அடைவதற்கான பாதையின் பூரண ஞானம் இல்லாததே இதற்குக் காரணம். அனைத்து உயிரினங்களும், எந்த வேலையும் செய்யாமல் சுவையான உணவு, அழகான ஆடைகள், உயர்ந்த மாளிகை, பூந்தோட்டம், இனிய சங்கீதம், ஆடிப்பாடி குதித்து மகிழ வேண்டும், நோய், முதுமை மற்றும் இறப்பு வரக்கூடாது என்று விரும்புகின்றன. ஆனால் நாம் வாழும் உலகில் இது சாத்தியம் இல்லை. ஏனென்றால் இவ்வுலகம் அழியக்கூடியது, எல்லா பொருட்களும் அழியக்கூடியது. இவ்வுலகை ஆட்டிப்படைப்பவன் பிரம் – காலன் (கால்) ஆவான், தினமும் ஒரு லட்சம் மனிதர்களின் சூட்சம உடல்களை உண்ணுகிறான். அவன் அனைத்து ஜீவன்களையும் பாவம்–புண்ணியம், கர்மவினை, மாயை போன்ற வலையில் சிக்கவைத்து, மூவுலக கூண்டில் அடைத்து வைத்துள்ளான். கபீர் சாகேப் கூறுகிறார்:–

கபீர், தீன் லோக் பின்ஜரா பயா பாப் புண்ய தோ ஜால் /
சபீ ஜீவ் போஜன் பயே ஏக் கானே வாலா கால் //
கரீப், ஏக் பாபி ஏக் புண்ய ஆயா, ஏக் ஹை சூம் தலேல் ரே /
பினா பஜன் கோயி காம் நஹி ஆவே, சப் ஹை ஜம் கி ஜேல் ரே //

{கர்மவினை – மாயை :– கர்மா[1] – நியதி – நாம் செய்வதையே திரும்ப பெறுவோம் (அனுபவிப்போம்). மாயை[2] – வேதங்களிலும் கீதையிலும் பிரம் – காலன் வழங்கிய ஞானம்.

உதாரணமாக :– கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1 முதல் 4 வரை மற்றும் அத்தியாயம் 4 ஸ்லோகம் 31, 32, 34, அத்தியாயம் 7 ஸ்லோகம் 18ல், கீதையின் ஞானத்தை கூறிய பிரம் (கால்) இவ்வாறு கூறியுள்ளார். இந்த உலகம் தலைகீழான மரம் போன்றது. அதன் வேர்கள் மேலே மற்றும் கிளைகள் மூன்று குணங்களின் வடிவில் கீழே உள்ளன. இந்த உலகம் போன்ற மரத்தின் முழு விளக்கம், அதாவது தண்டு என்பவர் யார்? பெரிய கிளை யார்? மற்றும் மூன்று கிளைகளும் யார்? என்று விளக்குபவர் பூரண ஞானி அதாவது தத்வதர்ஷி ஞானி ஆவார். இங்கே அதாவது கீதையின் ஞானத்தை கூறும் எனக்கும் இந்த உலக படைப்புகளின் பூரண ஞானம் இல்லை. ஏனென்றால் இதன் ஆதியும் (ஆரம்பமும்) அந்தமும் (முடிவும்) எனக்குத் தெரியாது. எனவே நீ தத்துவதரிசி ஞானியை நாடு. அந்த தத்வதரிசி ஞானி கூறும் பக்தி மார்க்கத்தின்படி வழிபாடு செய்து அந்த ஆதி பரம இடத்தையும், பரமேஸ்வரனையும் அடைய வேண்டும். அங்கு சென்ற சாதகன் மீண்டும் இவ்வுலகிற்கு வருவதில்லை. அதாவது பூரண முக்தி அடைகிறான். யாரிடமிருந்து இந்த உலகம் போன்ற மரம் விரிவடைந்ததோ, யாரால் இந்த பிரபஞ்சம் படைக்கபட்டதோ அந்த பரமேஸ்வரனை மட்டுமே வணங்க வேண்டும். நானும் (கீதை ஞானத்தை கூறுபவர்) அதே பரமேஸ்வரனின் சரணடியில் இருக்கிறேன். கீதை அத்தியாயம் 3 ஸ்லோகம் 31, 32 இல், கீதையில் கூறிய ஞானம் எனது கொள்கையின் கருத்து என்று கூறப்பட்டுள்ளது. இது பூரண ஞானம் இல்லை என்றாலும், சாஸ்திர முறைக்கு மாறான மற்ற வழிபாடுகளைவிட சிறந்தது. என்னுடைய கொள்கைபடி வழிபாடு செய்யாதவன் வீண் முயற்சிகளை செய்கிறான். பூரண பரமாத்மாவின் வழிபாட்டின் பலன்களை ஒப்பிடுகையில், கீதையின்

ஞானத்தை அளிப்பவர், கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18ல் தனது வழிபாட்டால் கிடைக்கும் பலன்களை தாழ்ந்ததாகக் கூறியுள்ளார். இவ்வாறு பிரம் – காலன் அளித்த ஞானம் மாயையானது}

எந்த ஒரு உயிரும் இந்தக் கூண்டிலிருந்து விடுபடக்கூடாது, மேலும் எந்த ஒரு ஜீவனும் தன்னுடைய ஆதி இடமான சத்யலோகத்தைப் பற்றி அறியக்கூடாது என்று காலன் விரும்புகிறான். எனவேதான், தனது முக்குண மாயை கொண்டு ஜீவன்களை குழப்பி வைத்துள்ளான். அப்படியானால் மேற்குறிப்பிட்ட ஆசைகள் எங்கிருந்து வந்தது? இங்கு அப்படி எதுவும் இல்லை. நாம் இறந்தே ஆகவேண்டும், இங்கு துக்கமும், துயரமும் தான் இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட ஆசைகள் போல் நாம் சத்யலோகத்தில் முன்பு வாழ்ந்தோம். ஆனால் நாம் சுய விருப்பத்தால் காலனின் லோகத்தில் வந்து மாட்டிக் கொண்டோம், சத்யலோகத்தின் வழியும் மறந்துவிட்டோம். கபீர் சாகேப் ஜி கூறுகிறார்:–

இச்சா ரூபி கேலன் ஆயா, தாதேன் சுக் சாகர் நஹி பாயா /

இந்த (பிரம்) காலன் உடைய லோகத்தில் சுகம் மற்றும் அமைதிக்கு இடமே இல்லை. முக்குண மாயையால் உண்டாகும் காமம், கோபம், மோகம், பேராசை, அகங்காரம், வெறுப்பு, இன்பம், துன்பம், லாபம், நட்டம், மானம், அவமானம் ஆகியவற்றால் அனைத்து உயிர்களும் துன்பம் அடைகின்றன. ஒரு உயிர் மற்ற உயிரை கொன்று சாப்பிடுகிறது, பெண்களை மானபங்கம் செய்கின்றன, கொள்ளை அடிக்கின்றன, நான்கு புறங்களும் தீபோன்று இருக்கின்றது. நீங்கள் அமைதியாக இருக்க விரும்பினாலும், மற்றவர்கள் விடுவதில்லை. உங்கள் செல்வம் களவாடப்படுகிறது, விபத்துகள் நடக்கின்றன, அரசன் ஆண்டியாகிறான், வியாபாரிகள் நஷ்டப்படுகிறார்கள், நோயால் ஆரோக்கியம் கெடுகிறது, மொத்தத்தில் ஒருவருக்கும் பாதுகாப்பில்லை. அரசர்களின் சாம்ராஜ்யம், பணக்காரர்களின் செல்வம், பலமானவர்களின் பலம் மற்றும் நம் அனைவரின் உடலும் திடீரென்று பறிக்கப்படுகின்றன. தாய் தந்தையார் இருக்க பிள்ளைகள் இறந்து போகிறார்கள், பிறந்த சிசுவின் தாய், தந்தை இறக்கிறார்கள், இளம் பெண்கள் விதவையாகி துன்பத்திற்கு ஆளாகின்றன. இது வாழ்வதற்குத் தகுதியான இடமா? என சிந்திக்க வேண்டும். ஏனென்றால், நாம் கட்டாயத்தில் வாழ்கிறோம். இந்தக் காலனின் கூண்டிலிருந்து விடுபட நமக்கு வழி தெரியவில்லை, நாம் மற்றவருக்கு துன்பம் தந்து நாமும் சகித்துக்கொள்ள பழகிவிட்டோம். இவ்வுலகின் அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபட நினைத்தால், நீங்கள் பரமேஸ்வரரிடம் (பரம் அக்ஷர பிரம்) தஞ்சம் அடைய வேண்டும். (பிரம்) காலன் பரமேஸ்வரருக்கு பயந்தவன் ஆவான். எனவே பூரண குரு மூலம் பரமேஸ்வரனிடம் சரணடையும் ஆன்மாவுக்கு மேற்கூறிய துன்பங்களை காலன் கொடுக்க முடியாது. பக்தி செய்யும் வரை துன்பம் நம்மை அணுகாது. “ஞான கங்கை” எனும் இந்த நூலைப் படிப்பவர்கள் நாம் சத்யலோகத்தை மறந்துவிட்டோம் என்பதை அறிந்து கொள்வார்கள். சத்யலோகத்தில் பிறப்பு, இறப்பு, முதுமை, துன்பம், சண்டை, சச்சரவு, நோய், நொடி எதுவும் இல்லை, அனைத்தும் பரமேஸ்வரர் அருள்வார்.

கரிப்தாஸ் ஜி மகராஜின் உரையில் உள்ள ஆதாரம் :–

பின் ஹி முக் சாரங் ராக் சுன், பின் ஹி தந்தி தார் /
பினா சுர் அல்கோஜே பஜே, நகர் நாச் குமார் //
கன்டா பாஜே தால் நக், மன்ஜிரே டஃப் ஜான்ஜ் /

முர்ளி மதுர் சுஹாவனி, நிஸ்பாஸர் அவுர் ஸான்ஜ் //
பீன் பிஹங்கம் பாஜஹின், தரக் தம்பூரே தீர் /
ராக் கண்ட் நஹீ ஹோத் ஹை, பந்த்யா ரஹத் ஸமீர் //
தரக் நஹீ தோரா நஹீ, நாஹீ கஷீஸ் கபாப் /
அம்ருத் ப்யாலே மத் பீவைன், ஜ்யோன் பாடி சவைன் ஷராப் //
மத்வாலே மஸ்தான்புர், கலி-கலி குல்ஜார் /
சங்க் ஷராபி பிரத் ஹை, சலோ தாஸ் பஜார் //
சங்க்-சங்க் பத்னி நாசே, காவைன் ஷப்த சுபான் /
சந்தர பதன் சூரஜ்முகி, நாஹி மான் குமான் //
சங்க் ஹிண்டோலே நூர் நக், ஜூலை சந்த் ஹஜூர் /
தகத் தனி கே பாஸ் கர், ஏசா முலக் ஜஹூர் //
நதி நாவ் நாலே பகேன், சுடே ஃபுஹாரே சுன்ன /
பரே ஹோத் சர்வர் சதா, நஹின் பாப் நஹின் புண்ய //
நா கோயி பிக்சுக் தான் தே, ந கோய் ஹார் வ்யவஹார் /
நா கோயி ஜன்மே மரே, ஐசா தேஷ் ஹமார் //
ஜஹான் சங்கோன் லஹர் மெஹர் கி உப்ஜே,
கேஹர் ஜஹான் நஹின் கோயீ /
தாஸ்கரீப் அசல் அவினாஷி, சுக் கா சாகர் சோயீ //

சத்யலோகத்தில் அமைதியும் மகிழ்ச்சி மட்டுமே நிலவுகிறது. நாம் அங்கு செல்லாதவரை பரம சாந்தியும் மகிழ்ச்சியும் அழிவற்ற வாழ்க்கையும் அடைய முடியாது. பூரண குருவிடம் தீட்சை பெற்று, வாழ்நாள் முழுவதும் பரமேஸ்வரரின் பக்தி செய்தால் மட்டுமே சத்யலோகம் செல்ல முடியும். இந்த "ஞான கங்கை" புத்தகம் மூலம் உங்களுக்கு சொல்ல விரும்புவது, எந்த ஒரு தெய்வத்திற்கும், மதத்திற்கும் தீமை செய்யாமல், அனைத்து புனித நூல்களில் மறைந்துள்ள ரகசியங்களை வெளிப்படுத்தி, இப்பொழுதுள்ள சாதுக்கள், குருக்கள் எவராலும் அறியஇயலாத உண்மையான பக்தி மார்க்கத்தை உங்களுக்கு காட்ட விரும்புகிறோம். கபீர் சாகேப்ஜி சொல்கிறார்:

வேத் கதேப் ஜூடே ந பாய், ஜூடே ஹைன் ஜோ ஸம்ஜே நாஹி //

எல்லோரும் தங்கள் யூகத்தின்படியும், போலி குருமார்களின் வழி காட்டுதலின்படி சாஸ்திரத்திற்கு மாறான பக்தி சாதகம் செய்கிறார்கள். இதனால் மனதில் அமைதியோ, உடல் நலமோ, தொழில் லாபமோ, இறைவனின் தரிசனமோ, மோட்சமோ கிடைப்பதில்லை. நான் யார், எங்கிருந்து வந்தேன், ஏன் பிறக்கிறேன், ஏன் இறக்கிறேன், ஏன் துன்பப்படுகிறேன்? முடிவாக யார் இதையெல்லாம் செய்வது, இறைவன் யார், எப்படி இருப்பார், எங்கே இருக்கிறார், எப்படிக் காணலாம், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரின் தாய் தந்தை யார், எப்படி பிரம்ம காலனின் சிறையிலிருந்து விடுபட்டு சத்யலோகம் செல்வது? இவை அனைத்தும் இப்புத்தகத்தின் மூலம் விளக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகம் சத்குரு ராம்பால் ஜி மகாராஜின் சொற்பொழிவுகளின் தொகுப்பாகும், இது வேதங்களில் பதிந்துள்ள உண்மைகளை ஆதாரமாகக் கொண்டது. இந்த நூலை முழுமனதுடன் படித்து பின்பற்றும் வாசகர்களின் மோட்சம் சாத்தியமாகும் என்பதில் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது.

ஆதம் பிரான் உத்தார் ஹீ, ஐசா தரம் நஹின் அவுர் /
கோட்டி அஷ்வமேக் யக்ஞ, சகல் சமானா பொர் //
ஜீவ் உத்தார் பரம் புண்ய, ஐசா கரம் நஹின் அவுர் /

மருஸ்தல் கே ம்ருக் ஜ்யோன், சப் மர் கயே தோர்-தோர் //

பொருள்:- ஒரு ஆன்மாவை சத்யபக்தி மார்க்கத்தில் செலுத்தி மோட்சம் அடைய வைத்தால், கோடி அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும், இதை விட உயர்ந்த தர்மம் வேறு எதுவும் இல்லை. ஆன்மாவின் மோட்சத்திற்காக செய்யும் வேலையை விட சிறந்த வேலை எதுவும் இல்லை. தன் வயிற்றை நிரப்ப பறவைகளும் நாள் முழுவதும் அலைகின்றன, எல்லா மனிதர்களும் முக்தியின் வேலையை செய்யாமல் பாலைவன மான் போல ஓடி-ஓடி அலைந்து சாகின்றன. மான் தூரத்தில் உள்ள நிலத்தைப் பார்த்து நீர் என மீண்டும் மீண்டும் ஓடிக்கொண்டே, இறுதியில் தாகத்தில் தவித்து இறக்கிறது. அதேபோல, இந்த காலனின் லோகத்தில் உள்ள நாம், அந்த மானை போலவே நிம்மதியை தேடி ஓடுகிறோம். பிள்ளையில்லாதவன் பிள்ளைப் பெற வேண்டும் என்று ஏங்க, பிள்ளைகள் பெற்றவனோ பல பிரச்சனைகளில் சிக்கித் தவிக்கிறான். ஏழை பணத்திற்கு ஏங்க, பணக்காரன் பல சிக்கலில் தவிக்கிறான். ராஜ்யத்தைப் பெற்றால் சந்தோசம் என்று கருதுகின்றனர், ஆனால் மந்திரிமார்களுக்கு (அமைச்சர், முதலமைச்சர், பிரதமர், ஜனாதிபதி) கனவிலும் நிம்மதி கிடையாது. நான்கு பேர் கொண்ட குடும்பத்தலைவனே நிம்மதி அடையாதபோது நாட்டின் தலைவனுக்கு எங்கே நிம்மதி. அரசன் தனது துயரம் மறக்க மது குடிக்கிறான். மக்களிடம் வரி சேர்த்து மாயையில் மாட்டி, அடுத்த பிறப்பில் கால்நடைகளாக பிறந்து அந்தந்த மனிதனிடம் திருப்பித் தருகிறான். போலி சாதுக்களிடம் தீட்சை பெற்று பக்தி செய்யும் மனிதன் மகிழ்ச்சிக்கு ஏங்கி துன்பமே அடைகிறான். இந்த ஞானம் அறிவாளிகளுக்கு இதயத்தில் குடியேறும். அறியாதவர்களுக்கு புரிதலுக்கு அப்பாற்பட்டது. கபீர் சாஹேப் கூறுகிறார்:-

கபீர், ஞானி ஹோ தோ ஹிருதய் லகாயி, மூர்க் ஹோ தோ கம் நா பாயி /

மேலும் அறிந்துகொள்ள இந்த “ஞான கங்கை” நூலை படியுங்கள். இந்த நூலைப்படித்த உச்ச நீதி மன்றத்தின் ஒரு உயர் அதிகாரி திரு. சுரேஷ் சந்திரா, இதை “ஞான கடல்” என்று அழைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

## கலியுகத்தில் சத்யுகம்

(சந்த் ராம்பால் ஜி மகராஜ் அவர்களின் சொற்பொழிவிலிருந்து)

அதர்மம் இல்லாத, அமைதி நிலவும் யுகத்தை சத்யுகம் என அழைக்கப்படும். தந்தைக்கு முன்னர் மகன் இறப்பதில்லை, பெண் விதவையாக மாட்டாள், நோய் நொடி இருக்காது, அனைவரும் பக்தியுடன் இருப்பர்கள். ஆண்டவனின் பயத்திலும் கர்மவினையைப் பற்றி அறிந்து மனம், வாக்கு, செயலால் யாருக்கும் துன்பம் தரும் காரியத்தைச் செய்ய மாட்டார்கள். ஆணும் பெண்ணும் புனிதம் காப்பாற்றுவார்கள். பசுமை பெருகி இருக்கும். அனைவரும் வேதங்களின்படி பக்தி செய்வார்கள். தற்போது கலியுகம் உள்ளது, அநீதி அதிகரித்துள்ளது. கலியுகத்தில் மனிதனுக்கு பக்தியில் நம்பிக்கை இருக்காது, பக்தி செய்தாலும் சாஸ்திர விதிகளை துறந்து மனம் போன போக்கில் பக்தி செய்கிறார்கள். இதனால் இறைவனிடமிருந்து பலன் கிடைக்காது. இது கீதை அத்தியாயம் 16, ஸ்லோகம் 23, 24 இல் சொல்லப்பட்டுள்ளது. எனவே, பலர் நாத்திகவாதி ஆகிறார். பணக்காரன் ஆவதற்காக லஞ்சம், திருட்டு, போன்ற வழியில் செல்கிறார்கள். இவைகள் இறைவனுக்கு எதிரானது

என்பதால் இயற்கையான துன்பத்திற்கு ஆளாவார்கள். விதிகளுக்கு மேலே கிடைக்காது என்ற இறை விதியை மனிதன் மறந்து விடுகிறான். தவறான வழியில் சேர்ந்த செல்வம் நிலைக்காது. ஒருவன் தன் மகனை மகிழ்வாக வைக்க தவறான வழிகளில் பணம் சேர்த்தான். சில நாட்கள் பிறகு அந்த மகனுக்கு இரண்டு சிறுநீரகங்களும் பழுதாகி, சிகிச்சைக்கு மூன்று லட்சம் செலவாகி, அவன் கடனாளி ஆனான். பின்னர் மகனுக்கு திருமணம் செய்து வைத்தான். ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு விபத்தில் மகன் இறந்து விட்டான். இப்பொழுது மகனும் இல்லை, தவறான வழியில் சேர்ந்த செல்வமும் இல்லை. மிஞ்சியது என்ன? அவன் செய்த பாவம் மட்டுமே. யார் யாரை வஞ்சித்தானோ அவர்களுடைய கால்நடையாக பசு, காளை, கழுதையாகப் பிறப்பெடுத்து, தன் கடனைக் கழிப்பான். ஆனால் சாஸ்திர முறைப்படி பரம் அக்ஷர் பிரம் (இறைவன்) உடைய பக்தி செய்யும் மனிதர்களுடைய விதியை இறைவன் மாற்றிவிடுகிறார்.

சத்யுகத்தில், எவரும் மாமிசம், மது, புகையிலை, இவற்றைப் பயன்படுத்துவது இல்லை. ஏனென்றால், இவைகளின் பாவ பலன்களை அவர்கள் அறிந்தவர்கள்.

* மாமிசம் உண்பது பாவம் :- ஒரு சமயம் ஒரு குரு தன் சீடனுடன் சென்று கொண்டிருந்தான். அங்கு ஒரு மீனவர் குளத்தில் மீன்களைப் பிடித்துக் கொண்டிருந்தார். மீன்கள் கரையில் துடிதுடித்து இறந்தன. அதைப் பார்த்த சீடன், குருவே! இவன் செய்யும் பாவத்திற்கு என்ன தண்டனை? என்று கேட்டான். நேரம் வரும்போது சொல்வதாக குரு சொன்னார். நான்கைந்து வருடங்களுக்குப் பிறகு அதே குருவும் சீடனும் ஒரு காட்டு வழியாக சென்று கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு யானைக் குட்டி கதறி கொண்டிருந்தது. இரண்டு நெருக்கமான மரங்களுக்கு இடையே மாட்டிக் கொண்டது, உரசிக்கொண்டு வெளியே வந்ததால் அதன் தோல் தீய்ந்து அதில் காயம் உண்டாகி, அதில் புழுக்கள் உருவாகி நரக வேதனையை அனுபவித்து வந்தது. சீடன் கேட்டான், குருவே! இந்த யானைக்குட்டி என்ன பாவம் செய்தது? குரு சொன்னார், முன்பு ஊருக்கு வெளியே உள்ள குளத்திலிருந்து மீன்களை வெளியே எடுத்துக்கொண்டிருந்த அதே மீனவர்தான் இது என்றார்.

* மது அருந்தலின் பாவங்கள் :- மது அருந்துபவன் 70 ஜென்மங்கள் நாயாக பிறந்து மலம் உண்டு அலைவான். இன்னும் பல துன்பங்களை அனுபவிப்பான். மது உடலைக் கெடுக்கும். உடலில் நான்கு முக்கிய பாகங்களான கல்லீரல், நுரையீரல், இதயம் மற்றும் சிறுநீரகம் பழுதாகி விடும். மது குடித்தவன் மிருகமாகிறான். மலம், மூத்திரம், வாந்தியில் உழல்கிறான். பண விரயம், மான நட்டம், அமைதி குலைந்த வீடு இவையெல்லாம் மதுவால் வரும் கேடுகள். சத்யுகத்தில் மதுவின் பயன்பாடு இல்லை. அனைவரும் இறைவனின் விதியை அறிந்து சுகமான வாழ்க்கை வாழ்ந்தனர்.

கபீர், மதிரா பீவே கட்வா பானி, சத்தர் ஜனம் ஸ்வான் கே ஜானி ।

* தவறான நடத்தையின் பாவங்கள் :-

பர்த்வாரா ஸ்த்ரி கா கோலே, சத்தர் ஜன்ம அந்தா ஹோ டோலே ।

கபீர் பரமேஸ்வர் சொல்கிறார், மாற்றான் மனைவியோடு தவறு செய்பவன், 70 ஜென்மம் குருடனாய் துன்பப்படுவான். இது எரியும் தீயில் கை வைத்தல் போன்றது. விபச்சாரியிடம் செல்வது என்பது மாற்றான்

தோட்டத்தில் விதைப்பது போன்றது. பக்குவமான கோதுமை விதைகளை மூட்டை கட்டி கிணற்றில் போடுவது போன்றது. அவன் மகாமூடன், அறிவுள்ளவன் ஒருபோதும் இந்த தவறை செய்ய மாட்டான். இது குடிகாரனும், வெட்கமற்றவனும் செய்யும் காரியம். ஒரு விசயத்தை ஆழமாக சிந்தியுங்கள். உங்கள் உடலில் இருந்து ஒரு பொருள் வெளியேறும் பொழுது ஆனந்தம் கிடைக்கும் என்றால், அப்பொருள் உடலுக்கு உள்ளேயே வைத்து காக்கப்படுமானால், எவ்வளவு இன்பம் கிட்டும். நீண்ட ஆயுளும் ஆரோக்கியமான அறிவும், சுறுசுறுப்பும் கிடைக்கும். எந்தப் பொருள் விலைமதிப்பற்ற குழந்தைச் செல்வத்திற்கு விதை ஆகிறதோ, அதை அழிப்பது குழந்தையைக் கொல்வதற்கு சமமாகும். எனவே தவறான நடத்தை மற்றும் தேவையில்லாத உல்லாசம் தடை செய்யப்பட்டதாகும்.

- புகையிலை பயன்பாட்டின் பாவங்கள் :- பரமேஸ்வர் கபீர்ஜி சொல்கிறார்,

சுராபான் மத் மான்சாஹாரி, கமன் கரே போகே பர் நாரி /
சத்தர் ஜன்ம கடத் ஹைம் ஷீஷம், சாக்ஷி சாஹிப் ஹை ஜக்தீஷம் //
பர் துவாரா ஸ்த்ரி கா கோலை, சத்தர் ஜன்ம அந்தா ஹோ டோலை /
சோ நாரி ஜாரி கரே, சுராபான் சோ பார்,
ஏக் சிலம் ஹுக்கா பரே, டூபை காலி தார் //

மேற்கூறியபடி ஒருமுறை மது அருந்துபவன், எழுவது ஜென்மம் மலம் தின்னும் நாயாகப் பிறக்கிறான். பரத்தையை நாடுபவன் எழுவது ஜன்மம் குருடனாகப் பிறக்கிறான். மாமிசம் உண்பவன் துன்பமடைகிறான். ஒரு முறை புகையிலை புகைப்பவருக்கும் மேலும் புகைக்க உதவுபவருக்கும் மேற்கூறிய அனைத்து பாவங்களையும் நூறு முறை செய்யும் அளவிற்கு பாவம் ஆகும். புகையிலை, குட்கா, சிகரெட், பீடி உட்கொள்பவர்கள் மகா பாவத்திற்கு ஆளாகிறார். பீடி, சிகரெட், குட்கா புகைப்பவர்களின் புகையால் சிறு குழந்தைகளும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களும் கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகி உடல்நலத்தை கெடுகிறார்கள்.

## அவதாரத்தின் பொருள்

"அவதாரம்" என்றால் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்து கீழே வருவது. இது குறிப்பாக பூமியில் வந்து சில அற்புதங்களை நிகழ்த்தும் புனித ஆன்மாக்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அவர் பரமாத்மாவால் (இறைவன் கடவுள்) அனுப்பப்பட்டவர் அல்லது பரமாத்மா தானே அவதரித்தல் என எண்ணப்படுகிறது. ஸ்ரீமத் பகவத் கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1 முதல் 4, மற்றும் 16, 17ல் மூன்று புருஷ் (கடவுள்) பற்றிய ஞானம் உள்ளது.

∗ 1. ஷர் புருஷ் :- இவர் பிரம் என்றும் அழைக்கப்படுகிறார். "ஓம்" என்பது இவரது வழிபாட்டின் மந்திரம் ஆகும். கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 13 இல் இதன் ஆதாரம் உள்ளது.

∗ 2. அக்ஷர் புருஷ் :- இவர் பரபிரம் என்றும் அழைக்கப்படுகிறார். "தத்" (இது குறியீடு) என்பது இவருடைய வழிபாட்டின் மந்திரம் ஆகும். கீதை அத்தியாயம் 17 ஸ்லோகம் 23 இல் இதன் ஆதாரம் உள்ளது.

∗ 3. பரம் அக்ஷர் புருஷ் : இவர் உத்தம புருஷ், பரம் அக்ஷர் பிரம், பரமாத்மா (இறைவன்) என்று அழைக்கப்படுபவர். மேல் குறிப்பிட்ட ஷர் புருஷ் மற்றும் அக்ஷர் புருஷ் இரண்டிலிருந்தும் வேறுபட்டவர். கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 1 இன் விடையாக அத். 8 ஸ்லோகம் 3ல் கூறிய

பரம் அக்ஷர் புருஷ் (பரம் அக்ஷர் பிரம்) இவர்தான். சத் (இது குறியீடு) என்பது இவருடைய மந்திரமாகும். இந்த பரமேஸ்வரர் மூலம்தான் பக்தனுக்கு அமைதியும், ஆதி இடமான சத்யலோகமும் கிடைக்கும். இதன் ஆதாரம், கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 62 இல் உள்ளது, இந்த பரம் அக்ஷர் பிரம், கீதையின் ஞானத்தை அளிப்பவரிடமிருந்து வேறுபட்டவர். இதுபற்றி மேலும் அறிய “கீதா தேரா கியான் அம்ரித்” என்ற புத்தகத்தை சத்லோக ஆசிரமம், பர்வாலா, ஹரியானாவிலிருந்து பெற்றுக் கொள்ளவும். மேலே கூறியது போல் அவதாரங்கள் இரண்டு வகையில் நிகழ்கிறது. இப்போது குறிப்பாக மூன்று புருஷ் (கடவுள்) இருப்பதை நீங்கள் அறிவீர்கள். நமக்கு முக்கியமாக இரண்டு கடவுள்களின் பங்களிப்பு உள்ளது.

1. ஷர் புருஷ் (பிரம்):- இவர் கீதை அத்தியாயம் 11 ஸ்லோகம் 32 இல், தன்னை கால் என அழைப்பவர்.

2. பரம் அக்ஷர் புருஷ் (பரம் அக்ஷர் பிரம்):- இவரை பற்றி கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 3, 8, 9, 10, அத் 4 ஸ்லோகம் 17, அத் 15 ஸ்லோகம் 1, மற்றும் அத் 18 ஸ்லோகம் 62 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரம் (காலன்) உடைய அவதாரங்கள் பற்றிய விவரம்

கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 7:

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम्॥ ७॥

யதா$_3$ யதா$_3$ ஹி த$_4$ர்மஸ்ய க்$_3$லானிர் ப$_4$வதி பா$_4$ரத
அப்$_4$யுத்தா$_2$னம் அத$_4$ர்மஸ்ய ததா$_3$த்மானம் ஸ்ருஜாம்ய் அஹம் //7//

**மொழிபெயர்ப்பு:-** (பா$_4$ரத) பாரதா! (யதா$_3$ யதா$_3$) எப்பொழுதெல்லாம் (த$_4$ர்மஸ்ய) தர்மத்தின் (க்$_3$லானிர்) இழப்பு மற்றும் (அத$_4$ர்மஸ்ய) அநியாயம் (அப்$_4$யுத்தா$_2$னம்) அதிகரிப்பு (ப$_4$வதி) நடக்கிறதோ (ததா$_3$) அப்பொழுதெல்லாம் (அஹம்) நான் (ஆத்மானம்) என்னுடைய அவதாரத்தை (ஸ்ருஜாம்ய்) உருவாக்குகிறேன். (7)

ஶ்ரீமத் பகவத் கீதை அத்தியாயம் 4, ஸ்லோகம் 7ல், கீதையின் ஞானத்தை கொடுப்பவர் இவ்வாறு கூறியுள்ளார்: எப்பொழுதெல்லாம் தர்மத்தின் மீது துவேஷம் உண்டாகிறதோ, தர்மம் அழிகிறதோ, அதர்மம் அதிகரிக்கிறதோ அப்போதெல்லாம் நான் (கால் - பிரம் - ஷர் புருஷ்) என் அவதாரத்தை உருவாக்குகிறேன்.

ஶ்ரீ ராமர் அவதாரமும், ஶ்ரீ கிருஷ்ணர் அவதாரமும் காலனால் பூமியில் உருவாக்கப்பட்டது, அவர்கள் ஶ்ரீ விஷ்ணு என்று கருதப்படுகிறார்கள். இவை தவிர மேலும் 8 அவதாரங்கள் கூறப்பட்டுள்ளன. ஶ்ரீ விஷ்ணு தனக்கு பதிலாக தனது புனித ஆன்மாக்களை அவரது லோகத்திலிருந்து ஆசிர்வதித்து அனுப்புகிறார். அவர்களும் அவதாரங்கள் என்றுதான் கருதப்படுகிறது. புராணங்களில் 25 அவதாரங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளன. பிரம்ம காலனின் (ஷர் புருஷ்) அவதாரங்கள் பூமியில் படுகொலை மற்றும் அழிவின் மூலமே அதர்மத்தை அழிக்கின்றன.

உதாரணம்:- ஶ்ரீ ராமர், ஶ்ரீ கிருஷ்ணர், ஶ்ரீ பரசுராமர் மற்றும் ஶ்ரீ நிஷ்களங் (கலியுகத்தின் இறுதியில் வருபவர்), இவர்கள் அனைவரும் தீயவர்களை கொல்வதன் மூலம் மட்டுமே அதர்மத்தை அழிக்கின்றன.

தீயவர்களை கொன்று அமைதியை நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால் அமைதிக்குப் பதிலாக அமைதியின்மையே அதிகரிக்கிறது. அதாவது ராவணனைக் கொல்ல ராமர் தொடுத்த போரில் கோடிக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர், அதில் நல்லவர்களும் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய மனைவி குழந்தைகளின் வாழ்க்கை நரகமானது. விதவைகளை மற்ற மனிதர்கள் குறிவைத்து தங்கள் இச்சைக்கு பலியாக்கினர். வாழ்வாதார பிரச்சனையும் பல இடையூறுகளும் எழுந்தது. இதே முறையை ஸ்ரீ கிருஷ்ணரும், ஸ்ரீ பரசுராமர் அவர்களும் பின்பற்றினார்கள். இதே முறையில் பிரம்ம காலன் (ஷர் புருஷ்), பத்தாவது அவதாரத்தை கலியுகத்தின் இறுதியில் "நிஷ்களங்" என்ற பெயரில் உருவாக்குவார். அது ராஜா ஹரிச்சந்திரனின் ஆன்மா ஆகும். அவர் சம்பல் நகரில் விஷ்ணுதத் சர்மா என்பவரது இல்லத்தில் பிறப்பார். அந்த சமையம் மனிதர்கள் அனைவரும் கெட்டவர்களாக ஆகிவிடுவார்கள். அவர் நல்லவர்களையும், இறைவனை நாடும் சிலரைத் தவிர மற்ற அனைவரையும் கொன்றுவிடுவார். இந்த முறையில் தான் காலனின் (பிரம் – ஷர் புருஷ்) அவதாரங்கள் அதர்மத்தை அழித்து அமைதியை நிலை நாட்டுகின்றன.

## பரம் அக்ஷர் பிரம் அதாவது சத்யபுருஷின் அவதாரங்கள் பற்றிய விபரம்

∗ பரம் அக்ஷர் பிரம் தானே பூமியில் மனித உடலில் தோன்றி மீண்டும் திரும்புகிறார். அவர் இந்த லீலையை இரண்டு வழிகளில் செய்கிறார்.

∗ 1 ஒவ்வொரு யுகத்திலும், அவர் ஒரு குளத்தில் தாமரை மலர் மீது குழந்தை வடிவில் தோன்றுகிறார். குழந்தையில்லா தம்பதிகள் அவரை அங்கிருந்து எடுத்துச் செல்கின்றனர். பிறகு வளரும் போது லீலைகள் செய்து ஆன்மீக ஞானத்தை பரப்புவதன் மூலம் அதர்மத்தை அழிக்கிறார். நீரில் தாமரை மலர்மீது அவதரிப்பதால், பரமேஸ்வரர், நாராயணன் என்று அழைக்கப்படுகிறார். (நர் – நீர், அயன – வருதல், அதாவது நீர் மீது வசிப்பவன் நாராயணன் எனப்படுகிறான்).

∗ 2 அவர் விரும்பும் போதெல்லாம் தனது சத்யலோகத்திலிருந்து ஒரு சாது, மகான், ஜிந்தா வடிவில் பூமிக்கு வந்து, நல்ல உள்ளங்களுக்கு ஞானத்தை போதிப்பார், பிறகு அந்த புண்ணிய ஆன்மாக்களும் ஞானத்தை பரப்புவதன் மூலம் அதர்மத்தை அழிக்கிறார்கள். அவர்களும் பரமாத்மாவால் அனுப்பப்பட்ட அவதாரங்கள் ஆவார்.

கபீர் பரமேஸ்வரர் கலியுகத்தில் சம்வத் 1455 (1398ஆம்) ஆண்டு வைகாசி பௌர்ணமி அன்று சத்யலோகத்திலிருந்து வந்து, காசியில் லஹர்தாரா என்ற குளத்தில் ஒரு தாமரை மலர் மீது குழந்தை வடிவில் தோன்றினார். அவரை அங்கிருந்து நீரு நீமா என்ற நெசவாளர் தம்பதிகள் எடுத்து சென்றனர். சிசு ரூபத்தில் வந்த பரமேஸ்வரர் கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) 25 நாட்களுக்கு உண்ணாமல் இருந்தார். நீரு மற்றும் நீமா சிவனை வழிபடும் பிராமணர்கள் ஆவார். முஸ்லீம்களால் வலுக்கட்டாயமாக மதம் மாற்றப்பட்டதால், அவர் நெசவாளியாக வேலை செய்தார். நீமா உண்ணாத குழந்தையை கண்டு தனது இஷ்ட தெய்வமான சிவபெருமானிடம் வேண்டினார். சிவன் ஒரு சாது வடிவில் வந்தார். குழந்தை ரூபத்தில் இருந்த கபீர் பரமேஸ்வரர் சிவபெருமானிடம்,

பசுக்கன்று ஒன்றை எடுத்து வர இவர்களிடம் சொல்ல சொன்னார், உங்கள் ஆசிர்வாதத்தால் அது பால் கொடுக்கும் என்றார். அப்படியே நடந்தது, கபீர் பரமேஸ்வரரின் உத்தரவுப்படி சிவபெருமான் கன்னிப் பசுவின் முதுகில் மெதுவாகத் தட்டினார். அதே சமயம் அந்தக் கன்றின் காம்பிலிருந்து பால் பெருக்கெடுத்தது. ஒவ்வொரு நாளும் மடியின்கீழ் பாத்திரம் வைத்தவுடன், கன்றின் மடியிலிருந்து தானாக பால் சுரக்கும், அதை கபீர் பரமேஸ்வர் அருந்திவந்தார். ஒரு நெசவாளர் குடும்பத்தில் வளர்ந்த காரணத்தினால் அவரும் நெசவாளர் ஆனார். கபீர் பரமேஸ்வரர் உயர்ந்த உள்ளங்களை சந்தித்து தத்துவ ஞானத்தை போதித்து, அவரும் தத்துவ ஞானத்தை பரப்பி அதர்மத்தை அளித்தார். யாரையெல்லாம் பரமாத்மா ஜிந்தா மகாத்மா தோற்றத்தில் சந்தித்தாரோ, அவர்களை சத்யலோகத்திற்கு அழைத்துச் சென்று பின்னர் மீண்டும் பூமிக்கு திருப்பி அனுப்பினார். அவர்களுக்கு தத்துவ ஞானத்தை அறிமுகப்படுத்தினார். அவர்கள் அந்த பரமேஸ்வரரின் (சத்திய புருஷ்) அவதாரமாவார். அவர்களும் பரமேஸ்வர் மூலம் பெற்ற ஞானத்தின் அடிப்படையில் அதர்மத்தை அழித்தார்கள். அப்படிப்பட்டவர்களின் விபரம் பின்வருமாறு :

1.மரியாதைக்குரிய தரம்தாஸ்ஜி அவர்கள், 2.மரியாதைக்குரிய மலுக்தாஸ்ஜி அவர்கள், 3.மரியாதைக்குரிய குரு நானக் சாகேப்ஜி அவர்கள் (சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர்), 4.மரியாதைக்குரிய தாது சாகேப்ஜி அவர்கள், 5.மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாகேப்ஜி (ஹரியானா) அவர்கள், 6.மரியாதைக்குரிய கீசாதாஸ் சாகேப்ஜி (உத்திரப்பிரதேசம்) அவர்கள்.

இவர்கள் அனைவரும் பரம் அக்ஷர் பிரம் (சத்தியபுருஷ்) உடைய அவதாரங்கள். இவர்கள் தங்கள் கடமையைச் செய்தார்கள். அதர்மத்தை அழித்தார்கள். இதனால் வெகுகாலம் வரை தீயவைகள் பெருகவில்லை. இன்று சாதுக்களுக்கு குறைவில்லை. ஆனாலும் அமைதி இல்லை, ஏனென்றால், இன்றைய சாதுக்களின் வழிபாடு சாஸ்திரங்களுக்கு மாறாக உள்ளது. அதனால்தான் சமூகத்தில் அதர்மம் பெருகி வருகிறது. இவ்வகை சாதுக்கள் நூறு ஆண்டுகளாக ஞானத்தை பரப்பியும், அதர்மம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

## சத்யபுருஷின் தற்போதைய அவதாரம்

பரமேஸ்வரரின் முந்தைய அவதாரங்கள் சத்திய வழிபாடும் தத்துவஞானத்தின் பிரச்சாரம் செய்தார்கள், அதனால் பரஸ்பர அன்பு நிலவியது. இன்று பரமேஸ்வரர் கபீர் சாகேப் ஜி அதே சாஸ்திர முறை வழிபாடும் தத்துவ ஞானமும், சந்த் ராம்பால்ஜி மகராஜ் அவர்களுக்கு வழங்கியுள்ளார்.

மார்ச் 1997 இல், பங்குனி மாதம் சுக்லபட்சம் பிரதமை காலை 10 மணிக்கு கபீர் பரமேஸ்வர் சத்யலோகத்திலிருந்து ஜிந்தா மகாத்மா ரூபத்தில் வந்து சந்த் ராம்பால் ஜி மகராஜ் அவர்களுக்கு சத்நாம் மற்றும் சார்நாம் என்ற இரண்டு மந்திரங்களையும் தீட்சை அளிக்க உத்தரவிட்டு சென்றார்.

சந்த் ராம்பால் ஜி மகராஜ் அவர்களும் ஆன்மீக ஞானம் மூலம் அதர்மத்தை அழிக்கும், பரமேஸ்வரரின் (பரம் அக்ஷர் பிரம்) அவதாரங்களில் ஒன்றாவார். இனி உலக அமைதி தழைக்கும். அனைத்து மத சம்பிரதாய மக்கள் அன்புடன் ஒன்றிணைவார்கள். தேசத் தலைவர்களும் அகங்காரம் இல்லாமல் நியாயமாகவும் இறைவனுக்குப் பயந்து பணியாற்றுவார்கள். பொதுமக்களின் சேவகனாக, பாரபட்சமற்று பணியாற்றுவார்கள். பூமியில்

மீண்டும் சத்யுகம் போன்ற நிலைமை வரும். நிகழ்காலத்தில் சந்த் ராம்பால்ஜி மகராஜ் தான் அந்த அவதாரம். இனி ஒவ்வொரு வீட்டிலும் பரமேஸ்வரரின் ஞானத்தை பற்றி பேசுவார்கள். கிராமங்களிலும், நகரங்களிலும் சீட்டாட்டம் ஆடி, அரசியல் மற்றும் சொந்த குடும்ப கதைகளை பற்றி பேசும் மக்கள் மீண்டும் பரமேஸ்வரரின் பெருமையை பேசத் தொடங்குவார்கள். மேலும் "ஞான கங்கை" புத்தகத்தில் உள்ள ஞானத்தை பற்றி சிந்திப்பார்கள். இறைவனின் பெருமை பேசினால் கூட ஆன்மாக்கள் புண்ணியம் பெறும், பிறகு சாஸ்திர முறைப்படி வழிபாடு செய்து சுகமும் முக்தியும் பெறுவார்கள். பூமியில், கலியுகத்தில் சத்யுகம் போன்ற நிலை மலரும். தற்போது பூமியில் இருக்கும் உண்மையான அவதாரம் சந்த் ராம்பால் ஜி மகராஜ் அவர்கள். மேலும் அறிய "தர்தி பர் அவதார்" புத்தகத்தைப் படிக்கவும்.

## அமெரிக்காவின் பெண் ஜோதிடர் புளோரன்ஸின் முக்கியமான தீர்க்கதரிசனம்

அமெரிக்காவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற ஜோதிடர் புளோரன்ஸ் பலமுறை பாரத நாட்டைப் பற்றி "தி ஃபால் ஆஃப் சென்சேஸ்சுனல் கல்ச்சர்" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். கி.பி 2000 நெருங்கும்போது, இயற்கையின் சமநிலை மோசமடையும் என்று எழுதியுள்ளார். மேலும் மக்களிடையே ஆக்ரோசம் மற்றும் தவறான நடத்தை உச்சத்தில் இருக்கும். மேற்கத்திய நாடுகளில் பதற்றம், அமைதியின்மை இருக்கும். அதிருப்தி அதிகரித்து பரஸ்பர பகை அதிகரிக்கும். சுற்றிலும் வன்முறை, கூச்சல் சண்டை நிறைந்த சூழல் இருக்கும். ஆனால் இந்தியாவில் இருந்து தோன்றும் ஓர் புதிய சித்தாந்தம் (ஞானம்) இந்த ஆபத்தான சூழ்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும். அந்த ஞானம் சகோதரத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிவியல் பூர்வமாக விளக்கும். ஆன்மீகமும் அறிவியலும் விரோதி இல்லை என்பதை உணர்த்தும். ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை எல்லோர் முன் வெளிப்படுத்தும். அந்த ஞானத்தால் நடுத்தர வர்க்கத்தினர் பெரிதும் ஈர்க்கப்படுவார்கள். இவர்கள் எல்லா பிரிவினரையும் நல்ல சமுதாயத்தை உருவாக்கத் தூண்டுவார்கள். இந்த சித்தாந்தம் உலகில் அதிசயமான மாற்றங்களை கொண்டு வரும்.

இந்த சிந்தனையை பிறப்பித்த மகான் இந்தியாவில் பிறந்திருப்பதை எனது ஆறாவது அறிவின் சக்தியால் உணர்கிறேன், அந்த மகானின் ஆற்றல்மிக்க சக்தி அனைவரையும் வியக்க வைக்கும். அவரது சித்தாந்தம் சரிந்து வரும் ஆன்மீகத்தை மீண்டும் உயர்த்தும்.

சுற்றிலும் ஆன்மீகச் சூழல் இருக்கும். அந்த மகானின் சிந்தனையால் ஈர்க்கப்பட்ட மக்கள் உலக நன்மைக்காக மேற்கு நோக்கிச் செல்வார்கள், படிப்படியாக, ஆசியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் இது பரவும். உலகமே இந்த சிந்தனையால் ஈர்க்கப்பட்டு அவர் பாதங்கள் செல்லும் வழியில் செல்லும். மேற்கத்திய நாட்டுமக்கள் அவரை ஏசுவாகவும், முஸ்லீம்கள் அவரை உண்மையான வழிகாட்டி என்றும், ஆசிய நாட்டு மக்கள் அவரை கடவுளின் அவதாரமாகவும் காண்பார்கள்.

அந்த மகானின் சிந்தனையால் அறிவுப் புரட்சி நடக்கும். எல்லோருடைய சிந்தனைகள் மாறும். அவர்களுடைய மனதில் இறைவன் மீது பக்தியும் நம்பிக்கையும் மலரும். புளோரன்ஸின் கணிப்புப்படி, அந்த மகான் பாரதத்தில் பிறந்துவிட்டார். தனது மற்றொரு புத்தகம் "கோல்டன்

லைட் ஆப் நியூ இரா" நூலில் எழுதியது பின்வருமாறு:

"நான் தியானம் செய்யும் போதெல்லாம் அடிக்கடி ஓர் மகானை காண்கிறேன். அவர் நறைத்த முடியும் சிகப்பு நிறமுள்ளவர், தாடி, மீசை இல்லாதவர். அந்த மகானின் நெற்றியில் ஒரு அற்புதமான பிரகாசம் இருக்கிறது. வானத்திலிருந்து ஒரு நட்சத்திரத்தின் ஒளி அவர் நெற்றியில் தொடர்ந்து பொழிந்து கொண்டிருக்கிறது. அந்த மகான் தனது ஞானத்தின் வலிமையாலும், நல்ல குணம் கொண்ட சீடர்களாலும் உலகம் முழுவதும் புதிய ஞான ஒளியை பரப்புவதை நான் காண்கிறேன்.

அந்த மகானின் சக்தி தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அவரிடம் இயற்கை மாற்றங்களைக் கொண்டு வரும் ஆற்றல் உள்ளது. அவர் தனது காரியங்களை விஞ்ஞான முறையில் செய்வார். அவருடைய அருளாலும் முயற்சியாலும் நாகரீகத்தில் புதிய விழிப்புணர்வு வரும். உலக மக்கள் அனைவரிடமும் ஒரு புதிய சிந்தனை எழும். ஆட்சியாளர்களின் தன்னிச்சையான போக்கைக் கட்டுப்படுத்தும் மக்கள் சக்தியின் ஒரு புதிய வடிவம் உருவாகும்".

உலகப் புகழ்பெற்ற மனநல மருத்துவர் மற்றும் ஹிப்னாடிஸ்ட் டாக்டர். மோரி பெர்ன்ஸ்டீன், புளோரன்ஸின் நல்ல நண்பர் ஆவார். ஒருமுறை புளோரன்ஸ் அவரிடம் கூறினார், "டாக்டர், அதிகார மோகம் கொண்ட அரசியல்வாதிகளை விட, உங்களைப் போன்ற சமூக சேவகர்களின் பேச்சை சமுதாயம் கவனமாகக் கேட்கும் காலம் விரைந்து நெருங்குகிறது. 21 ஆம் நூற்றாண்டு வரும் போது, ஒரு புதிய ஞானம் உலகம் முழுவதையும் ஈர்க்கும். ஒவ்வொரு தேசத்தின் நல்ல குணம் கொண்ட சமூகத்தின் மக்கள் மனதில் இருக்கும் தவறான நம்பிக்கைளை மாற்றும். இந்த ஞானம் இந்தியாவில் இருந்து தான் தொடங்கும், பிறகு அங்கிருந்து உலகம் முழுவதும் பரவும். நான் அந்தப் புண்ணிய பூமியில் ஒரு உயர்ந்த மகானை காண்கிறேன். அவருடைய சக்தி மிக விரைவாக பரவிக் கொண்டிருக்கிறது. மனிதனில் உறங்கும் தெய்வீகத்தை எழுப்பி, பூமியை சொர்க்கமாக்க அந்த மகான் இரவும் பகலுமாக முயற்சிக்கிறார்.

1964 இல் ஒரு பத்திரிக்கையாளர் புளோரன்ஸிடம் உலகத்தின் எதிர்காலத்தை சொல்ல முடியுமா என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த புளோரன்ஸ், 1970 தொடக்கத்தில் தலைகீழான மாற்றங்கள் வரும் என்றார். மேலும், 1979- 80க்குப் பிறகு நியூஜெர்சி மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள் மற்றும், ஆசியாவின் பல தேசங்களும் பூகம்பத்தால் நிலைகுலையும், சில பகுதிகள் நீரில் மூழ்கும். மூன்றாம் உலகப் போரின் தீவிரம் எல்லோர் மனதிலும் பதிந்து போருக்குத் தயாராகி விடுவார்கள், ஆனால், பாரத நாட்டின் தலைவர் தன் திறமையாலும், அறிவாலும், மூன்றாம் உலகப் போரைத் தடுப்பதில் வெற்றி பெறுவார்கள். மூன்றாம் உலகப் போர் தொடங்கும் பொழுது பாரதத்தின் ஆட்சி அதிகாரம் ஆன்மீக மனிதர்களிடம் இருக்கும், எனவே அவர்களின் செல்வாக்கால் உலகப் போர் தவிர்க்கப்படும். அந்த ஆட்சியாளர்கள் ஒரு மகானின் ஆற்றல்மிக்க புரட்சிகரமான சித்தாந்தத்தால் ஈர்க்கப்படுவார்கள்.

வாஷிங்டன் சுதந்திரம் மற்றும் மனிதநேயத்திற்கு அர்ப்பணித்ததைப் போல அவர்கள் அந்த மகானிடம் அர்ப்பணிப்புடன் இருப்பார்கள். அமெரிக்காவின் நியூஜெர்சியில் வசிக்கும் புளோரன்ஸ் உண்மையிலேயே ஒரு அசாதாரண பெண்மணி. ஒருமுறை நெபெல் என்ற நபர் டி.வி. நிகழ்ச்சியின் போது அவரிடம், இந்தியாவில் பிறந்த மகானை பற்றி அடிக்கடி

பேசுகிறீர்களே. என்னைப் பற்றி ஏதாவது சொல்லுங்கள் என்று சொன்னார். நெபெல் ஒரு ஒளிபரப்பு ஊழியர்.

உடனே புளோரன்ஸ் அவரது வலது கையைப் பிடித்து சொன்னார், “மிக விரைவில் நீங்கள் வேறு மாநிலத்தில் இருந்து ஒளிபரப்பு செய்வீர்கள்” புளோரன்ஸ் சொன்னதை கேட்டு அவர் சிரித்தார். பிறகு சொன்னார், “நீங்கள் நன்றாக நகைச்சுவை செய்கிறீர்கள். ஒருவேளை இந்த நிகழ்ச்சியை எங்கள் நிறுவன அதிகாரிகள் பார்த்தால், நான் வேறு மாநிலத்திற்குப் போவேனோ இல்லையோ, கட்டாயம் இந்நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்படுவேன்” என்றார்.

சில நிமிடங்களில் டி.வி கட்டுப்பாட்டு அறையிலிருந்து நிறுவனத்தின் மேனேஜர் இடமிருந்து நெபலுக்கு போன் வந்தது. அதில், நியூயார்க் நகரிலிருந்து ஒளிபரப்பை தொடங்க முடிவு செய்துள்ளோம், உங்களை தான் அனுப்ப உள்ளோம். இதை ரகசியமாக வைத்திருங்கள், நாளை அறிவிக்கப்படும், டிவியில் புளோரன்ஸ் உடன் உங்கள் உரையாடலை கேட்டோம், உங்களைப் பற்றி புளோரன்ஸ் கூறியது முற்றிலும் உண்மை. அவருக்கு எப்படி இது தெரிந்தது என்று ஆச்சரியமாக இருக்கிறது என்றார். இதைக் கேட்டு நெபெல் வியந்துபோனார்.

வேறு சில பத்திரிக்கையாளர்கள் அவரிடம், எதிர்காலத்தை எப்படி பார்க்க முடிகிறது, காணாமல் போனவர்களை எப்படி கண்டுபிடிக்க முடிகிறது என்று கேட்டார்கள். அதற்கு புளோரன்ஸ் சொன்னார், “இது எப்படி சாத்தியம் ஆகிறது என எனக்கே தெரியவில்லை, ஆனால் எதிர்காலத்தைப் பற்றிய முக்கியமான விஷயத்தை நான் உங்களுக்குச் சொல்கிறேன். 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில், இந்தியாவில் இருந்து ஒரு ஒளி தோன்றும். இந்த ஒளி, இதுவரை மர்மமாக இருந்த தெய்வீக சக்திகளைப் பற்றிய விஷயங்களை உலகம் முழுவதற்கும் தெரிவிக்கும் . (சந்த் ராம்பால் ஜி மகராஜ் வழங்கிய தெய்வீக சக்திகள் பற்றிய தகவல்களை இந்த புத்தகத்தில் “இயற்கையின் உருவாக்கம்” அத்தியாயத்தில் படிக்கவும்). இந்த ஒளி ஒரு தெய்வீக மகான் மூலம் உலகம் முழுவதும் பரவும். அவர் அனைவரையும் சத்தியத்தின் பாதையில் செல்ல தூண்டுவார். ஒரு புதிய ஞானத்தின் ஒளி உலகம் முழுவதும் பரவும். நான் தியானத்தில் இருக்கும்போது அந்த தெய்வீக மகானை அடிக்கடி பார்க்கிறேன்”. புளோரன்ஸ் பலமுறை இந்த மகானை பற்றி குறிப்பிட்டுள்ளார். இதனுடன், அவர் வட இந்தியாவில் உள்ள ஒரு புனித பூமியில் இருப்பதாக குறிப்பிடுகிறார்.

வாசகர்களே! மேற்கூறிய கணிப்புகள் தற்போது சந்த் ராம்பால்ஜி மகராஜ் மீது துல்லியமாக பொருந்துகிறது மற்றும் மற்ற சில எதிர்கால கணிப்புகளும் இதையே கூறுகின்றன, அது பின்வருமாறு.

## குரு நானக் ஜியின் ‘பாயி பாலே வாலி ஜனம் சாகி’ நூலில் உள்ள ஆதாரம்

"ஒரு மகானை பற்றி பாய் பலே வாலி ஜனம் சாகி நூலில் பிரகலாதனின் கணிப்பு"

“பாய் பாலே வாலி ஜனம் சாகி” நூலில், பரமேஸ்வரர் கபீர் மற்றும் குரு நானக் ஜி ஆகியோருக்குப் பிறகு, பஞ்சாப் பூமியில் சந்த் ராம்பால் ஜி மகாராஜ் அவதரிப்பார் என்பதை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

சந்த் ராம்பால் தாஸ் ஜி மகராஜ், செப்டம்பர் 8, 1951 அன்று, ஹரியானா

மாநிலத்தில் (அப்போது பஞ்சாப் மாகாணம்), சோனிபட் மாவட்டத்தில் உள்ள தனானா என்ற கிராமத்தில், ஜாட் இனத்தைச் சேர்ந்த ஸ்ரீ நந்த் ராம் ஜாட்டின் வீட்டில், ஸ்ரீ இந்திரா தேவியின் கருவிலிருந்து அவதரித்தார்.

"ஜனம் சாகி பாய் பலே வாலி" பதிப்பின் ஹிந்தி வெளியீட்டாளர்:– பாய் ஜவஹர்சிங் கிரிபால் சிங் – கம்பெனி புஸ்தக் வாலே, பாஜார் மாய் செவான், அம்ரித்சர் (பஞ்சாப்) மற்றும் பஞ்சாபியில் வெளியீட்டாளர்:– பாய் ஜவஹர்சிங் கிரிபால்சிங் புஸ்தக் வாலே கலி–8 பாக் ராமானந்த் அம்ரித்சர் (பஞ்சாப்).

அதில் எழுதப்பட்டுள்ள முக்கிய விஷயம் பின்வருமாறு:–

ஒருமுறை, குரு நானக் ஜி அவர்கள் பாயி பாலா மற்றும் மர்தான என்ற இரு பக்தர்களை பிரகலாதன் உடைய லோகத்திற்கு அழைத்து சென்றார். அது பூமியிலிருந்து வெகு தூரத்தில் ஆகாயத்தில் உள்ளது. அங்கு பிரகலாதன் சொன்னார், நானக் அவர்களே! கடவுள் உங்களுக்கு தெய்வீக பார்வை அளித்து உங்களை கலியுகத்தில் பெரிய பக்தனாக்கி இருக்கிறார். கலியுகத்தில் உங்களுக்கு மிக பெரிய மகிமை இருக்கும். உங்கள் இருவரையும் போல் இன்னொரு மகான் இங்கு வருவார். உங்கள் மூவரையும் தவிர வேறு யாரும் இங்கு வர முடியாது. பக்தர்கள் நிறைய பெருகிவிட்டார்கள், இன்னும் அதிகரிப்பார்கள், ஆனால் உங்களைப் போன்ற சக்தி வாய்ந்தவர்கள் மட்டுமே இங்கு வர இயலும் என்றார். மர்தானா கேட்டார், பிரகலாதர் அவர்களே! கபீர்ஜி நெசவாளி, நானக் ஜி ஒரு கத்ரி, மூன்றாமவர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? அவர் பூமியில் எங்கு அவதரிப்பார்? பிரகலாதர் சொன்னார், சகோதரரே! நானக்ஜி அவர்கள் சத்யலோகம் சென்ற நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு அவர் பஞ்சாப் மண்ணில் ஜாட் இனத்தில் பிறப்பார், மேலும் அவரது பிரச்சாரப் பகுதி பர்வாலா நகரமாக இருக்கும். (கட்டுரை முடிவு).

விளக்கம்:– பிற ஆதாரங்களை போல, ஜனம் சாகி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்களுக்கு சந்த் ராம்பால் தாஸ் ஜி மகராஜ் பொருந்திய அவதாரம் ஆவார்.

இங்கே "நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு" என்பது பஞ்சாபியில் நூறு ஆண்டுகள் என்று எழுதப்பட்டு விட்டது. ஏனென்றால், அந்த அவதாரம் எந்த யுகத்தில் நிகழும் என்று மர்தானா கேட்டபோது, பிரகலாதர் சொன்னார், நானக்ஜி அவர்களுக்குப் பிறகு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு பிறகு கலியுகத்தில், ஜாட் இனத்தில் பிறப்பார். எனவே இங்கு 100 ஆண்டுகள் என்பதை நூற்றுக்கணக்கான ஆண்டுகள் என்றே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், அவருடைய பிரச்சார களம், பர்வாலாவிற்கு பதிலாக படாலா என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு ஒரு காரணம், ஹரியானா, ஹிசார் மாவட்டத்தில் உள்ள "பர்வாலா" நகரம் (முன்பு பஞ்சாபில் இருந்தது) பிரபலம் ஆகவில்லை மற்றும் பஞ்சாப் மாநிலத்தின் படாலா நகரம் மிக பிரபலமானது. இந்த காரணத்தினால் எழுத்தாளர் "பர்வாலா" என்பதற்கு பதிலாக "படாலா" என்று எழுதிவிட்டார். இரண்டாவதாக அச்சிடும் பொழுது பஞ்சாபில் பர்வாலா என்பது படாலா என்று அச்சாகி விட்டது. மேலும் ஒரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது, பஞ்சாபின் படாலா நகரில் ஜாட் இனத்தில் எந்த ஒரு மகானும் குருவும் தோன்றியதில்லை. கபீர் பரமேஸ்வரர் மற்றும் ஸ்ரீ குருநானக் போன்ற மகான்களுக்கு இணையான மகான், குரு யாரும் தோன்றவில்லை. இதன் அடிப்படையிலும், மற்ற ஆதாரங்களின்படியும், ஜனம் சாகியின்

அடிப்படையிலும் அந்த மூன்றாவது மகான் சந்த் ராம்பால் தாஸ் ஜி மகாராஜ ஜி என்பது தெளிவாகிறது, மேலும் அவரது ஆன்மீக அறிவும் இந்த இரண்டு மகான்களுடன் (கபீர் ஜி மற்றும் ஸ்ரீ குருநானக் ஜியுடன்) பொருந்துகிறது. ஜனம் சாக்கி பாய் பாலே வாலியின் பஞ்சாபி புகைப்பட நகல்களையும், பஞ்சாபி மொழியில் இருந்து ஹிந்தி மொழிபெயர்க்கப்பட்ட இரண்டு புகைப்பட நகல்களையும் நீங்கள் பார்ப்பீர்கள், இதில் சில வரிகள் சரியாக எழுதப்படவில்லை. பஞ்சாபியில் இப்படி எழுதப்பட்டுள்ளது.

"ஜோ இஸ் ஜீஹா கோயி ஹேவேகா தான் ஏதே பகுஞ்ச்சேங்கா ஹோர் தா ஏதே பகுஞ்ச்சன் தா கம் நஹிம்"

ஆனால், ஹிந்தி மொழியாக்கத்தில் இந்த முக்கிய விவரம் இல்லை. எனவே, எழுதும்போது சில அத்தியாயங்கள் மாறிவிடுகின்றன என்பது தெளிவாகிறது. இருப்பினும், சந்த் ராம்பால் தாஸ் ஜி பற்றி மற்ற மகான்கள் கூறிய பல ஆதாரங்கள் இந்த புத்தகத்தில் உள்ளன, அவைகளும் அதையே நிரூபிக்கின்றன.

சிறப்பு:- ஜனம் சாகியில் எழுதப்பட்ட விளக்கம் சந்த் கரிப்தாஸ் ஜி அவர்களுக்கு என்ற சந்தேகம் எழும், ஏனெனில் அவரும் ஜாட் சாதியைச் சேர்ந்தவர் மற்றும் சுடானி கிராமமும் முன்பு பஞ்சாப் மாநிலத்தின் கீழ் வந்தது. இதுவும் சரியானது அல்ல, ஏனென்றால், சந்த் கரீப்தாஸ் ஜி தனது புனித உரையான "அசுர் நிக்கந்தன் ரமைனி" என்ற உரையில் கூறி இருக்கிறார்:- "சத்குரு டெல்லி மண்டல் ஆயிசி, சூதி தர்ணி சூம் ஜகாயிசி".

இதன் பொருள் சந்த் கரீப்தாஸ் ஜியின் சத்குரு மதிப்பிற்குரிய கபீர் சாஹிப் ஜி ஆவார். பழைய ரோத்தக் மாவட்டம் (சோனிபத், ரோத்தக் மற்றும் ஜஜ்ஜார் மூன்றும் சேர்ந்து ரோத்தக் மாவட்டமாக இருந்தது) முன்பு டெல்லி பிரிவில் இருந்தது, எந்த அரசரின் கீழும் இல்லை. ஆங்கிலேயர் ஆட்சியின் போது டெல்லியின் கீழ் வந்தது. சத்குரு (பரமேஸ்வர் கபீர் ஜி) டெல்லி மண்டலத்தில் வந்து, பக்தி அற்றவர்களை எழுப்பி, உண்மையான பக்தி செய்ய வைப்பார் என்று சந்த் கரீப்தாஸ் ஜி தெளிவுபடுத்தியுள்ளார்.

(சிறப்பு:- கபீர் சாகர் நூலில், காலனின் தூதர்கள் உண்மை அறியாமல் தங்களுடைய யூகத்தால் பொய்யான ஆதாரங்களைக் கொடுத்துள்ளனர். அதை மாற்ற, பரமேஸ்வர் கபீர் ஜி, சந்த் கரீப் தாஸ் ஜி மூலம் உண்மையான ஞானத்தை பிரச்சாரம் செய்தார். இது சந்த் கரிப் தாஸ் ஜியின் அமுத உரைகளில் உள்ளது. கபீர் சாகர் நூலின் ஆசிரியர் ஸ்ரீ யுக்லானந்த் பிஹாரி அவர்கள் அனுராக் சாகர் மற்றும் கியான் சாகர் நூலின் முகவுரையில், "கபீர் சமூகத்தை சேர்த்தவர்கள் தாங்களே கபீர் ஜியின் நூல்களை மாற்றிவிட்டார்கள், மேலும் தங்கள் யுகங்கள் அடிப்படையில் சொந்த கருத்துக்களைச் சேர்த்துவிட்டார்கள், என்னிடம் அனுராக் சாஹர் மற்றும் ஞான சாகரின் பல பிரதிகள் உள்ளன. அவைகள் ஒன்றோடொன்று பொருந்துவதில்லை" என்று கூறிய இந்த கருத்து இதை உறுதிப்படுத்துகிறது)

சந்த் ராம்பால் ஜி மகராஜ் செப்டம்பர் 8, 1951 ஆம் ஆண்டு, தனானா மாவட்டம் சோனிபத் கிராமத்தில் (அப்போது பஞ்சாப்) ஸ்ரீ நந்த் ராம் ஜாட்டின் வீட்டில் பிறந்தார். கலியுகம் 5505 ஆண்டுகள் கடந்த பிறகு, கரீப் தாஸ் ஜி இருக்கும் 12வது குரு பிரிவில் நானே வருவேன் என்று கபீர் பரமேஸ்வர் கூறியிருந்தார். சந்த் கரீப்தாஸ் ஜி மூலம் எனது (கபீர் பரமேஸ்வர்) மகிமையின் புனித நூல், உரைகள் வெளியாகும் மற்றும் கரீப்தாஸ் ஜி இருக்கும் 12வது குரு தலைமுறை வரை உள்ள பக்தர்கள் என்னைத்

அடிப்படையாகக் கொண்டு நூலை புரிந்து கொள்ள முயற்சிப்பார்கள், ஆனால் சத்நாம் மற்றும் சார்நாம் மந்திரம் இல்லாததால் எண்ணற்ற பிறவிகளுக்கு சத்யலோகத்தை அடைய மாட்டார்கள். அதே 12வது குரு தலைமுறையில் (கரீப்தாஸ் ஜியின் பிரிவில்), நானே (பரமேஸ்வர் கபீர் ஜி) வருவேன். அப்போது சந்த் கரீப்தாஸ் ஜி மூலம் வெளிப்படுத்திய நூலை நானே (கபீர் பரமேஸ்வர்) தோன்றி விளக்குவேன். எனவே ஜனம் சாகியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த மகான் சந்தேகத்திற்கு இடமின்றி சந்த் ராம்பால் தாஸ் ஜி மகராஜ் என்பது இதிலிருந்து நிரூபணமாகிறது. இருப்பினும், நாங்கள் சந்த் கரீப்தாஸ் ஜிக்கு சிறப்பு மரியாதை அளிக்கிறோம். ஏனெனில் அவர் பரமேஸ்வரர் கபீர் ஜியின் செய்தியை விவரித்துள்ளார்.

சீக்கியர்களில் உள்ள 10 குரு மகான்களில் வேறு யாராவது ஒருவர் அவதாரமாக இருக்கலாம் என்ற சந்தேகமும் ஏற்படலாம். ஆனால், அந்த பத்து குருமார்களில் ஒருவர் கூட ஜாட் இனத்தவர் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இரண்டாவது சீக்கிய குரு ஸ்ரீ அங்கத் தேவ் ஜி காத்ரி ஆவார். மூன்றாவது குரு ஸ்ரீ அமர்தாஸ் ஜியும் ஒரு காத்ரி ஆவார். நான்காவது குரு ஸ்ரீ ராம்தாஸ்ஜியும் காத்ரி மற்றும் ஐந்தாவது குரு ஸ்ரீ அர்ஜுன் தேவ் ஜி முதல் பத்தாவது மற்றும் கடைசி குரு ஸ்ரீ கோபிந்த் சிங் வரை ஸ்ரீ ராம்தாஸ் ஜி குருவின் வம்சம் காத்ரிகள் ஆவார். இருந்தாலும், சீக்கியர்கள் அனைவருக்கும் குரு சாகிபன்கள் மீது தனி மரியாதை உண்டு. இருப்பினும் அனைத்து சீக்கிய குருசாகிபன்கள் மீது விசேஷ மரியாதை அளிக்கிறோம். சந்த் ராம்பால் தாஸ் ஜி மகராஜ் கூறுகிறார்:–

உயிர் நமது ஜாதி, மனித குலம் நமது மதம்,<br>
இந்து, முஸ்லீம், சீக்கியம், கிறிஸ்துவம் என தனி மதம் இல்லை.

கபீர் பரமேஸ்வர் கூறுகிறார்:–

ஜாதி ந பூச்சோ சந்த் கி, பூச் லிஜியே கியான்.<br>
மோல் கரோ தல்வார் கா, படி ரேஹன் தோ மியான்.

ஆதாரத்திற்கு, ஜனம் சாகி நூலின் பஞ்சாபி மொழி மற்றும் ஹிந்தி, இரண்டின் புகைப்பட நகலையும் பார்க்கவும். அவற்றில், உண்மை என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். ஜனம் சாகியின் வெளியீட்டாளர்:– பாய் ஜவஹர் சிங் கிருபால் சிங் அமிர்தசரஸ் (பஞ்சாப்). பஞ்சாபி மொழியில் ஜனம் சகி பாய் பாலே வாலியின் பக்கம் 272, மற்றும் 273 இன் புகைப்பட நகலைப் பார்க்கவும்:–

(੨੭੨) ਸਾਖੀ ਪ੍ਰਹਿਲਾਦ ਭਗਤ ਨਾਲ ਹੋਈ

ਕਾਜ ਸਵਾਰਿਆ ॥੪॥ ਤਾਂ ਪ੍ਰਹਿਲਾਦ ਭਗਤ ਕਹਿਆ ਨਾਨਕ ਤਪਾ ਜੀ ਤੈਨੂੰ ਕਲਜੁਗ ਵਿਚ ਰਾਮ ਜੀ ਨੇ ਵਡਾ ਭਗਤ ਕੀਤਾ ਹੈ ਔਰ ਆਪਕੇ ਸੰਜੋਗ ਬਹੁਤਿਆਂ ਕਾ ਉਧਾਰ ਹੋਵੇਗਾ ਤੇਰੀ ਸ੍ਰੀ ਰਾਮ ਨੇ ਵਡੀ ਨਦਰ ਖੋਲੀ ਹੈ ਤੇਰਾ ਵਡਾ ਪ੍ਰਤਾਪ ਹੋਵੇਗਾ ਇਸ ਕਲਜੁਗ ਵਿਚ ਅਗੇ ਕਬੀਰ ਭਗਤ ਏਥੇ ਆਯਾ ਹੈ ਅਤੇ ਜਾਂ ਆਪਕੋ ਕਰਤਾ ਨੇ ਆਂਦਾ ਹੈ ਤਾਂ ਮਰਦਾਨੇ ਪ੍ਰਹਿਲਾਦ ਭਗਤ ਨੂੰ ਪੁਛਿਆ ਹੇ ਭਗਤ ਜੀ ਤੁਸੀਂ ਭੀ ਵਡੇ ਭਗਤ ਹੋ ਅਤੇ ਤੁਸਾਡੇ ਪਿਛੇ ਰਾਮ ਜੀ ਵਡਾ ਚਲਤ ਦਿਖਾਇਆ ਹੈ ਤੇਰੀ ਰਾਮ ਜੀ ਨੇ ਵਡੀ ਨਦਰ ਖੋਲ੍ਹੀ ਹੈ ਭਗਤ ਜੀ ਏਥੇ ਹੋਰ ਕੋਈ ਵੀ ਪਹੁੰਚਿਆ ਹੈ ਕਿ ਕਬੀਰ ਅਤੇ ਨਾਨਕ ਤਪਾ ਹੀ ਪਹੁੰਚਿਆ ਹੈ ਤਾਂ ਪ੍ਰਹਿਲਾਦ ਭਗਤ ਬੋਲਿਆ ਭਾਈ ਨਾਨਕ ਤਪੇ ਪਾਸੋਂ ਪੁਛ ਲੈ ਹੋਰ ਭੀ ਆਵਸੀ ਕਿ ਨਾ ਆਵਸੀ ਕੋਈ ਤਾਂ ਮਰਦਾਨੇ ਕਹਿਆ ਜੀ ਤੁਸੀਂ ਵਡੇ ਭਗਤ ਹੋ ਅਗਲੀ ਤੇ ਪਿਛਲੀ ਸਭ ਆਪ ਨੂੰ ਸਤਿ ਜੁਗ ਥੀਂ ਆਦਿ ਲੈਕੇ ਮਾਲੂਮ ਹੈ ਤਾਂ ਪ੍ਰਹਿਲਾਦ ਭਗਤ ਨੇ ਕਹਿਆ ਸੁਣ ਭਾਈ ਇਸ ਜਿਹਾ ਕੋਈ ਹੋਵੇਗਾ ਤਾਂ ਏਥੇ ਪਹੁੰਚੇਗਾ ਹੋਰਸ ਦਾ ਏਥੇ ਪਹੁੰਚਣਾ ਕੰਮ ਨਾਹੀਂ ਹੋਰ ਅਗੇ ਵਡੇ ਵਡੇ ਭਗਤ ਹੋਏ ਹੈਨ ਅਤੇ ਹੋਵਨਗੇ ਪਰ ਪਹੁੰਚਿਆ ਕੋਈ ਨਾਹੀਂ ਤਾਂ ਫੇਰ ਮਰਦਾਨੇ ਪੁਛਿਆ ਜੀ ਓਹ ਕਦ ਹੋਸੀ ਕਿਤੇ ਨੇੜੇ ਜੁਗ ਵਿਚ ਹੋਸੀ ਤਾਂ ਪ੍ਰਹਿਲਾਦ ਭਗਤ ਕਹਿਆ ਸੁਣ ਭਾਈ ਕਲਜੁਗ ਵਿਚ ਹੋਵੇਗਾ ਜਟ ਨਾਨਕ ਤਪਾ ਸਚਖੰਡ ਜਾਵੇਗਾ ਤਾਂ ਇਸ ਤੋਂ ਪਿਛੇ ਸਉ ਵਰ੍ਹੇ ਹੋਸੀ ਅਤੇ ਏਹਨਾਂ ਤੇਹਾਂ ਤੋਂ ਬਗੈਰ ਹੋਰ ਕੋਈ ਨਾ ਆਵਸੀ ਤਾਂ ਮਰਦਾਨੇ ਪੁਛਿਆ ਜੀ ਤਿੰਨ ਕੇਹੜੇ ਹੈਨ ਤਾਂ ਪ੍ਰਹਿਲਾਦ ਭਗਤ ਕਹਿਆ ਭਾਈ ਅਗੇ ਕਬੀਰ ਹੋਇਆ ਹੈ ਤੇ ਹੁਣ

பக்கம் 273 இன் புகைப்பட நகலைப் பார்க்கவும்:-

ਸਾਖੀ ਇਕ ਪਹਾੜ ਦੀ ਚਲੀ (੨੭੩)

ਨਾਨਕ ਤਪਾ ਹੂਆ ਹੈ ਅਤੇ ਫੇਰ ਉਹ ਹੋਸੀ ਤਾਂ ਮਰਦਾਨੇ ਪੁਛਿਆ ਜੀ ਕਬੀਰ ਜੁਲਾਹਾ ਹੋਯਾ ਤੇ ਨਾਨਕ ਖਤਰੀ ਹੋਏ ਅਤੇ ਜੀ ਉਹ ਕਿਸ ਵਰਨ ਹੋਵੇਗਾ ਜੀ ਤੇ ਕਿਸ ਧਰਤੀ ਤੇ ਹੋਸੀ ਕੇਹੜੇ ਸ਼ਹਿਰ ਤਾਂ ਪ੍ਰਹਿਲਾਦ ਭਗਤ ਕਿਹਾ ਭਾਈ ਪੰਜਾਬ ਧਰਤੀ ਤੇ ਵਰਨ ਜਟ ਤੇ ਸ਼ਹਿਰ ਵਟਾਲੇ ਵਿਚ ਹੋਸੀਂ। ਤਾਂ ਮਰਦਾਨਾ ਸ੍ਰੀ ਗੁਰੂ ਜੀ ਦੇ ਚਰਨਾਂ ਤੇ ਢਹਿ ਪਿਆ ਗੁਰੂ

"பாய் பாலே வாலி ஸ்ரீ குரு நானக் தேவ் ஜி கி ஜனம் சகி" (மொழி-இந்தி) நூலின் "காக் புஜண்ட் கி சாகி" அத்தியாயத்தின் பக்கம் 305 இன் நகலை பார்க்கவும்:-

जन्म साखी (३०४) भाई बाले वाली

तब भक्त प्रहलाद ने कहा–हे नानक देव ! आप को इस कलियुग में बड़ा भक्त बनाया है। आप की ही संगति से अनेको प्राणियों का भला होगा। और आप का अनंत प्रताप होगा। तब मरदाने ने कहा–हे प्रहलाद जी ! आप भी तो परम भक्त हैं तथा भगवान ने आप के लिये ही अवतार धारन किया था। प्रहलाद जी ने कहा–हे भाई मरदाना ! इस स्थान पर या तो कबीर पहुंचा है, और या यह गुरू नानक आया है। यहां आना कोई सुगम कार्य नहीं है। एक और महा पुरुष होगा जो पहुंच सकेगा। मरदाने ने कहा–हे भक्त वर ! वह पुरुष कौन और कब होगा। प्रहलाद ने उत्तर दिया, कि जब गुरू नानक देव यहां आयेंगे तो इन के सौ वर्ष पश्चात आयेगा। अर्थात यहां केवल तीन आदमी ही आने हैं। एक तो भक्त कबीर और दूसरे श्री गुरू नानक देव जी इन के पश्चात वह तीसरा आयेगा। तब मर्दाने ने कहा हे प्रहलाद जी ! कबीर तो जुलाहा था, और नानक देव–छत्री है। परंतु वह तीसरा किस जाती का होगा, उत्तर में प्रहलाद जी ने कहा–हे मर्दाना ! पंजाब की धरती और वर्ण उस का जाट होगा। तथा नगर बटाला में होगा। उस समय मर्दाना गुरू जी के चर्णों

கேள்வி:- ஒரு சமஸ்கிருத வித்துவான் கூறினார், உங்கள் குரு சந்த் ராம்பால் தாஸ் ஜி மகாராஜ் சமஸ்கிருதம் படிக்காதவர். அவர் ஸ்ரீமத் பகவத் கீதையின் உண்மையான மொழிபெயர்ப்பைச் செய்து பக்தர்களுக்கு விளக்குவதாக சொல்கிறீர்கள். இது ஒருபொழுதும் சாத்தியமில்லை".

பதில்:- சந்த் ராம்பால் தாஸ் ஜி மகாராஜின் பக்தர் பதிலளித்தார், மொழியறிவு இல்லாமல் கூட உண்மையான மொழியாக்கம் செய்பவரை தான் பரமேஸ்வரரின் அவதாரம் என்று அழைக்கப்படும். ஏனென்றால் பரமேஸ்வர் எல்லாம் அறிந்தவர். அவருடைய அவதாரமும் அதே குணங்களைக் கொண்டவர் ஆவார். சந்த் ராம்பால் தாஸ் ஜி மகராஜ் தான் அந்த அவதாரம் . வேதங்கள் மற்றும் கீதையின் மொழிபெயர்ப்பால் நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள், சந்த் ராம்பால் தாஸ் ஜி மகராஜ் பைபிள் மற்றும் குரானில் உள்ள உண்மையை விளக்கியுள்ளார், இது கிறிஸ்தவ மதத்தின் சமகால பாதிரியார் மற்றும் இஸ்லாமிய மதத்தின் முல்லாக்கள் மற்றும் காஜிகளால் கூட புரிந்து கொள்ள முடியவில்லை.

*****

# பக்தியின் விதிகள்

"உயிர் நமது ஜாதி, மனித குலம் நமது மதம்,
இந்து, முஸ்லீம், சீக்கியம், கிறிஸ்துவம் தனியாக மதம் இல்லை"

அன்பான பக்தர்களே,

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எந்த மதமும், மத சம்பிரதாயங்களும் இல்லை. இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் இல்லை. எல்லோருக்கும் மனிதகுலம் என்ற ஒரே மதம் இருந்தது, இப்பொழுதும் உள்ளது. ஆனால் கலியுகத்தின் தாக்கம் அதிகரிக்க நம் இடையே வேற்றுமைகள் பெருகிவிட்டன. மத குருமார்கள் சாஸ்திரத்தில் உள்ள உண்மைகளை மறைத்ததே இதன் காரணமாகும். அது சுய நலத்திற்காகவோ அல்லது புகழுக்காகவோ இருக்கலாம், அதன் விளைவாக இன்று மனிதகுலம் பல மதங்களாகவும் சம்பிரதாயங்களாகவும் பிரிந்துவிட்டன. எனவே மனிதர்களுக்கு இடையே வேற்றுமைகள் சகஜமாகிவிட்டது. அனைவருடைய இறைவன் – கடவுள் – பகவான் – ராம் – அல்லா – ரப் – குதா – பரமேஷ்வர் ஒன்று தான். இவை வெவ்வேறு மொழிகளின் சொற்கள். இதை அனைவரும் ஒப்புக் கொண்டாலும் தனித்தனி மதங்கள் எதற்காக?

அனைவருடைய கடவுள் – எஜமான் – ரப் – குதா – அல்லாஹ் – ராம் – பரமேஷ்வர் ஒன்று என்பது உண்மை, அவரது உண்மையான பெயர் கபீர், அவர் தனது சத்யலோகத்தில் (சத்தாம்–சச்கண்ட்) உருவமாக மனித தோற்றத்தில் இருக்கிறார். ஆனால் இந்துக்கள் ராமர் உயர்ந்தவர் என்றும் இஸ்லாமியர்கள் அல்லாவை உயர்ந்தவர் என்றும் கிறிஸ்தவர்கள் ஏசுவை உயர்ந்தவர் என்றும் சீக்கியர்கள் குரு நானக்ஜி உயர்ந்தவர் என்றும் சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், ஒரே தந்தையின் நான்கு குழந்தைகளில், ஒரு குழந்தை இவர் எனது அப்பா என்றும், இரண்டாவது குழந்தை இல்லை இவர் எனது அப்பா என்றும், மூன்றாவது இவர் எனது தந்தை, இவர்தான் சிறந்தவர் என்றும், நான்காவது குழந்தை அட முட்டாள்களே! இவர் எனது டாடி உங்களுடைய அப்பா அல்ல என்று சொல்வதுபோல் உள்ளது. அனைவரின் தந்தை ஒருவர் தான். இன்று நம் மனித சமுதாயம் இந்த அறியாமை குழந்தைகளைப் போல போராடுகிறது. கபீர் சாஹிப் கூறுகிறார்–

"கோயி கஹே ஹமாரா ராம் படா ஹை, கோயி கஹே குதாயி ரே
கோயி கஹே ஹமாரா இசாமசீஹ படா, யே பாடா ரஹே லாகாயீ ரே"

ஆனால் நம்முடைய எல்லா புனித மத நூல்களும், சாஸ்திரங்களும், பிரபு – எஜமான் – ரப் – குதா – அல்லா – ராம் – கடவுள் – பரமேஷ்வர் ஒருவர் தான், அவர் கபீர் சாகேப் என்றும் அவர் சத்யலோகத்தில் உருவமாக மனித வடிவத்தில் உள்ளார் என்று பெயர் இட்டு அவர் மகிமையை கூறியுள்ளது.

புனித வேதங்கள், கீதை, குரான், குரு கிரந்த சாகேப் நூல் இவை அனைத்தும் கிட்டத்தட்ட ஒன்றாகவே உள்ளது. யஜுர்வேதம் அத்தியாயம் 5. ஸ்லோகம் 32, சாமவேதம் மந்திரம் 1400, 822, அதர்வண வேதம் கண்டம் 4, அத் 1, ஸ்லோகம் 7, மற்றும் ரிக்வேதம் மண்டலம் 1 அத். 1 சூக்தம் 11 ஸ்லோகம் 4, இவை அனைத்திலும் கபீர் பெயரை எழுதி அவர் பூரண பிரம் (கடவுள்) கபீர் என்றும், சத்யலோகத்தில் உருவத்துடன் உள்ளார்

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பகவத் கீதை 4 வேதங்களின் சாரமாகும். கீதையும் அதே சத்யபுருஷ் பூரண பிரம் கபீரை பற்றி குறிப்பிடுகிறது. கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16, 17ல், மற்றும் அத். 18, ஸ்லோகம் 46, 61, 62, அத். 8, ஸ்லோகம் 3, 8 முதல் 10 மற்றும் 22ல், மேலும் அத். 15 ஸ்லோகம் 1,2,3,4 இவைகளில் இதே பூரண பரமாத்மாவை வழிபட குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீ குரு கிரந்த் சாகேப் நூலின் பக்கம் எண் 24, 721ல் கபீர் சாகேப் பெயர் குறிப்பிட்டு அவர் புகழ் பாடப்பட்டுள்ளது. அதேபோல் குரானும், பைபிளும் ஒன்று தான். அனைத்து லோகமும் கபீர் அல்லாஹ்வின் சக்தியால் இயங்குகின்றன என்று இவை இரண்டும் ஒரே விஷயத்தை கூறுகின்றன. குர்ஆன் ஷெரீப்பின், சூரத் ஃபுர்கானி எண். 25 ஆயத் எண். 52-59 வரையில், கபீரன், கபீரா, கபீரு போன்ற பெயரால், கபீர் அல்லாவின் மகிமையை கூறி, அதில் முஹம்மது நபியே! ஆறு நாட்களில் அனைத்தையும் படைத்து, ஏழாவது நாள் அரியணையில் அமர்ந்தார் அதாவது சத்யலோகத்தில் சென்று ஓய்வெடுத்த அந்த கபீர் அல்லாவின் மகிமையைக் கூறுங்கள். அவர் அல்லாஹ் கபீர் ஆவார். இதற்கான ஆதாரம் பைபிளில் ஆதியாகமம் 1:20.2:5 இல் உள்ளது.

அனைத்து மகான்கள் மற்றும் சாஸ்திரங்களின் சாரம் என்னவென்றால், மூன்று மந்திரங்கள் (நாம்) மற்றும் தீட்சை அளிக்கும் அதிகாரம் கொண்ட பூரண குருவிடம் தீட்சை பெற்று பிறப்பு, இறப்பு சக்கரத்தில் இருந்து விடுதலை பெறவேண்டும். எங்கள் நோக்கமே உங்களை காலனின் சிறையிலிருந்து விடுவித்து பரமேஸ்வர் கவிர்தேவனின் (கபீர் சாகேப்) சத்யலோகத்திற்கு அழைத்துச் செல்வதாகும். கவிர்தேவ் தனது உரையில், ஒரு உயிரை காலனின் வழிபாட்டிலிருந்து விலக்கி, பூரண குருவிடம் சேர்ப்பதன் புண்ணியம் என்பது ஒரு கோடி பசுக்களை கசாப்புக் கடைக்காரரிடமிருந்து காப்பாற்றுவது போல் ஆகும் என சொல்கிறார். ஏனென்றால், போலி குருமார்களின் சாஸ்திரங்களுக்கு எதிரான பக்தியால் இந்த அப்பாவி மனிதன் காலனின் பிடியில் சிக்கி 84 லட்சம் உயிரினங்களில் பிறப்பு எடுத்து பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறான். ஆன்மா எப்பொழுது பூரண குரு மூலம் கவிர்தேவ் (கபீர் சாகேப்) இடம் சரணடைகிறதோ, அப்பொழுது பிறப்பு, இறப்பு என்ற கஷ்டத்திலிருந்து நிரந்தரமாக மீட்டு, சத்யலோகத்தில் பரம சாந்தியை அடைகிறது.

இன்றோ குருமார்கள் அதிக அளவில் சீடர்களை சேர்த்துக் கொண்டு தங்கள் தகுதியை காட்டுகிறார்கள், அதாவது நான்கைந்து கதைகளை கற்றுக்கொண்டு நானும் தீட்சை அளிக்கிறேன் என்று அப்பாவி மக்களை அழைத்து அவர்களை காலனின் வலையில் சிக்க விடுகிறார்கள். சாஸ்திரத்திற்கு மாறாக தீட்சை கொடுப்பவர்களும், பெறுபவர்களும் நிச்சயம் நரகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே தலைகீழாக தொங்கவிடப்படுவார்கள் என சாஸ்திரம், கீதை, வேதம் போன்ற அனைத்தும் சொல்கிறது. இதை தெளிவுபடுத்த சுருக்கமாக ஒரு உண்மை கதை சொல்கிறோம்.

ஒரு சமயம் ராஜா பரிஷீத் என்பவர் பாம்பு கடித்து ஏழாம் நாள் இறப்பார் என்பது அனைவருக்கும் தெரிந்து விட்டது. ஏழு நாட்களும் ராஜாவிற்கு பகவத் கீதையை கூறினால், அவர் மோகத்தை விட்டு இறைவனிடம் மனதை செலுத்துவார் என அனைவரும் நினைத்தார்கள்.

எல்லோரும் அந்த முடிவை ஏற்றுக் கொண்டாலும் அவருக்கு போதிக்கப் போவது யார்? என்ற கேள்வி எழுந்தது. அப்போது எல்லா ரிஷிகளும், ஸ்ரீமத் பகவத் சுதாசாகரின் ஆசிரியரான மகரிஷி வேத வியாசர் கூட கீதையை கூற முன்வரவில்லை. ஏனென்றால் ஏழாவது நாள் அதன் முடிவு தெரியவரும், எனவே அவர் அதற்கு தகுதியானவர் அல்ல என்று அறிந்தவர். எனவே ஏழு நாட்கள் கீதையை கூற யாரும் முன்வரவில்லை. ஏனென்றால், அனைவரும் தங்களது தகுதி என்ன என்பதை அறிந்திருந்தார்கள். எனவே சொர்க்கத்தில் இருந்து கீதையை போதிக்க சுக்தேவ் ரிஷி வரவழைக்கப்பட்டார், பிறகு ராஜாவின் மோகம் விலகி அவருக்கு சொர்க்கம் கிடைத்தது. சொர்க்க வாசம் முடிந்த பிறகு, நரகத்திற்குச் சென்று மீண்டும் பிறப்பிலும் இறப்பிலும் சுற்றி வருவார். இதுவே இங்குள்ள நியதி. சொர்க்கமும் மூவுலகின் பூரண குரு இல்லாமல் அடைய முடியாது. உதாரணமாக ஒரு இடத்திற்கு பிரதம மந்திரி வருகைக்கு முன்னர், சிறந்த பேச்சாளர்களும், பேண்ட் வாத்தியக் கலைஞர்களும் தங்கள் இனிய பேச்சுகளால் மக்களுடைய கவனத்தை ஈர்க்கிறார்கள். அந்தப் பேச்சாளர்கள் தாங்கள் சொல்லும்படி எதையும் செய்யமுடியாது. ஆனால் அதே பிரதமர் வந்து சர்வதேச கல்லூரியும், சர்வதேச பல்கலைக் கழகமும் உருவாக்க உத்தரவிட்டு சென்றுவிட்டால், அடுத்த நாளே அதன் வேலை தொடங்குகிறது. ஏனென்றால் அவர் வார்த்தைகளில் சக்தி உள்ளது. அதையே நாம் சொன்னால் அது முட்டாள்தனமாகும். காரணம் நமது வார்த்தையில் சக்தி கிடையாது, பிரதம மந்திரிக்கு இது சாதாரண விசயம்.

இந்த உண்மைகளை அறிய, கீழே சில புனித உரைகளைப் படித்து, ஆழ்ந்து சிந்தித்து, விரைவில் குரு மந்திரத்தைப் பெறுங்கள்.

கபீர் சாஹிப் கூறுகிறார்:–

கபீர், பண்டிட் அவுர் மஷால்சி, தோனோ சூஜைன் நாஹிம் /
ஆவ்ரோன் நே கரைன் சாந்தனா, ஆப் அந்தேரே மாஹின் //
கபீர், கர்ணீ தஜ் கத்னி கதைன், அஞ்யானி தின் ராத் /
குகர் ஜியோன் பௌங்கத் ஃபிரைன், சுனி சுயாயி பாத் //
கரீப், பீஜக் கி பாதான் கஹேன், பீஜக் நாஹின் ஹாத் /
பிருத்வி டோபன் உத்ரே, கஹே-கஹே மீடி பாத் //
கரீப், பீஜக் கி பாதான் கஹேன், பீஜக் நாஹிம் பாஸ் /
அவுரோன் கோ பிரமோத் ஹீ, ஆபன் சலே நிராஷ் //
கரீப், கத்னி கே ஷெரே கனே, கதைன் அடம்பர் ஞான் /
பாஹர் ஜவாப் ஆவே நஹீன், லீத் கரைன் மைதான் //

கையில் புத்தகத்தை எடுத்துக் கொண்டு ராமாயணம், கீதையை கூறுகிறேன், சத்சங்கம் நடத்துகிறேன், தீட்சை அளிக்கிறேன் என்பது குழந்தை விளையாட்டல்ல. பூரண குரு அவர்களுக்கு மட்டும் தான் உபதேசமும் தீட்சை அளிக்கும் அதிகாரம் உண்டு. ஏனென்றால், அவருடைய வார்த்தைகளில் சக்தி இருக்கும், சுக்தேவ் ரிஷிக்கு உள்ளது போல். உதாரணமாக ஒருவர் சத்சங்கத்தில் மாம்பழத்தின் மகிமையை விளக்குகிறார், அது மஞ்சள் நிறம் கொண்டது இனிமையானது, அதுவே பழங்களின் அரசன் என்று சொல்கிறார். யாராவது மாம்பழம் கொடுங்கள் என்று கேட்டால், சத்சங்கம் செய்பவர் என்னிடம் மாம்பழம் இல்லை என்கிறார். அது எங்கே கிடைக்கும் என்று கேட்டால், தெரியாது என்பார்.

பிறகு அதை எப்படிப் பெறலாம் என்று கேட்டால், அதற்கு உருவம் இல்லை, அதைப் பெற முடியாது என்பார். இப்படி அதிகாரம் இல்லாதவர்கள் தத்துவ ஞானம் தெரியாமல் சத்சங்கம் செய்பவரும் அவர் மூலம் கேட்பவரும் நரகத்திற்குத்தான் செல்வார்கள்.

யாராவது தானே குருவாக மாறி சீடர்களை உருவாக்குகிறார்களோ அவர் தன் தலையில் சுமையை ஏற்றிக் கொள்வதாக அர்த்தம். ஏனென்றால், சீடர்கள் மோட்சம் அடையாதவரை குருவும் மீண்டும் மீண்டும் பிறப்பார் என்பதே கடவுளின் நியதி. ஒரு பூரண குரு போலி சீடர்களை விலக வைக்க சோதிப்பார் மற்றும் தன்னை வெறுக்கும் அளவிற்கு லீலை செய்வார். கபீர் சாகேப் ஜி காசியில் தோன்றியபோது, அவருக்கு 64 லட்சம் சீடர்கள் இருந்தார்கள். சீடர்களை சோதிப்பதற்காக கபீர் சாகேப் ஒரு வேசிக்கு உபதேசம் கொடுப்பதற்கு அவர் வீட்டுக்கு செல்ல தொடங்கினார். இதைக் கண்ட அனைத்து சீடர்களுக்கும் குருவின் மீது நம்பிக்கை போனது. இருவரை தவிர மற்ற அனைவரும் குருவை வெறுத்துவிட்டார்கள். சத்குரு கரீப்தாஸ் ஜி மகராஜின் புனித உரையில் உள்ள ஆதாரம்:-

கரீப், சன்டாலி கே சௌக் மேம், சத்குரு பேடே ஜாய் /
சௌசட் லாக் காரத் கயே, தோ ரஹே சத்குரு பாய் //
படுவா படுவா சப் கஹே, ஜானத் நாஹின் கோஜ் /
தாஸ் கரீப் கபீர் கரம், பாண்டத் சிர் கா போஜ் //

எனவே கவனமாக சிந்தித்து முடிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சாமவேதம் ஸ்லோகம் 822ல் உயிரின் முக்தி மூன்று மந்திரங்களால் ஆகும் என கூறப்பட்டுள்ளது. ஒன்று, “ஓம்”, இரண்டாவது சத்நாம் (தத்), மூன்றாவது சார்நாம் (சத்). கீதையும் ஓம்-தத்-சத் என்று இதைதான் குறிப்பிடுகிறது. மேலும் ஸ்ரீ குரு கிரந்த் சாஹேப் நூலிலும் சத்நாம் மந்திரத்தை ஜபிக்க கூறப்பட்டுள்ளது. சத்நாம்-சத்நாம் என்பது உச்சரிக்கும் மந்திரம் அல்ல. இது உண்மையான மந்திரத்தை நோக்கிக் குறிப்பிடுகிறது. சார்நாம் இதே போன்று தான். ஓம் மந்திரத்தால் மட்டும் எந்தப் பயனும் இல்லை. இந்த மூன்று மந்திரங்களையும் தீட்சை கொடுக்கும் அதிகாரம் எனது மரியாதைக்குரிய குரு ராம்தேவானந்த்ஜி மகராஜ் மூலம் எனக்கு அருளப்பட்டது. இது கபீர் சாகேப் முதல் தலைமுறை தலைமுறையாக நடந்து வருகிறது. முதலில் சத்சங்கம் உரைகளை கேளுங்கள், சேவை செய்யுங்கள் உங்கள் பக்தி எனும் வயல் மேம்படும். கபீர் சாஹிப் கூறுகிறார்:-

கபீர், மானுஷ் ஜனம் பாய் கர், நஹின் ரடே ஹரி நாம் /
ஜைசே குவா ஜல் பினா, குத்வாயா கிஸ் காம் //
கபீர், ஏக் ஹரி கே நாம் பினா, ஏ ராஜா ரிஷப் ஹோ /
மாடீ தோவை கும்ஹார் கீ, காஸ் ந டாலே கோய் //

அதன் பிறகு பக்தி என்ற வயலில் விதையை விதைக்க வேண்டும். சாஸ்திரங்களை (கபீர் சாகேபின் உரை, வேதம், கீதை, புராணம், குரான், தர்மதாஸ் போன்ற மகான்களின் உரை) படிப்பதால் மட்டும் முக்தி அடையாது. அனைத்து சாஸ்திரங்களின் ஒரே சாரம், பூரண முக்தி அடைய பூரண பரமாத்மா கபீர் சாகேப் ஜியின் பிரதிநிதியான குருவிடம் (குரு மூலம் தீட்சை கொடுக்க அதிகாரம் கொண்டவர்) தீட்சை பெற்று முக்தி அடைய வேண்டும். தீட்சை பெறவில்லை என்றால் கரிப் தாஸ் சாகேப் ஜி கூறுவது:-

நாம் பினா சூனா நகர், பட்யா சகல் மே ஷோர் /

லூட் ந லூட்டி பந்தகி, ஹோ கயா ஹன்சா போர் //
அத்லி ஆர்தி அதல் அஜூனி, நாம் பினா ஹை காயா சூனி /
ஜூடி காயா கால் லுஹாரா, இங்கலா பிங்கலா சுஷ்மன் துவாரா //
க்ருதக்னி பூலே நர் லோயீ, ஜா கட் நிஷ்சய் நாம் ந ஹோய் /
சோ நர் கீட் பதங் புஜங்கா, சௌராசி மே கர் ஹை அங்கா //

விதை விதைக்கப்படவில்லை என்றால் வயலை தயார் செய்து பயனில்லை. அதாவது எது அவசியம் என்பது உங்களுக்கு இப்பொழுது நன்கு புரியும். பூரண குரு மூலம் தீட்சை பெறுவது வயலில் விதை விதைப்பதை போல மிக முக்கியமானது. குருநானக் சாகேப் ஜி, கபீர்தாஸ் சாகேப் ஜி, தரம்தாஸ் சாகேப் ஜி போன்ற மகான்கள் ஜபம் செய்த அதே மந்திரத்தை நாமும் ஜெபிக்க வேண்டும். மற்ற மந்திரங்களால் முக்தி கிடைக்காது. எனவே அனைவரும் உபதேசம் பெற்று தங்களுடைய பக்தி செல்வத்தை வளம் பெறச் செய்து மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும். முடிந்த வரையில் விரைவாகச் செய்யவும். ஏனென்றால் இந்த மனித உடல் எந்த நேரமும் பிரிந்து விடகூடும். குரு நானக்ஜி சொல்கிறார்:–

ந ஜானே ஏ கால் கி கர் டாரே, கிஸ் விதி டல் ஜா பாசா வே /
ஜின்ஹாதே சர் தே மௌத் குடக்தி, உன்ஹானு கேடா ஹான்சா வே //

கபீர் சாகேப்ஜி சொல்கிறார்:–

கபீர், ஸ்வான்ஸ்–உஸ்வான்ஸ் மே நாம் ஜபோ, வியர்த்தா ஸ்வான்ஸ் மத் கோய் /
நா ஜானே இஸ் ஸ்வான்ஸ் கா, ஆவன் ஹோ கே நா ஹோய் //
சத்குரு சோயி ஜோ சார்நாம் தர்டாவை, அவுர் குரு கோயி காம் நா ஆவை /
சார் நாம் பின் புருஷ் (பகவான்) த்ரோஹி //

அதாவது சார்நாம் கொடுக்காத குருவும், கொடுக்க அதிகாரம் இல்லாத குருவும், சாஸ்திரங்களை படித்து தானே தீட்சை கொடுக்கும் குருவும் சீடர்களும் நரகத்திற்கு செல்வார்கள். அத்தகைய குருக்கள் இறைவனின் எதிரிகள், துரோகிகள், இறைவனது சபையில் அவர்கள் தலைகீழாகத் தொங்க விடப்படுவார்கள். இப்பொழுது போலி குருமார்கள் மூலமாக பக்தர்களுக்கு ஒரு தவறான தகவல் கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது, ஒரு குருவை ஏற்றுக் கொண்ட பிறகு, மற்றொரு குருவிடம் செல்லக் கூடாது என்று. சற்று சிந்தியுங்கள், குரு என்பவர் நமது பிறப்பு, இறப்பு என்ற நோயை நீக்கும் மருத்துவர் ஆவார். ஒரு மருத்துவரால் இயலவில்லை என்றால், மற்றொரு நல்ல மருத்துவரிடம் சென்று நோய் தீர வழி காண்போம். தரம்தாஸ் சாகேப் ஜி முதலில் ரூப்தாஸ்ஜி என்ற குருவிடம் அடைக்கலம் ஆனார். எப்பொழுது ரூப்தாஸ்ஜி முக்தியருளும் முழுமையான அதாவது பூரண குரு இல்லை என தரம்தாஸ் ஜி அறிந்தாரோ, அப்பொழுதே, அவரை துறந்து பூரண பிரம் பரமேஸ்வர் கபீர் சாகேப் ஜி இடம் அடைக்கலம் ஆகி மோட்சத்தை அடைந்தார். அதேபோல அரைகுறை குருமார்களை உடனே விட்டுவிட வேண்டும்.

"ஜூடே குரு கே பக்ஷ் கோ, தஜத் ந கீஜை வாரி "

(குரு மற்றும் நாம் மகிமையின் உரை)

கபீர், பின் உப்தேஷ் அசம்ப் ஹை, கியோன் ஜீவத் ஹைன் பிரான் /
பின் பக்தி கஹான் டோர் ஹை, நர் நாஹி பாஷான் //1//
கபீர், ஏக் ஹரி கே நாம் பினா, நாரி குதியா ஹோ /

கலி-கலி பொக்கத் ஃபிரை, டூக் நா டாலே கோய் // 2 //
கரீப், பிபி பட்தே ரஹேன் தீ, ட்யோடி லக்தி பார் /
காத் உகாடே ஃபிர்தி ஹை, பன் குதியா பாஜார் // 3 //
கரீப், நக்பேசர் நக் சே பனி, பஹரத் ஹார் ஹமேல் /
சுந்தரி சே சுன்ஹீ (குத்தியா) பனி, சுன் சாஹிப் கே கேல் // 4 //
கபீர், ஹரி கே நாம் பினா ராஜா ரிஷப் ஹோய் /
மாடி லதை கும்ஹார் கே, காஸ் நா டேலே கோய் // 5 //
கபீர், ராம் கிருஷ்ண் சே கவுன் படா, உன்ஹோன் பி குரு கீன்ஹ /
தீன் லோக் கே வே தனி, குரு ஆகே ஆதின் // 6 //
கபீர், கர்ப் யோகேஷ்வர் குரு பினா, லாகா ஹரி கி சேவ் /
கஹை கபீர் ஸ்வர்க சே ஃபேர் தியா சுக்தேவ் // 7 //
கபீர், ராஜா ஜனக் சே நாம் லே, கின்ஹி ஹரி கி சேவ் (பூஜா) /
கஹே கபீர் பைகுண்ட் மே, உல்ட் மிலே சுக்தேவ் //8//
கபீர் சத்குரு கே உப்தேஷ் கா, லாயா ஏக் விசார் /
ஜே சத்குரு மில்தே நஹி, ஜாதா நரக் த்வார் //9//
கபீர், நரக் த்வார் மே தூத் சப், கர்தே கேன்சா தான் /
உன்தே கப்ஹூ நா சுட்தா, ஃபிர் ஃபிர்தா சாரோ கான் //10//
கபீர் சார் கானி மே பரம்தா, கப்ஹூ நா லக்தா பார் /
சோ ஃபேரா சப் மிட் கயா, சத்குரு கே உப்கார் //11//
கபீர், சாத் சமுன்தர் மசி கரூம், லேக்னி கரூ பன்ராய் /
தர்தி கா காகஜ் கரு, குரு குண் லிகா ந ஜாய் //12//
கபீர், குரு படே கோவிந்த் சே, மன் மே தேக் விசார் /
ஹரி சுமரே சோ ரஹ் கயே, குரு பஜே ஹூயே பார் //13//
கபீர், குரு கோவிந்த் தோஊ கடே காகே லாகுன் பாய் /
பலிஹாரி குரு ஆப்னே, ஜின் கோவிந்த் தியா மிலாய் //14//
கபீர், ஹரி கே ரூட்தா, குரு கி ஷரண் மே ஜாய் /
கபீர் குரு ஜே ரூட் ஜா, ஹரி நஹி ஹோத் சஹாய் //15//

## எந்த கடவுளின் மந்திரத்தை ஜபிப்பது?

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16**

த்$_3$வாவ், இமௌ புருஷௌ, லோகே, க்ஷர:, ச, அக்ஷர: ஏவ, ச
க்ஷர: ஸர்வாணி பூ$_4$தானி கூடஸ்த$_2$: அக்க்ஷர: உச்யதே // 16 //

**மொழியாக்கம் : இவ்வுலகில் இரண்டு வகைக் கடவுள்கள் உள்ளனர், அழியக் கூடியவர் மற்றும் அழிவற்றவர். மேலும் அனைத்து உயிர்களின் உடல்களும் அழியக்கூடியவை மற்றும் ஆன்மா அழிவற்றது எனப்படும்.**

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 17.**

உத்தம: புருஷ்: து, அன்ய: பரமாத்மா, இதி, உதா$_3$ஹ்ருத:
ய: லோகத்ரயம் ஆவிஸ்$^2$ய, பி$_3$ப$_4$ர்தி, அவ்யய: ஈஸ்$^2$வர: //17 //

**மொழியாக்கம்: உயர்ந்த கடவுள் (இறைவன்) என்பவர் வேறுபட்டவர், அவர் மூவுலகில் அனைவரையும் காக்கும் அழிவற்ற பரமேஸ்வரர் பரமாத்மா என்று அழைக்கப்படுகிறார்.**

கபீர், அக்ஷர் புருஷ் ஏக் பேட் ஹை, நிரஞ்சன் வாகி டார் /
த்ரிதேவா (பிரம்மா, விஷ்ணு, ஷிவ்) ஷாகா பயே, பாத் பயா சன்சார் //
கபீர், தீன் தேவ் கோ சப் கோயி த்யாவே, சௌதா தேவ் கா மரன்ம் ந பாவை/

சௌதா சாண்ட் பன்சம் த்யாவை, கஹே கபீர் சோ ஹம்ரே ஆவை //
கபீர், தீன் குணன், கி பக்தி மே, பூல் பட்யா சன்சார் /
கஹே கபீர் நிஜ் நாம் பின், கேசே உத்ரே பார் //
கபீர், ஓம்கார் நாம் பிரம் (கால்) கா, யஹ கர்தா மத் ஜான் /
சாஞ்சா சபத் கபீர் கா, பர்தா மாஹி பஹசான் //
கபீர், தீன் லோக் சப் ராம் ஜபத் ஹே, ஜான் முக்தி கோ தாம் /
ராம்சந்தர் வசிஷட் குரு கியா, தின் கஹி சுனாயோ நாம் //
கபீர், ராம் கிருஷ்ண் அவதார் ஹை, இன்கா நாஹி சன்சார் /
ஜின் சாஹப் சன்சார் கியா, சோ கின்ஹு ந ஜனம்யா நாரி //
கபீர், சார் புஜா கே பஜன் மே, புல் படே சப் சந்த் /
கபிரா சுமிரே தாசு கோ, ஜாகே புஜா அனந்த் //
கபீர், வாசுஷிசுஷ்ட் முனி சே தத்வேதா ஞானி, ஷோத் கர் லகன் தரே /
சீதா ஹரண் மரண் தஷ்ரத் கா, பன் பன் ராம் ஃபிரே //
கபீர், சமுத்ர பாடி லங்கா கயே, சீதா கோ பர்தார் /
தாஹி அகஸ்த் முனி பீயே கயோ, இன்மே கோன் கர்தார் //
கபீர், கோவர்தன் கிருஷ்ண் ஜி உடாயா, த்ரோணாகிரி ஹனுமந்த் /
ஷேஷ் நாக் சப் ஸ்ருஷ்டி உடாயி, இன்மே கோ பக்வந்த் //
கரீப், துர்வாசா கோபே தஹான், சமஜ் ந ஆயி நீச் /
சப்பன் கோடி யாதவ் கடே, மசீ ருதிர் கி கீச் //
கபீர், காடே பந்தன் விப்தி மே, கடின் கியா சங்ராம் /
சீன்ஹோ ரே நர் ப்ராணியா, கருட் படோ கீ ராம் //
கபீர், கஹே கபீர் சித் சேத்ஹு, சப்த கரோ நிருவார் /
ஸ்ரீ ராம்சந்தர் கோ கர்தா கஹத் ஹே, புலி பர்யோ சன்சார் //
கபீர், ஜின் ராம் கிருஷ்ண் நிரஞ்சன் கியா, சோ தோ கர்தா நியார் /
அந்தா ஞான் ந பூஜயீ, கஹே கபீர் பிசார் //
கபீர், தீன் குணன் (பிரம்மா, விஷ்ணு, ஷிவ்) கீ பக்தி மே, புல் பட்யோ சன்சர் /
கஹே கபீர் நிஜ் நாம் பினா, கைசே உதரோ பார் //

**சந்த் ராம்பால் தாஸ் ஜி மகாராஜ் இயற்றியது**

யுத்த ஜீத் கர் பாண்டவ், குஷி ஹுயே அபார் /
இந்தர்ப்ரஸ்த் கீ கத்தீ பர், யுதிஷ்டிர் கீ சர்கார் // 1 //
ஏக் தின் அர்ஜுன் பூச்தா, சுன் கிருஷ்ண பகவான் /
ஏக் பார் ஃபிர் சுனா தியோ, வோ நிர்மல் கீதா ஞான் // 2 //
கமாஷான் யுத்த கே காரண், பூல் படீ ஹை மோஹேன் /
ஜ்யோங் கா த்யோங் கஹ்னா பகவன், தனிக் ந அந்தர் ஹோயே // 3
ரிஷி முனி அவுர் தேவதா, சப்கோ ரஹே தும் காய் /
இன்கோ பீ நஹி சோடா ஆப்னே, ரஹே தும்ஹாரா ஹீ குண் காய் // 4
கிருஷ்ண போலே அர்ஜுன் சே, யஹ் கல்தி கியுன் கின்ஹ /
ஐசே நிர்மல் ஞான் கோ பூல் கயா புத்திஹீன் // 5 //
அப் முஜே பீ குச் யாத் நகீம், பூல் படீ நீதான் /
ஜ்யோ கா த்யோ உஸ் கீதா கா மை, நஹி கர் சக்தா குண்கான் // 6
ஸ்வயம் ஸ்ரீகிருஷ்ண கோ யாத் நஹி அவுர் அர்ஜுன் கோ தம்காவே /
புத்தி கால் கே ஹாத் ஹை, சாஹே திரிலோகீ நாத் கஹலாவே // 7 //
ஞான் ஹீன் பிரசார் கா, ஞான் கதே தின் ராத் /
ஜோ சர்வ கோ கானே வாலா, கஹே உசீ கீ பாத் // 8 //

சப் கஹே, பகவான் க்ருபாலு ஹை, க்ருபா கரே தயால் /
ஜிஸ்கீ சப் பூஜா கரே, வஹ ஸ்வயம் கஹே மே கால் // 9 //
மாரே காவே சப் கோ, வஹ கேசா க்ருபால் /
குத்தே கதே சுவர் பனாவை ஹை, பிர் பீ தீன் தயால் // 10 //
பைபில் வேத் குரான் ஐஹ, ஜேசே சாந்த் பிரகாஸ் /
சூரஜ் ஞான் கபீர் கா, கரே திமர் கா நாஷ் // 11 //
ராம்பால் சாசீ கஹை, கரோ விவேக் விசார் /
சத்நாம் வ சார்நாம், யஹீ மன்தர் ஹை சார் // 12 //
கபீர் ஹமாரா ராம் ஹை, வோ ஹை தீன் தயால் /
சங்கட் மேசன் கஷ்ட ஹரண், குண் காவை ராம்பால் // 13 //

**சந்த் ராம்பால் தாஸ் ஜி மகாராஜ் இயற்றியது**

பிரம்மா விஷ்ணு ஷிவ் ஹை, தீன் லோக் பிரதான் /
அஷ்டங்கீ இன்கீ மாதா ஹை, அவுர் பிதா கால் பகவான் // 1 //
ஏக் லாக் கோ கால், நித் காவே சீனா தாண் /
பிரம்மா பனாவே விஷ்ணு பாலே, ஷிவ் கர் தே கல்யாண் // 2 //
அர்ஜுன் டர் கே பூச்தா ஹை, யஹ் கௌன் ரூப் பகவான் /
கஹே நிரஞ்சன் மை கால் ஹுன், சப்கோ ஆயா கான் // 3 //
பிரம் நாம் இசீ கா ஹை, வேத் கரே குன்கான் /
ஜனம் மரண் சோராசி, யஹ் இன்கா சம்விதான் // 4 //
சார் ராம் கீ பக்தி மேம், லக் ரஹா சன்சார் /
பான்ச்வே ராம் கா ஞான் நஹீ, ஜோ பார் உதாரன்ஹார் // 5 //
பிரம்மா-விஷ்ணு-ஷிவ் தீனோ குண் ஹை, தூஸ்ரா ப்ரக்ருதி கா ஜால்/
லாக் ஜீவ் நித் பக்ஷன் கரேன், ராம் தீஸ்ரா கால் // 6 //
அக்ஷர் புரூஷ் ஹை ராம் சௌதா, ஜைசே சந்த்ரமா ஜான் /
பான்ச்வா ராம் கபீர் ஹை, ஜைசே உதய் ஹுவா பான் // 7 //
ராம்தேவாநந்த் குரு ஜீ, கர் கயே நஜர் நிஹால் /
சத்நாம் கா தியா கஜானா, பர்தே ராம்பால் // 8 //

## தீட்சை பெறுபவர்கள் அவசியம் அறிய வேண்டியவை

பூரண குருவை அறிதல் :- தீட்சை எடுப்பவர் முதலில் குருவை பற்றி அறிந்த பிறகு தீட்சை எடுக்கவேண்டும். இன்று கலியுகத்தில் பக்தர்களுக்கு பூரண குருவை அறிவது என்பது சிக்கலான விஷயம் ஆகிவிட்டது. இதற்கு எளிதான வழி உள்ளது. சாஸ்திரப்படி பக்தி செய்து தன் சீடர்களையும் அதன் படி வழி நடத்துபவர் உண்மையான பூரண குரு ஆவார். ஏனென்றால் கபீர் சாகேப், நானக் சாகேப், சந்த் கரீப்தாஸ்ஜி மகாராஜ், சந்த் தரம்தாஸ் சாகேப் அவர்களின் உரைகள், வேதம், கீதை, புராணம், குரான், பைபிள் ஆகியவை பக்தி மார்க்கத்தின் வழிகாட்டி ஆகும். இந்த சாஸ்திர முறைப்படி சமுதாயத்தை வழி நடத்துபவர் பூரண குரு ஆவார். சாஸ்திரத்திற்கு மாறாக வழி நடத்துபவர், பக்தர் சமூகத்தின் விரோதிகள் ஆவார். இந்த விலைமதிப்பற்ற மனித வாழ்க்கையோடு விளையாடிக் கொண்டிருக்கிறார், இப்படிப்பட்ட போலி சாதுக்கள் இறைவனுடைய சபையில் தலைகீழாக தொங்க விடப்படுவார்கள். உதாரணத்திற்கு பாடத்திட்டத்தில் இல்லாத வேறு விஷயங்களை போதிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் எதிரி ஆவார்.

கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 15.

ந, மாம், து$_3$ஷ்க்ருதிந:, மூடா$_4$:, ப்ரபத்$_3$யந்தே, நராத$_4$மா:,
மாயயா, அபஹ்ருதஜ்ஞானா, ஆஸுரம், பா$_4$வம், ஆஸ்$^2$ரிதா: //15//

**மொழியாக்கம் :- மாயையால் வசப்பட்டவர்கள் அசுர குணம் கொண்ட தாழ்ந்த மனிதர்கள் என்னை வழிபடுவதில்லை, அதாவது முக்குணங்களை (ரஜோகுணம் பிரம்மா, சத்குணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) வழிபடுகிறார்கள்.**

**யஜுர் வேதம் அத்தியாயம் 40 ஸ்லோகம் 10:**

**(மொழிபெயர்த்தவர் சந்த் ராம்பால் தாஸ் ஜி)**

அந்யதே$_3$வாஹு:ஸம்ப$_4$வாத$_3$ந்யதா$_3$ஹுர்ஸம்ப$_4$வாத்,
இதி ஸு$^2$ஸ்ரும் தீ$_4$ராணாம் யே நஸ்த்த$_3$விச்சஷிரே //10//

**மொழியாக்கம் : கடவுளை பற்றி பொதுவாக உருவமற்றவர் அதாவது பிறக்காதவர் என்று கூறப்படுகிறது. சிலர் அவர் உருவத்தில் அதாவது அவதாரமாக பிறப்பு எடுக்கிறார் என்று கூறுகிறார்கள். பூரண ஞானி சரியான முறையில் அதாவது உண்மையான வழியில் அவருடைய தெளிவான மற்றும் தனித்துவமான அறிவை வழங்குவார்கள்.**

**கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 34:**

தத்$_3$, வித்$_3$தி$_4$, ப்ரணிபாதேன, பரிப்ரஸ்$^2$நேன, ஸேவயா/
உபதே$_3$ க்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞானிந: தத்வத$_3$ர்ஷிந: //34//

**மொழியாக்கம்:- பூரண பரமாத்மாவின் ஞானத்தை அறிந்த மகான்களை முறையாக சாஷ்டாங்கமாக வணங்கி, அவர்களுக்குச் சேவை செய்து, பணிவுடன் கேட்டால், பரமாத்மாவின் ஞானத்தை அறிந்த அவர்கள், அந்த தத்வஞானத்தை உங்களுக்கு அறிவுறுத்துவார்கள்.**

## தீட்சை பெறுபவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

**1. போதை பொருட்கள் உட்கொள்ள தடை:- ஹுக்கா, மதுபானம், பீர், புகையிலை, பீடி, சிகரெட், குட்கா, இறைச்சி, முட்டை, சுலபா, அபின், கஞ்சா இவைகளை முற்றிலும் தவிர்ப்பதுமன்றி மற்ற யாருக்கும் தரக்கூடாது. கரீப்தாஸ்ஜி மகராஜ் போதை வஸ்துக்களை மிகவும் மோசமானவை என்று விவரித்து தனது உரையில் கூறியதாவது:-**

சுராபான் மத் மாஸ்சாஹாரி, கமன் கரை போகை பர்நாரி /
சதர் ஜனம் கடத் ஹை ஷீஷங், சாஷி சாஹிப் ஹை ஜக்தீஷம் //
பர்த்வாரா ஸ்த்ரி கா கோலை, சதர் ஜன்ம அந்தா ஹோய் டோலை /
மதிரா பீவே கட்வா பானி, சத்தர் ஜன்ம ஷ்வான் கே ஜானி //
கரீப் ஹுக்கா ஹர்தம் பீவ்தே, லால் மிலாவே தூர் /
இஸ்மே சன்ஷய் ஹை நகீ, ஜன்ம பிச்லே சூர் // 1 //
கரீப், சோ நாரி ஜாரி கரே, சுரா பான் சௌ பார் /
ஏக் சிலம் ஹுக்கா பரே, டுபே காலீ தார் // 2 //
கரீப், சூர் கஊ, கூங் காத் ஹைம், பக்தி பிஹுநேன் ராட் /
பாங்க் தம்பாகூ கா கயே, சோ சாபத் ஹைம் ஹாட் // 3 //
கரீப், பாங்க் தம்பாகூ பீவ் ஹீம், சுரா பான் சே ஹேத் /
கோஷத் மட்டி காய் கர், ஜங்கலி பனே ப்ரேத் // 4 //
கரீப், பான் தம்பாகூ சாப் ஹீம், நாஸ் நாக் மேம் தேத் /
சோ தோ இராநே கயே, ஜ்யூ பட்பூஜே கா ரேத் // 5 //

கரீப், பாங்க் தம்பாகூ பீவ்ஹீம், கோஷ்த கலா கபாப் /
மோர் மருக் கூ பகத் ஹைம், தேங்கே கஹாங் ஜவாப் // 6 //

2. தீர்த்த ஸ்தலங்களுக்கு செல்ல தடை:- எந்த விதமான விரதமும் இருக்க கூடாது. எந்த தீர்த்த யாத்திரையும் செய்யக் கூடாது. கங்கையிலும் மற்ற மத ஸ்தலங்களுக்கு நீராடவும், தரிசனம் செய்யவும் போக கூடாது. கோவில்களுக்குள் கடவுள் இருக்கிறார் என்ற எண்ணத்தோடு போக கூடாது. கடவுள் ஒன்றும் பசு அல்ல பூசாரியால் கட்டப்பட்டு வைப்பதற்கு. இறைவன் ஒவ்வொரு துரும்பிலும் இருக்கிறார். அனைத்து வழிபாடுகளும் சாஸ்திரத்திற்கு மாறானது.

சற்று யோசியுங்கள், அனைத்து தீர்த்த ஸ்தலங்கள் (ஜெகன்நாத் கோவில், பத்திரிநாத், ஹரிதுவார், மக்கா மதினா, அமர்நாத், வைஷ்ணோ தேவி, பிருந்தாவனம், மதுரா, அயோத்தி ராமர் கோவில், காசி, சுடானி ஸ்தானம்) மற்றும் கோவில்கள், மசூதிகள், குருத்வாரா, தேவாலயம் போன்ற எல்லா இடங்களும் மகான்கள் வசித்த இடம். அவர்கள் பக்தி சாதகம் செய்து பக்தியாகிய செல்வத்தை பெருக்கி உடலை விட்டு தன் இஷ்ட லோகத்திற்கு சென்றுவிட்டார்கள். பிறகு அவர்களுடைய நினைவுச் சின்னமாக சிலர் கோவில்களும், சிலர் மசூதிகளும், தீர்த்த தளங்களும் அமைத்தார்கள். இந்த ஸ்தலங்கள் அனைத்தும் நமக்கு ஓரே செய்தியை தருகின்றன, நாமும் அந்த மகாங்களைப் போலவே அதே பக்தி சாதகத்தை செய்ய வேண்டும். அதற்கு அவர்களை போலவே பக்தி கூறும் மகான்களை நாடி, அவர்கள் சொன்னபடி செய்ய வேண்டும். ஆனால் மாறாக பின்னர் இந்த ஸ்தலங்களின் வழிபாடு தொடங்கியது, இது முற்றிலும் பயனற்றது மற்றும் வேதத்திற்கு எதிரானது.

இந்த ஸ்தலங்கள் எப்படி இருக்கிறது என்றால், உதாரணத்திற்கு ஓர் இனிப்பு தயாரிப்பவர் ஒரு இடத்தில் அடுப்படி செய்து இனிப்புகள் தயாரித்து தானும் உண்டு மற்றவர்களுக்கும் அளித்துவிட்டுச் சென்றுவிட்டார். பிறகு அந்த இடத்தில் இனிப்புகளும் இல்லை, தயாரிப்பவரும் இல்லை, அந்த அடுப்படி மட்டுமே உள்ளது. அந்த அடுப்பால் நமது வயிறும் நிரம்பாது, நமக்கு இனிப்பு செய்யும் முறையும் கூற முடியாது. இப்பொழுது ஒருவர் இனிப்பு சமைத்த அடுப்பை காண்பிக்கிறேன் என்று நம்மை அழைத்து சென்றால், நாமும் சென்று அதை பார்த்துவிட்டு, அதை பல முறை சுற்றி வந்தால், நமக்கு இனிப்பு கிடைக்குமா? அல்லது இனிப்பு செய்யும் முறையை சொல்ல தயாரிப்பவர் கிடைப்பாரா? இதற்கு முதலில் இனிப்புகளை செய்து கொடுத்து, அதன் முறையைச் சொல்லும் இனிப்பு தயாரிப்பாளரை தேட வேண்டும். பிறகு அவர்கள் சொல்வதை போல் செய்யவேண்டும். எனவே தர்ம ஸ்தலங்களைத் தேடிப் போகாமல், சாஸ்திரங்களின் முறைபடி பூரண பரமாத்மா கபீர் சாகேப்ஜியின் பக்தியை அருளும் பூரண குருவை தேடி அவர்கள் சொல்லும் படி மட்டுமே செய்யவேண்டும், மனம் போனபடி செல்லாதீர்கள்.

சாமவேதம் எண் 1400, அத்தியாயம் 12, காண்டம் 3, ஸ்லோகம் 5
(சந்த் ராம்பால்ஜி மகாராஜ் மூலம் மொழியாக்கம்)

ப$_4$த்$_3$ரா வஸ்த்ரா ஸமந்யா3வசாநோ மஹான் கவிர்நிவசனானி ஸ$^2$ன்சன்/
ஆ வச்யஸ்வ சம்வோ: பூயமாநோ விச்க்ஷ்ணோ ஜாக்ரவிர்தே$_3$வவிதௌ /5/

பொருள்:- புத்திசாலிகள், தங்கள் பேச்சுக்களால், பூரண

பரமாத்மாவின் அமுதம் போன்ற உண்மையான சத்திய மார்க்கத்தை வழிநடத்தாமல், அதற்கு பதிலாக விஷம் போன்ற மற்ற வழிபாடுகள் (அதாவது பூதம், மற்றும் பித்ருக்களின் வழிபாடு, சிரார்த்தம், முக்குண வழிபாடு (ரஜோகுணம்-பிரம்மா, சத்குணம்-விஷ்ணு, தமகுணம்-சிவன்) மற்றும் பிரம்ம காலனின் வழிபாடு, கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மற்றும் யாத்திரைகள் உண்ணாவிரதம் போன்ற வழிபாடு வழங்குகிறார்கள். எனவே பூரண பிரம் கபீர் அவர்கள், சாதாரண மனிதனைப் போன்ற வடிவில் வந்து சில நாட்கள் உலகில் வாழ்ந்து தனது உரைகளால் உண்மையான ஞானத்தை விவரித்து, பூரண பரமாத்மாவின் மறைந்திருக்கும் ஞானத்தையும், பக்தியையும் தூண்டுகிறார்.

**கீதை அத்தியாயம் 16 ஸ்லோகம் 23:-**

ய:, ஸா²ஸ்த்ரவிதி₄ம், உத்ஸ்ருஜ்ய, வர்ததே, காமகாரத:, ந, ஸ,
ஸித்₃தி₄ம், அவாப்நோதி, ந, ஸுக₂ம், ந, பராம், க₃திம் //23//

**மொழியாக்கம் : சாஸ்திர விதிகளை விட்டு, மனம் போனபடி வழிபாடு செய்பவன் மோட்சமோ, சித்தியோ, சுகமோ பெறமாட்டான்.**

**கீதை அத்தியாயம் 6 ஸ்லோகம் 16:-**

ந, அதி, அஸ்னத்:, து, யோக:, அஸ்தி, ந, ச, ஏகாந்தம், அந்ஸ்ரநத்ச்:,
ந, ச, அதி, ஸ்வப்நஸீலஸ்ய, ஜாக்₃ரத்: ந, ஏவ, ச, அர்ஜுன் //16//

**மொழியாக்கம்:- அர்ஜுனா! இந்த பக்தி யோகம் என்பது அதிகம் உண்பவனுக்கும், ஒன்றுமே உண்ணாதவனுக்கும், தனிமையான இடத்தில் சாதகம் செய்பவனுக்கும், அதிகம் தூங்குபவனுக்கும் மற்றும் எப்போதும் விழித்திருப்பவனுக்கும் வெற்றியளிக்காது.**

பூஜைன் தேயி தாம் கோ, ஷீஷ் ஹலாவே ஜோ /
கரிப்தாஸ் சாசி கஹை, ஹத் காஃபிர் ஹை ஸோ //
கபீர், கங்கா காடை கர் கரை, பீவே நிர்மல் நீர் /
முக்தி நஹின் ஹரி நாம் பின், சத்குரு கஹைன் கபீர் //
கபீர், தீர்த் கர்-கர் ஜக் முவா, உடே பானி ந்ஹாய் /
ராம் ஹி நாம் ந ஜபா, கால் காசிடே ஜாய் //
கரீப், பீதல் ஹி கா தால் ஹை, பீதல் கா லோடா /
ஜட் மூரத் கோ பூஜ்தே, ஆவைகா டோடா //
கரீப், பீதல் சமச்சா பூஜியே, ஜோ தாள் பரோசே /
ஜட் மூரத் கிஸ் காம் கி, மதி ரஹோ பரோசை //
கபீர், பர்வத் பர்வத் மே பிர்யா, காரன் அப்னே ராம் /
ராம் சரீகே ஜன் மிலே, ஜின் சாரே சப் காம் //

**3. பித்ரு பூஜை செய்யக்கூடாது :- எந்த ஒரு சிரார்த்தமும் பித்ரு பூஜையும் செய்யக்கூடாது. ஸ்ரீ கிருஷ்ணரும் இவ்வகை பித்ரு பூஜை மற்றும் பூத வழிபாடு செய்வதை தடை செய்துள்ளார்.**

**கீதை அத்தியாயம் 9 ஸ்லோகம் 25யில் கூறப்பட்டுள்ளது,**

யாந்தி, தே₃வவ்ரதா:, தே₃வான், பித்ரரின், யாந்தி, பித்ருவ்ரதா:,
பூ₄தானி, யாந்தி, பூ₄தேஜ்யா:, மத்₃யாஜின:, அபி, மாம் //25//

**மொழியாக்கம்:- தேவர்களை பூஜிப்பவர் தேவர்களையும், பித்ருக்களை பூஜிப்பவர் பித்ருக்களையும், பூதங்களை பூஜிப்பவர் பூதங்களை அடைகிறார், சாஸ்திரப்படி வழிபடும் பக்தர்கள் என் மூலம்**

தான் பயனடைகிறார்கள். கரீப் தாஸ்ஜி மகராஜ் மற்றும் கபீர் சாகேப் ஜியும் இதையே சொல்கிறார்கள்.

கரீப், பூத் ரமே சோ பூத் ஹை, தேவ் ரமே சோ தேவ் /
ராம் ரமே சோ ராம் ஹை, சுனோ சகல் சுர் பேவ் //

எனவே, அந்த பூரண பரமாத்மாவை வழிபடுங்கள், அவரிடமிருந்து பூரண முக்தியை அடைவீர்கள். அவர் தான் பூரண பிரம் சத்யபுருஷ் கபீர் சாகேப்ஜி அவர்கள்.

**கீதை அத்.18 ஸ்லோகம் 46ல் இதன் ஆதாரம் உள்ளது.**

யத:, ப்ரவ்ருத்திர்பூ$_{4}$தாநாம், யேந, ஸர்வமித$_{3}$ம், ததம்/
ஸ்வகர்மணா, தமப்$_{4}$யர்ச்ய, ஸித்$_{3}$தி$_{4}$ம், விந்த$_{3}$தி, மாநவ: //46//

மொழியாக்கம் :- யாரால் அனைத்து உயிர்களும் தோன்றி, இந்த உலகம் முழுவதும் படைக்கப்பட்டதோ, அந்த பரமாத்மாவை வழிபட்டு மனிதன் பரம சித்தியை அடைகிறான்.

**கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 62:-**

தமேவ, ஸ$^{2}$ரணம், க$_{3}$ச்ச$_{2}$ ஸர்வப$_{4}$ாவேந, பா$_{4}$ரத் /
தத்ப்ரஸாத$_{3}$ாத்பராம், ஸா$^{2}$ந்திம், ஸ்த$_{2}$ாநம், ப்ராப்ஸ்யஸி, ஸா$^{2}$ஸ்$^{2}$வதம் //62//

மொழியாக்கம் : அர்ஜ்ஜுனா! நீ முழுமனதுடன் அந்த பரமேஸ்வரரின் சரணத்தை நாடு. அவருடைய கருணையால் பரம சாந்தியும், அழிவற்ற லோகத்தை அடைவாய்! முழுமனதுடன் நாடுவது என்பது, வேறு வழிபாடு இன்றி மனதாலும் செயலாலும் ஒரே கடவுளில் நம்பிக்கை வைப்பது.

**கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 22:-**

புருஷ:, ஸ, பர:, பார்த$_{2}$, ப$_{4}$க்த்யா, லப்$_{4}$யஸ்த்வநந்யயா,
யஸ்யாந்த:, ஸ்த$_{2}$ாநி, பூ$_{4}$தாநி, யேந, ஸர்வமித$_{3}$ம், ததம் //22//

மொழியாக்கம்: அர்ஜ்ஜுனா! யாரால் அனைத்து உயிர்களும் படைக்கப்பட்டு, உலகம் முழுவதும் வியாபித்திருக்கிறதோ, அந்த பரம புருஷ் பரமாத்மாவை தனித்துவமான பக்தி மூலமே அடைய முடியும். தனித்துவமான பக்தி என்பது ஒரு கடவுளின் (பூரண பிரம்) பக்தி மட்டுமே செய்வதாகும். மற்ற முக்குண தெய்வங்களை (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) பூஜிப்பது அல்ல.

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1:-**

ஊர்த்$_{4}$வமூலம், அத$_{4}$:ஸா$^{2}$க$_{2}$ம், அஸ்$^{2}$வத்த$_{2}$ம், ப்ராஹு:, அவ்யயம்,
ச$_{2}$ந்த$_{3}$ாம்ஸி, யஸ்ய, பர்ணாநி, ய:, தம், வேத்$_{3}$, ஸ:, வேத$_{3}$வித் //1//

மொழியாக்கம் :- மேலே வேர்கள், கீழே கிளைகள் கொண்ட அரசமரம் போன்ற நித்தியமான விரிவடைந்த உலகம் இது, அதன் சிறிய பகுதிகள் இலைகள் என்று கூறப்படுகிறது. இந்த உலகம் போன்ற மரத்தை இவ்வகையில் அறிந்தவர் பூரண ஞானி அதாவது தத்துவதரிசி ஆவார்.

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 2:-**

அத$_{4}$:, ச, ஊர்த்$_{4}$வம், ப்ரஸ்ருதா:, தஸ்ய, ஸாக$_{2}$ா:, கு$_{3}$ணப்ரவ்ருத்$_{3}$த$_{4}$ா,
விஷயப்ரவாலா:, அத$_{4}$:, ச, மூலாநி, அனுஸந்ததாநி, கர்மாநுப$_{3}$ந்தீ$_{4}$நி,
மநுஷ்யலோகே //2//

அந்த மரத்தின் கிளைகள் மேலும் கீழும் மூன்று குணங்களான பிரம்மா-ரஜோகுணம், விஷ்ணு-சத்வகுணம், சிவன்-தமோகுணம்

வடிவில் விரிந்திருக்கிறது, இந்த கிளைகள் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) தான் காமம், கோபம், பற்று, பேராசை, அகங்காரம் வடிவில் ஆன்மாவை கர்மவினையில் பிணைக்கும் மூல காரணமாகும் மற்றும் மனித உலகம், சொர்க்கம், நரகம், பூலோகத்தில் (லட்சம் உயிரினங்களில்) மேலும் கீழும் அமைக்கப்பட்டுள்ளன.

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 3.**

ந, ரூபம், அஸ்ய, இஹ, தத$_{2}$ா, உப்லப்$_{4}$யதே, ந, அந்த:, ந, ச, ஆதி:, ந, ச /
ஸம்ப்ரதிஷ்ட$_{2}$ா, அஸ்$^{2}$வத்த$_{2}$ம், ஏநம், ஸுவிருட$_{4}$மூலம்,
அஸங்க$_{3}$ஸ்$^{2}$த்ரேண, த்$_{3}$ருடே$_{4}$ந, சி$_{2}$த்த்வா //3//

மொழியாக்கம் : இந்த படைப்பிற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. இங்கே அதாவது என்னால் கொடுக்கப்படும் கீதை ஞானத்திலும் இதன் முழுமையான தகவல் இல்லை, ஏனென்றால், அனைத்து பிரபஞ்சங்களின் உருவாக்கத்தின் முழுமையான ஞானம் எனக்கும் இல்லை. இந்த தூய்மையான வலிமையான தத்துவஞானத்தால் அதாவது சாஸ்திர மூலம் நிரஞ்ஜனின் பக்தியை நிலையற்றதாக கருத வேண்டும்.

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 4**

தத: பத$_{3}$ம் தத்பரிமார்கி$_{3}$தவ்யம் யஸ்மிந்க$_{3}$தா ந நிவர்தந்தி பூ$_{4}$ய: /
தமேவ சாத்$_{3}$யம் புருஷம் ப்ரபத்$_{3}$யே யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ //4//

மொழியாக்கம் : அதற்குப் பிறகு அந்த பரம ஸ்தானமான பரமாத்மாவை தேட வேண்டும், அவரை அடைந்த பிறகு மனிதன் மீண்டும் இவ்வுலகத்திற்கு திரும்பி வருவதில்லை. அந்த ஆதி புருஷ் மூலம் இந்த ஆதி படைப்பு விரிவடைந்ததுள்ளது, அதே ஆதி புருஷ் இடம் நானும் சரணடைந்துள்ளேன். இவ்வாறே பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் தெய்வங்களின் மன்னரான இந்திரனின் வழிபாட்டை விட்டு பரமாத்மாவை வழிபட தூ ண்டினார். அதனால் தான் ஸ்ரீ கிருஷ்ணர் கோவர்த்தன் மலையை கையில் எடுத்து இந்திரனின் கோபத்தை தகர்த்தெறிந்து பிரஜ வாசிகளைக் காத்தார்.

கரீப், இந்திரா சடா பிரிஜ் துபோவன், பீகா பீத் நா லேவ் /
இந்த்ர கடாயீ ஹோத் ஜகத் மே, பூஜா கா கயே தேவ் //
கபீர், இஸ் சன்சார் கோ, சம்ஜாவுன் கை பார் /
பூஞ்ச் ஜோ பக்டே பேட் கி, உத்ரா சாஹைன் பார் //

4. குருவின் கட்டளையை பின்பற்றுதல்:- குருவின் அனுமதியின்றி வீட்டில் எந்த மதச் சடங்குகளையும் செய்யக்கூடாது.

**கபீர் பரமாத்மா தனது உரையில் கூறுகிறார்:**

குருபின் யஞ ஹவன் ஜோ கர்ஹீம், மித்யா ஜாவே கப்ஹூ நஹீம் ஃபல்ஹீம்/
கபீர், குரு பின் மாலா ஃபேர்தே, குரு பின் தேதே தான்//
குரு பின் தோனோ நிஷ்வல் ஹைம், பூச்சோ வேத் புராண்//

5. சமாதிகளை பூஜிக்கக் கூடாது :- எந்தவொரு கல்லறையும் தெய்வ சமாதிகளையும் பூஜிக்கக் கூடாது. மற்ற வழிபாடுகளை செய்ய கூடாது. மேலும் முக்குணங்களையும் (பிரம்மா, விஷ்ணு, சிவா) பூஜிக்கக் கூடாது. குருவின் சொற்படியே செய்ய வேண்டும்.

**கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 15**

ந, மாம், து$_{3}$ஷ்கருதிநோ, மூட$_{4}$ா:, ப்ரபத்$_{3}$யந்தே, நராத$_{4}$மா:,
மாயயா, அபஹ்ருதஜ்ஞாநா:, ஆஸுரம், ப$_{4}$ாவம், ஆஸ்ரிதா: //15//

மொழியாக்கம்:- மாயையால் வசப்பட்டவர்கள், அசுர குணம் கொண்ட தாழ்ந்த மனிதர்கள் என்னை வழிபடுவதில்லை. அவர்கள் முக்குணங்களின் (ரஜோகுணம்- பிரம்மா, சத்வகுணம-விஷ்ணு, தமோகுணம்-சிவனின்) வழிபாடு செய்பவர்கள்.

கபீர், மாயீ மசானி ஷெட் ஷீதலா, பைரவ் பூத் ஹனுமந்த் /
பரமாத்மா உன்சே தூர் ஹை, ஜோ இன்கோ பூஜந்த் //
கபீர், சௌ வர்ஷ தோ குரு கி சேவா, ஏக் தின் ஆன் உபாஸி /
வோ அப்ராதி ஆத்மா, பரே கால் கி பான்ஸி //
குரு கோ தஜே பஜே ஜோ ஆனா / தா பஷுவா கோ போகட் கியானா//

6. துன்பங்களைப் போக்குபவர் கபீர் சாகேப் :- துன்பம் வரும்போது இஷ்ட தெய்வங்களையோ, சமாதிகளையோ வழிபடக் கூடாது. தீபங்களை ஏற்றக்கூடாது. சகல துன்பங்களைப் போக்குபவரான கபீர் சாகேப் ஜியை வணங்க வேண்டும்.

சாம வேதம் ஏண். 822 அத்தியாயம் 3 காண்டம் 5 ஸ்லோகம் 8
(மொழிபெயர்த்தவர் சந்த் ராம்பால் தாஸ்)

மநீஷிபி$_4$: பவதே பூர்வ்ய: கவிர்நர்பி$_4$ர்யத: பரி கோஸா$^2$ம் அஸிஷ்யத$_3$த் /
த்ரிதஸ்ய நாம் ஜநயந்மது$_4$ ஷரந்நிந்த்$_3$ரஸ்ய வாயும் சக்$_2$யாய் வர்த$_4$யன் //8//

பொருள் :- நித்தியமான அதாவது அழிவற்ற கபீர் பரமேஸ்வரர் தன்னை மனதார நேசிக்கும், நம்பிக்கையுடன் வழிபடும் பக்தனுக்கு மூன்று மந்திரங்ககளை உபதேசித்து, அவரைத் தூய்மைப்படுத்தி, பிறப்பு இறப்புகளில் இருந்து விடுவித்து, விதியில் உள்ள உயிர் மூச்சு எண்ணிக்கையை (ஆயுளை) தனது ஆசீர்வாதம் மூலம் அதிகரிக்கிறார். மேலும் ஆசீர்வாதம் மூலம் பரமேஸ்வருடைய உண்மையான ஆனந்தத்தைப் பெற செய்கிறார்.

கபீர், தேவி தேவ் டாடே பயே, ஹம்கோ டௌர் பதாவோ /
ஜோ முஜ் (கபீர்) கோ பூஜைன் நஹின், உன்கோ லூடோ காவோ //
கபீர், கால் ஜோ பீசே பீஸ்னா, ஜௌரா ஹை பனிஹார் /
யே தோ அசல் மஜூர் ஹைன், சத்குரு கே தர்பார் //

7. தேவையற்ற தானங்கள் செய்ய கூடாது :- யாருக்கும் எதையும் தானமாகக் கொடுக்கக் கூடாது. காசு பணமோ, தைக்கப்படாத துணி போன்றவை கொடுக்கக் கூடாது. யாராவது யாசித்து வந்தால் அவர்களுக்கு பால் தேனீர், சாப்பாடு கொடுக்கலாம், பணம் கொடுக்க கூடாது. அதை அவர்கள் தவறாகப் பயன்படுத்தலாம். ஒருவன் தன் மகனுடைய மருத்துவ சிகிச்சைக்கு என பொய் சொல்லி ஒருவரிடம் பிச்சை கேட்டான், அவரும் மனமிறங்கி 100 ரூபாய் தானம் கொடுத்தார். தினமும் சிறிதளவு மது அருந்தும் அந்தப் பிச்சைக் காரன் அன்று நான்கு மடங்கு மது அருந்தினான், பிறகு போதையில் தன் மனைவியை துன்புறுத்தினான். அவனுடைய மனைவி குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொண்டார். உங்கள் தானத்தால் அந்தக் குடும்பமே அழிந்துவிட்டது. எனவே நீங்கள் உதவி செய்ய நினைத்தால் பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவரிடம் சென்று மருந்து வாங்கித் தரலாம்.

கபீர், குரு பின் மாலா பேர்தே, குரு பின் தேதே தான்/
குரு பின் தோனோம் நிஷ்வல் ஹைம், பூச்சோ வேத் பூராண் //

8. எச்சில் உணவை உண்ண கூடாது:- மது அருந்துபவன், மாமிசம் உண்பவன், புகையிலை, கஞ்சா போன்றவைகளை உபயோகிப்பவர்களின் எச்சில் பட்ட உணவை சாப்பிடக் கூடாது.

9. சத்தியலோகம் சென்றவர்களுக்கும் இறந்து போனவர்களுக்கும் காரியம் செய்யக் கூடாது:- ஒருவர் இறந்த பிறகு, சிதைக்கு யார் வேண்டுமானாலும் தீ மூட்டலாம். தீ மூட்டும்போது மங்களாசரன் உச்சரிக்கலாம். பூக்களை எடுக்க வேண்டாம். அந்த இடத்தை சுத்தமாக வைக்க வேண்டுமானால் அந்த சாம்பலை எடுத்து நதியில் கரைத்து விடவும். அந்த நேரம் மங்களாசரன் (உரை) உச்சரிக்க வேண்டும். பதிமூன்றாம் நாள், திவசம், சிரார்த்தம் போன்ற சடங்குகள் செய்ய கூடாது. மற்றவர்களை வைத்து ஹோமம் ஆகியவை செய்யக்கூடாது. இரங்கல் தெரிவிக்க வரும் உறவினர்களுக்கு ஒரு நாளை நியமிக்கவும். அன்று தீபம் ஏற்றி தினமும் செய்யும் வழிபாடுகளை செய்யவும். அனைவருக்கும் சாப்பாடு கொடுங்கள். இறந்தவர் பெயரில் தானம் செய்ய விரும்பினால் குருவின் அனுமதி பெற்று கரிப்தாஸ் ஜி மகராஜின் புனித உரையின் மூன்று நாள் தொடர் பஜனை செய்யவும். உத்தரவு கிடைக்காவிட்டால், தீட்சை பெற்றவர் நான்கு அல்லது ஏழு நாட்களுக்கு நெய் விளக்கு ஏற்றி, ஒரு நாளைக்கு நான்கு முறை மந்திரத்தை ஜபிக்கவும். ஒன்று அல்லது மூன்று ஜெபத்தின் பலனை இறந்தவர்களுக்கு தானம் செய்யலாம். தினசரி செய்யும் தீபம், ஆரத்தி, மந்திர ஜபம் போன்றவற்றைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

கபீர், சாத்தி ஹமாரே சலே கயே, ஹம் பீ சாலன்ஹார்/
கோய் காகஜ் மே பாகி ரஹ ரஹீ, தாதே லகீ ஹை வார் //
கபீர், தேஹ் படீ தோ க்யா ஹுவா, ஜூடா சபீ படீட் /
பக்ஷி உடியா ஆகாஷ் குன், சல்தா கர் கயா பீட் //

## சடங்குகள் சம்மந்தமான ஒரு உண்மைக் கதை

என்னுடைய (சந்த் ராம்பால் ஜி மகாராஜியின்) மதிப்பிற்குரிய குருவான சுவாமி ராம்தேவானந்த் ஜி தன்னுடைய 16வது வயதில் ஒரு பெரிய மகானின் உபதேசத்தை கேட்டு துறவி ஆகிவிட்டார். ஒருமுறை வயலுக்கு அருகில் உள்ள ஒரு காட்டுக்குச் சென்றார். அங்கே இறந்து கிடந்த ஒரு விலங்கினுடைய எலும்புக் குவியலுக்குப் பக்கத்தில் ஆடைகளை கிழித்துப் போட்டு அந்த மகாத்மா உடன் சென்றுவிட்டார். அவரைத் தேடிச் சென்ற உறவினர்கள், அவருடைய ஆடைகளையும், எலும்புகளையும் பார்த்து காட்டு விலங்கு அவரைக் கொன்றுவிட்டதாக நினைத்தனர். பிறகு அந்த எலும்புகளைக் கொண்டு வந்து இறுதி சடங்குளை செய்தனர். 13ம் நாள் சடங்கு, 6 மாத சடங்கு முடித்து சிரார்த்தம் செய்யத் தொடங்கிவிட்டனர்.

என்னுடைய குருநாதர் மிகவும் வயதானவுடன், ஒரு நாள் அவர் வீட்டுக்குச் சென்றார். அப்பொழுது வீட்டார்கள் இவர் உயிருடன் இருப்பதை அறிந்தார்கள். காட்டில் அவருடைய ஆடைகளும், எலும்புகளும் கண்டவுடன் அவர் இறந்து விட்டதாக நினைத்து அந்த எலும்புக் குவியலைக் கொண்டு வந்து அவருக்கு இறுதி சடங்குளை செய்து விட்டதாகச் சொன்னார்கள். பிறகு நான் (சந்த் ராம்பால்ஜி மகாராஜ்) என் குருநாதரின் சகோதரரின் மனைவியிடம், எங்கள் குருநாதர் வீட்டை விட்டு சென்ற பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்? என்று கேட்டேன். அவர் சொன்னார், நான்

திருமணம் ஆகி வந்தபோது இவருக்கு சிரார்த்தம் செய்வதை கண்டேன், இதுவரை 70 முறை என் கையால் திவசம் செய்திருக்கிறேன். வீட்டில் எந்த ஒரு நஷ்டம் ஏற்பட்டாலோ அல்லது பசு மாடுகளுக்கு நோய் வந்தாலோ, பால் தராவிட்டாலோ ஒரு மந்திரவாதியிடம் செல்வோம். அவர் உன் வீட்டில் திருமணமாகாத ஒருவர் இறந்துவிட்டார், அவர் பூதம் ஆகிவிட்டார், அதனால் துன்புறுத்துகிறார் என்று சொல்வார். பிறகு இறந்தவருக்காக நாங்கள் துணிகள் போன்றவை தானம் தருவோம்.

அப்போது நான் (சந்த் ராம்பால்ஜி மகாராஜ்) சொன்னேன், இவர் உலகத்திற்கு நன்மை புரிகின்றார், யாரையும் துன்புறுத்த மாட்டார். இப்போது உங்கள் கண் முன்னால் இருக்கிறார், இந்த வீணான சிரார்த்தங்களை விட்டுவிடுங்கள் என்று சொன்னேன். அவர் சொன்னார், நாங்கள் பல காலமாக இதைச் செய்து வருகிறோம் அதை எப்படி விடுவது? என்றார். அதாவது, நாம் பழைய சம்பிரதாயங்களில் எப்படி மூழ்கி விட்டோம் பாருங்கள். செய்வது தவறு என்று நேரடியாக பார்த்தும் அதை விடமுடிவதில்லை. சிரார்த்தம், பித்ரு பூஜை செய்வது வீண் என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகிறது.

10. குழந்தை பிறப்பின்போது வேதத்திற்கு எதிரான சடங்குகள் செய்யக்கூடாது :- குழந்தை பிறந்த பிறகு ஆறாவது நாள் போன்ற சடங்கு கொண்டாடக் கூடாது. தீட்டு என்று தினசரி பூஜைகள், ஆரத்தி, தீபம் ஏற்றுதல் என்பவை தடை செய்யக் கூடாது.

இது சம்பந்தமாக ஒரு உண்மை கதை சொல்கிறேன். ஒருவனுக்கு திருமணம் நடந்த பத்து வருடங்களுக்குப் பிறகு ஒரு குழந்தை பிறந்தது. அந்த மகிழ்ச்சியை கொண்டாட 25 கிராம மக்களுக்கு விருந்து கொடுத்து ஆடல் பாடல் என்று அதிகளவில் செலவழித்தான். ஒரு வருடதத்திற்கு பிறகு அந்த குழந்தை இறந்து விட்டது. பின்னர் அதே குடும்பம் தங்கள் துரதிர்ஷ்டத்தை நினைத்து குமுறி குமுறி அழுதது.

எனவே பரமேஸ்வரர் கபீர் நமக்கு சொல்கிறார்:-

கபீர், பேட்டா ஜாயா குஷி ஹுயீ, பஹுத் பஜாயே தால் /
ஆனா ஜானா லக் ரஹா, ஜ்யோன் கீடீ கா நால் //
கபீர், பத்ஜட் ஆவத் தேக் கர், வன் ரோவே மன் மாஹிம் /
ஊஞ்சி டாலி பாத் தே, அப் பீலே ஹோ ஹோ ஜாஹின் //
கபீர், பாத் ஜடந்த யூன் கஹை, சுன் பயீ தருவர் ராய் /
அப் கே பிசூடே நஹின் மிலா, ந ஜானே கஹான் கிரேங்கே ஜாய் //
கபீர், தருவர் கஹ்தா பாத் சே, சுனோ பாத் ஏக் பாத் /
யஹான் கி யாஹே ரீதி ஹை, ஏக் ஆவத் ஏக் ஜாத் //

11. சன்னதிகளில் மொட்டை போடுவது தடை செய்ய வேண்டும்:- குழந்தைகளுக்கு தேவ சன்னதிகளில் முடி எடுக்க செல்லக்கூடாது. முடி வளர்ந்தால் வெட்டிவிடுங்கள். ஒரு கோவிலில் ஒரு பக்தர் தன் மகனுக்கு முடி இறக்க வந்தார். அங்கிருந்த நாவிதர் வெளியே வாங்கும் கூலியை விட 3 மடங்கு கூலி வாங்கிக் கொண்டு சிறிது முடி வெட்டி அதை தாய் தந்தையாரிடம் கொடுக்க அவர்கள் அதை கோவிலில் அர்ப்பணித்தார்கள். கோவில் பூசாரி அதை ஒரு பையில் போட்டு வைத்து இரவில் வெளியே வீசி விட்டார். இது ஒரு நாடகம். இறைவன் பக்தியால் பரவசமடைவார். ஆனால் இது போன்ற நாடகங்களால் அல்ல.

12. வரதட்சணை கொடுத்தல் வாங்குதல் கூடாது :- தீட்சை எடுத்த பிறகு வரதட்சணை கொடுக்கவோ வாங்கவோ கூடாது.

13. மோட்சத்திற்காக தீட்சை எடுக்கவேண்டும்:- நாம் (தீட்சை) துன்பங்களை நீக்கும் நோக்கில் மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது, முக்தி அடைய எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு பக்தியால் அனைத்து மகிழ்ச்சிகளும் தானாக வரும்.

கபீர், சுமிரன் சே சுக் ஹோத் ஹை, சுமிரன் சே துக் ஜாஏ /
கஹேன் கபீர் சுமிரன் கியே, சாயின் மாகின் சமாய் //

14. தவறான நடத்தை கூடாது :- மற்ற பெண்களை தாய், சகோதரி போல் பாவிக்க வேண்டும். விபச்சாரம் மகாபாவம். கரீப்தாஸ்ஜி சொல்கிறார்,

கரீப், பர்த்வாரா ஸ்த்ரி கா கோலே / சத்தர் ஜனம் அந்தா ஹோ டோலே //
சுராபான் மத் மான்சஹாரி / கவன் கரைன் போகேன் பர்நாரி //
சத்தர் ஜன்ம கடத் ஹைன் ஷீஷம்/ சாக்ஷி சாஹிப் ஹை ஜகதீஷம் //
பர்நாரி நா பர்சியோ, மனோ வசன் ஹமார் /
பவன் சதுர்தஷ் தாஸ் சிர், த்ரிலோகி கா பார் //
பர் நாரி நா பரசியோ, சுனோ சபத் ஸல்தந்த் /
தர்மராஜ் கே கம்ப் சே, அர்த்முகி லட்கந்த் //

15. நிந்தனை செய்யக்கூடாது:- நம்முடைய குருவை மறந்தும் நிந்தனை செய்யாதீர்கள். யாராவது நிந்தனை செய்தால் நீங்கள் அவருடன் விவாதிக்காமல், அவர் அறியாமல் பேசுகிறார் என நினைத்துக் கொள்ளுங்கள். யாரையும் நிந்தனை செய்யவோ மற்றவர்களின் நிந்தனை கேட்கவோ கூடாது. கபீர் சாஹேப் கூறுகிறார்:-

குரு கி நிந்தா சுனே ஜோ கானா / தாகோ நிஷ்சய் நரக் நிதானா //
அப்னே முக் நிந்தா ஜோ கர்ஹீன் / ஷுகர் ஷ்வான் கரப் மே பர்ஹீன் //
தின்கா கப்ஹுன் ந நிந்தியே, ஜோ பாவ் தலே ஹோ /
கப்ஹு உட் ஆக்கின் படே, பீர் கனேரி ஹோ//

16. சத்சங்கம் கேட்பதும் சேவை செய்வதும் கட்டாயம்:- நேரம் கிடைக்கும் போதெல்லாம், சத்சங்கத்திற்கு வர முயற்சி செய்யுங்கள், சத்சங்கத்திற்கு பெருமைக்காக வர வேண்டாம். மாறாக உங்களை நோயாளி என கருதி வாருங்கள். நோயாளி ஒருவர் எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும், உயர் பதவியில் இருந்தாலும், மருத்துவமனைக்குச் செல்லும் போது, நோயிலிருந்து விடுபடுவதே அவரது குறிக்கோளாக இருக்கும். மருத்துவர் சொல்லும் இடத்தில் உட்காருவார், படுத்துக் கொள்வார், வெளியே செல்லும்படி சொன்னால், வெளியே செல்வார், பின்னர் அவர் அழைக்கப்படும் போது உள்ளே வருகிறார். அதை போலவே வந்தால் சத்சங்கத்தின் பலன் கிடைக்கும், இல்லாவிட்டால் பலனில்லை. அங்கு கிடைக்கும் இடத்தில் அமர்ந்து கிடைப்பதை கபீர் சாஹிப் உடைய பிரசாதமாக கருதி உண்டு மகிழவேண்டும். குரு தரிசனத்தால் அதிக பலன்கள் கிடைக்கும். கபீர் பரமேஸ்வர் கூறியதாவது:-

கபீர், சந்த் மிலன் கூன் சாலியே, தஜ் மாயா அபிமான் /
ஜோ-ஜோ கதம் ஆகே ரகே, வோ ஹி யக்ஞ சமான் //
கபீர், சந்த் மிலன் கூங் ஜாய்யே, தின் மேம் கயீ-கயீ பார் /
ஆசோஜ் கே மேஹ் ஜியோன், கனா கரே உபகார் //

கபீர், தர்ஷன் சாது கா, பர்மாத்மா ஆவே யாத் /
லேகே மே வோஹே கடி, பாகி கே தின் பாத் //
கபீர், தர்ஷன் சாது கா, முக் பர் பசே சுஹாக் //
தரஷ் உன்ஹீன் கோ ஹோத் ஹைன், ஜிங்கே பூரண் பாக் //

**17. குரு மகிமை:- சத்சங்கம் நடந்து கொண்டிருந்தாலோ அல்லது குருவை தரிசிக்கச் செல்லும்போது, முதலில் குருவை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும், பின்னர் கபீர் சாகேப் ஜி, கரீப்தாஸ் சாகேப் ஜி, சுவாமி ராம்தேவானந்த் ஜி மற்றும் குருஜியின் படங்ளை வணங்க வேண்டும். படங்களை சிலைகளை வழிபடக் கூடாது, வணங்குவது வழிபாடல்ல. வணங்குதல் பக்திக்கு உதவுகிறது. நம்மை கரைசேர்க்கும் குருவையும் நாம் மந்திரத்தையும் பூஜிக்க வேண்டும்.**

கபீர், குரு கோ தஜே, பஜே ஜோ ஆனா /
தா பஷுவா கோ போகட் ஞானா //
கபீர், குரு கோவிந்த் தோஊ கடே, காகே லாகூம் பாய் /
பலிஹாரி குரு ஆப்னே, ஜின் கோவிந்த் தியோ மிலாய் //
கபீர், குரு படே ஹை கோவிந்த் சே, மன் மே தேக் விசார் /
ஹரி சும்ரே சோ ரஹ் கயே, குரு பஜே ஹோய் பார் //
கபீர், ஹரி கே ரூட்தான், குரு கி ஷரண் மே ஜாய் /
கபீர் குரு ஜோ ரூட் ஜான், ஹரி நஹின் ஹோத் சஹாய் //
கபீர், சாத் சமுந்தர் கி மாசி கரூம், லெக்னி கரும் பனிராய் /
தர்தீ கா காகஜ் கரூன், தோ குரு குன் லிகா ந ஜாய் //

**18. மாமிசம் உண்ணக்கூடாது:-** முட்டை, இறைச்சி உண்ணவோ உயிரைக் கொல்லவோ கூடாது. அது ஒரு கொடிய பாவம்.

**கபீர் சாகேப் ஜி மகராஜ் மற்றும் கரீப்தாஸ் ஜி மகராஜ் கூறுவது:-**

கபீர், ஜீவ் ஹனே ஹின்ஸா கரே, பிரகட் பாப் சிர் ஹோயே /
நிகம் புனி ஐசே பாப் தேன், பிஸ்த கயா நஹின் கோய் //1//
கபீர், தில்பர் மச்லி காய்கர், கோடி கஊ தே தான் /
காஷி கரௌந்த் லே மரே, தோ பி நரக் நிதான் //2//
கபீர், பக்ரி பாதி காத் ஹை, தாகி காடி கால் /
ஜோ பக்ரி கோ காத் ஹை, தின்கா கவுன் ஹவால் //3//
கபீர், கலா காடி கல்மா பரே, கீயா கஹை ஹலால் /
சாஹப் லேகா மாங்கசி, தப் ஹோசி கவுன் ஹவால் //4//
கபீர், தின் கோ ரோஜா ரஹத் ஹைம், ராத் ஹனத் ஹைம் காய் /
யஹ் கூன் வஹ் வந்தகி, கஹுன் கியோன் குஷி குதாய் //5//
கபீர், கபீரா தேயி பீர் ஹைன், ஜோ ஜானை பர் பீர் /
ஜோ பர் பீர் ந ஜானி ஹை, சோ காபிர் பேபீர் //6//
கபீர், கூப் கானா ஹை கீசடி, மாம்ஹீம் பரி டுக் லோன்/
மான்ஸ் பராயா காய்கை, கலா கடாவே கௌன் //7//
கபீர், முசல்மான் மாரைன் கரத் சோ, இந்து மாரைன் தர்வார் /
கஹே கபீர் தோனு மிலி, ஜைஹை யம் கே த்வார் //8//
கபீர், மான்ஸ் ஆஹாரி மானவ், பிரத்யக்ஷ் ராக்ஷஸ் ஜானி /
தாகி சங்கத் மதி கரை, ஹோய் பக்தி மே ஹானி //9//
கபீர், மான்ஸ் காய் தே டேட் சப், மத் பீவைன் சோ நீச் /
குல்கி துர்மதி பர் ஹரே, ராம் கஹே ஸோ ஊஞ்ச் //10//

கபீர், மாம்ஸ் மச்சிலியா காத் ஹைன், சுராபான் சே ஹேத் /
தே நர் நர்கை ஜாஹிங்கே, மாதா பிதா சமேத் //11//
கபீர், ஜீவ் ஹின்சா ஜோ கர்தே ஹைன், யா ஆகே க்யா பாப் /
கடக் ஜனி ஜிஹான் மேம், சின்ஹ் பேடியா அவுர் சாம்ப் //
ஜோடே பக்ரே முர்கே தாயீ, லேகா சப் ஹீ லெத் குசாயீன் /
மர்க் மோர் மாரே மஹ்மந்தா / அசரா சர் ஹைன் ஜீவ் அனந்தா //
ஜிஹ்வா ஸ்வாத் ஹிதே ப்ரானா / நீமா நாஷ் கயா ஹம் ஜானா //
தீதர் லவா புடேரி சிடியா / கூனி மாரே படே அகடியா //
அதலே பதலே லேகே லேகா // சமஜ் தேக் சுன் ஞான் விவேகா //
கபீர், சபத் ஹமாரா மானியோ, அவுர் சுந்தே ஹோ நர் நாரி /
ஜீவ் தயா பின் குபர் ஹை, சலே ஜமானா ஹாரி //

**அறியாமையால் செய்த தவறு பாவமாகாது. கபீர் சாகேப் கூறுகிறார்:-**

இச்சா கர் மாரை நஹின், பின் இச்சா மர் ஜாயே /
கஹே் கபீர் தாஸ் கா, பாப் நஹின் லகாயே //

**19. குரு துரோகியுடன் நட்பு கூடாது :- ஒரு பக்தன் குரு துரோகி ஆகிவிட்டால் அவன் மகா பாவத்திற்கு ஆளாவான். குருவின் மார்க்கம் பிடிக்கவில்லை என்றால் வேறு குருவிடம் செல்லலாம். ஆனால் முந்தைய குருவின் நிந்தனை கூடாது, அவன் குரு துரோகி ஆகிறான். இப்படி போன்றவர்களிடம் விவாதம் புரிவது மகாபாவம். இதனால் பக்தி வீணாகிவிடும்.**

கபீர், குரு த்ரோஹி கி பைட் பர், ஜெ பக் ஆவை பீர் /
சௌராசி நிஷ்சய் படை, சத்குரு கஹேன் கபீர் //
கபீர், ஜான் புஜ் சாசி தாஜை, கரை ஜூடே சே நேஹ் /
ஜாகி சங்கத் ஹே பிரபு, ஸ்வபன் மே பி ந தேஹ் //

**பொருள்:- சந்த் கரீப்தாஸ்ஜி சொல்கிறார், குருதுரோகியிடம் செல்பவன் பக்தி அற்றவனாகி நரகம் சென்று 84 லட்சம் உயிரினங்களில் பிறப்பு இறப்பு சக்கரத்தில் சென்றுவிடுகிறான்.**

**20. சூதாட்டம் கூடாது:- சூதாட்டமும், சீட்டாட்டமும் கூடாது.**

கபீர், மான்ஸ் பக்கே அவுர் மத் பியே, தன் வேஷ்யா சோ காய் /
ஜூவா கேலி சோரி கரை, அந்த் சமூலா ஜாய் //

**21. ஆடல்-பாடல் கூடாது :- எந்த வகையான மகிழ்ச்சியிலும் ஆடுவதும், பாடுவதும் பக்திக்கு எதிரானது. ஒரு விதவைச் சகோதரி ஒரு உறவினர் வீட்டிற்கு விசேஷத்திற்கு சென்றிருந்தார். அனைவரும் ஆடிப்பாடி கொண்டிருந்தன, ஆனால் இந்த விதவைச் சகோதரி ஒரு மூலையில் அமர்ந்து இறை சிந்தனையில் மூழ்கியிருந்தார். உறவினர்கள் நீங்களும் ஆடி-பாடி மகிழுங்கள் என்று சொன்னபோது, அந்த சகோதரி, நான் எதை நினைத்து கொண்டாடுவது? இந்த விதவைக்கு ஒரே ஒரு மகன் இருந்தான், அவனும் இறைவனிடம் சேர்ந்துவிட்டான் இனி எனக்கு என்ன இருக்கு என்று கூறினாள். இந்த காலனின் லோகத்தில் உள்ள ஒவ்வொரு நபரின் நிலையும் இதே போலவேதான். குரு நானக் தேவ் ஜி கூறுவது:-**

நா ஜானே கால் கி கர் டாரே, கிஸ் விதி டல் ஜா பாசா வே /
ஜின்ஹாதே சிர் தே மௌத் குடக்தி, உன்ஹானு கேடா ஹான்ஸா வே //
ஸாத் மிலேன் சாடி ஷாதி (குஷீ) ஹோன்தி, பிச்சட் தான் தில் கிரி (துக்)
வே/ அக்தே நானக் சுனோ ஜிஹானா, முஷ்கல் ஹால் ஃபகீர் வே //

**கபீர் சாகேப் ஜி மகராஜ் ஜியும் கூறுவது:-**

கபீர், ஜூடே சுக் கோ சுக் கஹே, மான் ரஹா மன் மோத் /
சகல் சபினா கால் கா, குச் முக் மே குச் கோத் //
கபீர், பேட்டா ஜாயா குஷி ஹுய், பஹுத் பஜாயே தால் /
அவன் ஜானா லகா ரஹா, ஜ்யோன் கடி கா நாள் //

சிறப்பு :- ஆண் பெண் இருவருக்கும் இறைவனை அடைய சம அதிகாரம் உண்டு. பெண்கள் தங்கள் மாதவிடாய் காலங்களிலும் தினசரி பூஜை, தீபம் ஏற்றுதல் போன்றவை செய்வதை நிறுத்தக் கூடாது. வீட்டில் பிறப்பு இறப்பு நிகழ்ந்தால் தினசரி பூஜைகளை நிறுத்தக் கூடாது.

குறிப்பு : இந்த இருபத்தி ஒரு விதிகளை பின்பற்றாத ஒரு பக்தனின் தீட்சை (நாம்-மந்திரம்) முடிந்துவிடும். அறியாமல் ஏதேனும் தவறு செய்தால், அது மன்னிக்கப்படும், தெரிந்தே செய்திருந்தால் அந்த பக்தன் தீட்சை அற்றவனாகிறான். அதற்கு தீர்வு, குரு ஜியிடம் மன்னிப்பு கோரி, மீண்டும் தீட்சை (நாம் ) பெற வேண்டும். மேலும் முந்தைய அனைத்து பூஜைகள் செய்த பிறகும் மிகவும் துன்பங்களில் இருந்த பக்தர்கள், சாஸ்திரத்திற்கு மாறான வழிபாட்டை துறந்து, மேற்கூறிய விதிகளைப் பின்பற்றி சுகமடைந்த பக்தர்களின் அனுபவங்களை பற்றி இந்நூலில் படிக்கவும்.

நூலாசிரியர்
சந்த் ராம்பால் தாஸ் மகராஜ்
சத்லோக் ஆசிரமம் பர்வாலா
ஹிசார்-மாவட்டம், ஹரியானா (இந்தியா).

*****

# இயற்கையின் உருவாக்கம்

(சூட்சும வேதத்திலிருந்து படைப்புகள் பற்றிய தெளிவான விளக்கம்)

இறைவனை நேசிக்கும் ஆன்மாக்கள் இந்த படைப்புகள் பற்றி முதன்முறை படிக்கும் போது கற்பனைக் கதை போல் தோணும். ஆனால், அனைத்து புனித நூல்களின் ஆதாரங்களை படித்தால் இந்த உண்மையான அமுத ஞானம் எங்கே புதைந்து கிடந்தது என ஆச்சரியப்படுவீர். தயவுசெய்து இதை கவனமாக படித்து இந்த அமுதஞானத்தைக் காத்தருளுங்கள். உங்களுடைய 101 வம்சங்களுக்கு இது பயன்படும். புனித ஆன்மாக்களே தயவு கூர்ந்து சத்யநாராயணன் (அழிவற்ற பிரபு-சத்ய புருஷ்) படைத்த இயற்கையின் உண்மையான ஞானத்தைப் படியுங்கள்.

1. பூரண பிரம்:- இந்த இயற்கையின் உருவாக்கத்தில், சத்ய புருஷ் - சத்யலோகத்தின் கடவுள், அலக் புருஷ் - அலக் லோகத்தின் கடவுள், அகம் புருஷ் - அகம் லோகத்தின் கடவுள் மற்றும் அனாமி புருஷ் - அனாமி லோகத்தின் கடவுள் அனைத்தும் ஒருவரே, அவர் பூரண பிரம் ஆவார். உண்மையில் அழிவற்ற கடவுள் (இறைவன்) ஆவார், வெவ்வேறு உருவெடுத்து நான்கு லோகங்களிலும் இருக்கிறார் மற்றும் எண்ணற்ற பிரபஞ்சங்களை கட்டுப்படுத்துகிறார்.

2. பரபிரம் :- இவர் ஏழு சங்க் பிரபஞ்சங்களுக்கு மட்டும் எஜமானர் ஆவார், அக்ஷர் புருஷ் என்று அழைக்கப்படுகிறார். ஆனால் இவரும் இவரது அனைத்து பிரபஞ்சங்களும் அழியக்கூடியவை.

3. பிரம் :- இவர் 21 பிரபஞ்சங்களுக்கு மட்டும் எஜமான் ஆவார். இவர் ஷர் புருஷ், கால், ஜோதி நிரஞ்சன் என்று அழைக்கப்படுகிறார். இவரும் இவரது அனைத்து பிரபஞ்சங்களும் அழியக்கூடியவை.

(மேற்கூறிய மூன்று கடவுள் (புருஷ்) பற்றிய ஆதாரம் ஸ்ரீமத் பகவத் கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16-17 இல் உள்ளது).

4. பிரம்மா :- இவர் பிரம் (காலன்) உடைய மூத்தமகன் ஆவார், விஷ்ணு நடுவர், சிவன் மூன்றாமவர் ஆவார். இந்த மூவரும் பிரம்-காலனின் புத்திரர்கள். இவர்கள் ஒரு பிரபஞ்சத்தில் மட்டும் தலா ஒரு துறையின் (குணத்தின்) அதிபதி ஆவார் மற்றும் இவர்கள் மூவரும் அழியக்கூடியவர்கள்.

விரிவான விளக்கத்திற்கு பின்வரும் படைப்பாற்றலைப் படியுங்கள்.

(கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அவர்கள் சூக்ஷம வேதத்தில் அதாவது கபீர் வாணியில் (உரைகளில்) தான் படைத்த இயற்கை பற்றிய ஞானத்தை அவரே விளக்கியுள்ளார், அது பின்வருமாறு)

ஆதியில் "அனாமி (அனாமே) லோகம்" மட்டுமே இருந்தது. அது அகஹ லோகம் என்றும் அழைக்கப்படுகிறது. பூரண பரமாத்மா அந்த அனாமே லோகத்தில் தனியாக இருந்தார். அவருடைய உண்மையான பெயர் கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வரர் ஆகும், அனைத்து ஆன்மாக்களும் அந்த பூரண பரமாத்மாவின் உடலில் இருந்தன. அங்கு இந்த கவிர்தேவனின் பெயர் (பதவியின் பெயர்) அனாமி புருஷ் ஆகும் (புருஷ் என்றால் கடவுள், கடவுள் மனிதனை தன்னைப்போலவே படைத்துள்ளார். அதனால்தான் மனிதனும் புருஷ் என்று அழைக்கப்படுகிறார்). இந்த அனாமி புருஷின் உடலின் பிரகாசம்


* ஒரு சங்க் = ஓர் ஆயிரம் கோடி கோடி

## கபீர் பரமேஸ்வருடைய எண்ணற்ற பிரபஞ்சங்களின் குறும்படம்

அனாமி லோகம் : இந்த லோகத்தில் கபீர் பரமேஸ்வர் அனாமி புருஷ் வடிவில் தனியாக உள்ளார்

அகம் லோகம் : இந்த லோகத்தில் கபீர் பரமேஸ்வர் அகம் புருஷ் வடிவில் உள்ளார்

அலக் லோகம் : இந்த லோகத்தில் கபீர் பரமேஸ்வர் அலக் புருஷ் வடிவில் உள்ளார்



சங்க் சூரியனின் ஒளியை விட அதிகமானது.

சிறப்பு:- ஒரு தேசத்தின் மரியாதைக்குரிய பிரதம மந்திரியின் பெயர் வேறாக இருக்கும், அவர் பதவியின் பெயர் பிரதம மந்திரி ஆகும். சில நேரம் அவர் வேறு சில துறைகளையும் தன்னிடம் வைத்திருப்பார். மற்ற துறையின் ஆவணங்களில் கையெழுத்திடும்போது அந்த துறையின் பதவியின் பெயரைத்தான் குறிப்பிடுவார். உதாரணமாக உள்துறை அமைச்சகத்தின் ஆவணத்தில் உள்துறை அமைச்சர் என்று குறிப்பிடுவார். அங்கே அந்தக் கையெழுத்தின் மதிப்பு சற்று குறைவாக இருக்கும். அதேபோல கபீர் பரமேஸ்வரரின் (கவீர்தேவ்) ஒளியின் வித்தியாசமும் வெவ்வேறு லோகத்தில் மாறுபடும்.

இதேபோல் பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அவர்கள் கீழே மற்ற மூன்று லோகங்களை (அகம் லோகம், அலக் லோகம், சத்யலோகம்) படைத்தார். பின்னர் அதே பூரண பிரம் பரமாத்மா கவிர்தேவன் (கபீர் பரமேஸ்வரர்) அகம் லோகத்தில் தோன்றினார், மேலும் அகம் லோகத்தின் எஜமான் ஆவார். இங்கு அகம் லோகத்தில் இவருடைய பெயர் அகம் புருஷ் அதாவது அகம் பிரபு ஆகும். இந்த ஆகம பிரபுவின் மனிதனை போன்ற உடல் மிகவும் பிரகாசமானது. அவரது ஒரு ரோமம் (உடலின் ஒரு முடி) உடைய ஒளி ஒரு லட்சம் கோடி சூரிய ஒளியை விட அதிகமானது.

பின்னர் அதே பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அவர்கள் அலக் லோகத்தில் தோன்றினார். அவரே அலக் லோகத்தின் எஜமான் ஆவார், மேலும் இந்த அலக் லோகத்தில் அவரது பெயர் அலக் புருஷ் ஆகும். இவரது மனிதனை போன்ற உடல் மிகவும் பிரகாசமானது, ஒரு ரோமம் உடைய ஒளி நூறு கோடி சூரிய ஒளியை விட அதிகமானது.

பின்னர் அதே பூரண பரமாத்மா சத்யலோகத்தில் தோன்றினார். இவரே சத்யலோகத்தின் அதிபதி ஆவார். இங்கு இவருடைய பெயர் சத்யபுருஷ் (அழிவற்ற பிரபு) ஆகும். மேலும் இவர் அகாலமூர்த்தி, ஷபத் சரூபி ராம், பூரண பிரம், பரம் அக்ஷர் பிரம் என்றும் அழைக்கப்படுகிறார். இந்த சத்யபுருஷ் கவிர்தேவனின் (கபீர் பிரபு) மனித வடிவம் போன்ற உடல் மிகவும் பிரகாசமாக. அவரது ஒரு ரோமம் உடைய ஒளி கோடி சூரியனின் ஒளியை விட அதிகமானது.

இந்த கவிர்தேவன் (கபீர் பிரபு) சத்யபுருஷ் வடிவில் தோன்றி சத்யலோகத்தில் முதன் முதலில் மற்ற படைப்பை படைத்தார்.

ஒரு வார்த்தையால் 16 தீவுகளை படைத்தார். பிறகு 16 வார்த்தைகளால் பதினாறு புத்திரர்களைப் படைத்தார். ஒரு மிகப்பெரிய மான்சரோவர் என்ற ஏரியை படைத்து அதில் அமுத நீரை நிரப்பினார். 16 புத்திரர்களின் பெயர்கள் இவ்வாறு: 1. கூர்ம, 2.ஞானி, 3. விவேக், 4. தேஜ் 5. சஹஜ், 6. சந்தோஷ், 7. சுரதி, 8. ஆனந்த், 9. ஷமா, 10. நிஷ்காம், 11. ஜல்றங்கி, 12. அசின்த், 13. பிரேம், 14. தயாள், 15. தைரிய, 16. யோகசத்தாயன் (யோகஜீத்).

சத்யபுருஷ் கவிர்தேவ் தனது மகன் அசிந்த் என்றவருக்கு சக்தியை கொடுத்து சத்யலோகத்தின் மற்றவைகளைப் படைக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். அச்சிந்தன் தனது வார்த்தை சக்தி மூலம் அக்ஷர் புருஷ் (பரபிரம்) என்பவரை உருவாக்கி தனக்கு உதவ சொன்னார். பின்னர் அக்ஷர் புருஷ் நீராட மான்சரோவருக்கு (அமுதம் நிறைந்த குளம்) சென்றார், அதில் ஆனந்தத்தில் உறங்கிவிட்டார். அவர் வெகு சமயத்துக்கு வெளியில் வரவில்லை. பின்னர், அச்சிந்தனின் பிரார்த்தனையால் அக்ஷர்

புருஷ் உடைய தூக்கத்தை கலைக்க கவிர்தேவன் (கபீர் பரமேஸ்வர்) அதே குளத்திலிருந்து சிறிது அமுத நீரை எடுத்து ஒரு முட்டையை உருவாக்கி அதில் ஒரு ஆன்மாவைப் புகுத்தி முட்டையை நீரில் விட்டார். முட்டையின் அதிர்வால் தூக்கம் கலைந்த அக்ஷர் புருஷ் முட்டையை கோபமாகப் பார்க்க அது இரண்டாக உடைந்தது. அதில் இருந்து ஜோதி நிரஞ்சன் (ஷர் புருஷ்) தோன்றினார். இவர் பின்னர் காலன் என்று அழைக்கப்பட்டார். அவரது உண்மையான பெயர் கேல் ஆகும். அப்பொழுது சத்யபுருஷ் (கவிர்தேவ்) அவர்கள் ஆகாசவாணி மூலம், இருவரையும் வெளியில் வந்து அச்சிந்தனின் தீவில் வசிக்க சொன்னார். (பிள்ளைகள் சாமர்த்தியம் அற்றவர்கள் என்பதை அவர்களுக்கு புரியவைத்தார்). அதன்படி ஷர் புருஷ் (கேல்) மற்றும் அக்ஷர் புருஷ் இருவரும் அச்சிந்தனுடைய தீவில் வசிக்கத் தொடங்கினார்கள். பின்னர் பூரண பிரம் கவிர்தேவ் தானே அனைத்து படைப்புகளையும் படைத்தார். தனது சக்தியால் ஒரு ராஜேஸ்வரி (ராஸ்திரி) எனும் சக்தியை உருவாக்கி அதன் மூலம் அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்தார். இதை பராசக்தி பரானந்தினி என்றும் அழைக்கப்படும். பூரண பிரம் தனது சக்தி மூலம் தனக்குள் இருந்து அனைத்து ஆன்மாக்களையும் தன்னைப் போலவே படைத்தார். ஒவ்வொரு ஆன்மாவின் உடலையும் தன்னைப் போலவே மனித வடிவில் படைத்தார், அதன் பிரகாசம் 16 சூரியன்களுக்குச் சமமானது. ஆனால் பரமேஸ்வரரின் ஒளி கோடிக்கணக்கான சூரியன்களை விட அதிகமானது. வெகு சமயங்களுக்கு பிறகு ஷர் புருஷ் (ஜோதி நிரஞ்சன்), நாம் மூவரும் (அச்சிந்த், அக்ஷர் புருஷ், ஷர் புருஷ்) ஒரே தீவில் வசிக்கிறோம் மற்றவர்கள் தனித்தனி தீவில் உள்ளனர் என்று நினைத்தார். தானும் தனித்தீவில் வசிக்க வேண்டும் என்று நினைத்து 70 யுகம் ஒற்றை காலில் நின்று தவம் செய்தார்.

## ஆன்மாக்கள் எப்படி காலனின் வலைக்குள் சிக்கியது?

சிறப்புரை :- காலன் (பிரம்-ஜோதி நிரஞ்சன்) தவம் செய்து கொண்டிருந்த போது, இன்று ஜோதி நிரஞ்சனின் 21 பிரபஞ்சத்தில் வாழும் நாம் அனைவரும் அவரது தவத்தால் ஈர்க்கப்பட்டு அவர் வசம் ஆனோம். நமக்கு சுகத்தை அளித்த கடவுளிடமிருந்து விலகிவிட்டோம். இதன் விளைவாக நாம் அனைவரும் பரமாத்மா மீதான விசுவாசத்தில் தோல்வியடைந்தோம். பரமாத்மாவினால் பலமுறை எச்சரிக்கப்பட்டும் நாம் காலன் - ஷர் புருஷிடமிருந்து திசைதிரும்பவில்லை.

(இதே நிலைதான் இந்த காலனின் லோகத்திலும் உள்ளது. இளைஞர்கள் சினிமா நட்சத்திரங்களின் (நடிகர், நடிகை) செயற்கையான நடிப்பிலும், அவர்களின் வருமானத்திற்காக நடிக்கும் பாத்திரத்திலும் மிகவும் ஈர்க்கப்படுகிறார்கள். தடுத்தாலும் கேட்பதில்லை. ஒரு நடிகரோ, நடிகையோ அருகில் உள்ள ஊருக்கு வந்தால், அவர்களுடன் எந்த தொடர்பும் இல்லாதபோதும், அவர்களை பார்க்க அப்பாவி மக்கள் கூட்டம் கூட்டமாக கூடுவார்கள். நடிகர்கள் வருமானத்திற்காக நடிக்கிறார்கள். பெற்றோர்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்பதில்லை, ஒளிந்து மறைந்து அவர்களை பார்க்க ஓடுகின்றனர்)

பூரண பிரம் கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) ஷர் புருஷிடம் என்ன வேண்டும் எனக் கேட்டார்? அவர், தந்தையே! இந்த இடம் எனக்கு குறைவாக உள்ளது தயவு செய்து எனக்கும் தனி தீவு கொடுங்கள் என்றார். ஹக்கா

கபீர் (சத்யகபீர்) இவருக்கு 21 பிரபஞ்சங்களை கொடுத்தார். பின்னர் ஜோதி நிரஞ்சன் காலியான பிரபஞ்சங்களால் என்ன பயன்? அதில் ஏதேனும் படைக்க வேண்டும் என்று நினைத்தார். பிறகு மீண்டும் 70 யுகங்கள் தவம் செய்து கவிர்தேவ் (கபீர் பிரபு) இடம் படைப்புப் பொருட்களை யாசித்தார். சத்யபுருஷ் மீண்டும் அவருக்கு மூன்று குணங்களும், பஞ்சபூதங்களையும் கொடுத்தார். அதில் படைப்பை மேற்கொண்ட காலன் (ஜோதி நிரஞ்சன்) அதில் ஆன்மாக்களும் இருக்க வேண்டும் என விரும்பினார். பிறகு மீண்டும் 64 யுகங்கள் தவம் செய்தார். பூரண பரமாத்மா கவிர்தேவ் கேட்டபொழுது, என்னால் தனியே இருக்க இயலாது, சில ஆன்மாக்களைக் கொடுங்கள் என கூறினார். அப்பொழுது சத்யபுருஷ் கவிராக்னி (கபீர் பரமேஸ்வர்) பிரம்-காலனிடம், உன் தவத்திற்கு இன்னும் பல பிரபஞ்சங்களை தர இயலும், ஆனால் எந்த தவத்திற்கும் என்னுடைய ஆன்மாக்களைத் தர இயலாது, ஆனால் ஆன்மாக்கள் தனது விருப்பத்தால் போக விரும்பினால் போகலாம் என்றார். கபீர் பிரபு சொன்னதை கேட்டு ஜோதி நிரஞ்சன் நம்மிடம் வந்தார். நாம் அனைவரும் ஏற்கனவே அவரை நோக்கி ஈர்க்கப்பட்டோம், எனவே அவரைச் சுற்றி சூழ்ந்து கொண்டோம். ஜோதி நிரஞ்சன் (ஷர் புருஷ்) சொன்னார், நான் தந்தையிடம் இருந்து 21 பிரபஞ்சங்களை பெற்றுவிட்டேன். அங்கே பல்வேறு மகிழ்ச்சியான இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, நீங்கள் என்னுடன் வருவீர்களா? என்று கேட்டார். இன்று 21 பிரபஞ்சங்களில் தவிக்கும் ஆன்மாக்களாகிய நாம் அனைவரும் தந்தை அனுமதித்தால் வருகிறோம் என்று சொன்னோம்.

பின்னர் ஷர் புருஷ், கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வரர்) இடம் சென்று அனைத்தையும் கூறினார். அப்போது கவிராக்னி (கபீர் பரமேஸ்வர்), என் முன்னர் சம்மதம் தெரிவிக்கும் ஆன்மாவை அனுமதிப்பேன் என்றார். பிறகு ஷர் புருஷ் (கால்) மற்றும் கபீர் பரமேஸ்வரர் (பரம் அக்ஷர் புருஷ்) இருவரும் நம்மிடம் வந்தார். அங்கு கவிர்தேவ், பிரம்ம காலன் உடன் செல்ல விரும்பும் ஆன்மாக்கள் கையை உயர்த்துங்கள் என்றார். தந்தையிடம் சொல்ல யாருக்கும் தைரியம் வரவில்லை, நீண்ட நேரம் மௌனம் நிலவியது. பிறகு ஒரு ஆன்மா துணிந்து, தந்தையே! நான் செல்ல விரும்புகிறேன் என்றது. பின்னர் அதை பின்பற்றி, நாம் (இன்று காலனின் 21 பிரபஞ்சங்களில் சிக்கியுள்ளவர்கள்) அனைத்து ஆன்மாக்களும் சம்மதம் தெரிவித்தோம். சம்மதம் தெரிவித்த அனைத்து ஆன்மாக்களையும் அனுப்பி வைக்கிறேன், நீ செல்லலாம் என்று கபீர் பரமேஸ்வரர் ஜோதி நிரஞ்சனிடம் கூறினார். பிறகு ஜோதி நிரஞ்சன் அவரது 21 பிரபஞ்சங்களுக்கு சென்றுவிட்டார். அதுவரை இந்த 21 பிரபஞ்சங்களும் சத்யலோகத்தில் தான் இருந்தன.

பிறகு, பூரண பிரம் முதன் முதலில் சம்மதம் தெரிவித்த ஆன்மாவிற்கு பெண் வடிவம் கொடுத்தார். ஆனால் பெண்ணின் பிறப்புறுப்பை படைக்கவில்லை. மற்ற அனைத்து ஆன்மாக்களையும் (ஜோதி நிரஞ்சன்-காலனுடன் செல்ல சம்மதித்த) அந்தப் பெண்ணின் உடலில் புகுத்தினார், அதற்கு ஆஸ்ட்ரா (ஆதி மாயா - பிரகிருதி தேவி - துர்க்கை) என பெயரிட்டார். மகளே, நான் உனக்கு ஷபத் சக்தி (வாக்கு சக்தி) அளித்துள்ளேன், நீ பிரம்-காலன் கூறும் அளவிற்கு உயிர்களை பிறப்பிக்கலாம் என்றார். பூரண பிரம் கவிர்தேவ் தன் மகன் சகஜ் தாஸ் மூலம் பிரகிருதியை, ஷர் புருஷ்-காலனிடம் அனுப்பினார். சகஜ் தாஸ் ஜோதி நிரஞ்சனிடம், உன்னுடன் செல்ல சம்மதித்த அனைத்து ஆன்மாக்களையும் தந்தை இந்த சகோதரியின் உடலில் புகுத்தி, அவருக்கு சக்தியை தந்திருக்கிறார், நீங்கள் சொல்லும் அளவிற்கு பிரகிருதி

உயிர்களை பிறப்பிக்கும் என கூறி சகஜதாஸ் தனது தீவுக்கு திரும்பினார்.

இளமையாக இருந்ததால் பெண்ணின் அழகு மிளிர்ந்தது. பிரம்ம காலனுக்கு காமம் எழுந்தன, அவர் பிரகிருதி தேவியிடம் தவறாக நடந்து கொள்ளத் தொடங்கினார். அப்பொழுது துர்க்கை, ஜோதி நிரஞ்சனிடம், தந்தை அளித்த சபத் சக்தி என்னிடம் உள்ளது, நீங்கள் சொல்லும் அளவிற்கு என்னால் உயிர்களைப் பிறப்பிக்க முடியும், ஆனால் பாலியல் பாரம்பரியத்தைத் தொடங்காதீர் என்று சொன்னார். மேலும், நீங்களும் அதே தந்தையின் சக்தியால் முட்டையிலிருந்து உருவானவர், பிறகு அதே பரம பிதாவின் சக்தியால் நானும் உருவானவள், எனவே நீங்கள் என் மூத்த சகோதரர் ஆவீர். ஒரு சகோதர சகோதரியின் இடையே இந்த பாலுறவு மகாபாவம் ஆனதாகும். ஆனால் ஜோதி நிரஞ்சன் பிரகிருதி தேவியின் வேண்டுகோளை புறக்கணித்து தனது சபத் சக்தி மூலம் நகங்களால் தேவியின் உடலில் பெண் பிறப்புறுப்பை உருவாக்கி கற்பழிக்க முயன்றார். உடனே துர்க்கை வேறு வழியின்றி தன்னை காத்துக்கொள்ள சூட்சும சரீரம் கொண்டு ஜோதி நிரஞ்சனின் திறந்த வாய் வழியாக அவர் வயிற்றில் நுழைந்து பூரண பிரம் கவிர் தேவனிடம் தன்னைப் காக்க வேண்டினார்.

உடனே கவிர்தேவ் (பரமேஸ்வர் கபீர்) அவரது மகன் யோக சந்தாயன் அதாவது ஜோக்ஜித் ரூபத்தில் தோன்றி, துர்க்கையை பிரம் – காலனுடைய வயிற்றில் இருந்து வெளியே எடுத்து, 'ஜோதி நிரஞ்சன், இன்று முதல் நீ "கால்" என்று அழைக்கப்படுவாய், மேலும் உனக்கு பிறப்பு இறப்புகள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். எனவே உன் பெயர் ஷர் புருஷ் ஆகும் மற்றும் தினமும் ஒரு லட்சம் மனித உயிர்களை சாப்பிட்டு, ஒரு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் உயிர்களை பிறப்பிப்பாய்" என கூறினார். நீங்கள் இருவரும் 21 பிரபஞ்சங்களுடன் வெளியேற்றப்படுகிறீர்கள் என்றார். இப்படிச் சொன்னவுடன் 21 பிரபஞ்சங்களும் விமானத்தைப் போல நகர ஆரம்பித்தன. சகஜ் தாஸ் தீவைக் கடந்து, அவர்கள் சத்யலோகத்திலிருந்து 16 சங்க் கோஸ் (ஒரு கோஸ்–3 கி.மி மற்றும் ஒரு சங்க் – ஒரு லட்சம் கோடி கோடி) தொலைவில் வந்து நின்றன.

சிறப்பு விளக்கம் : இதுவரை மூன்று சக்திகளின் விபரம் வந்துள்ளது.

∗ 1. பூரண பிரம் :– இவர் சத்யபுருஷ், அகால்புருஷ், சபத் ஸ்வரூபி ராம், பரம் அக்ஷர் பிரம், பரம் அக்ஷர் புருஷ் போன்ற பெயர்களாலும் அறியப்படுகிறார். இந்த பூரண பிரம் அழிவற்றவர், அனைத்து பிரபஞ்சங்களின் எஜமான் ஆவார்.


∗ 2. பரபிரம் :– இவர் அக்ஷர் புருஷ் என்று அழைக்கப்படுபவர். இவர் அழியக்கூடியவர் மற்றும் ஏழு சங்க் பிரபஞ்சங்களின் எஜமான் ஆவார்.

∗ 3. பிரம் :– இவர் ஜோதி நிரஞ்சன், கால், கேல், ஷர் புருஷ், எமதர்மன், என்ற பெயர்களால் அறியப்படுவர். இவர் 21 பிரபஞ்சங்களின் எஜமான் ஆவார். மேலும் இந்த பிரம்ம காலன் படைத்த ஒரு பிரபஞ்சத்தைப் பற்றிய விளக்கம் கொடுக்கப்படும், அதில் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ஆகிய மூன்று பெயர்கள் அறிய வரும்.

**பிரம் மற்றும் பிரம்மா இருவருக்கும் உள்ள வித்தியாசம்:–**

ஒரு பிரபஞ்சத்தின் மேல் பகுதியில் காலன் (பிரம்–ஷர் புருஷ்) மூன்று ரகசிய இடங்களை படைத்து அதில் தானே பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ரூபத்தில் வசிக்கிறார், மேலும் அவரது மனைவி பிரகிருதியின் (துர்க்கை) உதவியுடன் மூன்று மகன்களைப் பிறப்பிக்கிறார். அவர்களின்

# ஒரு பிரபஞ்சத்தின் குறும்படம்



பெயர் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் என்று வைக்கப்படுகின்றன. பிரம் – காலன் உடைய மகனான பிரம்மா, ஒரே ஒரு பிரபஞ்சத்தில் உள்ள மூன்று லோகங்களில் (பூலோகம், சொர்க்கலோகம், மற்றும் பாதாளலோகம்) உள்ள ரஜோகுணத் துறையின் மந்திரி (கடவுள்) ஆவார். இவர் திரிலோகிய (மூவுலக) பிரம்மா என்றும் அழைக்கப்படுகிறார். மேலே பிரம்ம லோகத்தில் பிரம்மா உடைய ரூபத்தில் இருக்கும் பிரம்ம காலன் என்பவர், மகாபிரம்மா, பிரம்மலோகிய பிரம்மா என்றும் அழைக்கப்படுகிறார்.

மேலும் இந்த காலன் (பிரம்), சதாசிவன், மகாசிவன், மகாவிஷ்ணு என்றும் அழைக்கப்படுகிறார்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் உள்ள நிருபணம்:– நான்காவது பாகம், அத்தியாயம் 1, பக்கம் 230, 231ல், ஸ்ரீ பிரம்மா ஜி கூறினார்:– பிறப்பில்லாத, எங்கும் நிறைந்த பரமேஸ்வரரின் ஆரம்ப, மத்திய, முடிவு, ஸ்வரூபம், ஸ்வபாவம் மற்றும் சாரத்தை நாம் அறிய முடியாது. (ஸ்லோகம் 83) யார் என் ரூபத்தை கொண்டு உலகை படைக்கிறாரோ, காக்கும் நேரத்தில் புருஷ் ரூபத்தில் இருக்கிறாரோ மற்றும் ருத்ர ரூபத்தில் உலகை விழுங்குகிறாரோ, அவர் எண்ணற்ற ரூபம் கொண்டு உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கிறார் (ஸ்லோகம் 86).

## ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன் ஆகியோரின் பிறப்பின் தோற்றம்

பிறகு காலன் துர்க்கையிடம், இப்போது என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது, நான் என் இஷ்டப்படி நடப்பேன் என்று சொன்னார். பிரகிருதி (துர்க்கை) மீண்டும் வேண்டினாள், தாங்கள் கொஞ்சமாவது வெட்கப்படவேண்டும். முதலில், நீங்கள் என் மூத்த சகோதரர், ஏனென்றால் நீங்களும் (பிரம்) அதே பூரண பரமாத்மாவின் (கவிர்தேவ்) சக்தியால் ஒரு முட்டையிலிருந்து உருவானவர், பின்னர் நானும் அதே பரமாத்மாவின் சக்தியால் உருவானவள். இரண்டாவதாக நான் உங்கள் வயிற்றில் இருந்து வெளியே வந்துள்ளேன், எனவே நான் உங்கள் மகள் ஆவேன். இந்த புனித உறவைக் கெடுப்பது மகாபாவம். என்னிடம் தந்தை அளித்த சக்தி உள்ளது, நீங்கள் கூறும் அளவிற்கு உயிர்களை பிறப்பிக்க முடியும் என்றாள். ஜோதி நிரஞ்சன் (காலன்) துர்க்கையின் பேச்சை கேட்கவில்லை. பதிலுக்கு எனக்கு கிடைக்கவேண்டிய தண்டனை கிடைத்துவிட்டது, நான் சத்யலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டேன், இப்போது நான் என் இஷ்டம்போல் நடப்பேன் என்று கூறி, காலன் (ஷர் புருஷ்) பிரகிருதியை வலுக்கட்டாயமாக மணந்து மூன்று புத்திரர்களை (ரஜோகுணம் கொண்ட ஸ்ரீ பிரம்மா, சத்வகுணம் கொண்ட ஸ்ரீ விஷ்ணு, தமோகுணம் கொண்ட ஸ்ரீ சிவனை) பெற்றெடுத்தார். மூவரும் வளரும் வரை துர்க்கை மூலம் அவர்களை மயக்கத்தில் வைக்கிறார். பின்னர் அவர்கள் இளமையானவுடன் ஸ்ரீ பிரம்மாவை தாமரை மலர் மீதும், ஸ்ரீ விஷ்ணுவை நாகத்தின் மீதும், ஸ்ரீ சிவனை கைலாச மலை மீது சுயநினைவை அளித்து மூவரையும் ஒன்றிணைத்து அமர்த்துகிறார். பிறகு பிரகிருதி மூலமாக மூவருக்கும் திருமணம் செய்து வைக்கிறார். பிரம்ம காலனின் உத்தரவு படி பிரகிருதி தேவி, ஒரு பிரபஞ்சத்தில் உள்ள மூன்று லோகங்களில் (சொர்க்கம், பூமி, பாதாளம்) இந்த மூவரையும் ஒவ்வொரு துறைக்கும் ஒரு மந்திரியாக (கடவுளாக) நியமிக்கிறார். ஸ்ரீ பிரம்மாவை ரஜோகுணத் துறைக்கும், ஸ்ரீ விஷ்ணுவை சத்வகுணத் துறைக்கும், ஸ்ரீ

சிவனை தமோகுணத் துறைக்கும் கடவுளாக நியமித்தார் மற்றும் பிரம்ம காலன் தானே ரகசியமாக (மகாபிரம்மா – மகாவிஷ்ணு – மகாசிவன் ரூபத்தில்) முக்கிய மந்திரி பதவியை நிர்வகிக்கிறார். ஒரு பிரபஞ்சத்தின் மேல் பகுதியில் பிரம்ம காலன் ஒரு பிரம்மலோகத்தை படைத்துள்ளார். அதில் மூன்று ரகசிய இடங்களை அமைத்துள்ளார். ஒன்று ரஜோகுணம் நிறைந்த இடம், இதில் பிரம்ம காலன் தானே மற்றொரு ரூபத்தில மகாபிரம்மா (முதலமைச்சர்) வடிவில் வசிக்கிறார் மற்றும் தனது மனைவி துர்க்கையை மஹாசாவித்திரி ரூபத்தில் வைத்திருக்கிறார். இவ்விடத்தில் இவர்களின் சேர்க்கையால் பிறக்கும் புத்திரன் தானாகவே ரஜோகுணம் கொண்டவராக பிறக்கிறார், அவருக்கு பிரம்மா என்று பெயரிடுகிறார். இரண்டாவது சத்வகுணம் நிறைந்த இடம். இங்கு ஷர் புருஷ் (காலன்) தானே மகாவிஷ்ணு ரூபத்தில் வசிக்கிறார் மற்றும் அவரது மனைவி துர்க்கையை மகாலட்சுமியின் ரூபத்தில் வைக்கிறார். இங்கு பிறக்கும் புத்திரனுக்கு விஷ்ணு என்று பெயரிடுகிறார். அந்த குழந்தை சத்வகுணம் கொண்டதாக இருக்கும். மூன்றாவதாக, இந்த காலன் தமோகுணம் கொண்ட இடத்தை உருவாக்கி, அதில் தானே சதாசிவன் ரூபத்தில் வசிக்கிறார், தன் மனைவி துர்க்கையை மகாபார்வதி ரூபத்தில் வைத்திருக்கிறார். இங்கு பிறக்கும் புத்திரன் தமோகுணம் கொண்டவராக ஆவார், இவருக்கு சிவன் என்று பெயரிடுகிறார்.

(ஆதாரங்களுக்கு, புனித ஸ்ரீ சிவ மகாபுராணம், வித்வேசர் சம்ஹிதா பக்கம் 24, 26ல் பார்க்கவும், அதில் பிரம்மா விஷ்ணு ருத்ரா மற்றும் மகேஸ்வரை தவிர மற்றொரு சதாசிவனும் உள்ளார் மற்றும் ருத்ர சம்ஹிதா, அத்தியாயம் 6, 7 மற்றும் 9, பக்கம் எண். 100 முதல் 105, 110 மற்றும் புனித ஸ்ரீமத் தேவி மஹாபுராணம், கீதா பிரஸ் கோரக்பூரில் இருந்து வெளியீடு, மொழிபெயர்ப்பு: ஸ்ரீ ஹனுமன் பிரசாத் போத்தார், சிமன் லால் கோஸ்வாமி: இதில் மூன்றாம் ஸ்கந்தம், அத்தியாயம் 1 முதல் 5 பக்கம் எண். 114 முதல் 123 வரை)

இதில் கூறியதாவது: காலன் தன் உணவுக்காக இந்த மூவரையும் ஏமாற்றி உயிரினங்களை ஸ்ரீ பிரம்மா மூலம் உருவாக்கி, ஸ்ரீ விஷ்ணு மூலம் பாதுகாத்து (ஒருவரையொருவர் பற்று மோகத்தில் வைத்து காலனின் வலையில் சிக்கவைப்பது), ஸ்ரீ சிவன் மூலம் அழிக்கிறார். (காலன் பெற்ற சாபத்தால், ஒரு லட்சம் மனித உயிரினங்களின் சூட்சும உடல்களில் உள்ள கசடுகளை உண்ணுவதற்காக, இருபத்தியோராம் பிரபஞ்சத்தில் தபத்சிலா எனும் அக்னி பாறை மீது கசடுகளை உருக்கி சாப்பிடுகிறான். ஆன்மா இறப்பதில்லை, ஆனால் வலி தாங்க முடியாததாகும், பின்னர் கர்மவினைபடி மற்ற உடல் கொடுக்கப்படுகிறது). உதாரணமாக, ஒரு வீட்டில் மூன்று அறைகளில், ஒரு அறையில் ஆபாச படங்கள் இருந்தால் அந்த அறைக்குள் சென்றவுடன் அதே போன்ற ஆபாச எண்ணங்கள் தோன்றும். இரண்டாவது அறையில், முனிவர்கள், மகான்கள் மற்றும் பக்தர்களின் படங்கள் இருந்தால் மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றி கடவுள் சிந்தனை அதிகரிக்கும். மூன்றாவது அறையில் தேசபக்தர்கள் மற்றும் தியாகிகளின் படங்கள் இருந்தால் அதே போன்ற உணர்ச்சிகளும், வைராக்கியமும் தோன்றும். அதேபோல, பிரம்ம காலன் மேற்கூறிய மூன்று குணங்கள் கொண்ட இடங்களை உருவாக்கியுள்ளார்.

## மூன்று குணங்கள் யாவை?

மூன்று குணங்களும் “ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்” ஆவார். இவர்கள் பிரம்ம காலன் மற்றும் பிரகிருதியால் (துர்க்கை) தோன்றியவர்கள் மற்றும் மூவரும் அழியக் கூடியவர்கள்.

ஆதாரம் :- ஸ்ரீ சிவ மஹாபுராணம், கீதாபிரஸ் கோரக்பூரில் இருந்து வெளியீடு, ஆசிரியர் ஸ்ரீ அனுமான் பிரசாத் போத்தர்: வித்வேஷ்வர் சன்ஹிதா, பக்கம் எண். 24-26 மற்றும் ருத்ர சம்ஹிதா, அத்தியாயம் 9, பக்கம் எண். 110 இல் கூறியது:- “இவ்வாறு பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று கடவுள்களுக்கும் குணங்கள் உள்ளன, ஆனால் சிவன் (பிரம்-கால்) குணங்கள் அற்றவர்.”

ஆதாரம் 2 :- ஸ்ரீமத் தேவி பகவத் புராணம், ஆசிரியர் ஸ்ரீ ஹனுமான் பிரசாத் போத்தர் மற்றும் சிமன் லால் கோஸ்வாமி, வெளியீடு: கீதாபிரஸ் கோரக்பூர்: இதில் மூன்றாம் ஸ்கந்தம், அத்தியாயம் 5, பக்கம் 123:- இதில் பகவான் விஷ்ணு துர்க்கையைப் போற்றுகிறார்:- “நான் (விஷ்ணு), பிரம்மா மற்றும் சங்கரன் மூவரும் உங்கள் அருளால் நிலைத்திருக்கிறோம். எங்களுக்கு பிறப்பு (அவிர்பாவ்) மற்றும் இறப்பு (திரோபாவ்) உண்டு. நாங்கள் நித்தியமானவர் (அழிவற்றவர்) அல்ல. நீயே நித்தியமானவள், உலகத்தாய், பிரகிருதி மற்றும் சனாதனதேவி ஆவாய்.

பகவான் சங்கர் கூறினார்:- பிரம்மாவும், விஷ்ணுவும் உன்னிடமிருந்து பிறந்தவர்கள் என்றால், அவர்களுக்குப் பிறகு பிறந்த, தமோகுண லீலை செய்யும் நான் சங்கர் உன் பிள்ளை அல்லவா? அதாவது என்னையும் படைத்தவள் நீயே. இந்த உலகத்தின் படைத்தல் காத்தல் அழிப்பதில் உன்னுடைய குணங்கள் எப்போதும் உள்ளன. இந்த மூன்று குணங்களால் பிறந்த நாங்கள் மூவரும் விதிகளின்படி கடமைகளில் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

* மேற்கூறிய இந்த விளக்கம் ஹிந்தியில் மட்டுமே மொழி பெயர்க்கப்பட்ட ஸ்ரீ தேவி மஹா புராணத்தில் உள்ளது. அதில் சில உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. எனவே இதே ஆதாரத்தை மேலும் பார்க்கவும் : ஸ்ரீமத் தேவி பாகவதம் மகா புராணம், கேம் ராஜ் ஸ்ரீ கிருஷ்ண தாஸ் மும்பை வெளியீடு, இதில் சமஸ்கிருதத்துடன் ஹிந்தி மொழி பெயர்ப்பும் உள்ளது. மூன்றாம் ஸ்கந்தம் அத்தியாயம் 4, பக்கம் 10 ஸ்லோகம் 42:-

ப்ரஹமா - அஹம் ஈஸ்$^{2}$வர்: ஃபில் தே ப்ரபா$_{4}$வாத்ஸர்வே வயம் ஜநி யுதா ந யதா$_{3}$ தூ நித்யா: கே அந்யே ஸுரா: ஸ$^{2}$த்மக்$_{2}$ப்ரமுகா$_{2}$: ச நித்யா நித்யா த்வமேவ ஜனனி ப்ரக்ருதி: புராணா / (42)

மொழிபெயர்ப்பு:- அன்னையே! நான், பிரம்மா, சிவன் மூவரும் உன்னால் பிறந்தவர்கள், நாங்கள் நித்தியமானவர்கள் அல்ல, அதாவது அழியாதவர்கள் அல்ல. பிறகு மற்ற தெய்வங்கள் எப்படி நித்தியமாக இருக்க முடியும். நீ அழிவற்ற பிரகிருதி, சனாதன தேவி ஆவாய்.

பக்கம் 11-12, அத்தியாயம் 5, ஸ்லோக் 8:-

யதி$_{3}$ த$_{3}$யார்த்$_{3}$ரமநா ந ஸதா$_{3}$ம்பி$_{3}$கே கத$_{2}$மஹ் விஹித: ச தமோகு$_{3}$ண:
கமலஜஸ்ய ரஜோகு$_{3}$ண்ஸம்ப$_{4}$வ: ஸுவிஹித: கிமு ஸத்வகு$_{3}$ணோ ஹரி: / (8)

மொழிபெயர்ப்பு :- பகவான் சங்கர் கூறினார் : அன்னையே நீ எங்கள் மீது கருணைகொண்டால், ஏன் என்னை தமோகுணமாக படைத்தாய், தாமரையில் தோன்றிய பிரம்மாவை ஏன் ரஜோகுணமாக படைத்தாய்?

விஷ்ணுவை ஏன் சத்வகுணமாக படைத்தாய்? அதாவது ஆன்மாக்களின் பிறப்பு இறப்பு என்ற தீய செயலில் எங்களை ஏன் ஈடுபடுத்தினாய்?

**ஸ்லோகம் 12 :** ரமயஸே ஸ்வபதிம் புருஷம் ஸதா$_3$ தவ க$_3$திம் ந ஹி விஹ வித$_3$ம் ஸி$^2$வே/ (12)

மொழிபெயர்ப்பு : நீ எப்பொழுதும் உன் கணவர் அதாவது கால் பகவானுடன் இன்பத்தில் ஈடுபடுகிறாய். உன் நிலை யாருக்கும் தெரியாது.

முடிவுரை:- மேற்கண்ட ஆதாரங்கள் மூலம் பிரம்மா-ரஜோகுணம், விஷ்ணு-சத்வகுணம், சிவன்-தமோகுணம் என்றும் இந்த மூவரும் அழியக்கூடியவர்கள், மேலும் துர்க்கையின் கணவர் (பிரம்) காலன் ஆவார், அவருடன் போகத்தில் ஈடுபடுகிறார் என்றும் நிரூபணமாகிறது.

## நான் வெளிப்படாமல் இருப்பேன் காலனின் (பிரம்) சபதம்

(சூக்கும வேதத்திலிருந்து மீதள்ள படைப்பாற்றல்)

மூன்று மகன்களையும் படைத்த பிறகு, பிரம் தனது மனைவி துர்க்கையிடம் (பிரகிருதி), எதிர்காலத்தில் நான் என் உண்மையான வடிவில் யார் முன்னும் தோன்ற மாட்டேன் என்று சபதம் செய்தார். இதனால் “நான் உருவம் அற்றவன் என கருதப்படுவேன்” என்றார். மேலும் துர்க்கையிடம், என் ரகசியத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம், நான் மறைவாகவே இருப்பேன் என்று கூறினார். பிறகு துர்க்கை, உங்களுடைய பிள்ளைகளுக்கு கூட தரிசனம் தர மாட்டீர்களா என கேட்டார். அதற்கு பிரம்ம காலன், நான் யாருக்கும் எந்த வழிபாட்டாலும் தரிசனம் தரமாட்டேன், இது என்னுடைய கொள்கை என பதிலளித்தார். துர்க்கை, பிள்ளைகளிடம் இருந்தும் மறைவாக இருக்கும் உங்களுடைய கொள்கை உகந்ததல்ல என்றாள். அப்போது காலன் துர்க்கையிடம் கூறினார், என்னுடைய கட்டாயம் இது, நான் ஒரு லட்சம் மனித உயிர்களைக் உண்ணும்படி சபிக்கப்பட்டுள்ளேன் என் மகன்கள் (பிரம்மா, விஷ்ணு, மகேஷ்) இதைப் பற்றி அறிந்தால், அவர்கள் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் போன்ற பணிகளைச் செய்ய மாட்டார்கள். எனவே, என்னுடைய இந்த கெட்ட கொள்கை என்றென்றும் நிலைத்திருக்கும். இவர்கள் மூவரும் சற்று வளர்ந்ததும் இவர்களை மயக்கமடையச் செய்யவும். என்னைப் பற்றி சொல்ல வேண்டாம், இல்லையெனில் உனக்கும் தண்டனை கொடுப்பேன் என்றார். இதற்குப் பயந்து துர்க்கை உண்மையைச் சொல்லுவதில்லை.

**{**ஆதாரம் : கீதை அத்தியாயம் 7, ஸ்லோகம் 24 இல், நான் யார் முன்னும் தோன்றுவதில்லை, என் யோக மாயையால் மறைந்திருப்பேன் என்ற எனது கெட்ட கொள்கையை இந்த புத்தியற்ற சமுதாயம் அறிவதில்லை, எனவே அருவமான என்னை மனித ரூபத்தில் வந்த ஸ்ரீ கிருஷ்ணர் என்று அறிவார்.

அவ்யக்தம், வ்யக்திம், ஆபந்நம், மந்யந்தே, மாம், அபு$_3$த்$_3$த$_4$ய: /
பரம், ப$_4$ாவம், அஜானந்த:, மம, அவ்யயம், அநுத்தமம் // 24 //

(அபு$_3$த்$_3$த$_4$ய:) அறியாதவர்கள் (மாம்) என்னுடைய (அநுத்தமம்) தாழ்ந்த (அவ்யயம்) உறுதியான (பரம்) பரம (ப$_4$ாவம்) குணத்தை (அஜானந்த:) அறியாமல் (மாம் அவ்யக்தம்) என்னை வெளிப்படாதவனை (வ்யக்திம்) மனித உருவில் (ஆபந்நம்) வந்ததாக (மந்யந்தே) நம்புகிறார்கள், அதாவது நான் கிருஷ்ண் அல்ல.

மேலும், கீதை அத்தியாயம் 11 ஸ்லோகம் 47, 48 இல், இது என்னுடைய உண்மையான கால் ரூபம். இதை காண்பது, வேதங்களில் உள்ள முறையாலோ, ஜெபத்தாலோ, தவத்தாலோ அல்லது எந்த ஒரு வழிபாடு மூலமும் சாத்தியமில்லை என்று கூறப்பட்டுள்ளது}

பிறகு மூவரும் இளமையானதும் மாதா பவானி (துர்க்கை–பிரகிருதி–அஷ்டாங்கி), நீங்கள் பாற்கடலைக் கடையுங்கள் எனக் கூறினார், முதன்முறை பாற்கடலைக் கடைந்த போது நான்கு வேதங்கள் தோன்றியது (ஜோதி நிரஞ்சன் நான்கு வேதங்களையும் தன் சுவாசம் மூலம் படைத்து ரகசிய பேச்சின் மூலம் அதை சமுத்திரத்தில் இருக்க உத்தரவிட்டார்) நான்கையும் பிரம்மா எடுத்துக்கொண்டார். மூவரும் அந்த வேதங்களை அன்னையிடம் கொண்டுவந்தபோது, பிரம்மா அவைகளை வைத்துக் கொண்டு படிக்கட்டும் என கட்டளையிட்டாள்.

குறிப்பு : உண்மையில் பூரண பரமேஸ்வரர் பிரம்ம காலனிடம் ஐந்து வேதங்களைக் கொடுத்தார். ஆனால் பிரம்ம காலன் நான்கு வேதங்களை மட்டும் வெளிப்படுத்தி, ஐந்தாவதை மறைத்து விட்டார். அதை பூரண பரமாத்மா தானே தோன்றி கவிர் வாணி (கபீர் வாணி – கபீர் உரை) மற்றும் கவிதைகள் மூலம் வெளிப்படுத்தினார்.

இரண்டாவது முறை பாற்கடலைக் கடைந்தபோது மூன்று பெண்கள் தோன்றினர். பிரகிருதி (துர்க்கை) தன்னுடைய மற்ற மூன்று ரூபங்களை (சாவித்திரி, லக்ஷ்மி, பார்வதி) படைத்தது கடலில் மறைத்து வைத்தாள். பாற்கடலைக் கடைந்தபோது வெளியே வந்தாள். அதே பிரகிருதி மூன்று வடிவங்களை பெற்று, பிரம்மாவுக்கு சாவித்திரியையும், விஷ்ணுவுக்கு லட்சுமியையும், சங்கரருக்கு பார்வதியையும் மனைவியாகக் கொடுத்தாள். மூவரின் சுகபோகத்தால் தேவர்களும் அசுரர்களும் உருவாயினர்.

(மூன்றாவது முறை பாற்கடலைக் கடைந்தபோது பிரம்மாவிற்கு 14 ரத்தினங்களும், விஷ்ணு மற்றும் தேவர்களுக்கு அமுதமும், அசுரர்களுக்கு மது கிடைத்தன, மற்றும் சிவன் விஷத்தை தனது தொண்டையில் வைத்துக்கொண்டார். இதெல்லாம் வெகு பின்னர் நடந்தது.)

பிரம்மா வேதங்களைப் படித்தபோது அனைத்து பிரபஞ்சங்களை படைத்தவர் வேறு ஒரு கடவுள் (புருஷ்) என்று தெரிந்துகொண்டார். அப்போது அவர், ஸ்ரீ விஷ்ணு மற்றும் ஸ்ரீ சிவனிடம், படைப்பாளர் வேறு கடவுள் என்று வேதங்கள் விவரிக்கின்றன, ஆனால் வேதங்களுக்கும் அதன் மர்மம் தெரியாது என்று கூறுகின்றன, அதற்கு தத்வதர்ஷி ஞானியிடம் கேட்க குறிப்பிடுகிறது என்று கூறினார். பிறகு பிரம்மா அன்னையிடம் வந்து இதை விவரித்தார். உடனே தாய், என்னைத் தவிர வேறு யாரும் இல்லை நானே படைப்பாளி என்றும், சர்வ சக்தி படைத்தவள் என்றும் கூறினாள். பிரம்மா அதை மறுத்து வேதங்கள் கடவுளால் உருவானது அவை பொய் ஆகாது என்று சொன்னார். அதற்கு துர்க்கை, உன் தந்தை உனக்கு தரிசனம் தரமாட்டேன் என சபதம் செய்துள்ளார் என்று சொன்னார். இப்பொழுது உங்கள் பேச்சில் நம்பிக்கை இல்லை நான் நிச்சயம் அவரைத் தேடி சந்திப்பேன் என்று பிரம்மா சொன்னார். துர்க்கை, அவர் உனக்கு தரிசனம் தரவில்லை என்றால் என்ன செய்வாய்? என்றாள். அதற்கு பிரம்மா உங்கள் முகத்தில் முழிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். ஆனால் மறுபுறம், தான் அருவமாக இருப்பேன், யாருக்கும் தரிசனம் தர மாட்டேன் அதாவது 21 பிரபஞ்சங்களில் தனது நிஜமான கால் வடிவில் உருவமாக தோன்ற மாட்டேன் என்று ஜோதி நிரஞ்சன் சபதம் செய்துள்ளார்.

**கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 24.**

அவ்யக்தம், வ்யக்திம், ஆபந்நம், மந்யந்தே, மாம், அபு$_3$த்$_3$த$_4$ய: /
பரம், ப$_4$ாவம், அஜானந்த:, மம, அவ்யயம், அநுத்தமம் // 24 //

**மொழியாக்கம்:-** (அபு$_3$த்$_3$த$_4$ய:) அறியாதவர்கள் (மாம்) என்னுடைய (அநுத்தமம்) தாழ்ந்த (அவ்யயம்) உறுதியான (பரம்) பரம (ப$_4$ாவம்) குணத்தை (அஜானந்த:) அறியாமல் (மாம் அவ்யக்தம்) என்னை வெளிப்படாதவனை (வ்யக்திம்) மனித உருவில் (ஆபந்நம்) வந்ததாக (மந்யந்தே) நம்புகிறார்கள், அதாவது நான் கிருஷ்ண் அல்ல.

**கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 25**

ந, அஹம், ப்ரகாஸ$^2$: ஸர்வஸ்ய, யோக$_3$மாயாஸமாவ்ருத:
மூட$_4$:, அயம், ந, அபி$_4$ஜாநாதி, லோக:, மாம், அஜம், அவ்யயம் //25//

**மொழியாக்கம்:-** (யோக$_3$மாயாஸமாவ்ருத:) யோக மாயையால் மறைந்துள்ள (அஹம்) நான் (ஸர்வஸ்ய) எல்லோர் முன் (ப்ரகாஸ$^2$:) தோன்ற (ந) மாட்டேன், அதாவது அருவமாக, வெளிப்படாமல் இருக்கிறேன், அதனால் (அஜம்) பிறப்பு எடுக்காத (அவ்யயம்) உறுதியான கொள்கையை (அயம்) இந்த (மூட$_4$:,) அறியாமை (லோக:) உலக மக்கள் (மாம்) என்னை (ந) (அபி$_4$ஜாநாதி) அறிவதில்லை, அதாவது, என்னை கிருஷ்ணராகக் கருதுகிறார்.

ஏனென்றால், பிரம் தனது சக்தியால் பல்வேறு வடிவங்களை எடுத்துக்கொள்கிறார். அவர் துர்க்கையின் கணவர், அதனால்தான் இந்த மந்திரத்தில், நான் ஸ்ரீ கிருஷ்ணரை போன்று துர்க்கையிடமிருந்து பிறப்பதில்லை என்று கூறுகிறார்.

## பிரம்மா தனது தந்தை காலனை (பிரம்) அடைய முயற்சித்தல்

**பிறகு துர்க்கை, பிரம்மாவிடம் அலக் நிரஞ்சன் (காலன்) உன் தந்தை ஆவார், ஆனால் அவர் உனக்கு தரிசனம் தரமாட்டார் என்று கூறியபோது, நான் தரிசனம் செய்த பிறகுதான் திரும்புவேன் என்று சபதம் செய்து பிரம்மா கவலையுடன் இருள் சூழ்ந்த வடக்குதிசை நோக்கிச் சென்றார். அங்கு நான்கு யுகம் வரை தியானம் செய்த பிரம்மாவிற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. காலன் ஆகாசவாணி மூலம் உயிர்களை ஏன் உற்பத்தி செய்யவில்லை என்று பவானி (துர்க்கை) இடம் கேட்டபோது, பிரம்மா அடம் பிடித்து உங்களைத் தேடி சென்றுள்ளான் என்று பவானி சொன்னாள். பிரம்மா இல்லாமல் உயிரினங்களை உருவாக்குவது சாத்தியமற்றது, நான் அவனுக்கு தரிசனம் தர மாட்டேன், நீ அவனை திரும்ப அழைத்துக் கொள் என்று பிரம்ம காலன் சொன்னார். உடனே துர்க்கை (பவானி) தனது சக்தியால் காயத்திரி என்ற பெண்ணை உருவாக்கி பிரம்மாவை அழைத்துவரக் கட்டளை இட்டாள். காயத்ரி பிரம்மாவிடம் சென்றாள், ஆனால் அவர் தியானத்தில் இருந்தார், காயத்திரி வந்ததை உணரவில்லை. பின்னர் ஆதி குமாரி (பிரகிருதி) காயத்ரியை தியானத்தின் மூலம் அவர் பாதங்களைத் தொடச் சொன்னாள், காயத்ரியும் அப்படியே செய்தாள். பிரம்மாவின் தியானம் கலைந்ததும், என் தவத்தை கலைத்த பாவி யார்? நான் உன்னை சபிப்பேன் என ஆவேசத்துடன் கூறினார். உடனே காயத்திரி, இது என்னுடைய தவறல்ல, முதலில் நான் சொல்வதைக் கேள் பிறகு சபித்துவிடு என்றாள். நீங்கள் இல்லாமல் உயிரின் உற்பத்தி நடக்காது**

என்பதால் அன்னை உங்களை மீட்டு வரச் சொன்னாள் என்று கூறினாள்.

பிறகு பிரம்மா, தந்தையின் தரிசனம் கிடைக்காமல் நான் எப்படித் திரும்புவது? இப்படித் திரும்பினால் அவமானப்படுவேன். அதனால், நான் தந்தையை (ஜோதி நிரஞ்சன்–காலன்) தரிசித்தேன், அதை நீ கண்ணால் பார்த்ததாக அன்னையிடம் பொய் சொன்னால் நான் திரும்புவேன் என்று சொன்னார். அதற்கு காயத்ரி, நீங்கள என்னுடன் உடலுறவு கொண்டால், நான் உங்களுக்குப் பொய் சாட்சி சொல்வேன் என்று சொன்னாள். தந்தையை காணாமல் திரும்பினால் அவமானப்படுவேன் என்று பிரம்மா எண்ணி வேறு வழியின்றி காயத்ரியுடன் உடலுறவு கொண்டார்.

நாம் ஏன் இன்னொரு சாட்சியை கொண்டு செல்லக்கூடாது என்று காயத்திரி கேட்க பிரம்மா ஒப்புக்கொண்டார். உடனே காயத்திரி தனது சக்தியால் புஷ்பவதி என்ற பெண்ணை உருவாக்கி, இருவரும் புஷ்பவதியை பொய் சாட்சி சொல்ல வற்புறுத்தினார்கள். புஷ்பவதியும் பிரம்மா தன்னுடன் உடலுறவு கொண்டால் தான் பொய் சொல்வேன் என்று சொன்னாள். காயத்ரி பிரம்மாவிடம் வேறு வழியில்லை என்று கூறியதால் பிரம்மா புஷ்பவதியுடன் உடலுறவு கொண்டார். பின்னர் மூவரும் துர்க்கையிடம் (ஆதிமாயா–பிரகிருதி) வந்தனர். இரு தேவிகளும், ஒரு வேளை பிரம்மா தங்கள் பொய் சாட்சியை அன்னையிடம் சொன்னால் தாய் தங்களை சபிப்பாள் என்று எண்ணி, பிரம்மாவை சிக்கவைக்க மேற்கூறிய நிபந்தனையைக் வைத்தனர்.

இங்கு கரீப் தாஸ் ஜி கூறுவது:– "தாஸ் கரீப் யஹ் சூக் துரோம் துர்"

பொருள்:– இந்த காலனின் (பிரம்) லோகத்தில் இத்தகைய தோஷம் ஆரம்பம் முதலே இருந்து வருகிறது, இங்குள்ள தெய்வங்களும் தீண்டப்படாதவர்கள் அல்ல. ஸ்ரீ விஷ்ணு அவர்கள் ஜாலந்தர் அரக்கனின் மனைவி துளசியை ஏமாற்றி அவளது கற்புக்கரசி ஒழுக்கத்தை கலைத்தார். ஸ்ரீ விஷ்ணு மோகினி வடிவத்தை எடுத்தபோது, சிவபெருமானும் காம உணர்வோடு அவரது கையைப் பிடித்தார். உடனே ஸ்ரீ விஷ்ணு தனது உண்மையான வடிவில் தோன்றினார்.

## அன்னை துர்க்கை பிரம்மாவிற்கு சாபம் தருதல்

பிரம்மா, வேதங்களில் இறைவனை பற்றி படித்திருந்தார், யஜுர்வேதம் அத்தியாயம் 5 மந்திரம் 1 : "அக்னே தனு ஆசி", பொருள்: பரமேஸ்வரர் ஒளி வடிவில் உருவத்தில் இருக்கிறார். "விஷ்ணுவே தவா சோமஸ்ய தனு அசி", பொருள் : அனைவரையும காக்கும் பரமாத்மாவிற்க்கு உருவம் இருக்கிறது. அதனால் பிரம்மா இரு தேவிகளிடமும் கடவுள் ஒளி வடிவில் மனிதனைப் போன்ற ரூபத்தில் உள்ளதாக சொல்லும்படி சொன்னார்.

பிறகு அன்னை துர்க்கை பிரம்மாவிடம், உன் தந்தையைப் பார்த்தாயா? என்று கேட்டார். பிரம்மா, ஆம், நான் தந்தையைப் பார்த்தேன் அவர் மனிதனைப் போன்ற ஒளி உடலை பெற்றவர் என்றார். துர்க்கை என்ன சாட்சி என்று கேட்டார். அப்போது பிரம்மா, இந்த இருவர் முன் நான் அவரைப் தரிசித்தேன் என்றார். தேவி இந்த இரண்டு பெண்களிடம் கேட்டபோது, இருவரும், ஆம், நாங்கள் எங்கள் கண்களால் பார்த்தோம் என்றார்கள். அப்போது பவானி (பிரகிருதி), காலன் தன்னிடம் யாருக்கும் தரிசனம் தரமாட்டேன் என்று சொல்லிருக்கிறார், ஆனால் இந்த மூவரும் அவரை பார்த்ததாக சொல்கிறார்கள் என்று சந்தேகப்பட்டாள். பிறகு

அஷ்டங்கி ( துாக்கை) தியானம் செய்து, இதை பற்றி காலன் – ஜோதி நிரஞ்சனிடம் கேட்டார். இந்த மூவரும் பொய் சொல்கிறார்கள் என்று ஜோதி நிரஞ்சன் கூறினார். அப்போது துாக்கை, நீ பொய் சொல்கிறாய் என்றார். உடனே ஆகாசவாணி ஒலித்தது, 'இவர்களுக்கு எந்த தரிசனமும் கிடைக்கவில்லை. "அதைக் கேட்ட பிரம்மா, அன்னையே, நான் தந்தையைத் தேடிச் செல்வதாகச் சபதம் செய்தேன் ஆனால் தந்தையை காண முடியவில்லை. திரும்பி உங்களிடம் வர வெட்கமாக இருந்தது. எனவே, நாங்கள் பொய் சொன்னோம் என்றார். அப்போது அன்னை (துர்க்கை) உன்னை சபிக்கிறேன் என்று கூறினார்.

* பிரம்மாவிற்கு சாபம் : உலகில் உன்னை யாரும் பூஜிக்க மாட்டார்கள், உன் வம்சத்தவர்கள் மோசடி செய்வார்கள், பொய் பேசி இவ்வுலகை ஏமாற்றுவார்கள். நல்லது செய்பவர்கள் போல் காட்டிக் கொள்வார்கள் ஆனால் மனதால் குற்றம் இழைப்பார்கள். புராணங்களை படிப்பார்கள் ஆனால் அதில் உள்ள உண்மைகளை அறியமாட்டார்கள். மேலும் புகழ் மற்றும் பணத்திற்காக தம்மை நாடி வருபவருக்கு குருவாகி பொய் ஞானத்தை (வேதத்திற்கு மாறாக) போதிப்பார்கள். தேவர் தேவிகளை பூஜித்து மற்றும் பூஜிக்க வைத்து மற்றவர்களுக்கு துன்பம் தருவார்கள். உன்னைப் பின்பற்றும் பக்தர்களுக்கு நல்வழி காட்ட மாட்டார்கள், தட்சிணைக்காக உலகத்தை வஞ்சிப்பார்கள். தன்னை உயர்வாக நினைத்து மற்றவர்களை தாழ்வாக நினைப்பார்கள். இதைக் கேட்டவுடன் பிரம்மா மயக்கமடைந்து விழுந்தார், வெகு சமயத்திற்கு பிறகு நினைவு வந்தது.

* காயத்திரிக்கு சாபம்: நீ பூமியில் பசுவாகப் பிறப்பாய், உனக்கு பல காளைகள் ஆண் கூட்டாளிகளாக இருப்பார்கள்.

* புஷ்பவதிக்குக் சாபம்: உன் இருப்பிடம் அசுத்தமாக இருக்கும். உன் பூவை யாரும் பூஜைக்கு பயன்படுத்தமாட்டார்கள். பொய் சாட்சிக்காக நீ நரக வேதனையை அனுபவிக்க வேண்டும். உன் பெயர் தாழம்பூ ஆகும்.

இவ்வாறு மூவருக்கும் சாபம் கொடுத்துவிட்டு மாதா பவானி (துர்க்கை) மிகவும் வருத்தப்பட்டாள். {இதேபோல் தான் மனிதனும் சிந்திக்காமல் மனதின் (கால் நிரஞ்சன்) தாக்கத்தால் தவறு செய்துவிடுகின்றான், ஆனால் ஆன்மாவின் தாக்கத்தால் சிந்தித்து பின்னர் வருந்துகிறான். பிள்ளைகள் தவறு செய்யும்போது கோபத்தில் தண்டிக்கும் தாய் தந்தையர் பிறகு வருத்தப்படுகிறார்கள். மனதின் (கால்–நிரஞ்ஜனின்) தாக்கத்தால் இதே செயல்முறை அனைத்து உயிரினங்களிலும் நடைபெறுகிறது} இங்கு ஒரு விஷயம் முக்கியமானது, காலனும் (ஜோதி நிரஞ்ஜன் – பிரம்) தனது விதிகளை உருவாக்கியுள்ளார், எந்த உயிரினமும் பலவீனமான உயிரினத்தை துன்புறுத்தினால், பதிலுக்கு அனுபவித்தே ஆக வேண்டும். பிறகு பிரம்மா, காயத்திரி மற்றும் புஷ்பவதியை ஆதி பவானி (பிரகிருதி, அஷ்டங்கி) சபித்தபோது, அலக் நிரஞ்ஜன் (பிரம்–காலன்) பவானியிடம், "நீ செய்தது சரியில்ல, துவாபரயுகத்தில் உனக்கும் ஐந்து கணவர்கள் வாய்ப்பார்கள் என சாபம் இடுகிறேன்" என்றார். (திரௌபதிதான் ஆதி மாயாவின் அவதாரமாக வந்தாள்). ஆகாயத்தில் இருந்து இந்தக் குரலைக் கேட்டதும் ஆதி மாயா, ஜோதி நிரஞ்ஜனிடம், (கால்) நான் உன் வசமாவதால் நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள் என்று சொன்னாள்.

(படைப்பாற்றலில் துர்க்கையின் மற்ற பெயர்களை மீண்டும் மீண்டும்

எழுதுவதன் நோக்கம், புராணங்கள், கீதை மற்றும் வேதங்களில் உள்ள ஆதாரங்களைப் பார்க்கும்போது குழப்பம் ஏற்படாது. உதாரணமாக, கீதை அத்தியாயம் 14 ஸ்லோகம் 3, 4 இல் பிரம்ம காலன் சொல்கிறார் :- பிரகிருதி அனைத்து உயிர்களையும் கருவில் தாங்கி பிறப்பிக்கும் தாய் ஆவாள். நான் அவளுடைய கருவில் விதை விதைக்கும் தந்தை ஆவேன். ஸ்லோகம் 4 இல்:- பிரகிருதி மூலம் பிறந்த மூன்று குணங்களும் ஆன்மாவை கர்மவினையில் பிணைத்து வைக்கின்றன. எனவே, பிரகிருதி தான் துர்க்கை மற்றும் முக்குணங்களும் மூன்று தேவர்கள் ஆவார், அதாவது ரஜோகுணம் பிரம்மா சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன் ஆகியோரின் பெயர்களாகும்)

## விஷ்ணு தனது தந்தையை (கால் - பிரம்) அடைய புறப்படுதல் மற்றும் அன்னையின் ஆசி பெறுதல்

அதன் பிறகு பிரகிருதி விஷ்ணுவிடம், மகனே நீயும் உன் தந்தையைத் தேட செல்லலாம் என்றாள். விஷ்ணு தனது தந்தையை (பிரம்-காலன்) தேடி பாதாள லோகம்வரை சென்றார். அங்கிருந்த சேஷ நாகம் விஷ்ணுவை தன் எல்லையில் நுழைவதைப் பார்த்து கோபம் கொண்டு விஷத்தை உமிழ்ந்தது. அவருடைய நிறம் கருநீலம் ஆக மாறியது. விஷ்ணு அந்த நாகத்திற்கு பாடம் புகட்ட விரும்பினார். அப்பொழுது ஜோதி நிரஞ்சன் (கால்) விஷ்ணுவின் கோபத்தைத் தணிக்க ஆகாசவாணி மூலம், விஷ்ணு நீ உன் தாயிடம் சென்று எல்லா உண்மைகளையும் சொல்லிவிடு மற்றும் சேஷ நாகத்தின் வஞ்சத்தைத் நீ துவாபர யுகத்தில் தீர்த்துக் கொள், துவாபர யுகத்தில், நீ (விஷ்ணு) கிருஷ்ணாவதாரமும், சேஷ நாகம், காலிதாவில் காலிந்திரி நாகமாக இருவரும் அவதாரம் எடுப்பீர்கள் என்று சொன்னார்,.

உஞ்ச் ஹோயீ கே நீச் சதாவை, தாகர் ஓஏல் (பதலா) மோஹி சௌன் பாவை /
ஜோ ஜீவ் தேயி பீர் புனி கஹூன், ஹம் புனி ஓஏல் திவாவேன் தாஹூன் //

பிறகு ஸ்ரீ விஷ்ணு தன் தாயிடம் வந்து, நான் தந்தையை பார்க்கவில்லை என்று உண்மையைச் சொன்னார். அன்னை துர்க்கை (பிரகிருதி) இதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்து, மகனே, நீ சத்தியவாதி என்று கூறினாள். இப்பொழுது என்னுடைய சக்தியால் உன் தந்தையை தரிசிக்க வைத்து உன் மனதின் சந்தேகத்தைப் போக்குவேன் என்றார்.

கபீர், தேக் புத்ர தோஹி பிதா பிடாஊன், தௌரே மன் கா தோக்கா மிடாஊம் /
மன் ஸ்வரூப் கர்தா கஹ் ஜானோ, மன் தே தூஜா அவுர் ந மானோ /
ஸ்வர்க் பாதால் தௌர் மன் கேரா, மன் அஸ்திர் மன் அஹை அனேரா /
நிரங்கார் மன் ஹி கோ கஹியே, மன் கி ஆஸ் நிஷ் தின் ரஹியே /
தேக் ஹூன் பல்டி சூன்ய மே ஜோதி, ஜஹான் பர் ஜில்மில் ஜாலர் ஹோதி //

இப்படி அன்னை துர்க்கை (அஷ்டாங்கி - பிரகிருதி) விஷ்ணுவிடம், இந்த மனம் தான் உலகத்தை செயல்படுத்துபவன், அவனே ஜோதி நிரஞ்சன் என்று கூறினார். தியானத்தில் தோன்றும் ஆயிரம் ஜோதிகளே அவன் உருவம். நீ கேட்ட சங்கு மற்றும் மணியின் ஓசைகள் மகா சொர்க்கத்தில் உள்ள நிரஞ்சனுடைய ஓசையே. அன்னை துர்க்கை (அஷ்டாங்கி - பிரகிருதி) சொன்னாள் மகனே, நீ எல்லா தெய்வங்களுக்கும் அரசன் ஆவாய், உன் விருப்பங்களையும் காரியங்களையும் நான் நிறைவேற்றுவேன், நீ என்னிடம் உண்மையைச் சொன்னதால் உலகம் முழுவதும் நீ வணங்கப்படுவாய்.

அன்னை துர்க்கை விஷ்ணுவிடம் ஒளியை மட்டும் காட்டி ஏமாற்றினார். ஸ்ரீ விஷ்ணுவும் பரமாத்மா உருவமற்றவர், ஒளி ரூபத்தில் மட்டுமே இருப்பார் என்ற கருத்தை பக்தர்களுக்கு புரிய வைக்கத் தொடங்கினார். இதற்குப் பிறகு ஆதி பவானி ருத்ரனிடம் (மகேஸ்வரன்) சென்று, நீயும் உன் தந்தையைத் தேட செல்லலாம், உன் சகோதரர் இருவருக்கும் அவர் கிடைக்கவில்லை. அவர்கள் கேட்டதை கொடுத்துவிட்டேன். நீயும் ஏதாவது கேட்க விரும்பினால் கேட்கலாம் என்றார். அப்போது மகேஸ்வரன் சொன்னார், தாயே, என் மூத்த சகோதரர்கள் இருவருக்கும் தந்தையின் தரிசனம் கிடைக்கவில்லை, எனவே முயற்சிப்பது வீணாகும். தயவு செய்து நான் அழியாதவனாக (மிருத்யுஞ்ஜெயாக) மாற வரம் கொடுங்கள் என்றார். அதற்கு அன்னை, என்னால் இதை செய்ய முடியாது என்றார். ஆனால், ஆயுளை நீடிக்க ஒரு தந்திரத்தை என்னால் சொல்ல முடியும். அது யோக சமாதி ஆகும் என்றாள் (அதனால்தான், சிவபெருமான் (மகாதேவன்) பெரும்பாலும் தியானத்தில் இருக்கிறார்).

பிறகு தாய் (அஷ்டாங்கி–பிரகிருதி) மூன்று மகன்களுக்கும் வெவ்வேறு துறைகளை பிரித்து கொடுத்தாள்:

பிரம்மாவிற்கு, காலனின் லோகத்தில் உள்ள 84 லட்சம் உயிரினங்களின் உடல்களை உருவாக்கும் துறை அதாவது, ரஜோ குணத்தைப் புகுத்தி இனப்பெருக்கம் செய்ய அனைவரையும் தூண்டிவிட்டு உயிரினங்களை உற்பத்தி செய்யும் துறை.

விஷ்ணு கடவுளுக்கு, இந்த உயிரினங்களை (கர்ம வினைப்படி) வளர்த்து, மோகத்தை உண்டாக்கி அதை பராமரிக்கும் துறை கொடுக்கப்பட்டது.

சிவசங்கர (மகாதேவ்) கடவுளுக்கு அழிக்கும் துறை தரப்பட்டது. ஏனென்றால் அவரது தந்தை நிரஞ்ஜனுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு லட்சம் மனித உயிர்களை உண்ண வேண்டும்.

இங்கு மனதில் ஒரு கேள்வி எழலாம் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் மூவரும் அந்தந்த லோகத்தில் இருக்கிறார்கள், பிறகு படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் எப்படி நடக்கின்றன? அதாவது இன்று தகவல் தொழில்நுட்பம் நடைபெற செயற்கைகோள்களைப் பயன்படுத்துவது போல, இந்த மூன்று தேவர்களும் எங்கு இருந்தாலும், அவர்களின் உடலில் இருந்து வெளிப்படும் சுட்சம குணங்களின் அலைகள் தானாகவே மூன்று லோகங்களில் உள்ள ஒவ்வொரு உயிரினத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மேற்கூறிய விபரம் ஒரு பிரபஞ்சத்தில் உள்ள பிரம்ம காலனின் படைப்பு ஆகும். இதுபோல் ஷர் புருஷின் (காலனின்) 21 பிரபஞ்சங்கள் உள்ளன.

ஆனால் ஷர் புருஷ் (கால்) தானே உடல் வடிவில் எல்லோர் முன் தோன்றுவதில்லை. அவரை அடைய முப்பெரும் கடவுள்கள் (பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன்) வேதங்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி வழிபாடு செய்தும் பிரம்ம காலனை தரிசிக்க முடியவில்லை.

பின்னர் ரிஷிகள் வேதங்களைப் படித்தனர். அதில், “அக்னே தனுர் அசி” (புனித யஜுர்வேதம் அத்தியாயம் 1 மந்திரம் 15) பரமேஸ்வரர் உடல் உடையவர். மேலும் யஜுர்வேதம் அத்தியாயம் 5 மந்திரம் 1 இல், "அக்னே தனுர் அசி விஷ்ணுவே த்வா சோமஸ்ய தனுர் அசி" என்று

எழுதப்பட்டுள்ளது. இந்த மந்திரத்தில், எங்கும் நிறைந்த, அனைவரையும் காக்கும் இறைவன் சத்யபுருஷ் அவர்களுக்கு சரீரம் (உடல்) இருப்பதாக வேதம் இரண்டு முறை சாட்சி அளிக்கிறது.

புனித யஜுர்வேதம் அத்தியாயம் 40 மந்திரம் 8 இல், (கவிர் மனிஷி) எல்லா உயிர்களும் விரும்பும் அந்த பரமேஸ்வரன் கவிர் அதாவது கபீர் ஆவார் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் (ஆசனவிரம்) அவருடைய உடல் நாடி நரம்பு அற்றது. (சுக்ரம் ஆகாயம்) வீரியம் மூலம் பஞ்சபூதங்களால் ஆன உடல் அற்றது. அவர் அனைவருக்கும் எஜமானர் ஆவார், எல்லாவற்றிற்கும் மேலாக சத்யலோகத்தில் அமர்ந்திருக்கிறார். அந்த பரமேஸ்வரர் (ஸ்வர்யோதி) ஒளியால் சுயமாக ஒளிரும் உடல் உடையவர், அதாவது அழிவற்றவர். அந்த கவிர்தேவன் (கபீர் பரமேஸ்வர்) தான் (வியதாத்தர) அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்தவர், (ஸ்வயம்பூஹ்) சுயமாக தோன்றுபவர், (யதா தத்ய அர்த்தன்) நிஜத்தில் (சாஷ்வத்) அழிவற்றவர் ஆவார். (இதன் ஆதாரம் கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 17ல் உள்ளது). இதன் பொருள் என்னவென்றால் பூரண பிரம் உடைய பெயர் கபீர் (கவிர்தேவ்) ஆகும். அந்த பரமேஸ்வரரின் உடல் ஒளியினால் ஆனது. பரமாத்மாவின் உடல் மிகவும் நுட்பமானது அது திவ்ய பார்வை உள்ள வழிபாட்டாளருக்கு மட்டுமே புலப்படும். அதேபோல, ஆன்மாவும் நுட்பமான சூட்சம உடலைக் கொண்டது, அதன் மீது வீரியம் (சுக்ரம்) மூலம் பஞ்சபூதங்களால் ஆன உடல் (கவர்) ஏற்றப்பட்டுள்ளது. உடலை விட்டு பிரிந்த பிறகும், ஆன்மாவின் சூட்சும உடல் கூடவே இருக்கும். தெய்வீக பார்வை திறந்த சாதகனுக்கு மட்டுமே அந்த உடல் தெரியும். இவ்வாறு பரமாத்மா மற்றும் ஆன்மாவின் நிலையை புரிந்து கொள்ளுங்கள். வேதங்களில் “ஓம்” என்ற மந்திர ஜபத்தின் ஆதாரம் உள்ளது, இது பிரம்ம காலனின் வழிப்பாடு ஆகும். இதனால் ஒம் மந்திர ஜபத்தை பூரண பிரம் இறைவனுடையதாக கருதி ரிஷி முனிகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு தவம் (ஹட்யோகம்) செய்து இறைவனை அடைய முயற்சி செய்தார்கள். இதனால் பல சித்த சக்திகள் அடைந்தார்கள் ஆனால் இறைவனை தரிசிக்க முடியவில்லை. அந்த சித்த சக்திகளோடு விளையாடிக்கொண்டு ரிஷிகள் பிறப்பு இறப்பு என்ற சக்கரத்திலேயே மாட்டிக் கொண்டார்கள், மேலும் இறைவன் உருவமற்றவர் என்று தங்கள் அனுபவங்களை நூல்களில் எழுதினார்கள். பிரம்ம காலன், நான் என் நிஜ ரூபத்தில் யார்முன்னும் தோன்ற மாட்டேன், என்னை வெளிப்படாதவன் (அவ்யக்த்) என்று அறிவார்கள் என்று சபதம் செய்துள்ளார். (அவ்யக்த் என்றால், ஒருவர் உருவத்தில் இருந்தும் உடல் வடிவத்தில் வெளிப்படாதவன் என்றாகும். அதாவது பகலில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும்போது சூரியன் மறைந்துவிடுகிறது அது தெரிவதில்லை, ஆனால் நிஜத்தில் அது மேகங்களுக்குப் பின்னால் அப்படியே இருக்கிறது. இந்த நிலை அவ்யக்த் என்று அழைக்கப்படுகிறது). (ஆதாரம்: கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 24-25, அத்தியாயம் 11 சுலோகம் 48 மற்றும் 32).

புனித கீதையை கூறும் பிரம் (கால்), ஸ்ரீ கிருஷ்ணருடைய உடலில் ஆவியாக புகுந்து கூறுகிறார்: அர்ஜுனா! நான் விஸ்வரூபம் கொண்ட மகா காலனாக இருக்கிறேன், இப்பொழுது அனைவரையும் விழுங்குவதற்கு வந்துள்ளேன் (கீதை அத்தியாயம் 11 ஸ்லோகம் 32). இதுவே எனது உண்மையான தோற்றம், இதை உன்னை தவிர இதுவரை யாரும் பார்த்ததில்லை, இதற்கு மேலும் யாராலும் பார்க்க முடியாது. அதாவது வேதங்களில் கூறப்பட்டுள்ள யாகம், ஜபம், தவம் மற்றும் ஓம் மந்திரம்

போன்ற வழிபாட்டு முறையால் என்னுடைய இந்த உண்மையான ரூபத்தை காண முடியாது (கீதை அத்தியாயம் 11 ஸ்லோகம் 48). நான் கிருஷ்ணன் அல்ல. அறியாதவர்கள் புலப்படாத (அவ்யக்த்) என்னை மனித உருவத்தில் கிருஷ்ணன் என்று எண்ணுகிறார்கள். ஏனென்றால் நான் நிஜ ரூபத்தில் யாருக்கும் தரிசனம் தரமாட்டேன் என்ற எனது கெட்ட குணத்தை அவர்கள் அறிவதில்லை. நான் என் யோக மாயையால் மறைந்துள்ளேன். (கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 24 25).

சற்று சிந்தியுங்கள்:- மறைந்திருக்கும் தனது கொள்கையை, ஏன் அவரே கேட்டது (அனுத்தம்) என்று அழைக்கிறார்?

ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்கு கூட தரிசனம் தரவில்லை என்றால் அவரிடம் ஏதோ தவறு இருக்கிறது, அதனால் அவர் மறைந்திருக்கிறார், ஆனால் வசதிகளையும் செய்து கொடுக்கிறார். பிரம்ம காலன் சாபம் பெற்றதால் ஒரு லட்சம் மனித உயிர்களை உண்ண வேண்டியுள்ளது. மேலும் தினமும் 25 சதவிகிதம் அதிகம் பிறக்கும் உயிர்களுக்கு கர்மவினையின் தண்டனைகளை அனுபவிக்க 84 லட்சம் உயிரினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஏனென்றால், எல்லோர் முன்னிலையில், உயிர்களை விழுங்கினால், அனைவரும் பிரம்ம காலனை வெறுப்பார்கள், பிறகு பூரண பரமாத்மா கவிராக்கனி (கபீர் பரமேஸ்வர்) தானே வந்தாலோ, அல்லது தன்னுடைய தூதர் ஒருவரை அனுப்பினாலோ எல்லா உயிர்களும் சத்திய பக்தி மூலம் கால் வலையிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள்.

எனவே, காலன் அனைவரையும் ஏமாற்றி வைத்துள்ளான். புனித கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18, 24, 25ல், அவருடைய வழிபாட்டால் பெறும் முக்தியைக் கூட மிக தாழ்வானது (அனுத்தமாம்) என்றும் தன்னுடைய விதிமுறைகளையும் சிறந்ததல்ல (அனுத்தம்) என்றும் கூறிருக்கிறார்.

ஒவ்வொரு பிரபஞ்சத்திலும் உள்ள பிரம்மலோகத்தில் ஒரு மகா சொர்க்கம் உருவாக்கப்பட்டுள்ளது. மகா சொர்க்கத்தில் ஓரிடத்தில் உயிரினங்களை ஏமாற்ற பிரகிருதி (துர்க்கை - ஆதி மாயா) மூலம் போலி சத்யலோகம், போலி அலக்லோகம், போலி அகம்லோகம் மற்றும் போலி அனாமி லோகம் படைத்துள்ளார். கபீர் சாகேப் ஜியின் "கர் நைனோ திதார் மஹால் மே பைரா ஹை" என்ற பாடலின் உள்ள வரிகள் இவை :


காயா பேத் கியா நிர்வாரா, யே சப் ரச்னா பிண்ட் மன்ஜியாரா ஹை /
மாயா அவிகத் ஜால் பசாரா, சோ காரிகர் பாரா ஹை /
ஆதி மாயா கின்ஹி சதுராய், ஜூடி பாஜி பிண்ட் திகாயி,
அவிகத் ரச்னா ராச்சி அன்ட் மாஹி, வாகா பிரதிபிம்ப் டாரா ஹை /

ஒரு பிரபஞ்சத்தில் மற்ற சில லோகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ பிரம்மாவின் லோகம், ஸ்ரீ விஷ்ணுவின் லோகம் மற்றும் ஸ்ரீ சிவனின் லோகம் போன்றவை. அங்கு அமர்ந்தவாறே மூன்று தேவர்களும் கீழே மூன்று லோகங்களில் (சொர்க்கலோகம் அதாவது இந்திர லோகம், பூலோகம், பாதாளலோகம்) தலா ஒரு துறையின் அதிபதியாகி ஆள்கிறார்கள். மேலும் தன் தந்தை பிரம்ம காலன் உண்பதற்காக உயிர்களை படைத்தல், காத்தல் அழித்தல் போன்ற கடமைகளை செய்கிறார்கள். மூன்று தெய்வங்களுக்கும் பிறப்பும், இறப்பும் உண்டு. காலன் இவர்களையும் விழுங்குகிறான். இந்த பிரபஞ்சத்தில் {பிரபஞ்சத்தின் அமைப்பு முட்டை வடிவில் இருப்பதால், இதை அண்டம் என்றும் அழைக்கப்படுகிறது. மற்றும் பிரபஞ்சத்தின் உருவாக்கம் டி.வி. போல் நம் உடலின் கமலங்களில் (சக்கரங்களில்)


காணப்படுவதால் இதை பிண்டம் என்றும் அழைக்கப்படுகிறது} ஒரு அமுதகுளம் மற்றும் தர்மராயன் (நீதிபதி) லோகமும் உள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தூதரகம் போல ஒரு ரகசிய இடத்தில் பூரண பரமாத்மா வேறு தோற்றத்தில் வசிக்கிறார், அங்கு யாரும் செல்ல முடியாது. சத்யலோகத்தின் மீதான பக்தி முழுமையடையாத ஆன்மாக்கள் அங்கு வசிக்கிறார்கள். பக்தியுகம் வரும்போது பரமேஸ்வரர் கபீர்ஜி தனது பிரதிநிதியான பூரண சத்குருவை அனுப்புகிறார். இந்த புண்ணிய ஆன்மாக்கள் அந்த நேரத்தில் பூமியில் மனித பிறவியை பெறுகிறார்கள், மேலும் அவர்கள் பூரண சத்குருவிடம் தீட்சை பெற்று சத்தியபக்தி செய்து பூரண முக்தி அடைகிறார்கள். அந்த இடத்தில் வசிக்கும் ஆன்மாக்களின் பக்தி சேமிப்பு பாதுகாப்பாக இருக்கும். பரமாத்மாவிடமிருந்து எல்லா வசதிகளும் கிடைக்கும். காலனை (பிரம்) வழிபடுபவர்களின் பக்தி சேமிப்பு சொர்க்கம் மற்றும் மஹா சொர்க்கத்தில் முடிந்துவிடுகிறது, ஏனெனில் இந்த காலனின் லோகத்தில் (பிரம் லோகம்) மற்றும் பரபிரம்ம லோகத்திலும் ஆன்மாக்கள் தங்கள் செயல்களின் பலனை மட்டுமே பெறுகிறார்கள்.

காலன் (ஷர் புருஷ்–பிரம்) தனது 20 பிரபஞ்சங்களை நான்கு மகா பிரபஞ்சங்களாகப் பிரித்துள்ளார். ஒவொவுறு மகா பிரபஞ்சத்தில் ஐந்து பிரபஞ்சங்களைத் தொகுத்து ஒரு வட்டத்திற்குள் வைத்து பாதுகாத்துள்ளார். மேலும் நான்கு மகா பிரபஞ்சங்களையும் ஒரு பெரிய நீள்வட்டத்திற்குள் வைத்து பாதுகாத்துள்ளார். மேலும் இருபத்தியோராம் பிரபஞ்சத்தை ஒரு மகாபிரபஞ்சம் அளவிற்க்கு உருவாக்கியுள்ளார். இருபத்தியோராம் பிரபஞ்சத்திற்குள் நுழையும் இடத்தில் மூன்று வழிகள் அமைத்துள்ளார். இருபத்தியோராம் பிரபஞ்சத்தில், இடது புறத்தில் ஆன்மாக்களை ஏமாற்ற போலியான சத்யலோகம், அலக்லோகம், அகம் லோகம மற்றும் அனாமி லோகத்தை ஆதி மாயா (துர்க்கை) மூலம் உருவாக்கியுள்ளார். மேலும் வலது புறத்தில் 12 உயர்ந்த பிரம்ம காலனின் பக்தர்களை வைத்திருக்கிறார். பின்னர், ஒவ்வொரு யுகத்திலும் பிரம்ம காலன் அவர்களை தனது தூ தர்களாக (சத்குரு) உருவாக்கி பூமிக்கு அனுப்புகிறார். அவர்கள் சாஸ்திர நூல்களுக்கு மாறான வழிபாட்டு முறைகளையும் ஞானத்தையும் போதிக்கிறார்கள். பிறகு தானும் பக்தி அற்றுப்போய் தன் பக்தர்களையும் காலனுடைய வலையில் சிக்கவைத்து விடுகிறார். பிறகு அந்த குருவும் சீடர்களும் நரகத்திற்குச் செல்கிறார்கள். முன்பக்கத்தில் உள்ள வழியை காலன் மூடி (குலுஃப்) வைத்துள்ளார். அந்த வழி பிரம்ம காலனின் சொந்த லோகத்திற்கு செல்கிறது, அங்கு பிரம்ம காலன் தனது உண்மையான மனித வடிவில் வசிக்கிறார். இந்த இடத்தில் வட்ட வடிவிலான ஒரு பாறை உள்ளது (அது சுயமாக சூடாக இருக்கும்) அதன் மீது ஒரு லட்சம் மனித உயிர்களின் சூட்சம உடல்களை வறுத்து, அதிலிருந்து கசடுகளை எடுத்து உண்கின்றான். அந்த நேரத்தில் அனைத்து ஆன்மாக்களும் தாங்க முடியாத வலியால் அலறத் தொடங்குகின்றன, பின்னர் சிறிது நேரம் கழித்து மயக்கம் அடைந்து விடுகின்றன, ஆன்மா இறப்பதில்லை. பிறகு தர்மராயன் லோகம் (எமலோகம்) சென்று கர்மவினையின் அடிப்படையில் வேறு பிறவிகளை எடுத்து பிறப்பு இறப்பு சுழற்சி தொடர்ந்துகொண்டே இருக்கும். பிரம்ம காலன் தன் உணவாக இருக்கும் உயிர்களுக்கு மட்டுமே மேலே குறிப்பிட்ட முன்பக்கத்தில் மூடியுள்ள வழியை சில கணங்களுக்கு மட்டும் திறக்கிறார். பூரண பரமாத்மாவின் சத்யநாம் மற்றும் சார்நாம் மந்திரம் மூலம் இந்த வழி தானாகவே திறக்கும்.

# பிரம்மலோகத்தின் குறும்படம்



## (ஜோதிநிரஞ்சன் - பிரம்) காலனின் லோகத்தின் (21 பிரபஞ்சம்) குறும்படம்



இவ்வாறாக காலனின் மாய வலையை பற்றி பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் சாகேப்) தனது பக்தரான தர்மதாஸிடம் விளக்கினார்.

## பரபிரம் உடைய ஏழு சங்க் பிரபஞ்சங்களின் படைப்பு

பின்னர் கபீர் பரமேஸ்வரர் மேலும் விவரித்தார், பரபிரம்மன் (அக்ஷர் புருஷ்) கவனமில்லாமல் அமுத குளத்தில் தூங்கிவிட்டார், பிறகு பரமேஸ்வரர் (நான் அதாவது கபீர் சாஹேப்) அந்த குளத்தில் முட்டையை இறக்கிய போது, அக்ஷர் புருஷ் (பரபிரம்) அதை கோபத்துடன் பார்த்தார். இதன் காரணமாக, அவர் ஏழு சங்க் பிரபஞ்சங்களுடன் சத்யலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். மற்றொரு காரணம், அக்ஷர் புருஷ் (பரபிரம்) தனது துணையான பிரம்ம காலனை (ஷர் புருஷ்) வெளியேற்றியதால் மனமுடைந்து, பரம பிதா கவிர்தேவனை (கபீர் பரமேஸ்வரர்) மறந்து காலனையே நினைத்து கொண்டிருந்தார் மற்றும் ஷர் புருஷ் (பிரம்) அங்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறான், சுதந்திரமாக ஆட்டி படைப்பான், நான் பின் தங்கி விட்டேன் என்று நினைத்து கொண்டிருந்தார். மேலும் மற்ற சில ஆன்மாக்கள் (அதாவது இன்று பரபிரம்மனின் ஏழு சங்க் பிரபஞ்சங்களில் சிக்கியுள்ள ஆன்மாக்கள்) காலனுடன் சென்ற ஆன்மாக்களை நினைத்து ஏங்கின. மேலும் அனைத்து மகிழ்ச்சியும் அளிக்கும் பூரண பரமாத்மாவை (கவிர்தேவ்) மறந்துவிட்டன. பரமேஸ்வரர் கவிர்தேவ் பலமுறை அறிவுறுத்தியும் அவர்களின் ஏக்கம் குறையவில்லை.

தமக்கும் தனி இடம் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து பரபிரம்மனும் (அக்ஷர் புருஷ்) தனி ராஜ்ஜியத்தை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் சார்நாம் மந்திரத்தை ஜபிக்க ஆரம்பித்தார். இதேபோல், மற்ற ஆன்மாக்களும் (இன்று பரபிரம்மனின் ஏழு சங்க் பிரபஞ்சங்களில் சிக்கியுள்ளவர்கள்) பிரம்ம காலனுடன் சென்ற ஆன்மாக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள், நாம் பின்தங்கிவிட்டோம் என்று நினைத்தன. ஷர் புருஷ் (காலன்) பிரிந்த பிறகு மிக மகிழ்ச்சியாக இருப்பான் என்று எண்ணி, பரபிரமன் (அக்ஷர் புருஷ்) தனி இடத்தை பெற்றே ஆக வேண்டும் என்று முடிவு செய்தார். பரபிரம்மன் (அக்ஷர் புருஷ்) கொடிய தவம் செய்யவில்லை ஆனால் மிகுந்த ஆர்வத்துடன் எளிய தியான யோகத்தை செய்து வந்தார். அவர் தனி இடம் பெற பைத்தியம் போல் அலைய ஆரம்பித்து, உண்பதையும் தவிர்த்தார். முன்பு பிரம்ம காலனுடன் சென்ற ஆன்மாக்களின் நினைவில் மூழ்கிய மற்ற சில ஆன்மாக்கள், அக்ஷர் புருஷ் (பரபிரம்) உடைய வைராக்கியத்தில் மயங்கிவிட்டன. பூரண பரமாத்மா கேட்ட போது, பரபிரம்மன் தமக்கும் தனியிடம் கேட்டார், மேலும் சில ஆன்மாக்களையும் கேட்டு வேண்டினார். அப்போது கவிர்தேவ், தன் விருப்பத்துடன் செல்ல விரும்பும் ஆன்மாக்களை அனுப்புகிறேன் என்றார். பரபிரம்மன் உடன் செல்ல விரும்பும் ஆன்மாக்கள் சம்மதம் தெரிவிக்கவும் என்று பூரண பிரபு கேட்டார். நீண்ட நேரம் பிறகு ஒரு ஆன்மா சம்மதம் தெரிவித்தது, அதைப் பின்பற்றி மற்ற சில ஆன்மாக்களும் சம்மதம் தெரிவித்தன. முதன் முதலில் சம்மதம் தெரிவித்த ஆன்மாவை பரமாத்மா ஒரு பெண் வடிவில் மாற்றி அதற்கு ஈஸ்வரி மாயா (பிரகிருதி சுரதி) என்று பெயரிட்டார்.

பின்னர், அவர் மற்ற அனைத்து ஆன்மாக்களையும் அந்த ஈஸ்வரி மாயாவின் உடலில் புகுத்தி, அச்சிந்தன் மூலமாக அக்ஷர் புருஷிடம் (பரபிரம்) அனுப்பினார். பரமாத்மா மீதான விசுவாசத்தை இழந்ததற்கான தண்டனை பெற்றார்கள். பல யுகங்களுக்கு இருவரும் ஏழு சங்க் பிரபஞ்சங்களில்

வசித்தனர். ஆனால் பரபிரம்மன் தவறாக நடந்து கொள்ளவில்லை. தன் சம்மதத்துடன் ஈஸ்வரி மாயாவை பரபிரம்மன் மணந்தார். பின்னர் தனது சபத் சக்தி மூலம் நகங்களால் பெண் உறுப்பை படைத்தார். ஈஸ்வரி மாயாவின் சம்மதத்துடன் பிள்ளைகளைப் பெற்றார். எனவே, பரபிரம் உடைய லோகத்தில் (ஏழு சங்க் பிரபஞ்சங்களில்) உள்ள ஆன்மாக்களுக்கு தபத்சிலாவின் (அக்னி பாறையின்) கஷ்டங்கள் கிடையாது. அங்குள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கூட இங்குள்ள தெய்வங்களை விட சிறந்த குணங்களைக் கொண்டுள்ளன. மிக நீண்ட ஆயுள் இருக்கும், ஆனால் கர்மவினைபடி பிறப்பு–இறப்பின் தண்டனைகள் இருக்கும் மற்றும் கடின உழைப்பால் மட்டுமே வயிற்றை நிரப்பமுடியும். அங்கு சொர்க்கமும், நரகமும் இதேபோல் அமைந்துள்ளன. பரபிரம்மனுக்கு (அக்ஷர் புருஷ்) தனது எளிய முறை தியானத்திற்கு (சஹஜ் சமாதி) பலனாக ஏழு சங்க் பிரபஞ்சங்கள் பரமாத்மா வழங்கினார். மேலும் அந்த பிரபஞ்சங்களை ஒரு வட்டத்திற்குள் தடுத்து, அக்ஷர் பிரம் மற்றும் ஈஸ்வரி மாயா இருவரையும் ஏழு சங்க் பிரபஞ்சங்களுடன் வெளியேற்றினார்.

* பூரண பிரம் (சத்யபுருஷ்), சத்யலோகத்திலுள்ள எண்ணற்ற பிரபஞ்சங்களுக்கும், காலனின் 21 பிரபஞ்சங்களுக்கும் மற்றும் பரபிரம்மனின் ஏழு சங்க் பிரபஞ்சங்களுக்கும் கடவுள் (இறைவன்) ஆவார், அதாவது பரமேஸ்வரர் கவிர்தேவ் அனைத்திற்கும் எஜமானர் ஆவார்.

ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு மற்றும் ஸ்ரீ சிவன் ஆகியோர் தலா நான்கு கரங்கள் மற்றும் 16 கலைகள் கொண்டுள்ளனர். பிரகிருதி தேவி (துர்க்கை) எட்டு கரங்கள் மற்றும் 64 கலைகள் (திறன்) கொண்டுள்ளனர். பிரம்ம காலன் (ஷர் புருஷ்) ஆயிரம் கரங்கள் மற்றும் ஆயிரம் கலைகள் (திறன்) உடையவன் மற்றும் இருபத்தொரு பிரபஞ்சங்களின் கடவுள் ஆவார். பரபிரம்மன் (அக்ஷர் புருஷ்) பத்தாயிரம் கரங்கள் மற்றும் பத்தாயிரம் கலைகள் கொண்டவர் மற்றும் ஏழு சங்க் பிரபஞ்சங்களின் கடவுள் ஆவார். பூரண பிரம் (பரம் அக்ஷர் புருஷ் – சத்யபுருஷ்) அவர்கள் எண்ணற்ற கரங்களும், எண்ணற்ற கலைகளும் உடையவர், மேலும் பிரம்ம காலனின் 21 பிரபஞ்சங்களுக்கும், பரபிரம்மனின் ஏழு சங்க் பிரபஞ்சங்களுக்கும் மற்ற எண்ணற்ற அனைத்து பிரபஞ்சங்களுக்கும் கடவுள் ஆவார். ஒவ்வொரு கடவுளும் தனது அனைத்து கரங்களை மறைத்து இரண்டு கரங்களை மட்டும் வைத்திருக்க முடியும், பின்னர் விரும்பும் போதெல்லாம், அனைத்து கரங்களையும் வெளிப்படுத்த முடியும்.

பரபிரம் உடைய ஒவ்வொரு பிரபஞ்சத்திலும் பூரண பரமாத்மா தனியாக ஒரு இடத்தை உருவாக்கி அதில் வேறு ரூபத்தில் ரகசியமாக வசிக்கிறார். உதாரணமாக நகரும் கேமரா வெளியில் பொருத்தப்பட்டு, டிவி உள்ளே பொருத்தப்பட்டால், உள்ளே இருக்கும் டி.வி.யில், வெளிப்புறத்தில் உள்ள எல்லா காட்சிகளும் தெரியும். இப்போது உள்ளே நிலையான கேமரா பொருத்தப்பட்டு, இரண்டாவது டிவி வெளியே பொருத்தப்பட்டால், வெளியே உள்ள இரண்டாவது டிவியில், உள்ளே அமர்ந்திருக்கும் அதிகாரியின் படம் மட்டுமே தெரியும், இதனால் தொழிலாளர்கள் அனைவரும் விழிப்புடன் இருப்பார்கள். அதேபோல, பூரண பரமாத்மா தனது சத்யலோகத்தில் அமர்ந்துகொண்டே அனைவரையும் கட்டுப்படுத்துகிறார். மேலும் சத்குரு கவிர்தேவ் அவர்கள் ஒவ்வொரு பிரபஞ்சத்திலும் இருக்கிறார். சூரியன், வெகு தொலைவில் இருந்தாலும், மற்ற லோகங்களில் தன் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

# புனித அதர்வண வேதத்தில் படைப்பின் ஆதாரம்

**அதர்வணவேதம் கண்டம் 4 அனுவாக்கியம் 1 மந்திரம் 1:**

ப்$_3$ரஹும் ஜஞானம் ப்ரத$_2$ம் புரஸ்தாத்$_3$ வி சீமத: ஸுருசோ வேன் ஆவ: /
ஸ: பு$_3$த$_4$ந்யா உப்மா அஸ்ய விஷ்டா: ஸதஸ்$^2$ச யோனிமஸ்தஸ்$^2$ச வி வ: //1//

ப்$_3$ரஹும் – ஜ – ஞானம் – ப்ரத$_2$மம் – புரஸ்தாத்$_3$ – விசீமத: – ஸ ுருசோ – வேன: – ஆவ: – ஸ: – பு$_3$த$_4$ந்யா: – உப்மா – அஸ்ய – விஷ்டா: – ஸத: – ச – யோனிம் – அஸ்த: – ச – வி – வ:

**மொழியாக்கம்:–** (ப்ரத$_2$ம்) ஆதிநிலை அதாவது நித்தியமான (பிரம்) கடவுள் (ஜ) தோன்றி (ஞானம்) தனது ஞானத்தால் (புரஸ்தாத்$_3$) மேலே சத்யலோகம் போன்றவைகளை (ஸுருசோ) தனது சொந்த விருப்பத்தால் சுயமாக ஒளிரும் (வி சீமத:) எல்லையற்ற, அதாவது பரந்த எல்லைகளுடன் வெவ்வேறு லோகங்களை படைத்தார். அந்த (வேன:) நெசவாளர் துணியை போல நெசவு செய்து (ஆவ:) பாதுகாக்கிறார் (ச) மற்றும் (ஸ:) அந்த பூரண பிரம் தான் அனைத்தையும் படைக்கிறார் (அஸ்ய) எனவே அதே (பு$_3$த$_4$ந்யா) ஆதி கடவுள் (யோனிம்) சத்யலோகத்தை படைத்தார் (அஸ்ய) இதை (உப்மா) போன்று (ஸத்:) அக்ஷர் புருஷ் அதாவது பரபிரம்மனின் ஓரளவு நித்தியமான லோகங்கள் (ச) மற்றும் (அஸ்த:) ஷர் புருஷின் தற்காலிக லோகங்ககளை (வி வஹ) தனித்தனியாக (விஷ்டா:) நிறுவினார்.

**பொருள் : புனித வேதங்களை கூறிய பிரம்ம காலன் கூறுகிறார், அழிவில்லாத பரமேஸ்வரன் தானே அனாமய லோகத்திலிருந்து சத்திய லோகத்தில் தோன்றி தன் ஆற்றலால் துணிகள் நெய்வது போல சத்யலோகத்தை எல்லையற்ற அழிவற்ற சுயமாக ஒளிரும் லோகமாக படைத்தார். கீழே உள்ள பரபிரம்மனின் ஏழு சங்க் பிரபஞ்சங்களையும், பிரம் உடைய 21 பிரபஞ்சங்களையும் மேலும் அவற்றில் உள்ள நுட்பமான படைப்பை தற்காலிகமாக நிறுவியுள்ளார்.**

**வேண்டுகோள் :– வாசகர்கள், மேலே படங்களில் உள்ள எல்லையை பார்த்து, வேதங்களில் எல்லை இல்லை என்று கூறியுள்ளதால் படங்கள் தவறாக இருக்கும் என்ற சந்தேகம் மனதில் எழும். அதாவது ஒரு லோகம் தான் எல்லையற்றதாக இருக்க முடியும், மற்றவைகளுக்கு அவசியம் எல்லை இருக்கும். எனவே, இறைவனின் லீலை அப்பாற்பட்டது என்பதை தெளிவுபடுத்துகிறேன். அவர் அனாமி லோகத்தை தவிர மற்ற லோகங்களின் எல்லையை மாற்றிக்கொண்டே இருப்பார். அதனால் அவற்றின் எல்லைகள் நிலையானது அல்ல.**

**அதர்வணவேதம் கண்டம் 4 அணுவாக்கியம் 1 மந்திரம் 2**

இயம் பித்ரயா ராஷ்ட்ரயேத்வக்$_3$ரே ப்ரத$_2$மாய் ஜநுஷே பு$_4$வநேஷ்டா$_2$: /
தஸ்மா ஏதம் ஸுருசம் ஹ்வார்மஹ்யம் தர்மம் ஸ்ரீணந்து ப்ரத$_2$மாய
த$_4$ாஸ்யவே // 2 //

இயம்– பித்ரயா – ராஷ்ட்ரி – எது – அக்$_3$ரே – ப்ரத$_2$மாய – ஜநுஷே – பு$_4$வநேஷ்டா$_2$: – தஸ்மா – ஏதம் – ஸுருசம் – ஹவார்மஹ்யம் – த$_3$ர்மம் – ஸ்ரீணாந்து – ப்ரத$_2$மாய –தா$_4$ஸ்யவே

**மொழியாக்கம்:–** (இயம்) இதே (பித்ரயா) பரம பிதா பரமேஸ்வர் (ப்ரத$_2$மாய்) முதன்முதலில் மாயா பராநந்தனி (ராஷ்ட்ரி) ராஜேஸ்வரி சக்தி அதாவது பராசக்தி, எனும் ஈர்ப்பு சக்தியை (ஜநுஷே) உருவாக்கி

(பு$_4$வநேஷ்டா:) லோகங்களை நிறுவினார். (தஸ்மா) அதே பரமேஸ்வரர் (ஸுருசமு்) தன் விருப்பத்தால் (ஏதம்) இந்த (ப்ரத$_2$மாய்) முதலில் படைத்த பராசக்தி மூலம் (ஹவார்மஹ்யம்) ஈர்ப்புசக்தியின் (ஸ்ரீணாந்து) ஈர்ப்பு தன்மையை என்றென்றும் நிலைத்திருக்கும்படி பரமாத்மா கட்டளையிட்டார். அந்த முடிவில்லாத (தர்மம்) தன்மையுடன் (தா$_4$ஸ்யவே) துணிகளை போல நெசவு செய்து நிறுத்தியுள்ளார்.

**பொருள் : உலகப் பிதாவாகிய பரமேஸ்வரர் தனது சபத் சக்தி மூலம் முதன் முதலில் ராஷ்ட்ரி அதாவது ராஜேஸ்வரி மாயாவை உருவாக்கி அதே பராசக்தி மூலம் என்றும் அழியாத ஒன்றோடு ஒன்று ஈர்ப்பு சக்தி கொண்ட குணங்களால் பிரபஞ்சங்களைப் படைத்தார்.**

**அதர்வண வேதம் கண்டம் 4, அனுவாக்கியம் 1 மந்திரம் 3:-**

ப்ர யோ ஜஞே வித்$_3$வாநஸ்ய ப$_3$ந்து$_4$ர்விஸ்வா தே$_3$வாநாம் ஜநிமா விவக்தி/
ப்$_3$ரம் பி$_3$ரம்மணா உஜ்ஜபா$_4$ர் மத்$_4$யான்னீசைருச்சை: ஸ்வதா$_4$ அபி$_4$ ப்ர
தஸ்தெ$_2$ள //3//

ப்ர - ய: - ஜஞே - வித்$_3$வாநஸ்ய - ப$_3$ந்து$_4$ - விஸ்வா - தே$_3$வாநாம் - ஜனிமா - விவக்தி - ப்$_3$ரம: - ப்ரம்மணா: - உஜ்ஜபா$_4$ர் - மத்$_4$யாத் - நீசை: - உச்சை: - ஸ்வதா$_4$ - அபி$_4$: - ப்ரதஸ்தெள /

**மொழியாக்கம்:-** (ப்ர) முதலில் (தே$_3$வாநாம்) தெய்வங்கள் மற்றும் பிரபஞ்சத்தின் (ஜஞே) தோற்றம் பற்றிய ஞானத்தை (வித்$_3$வாநஸ்ய) பக்தரின் ( ப$_3$ந்து$_4$) உண்மையான துணை அதாவது பூரண பரமாத்மா தான் தனது பக்தருக்கு (ஜனிமா) அவரால் உருவாக்கப்பட்டதை (விவக்தி) தானே விரிவாக விளக்குவார். அதாவது (ப்ரம்மணா:) பூரண பரமாத்மா (மத்$_4$யாத்) தனது சபத் சக்தி மூலம் (ப்$_3$ரம:) பிரம் ஷர் புருஷ் அதாவது காலனை (உஜ்ஜபா$_4$ர்) உருவாக்கி (விஸ்வா) சர்வ லோகங்களை (உச்சை:) மேலே சத்யலோகம் போன்றவை (நீசை:) கீழே பரப்பிரம் மற்றும் பிரம் உடைய லோகங்களை (ஸ்வதா$_4$) தனது (அபி$_4$:) ஈர்ப்பு சக்தியால் (ப்ரதஸ்தெள) இரண்டையும் நன்றாக நிறுவினார்.

**பொருள்:- பூரண பரமாத்மா உருவாக்கிய படைப்புகளின் அறிவையும் அனைத்து ஆன்மாக்களின் படைப்பின் அறிவையும் தன் பக்தனுக்கு தானே சரியாக விவரிப்பார். பூரண பரமாத்மா தன் சபத் சக்தியால் தன் உடலிலிருந்து பிரம்மனை (ஷர் புருஷ் - கால்) தோற்றுவித்து மற்றும் மேல் பிரபஞ்சங்கள் சத்யலோகம், அலக் லோகம், அகம் லோகம் மற்றும் அனாமிலோகம் மற்றும் கீழே பரபிரம்மனின் 7 சங்க் பிரபஞ்சங்களும், பிரம் உடைய 21 பிரபஞ்சங்களையும் ஈர்ப்பு சக்தி கொண்டவைகளாகப் படைத்தார்.**

**பூரண பரமாத்மா கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்) தனது சேவகனான ஸ்ரீ தரம்தாஸ் ஜி மற்றும் மரியாதைக்குரிய கரிப்தாஸ் ஜி ஆகியோருக்கு, தான் உருவாக்கிய படைப்பின் அறிவை தானே கூறியுள்ளார். மேற்கூறிய மந்திரமும் இதையே கூறுகிறது.**

**அதர்வண வேதம் கண்டம் 4 அனுவாக்கியம் 1 மந்திரம் 4**

ச: ஹி தி$_3$வ: ச: ப்ரத்$_2$தி$_2$வ்யா ரிதஸ்தா$_2$ மஹீ ஷேமம் ரோத$_3$ஸீ அஸ்கபா$_4$யத்/
மஹான் மஹி அஸ்கபா$_4$யத்$_3$ வி ஜாதோ த்$_3$யாம் ஸா பார்தி$_2$வம் ச ரஜ: //4//

ஹி - திவ: - ச: - ப்ரத்$_2$தி$_2$வ்யா - ரிதஸ்த$_2$ா - மஹீ - ஷேமம் -

ரோத$_3$ஸீ - அஸ்கபா$_4$யத் - மஹான் - மஹி - அஸ்கபா$_4$யத்$_3$ - விஜாத்: - தா$_4$ம் - சத$_3$ம் - பார்தி$_2$வம் - ச - ரஜ:

**மொழிபெயர்ப்பு:-** (ச) அந்த சர்வ சக்தியுள்ள பரமாத்மாவே (ஹி) சந்தேகமின்றி (திவ:) மேலே உள்ள நான்கு தெய்வீக குணங்கள் கொண்ட லோகங்களான சத்யலோகம், அலக் லோகம், அகம் லோகம் மற்றும் அனாமி அதாவது ஆகஹ லோகத்தை (ரிதஸ்த$_2$ா) நித்தியமான வடிவத்தில் நிறுவினார் (ச) அவற்றைப் போலவே (ப்ரத்$_2$தி$_2$வ்யா) கீழே பரபிரம் உடைய ஏழு சங்க் மற்றும் பிரம் உடைய 21 பிரபஞ்சங்களை (மஹி) பூமி தாது மூலம் (க்ஷேமம்) பாதுகாப்புடன் (அஸ்கபா$_4$யத்) நிறுவினார் (ரோத$_3$ஸீ) ஆகாயம் மற்றும் பூமியின் தத்துவத்தால் மேலே மற்றும் கீழே உள்ள பிரபஞ்சங்களை **{**அதாவது, ஆகாயம் ஒரு நுட்பமான தாது, ஆகாயத்தின் குணம் சபத் ஆகும், பூரண பரமாத்மா மேல் லோகங்களை சப்த வடிவில் பிரகாசமான ஒளியை கொண்டு படைத்தார் மற்றும் கீழே உள்ள பரபிரம்மத்தின் (அக்ஷர் புருஷ்) ஏழு சங்க் பிரபஞ்சங்களும், பிரம்மனின் (க்ஷர புருஷின்) 21 பிரபஞ்சங்களும் பூமியின் தாதுவால் தற்காலிகமாக படைத்தார்**}** (மஹான்) பூரண பரமாத்மா (பார்தி$_2$வம்) பூமி போன்ற (வி) வெவ்வேறு (தா$_4$ம்) லோகங்களை (மஹி) பூமி தாதுவால் (ரஜ:) ஒவ்வொரு பிரபஞ்சத்திலும் உள்ள சிறிய லோகங்களை (ஜாத்) படைத்து (அஸ்கபா$_4$யத்$_3$) நிறுவினார்.

**பொருள் : அதே பூரண பரமேஸ்வரர் மேலே நான்கு லோகங்களான சத்யலோகம், அலக் லோகம், அகம் லோகம் மற்றும் அனாமி லோகம் ஆகியவற்றை அழிவில்லாததாக படைத்துள்ளார். மேலும் கீழே பிரம் மற்றும் பரபிரம் உடைய லோகங்களையும் மற்ற சிறிய லோகங்களையும் அழியக்கூடியதாக உருவாக்கியுள்ளார்.**

**அதர்வண வேதம் கண்டம் 4 அனுவாக்கியம் 1 மந்திரம் 5**

ஸ: பு$_3$த$_4$ன்யாத$_3$ாஷ்ட்ர ஜநுஷோஅப்$_4$யங்க்$_3$ர ப்$_3$ரஹஸ்பதிர்தே$_3$வதா
தஸ்ய சம்ராட் / அஹர்யச்சு$_2$க்ரம் ஜ்யோதிஷோ ஜநிஷ்டாத்$_2$ த$_4$யுமந்தோ
வி வசந்து விப்ரா: // 5 //

ஸ: - பு$_3$த$_4$ன்யாத் - ஆஷ்ட்ர - ஜநுஷே - அபி$_4$ - அக்$_3$ரம் - ப்$_3$ரஹஸ்பதி: - தே$_3$வதா - தஸ்ய - சம்ராட் - அஹ: - யத் - ஸுக்ரம் - ஜ்யோதிஷ: - ஜநிஷ்ட - அத$_2$ - த$_4$யுமந்த: - வி - வசந்து - விப்ரா: /

**மொழிபெயர்ப்பு:-** (ச:) அதே (பு$_3$த$_4$ன்யாத்) எஜமான் மூலம் (அபி$_4$ - அக்$_3$ரம்) முதல் ஸ்தானத்தில் (ஆஷ்ட்ர) அஷ்டங்கி மாயா துர்க்கை அதாவது பிரகிருதி தேவி (ஜநுஷே) உருவானது, ஏனென்றால் கீழே பரபிரம்மன் மற்றும் பிரம் உடைய முந்தைய இடம் சத்யலோகம் ஆகும், (தஸ்ய) இந்த துர்க்கையின் எஜமானரும் (சம்ராட்) ராஜாதிராஜ (ப்$_3$ரஹஸ்பதி:) எல்லோரைவிட பெரிய எஜமானர் உலக குரு (தே$_3$வதா) பரமேஸ்வர் ஆவார். (யத்) இவர் மூலம் (அஹ:) அனைவரும் பிறந்தனர் (அத்) இதன் பிறகு (ஜ்யோதிஷ:) ஜோதி நிரஞ்சன் அதாவது காலனின் (ஸுக்ரம்) வீரிய சக்தியால் (ஜநிஷ்ட) துர்க்கையின் கருவிலிருந்து பிறந்த (விப்ரா:) ஆன்மாக்களை (வி) தனியாக (த$_4$யுமந்த:) மனித லோகத்திலும் சொர்க்கத்திலும் ஜோதி நிரஞ்சனின் உத்தரவால், துர்க்கை வசிக்கச்

சொன்னாள், அதாவது ஆன்மாக்கள் வசிக்க ஆரம்பித்தன.

**பொருள் :- மேலுள்ள நான்கு லோகங்களில், சத்யலோகத்தில் அஸ்டிரா அதாவது அஷ்டங்கியை (பிரகிருதி தேவி-துர்க்கை) பூரண பரமாத்மா படைத்தார். இவர்தான் ராஜாதிராஜ, உலககுரு, பூரண பரமேஸ்வர் (சத்யபுருஷ்) இவரிடமிருந்து அனைவரும் பிறந்துள்ளன. பின்னர் அனைத்து உயிர்களும் ஜோதி நிரஞ்சனின் (காலன்) விதையிலிருந்து துர்க்கையின் (அஷ்டிரா) கருவின் மூலம் பிறந்து சொர்கலோகத்திலும் பூமியிலும் வாழத் தொடங்கின.**

**அதர்வண வேதம், கண்டம் 4 அனுவாக்கியம் 1 மந்திரம் 6**

நூநம் தத$_3$ஸ்ய காவ்யோ ஹிநோதி மஹோ தே$_3$வஸ்ய பூர்வயஸ்ய த$_4$ாம்/
ஏஷ ஜஜ்ஞே ப$_3$ஹுரூபி$_4$: ஸாகமித்த$_2$ா பூர்வே அர்தே$_4$ விஷிதே ஸஸன் நு //6//

நூநம் - தத் - அஸ்ய - காவ்ய: - மஹ: - தே$_3$வஸ்ய - பூர்வயஸ்ய - த$_4$ாம் - ஹிநோதி - பூர்வே - விஷிதே - ஏஷ - ஜஜ்ஞே - ப$_3$ஹுரூபி$_4$: - ஸ ாகம் - இத்தா$_2$ - அர்தே$_4$ - ஸஸன் - நு /

**மொழிபெயர்ப்பு:-** (நூநம்) சந்தேகமின்றி (தத்) அந்த பூரண பரமேஸ்வர் அதாவது தத் பிரம் மட்டுமே (அஸ்ய) இந்த (காவ்ய:) பக்தனை, பூரண பரமேஸ்வரனின் பக்தியை முறைப்படி செய்பவனை (மஹ:) சர்வவல்லமையுள்ள (தே$_3$வஸ்ய) பரமேஸ்வரனின் (பூர்வயஸ்ய) முந்தைய (த$_4$ாம்) லோகம் அதாவது சத்யலோகத்திற்கு (ஹிநோதி) அனுப்புகிறார். (பூர்வே) முந்தைய (விஷிதே) விசேஷமாக விரும்பியவர்கள் (ஜஜ்ஞே) பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய ஞானம் அறிந்து (ஏஷ்) இந்த பரமேஸ்வரனை (ப$_3$ஹுரூபி$_4$:) மிகுந்த (ஸாகம்) மகிழ்ச்சியுடன் (இத்தா$_2$) முறையாக இவ்வாறு (நு) துதிக்கிறார்கள்.

**பொருள் : அதே பூரண பரமேஸ்வரர், உண்மையான வழிபாடு செய்யும் பக்தரை, பிரிந்து வந்த அதே முந்தைய லோகத்திற்கு (சத்யலோகம்) அழைத்துச் செல்கிறார். அங்கு உண்மையான சுகம்தரும் பிரபுவை அடைந்ததும், ஆன்மாக்கள் மகிழ்ச்சியில் மூழ்கி புகழ்கிறார்கள், இறைவனே எண்ணற்ற பிறவிகளாக தொலைந்தவர்களுக்கு உண்மையான இருப்பிடம் கிடைத்துவிட்டது. இதன் ஆதாரம் புனித ரிக்வேதம் மண்டலம் 10 சுக்தம் 90 மந்திரம் 16 இல் கூட உள்ளது.**

**இதே போல, மரியாதைக்குரிய கரீப்தாஸ் ஜி அவர்களுக்கு பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) உண்மையான பக்தி அளித்து சத்தியலோகம் அழைத்துச் சென்றார். பின்னர் தனது புனித உரையில் மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜி மகராஜ் கூறினார்: -**

கரீப், அஜப் நகர் மே லே கயே, ஹம்குன் சத்குரு ஆன் /
ஜில்கே பிம்ப் ஆகாத் கதி, சுதே சாதர் தான் //

**அதர்வண வேதம் கண்டம் 4 அனுவாக்கியம் 1 மந்திரம் 7**

யோத$_2$ர்வாணம் பித்ரம் தே$_3$வப$_3$ந்து$_4$ம் ப$_3$்ரஹஸ்பதிம் நமசாவ் ச க$_3$ச்ச$_2$ாத்/
த்வம் விஸ்வேஷாம் ஜநிதா யத$_2$ாஸ: கவிர்தே$_3$வோ ந த$_3$ப$_4$ாயத் ஸ்வத$_4$ாவான் //7//

ய: - அத$_2$ர்வாணம் - பித்ரம் - தே$_3$வப$_3$ந்து$_4$ம் - ப$_3$்ரஹஸ்பதிம் - நம்சா - அவ் - ச - க$_3$ச்ச$_2$ாத் - த்வம் - விஸ்$^2$வேஷாம் - ஜநிதா - யத$_2$ா - ஸ: - கவிர்தே$_3$வ: - ந - த$_3$ப$_4$ாயத் - ஸ்வத$_4$ாவான் /

**மொழிபெயர்ப்பு:-** (ய:) அந்த (அத$_2$ர்வாணம்) மாறாத அதாவது அழியாத (பித்ரம்) பரம பிதா (தே$_3$வப$_3$ந்து$_4$ம்) ஆன்மாவின் உண்மையான துணை (ப்$_3$ரஹஸ்பதிம்) எல்லோரையும்விட பெரிய ஞானி உலக குரு (ச) மற்றும் (நம்சா) பணிவான முறையான சாதகனை (அவ்) பாதுகாப்புடன் (க$_3$ச்ச$_2$ாத்) சத்யலோகம் சென்றவர்களை அதாவது பூரண முக்தி அடைந்தவர்களை சத்யலோகத்திற்கு அழைத்து சென்றவர் (விஸ்$^2$வேஷாம்) அனைத்து பிரபஞ்சங்களையும் (ஜநிதா) உருவாக்கிய ஜக்தாம்பா அதாவது ஒரு தாயின் குணங்கள் உடையவர் (ந த$_3$ப$_4$ாயத்) காலனை போல ஏமாற்றாத (ஸ்வத$_4$ாவான்) சுபாவம் குணங்கள் கொண்டவர் (யத$_2$ா) அவர் (த்வம்) நீங்களே (கவிர்தே$_3$வ:) கவிர்தேவ், பல்வேறு மொழிகளில் கபீர் பரமேஷ்வர் என்றும் அழைக்கப்படுகிறது.

**பொருள்:- இந்த மந்திரத்தில் அனைத்தையும் படைத்த அந்த பரமேஸ்வரருடைய பெயர் கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வரர் என்று தெளிவாகிறது.**

**மாறாத அதாவது உண்மையில் அழியாதவர் (கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16-17 லிலும் இதன் ஆதாரம் உள்ளது), பிரபஞ்சத்தின் குரு (ஜகத் குரு), ஆன்மாவின் துணை, பூரண முக்தி அடைந்த பிறகு சத்யலோகத்திற்கு கொண்டு செல்பவர், எல்லாப் பிரபஞ்சங்களையும் படைத்தவர், காலனை (பிரம்) போல ஏமாற்றாதவர் அவரே கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வரர் ஆவார். இதே பரமேஸ்வரர், தனது சபத் சக்தியால் எல்லா பிரபஞ்சங்களையும், உயிர்களையும் படைத்ததால் (ஜனிதா) தாய் என்றும் (பித்ரம்) தந்தை என்றும் அழைக்கப்படுகிறார், மேலும் (பந்து) சகோதரரும் (தேவ்) பரமேஸ்வரரும் இவர்தான். அதனால்தான் இந்த கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) போற்றப்படுகிறார். அன்னையும் நீயே, தந்தையும் நீயே, உறவும் நீயே, நண்பனும் நீயே, அறிவும் நீயே, செல்வமும் நீயே, எந்தன், ஆதி தேவனும் நீயே. புனித ரிக்வேதம் மண்டலம் 1 சுக்தம் 24ல் இதே பரமேஸ்வரரின் மகிமை விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.**

## புனித ரிக்வேதத்தில் படைப்பின் ஆதாரம்

### ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 90 மந்திரம் 1

ஸஹஸ்த்ரஸீ$^2$ர்ஷா புருஷ: ஸஹஸ்த்ராக்ஷ்: ஸஹஸ்த்ரபாத் /
ஸ பூ$_4$மிம் விஸ்வதோம் வ்ரத்வாத்யதிஷ்ட$_2$த$_4$ஸாங்கு$_3$லம் // 1 //

ஸஹஸ்த்ரஸீர்ஷா - புருஷ்: - ஸஹஸ்த்ராக்ஷ்: - ஸஹஸ்ரபாத் - ஸ - பூ$_4$மிம் - விஸ்$^2$வத: - வ்ரத்வா - அத்யாதிஷ்ட$_2$த் - த$_3$ஸா$^2$ங்கு$_3$லம்.

**மொழிபெயர்ப்பு:-** (புருஷ்:) விஸ்வ ரூபமான கால் பகவான் அதாவது ஷர் புருஷ் (ஸஹஸ்த்ரஸீர்ஷா) ஆயிரம் தலைகளை உடையவன் (ஸஹஸ்த்ராக்ஷ்:) ஆயிரம் கண்கள் உடையவர் (ஸஹஸ்ரபாத்) ஆயிரம் கால்கள் உடையவர் (ச) அந்த கால் (பூ$_4$மிம்) பூமியின் இருபத்தொரு பிரபஞ்சங்களை (விஸ்$^2$வத:) எல்லா பக்கங்களிலும் இருந்தும் (த$_3$ஸ ா$^2$ங்கு$_3$லம்) பத்து விரல்களால் அதாவது முழுமையாக கட்டுப்படுத்துவதன் மூலம் (வ்ரத்வா) சுற்றி வளைத்து (அத்யாதிஷ்ட$_2$த்) அதற்கும் மேலே தனித்தனியாக அமைந்துள்ள இருபத்தியோராம் பிரம்மாண்டத்தில் தனது கால் லோகத்தில் வசிக்கிறார்.

பொருள்: இந்த மந்திரத்தில் காலனின் (பிரம்) விஸ்வரூபம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. (கீதை அத்தியாயம் 10, 11 இலும், இதேபோல காலனை பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. அத்தியாயம் 11, மந்திரம் 46 இல், அர்ஜுனன் சொல்கிறான், ஆயிரம் கரங்கள் கொண்டவரே, நீங்கள் மீண்டும் நான்கு கரங்களுடன் காட்சி தாருங்கள்)

ஆயிரம் தலைகள் ஆயிரம கால்கள், மற்றும் ஆயிரம் கண்கள் – காதுகள் கொண்ட விஸ்வரூபமான காலன் (ஷர் புருஷ்), தனக்குக் கீழ் உள்ள அனைத்து ஆன்மாக்களை முழுமையாகக் கட்டுப்படுத்தி, அதாவது 20 பிரபஞ்சங்களையும் வட்டப்பாதையில் நிறுத்தி, தான் இதற்கு மேல் தனியாக உள்ள 21 ஆவது பிரபஞ்சத்தில் அமர்ந்துள்ளார்.

**ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 90, மந்திரம் 2**

புருஷ் ஏவேத$_3$ம் ஸர்வம் யத்$_3$பூ$_4$தம் யச்ச ப$_4$ாவ்யம் /
உதாம்ரதத்வஸ்யேஸாநோ யத$_3$ன்னேநாதிரோஹதி //2//

புருஷ் – ஏவ – இத$_3$ம் – ஸர்வம் – யத் – பூ$_4$தம் – யத் – ச – பா$_4$வ்யம் – உத் – அம்ருதத்வஸ்ய – இஸான: – யத் – அன்நேன் – அதிரோஹதி

**மொழிபெயர்ப்பு:–** (எவ) இதே போல ஓரளவு (புருஷ்) கடவுளாக இருப்பவன் அக்ஷர் புருஷ் அதாவது பரபிரம் (ச்) மற்றும் (யத்) மேலும் (இத$_3$ம்) இந்த (பூ$_4$தம்) பிறவி எடுத்தவனும் (பா$_4$வ்யம்) எதிர்காலத்திலும் பிறவி எடுப்பவன் (ஸர்வம்) அனைவரும் (யத்) கடின உழைப்பால் (அன்நேன்) உணவு மூலம் (அதிரோஹதி) வளர்ச்சி அடைகின்றன. இந்த அக்ஷர் புருஷ் (உத்) சந்தேகமான (அம்ருதத்வஸ்ய) முக்தியை தரும் (இஸான:) கடவுள், அதாவது, அக்ஷர் புருஷ் கூட ஒரு கடவுள் போன்றவர், ஆனால் பூரண மோட்சத்தை கொடுப்பவர் அல்ல.

பொருள் : இந்த மந்திரத்தில், கடவுளின் சில குணங்களைக் கொண்ட பரபிரம் (அக்ஷர் புருஷ்) பற்றிய விளக்கம் உள்ளது, ஆனால் அவருடைய பக்தியால் பூரண முக்தி ஆகாது. எனவே அவர் சந்தேகத்திற்குரிய முக்தி பகவான் எனப்படுவர். காலனை போலவே அக்னி பாறையில் வறுத்து உண்ணாததால், இவரை கடவுளின் சில குணங்கள் கொண்டவர் என கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த பரபிரம்மனின் லோகத்திலும் உயிர்கள் கடினமாக உழைத்து, தங்கள் கர்மவினைபடி பலன்களைப் பெறுகின்றன மற்றும் அனைத்து உயிரினங்களின் உடல்களும் உணவிலிருந்தே வளர்ச்சியடைகின்றன. மேலும் பிறப்பு மற்றும் இறப்பு காலம் காலனை விட அதிகமாக இருந்தாலும் 84 லட்சம் உயிரினங்கள் மூலம் மறுபிறப்பு சுழற்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது.

**ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 90 மந்திரம் 3**

ஏதாவாநஸ்ய மஹிமாதோ ஜ்யாயாங்ஸ்ச புருஷ: /
பாதே$_3$ாஸ்ய விஸ்வா பூ$_4$தானி த்ரிபாத$_3$ஸ்யாம்ரதம் தி$_3$வி // 3 //

தாவான் – அஸ்ய – மஹிமா – அத: – ஜ்யாயாந் – ச – புருஷ: – பாத$_3$: – அஸ்ய – விஸ்வா – பூ$_4$தானி – த்ரி – பாத$_3$ – அஸ்ய – அம்ருதம் – தி$_3$வி /

**மொழிபெயர்ப்பு:–** (அஸ்ய) இந்த அக்ஷர் புருஷ் அதாவது பரபிரம்மனின் (மஹிமா) திறன் (தாவான்) இவ்வளவுதான் (ச) மற்றும் (புருஷ:) அந்த பரம் அக்ஷர் பிரம் அதாவது பூரண பிரம் பரமேஸ்வரர் (அத:) இவரை விட (ஜ்யாயாந்) மிக பெரியவர் (விஸ்வா) அனைவரும்

அதாவது (பூ$_4$தானி) ஷர் புருஷ் மற்றும் அக்ஷர் புருஷ் மற்றும் இவர்களுடைய லோகங்களில் உள்ளவர்கள் மற்றும் சத்யலோகமும் இதில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் (அஸ்ய) அந்த பூரண பரமாத்மா பரம் அக்ஷர் புருஷின் (பாத$_3$:) ஒரு பாதம் ஆகும் அதாவது ஒரு அங்கம் ஆகும் (அஸ்ய) இந்த பரமாத்மாவின் (திரி) மூன்று (தி$_3$வி) திவ்ய லோகமான சத்தியலோகம், அலக் லோகம், அகம் லோகம் (அம்ருதம்) அழியாதது (பாத$_3$) இரண்டாம் பாதம் ஆகும், அதாவது அனைத்து பிரபஞ்சங்களில் உருவானவை சத்யபுருஷ் பூரண பரமாத்மாவின் அங்கம் ஆகும்.

**பொருள் : மேலே மந்திரம் 2ல் கூறிய அக்ஷர் புருஷின் (பரபிரம்) மகிமை இவ்வளவு தான் மற்றும் பூரண புருஷ் கவிர்தேவ் இவரை விட சக்திவாய்ந்தவர் அதாவது சர்வ வல்லமை படைத்தவர் மற்றும் அனைத்து பிரபஞ்சங்களும் அவரால் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த மந்திரத்தில் மூன்று லோகங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன, ஏனென்றால் நான்காவதான அனாமி (அநாமே) லோகம் எல்லாவற்றிற்கும் முந்தையதாகும். இந்த மூன்று பிரபுக்களின் விளக்கம் (ஷர் புருஷ் – அக்ஷர் புருஷ் மற்றும் இவை இரண்டையும் தவிர பரம் அக்ஷர் புருஷ்) ஸ்ரீமத் பகவத் கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16, 17 இல் கொடுக்கப்பட்டுள்ளது.**

**[இதன் ஆதாரமாக மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாஹேப் ஜி கூறுகிறார்:–**

கரீப், ஜாகே அர்த ரூம் பர் சகல் பசாரா, ஐசா பூரண் பிரம் ஹமாரா //
கரீப், அனந்த் கோடி பிரம்மாண்ட் கா, ஏக் ரதி நஹின் பார் /
சத்குரு புருஷ் கபீர் ஹைன், குல் கே சர்ஜன்ஹார் //

**மதிப்பிற்குரிய தாது சாஹிப் ஜியும் இதே ஆதாரத்தை அளிக்கிறார்.**

ஜின் மோகு நிஜ் நாம் தியா, சோயீ சத்குரு ஹமார் /
தாது தூஸ்ரா கோயீ நகீம், கபீர் சர்ஜன்ஹார் //

**மதிப்பிற்குரிய நானக் சாஹிப் ஜி அதன் ஆதாரங்களை அளிக்கிறார்.**

யக் அர்ஜ் குப்தம் பேஷ் தோ தர் கூன் கர்தார் /
ஹக்கா கபீர் கரீம் தூ, பேஏப் பர்வர்திகார் //

**குரு கிரந்த சாகேப், பக்கம் என். 721 . மேஹலா 1, ராக திலங்**

**"கூன் கர்தார்" என்றால் அனைத்தையும் படைத்தவர், அதாவது சபத் சக்தியால் படைக்கும் இறைவன், "ஹக்கா கபீர்" என்றால் சத் கபீர், "கரீம்" என்றால் இரக்கமுள்ளவர், "பர்வர்திகார்" என்றால் இறைவன்.]**

**ரிக் வேதம் மண்டலம் 10 சூக்தம் 90 மந்திரம் 4**

த்ரிபாதூ$_3$ர்த்$_4$வ உதை$_3$த்புருஷ: பாதே$_3$ாஸ்யேஹாப$_4$வத்புன: /
ததோ விஷ்வ நவ்யக்ராமத்ஸாஸ்நானஸ்நே அபி$_4$ //4//

த்ரி – பாத்$_3$ – ஊர்த்$_4$வ: – உதை$_3$த் – புருஷ: – பாத$_3$: – அஸ்ய – இஹ – அப$_4$வத் – புந: – தத: – விஸ்வநா – வ்யக்ராமத் – ஸ: – அஸ்நானஸ்நே –அபி$_4$ /

**மொழிபெயர்ப்பு:–** (புருஷ:) இந்த பரம் அக்ஷர் பிரம் அதாவது அழிவற்ற பரமாத்மா (ஊர்த்$_4$வ:) மேலே (த்ரி) மூன்று லோகங்கள் சத்யலோகம், அலக் லோகம், அகம் லோகத்தில் (பாத்$_3$) ஒரு பாதமாக அதாவது மேல் பகுதியில் (உதை$_3$த்) தோன்றுகிறார் அதாவது வசிக்கிறார் (அஸ்ய) இந்த பரமாத்மா பூரண பிரம் உடைய (பாத$_3$:) இன்னொரு பாதமாக இந்த உலகத்தில் (புந:) மீண்டும் (இஹ) இங்கு (அப$_4$வத்) தோன்றுகிறார் (தத:) அதனால்தான் (ஸ:)

அந்த அழிவற்ற பூரண பரமாத்மா (அஸ்நானஸ்நே) விழுங்குபவன் கால் அதாவது ஷர் புருஷ், மற்றும் விழுங்காத பரபிரம் அதாவது அக்ஷர் புருஷ் விட (அபி$_4$) மேலே (விஸ்வநா) எங்கும் (வ்யக்ராமத்) நிறைந்தவர், அதாவது அவர் அனைத்து பிரபஞ்சங்கள் மற்றும் அனைத்து கடவுள்கள் மீதும் அதிகாரம் கொண்டவர் அண்டத்தின் எஜமானர், எல்லோர் மீதும் தன் சக்தியைப் நிறுவியவர்.

**பொருள்:- அனைத்து படைப்புகளையும் படைத்த கடவுள், தன்னுடைய படைப்பின் மேல் பகுதியில் உள்ள மூன்று லோகங்களிலும் (சத்யலோகம், அலக்லோகம், அகம்லோகம்) தானே மூன்று ரூபங்களாக இருக்கிறார். அனாமி லோகம் இங்கு விவரிக்கப்படவில்லை, ஏனெனில் அனாமி லோகத்தில் எந்த படைப்பும் இல்லை, மற்றும் அனாமி (ஆகஹ் -அநாமய-அநாமி) லோகம் மற்ற படைப்புகளுக்கு முந்தையது. மேலும் அதே பரமாத்மாவின் சத்யலோகத்திலிருந்து பிரிந்து கிழே பிரம் மற்றும் பரபிரம் லோகங்கள் உருவாகின. அந்த பூரண பரமாத்மா, உண்பவனான பிரம்ம காலன் (ஏனென்றால் விஸ்வரூப காலன் சாபத்தால் ஒரு லட்சம் மனித உயிர்களை சாப்பிடுகிறான்) மற்றும் பரபிரம் அதாவது உண்ணாத அக்ஷர் புருஷ் (பரபிரம் உயிர்களை உண்ணுவதில்லை, ஆனால் கர்மவினைபடி பிறப்பு-இறப்பு அப்படியே இருக்கும்) இருவரைவிட மிக உயர்ந்தவர், எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளார் அதாவது, இந்த பூரண பரமாத்மாவின் சக்தி அனைத்துக்கும் மேலானது, கபீர் பரமேஸ்வரரே அனைத்தின் எஜமானர் ஆவார். சூரியன் தன் ஒளியால் அனைவரையும் தாக்குவது போல், பூரண பரமாத்மா தனது சக்தியை அனைத்து பிரபஞ்சங்களில் பரப்பியுள்ளார். உதாரணத்திற்கு மொபைல் போனின் டவர் ஒரு பகுதியில் இருந்தாலும், அதன் சக்தியை நான்கு திசைகளிலும் விரிவுபடுத்துகிறது. அதுபோலவே, பூரண பிரபு தனது உருவமற்ற சக்தியை எல்லா இடங்களிலும் பரவச் செய்துள்ளார், இதன் மூலம் பூரண பரமேஸ்வர் ஒரே இடத்தில் அமர்ந்து அனைத்து பிரபஞ்சங்களையும் கட்டுப்படுத்துகிறார்.**

**இதையே மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாகேப் நிரூபிக்கிறார்.**

தீன் சரண் சிந்தாமணி சாகேப், ஷேஷ் பதன் பர் சாயே /
மாதா, பிதா, குல் ந பந்து, நா கின்ஹே ஜனனி ஜாயே //

**ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 90 மந்திரம் 5**

தஸ்மாத்$_3$விராதஜாயத் விராஜோ அதி$_4$ புருஷ: /
ஸ ஜாதோ அத்யரிச்யத் பஷ்சாத்$_3$பூமிமதோ$_2$ பூர: // 5 //

தஸ்மாத் - விராட் - அஜாயத் - விராஜ: - அதி$_4$ - புருஷ: - ஸ - ஜாத: - அத்யரிச்யத் - பஷ்சாத் - பூ$_4$மிம் - அத$_2$: - பூர:

**மொழிபெயர்ப்பு:-** (தஸ்மாத்) அதன்பின், அந்த சத்யபுருஷின் சபத் சக்தியால் (விராட்) விராட் அதாவது பிரம், இவரை ஷர்புருஷ் மற்றும் கால் என்று அழைக்கப்படுபவர் (அஜாயத்) உருவானார் (பஷ்சாத்) இதன் பிறகு (விராட்) விராட் புருஷ் அதாவது கால பகவானைவிட (அதி$_4$) பெரிய (புருஷ:) பரமேஸ்வர் (பூ$_4$மிம்) பூமி லோகம் மற்றும் கால் பிரம் மற்றும் பரபிரம் உடைய லோகங்களை (அத்யரிச்யத்) நன்றாக படைத்தார் (அத$_2$:) பிறகு (புர:) மற்ற சிறிய லோகங்களை (ச) அந்த பூரண பரமேஸ்வர் தான் (ஜாத:) படைத்தார்.

**பொருள் : மேற்கூறிய நான்காவது மந்திரத்தில் குறிப்பிட்டுள்ள**

மூன்று லோகங்களை (அகம்லோகம், அலக் லோகம் மற்றும் சத்யலோகம்) படைத்த பிறகு, பூரண பரமாத்மா ஜோதி நிரஞ்சனை (பிரம்) படைத்தார், அதாவது அதே சர்வ வல்லமையுள்ள பரமாத்மா பூரண பிரம் கவிர்தேவ் (கபீர் பிரபு) அவர்களால் விராட் அதாவது பிரம்ம காலன் படைக்கப்பட்டார். கீதை அத்தியாயம் 3 மந்திரம் 15ல், அக்ஷர் புருஷ் அதாவது அழிவற்ற பிரபுவால் பிரம் படைக்கப்பட்டார் என ஆதாரம் உள்ளது. இதே ஆதாரம் அதர்வண வேதம் கண்டம் 4 அனுவாக்கியம் 1, சூக்தம் 3ல் உள்ளது: பூரண பிரம்மிடமிருந்து பிரம்ம காலன் உருவானார். அதே பூரண பிரம் அனைத்து லோகங்களையும் படைத்தார். பூரண பிரம் இந்த விராட் பகவானை (பிரம்) விட வல்லமை கொண்டவர், அதாவது பிரம் உடைய எஜமானர் ஆவார்.

**ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 90 மந்திரம் 15**

ஸப்தாஸ்யாஸன்பரித$_4$யஸ்த்ரி: ஸப்த ஸமித$_4$: க்ரதா: /
தேவா யத்$_3$யக்ஞும் தன்வாநா அப்$_3$த$_4$நன்புருஷம் பஷூம் // 15 //

ஸப்த - அஸ்ய - ஆசன் - பரித$_4$ய: - த்ரிசப்த - ஸமித$_4$: - க்ரதா: - தேவா - யத் - யக்ஞும் - தன்வானா: - அப$_3$த்$_4$நன் - புருஷம் - பஸூ$^2$ம் /

**மொழிபெயர்ப்பு:-** (ஸப்த) பரபிரம் உடைய ஏழு சங்க் பிரபஞ்சமும் (த்ரிசப்த) கால்-பிரம் உடைய இருபத்தொரு பிரபஞ்சமும் (ஸமித$_4$:) பாவ செயல்களின் தண்டனையாக சித்திரவதை (க்ரதா:) செய்வதர்க்கு (பரித$_4$ய:) வட்ட வடிவான எல்லைகளில் (ஆசன்) நிலைத்திருக்கிறது (புருஷம்) பூரண பரமாத்மாவின் (யக்ஞும்) முறையான வழிபாடு செய்பவனை (பஸூ$^2$ம்) பலியாகும் பசு போல காலனின் வலையில் கர்மவினையில் சிக்கிய (தேவா) பக்தியுள்ள ஆன்மாக்களை (தன்வானா:) காலனால் உருவாக்கப்பட்டு பரப்பிய பாவச் செயலின் கர்மவினை எனும் வலையின் (அப$_3$த்$_4$நன்) பிடியிலிருந்து விடுவிக்கிறார் அதாவது பந்தத்திலிருந்து விடுவிப்பவர் பந்திசோட் ஆவார்.

பொருள்:- பரபிரம்மனின் ஏழு சங்க் பிரபஞ்சங்களில் மற்றும் பிரம் உடைய 21 பிரபஞ்சங்களின் வட்ட எல்லைக்குள் சிக்கி பாவ கர்ம நெருப்பில் வாடுகின்ற பிராணிகளுக்கு உண்மையான வழிபாட்டு முறையை காட்டுகிறார். பலியிடப்படும் பிராணிகளைப் போல, பிறப்பு-இறப்பு மற்றும் பிரம்ம காலனின் உணவாக தபத்ஷிலா (அக்னி பறை) மீது வாடும் பிராணிகளை காலனின் கர்மவினை எனும் கோட்டையை உடைத்து அவர் விடுவிக்கிறார் அதாவது பந்தங்களிலிருந்து விடுவிப்பவர், பந்திசோர் ஆவார். இதன் ஆதாரம் புனித யஜுர்வேதம் அத்தியாயம் 5 மந்திரம் 32 இல், “கவிரங்காரிசி பம்பாரிசி” என்று உள்ளது. பொருள் : (கவிர்) கபீர் பரமேஷ்வரர் (ஆங்) பாவத்தின் (ஆரி) எதிரி (அசி) ஆவார், அதாவது கபீர் பாவங்களை அழிப்பவர். (பாம்பரி) பந்தங்களின் எதிரி, அதாவது கபீர் பரமேஸ்வரர் பந்தி சோர் (அசி) ஆவார்.

**ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 90 மந்திரம் 16**

யஞேன் யக்ஞுமயஜந்த் தே$_3$வாஸ்த்தாநி த$_4$ர்மாணி ப்ரத்$_2$மாந்யாசன் /
தே ஹ நாகம் மஹிமான்: ஸசந்த யத்ர பூர்வே ஸாத்$_4$யா: சந்தி தே$_3$வா: //16//

யஞேன் - அயக்ஞும் - அ - யஜந்த் - தே$_3$வ: - தாநி - த$_4$ர்மாணி - ப்ரத்$_2$மாநி - ஆசன் - தே - ஹ - நாகம் - மஹிமான: - ஸசந்த் - யத்ர - பூர்வே - சாத்$_4$யா: - சந்தி - தேவா: /

மொழிபெயர்ப்பு:– (தே$_3$வ:) தூய்மையான தெய்வம் போன்ற பக்தியுள்ள ஆன்மாக்கள் (அயக்ஞம்) தவறான மத வழிபாட்டுக்கு பதிலாக (யஞேன்) உண்மையான சாஸ்திர முறைபடி (அயஜந்த்) வழிபடுகிறார்கள் (தாநி) அவர்கள் (த$_4$ர்மாணி) தெய்வீக சக்தி நிறைந்த (ப்ரத்$_2$மாநி) முக்கியமான அதாவது சிறந்த ஆன்மாக்கள் (தே ஹ) அவர்கள் தான் நிஜத்தில் (மஹிமான:) பக்தியின பெரும் சக்தி நிறைந்த (சாத்$_4$யா:) வெற்றிபெற்ற பக்தர்கள், அவர்கள் (நாகம்) பூரண சுகம் தரும் கடவுளை (ஸசந்த்) உண்மையான பக்தியின் செல்வத்தால் அடைகிறார்கள், அவர்கள் (பூர்வே) முந்தைய படைப்பில் இருந்த (தே$_3$வ:) பாவமற்ற தெய்வம் போன்ற பக்தியுள்ள ஆத்மாக்கள் (சந்தி) வசிக்கும் இடத்திற்கு செல்கிறார்கள்.

பொருள்: புனிதமான (இறைச்சி, மது, புகையிலை உண்ணாதவர்கள், மற்றும் தீய செயல்களைத் தவிர்த்தவர்கள்) தேவர்களைப் போன்ற பக்தர்கள் சாஸ்திர முறை அற்ற பூஜையை துறந்து சாஸ்திர முறைப்படி வழிபாடு செய்பவர்கள், தங்களுடைய பக்தியின் செல்வத்தால் காலனின் கடனிலிருந்து விடுபட்டு சர்வ சுகங்களை அளிக்கும் பரமாத்மாவை அடைகின்றனர், அதாவது முதன்முதலில் படைக்கப்பட்ட தேவர்களைப் போல பாவமற்ற புனித ஆத்மாக்கள் வசிக்கும் சத்தியலோகத்திற்கு செல்கின்றனர்.

சில ஆன்மாக்கள் காலனின் (பிரம்) வலையில் சிக்கி இங்கு வந்தது போல, சில ஆன்மாக்கள் பரபிரம்மனின் ஏழு சங்க் பிரபஞ்சங்களிலும் வந்துள்ளன, ஆனால் இன்னும் எண்ணற்ற ஆன்மாக்கள் பரமாத்மா மீதான நம்பிக்கை மாறாமல், விசுவாசம் இழக்காதவர்கள் அங்கேயே இருந்தனர். அதனால்தான் இங்கு அதே விளக்கம் புனிதமான வேதங்களிலும் உண்மை என்று கூறப்பட்டுள்ளது. இதன் மற்றொரு ஆதாரம், கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 8–10 வரையில் உள்ளது, சாஸ்திர முறைபடி பூரண பரமாத்மாவை வழிபடுவோர், சத்யபக்தியின் செல்வதால் பரமாத்மாவை அடைவார், அதாவது அவரிடமே சென்றுவிடுவார் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரம், பரபிரம், பூரண பிரம் என்று மூன்று கடவுள் இருப்பது நிரூபணமாகிறது. 1. பிரம் – ஈஸ் – ஷர் புருஷ் 2. பரபிரம் – ஈஸ்வர் – அக்ஷர் புருஷ் – அக்ஷர் பிரம் மற்றும் 3. பூரண பிரம் – பரம் அக்ஷர் பிரம் – பரமேஸ்வர் – சத்யபுருஷ் என்ற சொற்களாலும் அறியப்படுகின்றன.

இதே ஆதாரம் ரிக்வேதம் மண்டலம் 9 சுக்தம் 96 மந்திரம் 17–20 இல் தெளிவாக உள்ளது, பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) சிசு ரூபத்தில் தோன்றி தன்னுடைய தத்துவ ஞானத்தை (கவிர்கிர்பிஹ்) கபீர் உரையின் மூலமாக தன்னை பின்பற்றுபவர்களுக்கு உரக்கச் சொல்லிப் போதிக்கிறார். அந்த கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) மூன்றாவது ரித்தாம் எனும் சத்யலோகத்தில் மனிதனை போன்ற உருவத்தில் அமர்ந்திருக்கிறார், அது பிரம் (ஷர் புருஷ்) மற்றும் பரபிரம்மனின் (அக்ஷர் புருஷ்) லோகத்திலிருந்து வேறுபட்டது மற்றும் சத்யலோகத்திலிருந்து நான்காவது அனாமி லோகத்திலும் இதே கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அனாமி புருஷ் ரூபத்தில் மனிதன் போன்ற உருவத்தில் அமர்ந்திருக்கிறார்.

# புனித ஸ்ரீமத் தேவி மஹாபுராணத்தில் படைப்பின் ஆதாரம்

"பிரம்மா, விஷ்ணு சிவன் ஆகியோரின் தாய் தந்தை"

(பிரம் மற்றும் துர்க்கை மூலம் பிரம்மா விஷ்ணு சிவனின் பிறப்பு)

புனித ஸ்ரீமத் தேவி மகாபுராணம், மூன்றாம் ஸ்கந்தம், அத்தியாயம் 1-3 (கீதாபிரஸ் கோரக்பூர் வெளியீடு, மொழிபெயர்ப்பாளர்: ஸ்ரீ ஹனுமான் பிரசாத் போத்தார் மற்றும் சிமன்லால் கோஸ்வாமி)

பக்கம் எண் 114 முதல் 118 வரை உள்ள விபரம்: ஆச்சாரியர்கள் பவானியை மனதின் ஆசைகளை நிறைவேற்றுபவள் என்று சொல்கிறார்கள். பிரகிருதி என்று அழைக்கப்படும் இவள் பிரம் உடன் பிரிக்க முடியாத சம்பந்தம் கொண்டவள் ஆவாள். (மனைவியை அர்தாகினி இன்னொரு பாதி) என்று சொல்லப்படுகிறது, அதாவது துர்க்கை பிரம்ம காலனின் மனைவி ஆவாள்) பிரபஞ்சத்தின் படைப்பு பற்றி ஸ்ரீ வியாசர் முனியிடம் மன்னர் பரிஷித் கேட்டபோது, ஸ்ரீ வியாசர் முனி இவ்வாறு கூறினார், நான் ஸ்ரீ நாரதரிடம், தேவரிஷியே! இந்த பிரபஞ்சம் எப்படி உருவானது? என்று கேட்டேன், என்னுடைய இந்தக் கேள்விக்கு ஸ்ரீ நாரதர் இவ்வாறு சொன்னார், இதே கேள்வியை நான் என் தந்தை ஸ்ரீ பிரம்மாவிடம் கேட்டேன், தந்தையே! இந்த பிரபஞ்சம் நீங்கள் படைத்ததா அல்லது ஸ்ரீ விஷ்ணு படைத்தாரா அல்லது ஸ்ரீ சிவன் படைத்தாரா? தயவுசெய்து உண்மையைச் சொல்லுங்கள் என்று கேட்டேன்.

அப்போது மரியாதைக்குரிய எனது தந்தை பிரம்மா கூறினார்: மகனே! நாரதா, நான் ஒரு தாமரை மலரில் அமர்ந்திருந்தேன், இந்த ஆழமற்ற நீரில் நான் எங்கிருந்து தோன்றினேன் என்று எனக்கே தெரியவில்லை, நான் ஆயிரம் வருடங்கள் பூமியை சுற்றினேன் ஆனால் அந்த நீரின் எல்லை தென்படவில்லை. அப்போது ஆகாயத்திலிருந்து “தவம் செய்” என்ற குரல் கேட்டது, நான் ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தேன், பிறகு படைப்புகளை தொடங்கு என ஆகாயத்திலிருந்து ஒலி ஒலித்தது, அப்போது தான் மது, கைடப் என்ற இரண்டு அரக்கர்கள் வந்தனர், அவர்களுக்குப் பயந்து நான் தாமரையின் தண்டைப் பிடித்துக் கொண்டு கீழே இறங்கினேன், அங்கு ஸ்ரீ விஷ்ணு பகவான் சேஷ நாகத்தின் படுக்கை மீது மயக்கத்தில் கிடந்தார். அவர் உடலில் இருந்து ஒரு பெண் (ஆவியாக நுழைந்த துர்க்கை) வெளியே வந்தாள். அவள் ஆபரணங்களை அணிந்து வானத்தில் தோன்றினாள். பிறகு ஸ்ரீ விஷ்ணு பகவானுக்கு சுயநினைவு வந்தது. அப்போது நான் மற்றும் ஸ்ரீ விஷ்ணு இருவர் மட்டுமே இருந்தோம், இதற்கிடையில் பகவான் சங்கரும் வந்துவிட்டார். தேவி எங்களை ஒரு விமானத்தில் உட்கார வைத்து பிரம்மலோகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு வேறு ஒரு பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவனைக் கண்டோம். பின்னர் ஒரு தேவியை கண்டோம். அவளைப் பார்த்ததும், ஸ்ரீ விஷ்ணு விவேகத்துடன் பின்வரும் விளக்கத்தை விவரித்தார்: (பிரம்ம காலன் விஷ்ணுவிற்கு நுண்ணறிவைக் கொடுத்தார் அவர் தனது குழந்தைப் பருவத்தின் நினைவுகளை நினைவு கூர்ந்தார், பின்னர் தனது குழந்தைப் பருவத்தின் கதையைச் சொன்னார்).

பக்கம் எண். 119-120 இல், ஸ்ரீ விஷ்ணு பகவான் அவர்கள் ஸ்ரீ பிரம்மா மற்றும் ஸ்ரீ சிவனிடம் கூறினார்: இவள் நம் மூவருக்கும் தாய், இவள்தான் பிரபஞ்சத்தின் தாய் (ஜகத் ஜனனி) பிரகிருதி தேவி என்று கூறினார். நான் சிறு குழந்தையாக இருந்தபோது இந்த தேவியை பார்த்திருக்கிறேன், அவள் என்னை தொட்டிலில் தாலாட்டிக் ஆட்டிக்கொண்டிருந்தாள்.

மூன்றாம் ஸ்கந்தம் பக்க எண்.123 : ஸ்ரீ விஷ்ணு அவர்கள் ஸ்ரீ துர்க்கையைப் புகழ்கிறார், நீ தூய்மையானவள், இந்த உலகம் முழுவதும் உன்னால் உருவாகுகிறது. நான் (விஷ்ணு), பிரம்மா மற்றும் சங்கர், அனைவரும் உன்னுடைய அருளால் நிலைத்திருக்கிறோம். எங்களுக்கு பிறப்பும் (ஆவிர்பாவம்) இறப்பும் (திரோபாவம்) உண்டு, அதாவது நாங்கள் முப்பெரும் தெய்வங்கள் அழியக்கூடியவர்கள். நீ மட்டுமே நித்தியமானவள், பிரபஞ்சத்தின் தாய், பிரகிருதி தேவி ஆவாய்.

பகவான் சங்கர் கூறினார் :– தேவி, பகவான் விஷ்ணு உன்னிடமிருந்து தோன்றியவர் என்றால், அதற்கு பிறகு பிறந்த பிரம்மாவும் உன் பிள்ளையே, பிறகு தமோகுணம் லீலை செய்யும் நான் சங்கர் உனது பிள்ளையல்லவா, அதாவது என்னையும் படைத்தவள் நீயே.

சிந்தித்துப் பாருங்கள்: – ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு மற்றும் ஸ்ரீ சிவன் ஆகியோர் அழியக்கூடியவர்கள் என்பது மேற்கண்ட விளக்கத்திலிருந்து தெளிவாகிறது. அவர்கள் நித்தியமானவர்கள் மற்றும் முழுமையான கடவுள் அல்ல, துர்க்கை (பிரகிருதி) இவர்களின் தாய், மற்றும் பிரம் (கால் – சதாசிவன்) இவர்களின் தந்தை ஆவார்.

மூன்றாவது ஸ்கந்தம் பக்கம் எண் 125 இல், ஸ்ரீ பிரம்மா கேட்கிறார்: தாயே! வேதங்களில் கூறப்படும் பிரம் நீங்களா அல்லது வேறு கடவுளா? இதற்கு துர்க்கை, பிரம்ம காலனும் நானும் ஒன்று தான் என்று இங்கு பதிலளிக்கிறார், ஆனால் இதே ஸ்கந்தம் 6 பக்கம் 129ல், இப்பொழுது எனது பணிகளை நிறைவேற்ற விமானத்தில் அமர்ந்து விரைந்து செல்லுங்கள் என்று கூறுகிறார், மேலும் எந்த ஒரு கடினமான சூழ்நிலையிலும் நீங்கள் என்னை நினைவுகொண்டாள், நான் உங்கள் முன் தோன்றுவேன். தெய்வங்களே! நீங்கள் என்னையும் (துர்க்கை) பிரம்ம காலனையும் எப்போதும் தியானிக்க வேண்டும். எங்கள் இருவரையும் நீங்கள் நினைத்துக் கொண்டே இருந்தால், உங்கள் பணி வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

மேற்கூறிய விளக்கங்கள், துர்க்கை (பிரகிருதி) மற்றும் பிரம் (கால்), முப்பெரும் கடவுள்களின் பெற்றோர்கள் என்பதும், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் அழியக்கூடியவர்கள் மற்றும் சர்வ சக்தி கொண்டவர் அல்ல என்பதும் தெளிவாகிறது.

தேவி துர்க்கை இந்த மூன்று (ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன்) தேவர்களுக்கும் திருமணம் செய்து வைத்தாள். மூன்றாவது ஸ்கந்தத்தில், பக்கம் எண் 128–129.

**கீதை அத்தியாயம் 7 சுலோகம் 12.**

யே, ச, ஏவ, ஸாத்த்விகா:, ப$_4$வா:, ராஜஸா:, தாமஸா:, ச, யே,
மத:, ஏவ, இதி, தாந், வித்$_3$தி$_4$, ந, து, அஹம், தேஷுு, தே, மயி //12//

**மொழிபெயர்ப்பு:–** (ஏவ) மேலும் (யே) இந்த (சாத்விகா) சத்வகுணம் விஷ்ணு மூலம் காக்கும் (ப$_4$வா:) குணம் (ச) மற்றும் (யே) இந்த (ராஜஸா:) ரஜோகுணம் பிரம்மா மூலம் உருவாக்கம் (ச) மற்றும் (தாமஸ:) தமோகுணம் சிவன் மூலம் அழித்தல் (தாந்) ஆகியவற்றை, நீ (மத:, ஏவ) என் மூலம் திட்டமிட்ட விதியின்படி நடக்கிறது (இதி) என்று (வித்$_3$தி$_4$) அறிந்து கொள் (து) ஆனால், உண்மையில் (தேஷுு) அவர்களில் (அஹம்) நான் மற்றும் (மயி) என்னில் (தே) அவர்கள் (நா) இல்லை.

## புனித சிவ மஹாபுராணத்தில் படைப்பின் ஆதாரம்

(காலன் மற்றும் துர்க்கை மூலம் ஸ்ரீ பிரம்மா விஷ்ணு சிவன் தோன்றுதல்)

இதற்கான ஆதாரம், புனித ஸ்ரீ சிவபுராணம், கீதாபிரஸ் கோரக்பூர் வெளியீடு, மொழிபெயர்ப்பாளர்: ஸ்ரீ ஹனுமான் பிரசாத் போதார், அதன் அத்தியாயம் 6 ருத்ர சம்கிதா பக்கம் 100 இல், உருவமற்ற பரபிரம்மன், சதாசிவனின் உருவம் கொண்டவர் என்று கூறப்பட்டுள்ளது. அவருடைய உடலில் இருந்து ஒரு சக்தி வெளியில் வந்தது, எட்டு கரங்களை கொண்ட அந்த சக்தி அம்பிகை, பிரகிருதி (துர்க்கை), திரிதேவ் ஜனனி (ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன் ஆகியோரைப் பெற்றெடுத்த தாய்) என்று அழைக்கப்பட்டாள். அந்த சதாசிவனை சிவா, சம்போ, மகேஷ்வர் என்றும் அழைக்கிறார்கள். (பக்கம் 101 இல்) அவர் தன் உடல் முழுவதும் சாம்பல் பூசிக் கொண்டிருப்பார். அந்த கால ரூபமான பிரம்மன் சிவலோகத்தைப் படைத்தார். பிறகு இருவரும் கணவன் மனைவியாக இணைந்து ஒரு பிள்ளையை பெற்றெடுத்தார், அதற்கு விஷ்ணு என்று பெயரிட்டார் (சிவ புராணம் பக்கம் 102).

பிறகு ருத்திர சம்ஹிதா, அத்தியாயம் 7 பக்கம் 103 இல் பிரம்மா சொல்கிறார்: நான் சதாசிவன் (பிரம்-கால்) மற்றும் பிரகிருதி (துர்க்கை) சேர்க்கையால் அதாவது இவர்களின் கணவன் மனைவி உறவால் பிறந்தேன், பின்னர் என்னை மயக்கமடையச் செய்தார்.

மேலும் ருத்ர சம்கிதை அத்தியாயம் 9, பக்கம் 110 இல் கூறியது: இவ்வாறு பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்திரன், இந்த மூன்று தெய்வங்களும் குணங்கள் கொண்டவர்கள், ஆனால் சிவா (கால பிரம்மன்) குணமற்றவர் என கருதப்படுகிறார் என்று கூறப்பட்டுள்ளது.

இங்கு நான்கு விஷயம் நிரூபிக்கப்பட்டுள்ளது, அதாவது பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ஆகிய மூவரும் சதாசிவன் (கால்-பிரம்) மற்றும் பிரகிருதி (துர்க்கை) மூலம் பிறந்தவர்கள். மூன்று கடவுள்களின் (ஸ்ரீ பிரம்மா, விஷ்ணு, சிவன்) தாய் ஸ்ரீ துர்க்கை மற்றும் தந்தை ஜோதி நிரஞ்சன் (பிரம்) ஆவார். இதில் பிரம்மா ரஜோகுணம், விஷ்ணு சத்வகுணம், சிவன் தமோகுணம் ஆவார்.

## புனித ஸ்ரீ மத் பகவத் கீதையில் படைப்புகளின் ஆதாரம்

இதன் ஆதாரம் புனித கீதை அத்தியாயம் 14 ஸ்லோகம் 3,4,5 இல் உள்ளது. பிரகிருதி (துர்க்கை) என் மனைவி என்றும் நான் அவள் கணவன் என்றும் பிரம்ம காலன் கூறுகிறார். அனைத்து உயிரினங்கள் மற்றும் மூன்று குணங்களும் (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) எங்கள் இருவரின் சங்கமத்தால் உருவானவை. நான் (பிரம்) அனைத்து உயிர்களுக்கும் தந்தை மற்றும் பிரகிருதி (துர்க்கை) தாய் ஆவாள். அனைத்து உயிர்களும் பிறக்கும் அவள் கருவில் நான் விதையை விதைக்கிறேன். பிரகிருதியிலிருந்து (துர்க்கை) தோன்றிய மூன்று குணங்களும் (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) கர்மவினைப்படி ஆன்மாவை உடலுடன் பிணைக்கின்றன. இதே ஆதாரம் அத்தியாயம் 15 ஸ்லோகம் 1 முதல் 4 மற்றும் 16, 17 வரை உள்ளது.

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1.**

ஊர்த்$_4$வமூலம், அத$_4$:ஸாக$_2$ம், அஸ்வத்த$_2$ம், ப்ராஹுு:, அவ்யயம்,
ச$_2$ந்த$_3$ாம்ஸி, யஸ்ய, பர்ணாநி, ய:, தம், வேத்$_3$, ஸ:, வேத$_3$வித் //1//

**மொழிபெயர்ப்பு:-** (ஊர்த்$_4$வமூலம்) மேலே வேர் வடிவில் பூரண பரமாத்மா ஆதி புருஷ் பரமேஷ்வரர் (அத$_4$:ஸாக$_2$ம்) கீழே மூன்று குணங்கள் அதாவது ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோ குணம் சிவன் வடிவிலான கிளைகள் போன்ற (அவ்யயம்) அழிவில்லாத (அஸ்வத்த$_2$ம்) விரிந்திருக்கும் அரச மரம் ஆகும் (யஸ்ய) இந்த (ச$_2$ந்த$_3$ாம்ஸி) உலகம் வடிவான மரத்தின் சிறிய சிறிய பகுதிகள் கிளைகள் மற்றும் (பர்ணாநி) இலைகள் (ப்ராஹு:) என்று கூறப்படுகிறது (தம்) அந்த உலகம் போன்ற மரத்தை (ய:) எவர் (வேத்$_3$) முழுமையாக அறிகிறாரோ (ஸ:) அவர் (வேத$_3$வித்) பூரண ஞானி அதாவது தத்வதரிஷி ஆவார்.

### கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 2.

அத:, ச, ஊர்த்$_4$வம், ப்ரஸ்ருதா:, தஸ்ய, ஸாக$_2$ா:, கு$_3$ணப்ரவ்ருத்$_3$த$_4$ா,
விஷயப்ரவாலா:, அத:, ச, மூலாநி, அனுஸந்ததானி, கர்மாநுப$_3$ந்தீ$_4$நி,
மனுஷ்யலோகே //2//

**மொழிபெயர்ப்பு:-** (தஸ்ய) அந்த மரத்தின் (அத:) கீழே (ச) மற்றும் (ஊர்த்$_4$வம்) மேலே (கு$_3$ணப்ரவ்ருத்$_3$த$_4$ா) மூன்று குணங்களான ரஜோ குணம் பிரம்மா, சத்வகுணம விஷ்ணு, தமோ குணம் சிவன் வடிவில் (ப்ரஸ்ருதா:) விரிந்திருக்கும் (விஷயப்ரவாலா:) காமம், கோபம், பற்று, பேராசை, அகங்காரம் வடிவான (ஸாக$_2$ா:) பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய கிளைகள் (கர்மாநுப$_3$ந்தீ$_4$நி) ஆன்மாவை கர்மவினை செயலில் பிணைக்கும் (மூலாநி) மூல காரணம் ஆவார் (ச) மற்றும் (மனுஷ்யலோகே) மனித லோகம் அதாவது பூலோகத்தில் (அத:) கீழே நரகமும் 84 லட்ச உயிரினங்களும் (ஊர்த்$_4$வம்) மேலே சொர்க்கலோகம் போன்றவை (அனுசந்ததானி) அமைக்கப்பட்டிருக்கின்றன.


### கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 3.

ந, ரூபம், அஸ்ய, இஹ, தத$_2$ா, உப்லப்$_4$யதே, ந, அந்த:, ந, ச, ஆதி$_3$:, ந, ச /
ஸம்ப்ரதிஷ்ட$_2$ா, அஸ்வத்த$_2$ம், ஏநம், ஸுவிரூட$_4$மூலம், அஸங்க$_3$ஸ்த்ரேண,
த்$_3$ருடே$_4$ந, சி$_2$த்த்வா //3//

**மொழிபெயர்ப்பு:-** (அஸ்ய) இந்த படைப்பிற்கு (ஆதி$_3$:) ஆரம்பம் (ந) இல்லை (ச) மற்றும் (அந்த:) முடிவும் (ந) இல்லை (தத$_2$ா) அப்படியே இதன் (ரூபம்) ஸ்வரூபத்தையும் (உப்லப்$_4$யதே) உணரமுடியாது (ச) மற்றும் (இஹ) இங்கே இந்த நேரத்தில் அதாவது என் மூலம் சொல்லப்படும் இந்த கீதையின் ஞானத்திலும், முழுமையான தகவல் என்னிடமும் (ந) இல்லை (ஸம்ப்ரதிஷ்ட$_2$ா) ஏனென்றால், சர்வ பிரபஞ்சங்களின் படைப்பு பற்றிய சரியான நிலை எனக்கும் தெரியாது (ஏநம்) இதன் (ஸுவிரூட$_4$மூலம்) சரியான நிலையை (அஸ்வத்த$_2$ம்) உலக வடிவான மரத்தின் ஞானம் அதாவது (அஸங்க$_3$ஸ்த்ரேண) பூரண ஞானத்தை (த்$_3$ருடே$_4$ந) உறுதியான சூட்சம வேதம் அதாவது தத்துவஞானம் மூலம் அறிந்த பிறகு (சி$_2$த்த்வா) நிரஞ்சனின் பக்தியை சிறு கணம் என்று அறிந்து, பிரம்மா, விஷ்ணு, சிவன், பிரம், பரபிரம் ஆகியவற்றைத் தாண்டி பூரண பிரம்மனை நாட வேண்டும்.

### கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 4.

தத: பத$_3$ம் தத் பரிமார்கி$_3$தவ்யம் யஸ்மிந் க$_3$தா ந நிவர்தந்தி பூ$_4$ய: /




மேல்பக்கம் வேர், கீழ்ப்பக்கம் இலைகள் என தலைகீழாகத் தொங்கும் மரம் போன்ற உலகத்தின் படம்

தம் எவ ச ஆாத்$_3$யம் புருஷம் ப்ரபத்$_3$யே யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ // 4 //

**மொழிபெயர்ப்பு:-** தத்வதர்ஷி ஞானி கிடைத்தால் (தத:) அதன் பிறகு (தத்) அந்த பரமாத்மாவின் (பத$_3$ம்) ஸ்தானத்தை அதாவது சத்யலோகத்தை (பரிமார்கி$_3$தவ்யம்) நாட வேண்டும் (யஸ்மிந்) அங்கு (க$_3$தா) சென்ற சாதகன் (பூ$_4$ய:) மீண்டும் (ந, நிவர்தந்தி) இந்த உலகத்திற்குத் திரும்புவதில்லை (ச) மற்றும் (யத:) அந்த பரமாத்மா பரம் அக்ஷர் பிரம் மூலம் (புராணீ) ஆதி (ப்ரவ்ருத்தி:) படைப்புகள் (ப்ரஸ்ருதா) உருவானது (தம்) அறியாத (ஆாத்$_3$யம்) ஆதி எமன் அதாவது நான் கால் நிரஞ்சன் (புருஷம்) அந்த பூரண பரமாத்மாவின் (ப்ரபத்$_3$யே) சரணடியில் இருக்கிறேன் அதாவது அவரை தான் பூஜிக்கிறேன்.

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16.**

த்$_3$வௌ, இமௌ புருஷௌ, லோகே, க்ஷர:, ச, அக்ஷர: ஏவ ச
க்ஷர: ஸர்வாணி பூ$_4$தானி கூடஸ்த்$_2$: அக்க்ஷர: உச்யதே // 16 //

**மொழிபெயர்ப்பு:-** (லோகே) இவ்வுலகில் (க்ஷர:) அழியக்கூடியவர் (ச) மற்றும் (அக்ஷர:) அழியாதவர் என்று (த்$_3$வௌ) இரண்டு வகையான (புருஷௌ) கடவுள்கள் உள்ளன (எவ) இதேபோல் (இமௌ) இந்த இரண்டு கடவுள்களின் லோகங்களில் உள்ள (ஸர்வாணி) அனைத்து (பூ$_4$தானி) உயிரினங்களின் உடல் (க்ஷர:) அழியக்கூடியது (ச) மற்றும் (கூடஸ்த்$_2$:) ஆன்மா (அக்ஷர:) அழியாதது (உச்யதே) என்றும் கூறப்படுகிறது.

**கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 17.**

உத்தம: புருஷ: து, அன்ய: பரமாத்மா, இதி, உதா$_3$ஹ்ருத:
ய: லோகத்ரயம் ஆவிஷ்ய, பி$_3$ப$_4$ர்தி, அவ்யய: ஈஸ்$^2$வர: //17 //

**மொழிபெயர்ப்பு:-** (உத்தம:) உத்தம (புருஷ:) கடவுள் (து) என்பவர் (அன்ய:) மேற்கூறிய இரண்டு கடவுள்கள் "க்ஷர் புருஷ்" மற்றும் "அக்ஷர் புருஷ்" இவர்களிடமிருந்து வேறுபட்டவர் (இதி) இவரை தான் உண்மையில் (பரமாத்மா) பரமாத்மா (உதா$_3$ஹ்ருத:) என்று கூறப்பட்டுள்ளது (ய:) அவர் (லோகத்ரயம்) மூன்று லோகங்களிலும் (ஆவிஷ்ய) புகுந்து (பி$_3$ப$_4$ர்தி) அனைவரையும் காக்கிறார் (அவ்யய:) அழியாத (ஈஸ்$^2$வர:) ஈஸ்வரன் (கடவுள்களில் உயர்ந்தவர், அதாவது வல்லமையுள்ள இறைவன்).

**சாரம்: கீதையின் ஞானத்தை அருளிய கடவுள், இந்த உலகம் தலைகீழான மரம் போன்றது, மேலுள்ள வேர் பூரண பரமாத்மா என்றும், கீழுள்ள கிளைகளை மற்ற பகுதிகளாக கருத வேண்டும் என இதை மட்டுமே கூறியுள்ளார். இந்த உலக வடிவான மரத்தின் ஒவ்வொரு பகுதியை முழுமையாக அறிந்தவர் தத்வதர்ஷி ஞானி (குரு) ஆவார், அவரைப் பற்றி கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 34 இல் கூறப்பட்டுள்ளது. தற்போது இந்த கீதையில் நான் (கீதையின் அறிவை கூறுபவர்) முழுமையான விளக்கங்களை கொடுக்க முடியாது, ஏனென்றால் இந்த உலக படைப்பின் ஆரம்பம் மற்றும் முடிவு பற்றிய ஞானம் என்னிடம் இல்லை. அதற்காக, கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 34 இல், தத்வதரிஷி குருவிடமிருந்து பூரண பரமாத்மா பற்றிய ஞானத்தை பெற்றுக்கொள்ள கூறப்பட்டுள்ளது. இதே கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1 இல், உலக வடிவான மரத்தின் அனைத்து பகுதிகளையும் முழுமையாக விளக்குபவரிடம் கேளுங்கள்**

என்று தத்வதரிசி குருவின் அடையாளம் கூறப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 4ல், அந்த தத்துவதரிசி ஞானி கிடைத்த பிறகு, அந்த பூரண பரமேஷ்வரனை நாட வேண்டும், அதாவது அந்த தத்துவதரிசி குரு சொல்லும்படி வழிபட்டால் பூரண முக்தியை அடைய முடியும் என்று கூறப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16, 17 இல், மூன்று கடவுள்கள் இருப்பதாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது, ஒன்று ஷர் புருஷ் (பிரம்), இரண்டாவது அக்ஷர் புருஷ் (பரபிரம்), மூன்றாவது பரம் அக்ஷர் புருஷ் (பூரண பிரம்). மேலும் ஷர் புருஷ் மற்றும் அக்ஷர் புருஷ் இருவரும் உண்மையில் அழியக்கூடியவர்கள் மற்றும் அந்த அழிவற்ற பரமேஸ்வரர் வேறுபட்டவர். அவர் மூஉலகில் உட்புகுந்து அனைத்தையும் காக்கிறார்.

மேற்கூறிய ஸ்ரீ பகவத் கீதை அத்தியாயம் 15 சுலோகம் 1,2,3,4 மற்றும் 16, 17 இல், தலைகீழாகத் தொங்கும் உலக மரத்தின் வேர் (ஆதி) பரம் அக்ஷர் பிரம் அதாவது பூரண பிரம் ஆவார் என்றும், மரம் முழுவதும் அவரால் காக்கப்படுகிறது என்றும் நிரூபணமாகிறது. மேலும் பூமிக்கு வெளியில் இருக்கும் மரத்தின் தண்டு பகுதி "அக்ஷர் புருஷ்" அதாவது பரபிரம் ஆவார். அந்த தண்டிலிருந்து வெளிப்படும் பெரிய கிளைகளில் ஒன்று பிரம் அதாவது ஷர் புருஷ் ஆவார். அதே கிளையிலிருந்து வெளிப்படும் மற்ற மூன்று சிறு கிளைகள் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ஆவார். அந்த கிளைகளுக்கு மேல்வரும் இலைகள் இந்த உலகின் உயிரினங்கள் என்றும் நிரூபணமாகிறது. மேற்கூறிய கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16,17 இல், ஷர் புருஷ் (பிரம்) மற்றும் அக்ஷர் புருஷ் (பரபிரம்) மற்றும் அவரது லோகங்களில் உள்ள அனைத்து ஜீவராசிகளின் உடல்கள் அழியக்கூடியவை மற்றும் ஆன்மாக்கள் அழிவற்றது அதாவது மேற்கூறிய இரண்டு கடவுள்களும் அவர்களுக்கு கீழ் உள்ள அனைத்து உயிர்களும் அழியக்கூடியவை என்பது தெளிவாகிறது. மேலும் அக்ஷர் புருஷ் (பரபிரம்) அழியாதவர் என்று கூறப்பட்டாலும், உண்மையில் அழிவற்ற பரமாத்மா வேறுபட்டவர். அவர் மூன்று லோகங்களில் உள்ள அனைவரையும் காக்கிறார். மேற்கூறிய விளக்கங்களில் மூன்று கடவுள்களின் முழு விவரங்கள் தனித்தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

## புனித பைபிள் மற்றும் புனித குர்ஆன் ஷெரீப்பில் படைப்பின் ஆதாரம்

புனித குர்ஆன் ஷெரீஃப் மற்றும் புனித பைபிள் இவை இரண்டிலும் படைப்பின் ஆதாரம் இருக்கிறது. குர்ஆன் ஷெரீஃபில் புனித பைபிளின் அறிவும் சேர்ந்து உள்ளது, எனவே இந்த இரண்டு புனித நூல்களும் ஒருங்கிணைந்து பிரபஞ்சத்தின் படைப்பாளர் யார், அவர் எப்படிப்பட்டவர், அவருடைய உண்மையான பெயர் என்ன? என்பதை தெளிவாக தெரிவிக்கின்றன.

புனித பைபிள் (ஆதியாகமம் அதிகாரம் 1:26, 1:29)

**ஆறாம் நாள்:–** உயிரினங்கள் மற்றும் மனிதர்கள்: மற்ற உயிரினங்களை உருவாக்கிய பிறகு, (26) கடவுள் சொன்னார், மனிதனை நம் சாயலாகவும் நம்மை போலவே உண்டாக்குவோம், அவர்கள், சகல பிராணிகளையும்

ஆழ்வார். (27) பிறகு பரமேஸ்வரர் மனிதர்களை தன்னைப்போலவே படைத்தார், தன் உருவத்தின்படியே கடவுள் மனிதனை படைத்தார். மனிதர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். (29) கடவுள் மனிதர்கள் உண்பதற்காக பூமி முழுவதிலும் உள்ள விதைகள் கொண்ட சிறு மரங்களையும், மரங்களில் விதையுள்ள பழங்களையும் படைத்தார் (அவர் இறைச்சி சாப்பிட அனுமதிக்கவில்லை).

ஏழாவது நாள்: - ஓய்வு நாள். கடவுள் முழு பிரபஞ்சத்தையும் ஆறு நாட்களில் படைத்து ஏழாவது நாளில் ஓய்வெடுத்தார்.

**ஆறு நாட்களில் முழு பிரபஞ்சத்தையும் படைத்து பின்னர் ஓய்வெடுத்த அந்த பரமாத்மா மனிதனைப் போன்ற உருவத்தில் இருக்கிறார் என்பதை புனித பைபிள் நிரூபித்துள்ளது.**

**புனித குர்ஆன் ஷெரீஃப் (சூரத் ஃபுர்கானி 25, ஆயத் எண். 52, 58, 59)**

**ஆயத் 52:** ஃபலா துதிஅல் - காஃபிரன் வ ஜஹித்ஹும் பிஹி ஜிஹாதன் கபீரா (கபிரன்) //52//

பொருள்: ஹஸ்ரத் முஹம்மதுஜியின் கடவுள் (பிரபு) கூறுகிறார், தூதரே! காஃபிர்களின் (பூரண கடவுளை துறந்து மற்ற தெய்வங்கள் மற்றும் சிலைகளை வழிபடுபவர்கள்) அறிவுரைகளைக் கேட்காதீர்கள் ஏனெனில் அவர்கள் கபீரை பூரண பரமாத்மாவாக ஏற்கவில்லை. நான் அளித்துள்ள இந்த குர்ஆன் அறிவின் அடிப்படையில், கபீர் மட்டுமே பூரண பிரபு என்று உறுதியுடன் இருங்கள், அல்லாஹ் கபீர்க்காக போராடி (சண்டையிட வேண்டாம்) உறுதியுடன் இருங்கள்.

**ஆயத் 58 :** வா தவக்கல் அலல் - ஹருல்லஜி லா யமூது வ சப்பிஹ் பிஹ்மதிஹி வ கஃபா பிஹி பிஜுனூபி இபாதிஹி காபீரா (கபீரா) //58//

**பொருள் :-** முஹம்மது நபி தனது கடவுளாகக் யாரை கருதுகிறாரோ, அந்த அல்லாஹ் (பிரபு) வேறு ஒரு பூரண பரமேஸ்வரனை நோக்கி குறிப்பிடுகிறார், நபியே! ஜிந்தா மகாத்மா வடிவில் உங்களைச் சந்தித்த அந்த கபீர் பரமேஸ்வரர் மீது நம்பிக்கை வையுங்கள். அவர் ஒருபோதும் இறக்கப் போவதில்லை, அதாவது அவர் அழியாதவர். மேலும் அவருடைய புனித மகிமையை புகழுங்கள், கபீர் அல்லா (கவிர்தேவ்) பூஜிக்க தகுதியானவர் மற்றும் அவரை வழிபடுவோரின் அனைத்து பாவங்களையும் அழிப்பவர்.

**ஆயத் 59 :-** அல்லஜி கல்கஸ்சமாவதி வல்அர்ஜ வ மா பைநஹுமா ஃபி சித்ததி அவ்யாமின் சும்மஸ்த்வா அலல்அர்ஷி அர்ரஹ்மானு ஃபஸ்அல் பிஹி கபிரான் (கபிரன்) //59//

**பொருள் :** ஹஸ்ரத் முஹம்மது அவர்களுக்கு குரான் ஷரீப் கூறும் பிரபு (அல்லாஹ்), பூமிக்கும் வானத்திற்கும் இடையில் உள்ள அனைத்தையும் கபீர் பிரபு ஆறு நாட்களில் படைத்து ஏழாவது நாள் மேலே அவரது சத்யலோகத்தில் சிம்மாசனத்தில் அமர்ந்தார் என்று கூறுகிறார். மேலும் அந்த பூரண பரமாத்மா பற்றிய உண்மையான ஞானமும் அவரை அடையும் முறையும் தத்துவதரிசி ஞானிகளிடம் (பாகபர்) கேளுங்கள், எனக்குத் தெரியாது என்று கூறுகிறார்.

**மேற்கூறிய இரண்டு புனித மதங்களின் (கிறிஸ்தவம் மற்றும் முஸ்லீம்) புனித நூல்கள் ஒருங்கிணைந்து நிரூபிப்பது, அனைத்து**

படைப்புகளையும் படைத்தவர், அனைத்து பாவங்களையும் அழிப்பவர், எல்லாம் வல்ல, அழிவற்ற பரமாத்மா மனிதனைப் போன்ற ரூபத்தில் சத்யலோகத்தில் இருக்கிறார். அவர் பெயர் கபீர், அவர் அல்லாஹு அக்பர் என்றும் அழைக்கப்படுகிறார்.

மதிப்பிற்குரிய தரம்தாஸ் ஜி, கபீர் பிரபுவிடம் கேட்டார், எல்லாம் வல்லவரே! இன்றுவரை, இந்த தத்துவஞானத்தை யாரும் வழங்கவில்லை, வேத அறிஞர்கள் கூட சொல்லவில்லை, அதனால் நான்கு புனித வேதங்களும், நான்கு புனித நூல்களும் (குர்ஆன் ஷரீஃப் போன்றவை) பொய்யானவை என தெரிகிறது என்றார்.

பூரண பரமாத்மா கூறினார்:-

கபீர், வேத் கதேப் ஜுடே நகீம் பாயி, ஜுடே ஹைம் ஜோ சமஜே நாஹிம் /

பொருள்: நான்கு புனித வேதங்களும் (ரிக்வேதம், அதர்ணவேதம், யஜுர்வேதம், சாமவேதம்) மற்றும் நான்கு புனித நூல்களும் (குரான் ஷரீஃப் – ஜபூர் – தௌரத் – இன்ஜில்) பொய்யல்ல. ஆனால் அவற்றைப் புரிந்து கொள்ளாதவர் அறியாதவர்கள்.

## மதிப்பிற்குரிய கபீர் பரமேஷ்வரரின் (கவிர்தேவ்) அமுத உரைகளில் படைப்பின் ஆதாரம்

சிறப்பு :- பின்வரும் அமுத உரைகள் 1403 ஆம் ஆண்டிலிருந்து {கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) தனது தெய்வீக லீலையின் ஐந்தாவது வயதில்} 1518 ஆம் ஆண்டுவரை {கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) மகர் எனும் இடத்திலிருந்து சரீரத்துடன் சத்யலோகம் சென்றபோது} இடைப்பட்ட காலத்தில், சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு, கபீர் (கவிர்தேவ்) பரமேஷ்வரால் மரியாதைக்குரிய தரம்தாஸ் சாகேப் (சேவகர்) ஜிக்கு விவரிக்கப்பட்டது, மற்றும் தனி தரம்தாஸ் சாகேப் ஜி அவர்களால் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அன்றைய புனித ஹிந்துக்கள் மற்றும் புனித முஸ்லிம்களின் அறியாமை குருக்கள் “இந்த நெசவாளர் (தானக்) கபீர் ஒரு பொய்யர் என்று கூறினார்கள்”. மேலும் “ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு மற்றும் ஸ்ரீ சிவன் ஆகியோரின் தாய், தந்தையின் பெயர்கள் எந்த புனித நூல்களிலும் இடம் பெறவில்லை, இந்த மூன்று கடவுள்களும் அழியாதவர்கள், அவர்களுக்கு பிறப்பும் இறப்பும் இல்லை, புனித வேதங்கள் மற்றும் புனித குர்ஆன் ஷெரீஃப் போன்றவற்றில் கடவுள் கபீர் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை, மேலும் கடவுள் உருவமற்றவர் என்று எழுதப்பட்டுள்ளது, நாங்கள் தினமும் படிக்கிறோம்” என்று கூறினார்கள். இந்த கபீர் நெசவாளர் உண்மையில் படிக்காதவர், நமது குருக்கள் படித்தவர்கள், அவர்கள் சொல்வதெல்லாம் உண்மை என்று நினைத்து அப்பாவி உள்ளங்கள் அந்த தந்திரமான குருக்களை நம்பின.

இன்று அதே உண்மை வெளிச்சத்திற்கு வருகிறது, நமது அனைத்து புனித மதங்களின் புனித நூல்களும் சாட்சிகளாக உள்ளன. இதனால், காசியில் (பனாரஸ்) ஒரு குளத்தில் தாமரை மலரில் தோன்றிய கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அனைத்து படைப்புகளையும் படைத்தவர், அகில குளத்தின் படைப்பாளரும், சர்வ ஞானமும் கொண்டவர் என்று தெளிவாகிறது. அவர் தனது உண்மையான ஒளிரும் உடலை மாற்றி குறைவான பிரகாசமான மனிதனைப் போன்ற உடலை தோற்றுவித்து 120 ஆண்டுகள், அவர் படைத்த இயற்கையைப் பற்றிய உண்மையான தத்வஞானத்தை கொடுத்து,

தனது உடலுடன் சத்யலோகத்திற்கு சென்றார்.

அன்பான வாசகர்களே, பின்வரும் பரமேஸ்வர் கபீர் சாஹிப் ஜி கூறிய அமுத வாணியைப் (உரையை) படியுங்கள்:–

தரம்தாஸ் யே ஜக் பௌரானா / கோயி ந ஜானே பத் நிர்வாணா //1//
யஹி காரன் மே கதா பாசாரா / ஜக்ஸே கஹியோ ராம் நியாரா //
யஹி ஞான் ஜக் ஜீவ் சுனாவோ/ சப் ஜீவோன் கா பரம் நஷாவோ //2//
பரம் கயே ஜக் வேத் புராணா/ ஆதி ராம் கா பேத் ந ஜானா //3//
ராம் ராம் சப் ஜகத் பகானே / ஆதி ராம் கோயீ பிர்லா ஜானே //4//
ஞானி சுனே சோ ஹிர்தை லகாயீ / மூரக் சுனே சோ கம் நா பாயீ //5//
அப் மைன் தும்சே கஹோன் சிதாயி / திரிதேவன் கி உத்பத்தி பாயீ //6//
குச் சன்ஷேப் கஹும் கௌஹராயீ / சப் சன்ஷய் தும்ஹ்ரே மிட் ஜாயீ //7//
மா அஷ்டங்கி பிதா நிரஞ்ஜன்/ வே ஜம் தாருண் வம்ஷன் அஞ்ஜன //8//
பஹலே கீன்ஹ நிரஞ்ஜன் ராயீ / பீசே சே மாயா உப்ஜாயீ //9//
மாயா ரூப் தேக் அதி ஷோபா/ தேவ் நிரஞ்சன் தன் மன் லோபா //10//
காம்தேவ் தர்மராய் சதாயே / தேவி கோ துரதஹி தர் காயே //11//
பெட் சே தேவி கரி புகாரா / ஹே சாஹெப் மேரா கரோ உபாரா //12//
டேர் சுனி தப் ஹம் தஹான் ஆயே / அஷ்டங்கி கே பந்த் சுடாயே //13//
சத்லோக் மே கின்ஹா துராச்சாரி/ கால் நிரஞ்சன் தின்ஹா நிகாரி //14//
மாயா சமேத் தியா பகாயீ / சோலஹ சங்க் கோஸ் துரி பர் ஆயி //15//
அஷ்டங்கி அவுர் கால் அப் தோயீ/ மந்த் கர்ம சே கயே பிகோயீ //16//
தர்மராய் கோ ஹிக்மத் கீன்ஹா / நக் ரேகா சே பக்கர் லீன்ஹா //17//
தர்மராய் கின்ஹா போக் விலாசா / மாயா கோ ரஹி தப் ஆசா //18//
தீன் புத்ர அஷ்டங்கி ஜாயே / பிரம்மா விஷ்ணு சிவ் நாம் தராயே //19//
தீன் தேவ் விஸ்தார் சலாயே / இன்மேம் யஹ் ஜக் தோகா காயே //20//
புருஷ் கம்ய கைசே கோ பாவே / கால் நிரஞ்சன் ஜக் பர்மாவை //21//
தீன் லோக்அப்னே சுத் தின்ஹா / சுன்ன நிரஞ்சன் பாசா லீன்ஹா //22//
அலக் நிரஞ்சன் சுன் டிகானா/ பிரம்மா விஷ்ணு சிவ் பேத்நஜானா //23//
டீன் தேவ் சோ உன்கோ தாவேன் / நிரஞ்சன் கா வே பார் நா பாவேன் //24//
அலக் நிரஞ்சன் படா பட்பாரா / தீன் லோக் ஜிவ் கின்ஹ ஆஹாரா //25//
பிரம்மா விஷ்ணு சிவ் நஹீன் பசாயே / சகல் காய் புன் தூர் உடாயே //26//
தின்கே சுத் ஹைன் தீனோ தேவா/ ஆந்தர் ஜீவ் கரத் ஹைன் சேவா //27//
அகால் புருஷ் காஹூ நஹின் சீன்ஹா / கால் பாய் சப்ஹி கஹ் லீன்ஹா //28//
பிரம் கால் சகல் ஜக் ஜானே / ஆதி பிரம் கோ ந பஹூச்சானே //29//
தீனோ தேவ் அவுர் ஔதாரா / தாகோ பஜே சகல் சன்சாரா //30//
தீனோ குண் கா யஹ் விஸ்த்தாரா / தரம்தாஸ் மைம் கஹோம் புகாரா //31//
குண் தீனோ கி பக்தி மே, பூல் பரோ சன்சார் //32//
கஹை கபீர் நிஜ் நாம் பின், கைசே உதரைன் பார் //33//

மேற்கூறிய புனித உரையில், பரமேஸ்வரர் கபீர் சாஹேப் ஜி தனது சேவகரான சீடர் ஸ்ரீ தரம்தாஸிடம் கூறுகிறார், இந்த உலகமே தத்துவஞானம் இல்லாததால் அறியாமையில் உள்ளது, பூரண முக்திக்கான வழியும், பிரபஞ்ச படைப்பின் முழுமையான ஞானம் யாரிடமும் இல்லை. எனவே, நான் உருவாக்கிய படைப்பின் உண்மைக் கதையை தானே உங்களுக்கு விளக்குகிறேன். அறிவாளிகள் உடனே புரிந்து கொள்வார்கள். ஆனால் எல்லா ஆதாரங்களையும் பார்த்த பிறகும் அதை ஏற்காதவர்கள் அறியாதவர்கள் மற்றும் காலனின் சக்தியால் ஈர்க்கப்பட்டவர்கள், அவர்கள்

பக்திக்கு தகுதியற்றவர்கள். இப்பொழுது முப்பெரும் கடவுள்கள் (பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன்) எப்படி உருவானார்கள்? என்று விளக்குகிறேன். அவர்களின் தாய் அஷ்டங்கி (துர்க்கை) மற்றும் தந்தை ஜோதி நிரஞ்சன் (கால பிரம்) ஆவார். முதலில் பிரம் ஒரு முட்டையிலிருந்து உருவானார். பின்னர் துர்க்கையும் உருவானாள். கால் (பிரம்) துர்க்கையின் அழகில் மயங்கி தவறாக நடந்து கொண்டார். எனவே துர்க்கை (பிரகிருதி) அவரது வயிற்றில் தஞ்சம் அடைந்தாள். நான் காலனிடம் சென்று பவானியை அவருடைய வயிற்றில் இருந்து காப்பாற்றி, 21 பிரபஞ்சங்களுடன் அவர்களை 16 சங்க் கோஸ் தூரத்திற்கு அனுப்பிவிட்டேன். அவர்களின் சங்கமத்திலிருந்து, மூன்று குணங்கள் (ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன்) பிறந்தன. இம்மூன்று குணங்களின் (ரஜோகுணம், சத்வகுணம், தமோகுணம்) பக்தியை செய்து அனைத்து ஜீவராசிகளும் காலனின் வலையில் சிக்கியுள்ளனர். உண்மையான மந்திரம் இல்லாமல் மோட்சம் எப்படி கிடைக்கும்?

சிறப்பு :- அன்பான வாசகர்களே சற்று சிந்தியுங்கள், ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன் ஆகியோரின் நிலை அழிவற்றது எனவும், பிறப்பு, இறப்பு இல்லாதவர்கள் எனவும் அனைத்து இந்து சமூகமும் கருதுகின்றனர். ஆனால் இந்த மூவரும் அழியக்கூடியவர்கள். அவர்களின் தந்தை பிரம்ம காலன் மற்றும் தாய் துர்க்கை (பிரகிருதி-அஷ்டாங்கி) என நீங்கள் முன்பு படித்தீர்கள். இது நமது வேதங்களிலும் உள்ளது. ஆனால் இந்து சமூகத்தின் கலியுக குருக்களும், ரிஷிகளும் இதை அறியவில்லை. பாடத்திட்டத்தை அறியாத ஆசிரியர்கள், வித்வான் அல்ல, மாணவர்களின் எதிரிகள். அதேபோல் ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு மற்றும் ஸ்ரீ சிவனின் பெற்றோர்கள் யார் என்று அறியாத குருக்கள், முனிவர்கள், மகான்கள் அறிவு அற்றவர்கள். இதனால் அவர்கள் பக்த சமூகத்தை சாஸ்திரத்திற்கு மாறான அறிவை (உண்மையற்ற) கூறி சமுதாயத்தை அறியாமை நிறைந்தவர்களாக ஆக்கினார்கள். சாஸ்திரத்திற்கு மாறான வழிபாடுகளை செய்ய வைத்து பூரண மோட்சத்தை இழக்கவைத்து, அனைவரின் மனித பிறவியை வீணடித்துவிட்டார்கள். ஏனெனில் ஸ்ரீ பகவத் கீதை அத்தியாயம் 16 ஸ்லோகம் 23, 24 இல் கூறியதாவது, சாஸ்திர முறையை விட்டு மனம் போனபடி வழிபடுபவனுக்கு எந்த பலனும் கிடைக்காது என்பது இதை நிரூபிக்கிறது. கபீர் பரமேஸ்வரர் 1403 ஆம் ஆண்டிலிருந்து தனது ஐந்து வயதிலேயே எல்லா சாஸ்திரங்களின் ஞானத்தை தனது அமுத உரைகளில் சொல்லத் தொடங்கினார். ஆனால் அறிவற்ற குருமார்கள் இந்த ஞானத்தை பக்த சமுதாயத்துக்கு அணுக விடவில்லை, இது இன்று எல்லா புனித நூல்களிலிருந்து தெளிவாகிறது. இதன்மூலம் பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் பிரபு) தத்வதரிஷி வடிவில் வந்தார் என நிரூபணம் ஆகிறது.

## மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாகேப் ஜியின் அமுத உரைகளில் படைப்பின் ஆதாரம்

(ஆதி ரமைணி (சத்கிரந்த பக்கம் 690 - 692)

ஆதி ரமைன்ணி அதலி சாரா / ஜா தின் ஹோதே துந்துன்காரா //1//
சத்புருஷ் கின்ஹா பிரகாஷா / ஹம் ஹோதே தகத் கபீர் கவாசா //2//
மன் மோகினி சிர்ஜி மாயா / சத்புருஷ் ஏக் கியால் பனாயா //3//
தர்மராஜ் சிர்ஜே தர்பானி / சௌசட் ஜக்தப் சேவா டான்னி //4//

புருஷ் பர்திவி ஜாகு தின்ஹி / ராஜ் கரோ தேவா ஆதீனி //5//
ப்ரஹ்மண்டஇகீஸ் ராஜ் தும்ஹ தின்ஹா/ மன் கி இச்சா சப் ஜுக் லீன்ஹா //6//
மாயா மூல் ரூப் ஏக் சாஜா / மோஹி லியே ஜின்ஹ தர்மராஜா //7//
தர்ம் கா மன் சஞ்சல் சித் தார்யா / மன் மாயா கா ரூப் பிசாரா //8//
சஞ்சல் செரி சபல் சிராகா / யா கே பர்சே சர்பஸ் ஜாகா //9//
தர்மராஜ் கீயா மன் கா பாகி / விஷய் வாஸனா சங் சே ஜாகி //10//
ஆதி புருஷ் அட்லி அன்ராகி / தர்மராய் தியா தில் சே தியாகி //11//
புருஷ் லோக் சே தீயா டஹாஹி / அகம் தீப் சலி ஆயே பாயீ //12//
சஹஜ் தாஸ் ஜிஸ் தீப் ரஹந்தா / காரண் கௌன் கௌன் குல் பந்தா //13//
தர்மராஜ் போலே தர்பானி / சுனோ சஹஜ் தாஸ் பிரம்மஞானி //14//
சௌசத் ஜுக் ஹம் சேவா கின்ஹி / புருஷ் பிர்திவி ஹம் கூ தீன்ஹி //15//
சஞ்சல் ரூப் பயா மன் பௌரா / மன்மோகினி டகியா பைளம்ரா //16//
சத்புருஷ் கே நா மன் பாயே / புருஷ் லோக் சே ஹம் சலி ஆயே //17//
அகர் தீப் சுனத் பட்பாகி / சஹஜ் தாஸ் மெடோ மன் பாகி //18//
போலே சஹஜ்தாஸ் தில் தானி / ஹம் தோ சாகர் சத் சஹ்தானி //19//
சத்புருஷ் சே அரஜ் குஜாருன்/ ஜப் தும்ஹாரா பிவான் உதாருன் //20//
சஹஜ் தாஸ் கோ கீயா பியானா / சத்யலோக் லீயா ப்ரவானா //21//
சத்புருஷ் சாஹிப் சர்பங்கி / அவிகத் அதலி அசல் அபங்கி //22//
தர்மராஜ் தும்ஹரா தர்பானி / அகம் தீப் சலி கயே ப்ரானி //23//
கௌன்ஹுகம் கரி அரஜ் ஆவாஜா/ கஹான் பாடாவௌ உஸ் தர்மராஜா //24//
பாய் ஆவாஜ் அட்லி ஏக் சாசா / விஷய லோக் ஜா தீன்யூம் பாசா //25//
சஹஜ் விமான் சலே அதிகாயீ / சின் மேம் அகர் தீப் சலி ஆயி //26//
ஹம்தோ அரஜ் கரி அன்ராகி/ தும்ஹ் விஷய லோக் ஜாவோ பட்பாகி //27//
தர்மராஜ் கே சலே விமானா / மான்சரோவர் ஆயே ப்ரானா //28//
மான்சரோவர் ரஹன் ந பாயே / தாரை கபீரா தானா லாயே //29//
பங்கனால் கி விஷமி பாடி / தஹான் கபீரா ரோகி காடி //30//
இன் பாஞ்சோன் மிலி ஜகத் பந்தானா/ லாக் சௌராசி ஜீவ் சந்தானா //31//
பிரம்மா விஷ்ணு மகேஷ்வர் மாயா / தர்மராஜ் கா ராஜ் படாயா //32//
யஹ கோகா புர் ஜுடி பாஜி / பிசதி வைகுண்ட தகாசி சாஜி //33//
கிர்திம் ஜீவ் புலாங்னே பாயீ / நிஜ் கர் கி தோ கப்ரி ந பாயி //34//
சவா லாக் உபஜே நித் ஹன்சா / ஏக் லாக் வினஷேன் நித் அன்சா //35//
உபதி கபதி ப்ரலய் பேரி / ஹர்ஷ ஷோக் ஜௌரா ஜம் ஜேரி //36//
பான்சோம் தத்வஹைம் ப்ரலய மாஹிம்/சத்குண் தமோகுண் ரஜ்குண் ஜாயீ //37//
ஆடோன் அங் மிலி ஹை மாயா/ பிண்ட பிரஹ்மண்ட சகல்பர்மாயா//38//
யா மே சுரதி சப்த் கி டோரி / பிண்ட பிரஹ்மண்ட லகி ஹை கோரி //39//
ஷ்வாசா பாரஸ் மன் கஹ் ராகோ / கோல்ஹி கபாட் அமீரஸ் சாகோ//40//
ஸுனாஊம் ஹன்ஸ் ஷப்த் சுன் தாஸா/ அகம் தீப் ஹை அக் ஹை பாஸா //41//
பவ்சாகர் ஜம் தண்ட் ஜமானா / தர்மராஜ் கா ஹை தல்பானா //42//
பாஞ்சோ ஊபர் பத் கி நகரி / பாட் பிஹங்கம் பங்கி டக்ரி //43//
ஹும்ரா தர்மராஜ் சோ தாவா / பவ்சாகர் மே ஜீவ் பர்மாவா //44//
ஹம் தோ கஹைன் அகம் கி பானி/ ஜஹான் அவிகத்அதலி ஆப் பினானி //45//
பந்தி சோட் ஹமாரா நாம் / அஜர் அமர் ஹை அஸ்திர் டாம் //46//
ஜுகன் ஜுகன் ஹம் கெஹ்தே ஆயே / ஜம் ஜௌரா சே ஹன்ஸ் சுடாயே //47//
ஜோ கோயீ மானே சப்த ஹமாரா / பவ்சாகர் நஹின் பர்மேந்தாரா//!!48//
யா மே சுரதி சப்த கா லேகா / தன் அந்தர் மன் கஹோ கின்ஹி தேகா //49//
தாஸ் கரிப் அகம் கி பானி / கோஜா ஹன்சா சப்த சஹ்தானி //50//

மேலுள்ள அமுத உரைகளின் பொருள் என்னவென்றால், மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாகேப் ஜியும் இதையே கூறுகிறார், முன்பு இங்கு இருள் மட்டுமே இருந்தது, பூரண பரமாத்மா கபீர் சாஹிப் சத்யலோகத்தில் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். நாம் அங்கு சேவகராக இருந்தோம். பரமேஸ்வர் ஜோதி நிரஞ்சனை உருவாக்கினார். பின்னர் அவர் தவத்திற்குப் பிரதிபலனாக 21 பிரபஞ்சங்களைக் கொடுத்தார். அதன் பிறகு, அவர் மாயையை (பிரகிருதி) உருவாக்கினார். துர்க்கையின் (பிரகிருதி) தோற்றத்தில் மயங்கிய ஜோதி நிரஞ்சன் (பிரம்) தவறு செய்ததால் தண்டனை பெற்றார். அவர் சத்யலோக்கிலிருந்து வெளியேற்றப்பட்டார். அவர் தினமும் ஒரு லட்சம் மனித உயிர்களை உண்ணவும், ஒரு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மனித உயிர்களை உருவாக்கவும் சபிக்கப்பட்டார். இங்கு எல்லா ஆன்மாக்களும் பிறப்பு இறப்பு என்ற துன்பங்களை அனுபவிக்கின்றன. யாரேனும் பூரண பரமாத்மவின் உண்மையான மந்திரத்தை நம்மிடம் இருந்து பெற்றுக் கொண்டால், அவரை காலனின் பிடியிலிருந்து விடுவிப்போம். எங்கள் பெயர் பந்தி சோட் (கர்மவினை பந்தங்களிலிருந்து விடுவிப்போர்) ஆகும். மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜி தனது குரு மற்றும் கபீர் பரமாத்மாவின் அடிப்படையில், உண்மையான மந்திரத்தை அதாவது சத்யநாம் மற்றும் சார்சபத்தை பெற்றுக் கொள்ளுங்கள், பூரண முக்தியை அடைவீர்கள் என்று கூறுகிறார். இல்லையெனில், போலி குருமார்களின் இனிமையான பேச்சில் மயங்கி, சாஸ்திரத்திற்கு மாறான பக்தி செய்து காலனின் வலையில் சிக்கித் துன்பம் மீது துன்பம் அடைவீர்கள்.

**கரீப்தாஸ் ஜி மகாராஜியின் உரை**

**(சத்கிரந்த் சாஹிப நூல், பக்கம் எண்.690)**

மாயா ஆதி நிரஞ்சன் பாயீ, அப்னே ஜாயே ஆபை காயீ /
பிரம்மா விஷ்ணு மகேஷ்வர் சேலா, ஓம் சோஹம் கா ஹை கேலா //37//
சிகர் சூன்ய மே தர்ம அன்யாயி, ஜின் சக்தி டாயன் மஹல் பாடாயீ //38//
லாக் கிராசை நித் உடி தூதி, மாயா ஆதி தக்த கி கூதி //38//
சவா லாக் கடியே நித் பாண்டே, ஹன்சா உத்பத்தி ப்ரலய் டாண்டே /
யே தீனோ சேலா பட் பாரி, சிர்ஜே புருஷா சிர்ஜி நாரி //39//
கோகாபூர் மே ஜீவ் பூலாயே, ஸ்வப்னா பஹிஷ்த வைகுண்ட் பனாயே /
யௌஹ் ஹர்ஹட் கா குவா லோயீ,யா கல் பந்த்யா ஹை சப் கோயீ //40//
கீட குஞ்சர் அவுர் அவதாரா, ஹர்ஹட் டோரி பந்தே கயீ பாரா /
அரபு அலீல் இந்த்ர ஹூயே ஹைம் பாயீ,ஹர்ஹட் டோரி பந்தேசப் ஆயி //41//
ஷேஷ் மகேஷ் அரு கணேஷ் தாமீ, ஹர்ஹட் டோரி பந்த் சப் ஆயீ /
ஷுக்ராதிக் ப்ரஹ்மாதிக் தேவா, ஹர்ஹட் டோரி பந்தே சப் கேவா /
கோடிக் கர்தா பிர்தா தேக்யா, ஹர்ஹட்டோரி கஹூன் சுனி லேகா //42//
சதுர்பூஜி பகவான் கஹாவைன், ஹர்ஹட் டோரி பந்தே சப் ஆவைன்/
யோஹ் ஹை கோகா புர் கா கூவா, யாமேம் பர்யா சோ நிஷ்சய் மூவா //43//

ஜோதி நிரஞ்சனிடம் வசப்பட்ட இந்த மூன்று தேவர்களும் (ரஜோகுணம்-பிரம்மா, சத்வகுணம்-விஷ்ணு தமோகுணம்-சிவன்) தங்கள் மகிமையைக் காட்டி ஜீவன்களை சொர்க்கம், நரகம் மற்றும் பிறவிக் கடலில் அலையச் செய்கிறார்கள். ஜோதி நிரஞ்சன் தனது மாயையால் நாகினி பாம்பு போல உயிர்களைப் பிறப்பித்து அவற்றைக் கொன்றுவிடுகிறார். நாகினி பாம்பு தனது வாலால் அனைத்து முட்டைகளை சுற்றி ஒரு சுருளை உண்டாக்குகிறது, பிறகு அந்த முட்டைகளைக் கொத்தி உடைக்கும் போது

வெளிவரும் குட்டிகளை நாகினி சாப்பிட்டு விடுகிறது. வெளிவரும் குட்டிகள் சுருளை கடந்து வெளியே வந்து விட்டால் அது பிழைத்துக்கொள்கிறது.

மாயா காலி நாகினி, அப்னே ஜாயே காத் /
குண்டலி மே சோடே நஹி,சோ பாத்தோம் கி பாத் //


இதுபோன்றுதான் காலனின் வலை உள்ளது. குருவிடம் தீட்சை பெற்று நிரஞ்சனை வழிபட்டாலும், இந்த நிரஞ்சனின் வலையிலிருந்து (இருபத்தொரு பிரபஞ்சங்கள்) விடுபட முடியாது. பிரம்மா, விஷ்ணு, சிவன், ஆதி மாயை துர்க்கையும் காலனின் வலைக்குள் சிக்கியுள்ளார். இவர்களும் அவதாரங்கள் எடுத்து பிறப்பு இறப்பு சக்கரத்தில் சுழல்கின்றார்கள். சற்று யோசித்துப் பாருங்கள், துருவன், பிரகலாதன் மற்றும் சுகதேவ் ரிஷி போன்றவர்கள் சோஹம் மந்திரத்தின் ஜெபம் செய்தனர், ஆனால் பூரண முக்தி பெறவில்லை. ஏனெனில் விஷ்ணு புராணம், பாகம் 1, அத்தியாயம் 12, சுலோகம் 93 இல், பிரகலாதன் ஓராயிரம் சதுர்யுகத்திற்கு மட்டுமே முக்தி பெற்றார் என்று எழுதப்பட்டுள்ளது. அவர் காலனின் லோகத்திலேயே இருந்துவிட்டார். மேலும் "ஓம் நமஹ பகவதே வாசுதேவய நமஹ" எனும் மந்திரத்தை உச்சரித்து கிருஷ்ணபக்தி செய்பவரும், 84 லட்சம் உயிரினங்களின் சக்கரத்திலிருந்து விடுபட முடியாது. மரியாதைக்குரிய கபீர் சாஹிப் ஜி மற்றும் மதிப்பிற்குரிய கரீப்தாஸ் சாஹேப் ஜியின் உரைகள் நிரூபிக்கிறது.

அனந்த் கோடி அவதார் ஹைன், மாயா கே கோவிந்த் /
கர்தா ஹோ ஹோ அவதரே, பஹுரேர் படே ஜக் பந்த் //

சத்யபுருஷ் கபீர் சாஹிப் ஜியின் பக்தியால் மட்டுமே பூரண முக்தி அடைய முடியும். ஆன்மா சத்யலோகத்திற்கு செல்லாத வரை, காலனின் லோகத்தில் சுற்றிக்கொண்டே இருக்கும். மேலும் சொர்க்கம் என்ற விடுதியில் சேமித்த பக்தியின் செல்வத்தையும் தானத்தின் புண்ணியங்களையும் செலவழித்துவிட்டு, ஆன்மா மீண்டும் கர்மவினைப்படி 84 லட்சம் உயிரினங்களில் துன்பப்பட்டு காலனின் லோகத்தில் சுற்றிக்கொண்டே இருக்கும். மாயையிலிருந்து (துர்க்கை) பிறந்த கோடிக்கணக்கான முக்குண (பிரம்மா, விஷ்ணு, சிவன்) தெய்வங்கள் இறந்துள்ளார்கள். அவதாரமாக வந்து, பிறகு கர்மவினையில் கட்டுப்பட்டு, பாவங்களை அனுபவித்து, 84 லட்சம் உயிரினங்களில் சென்றுவிட்டனர். அதாவது நாரதர் ரிஷியால் ஸ்ரீ விஷ்ணு சபிக்கப்பட்டு, ஸ்ரீ ராமச்சந்திர வடிவில் அயோத்திக்கு வந்தார். பின்னர் வாலியைக் கொன்றார். அந்த கர்மவினை அனுபவிக்கவே ஸ்ரீ கிருஷ்ணராக பிறந்தார். பின்னர் வாலியின் ஆன்மா வேட்டைக்காரனாக பிறந்து ஸ்ரீ கிருஷ்ணரின் பாதத்தில் விஷ அம்பு எய்து கொன்று பழி வாங்கியது.

கரீப்தாஸ் ஜி மகராஜ் தனது உரையில் கூறுகிறார்:

பிரம்மா விஷ்ணு மகேஷ்வர் மாயா, ஔர் தர்மராஜ் கஹியே /
இன் பாஞ்சோ மில் பர்பஞ்ச் பனாயா, வாணி ஹமரி லஹியே //
இன் பாஞ்சோ மில் ஜீவ் அட்காயே,ஜுகன்-ஜுகன் ஹம் ஆன் சூடாயே /
பந்தி சோட் ஹமார நாமம், அஜர் அமர் ஹை அஸ்திர் டாம் //
பீர் பைகம்பர் குதுப் ஔலியா, சுர் நர் முனிஜன் ஞானி /
ஏதா கோ தோ ராஹ் ந பாயா, ஜம் கே பந்தே ப்ராணி //
தர்மலாஜ் கீ தூமாதாமி, ஜம் பர் ஜங் சலாஊன் /
ஜோரா கோ தோ ஜான் ந தூங்கா, பாந்த் அதல் கர் ல்யாவுன் //




யோஹ ஹர்ஹட் கா குவா லோயி, யா கல் பந்த்யா ஹே சப் கோயி |
கிடி குஞ்சர் ஓர் அவ்தாரா, ஹர்ஹட் டோரி பந்தே கயி பாரா ||

காலனின் லோகத்தில் பிறப்பு இறப்பு போன்ற சக்கரம்

கால் அகால் தோஹூன் கோ மோசூன், மஹாகால் சிர் முண்டூம் /
மைன் டு தக்த ஹசூரி ஹக்மி, சோர் கோஜ் கூம் டூன்டூ //
மூல மாயா மக் மேம் பைடி, ஹன்சா சுன்-சுன் காயி /
ஜ்யோதி ஸ்வரூபி பயா நிரஞ்சன், மைன் ஹாய் கர்தா பாயீ //
சம்ஹஸ் அடாஸி தீப் முனீஸ்வர், பந்தே முலா டோரி /
எத்யான் மே ஜாம் கா தல்பானா, சாலியே புருஷ் கிஷோரி //
மூலா கா தோ மாதா டாகூன், சத் கி மோஹர் கரூங்கா /
புருஷ் தீப் கூன் ஹன்ஸ் சலாவூன், தரா ந ரோகன் தூங்கா //
ஹம் தோ பன்தி சோர் கஹாவன், தர்மராஜ் ஹை சக்வை /
சத்லோக் கி சகல் சுனாவா, வாணி ஹம்ரி அகவை //
சத்லோக் கி சாகல் சுனாவா, வாணி ஹம்ரி அக்வே //
நௌ லக் பட்டன் ஊபர் கெலூம், சாஹ்தரே கூன் ரோகூ /
த்வாதஸ் கோடி கடக் சப் காடூ, ஹன்ஸ் படாஊ மொகூம் //
சௌத ஹ் பவன் கமன் ஹை மேரா, ஜல் தல் மே சர்பங்கி /
காலிக் கலக் கலக் மேம் காலிக், அவிகத் அசல் அபங்கி //
அகர் அலீல் சக்ர ஹை மேரா, ஜித் சே ஹம் சல் ஆயே /
பாஞ்சோ பர் பர்வானா மேரா, பந்தி சூடாவன் தாயே //
ஜஹான் ஓம்கர் நிரஞ்சன் நாஹிம், பிரம்மா விஷ்ணு வேத் நஹி ஜாஹீம் /
ஜஹான் கர்தா நஹின் கால் பகலானா, காயா மாயா பிண்ட ந பிராணா //
பாஞ்ச் தத்வ தீனோ குண் நாஹி, ஜோரா கால் தீப் நஹின் ஜாஹின் /
அமர் கரூன் சத்லோக் படாஊ, தாதைன் பந்தி சோட் கஹாஊம் //

கபீர் பரமேஷ்வரரின் (கவிர்தேவ்) மகிமையை விவரித்து மதிப்பிற்குரிய கரீப்தாஸ் சாஹேப் ஜி, நமது பிரபு கபீர் பரமேஸ்வர் (கவிர்தேவ்) பந்தி சோட் ஆவார் என்று கூறுகிறார். பந்தி சோட் என்றால், காலனின் சிறையிலிருந்து விடுவிப்பவர் ஆகும். பிரம்ம காலனின் 21 பிரபஞ்சங்களில் உள்ள சர்வ பிராணிகள், பாவங்களால் காலனின் கைதிகள் ஆவார். பூரண பரமாத்மா (கவிர்தேவ்) கபீர் சாஹேப் பாவங்களை அளித்து விடுகிறார். பிரம், பரபிரம், அல்லது பிரம்மா, விஷ்ணு, சிவன் யாராலும் பாவங்களை அழிக்க முடியாது. தன் கர்மவினைபடி பலனை அளிப்பார்கள். எனவே யஜுர்வேதம் அத்தியாயம் 5 மந்திரம் 32 இல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: “கவிரங்காரிர்சி” அதவாது (கவிர்) கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வரர்) (அங்க் ஆரி) பாவங்களின் எதிரி, ‘பம்பாரிர்சி” – (பம்பாரி) பந்தங்களின் (அரி) எதிரி, அதாவது பந்தங்களிலிருந்து விடுவிப்பவர் பந்தி சோட் ஆவார்.

சத்யபுருஷ் பரமாத்மா (கவிர்தேவ்) இந்த ஐவருக்கும் (பிரம்மா, விஷ்ணு, சிவன், மாயா மற்றும் தர்மராய்) மேலானவர், சத்யலோகத்தின் எஜமானர். மற்ற எல்லா கடவுள்களும் பிரம், பரபிரம் மற்றும் பிரம்மா, விஷ்ணு, சிவன் மற்றும் ஆதி மாயையும் அழியக்கூடியவர்கள். இவர்களும் இவர்களுடைய லோகமும் மகா பிரளயத்தில் அழிந்துவிடும். இவற்றின் ஆயுட்காலம் ஒரு சராசரி உயிரினத்தை விட பல ஆயிரம் மடங்கு அதிகமானது. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தன்று அழிந்துவிடும்.

மரியாதைக்குரிய கரீப்தாஸ் ஜி மகராஜ் சொல்கிறார்.

ஷிவ் பிரம்மா கா ராஜ், இந்திர கின்தி கஹான் /
சார் முக்தி வைகுண்ட சமஜ், ஏதா லஹ்யா //
சங்க் ஜுகன் கி ஜுனி, உம்ர பட் தாரியா /

ஜா ஜனனி குர்பான், சு காகஜ் பாரியா //
ஏதீ உமர் புலந்த் மரைகா அந்த் ரே /
சத்குரு லகே ந கான், ந பைன்டே சந்த் ரே //

ஒருவருடைய ஆயுள் பல்லாயிரம் யுகங்களுக்கு இருந்தாலும் ஒரு நாள் கட்டாயம் முடிந்துவிடும்.

ஆனால் சத்யபுருஷ் கபீர் பரமேஸ்வரரின் (கவிர்தேவ்) பிரதிநிதியான பூரண குருவிடம் அதாவது மூன்று மந்திரங்கள் (ஒன்று “ஓம்” மற்றும் “தத், சத்” இது குறியீடு) மற்றும் மந்திரத்தை தீட்சை அளிக்க பூரண குரு மூலம் அனுமதி பெற்ற குருவிடமிருந்து தீட்சை பெற்று மந்திர ஜபம் செய்து வழிபட்டால் நாம் சத்யலோகத்தை அடையலாம். சத்ய பக்தி இல்லாமல் நீண்ட ஆயுள் கிடைத்தும் பயனில்லை. ஏனென்றால் ஜோதி நிரஞ்சன் லோகத்தில் துன்பம் மீது துன்பம் வரும்.

கபீர், ஜீவனா தோ தோடா ஹி பலா, ஜே சத் சுமரன் ஹோய் /
லாக் வர்ஷகா ஜீவனா, லேகே தரே நா கோய் //

* ஆனால் சத்யபக்தி செய்தால், குறைந்த ஆயுள் கூட நல்லது. ஆனால் சத்ய புருஷின் வழிபாட்டிற்கு பதிலாக, பிரம்ம காலன் மற்றும் தெய்வங்களை வழிபட்டு, பிராணாயாமம் போன்றவற்றைச் செய்து நீண்ட ஆயுள் உள்ளவர்களுக்கு முக்தியின் பாதையில் எந்த பயனும் இல்லை. சிவபெருமானின் அளவிற்கு நீண்ட ஆயுளைப் பெற்றாலும் நிச்சயம் ஒரு நாள் மரணம் நிகழும். ஏனெனில் பக்தி தவறானது. எனவே பிறப்பு இறப்பு சுழற்சி தொடரும்.

கபீர் சாகேப் தன்னைப் பற்றிய (பூரண பிரம்) விவரத்தை தானே விளக்குகிறார், எல்லா கடவுள்களுக்கும் மேலாக சத்யலோகத்தில் (சச்கண்ட், சத்தாம்) எண்ணற்ற கரங்களைக் கொண்ட பரமாத்மா இருக்கிறார். மேலும் அவருக்கு கீழ் சர்வலோகமும் [பிரம்ம காலனின் 21 பிரபஞ்சங்களும், பிரம்மா, விஷ்ணு, சிவன், சக்தியின் லோகம் மற்றும் பரபிரம்மனின் ஏழு சங்க் பிரபஞ்சங்களும், மற்ற அனைத்து பிரபஞ்சங்களும்] அடக்கம் ஆகும். பூரண குருவிடமிருந்து பெறப்பட்ட சத்யநாம், சார்நாமின் ஜபத்தால் ஒருவர் சத்யலோகத்திற்கு செல்லலாம். சத்யலோகத்திற்கு சென்ற ஆன்மா மீண்டும் பிறப்பதில்லை.

சத்யபுருஷ் (பூரண பிரம்) கபீர் சாஹேப் (கவிர்தேவ்) மற்ற லோகங்களில் வெவ்வேறு பெயர்களில் இருக்கிறார். அலக் லோகத்தில் அலக் புருஷ், அகம் லோகத்தில் அகம் புருஷ், ஆகஹ் லோகத்தில் அனாமி புருஷ் வடிவில் அமர்ந்துள்ளார். ஆனால் பூரண பரமாத்மாவின் உண்மையான பெயர் கவிர்தேவ் (பல மொழிகளால் கபீர் சாகேப்) ஆகும்.

## மரியாதைக்குரிய குரு நானக் சாகேப் ஜியின் உரையில் படைப்பின் ஆதாரம்

**ஸ்ரீ நானக் சாகேப் ஜியின் புனித உரை, மேஹல 1, ராக் பீலாவலு, பகுதி 1 (குரு கிரந்த் சாஹிப் நூலின், பக்கம் எண். 839)**

ஆபே சச்சு கீயா கர் ஜோடி / அன்டஜ் போடி ஜோடி விச்சோட் //
தர்தி ஆகாஷ் கீயே பைசண் கஉ தாஉ / ராதி தினந்து கீயே பஉ-பாஉ //
ஜின் கீயே கரி வேகண்ஹாரா / (3)
த்ரிதியா பிரம்மா-விஷ்ணு-மகேஷ் / தேவி தேவ் உபாயே வேசா // (4)

பஉண் பாணி அகனி பிஸ்ராஉ / தாஹி நிரஞ்சன் சாசோ நாஉ //
திசு மஹி மனுஆ ரஹியா லிவ் லாயீ / பிரணவதி நானகு காலு நா காயி // (10)

பொருள்:- பூரண பரமாத்மா (சத்யபுருஷ்) தானே தன் கைகளால் அனைத்தையும் படைத்துள்ளார், அவர் முட்டையை உருவாக்கி அதை உடைத்தார், அதிலிருந்து ஜோதி நிரஞ்சன் தோன்றினார். அதே பூரண பரமாத்மா அனைத்து உயிர்களுக்காக பூமி, ஆகாயம், காற்று, நீர், நெருப்பு போன்ற பஞ்சபூதங்களைப் படைத்தார். தன்னுடைய படைப்பிற்கு தானே சாட்சியானார். வேறு யாராலும் சரியான விளக்கத்தை கொடுக்க முடியாது. நிரஞ்சன் தோன்றிய பிறகு மும்மூர்த்திகளான ஸ்ரீ பிரம்மா ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ சிவன் தோன்றினர். மேலும் மற்ற தெய்வங்கள், தேவிகள், மற்றும் அனைத்து உயிரினங்கள் பிறந்தன. பின்னர் மற்ற தெய்வங்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் ரிஷிகளின் அனுபவங்களின் அடிப்படையில், 6 சாஸ்திரம், 18 புராணங்கள் உருவாகின. பூரண பரமாத்மாவின் உண்மையான மந்திரத்தை (சத்நாம்) முழு மனதுடன், குருவின் விதிகளில் கட்டுப்பட்டு வழிபாடு செய்பவரை காலன் உண்ண மாட்டான் என ஸ்ரீ குரு நானக் ஜி கூறுகிறார்.

(ராக் மாரு (பகுதி) அமிர்தவாணி மஹாலா 1 பக்கம் 1037)

சுன்ஹூ பிரம்மா, விஸ்ணு, மகேஷ் உபாயே / சுனே வர்தே ஜுக் சபாயே//
இஸூ பத் பிசாரே ஸோ ஜனு புரா / திஸ் மிலியே பரமு சுகாயிதா //(3)
சாம்வேது, ருகு ஜுஜரு அதரபணு / பிரஹ்மே முக் மாஇயா ஹை த்ரைகுண் //
தா கீ கீமத் கஹி ந சகே / கோ திஉ போலே ஜிஉ புலாயிதா //(9)

பொருள்:- பிரபஞ்ச படைப்பை விவரித்து, மேலும் முட்டையிலிருந்து வெளிவந்தவர் யார் என்றும், பிரம்மலோகத்தின் ரகசிய இடத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவனை தோற்றுவித்தவர் யார் என்றும், காலனின் (பிரம்) சுவாசம் மூலம் நான்கு வேதங்களை (புனித ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம்) உச்சரிக்க வைத்த பரமேஸ்வரர் யார் என்றும், ஒவ்வொரு உயிரினத்தையும் அவர் விரும்பியபடி பேசவைக்கும் அந்த பூரண பரமாத்மா யார் என்று முழுவதுமாக விளக்கும் குரு கிடைத்தால் அவரிடம் செல்லுங்கள். அனைத்து சந்தேகங்களையும் தீர்த்துவைப்பார் அவர் பூரண குரு ஆவார் அதாவது தத்துவதரிசி ஆவார்.

ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப் நூலின் பக்கம் 929, குரு நானக் சாகேப் ஜியின் அமுத உரை – ராக் ராம்கலி, மெஹ்லா 1, தக்னி ஓம்கார்.

ஓம்காரி பிரம்ம உதபதி / ஓஅம்காரு கீயா ஜினி சித் / ஓஅம்காரி சைல் ஜுக் பயே / ஓஅம்காரி பேத் நிர்மயே / ஓஅம்காரி சப்தி உதரே / ஓஅம்காரி குருமுகி தரே / ஓணம் அகர் சுணஹஜு பீசாரு / ஓனம் அக்ரு த்ரிபுவண் சாரு /

பொருள் : ஓம்காரம் அதாவது ஜோதி நிரஞ்சன் (கால்) மூலமாக பிரம்மா தோன்றினார். பல யுகங்கள் ஓய்வெடுத்த பிறகு ஓங்காரர் (பிரம்) வேதங்களை படைத்தார் அவை பிரம்மாவால் பெறப்பட்டன. “ஓம்” மந்திரம் மட்டுமே மூன்று லோகங்களின் பக்திக்கான உண்மையான மந்திரம் ஆகும். பூரண குருவிடமிருந்து தீட்சை பெற்று இந்த “ஓம்” மந்திரத்தின் ஜபம் செய்தால் தான் பலன் பெறுவோம்.

சிறப்பு : ஸ்ரீ நானக் சாஹேப் ஜி அவர்கள் மூன்று மந்திரங்களின் (ஓம், தத், சத்) விளக்கத்தை பல்வேறு இடங்களில் மர்மமாக அளித்துள்ளார். அதை பூரண குருவால் (தத்வதரிசி குரு) மட்டுமே புரிந்து கொள்ள முடியும் மற்றும் மூன்று மந்திரங்களை ஜபம் செய்யும் முறை சீடருக்கு மட்டுமே

விளக்கப்படும்.

(பக்கம் எண்.1038)

உத்தம் சதிகுரு புருஷ் நிராலே, சப்தி ரதே ஹரி ரஸ் மத்வாலே /
ரிதி, புத்தி, சித்தி, கியான் குரு தே பாஇயே, பூரே பாக் மிலாயீதா //15
சதிகுரு தே பாயே பீசாரா, சன் சமாதி சசே கர்பாரா /
நானக் நிர்மல் நாது சபத் துனி, சசு ராமை நாமி சமாஇதா (17)

பொருள் : உண்மையான அறிவைத் தரும் சத்குரு தனித்துவமானவர், அவர் மந்திர ஜபம் மட்டுமே செய்வார், மற்ற கொடிய தவம் முறைகளைச் செய்ய சொல்வதில்லை. நீங்கள் செல்வம், பதவி, புத்தி அல்லது பக்தியின் சக்தியை விரும்பினால், அந்த பக்தி மார்க்கத்தைப் பற்றிய முழு ஞானத்தை பூரண குருவால் மட்டுமே வழங்கமுடியும். அத்தகைய பூரண குரு பெரும் யோகத்தால் மட்டுமே கிடைப்பார். மேலே நமது உண்மையான வீடான சத்யலோகத்தை பரமேஸ்வர் படைத்துள்ளார் என்பதை பூரண குரு மட்டுமே விவரிப்பார். சத்யலோகத்தில் சார்நாம் உடைய ஒரு சப்தம் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அந்த மகிழ்ச்சியை அளிக்கும் பேரின்ப நிலையை பரமேஸ்வரரின் சார்ஷபத் மந்திரத்தால் அடைய முடியும், வேறு எந்த மந்திரத்தாலும், முழுமையற்ற குருக்களாலும் அடைய முடியாது.

ஆன்சிக் புனித உரை, மஹ்லா 1 (ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப் நூலின், பக்கம்.359-360)

சிவ நகரி மஹி ஆஸணி பைஸஉ கலப் தியாகி வாந்த் / (1)
சின்டி சபத் சதா துனி ஸோஹை அஹினிசி பூரை நாதம் / (2)
ஹரி கீர்தி ரெஹ் ராஸி ஹமாரி குரு முக பந்த் அதீதம் / (3)
சகலி ஜோதி ஹமாரி சம்மிஆ நானா வரன் அநேகம் /
கஹ் நானக் சுனி பரதரி ஜோகி பாரப்ரஹ்ம லிவ் ஏகம் / (4)

பொருள் : ஸ்ரீ குரு நானக் சாகேப் சொல்கிறார், பர்தரி யோகியே, உங்கள் வழிபாடு சிவபெருமானுக்கு உரியது, அதனால் உங்களுக்கு சிவன் லோகத்தில் இடம் கிடைத்துள்ளது. உங்கள் உடலில் நிகழும் கொம்பு வாத்தியம் சப்தம் போன்றவை இந்த கமலங்களால் ஒலிக்கிறது, மேலும் தொலைக்காட்சி போல ஒவ்வொரு தெய்வத்தின் லோகத்திலிருந்து உடலில் ஒல கேட்கும். நான் (நானக்), ஒரே கடவுள் பூரண பிரம், அதாவது அனைவருக்கும் அப்பாற்பட்ட வேறொரு பூரண பரமாத்மா என்ற கடவுளில் மட்டுமே முழுமனதுடன் மூழ்கி இருக்கிறேன்.

நான் வெளிவேஷம் (சாம்பலை தடவி கையில் மந்திரக்கோல் வைப்பது) காட்டுவதில்லை. எல்லா உயிர்களையும் ஒரே பரமாத்மாவின் (சத்புருஷனின்) குழந்தைகளாக கருதுகிறேன். அவருடைய சக்தியால் நாம் செயல்படுகிறோம். பூரண குருவிடமிருந்து உண்மையான மந்திரத்தை பெற்று ஜபிப்பதே எனது முத்திரை ஆகும், மன்னிப்பதே எனது உடையாகும். நான் பூரண பரமாத்மாவின் பக்தன் ஆவேன், பூரண சத்குருவின் பக்தி மார்க்கம் வேறுபட்டது.

அமுதஉரை, ராக் ஆசா, மேஹலா 1 (ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப், நூல் பக்கம் 420)

// ஆசா மஹலா 1 // ஜினி நாமு விசாரியா தூஜை பர்மி புலாயீ / மூலு சோடி டாலி லகே கிஆ பாஹவி சாயீ //1// சாஹிபு மேரா ஏகு ஹை அவரு நஹின் பாயீ / கிர்பா தே ஸுகு பாஇஆ சாசே பார்தாயீ //3// குரு கி சேவா சோ கரே

ஜிசு ஆபி கராயே / நானக் சிரு தே சூடியே தர்கஹ் பதி பாயே //8// //18//

பொருள் : என்னவென்றால், ஸ்ரீ குரு நானக் சாஹேப் சொல்கிறார், பரமாத்மாவின் உண்மையான மந்திரத்தை மறந்து, மற்ற தெய்வங்களின் மந்திரத்தை உச்சரிப்பவர்கள், வேரினை (பூரண பரமாத்மா) விட்டு கிளைகளுக்கு (முக்குணம் ரஜ்குணம்-பிரம்மா, சத்குணம்-விஷ்ணு, தமோகுணம்-சிவன்) பாசனம் (வழிபடுதல்) செய்வதாகும். அந்த வழிபாட்டால் எந்த பலனும் கிடைக்காது, அதாவது செடி வாடி விடும், உட்கார நிழலும் கிடைக்காது. அதாவது சாஸ்திர விதிக்கு மாறான பக்தி வீணானது. இதன் ஆதாரம் புனித கீதை அத்-16 ஸ்லோகம் 23-24 இல் உள்ளது. பூரண பரமாத்மாவை அடைய மனம் போனபடி பக்தி செலுத்தாமல் பூரண குருவிடம் சரணடைந்து, உண்மையான மந்திரத்தின் ஜபம் செய்தால் மோட்சம் கைகூடும், இல்லையெனில் மரணத்திற்கு பிறகு நரகம் செல்லவேண்டும்.

ஸ்ரீ குரு கிரந்த சாகேப் பக்கம் 843, 844

// பிலாவலு மஹ்லா 1 // மைம் மன் சாஹூ கனா சாசி விகாசி ராம் // மோஹி பிரேம் பிரே பிரபு அபினாசி ராம் // அவிகதோ ஹரி நாது நாதஹ திசை பாவை ஸோ தீயே / கிர்பாலு சதா தயிஆலு தாதா ஜீயா அந்தரி தூம் ஜீயே / மைம் ஆதாரு தேரா தூ கஸமு மேரா மைன் தானு தகீஆ தேரஓ / சாசி சூசா சதா நானக் குர்சப்தி ஜக்ரு நிபேரவோ //4//2//

பொருள் : ஸ்ரீ நானக் சாஹேப் ஜி சொல்கிறார், அழிவற்ற பூரண பரமாத்மா தேவர்களுக்கெல்லாம் தேவன் (ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன், பிரம் மற்றும் பரபிரம் மீதும், அவர் சுவாமி). நான் உண்மையான மந்திரத்தை இதயத்தில் இணைத்துவிட்டேன். பரமாத்மனே! அனைத்து உயிர்களுக்கும் ஆதாரம் நீயே, எஜமானன் ஆகிய உன்னிடம் நான் தஞ்சம் அடைந்து விட்டேன். நீங்களே குரு வடிவில் வந்து பக்தியின் தீர்க்கமான ஞானத்தை அளித்து மனதிலுள்ள சந்தேகங்களையும் தீர்த்தீர்கள்.

ஸ்ரீ குரு கிரந்த் சாகேப் பக்கம் 721, ராக் திலங் மஹல்லா 1

யாக் அர்ஜ் குப்தம் பேஷ் தோ தர் கூன் கர்தார் / ஹக்கா கபீர் கரீம் தூ
பேஅப் பர்வர்திகார் / நானக் புகோயத் ஜன் துரா தேரே சாகராங் பாகாக் //

பொருள்: (ஹக்கா கபீர்) சத்ய கபீரே, நீங்கள் (கூன் கர்தார்) சபத் சக்தியால் படைக்கும் ஷபத் ஸ்வரூபி பிரபு, அதாவது பிரபஞ்சம் முழுவதையும் படைத்தவர் என்று மேற்கூறிய புனித உரையில் தெளிவாகிறது. நீங்கள் மட்டுமே (பேஎப்) குறையற்றவர் (பர்வர்திகார்) அனைத்தையும் காக்கும் (கரீம்) கருணை பிரபுவே, நான் உமது அடியார்களின் அடியேன்.

ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப் பக்கம் 24, ராக் சீரி மஹல்லா 1

தேரா ஏக் நாம் தாரே சன்சார், மைன் ஜஹா ஆஸ் ஜஹோ ஆதார் //
நானக் நீச் கஹை பிசார், தானாக் ரூப் ரஹா கர்தார் //

பொருள் : காசியில் உள்ள நெசவாளர் (தானக்) அனைத்தையும் உருவாக்கியவர் (கர்தார்) என்பது மேற்கூறிய புனித உரையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. உண்மையை சொல்லுகிறேன், இந்த தானக் அதாவது கபீர் நெசவாளர் பூரண பிரம் (சத்புருஷ்) என்று முழு சமர்ப்பணத்துடன் ஸ்ரீ நானக் சாஹிப் கூறுகிறார்.

சிறப்பு:- இயற்கை எவ்வாறு உருவானது? என்பது மேற்கூறிய ஆதாரங்களிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. பரமாத்மாவை அடைய பூரண குருவிடம் தீட்சை எடுப்பதன் மூலமே சாத்தியமாகும்.

## படைப்புகள் பற்றி மற்ற குருமார்கள் உருவாக்கிய கற்பனை கதைகள்

இயற்கையின் படைப்பைப் பற்றி மற்ற மகான்கள் கூறியது என்ன? மேலும் படியுங்கள் இயற்கையின் உருவாக்கம் குறித்து ராதாஸ்வாமி இயக்கம் மற்றும் தன்-தன் சத்குரு இயக்கத்தின் கருத்துக்கள்.

புனித நூல் "ஜீவன் சரித்தர் ஜெய்மல் சிங் ஜி மகாராஜ்" பக்கம் 102, 103 இயற்கையின் உருவாக்கம் (சவான் கிருபாள் வெளியீடு, தில்லி)

முதலில் சத்யபுருஷ் அருவமாக இருந்தார். பிறகு உருவத்தில் தோன்றி மேலே மூன்று தூய மண்டலங்களாகவும் (சத்லோகம், அலக் லோகம், அகம் லோகம்), மற்றும் மண்டலங்களின் ஒலியாகவும் மாறினார்.

புனித நூல் சார்வச்சன் (நசர்), பதிப்பாளர் – ராதாஸ்வாமி சத்சங் சபா, தயாள், ஆக்ரா. இயற்கையின் உருவாக்கம், பக்கம் 8:-

"ஆரம்பத்தில் இருள் இருந்தது. புருஷ் அதில் மௌன தியானத்தில் இருந்தார். அப்போது படைப்பு இல்லை. பின்னர் அவர் விரும்பியபோது, சப்தம் தோன்றியது, அதிலிருந்து அனைத்தும் உருவாக்கப்பட்டன. முதலில், சத்யலோகம் மற்றும் பின்னர் சத்புருஷின் திறமையால், மூன்று லோகங்கள் மற்ற அனைத்தும் வந்தன".

இது எப்படி இருக்கிறது என்றால், ஒரு சிறுவன் வேலை தேடி நேர்முகத்தேர்விற்குச் சென்றான், அங்கு அதிகாரி மகாபாரதம் தெரியுமா என்று கேட்கிறார். தனக்கு மகாபாரதம் மிக அத்துப்படி என்றான். அதிகாரி ஐந்து பாண்டவர்களின் பெயர்களைக் கேட்டார். சிறுவன், ஒருவர் பெயர் பீமன் அவருக்கு அண்ணன் ஒருவனும் தம்பி ஒருவன், மற்றொருவர் பிறகு இன்னொருவர் பெயர் நினைவு இல்லை என சொன்னான். மேற்குறிப்பிட்ட இயற்கையின் படைப்பு பற்றிய அறிவு இப்படி இருக்கிறது.

சத்யபுருஷ் மற்றும் சத்யலோகத்தின் மகிமையைக் கூறுபவர்கள் ஐந்து மந்திரங்கள் (ஓம்கார் – ஜோதி நிரஞ்சன் – ரரங்கார் – சோஹம் – சத்யநாம்) மற்றும் மூன்று மந்திரங்கள் (அகால் மூர்த்தி – சத்புருஷ் – சப்த் ஸ்வரூபி ராம்) கொடுக்கும் ஞானிகளின் புத்தகங்களிலிருந்து சில முடிவுகள்:

சந்த்மத் பிரகாஷ் நூலின், பகுதி 3, பக்கம் 76 இல், "சச்கண்ட் அல்லது சத்நாம் நான்காவது லோகம்" என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் இங்கு சத்னாம் என்பதை இடம் என்று சொல்கிறார்கள். பின்னர் இதில் பக்க எண் 79 இல், ஒரு ராம் "தசரதத்தின் மகன்", இரண்டாவது ராம் "மனம்", மூன்றாவது ராம் "பிரம்", நான்காவது ராம் "சத்நாம்" இதுவே உண்மையான ராம் என்று எழுதப்பட்டுள்ளது. பின்னர் புனித புத்தகமான சந்த்மத் பிரகாஷ், பகுதி 1, பக்கம் 17 இல், அந்த சத்யலோகம், சத்நாம் எனப்படும் என்று எழுதப்பட்டுள்ளது. புனித நூல் "சார் வச்சன் நசர் யானிக் வர்டிக்" பக்கம் 3ல், "இப்போது ராதாஸ்வாமியை அனைத்திற்கும் மேலான ஸ்தானமாக எண்ணவேண்டும், இதை சத்லோக் மற்றும் சச்கண்ட், சார்ஷப்த், சத்சபத், சத்நாம் மற்றும் சத்புருஷ் என்று மகான்கள் விவரித்துள்ளனர் என்று எழுதப்பட்டுள்ளது. புனித நூல் சார் வச்சன் (நசர்), ஆக்ராவிலிருந்து வெளியீடு, பக்க எண். 4இல், மேற்கூறிய அதே விளக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. புனித நூல் சச்கண்ட் கி சடக், பக்கம் எண். 226இல், "சாதுக்களின் தேசம் சச்கண்ட் அல்லது சத்யலோக் ஆகும், இது சத்நாம் – சத்சபத் – சார்சபத் என்றும் அழைக்கப்படும்".

சிறப்பு : மேற்கூறிய விளக்கம் எப்படி இருக்கிறது என்றால், தனது வாழ்க்கையில் ஒரு நகரத்தையோ, காரையோ அல்லது பெட்ரோலைப் பார்க்காதவன், ஓட்டுநர் எனப்படும் டிரைவரை பற்றி தெரியாத ஒருவர், மற்ற நண்பர்களிடம் நான் காரில் அமர்ந்து ஆனந்தமாய் ஊருக்குச் செல்கிறேன் என்று கூறுகிறார். மேலும் நண்பர்கள் கார் எப்படி இருக்கும்? பெட்ரோல் எப்படி இருக்கும்? டிரைவர் என்றால் என்ன, நகரம் எப்படி இருக்கும்? என்று கேட்டபோது அதற்கு அந்த குருஜி இவ்வாறு பதிலளிக்கிறார், "அதை நகரம் அல்லது கார் என்று சொல்லலாம் ஒன்றுதான். நகரமும், பெட்ரோலும், ஓட்டுனரும், தெருவும் அனைத்தும் கார் என்று தான்அழைக்கப்படும்".

சற்று சிந்திப்போம் – சத்யபுருஷ் பூரண பரமாத்மா ஆவார், சத்யநாம் என்பது இரண்டு மந்திரங்களின் பெயர், அதில் ஒன்று ஓம் மற்றொன்று தத், இது குறியீடாக உள்ளது, அதன் பிறகு சார்நாம் பூரண குருவால் சீடருக்கு வழங்கப்படும். இந்த சத்யநாம் மற்றும் சார்நாம் இரண்டுமே ஜபம் செய்யும் மந்திரங்கள் ஆகும். சத்யலோகம் என்பது சத்யபுருஷ் வசிக்கும் இடம் ஆகும். புண்ணிய ஆத்மாக்களே எது உண்மை எது பொய் என்று தானே முடிவு செய்ய வேண்டும்.

*****

# அனைவருக்கும் எஜமான் யார்? அவர் எப்படி இருப்பார்?

இறைவனை அடைந்த புண்ணிய ஆன்மாக்கள் எல்லோரும் அனைவரின் எஜமானர் ஒருவரே என்று சொல்கின்றனர். மனித வடிவில் ஒளி உடலைக் கொண்டவர். அவருடைய உடலின் ஒரு முடியில் உள்ள ஒளி, கோடிக்கணக்கான சூரியனின் ஒளியை விட அதிகமானது. அவர் பல வடிவங்களில் இருக்கிறார். பரமேஸ்வருடைய உண்மையான பெயர் வெவ்வேறு மொழிகளில் மாறுபடும். அது வேதம் மற்றும் சமஸ்கிருதத்தில் கவிர்தேவ் என்றும், ஸ்ரீ குரு கிரந்த் சாகேப் நூலில் பக்கம் 721ல் ஹக்கா கபீர் என்றும், ஸ்ரீ தரம்தாஸ்ஜியின் உரையில் சத்கபீர் என்றும், சந்த் கரீப்தாஸ் ஜியின் சத் கிரந்த நூலில் பந்தி சோட் கபீர் என்றும், மேலும் ஸ்ரீ குரான் ஷரீஃப் சூரத் ஃபுர்கானி 25 ஆயத் 19, 21, 52, 58, 59 அரபி மொழியில் கபீரா மற்றும் கபீரன் ஆகும். இதே பூரண பரமாத்மாவின் உருவகப் பெயர் அனாமி புருஷ். அலக் புருஷ், அகம் புருஷ், சத்யபுருஷ், அகால் மூர்த்தி, சபத் ஸ்வரூபி ராம், பூரண பிரம், பரம் அக்ஷர் பிரம் போன்றவை ஆகும். உதாரணமாக, நாட்டின் பிரதமரின் உடற்பெயர் வேறும், பதவியின் பெயர் பிரதம மந்திரி, பிரைம் மினிஸ்டர் என வேறாகும். உதாரணமாக, பிரதமர் உள்துறையை தன்னிடமே வைத்துக் கொண்டால். அந்த துறையின் ஆவணங்களில் கையொப்பமிடும்போது, அவர் உள்துறை அமைச்சராக தனது பதவியை எழுதி செயல்படுகிறார். கையெழுத்து ஒரே மாதிரியாக இருக்கும். அவ்வாறே நாமும் இறைவனுடைய நிலையை அறிய வேண்டும்.

இறைவனை அடைய முடியாத மகான்களும், முனிவர்களும், கடவுளின் ஒளி மட்டுமே காணமுடியும், உருவம் இல்லாததால் அவர் தென்படுவதில்லை என்றும், உடலில் ஒலி போன்றவற்றைக் கேட்பது இறைவனின் பக்தியின் சாதனை என்றும் தங்கள் இறுதி அனுபவத்தை விவரித்துள்ளனர்.

சற்று யோசிப்போம் : ஒரு பார்வையற்றவர் மற்ற குருடர்களிடையே தான் பார்வை கொண்டவர் என்று நிரூபிப்பதற்கு, இரவில் நான் நிலவை காண்கிறேன், நிலவின் ஒளி மனதிற்கு இதமாக இருக்கிறது என்று கூறுகிறார். மற்ற பார்வையற்ற சீடர்கள், குருவே, சந்திரன் எப்படி இருக்கும்? என்று கேட்டார்கள். புத்திசாலியான குருடர், நிலவு உருவமற்றது, அதைப் பார்க்க முடியாது என்று பதிலளித்தார். அதாவது சூரியன் உருவமற்றது, சுயமாக ஒளிர்கிறது, அதைப் பார்க்க முடியாது, அதன் ஒளியை மட்டுமே பார்க்க முடியும் என்று சொல்வதுபோல் உள்ளது. குருவின் சொல்படி காலை, மாலை இரு நேரமும் 2 மணிநேரமும் சீடர்கள் வானத்தைப் பார்த்து முயற்சி செய்தும், எதுவும் தெரியவில்லை. எனவே குரு சொல்வது சரிதான், நம்மால் முழுமையாக சாதகம் செய்ய இயலாததால், சூரியன் மற்றும் சந்திரனின் ஒளி நமக்கு தென்படவில்லை என்று நினைத்துக்கொண்டார்கள். இப்படி தந்திரமான குருவின் விளக்கத்தின் அடிப்படையில், கோடிக்கணக்கான குருக்கள் குருடர்களாக (அறிவற்றவர்களாக) மாறிவிட்டனர். எனவே கண்கள் உள்ள ஒருவர் (தத்துவதரிஷி), சூரியனும் சந்திரனும் உருவமாக இருப்பதாகவும், அதிலிருந்து தான் ஒளி வருவதாகவும் விளக்குவார். சந்திரன் இல்லாமல் இரவில் வெளிச்சம் எப்படி வரும்? உதாரணமாக, யாராவது டியூப் லைட்டை பார்த்ததாக சொன்னால், சிலர் அது எப்படி இருக்கும் என்று கேட்டால்? டியூப் லைட் உருவமற்றதால், அதன் வெளிச்சம்

மட்டுமே பார்க்க முடியும் என்கிறார்.

சிந்தியுங்கள்:- டியூப் லைட் இல்லாமல் வெளிச்சம் எப்படி வரும். யாராவது வைரம் சுயமாக ஒளிர்கிறது, உருவமற்றதால் கண்ணுக்குத் தெரியாது ஆனால் அதன் பிரகாசம் மட்டுமே தெரியும் என்று சொன்னால், அவர் வைரத்தை பற்றி அறியாதவர் ஆவார். பரமாத்மாவை உருவமற்றவர் என்று சொல்லி, ஒளியைக் காண்பதும், ஒலியை கேட்பதையும் மட்டுமே இறைவனை அடைவதாகக் கருதுபவர்கள் கடவுளையும் பக்தியையும் முற்றிலும் அறியாதவர்கள். அவர்களிடம், நீங்கள் எதையும் பார்க்கவில்லை, உங்களைப் பின்பற்றுபவர்களை தவறாக வழிநடத்தி நீங்களும் பாவத்திற்கு ஆளாகிறீர்கள், உங்கள் குருவிற்கும், உங்களுக்கும் தத்துவஞானத்தின் கண்கள் இல்லை, எனவே மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம் என்று பிரார்த்தித்தபோது, ஞானக் கண்கள் இல்லாத அந்த குருடர்கள் இவ்விஷயத்தில், நாங்கள் அனைவரும் பொய்யர்கள், நீ மட்டும் தான் உண்மையானவனா என்று தடியை உயர்த்தினார்கள். இன்று சந்த் ராம்பால் ஜி மகாராஜியும் இதே நிலையில்தான் இருக்கிறார்.

எந்த குருவின் கருத்து சரியானது, யாருடைய கருத்து தவறானது என்று முடிவெடுப்பது எப்படி? உதாரணத்திற்கு, ஐந்து வழக்கறிஞர்கள் ஒரு குற்றத்தைப் பற்றி தங்கள் கருத்துக்களை வைக்கிறார்கள், ஒருவர் இந்தக் குற்றத்திற்கு 301வது பிரிவு விதிக்கப்படும் என்கிறார், இரண்டாமவர் 302, மூன்றாமவர் 304, நான்காமவர் 306 மற்றும் ஐந்தாவது வழக்கறிஞர் 307 சரியானது என்கிறார்.

ஐந்து பேருமே சரி என்று சொல்லமுடியாது, ஒருவரின் கருத்து நாட்டின் அரசியல் சாசனத்துடன் பொருந்தினால் மட்டுமே சரியாக இருக்க முடியும். அவரது கருத்து அரசியலமைப்பிற்கு எதிரானதாக இருந்தால், ஐந்து வழக்கறிஞர்களும் தவறானவர். இதைத் தீர்மானிப்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நாட்டின் புனிதமான அரசியலமைப்புச் சட்டமே. அதேபோல, வெவ்வேறு சிந்தனை மற்றும் வழிபாடுகளில் எது சாஸ்திரத்திற்கு இணங்க உள்ளது மற்றும் எது சாஸ்திரத்திற்கு எதிரானது என்பதை புனித சாஸ்திர நூல்கள் மட்டுமே தீர்மானிக்கும், அவை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். (இதே ஆதாரம் புனித ஸ்ரீ பகவத் கீதை அத் 16 ஸ்லோகம் 23-24 இல் உள்ளது)

அந்த சூரியனைக் (பூரண பரமாத்மாவை) கண்ட ஞானக்கண் கொண்ட (பூரண குருவானவர்) சிலரின் பெயர்கள் பின்வருமாறு:-

1. மரியாதைக்குரிய தரம்தாஸ் சாகேப் ஜி, 2. மரியாதைக்குரிய தாது சாகேப் ஜி, 3. மரியாதைக்குரிய மளுக்தாஸ் சாகேப் ஜி, 4. மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாகேப் ஜி, 5. மரியாதைக்குரிய குருநானக் சாகேப் ஜி மற்றும் 6. மரியாதைக்குரிய கீசா தாஸ் சாகேப் ஜி அவர்கள்.

### மரியாதைக்குரிய தரம்தாஸ் சாகேப் ஜி கபீர் பரமேஸ்வரனின் சாட்சி

மரியாதைக்குரிய தரம்தாஸ் சாகேப் ஜி அவர்கள் பாந்தவ்கட் கிராமம், மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர், அவரை பூரண பரமாத்மா ஜிந்தா மகாத்மா (கருப்பு உடைகொண்ட மகான்) வடிவில் வந்து மதுராவில் சந்தித்தார், பிறகு அவரை சத்யலோகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே, சத்யலோகத்தில் இரண்டு வடிவங்களைக் காட்டி, ஜிந்தா மகாத்மா ரூபத்தில் பூரண பரமாத்மாவின் சிம்மாசனத்தில், அமர்ந்து, மரியாதைக்குரிய தரம்தாஸ் சாஹிப் ஜியிடம், நான் தான் காசியில் நீரு-நீமா

**வீட்டில் வந்துள்ளேன், அங்கு (தானக்) நெசவாளராக லீலை செய்கிறேன், மதிப்பிற்குரிய ஸ்ரீ ராமானந்தர் என் குரு ஆவார் என கூறினார். பிறகு ஸ்ரீ தரம்தாஸ் ஜியின் ஆன்மாவை மீண்டும் அவரது உடலுக்கு அனுப்பினார். ஸ்ரீ தரம்தாஸ் ஜியின் உடல் இரண்டு நாட்கள் சுயநினைவின்றி இருந்தது, மூன்றாவது நாள் சுயநினைவு பெற்றது. பிறகு காசியில் தேடியபோது, காசியில் வந்திருக்கும் இந்த நெசவாளர் பூரண பரமாத்மா (சத்புருஷ்) என்பதைக் கண்டறிந்தார். மரியாதைக்குரிய தரம்தாஸ் சாஹிப் ஜி அவர்கள் கண்ணால் கண்ட விவரம் மற்றும் பூரண பரமாத்மாவால் கூறப்பட்ட புனித உரையின் அடிப்படையில் கபீர் சாகர், கபீர் சாகி, கபீர் பீஜக் என்ற புனித நூல்களை எழுதினார். அந்த புனித உரையில் உள்ள ஆதாரங்கள்:-**

ஆஜ் மோஹே தர்ஷன் தியோ ஜி கபீர் // டேக் //
சத்யலோக் சே சல் கர் ஆயே, காடன் ஜம் கி ஜன்ஜீர் //1//
தாரே தர்ஷன் சே ம்ஹாரே பாப் கடத் ஹைன், நிர்மல் ஹோவே ஜி ஷரீர்//2//
அமருத் போஜன் ம்ஹாரே சத்குரு ஜீமை, சப்த தூத் கீ கீர்//3//
இந்து கே தும் தேவ் கஹாயே, முசல்மான் கே பீர் //4//
தோனோம் தீன் கா ஜகடா சிட் கயா, தோஹே நா பாயே ஷரீர்//5//
தர்மதாஸ் கீ அர்ஜ் கோசாயீ, பேடா டங்காயீயோ பர்லே தீர் //6//

**மரியாதைக்குரிய தாது சாகேப் ஜி கபீர் பரமேஸ்வரனின் சாட்சி**

**மரியாதைக்குரிய தாது சாஹிப் ஜி ஏழு வயது சிறுவனாக இருந்தபோது, பூரண பரமாத்மா அவரை ஜிந்தா மகாத்மா ரூபத்தில் சந்தித்து அவரை சத்யலோகத்திற்கு அழைத்துச் சென்றார். தாது ஜி மூன்று நாட்கள் சுயநினைவின்றி இருந்தார், சுயநினைவு திரும்பிய பிறகு, பரமாத்மாவின் கண்ணால் கண்டா மகிமையின் பல அமுத உரைகளை உச்சரித்தார்.**

ஜின் மோகுன் நிஜ் நாம் தியா, சோயீ சத்குரு ஹமார் /
தாது தூஸ்ரா கோயி நஹின், கபீர் ஸர்ஜன் ஹார் //
தாது நாம் கபீர் கீ, ஜை கோயி லீவ் ஓட் /
உன்கோ கப்ஹூ லாகே நஹின், கால் வஜ்ர கி சோட் //
தாது நாம் கபீர் கா, சுங்கர் கான்பே கால் /
நாம் பரோஸே ஜோ நர் சலே, ஹோவே ந பங்கா பால் //
ஜோ ஜோ ஷரன் கபீர் கே, தர்காயே அனந்த் அபார் /
தாது குண் கீதா கஹே, கஹத் ந ஆவை பார் //
கபீர் கர்தா ஆப் ஹை, தூஜா நஹின் கோய் /
தாது பூரன் ஜகத் கோ, பக்தி த்ரதாவன் சோய் //
டேகா பூரன் ஹோய் ஜப், சப் கோயி தஜை ஷரீர் /
தாது கால் கஞ்சே நஹின், ஜபை ஜோ நாம் கபீர் //
ஆத்மி கீ ஆயு கடை, தப் யம் கேரே ஆய் /
சுமிரன் கியா கபீர் கா, தாது லியா பசாய் //
மேடி தியா அப்ராத் சப், ஆய் மிலே சன்மாங்ஹ் /
தாது சங் லே சலே, கபீர் சரண் கி சாங்ஹ் //
சேவக் தேவ் நிஜ் சரண் கா, தாது அப்னா ஜான் /
பர்கி சத்யா கபீர் நே, கீன்ஹா ஆப் சமான் //
தாது அந்தர்கத் சதா, சின்-சின் சுமிரன் தியான் /
வாரு நாம் கபீர் பர், பல்-பல் மேரா பிரான் //
சுன்-சுன் சாகி கபீர் கி, கால் நவாவை மாத் /

தன்ய-தன்ய ஹோ தின் லோக் மே, தாதூஜோடே ஹாத் //
கேஹ்ரி நாம் கபீர் கா, விஷம் கால் கஜ் ராஜ் /
தாது பஜன் பிரதாபதே, பாகே சுனத் ஆவாஜ் //
பால் ஏக் நாம் கபீர் கா, தாது மஞ்சித் லாய் /
ஹஸ்தி கே அஷ்வார் கோ, ஷ்வான் கால் நஹின் காய் //
சுமிரத் நாம் கபீர் கா, கடே கால் கி பீர் /
தாதூதின் தின் ஊஞ்சே, பர்மானந்த் சுக் சீர் //
தாது நாம் கபீர் கி, ஜோ கோயீ லேவே ஓட் /
தின்கோ கப்ஹூன் நா லகயீ, கால் பஜ்ர கி சோட் //
அவுர் சந்த் சப் கூப் ஹைன், கேதே சரிதா நீர் /
தாது அகம் அபார் ஹை, தரியா சத்ய கபீர் //
அப்ஹீ தேரி சப் மிடை, ஜன்ம மரன் கி பீர் /
ஸ்வான்ஸ் உஸ்வான் சுமிர்லே, தாது நாம் கபீர் //
கோயி சர்குன் மே ரீஜ் ரஹா, கோயி நிர்குண் டஹராய் /
தாது கதி கபீர் கீ, மோதே கஹீ ந ஜாய் //
ஜின் மோகூம் நிஜ் நாம் தியா, சோயி சத்குரு ஹமார் /
தாது தூஸ்ரா கோயீ நகீம், கபீர் சர்ஜன் ஹார் //

## மரியாதைக்குரிய மலுக் தாஸ் சாகேப் ஜி கபீர் பரமேஸ்வரனின் சாட்சி

ஸ்ரீ மலுக் தாஸ் சாஹேப் ஜியை 42 வயதில் பூரண பரமாத்மா சந்தித்தார் மற்றும் ஸ்ரீ மலுக் தாஸ்ஜி இரண்டு நாட்கள் சுயநினைவின்றி இருந்தார். பின்னர் பின்வரும் உரையை உச்சரித்தார்:

ஜபோ ரே மன் சத்குரு நாம் கபீர் // டேக் //
ஜபோ ரே மன் பரமேஷ்வர் நாம் கபீர் //
ஏக் சமய் குரு பன்சி பஜாயீ காலந்திரி கே தீர் //
சுர்-நர் முனி தக் கயே, ருக் கயா தரியா நீர் //
காஷி தஜ் குரு மக்ஹர் ஆயே, தோனோ தீன் கே பீர் //
கோயி காடே கோயி அக்னி ஜராவை, தூன்டா நா பாயா ஷரீர் //
சார் தாக் சே சத்குரு ன்யாரா, அஜரோ அமர் ஷரீர் //
தாஸ் மலூக் சலூக் கஹத் ஹைம், கோஜோ கசம் கபீர் //

## ஹரியானாவை சேர்ந்த மரியாதைக்குரிய கரீப்தாஸ் சாகேப் ஜி கபீர் பரமேஸ்வரனின் சாட்சி

மதிப்பிற்குரிய கரீப்தாஸ் சாஹிப் ஜி 1717 இல் பிறந்தார். அவர் 1727 ஆம் ஆண்டு, தனது 10 வயதில் நாலா என்ற வயலில் கபீர்ஜியை தரிசித்தார் மற்றும் 1778 இல் சத்யலோகம் சென்றார். பரமேஸ்வரர் கபீர் ஜி ஜிந்தா மகாத்மா ரூபத்தில் மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜியை சந்தித்தார். மதிப்பிற்குரிய கரீப்தாஸ் சாகேப் ஜி தனது நண்பர்களோடு கப்லானா கிராமத்தின் எல்லையில் ஒட்டியிருக்கும் நாலா என்ற தனது வயல்களில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். அங்கு ஜிந்தா மகாத்மா வடிவில் தோன்றிய கபீர் பரமேஷ்வரரிடம் மாடு மேய்ப்பவர்கள், பாலை அருந்தும்படி வேண்டினர் ஏனென்றால் தான் சத்யலோகத்திலிருந்து உணவு அருந்தி வந்துள்ளதாக பரமேஸ்வர் முன்னர் கூறியிருந்தார். அப்போது, பரமேஸ்வர் கபீர் ஜி கன்னிப் பசுவின் பாலை மட்டும் தான் அருந்துவேன் என்றார். பின்னர் கரீப்தாஸ் ஜி ஒரு கன்னிப் பசுவை பரமேஸ்வர் கபீர் ஜியிடம் கொண்டு வந்து, பாபா ஜி, இந்த கன்னி பசு எப்படி பால் கொடுக்க முடியும்?

என்றார். அப்போது கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அந்த கன்றுக்குட்டி மீது தனது கைகளை வைக்க, கன்னிப் பசுவின் மடியிலிருந்து தானாகவே பால் சுரந்தது, பாத்திரம் நிரம்பியதும் தானாக நின்றுவிட்டது. பரமேஸ்வரர் கபீர் ஜி அந்த பாலை அருந்தி, சிறிது பாலை கரீப்தாஸ் ஜிக்கு பிரசாதமாக கொடுத்து அவரை சத்யலோகம் அழைத்துச் சென்றார். சத்யலோகத்தில் தனது இரு உருவங்களைக் காட்டி, ஜிந்தா மகாத்மா வடிவில் அனைவரின் எஜமானராக சிம்மாசனத்தில் அமர்ந்து, நானே 120 ஆண்டுகள் காசியில் நெசவாளர் வடிவில் லீலை செய்து வந்துள்ளேன் என்றார். அதற்கு முன்னர் ஹஜரத் முகமதுவையும் சந்தித்தேன். புனித குர்ஆன் ஷெரீப்பில் கபீரா, கபீரன், அல்லாஹு அக்பர், என்ற பெயர்கள் என்னையே குறிக்கும். ஸ்ரீ குரு நானக் ஜியை ஜிந்தா மகாத்மா ரூபத்தில் பெயி நதிக்கரையில் சந்தித்தது நானேதான். (ஜிந்தா மகாத்மாக்கள் முஸ்லீம்களில் உள்ளனர், அவர்கள் முழங்கால் வரையிலான கருப்பு ஆடையை அணிந்து, தலையில் கருப்பு கூம்புத் தொப்பியை அணிவார்கள்) நான்தான் பலக் நகரின் மன்னர் இப்ராஹிம் சுல்தான் ஆதாம் மற்றும் ஸ்ரீ தாது ஜியை சந்தித்தேன், மற்றும் நான்கு புனித வேதங்களில் கவிர்அக்னி, கவிர்தேவ் (கவிராங்கரி) போன்ற பெயர்கள் என்னை தான் குறிக்கின்றன. கபீர் சாஹிப் கூறுகிறார்:–

கபீர் வேத் ஹமாரா பேத் ஹாய், மே மிலுஹ் பேதோ சே நாஹி /
ஜோன் பேத் சே மே மிலு, வோ பேத் ஜான்தே நாஹி //

நான் தான் வேதங்களுக்கு முன்பும் சத்யலோகத்தில் இருந்தேன். (ஹரியானாவில் ஜஜ்ஜார் மாவட்டம், சுடானி கிராமத்தில், சந்த் கரிப்தாஸ் ஜியை பூரண பரமாத்மா மனித உடலில் சந்தித்த இடத்தில் இன்றும் ஒரு நினைவுச்சின்னம் உள்ளது) மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜியின் ஆன்மா கபீர் பரமேஸ்வரர் உடன் சென்ற பிறகு, கிராம மக்கள் அவர் இறந்துவிட்டதாக கருதி, அவரை தகனம் செய்யத் தயாராகினர். அந்த நேரத்தில், பூரண பரமேஸ்வரர் மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜியின் ஆன்மாவை மீண்டும் அவரது உடலுக்கு அனுப்பினார். பத்து வயது பாலகன் கரீப்தாஸ் உயிர் கொண்டு, பூரண பரமாத்மாவை கண்ணால் கண்ட விவரத்தை தனது புனித உரையில் “சத் கிரந்த்” என்ற நூலை இயற்றினார். அதே புனித உரையில் உள்ள ஆதாரம்:–

அஜப் நகர் மெய்ன் லே கயா, ஹம்கூன் சத்குரு ஆன் /
ஜில்கே பிம்ப் ஆகாத் கதி, சூதே சாதர் தான் //
அனந்த் கோடி பிரம்மண்ட கா, ஏக் ரதி நஹின் பார் /
சத்குரு புருஷ் கபீர் ஹைன், குல் கே ஸர்ஜன் ஹார் //
கைபி கியால் விஷால் சத்குரு, அசல் திகம்பர் தீர் ஹை /
பக்தி ஹெத் காயா தர் ஆயே, அவிகத் சத் கபீர் ஹைன் //
ஹர்தம் கோஜ் ஹனோஜ் ஹாஜர், த்ரிவேணி கே தீர் ஹைன் /
தாஸ் கரிப் தபீப் சத்குரு, பந்தி சோட் கபீர் ஹைன் //
ஹம் சுல்தானி நானக் தாரே, தாது கூம் உப்தேஷ் தியா /
ஜாத் ஜுலாஹா பேத் நஹின் பாயா, காஷி மாஹே கபீர் ஹுஆ //
சப் பத்வி கே மூல் ஹைன், சகல் சித்தி ஹைன் தீர் /
தாஸ் கரீப் சத்புருஷ் பஜோ, அவிகத் கலா கபீர் //
ஜிந்தா ஜோகி ஜகத் குரு, மாலிக் முர்ஷத் பீர் /
தஹூன் தீன் ஜகடா மண்ட்யா, பாயா நஹின் ஷரீர் //
கரீப் ஜிஸ் கூம் கஹதே கபீர் ஜுலாஹா / சப் கதி பூர்ண அகம் அகாஹா //

மேற்கூறிய உரையில், மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜி மகராஜ் கூறுகிறார், காசியின் (தானக்) நெசவாளர் தான் எனக்கு தீட்சை அளித்து, என்னையும் கரை சேர்த்தார், காசியின் இந்த நெசவாளர் (தானக்) தான் (சத்யபுருஷ்) பூரண பிரம் ஆவார் என்பதை தெளிவாக்கியுள்ளார்.

பரமேஸ்வரர் கபீர் தானே சத்யலோகத்திலிருந்து ஜிந்தா மகாத்மா வடிவில் வந்து என்னை அற்புத நகரத்திற்கு (அதிசயமான நகரம் சத்யலோகம்) அழைத்துச் சென்றார். அங்கு மகிழ்ச்சி மட்டுமே இருக்கிறது, எந்த கவலையும் இல்லை, பிறப்பு இறப்பு மற்றும் மற்ற உயிரினங்களின் துன்பங்கள் இல்லை. இதே காசி நகரில் நெசவாளர் வடிவில் வந்த கபீர் சாகேப் (சத்புருஷ்) வெவ்வேறு சமயங்களில் தோன்றி, மரியாதைக்குரிய ஸ்ரீ இப்ராஹிம் சுல்தான் ஆதம் சாகேப், ஸ்ரீ தாது சாகேப், ஸ்ரீ நானக் சாகேப் ஆகியோருக்கு தீட்சை கொடுத்து முக்தி அளித்தார். மனிதனைப் போன்ற வடிவில் உள்ள அந்த கவிர்தேவனின் (கபீர் பரமேஸ்வர்) உடலின் பிரகாசம் கோடி சூரியன்களின் ஒளியை விட மேலானது. அவர் தனது உண்மையான பிரகாசமான உடலின் ஒளியை குறைத்து மனித ரூபத்தில் இந்த மரண உலகத்தில் (மனித உலகம்) நம்மை வந்து சந்திக்கிறார். ஏனென்றால் அந்த பரமேஸ்வரருடைய உடலின் பிரகாசத்தை நம் கண்கள் தாங்கி கொள்ளாது.

மதிப்பிற்குரிய கரீப் தாஸ் சாஹிப் ஜி தனது புனித உரையில் "சர்வகலா சத்குரு சாஹேப் கி, ஹரி ஆயே ஹரியானே நு" என்று கூறினார். அதாவது பூரண பரமாத்மா கவிர் ஹரி (கவிர்தேவ்) வந்த இடம் "ஹரியானா" என்கிறார். இதன் காரணமாக சுற்றியுள்ள பகுதிகள் ஹரியானா என்று அழைக்கப்பட்டன. 1966 இல் பஞ்சாப் மாகாணம் பிரிக்கப்பட்ட பிறகு, இந்த பகுதி ஹரி ஆனா (ஹரியானா) என்று பெயரிடப்பட்டது. நேரம் வரும்போது இந்த பகுதி ஹரியானாவாக அழைக்கப்படும் என்று சுமார் 236 ஆண்டுகளுக்கு முன்பு கூறிய உரை, 1966 இல் நிஜமானது தெளிவாகிறது.

**எனவே, குரு கிரந்த் சாகேப் நூலில், பக்கம் 721, மெஹ்லா 1 இல், ஸ்ரீ நானக் ஜி தனது புனித உரையில் இவ்வாறு கூறியுள்ளார் :–**

ஹக்கா கபீர் கரீம் தூ, பேஏப் பர்வர்திகார் /
நானக் புகோயத் ஜனு துரா, தேரே சாகரான் பாகாக //

**இதற்கான ஆதாரம் குரு கிரந்த் சாஹிப்பின் ராக "சிரி" மஹாலா 1 பக்கம் 24, சப்த்ஃகீதம் 29 இல்**

ஏக் சுவான் துயீ சுஆனி நால், பல்கே பௌங்கஹி சதா பிஆல் //
குட் சுரா முதா முர்தார், தானக் ரூப் ரஹா கர்தார் //1//
மே பதி கி பந்தி நா கர்னி கி கார், உஹ் பிகாடை ரூப் ரஹா பிகரால் //
தேரா ஏக் நாம் தாரே சன்சார், மேன் ஐஹோ ஆஸ் ஏஹோ ஆதார் //
முக் நிந்தா ஆகா தின் ராத், பர் கர் ஜோஹி நீச் மனாதி //
காம் க்ரோத் தன் வஸஹ் சண்டால், தானக் ரூப் ரஹா கர்தார் //2//
ஃபாஹி சூரத் மலூகி வேஸ், உஹ் டக்வாடா டகீ தேஸ் //
கரா சிஆணா பஹுதா பார், தானக் ரூப் ரஹா கர்தார் //3//
மைம் கீதா ந ஜாதா ஹராம்கோர், உஹ் கியா முஹ் தேசா துஷ்ட் சோர்//
நானக் நீச் கா பிசார், தானக் ரூப் ரஹா கர்தார் // 4//

**குரு கிரந்த் சாஹிப்பின் சில பகுதிகள், ராக் ஆசாவ்ரி, மெஹ்லா 1**

சாஹிப் மேரா ஏகோ ஹை / ஏகோ ஹை பாயீ ஏகோ ஹை /
ஆபே ரூப் கரே பாஹு பாந்தி, நானக் பாபுடா எவ கஹ் // (பக். 350)

ஜோ தீன் கீயா சோ சசு தீயா, அமர்த நாம் சத்குரு தீயா // (பக். 352)
குரு புரே தே கதி மதி பாயீ // (பக். 353)
பூடத் ஜகு தேகியா தஉ டரி பாகே //
சதிகுரு ராகே சே பட் பாகே, நானக் குரு கி சரனோ லாகே// (பக். 414)
மைன் குரு பூசியா அபணா சாசா பிசாரி ராம் // (பக். 439)

மேற்கூறிய புனித உரையில், சாஹிப் (கடவுள்) ஒருவரே என்பதை ஸ்ரீ நானக் சாஹிப் ஜியே ஏற்றுக்கொள்கிறார், மேலும் அவருக்கும் ஸ்ரீ நானக் ஜி மனித உருவில் வாழும் குரு இருந்தார், “நான் பூரண குருவிடமிருந்து தத்வஞானத்தைப் பெற்றேன்” என்று அவரை பற்றி கூறினார். அவரே எனக்கு அமுதம் போன்ற மந்திர தீட்சை அதாவது பூரண முக்திக்கான மந்திரத்தை கொடுத்தார். அவரே வெவ்வேறு வடிவங்களைப் பெறுகிறார் அதாவது அவரே சத்யபுருஷ் மற்றும் ஜிந்தா வடிவத்தை எடுக்கிறார். காசி நகரில் நெசவாளர் (தானக்) ரூபத்தில் அவர் சாதாரண மனிதராக அதாவது பக்தராகவும் லீலை செய்கிறார். உலகமே சாஸ்திரங்களுக்கு மாறாக வழிபாடு செய்து பிறப்பு-இறப்பு என்ற நெருப்பில் எரிவதை கண்டு, மேலும் என் வாழ்வு வீணாகிறது என்ற அச்சத்தில் ஓடி குருஜியின் பாதங்களில் தஞ்சமடைந்தேன்.

பலிஹாரி குரு ஆப்னே திஉஹாதி சதவார் //
ஜின் மானஸ் தே தேவதே கியே கரத் ந லாகி வார் //
ஆபினை ஆப் சாஜியோ ஆபினை ரசியோ நாஉ //
துயி குதரதி சாஜியே கரி ஆஸணு டிடோ சாஉ //
தாதா கர்தா ஆபி தூம் துசி தேவஹி கரஹி பசாஉ //
தும் ஜானோ, சபசை தே லைசஹி ஜிந்த் கவாஉ கரி
ஆஸனு டிடோ சாஉ // (பக்கம 463)

இதன் பொருள் என்னவென்றால், பூரண பரமாத்மா ஜிந்தா வடிவத்தில் பெயி என்ற நதிக்கரையில் வந்தார் அதாவது ஜிந்தா என்று அறியப்பட்டார். மேலும் தானே இரண்டு உலகங்கள், மேலே (சத்யலோகம் போன்றவை) மற்றும் கீழே (பிரம் மற்றும் பரபிரம் லோகங்கள்) படைத்து மேலே சத்யலோகத்தில் உள்ள சிம்மாசனத்தில் அமர்ந்து தன்னால் படைக்கப்பட்ட உலகத்தை காண்கிறாய், நீயே சுயம்பு, அதாவது தாயிடமிருந்து பிறப்பதில்லை, தானே தோன்றுகிறாய். இதே ஆதாரம் புனித யஜுர் வேதம் அத்தியாயம் 40 மந்திரம் 8 இல்: “கவிர் மனிஷி ஸ்வயம்புஹ பரிபூ வ்யவதாதா”, அதாவது கவிர் பரமாத்மா எங்கும் நிறைந்தவன் (மனிஷி என்றால் எங்கும் நிறைந்தவன்) மற்றும் (ஸ்வயம்பு) தானே தோன்றுபவன். அவர் (பரிபூ) நித்தியமானவர் அதாவது ஆதி கடவுள். அவர் அனைத்து பிரபஞ்சங்களின் ‘வியவதாதா”, அதாவது அனைத்து வெவ்வேறு லோகங்களை படைத்தவர்.

ஏஹு ஜீஉ பஹுதே ஜனம் பர்மிஆ, தா சதிகுரு ஷபத் சுணாஇயா // (465)

ஸ்ரீ குரு நானக் சாஹிப் ஜி சொல்கிறார், என்னுடைய ஆன்மா நீண்ட காலமாக பிறப்பு-இறப்பின் சுழற்சியில் அலைந்து கொண்டிருந்தது, இப்போது பூரண சத்குரு எனக்கு உண்மையான மந்திரத்தை வழங்கினார். ஸ்ரீ நானக் ஜியின் முந்தைய பிறப்புகள் : சத்யுகத்தில் மன்னர் அம்பரீஷ், திரேதாயுகத்தில் மன்னர் ஜனக், பின்னர் கலியுகத்தில் ஸ்ரீ நானக் ஜி ஆனார் மற்றும் பிற இனங்களின் பிறப்புகள் கணக்கே இல்லை.

# கபீர் பரமேஸ்வர் சுவாமி ராமானந்தருக்கு தத்துவஞானம் போதித்தார்

பண்டிட் சுவாமி ராமானந்தர் ஒரு மிக பெரிய மேதை. அவர் வேதங்கள் மற்றும் கீதையின் மேதையாக கருதப்பட்டார்.

## ஐந்து வயதில் ராமானந்தரை குருவாக ஏற்பது

கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்) தனது லீலையின் ஐந்து வயதில், குரு மகிமையை உயர்த்த லீலை செய்தார். அவர் அதிகாலையில் இரண்டரை வயது குழந்தையின் தோற்றத்தைப் பெற்று சுவாமி ராமானந்தர் தினமும் குளிக்கச் செல்லும் கங்கை நதியின் படிகளில் படுத்துக் கொண்டார். ஸ்ரீ ராமானந்தர் 104 வயதானவர் மற்றும் நான்கு வேதங்களை நன்கு அறிந்தவராகவும், புனித கீதையின் அறிஞராகவும் கருதப்பட்டார். காசியில் மற்ற பண்டிதர்கள் பரப்பிய பாசாங்கு வழிபாட்டை அவர் நிறுத்திவைத்தார். ஸ்ரீ ராமானந்தர் சாஸ்திர முறையான வழிபாட்டை சொல்லி வந்தார் மற்றும் காசி முழுவதும் தனது 52 நீதிமன்றங்களை நடத்திவந்தார். ராமானந்தர் புனித கீதை, புனித வேதங்களின் முறைபடி பக்தி மார்க்கத்தை போதித்தார். அவர் “ஓம்” மந்திர ஜபத்தை கொடுத்து வந்தார். அன்று அவர் குளிப்பதற்கு கங்கையின் படிகளில் சென்றபோது, அங்கு கபீர் சாஹிப் படியில் குழந்தை வடிவில் படுத்திருந்தார். பிரம்ம முகூர்த்தத்தின் இருளில் அவர் கபீர் சாகேப் இருந்ததை கவனிக்கவில்லை. ராமானந்தரின் பாதரட்சை கபீர் சாகேப் ஜியின் தலையில் மோதியது.

கவிர் தேவ் குழந்தையைப் போல அழத் தொடங்கினார். குழந்தைக்கு அடிபட்டுவிட்டது என்பதை உணர்ந்து ராமானந்தர் கீழே குனிந்து அவரை அன்புடன் தூக்கினார். அப்போது ராமானந்தரின் கழுத்தில் இருந்த மாலை சரிந்து பரமேஷ்வர் கவிர்தேவனின் கழுத்தில் விழுந்தது. உடனே ராமானந்தர் “மகனே, “ராம்-ராம்” என்று சொல் என கூறினார். ராம் என்ற பெயரால் துன்பங்கள் நீங்கும் என்று கூறி, கபீர் சாகேப் ஜியின் தலையில் கையை வைத்தார். குழந்தை வடிவில் இருந்த கபீர் சாகேப் மௌனமானார். பின்னர் ராமானந்தர் குளிக்கும் போது குழந்தையை ஆசிரமத்திற்கு கொண்டு சென்று உரியவரிடம் அனுப்பிவிட நினைத்தார். ராமானந்தர் குளித்துவிட்டு பார்த்தபோது அங்கு குழந்தை இல்லை, கபீர் சாகேப் அங்கிருந்து மறைந்து தன் குடிசைக்கு வந்துவிட்டார். ராமானந்தர் குழந்தை எங்கேயோ சென்றுவிட்டது என்று நினைத்து சென்றுவிட்டார்.

## சுவாமி ராமானந்தரின் ஆசிரமத்தில் கபீர் சாகேப் இரண்டு வடிவில் தரிசனம்

ஒரு நாள் சுவாமி ராமானந்தரின் சீடர் ஒருவர் சபையில் விஷ்ணு புராணம் சொல்லிக்கொண்டிருந்தார். கபீர் சாகேப்ஜியும் அங்கு சென்றார். அந்த முனிவர் விஷ்ணு அனைத்தையும் படைத்தவர், காப்பவர், பிறப்பற்றவர் மற்றும் இவருக்கு தாய் தந்தை இல்லை, ராமர் மற்றும் கிருஷ்ணர் வடிவில் அவதாரமாக வந்த மகாசக்தி ஆவார் என்று கூறினார். காவிரிஸ்வர் (கபீர் பரமேஸ்வர்) அனைத்தையும் கேட்ட பிறகு, முனிவரே! நான் ஒரு கேள்வி கேட்கலாமா? என்றார். முனிவர், ஆமாம் மகனே கேள் என்று சொன்னார். அங்கு நூற்றுக்கணக்கான பக்தர்களும் இருந்தனர். அப்போது கவிர்தேவன் சொன்னார், நீங்கள் விஷ்ணு புராணத்திலிருந்து

விஷ்ணுதான் பிரம்மாவையும், சிவனையும் படைத்த மகாசக்தி என்று சொல்கிறீர்களே என்றார். அந்த முனிவர் விஷ்ணு புராணத்தில் அப்படிதான் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னார். கபீர் ஜி சொன்னார், ‘முனிவரே கோபப்பட வேண்டாம், நான் என் மனதில் உள்ள சந்தேகத்தைத் தான் கேட்கிறேன், ஒரு நாள் நான் சிவபுராணத்தைக் கேட்டேன். அதில், விஷ்ணுவும் பிரம்மாவும் சிவனிடமிருந்து தோன்றியதாக அந்த முனிவர் சொன்னார் (ஆதாரம்: புனித சிவபுராணம், ருத்ர சம்ஹிதா, அத் 6 ரூ 7, கீதா பிரஸ் கோரக்பூர் வெளியிடு), தேவி பகவத் ஸ்கந்தம் 3இல், பிரம்மா–விஷ்ணு–சிவன் ஆகிய மூவரின் தாய் தேவி என்றும், இம்மூவரும் அழியக் கூடியவர்கள், நித்தியமானவர்கள் அல்ல என்று எழுதப்பட்டுள்ளது. இதைக் கேட்ட முனிவர் பேச்சு மூச்சு இன்றி போனார். கோபத்தில் நீ யார்? யாருடைய மகன்? என்று கேட்டார். உடனே மற்றவர்கள், இவர் நெசவாளர் நீருவின் மகன் என்று சொல்ல ஆரம்பித்தனர். சுவாமி ராமானந்தரின் சீடரான அந்த ரிஷி, நீ எப்படி கழுத்தில் மணிமாலை போடலாம்? என்று கேட்டார். (வைஷ்ணு சாதுக்கள் வைஷ்ணவ மரபிலிருந்து தீட்சை பெற்றதன் அடையாளமாக கழுத்தில் துளசி மணியின் மாலையை அணிவார்கள்) மேலும், உன் குருநாதர் யார்? என்று கேட்டார். கபீர் சாகேப், உங்களுடைய குருநாதர் தான் என்னுடைய குருநாதர் என்றார். அந்த ரிஷி மிகவும் கோபமடைந்து, முட்டாளே! ஒரு தீண்டதகாத நெசவாளியின் மகனான நீ எங்கள் குருவை உன்னுடைய குரு என்று சொல்கிறாயா, என்னுடைய குருநாதர் யார் என்று தெரியுமா? ஸ்ரீ ஸ்ரீ 1008 பண்டிட் ராமானந்தர் ஆச்சார்யார் என்று சொன்னார். நீ ஒரு நெசவாளரின் மகன், அவர் உன்னை போன்ற தாழ்ந்த ஜாதியினரின் முகத்தை கூட பார்க்க மாட்டார், நீ அவரிடம் தீட்சை எடுத்ததாகச் சொல்கிறாயா, பக்தர்களே பாருங்கள் இவன் ஒரு பொய்யன், நயவஞ்சகன், நான் இப்பொழுதே குருநாதரிடம் சென்று உன்னை பற்றி சொல்லுகிறேன் என்றார். நீ தாழ்ந்த ஜாதியின் பிள்ளை எங்கள் குருவை அவமதிக்கிறாயா என்று பொரிந்து தள்ளினார். சரி உங்கள் குருநாதரிடம் சொல்லுங்கள் என்றார் கவிராக்னி (கபீர் பரமேஸ்வர்).

உடனே அந்த முனிவர் ஸ்ரீ ராமானந்தரிடம் சென்று, குருவே, ஒரு நெசவாளர் சாதியைச் சேர்ந்த சிறுவன் எங்கள் மூக்கை அறுத்துவிட்டான். அவன் உங்களை தன்னுடைய குரு என்று கூறுகிறான். கடவுளே! நாங்கள் வெளியே தலைகாட்ட முடியவில்லை என்று சொன்னார். சுவாமி ராமானந்தர், நாளைக் காலை அவனை அழைத்து வாருங்கள் அவனை எப்படி தண்டிக்கிறேன் என்று பாருங்கள் என்றார்.

## சுவாமி ராமானந்தரின் மனதின் ரகசியத்தை கூறியது

மறுநாள் அதிகாலையில், அறிவற்ற பத்து நபர்கள் கபீர் சாகேப் ஜியை பிடித்து அழைத்து வந்தனர். ராமானந்தர், தாழ்த்தப்பட்ட மக்களை பார்ப்பதில்லை என்றும், அவன் தீட்சை எடுத்ததாக பொய் சொல்கிறான் என்பதை காட்டுவதற்காகவும் குடிசைக்கு முன்னால் ஒரு திரையை போட்டுக்கொண்டார். ஸ்ரீ ராமானந்தர் திரைக்குப் பின்னால் இருந்து, நீ யார், எந்த ஜாதி? எந்த சமூகத்தை சேர்ந்தவன் அதாவது யாரை வழிபடுகிறாய் ? என்று கேட்டார்.

ராமானந்த் அதிகார் சுனி, ஜுல்ஹா அக் ஜகதீஷ் //
தாஸ் கரிப் பிலம்ப் நா, தாஹி நவாவத் ஷீஷ் 407 //
ராமானந்த் கூன் குரு கஹை, தன்சைன் நஹின் மிலாத் //

தாஸ் கரிப் தர்ஷன் பயே, பைடே லகி ஜூம் லாத் // 408 //
பந்த் சலத் டோகர் லகி, ராம்நாம் கஹி தீன் //
தாஸ் கரீப் கசர் நஹின், சீக் லயீ ப்ரபீன் //409 //
ஆடா பட்தா லாய் கரி, ராமானந்த் பூஜந்த் //
தாஸ் கரீப் குலங் சபி, அதர் டாக் கூதந்த் //410//
கௌன் ஜாதி குல் பந்த் ஹை, கௌன் தும்ஹாரா நாம் //
தாஸ் கரீப் அதீன் கதி, போலத் ஹைன் பலி ஜாவ் //411//

**கபீர் சாகேப் ஜியின் பதில்**

ஜாதி ஹமாரி ஜகத்குரு, பரமேஷ்வர் பத் பந்த் //
தாஸ் கரீப் லிகித் பரை, நாம் நிரஞ்சன் கந்த் //412 //

**ராமானந்தர் கூறுகிறார்:**

ரே பாலக் சுன் துர்புத்தி, காட் மத் தன் ஆகார் //
தாஸ் கரிப் தரத் லக்யா, ஹோ போலே சிர்ஜன்ஹார் // 413 //
தும் மோமன் கே பாலவா, ஜூல்ஹை கே கர் பாஸ் //
தாஸ் கரீப் ஆக்யான் கதி, எதா தர்ட் விஸ்வாஸ் // 414 //
மான் படாயீ சான்டி கரி, போலெள பாலக் பைன் //
தாஸ் கரீப் ஆதம் முகி, ஏதா தும் காட் பைன் // 415 //
தர்க் தலூசைன் போல்தே, ராமானந்த் சுர் ஞான் //
தாஸ் கரிப் குஜாதி ஹை, ஆகர் நீச் நிதான் // 423 //

**பரமேஸ்வர் கபீர் ஜி (கவிர்தேவ்) பணிவுடன் பதிலளித்தார்.**

மஹ்கே பதன் குலாஸ் கர், சுனி ஸ்வாமி ப்ரபீன் //

மஹேகே பதன் குலாஸ் கர், சுன் ஸ்வாமி பிரவீண் /
தாஸ் கரீப் மனி மரை, மைம் ஆஜிஜ் ஆதீன் // 428 //
மைன் அவிகத் கதி சைன் பரை, ச்யாரி பேத் சைன் தூர் //
தாஸ் கரீப் தஷௌன் திஷா, சகல் சிந்து பர்பூர் //429//
சகல் சிந்து பர்பூர் ஹூன், காலிக் ஹம்ரா நாம் //
தாஸ் கரீப் அஜாதி ஹூம், தைன் ஜூன் கஹ்யா பலி ஜாவ் //430//
ஜாதி பாதி மேரே நஹின், நஹின் பஸ்தி நஹின் காம் //
தாஸ்கரீப் அனின் கதி, நஹின் ஹமாரே நாம் //431//
நாத் பிந்த் மேரே நஹின், நஹின் குதா நஹின் காத் //
தாஸ்கரீப் சப்த் சஜா, நஹின் கிஸி கா சாத் //432//
சப் சங்கி பிச்ரு நஹின், ஆதி அந்த் பஹூ ஜான்ஹி //
தாஸ் கரீப் சகல் வன்சு, பாஹர் பீதர் மான்ஹி //433//
ஏ ஸ்வாமி ஸர்ஷ்டா மைம், சிருஷ்டி ஹமாரை தீர் //
தாஸ் கரீப் அதர் பான்சூ, அவிகத் சத்யா கபீர் //434//
பௌஹமி தரணி ஆகாஷ் மைன், மைன் வியாபக் சப் தௌர் //
தாஸ்கரீப் ந தூஸ்ரா, ஹம் சம்துல் நஹின் அவுர் //436//
ஹம் தாசன் கே தாஸ் ஹைன், கர்தா புருஷ் கரீம் //
தாஸ்கரீப் அவதூத் ஹம், ஹம் பிரஹ்மசாரி ஸீம் //439//
சுனி ராமானந்த் ராம் ஹம், மைன் பாவன் நரசிம்ஹ //
தாஸ் கரீப் கலி கலி, ஹம்ஹி சே கிருஷ்ணா அபங் //440//
ஹம்ஹி சே இந்த்ர குபேர் ஹைன், பிரம்மா விஷ்ணு மகேஷ் //
தாஸ் கரிப் தரம் த்வஜா, தரணி ரசாதல் ஷேஷ் //447//
சுனி ஸ்வாமி சதி பாக்ஹூன், ஜூட் ந ஹமரை ரிஞ்ச் //

தாஸ் கரிப் ஹம் ரூப் பின், அவுர் சகல் பிரபஞ்ச் //453//
கோதா லாஊம் ஸ்வர்க சைன், பிரி பைடூம் பாதால் //
கரிப்தாஸ் டூன்டத் பிருன், ஹீரே மாணிக் லால் //476//
இஸ் தரியா கன்கர் பஹுத், லால் கஹின் கஹின் டாவ் //
கரிப்தாஸ் மாணிக் சுகைன், ஹம் முர்ஜீவா நாவ் //477//
மன் சொச்சத் ராமானந்த், யஹ பாலக் நஹீம் கோயி தேவ் /
கரீபதாஸ் நித் நேம் கரும், ஃபிர் பூச்சூன் சப் பேவ் //478//

பொருள் : நீங்கள், என் ஜாதியைக் கேட்டால், நான் உலககுரு ஆவேன் (பிரபஞ்சம் முழுவதுக்கும் அறிவைக் கொடுப்பவர் ஜகத்குரு கபீர் பிரபு என்று வேதங்களில் எழுதப்பட்டுள்ளது), நான் யாரை வழிபடுகிறேன்? நான் எந்த கடவுளுக்கு வழிகாட்டுகிறேன்? என்றால், என்னுடைய பாதை பரமேஸ்வரனின் பாதை. ஈஸ், ஈஸ்வர், பரமேஸ்வர் (பிரம், பரபிரம், பூரண பிரம் மற்றும் ஷர் புருஷ், அக்ஷர் புருஷ், பரம் அக்ஷர் புருஷ்) அதாவது எண்ணற்ற பிரபஞ்சங்களை படைத்து, அனைவரையும் காக்கும் அந்த பரம சக்தியான (சுப்ரீம் பவர்) பரமேஷ்வரரின் பாதையை காட்ட வந்துள்ளேன். வேதங்களில் கவிர்தேவ், கவிராக்னி போன்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டவர்.

1. பிரம் - ஷர் புருஷ் என்பவர் ஈஸ் என்று அழைக்கப்படுகிறார், இவர் இருபத்தொரு பிரபஞ்சங்களுக்கு மட்டுமே அதிபதி.

2. பரபிரம் – அக்ஷர் புருஷ் என்பவர் ஈஸ்வர் என்று அழைக்கப்படுகிறார், இவர் ஏழு சங்க் பிரபஞ்சங்களுக்கு அதிபதி ஆவார்.

3. பூரண பிரம் – பரம் அக்ஷர் புருஷ் என்பவர் பரமேஸ்வர் என்று அழைக்கப்படுகிறார், எண்ணற்ற பிரபஞ்சத்தின் அதிபதியானவர் அதாவது குலத்தின் எஜமான் ஆவார். எனவே கபீர் ஜி சுவாமி ராமானந்த் ஜியிடம் எனது பாதை பரமேஸ்வரனை அடையும் பாதை என்று கூறினார்.

மேலும் கீதை அத். 15, ஸ்லோகம் 17 இல், நிஜத்தில் அழிவற்ற கடவுள் வேறு ஒருவர், அவர் மூன்று லோகங்களிலும் உள்ள அனைவரையும் காப்பவர், அவர் அழிவற்ற பரமாத்மா பரமேஸ்வர் என்று அழைக்கப்படுகிறார் என்று எழுதப்பட்டுள்ளது. அந்த அழிவற்ற பரமேஸ்வரர் நான் தான் என்று கபீர் சாகேப் கூறினார். இதைக் கேட்ட சுவாமி ராமானந்தர் மிகவும் கோபமடைந்து, உதவாக்கரை! சிறிய வாய் பெரிய பேச்சா, நீ தாழ்ந்த சாதிக்காரன், நீயே கடவுளாகிவிட்டாயா என கூறி அவதூறாக திட்டினார். கபீர் ஜி, நீங்கள் என் குருநாதர், நீங்கள் என்னைத் திட்டினாலும் எனக்கு மகிழ்ச்சிதான், ஆனால் உண்மையில் அந்த பூரண பிரம் பரமேஸ்வர் நானே தான் இதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார். இதைக் கேட்ட ஸ்ரீ ராமானந்தர், நீ இப்படிஎல்லாம் சரிவர மாட்டாய் என்று சொல்லி மற்றவரிடம், அவனை உட்கார வையுங்கள், முதலில் என்னுடைய பூஜையை முடித்துவிட்டு இவனை பார்த்துக் கொள்கிறேன் என்றார். ஸ்ரீ ராமானந்தர் தினமும் ஸ்ரீ விஷ்ணுவின் சிலையை நினைத்து தியானம் செய்வார். அவர்முன் சிலை தோன்றும், (சிலையை நீராட்டி புதிய ஆடைகளை அணிவித்து பொட்டு வைத்து கழுத்தில் மாலை அணிவித்து அலங்கரித்து பின்னர் கிரீடம் அணிவிப்பார்) ராமானந்தர் கற்பனையில் கடவுள் சிலையை கொண்டுவந்தார், சிலையின் ஆடைகளைக் கழற்றி, கங்கை நீரால் அதைக் குளிப்பாட்டிப் புதிய ஆடைகள் அணிவித்தார். பொட்டு வைத்து அலங்கரித்து, கிரீடம் அணிவித்தார் ஆனால் மாலையை அணிவிக்க மறந்துவிட்டார். மாலை அணிவிக்கவில்லை என்றால் பூஜை

முழுமையடையாது, கிரீடம் வைத்துவிட்டால் அதை மீண்டும் கழற்ற முடியாது. அதே நாளில் கிரீடம் அகற்றப்பட்டால், பூஜை தடைப்பட்டதாக கருதப்பட்டது. சுவாமி ராமானந்தர், கடவுளே! வாழ்வில் இதுபோன்ற தவறு நடந்ததில்லை, இன்று இந்த பாவியால் என்ன தவறு நடந்தது? கிரீடத்தை கழற்றினால், எனது பூஜை முழுமையடையாது என்று மனதில் மிகவும் வருந்தினார். கிரீடத்தின் மேலாக மாலையை போட்டுப் பார்க்கலாம் என்று நினைத்தார். (அவர் இதையெல்லாம் தியானத்தில் செய்து கொண்டிருந்தார், அவருக்கு முன்னால் சிலை எதுவும் இல்லை, திரை போடப்பட்டிருந்தது மறுபுறம் கபீர் சாஹிப் அமர்ந்திருக்கிறார்) அப்போது கிரீடத்தில் மாலை மாட்டிக்கொண்டது. இப்போது என்ன செய்வது, அட கடவுளே! இன்று எனது பக்தியின் சேமிப்பு அனைத்தும் வீண் போனது என்று ராமானந்தர் வருந்தினார். (ஏனென்றால், கடவுள் மீது அதிக பக்தி கொண்டவன், வழிபாட்டில் சிறிய தவறு நடந்தாலும், மிகுந்த வேதனை அடைகிறான்) பிறகு திரையின் மறுபக்கம் இருந்த கபீர் சாகேப் சொன்னார், “சுவாமி ஜி, முடிச்சை அவிழ்த்து மாலையை கழுத்தில் போட்டு மீண்டும் முடிச்சு போடுங்கள் கிரீடத்தை எடுக்க வேண்டியதில்லை” என்றார்.

இப்போது ஆச்சரியம் அடைந்த ராமானந்தர் எந்த முடிச்சைப் போய் அவிழ்க்கப்போகிறார். உடனே சுவாமி ராமானந்தர் குடிசைமுன் இருந்த திரையை தனது கைகளால் தூக்கி எறிந்துவிட்டு, ஒட்டுமொத்த பிராமண சமுதாயத்தின் முன்னால் அந்த கபீர் பரமேஸ்வரரை மார்போடு தழுவிக் கொண்டார். இறைவா! உன் மேனி பஞ்சு போல் மிருதுவாக இருக்கிறது, என் உடலோ கல்லைப் போல் இருக்கிறது என்றார். ஒருபுறம் இறைவன், மறுபுறம் சாதியின் மதச் சுவர், இறைவனை நேசிக்கும் புண்ணிய ஆன்மாக்கள் மதத்தின் சுவரை உடைப்பதைப் புண்ணியமாகக் கருதுகின்றனர். சுவாமி ராமானந்தரும் அவ்வாறே செய்தார். தனக்கு முன்னால் பூரண பரமாத்மவை கண்டு, அவர் சாதி, மதம், தீண்டாமையை பார்க்கவில்லை. இவர் தான் உண்மையான பிராமணர்.

போலத் ராமானந்த்ஜி, ஹம் கர் படா சுகால் //
கரிப்தாஸ் பூஜா கரைன், முகுட் பஹி ஜப் மால் //479//
சேவா கரோன் சம்பால் கர், சுனி ஸ்வாமி சுர் ஞான் //
கரிப்தாஸ் ஸிர் முகுட் பர், மாலா அட்கி ஜான் //480//
ஸ்வாமி குண்டி கோலி கர், பிர் மாலா கல் டார் //
கரிப்தாஸ் இஸ் பஜன் கூன், ஜான் சகை ஹை கர்தார் //481//
தியோடி பட்தா தூரி கரி, லீயா கன்ட் லகாய் //
கரிப்தாஸ் குஜரி பௌஹத், ஜப் பதன் பதன் மிலாய் //482//

சுவாமி ராமானந்தர், கபீர் பிரபுவே, நீங்கள் ஏன் பொய் சொன்னீர்கள்? என்று கேட்டார். கபீர் சாகேப், எந்தப் பொய் சுவாமி ஜி? என்றார். ராமானந்தர் அவர்கள், நீங்கள் என்னிடமிருந்து தீட்சை எடுத்ததாகச் சொல்கிறீர்கள், என்னிடம் எப்போது தீட்சை எடுத்தீர்கள்? என்று கேட்டார். அதற்கு கபீர் சாகேப், ஒரு நாள் நீங்கள் குளிப்பதற்கு கங்கைக்கு சென்றபோது, நான் அங்கே படிகளில் படுத்திருந்தேன், உங்கள் பாதரட்சை என் தலையில் பட்டது, அப்போது நீங்கள் மகனே ராம்-ராம் சொல் என்று சொன்னீர்கள் என்றார். சுவாமி ராமானந்தர் சொன்னார், ஆம், இப்போது எனக்கு சற்று நினைவுக்கு வருகிறது, ஆனால் அது மிகச் சிறிய குழந்தை என்றார். (ஏனென்றால் அந்தக் காலத்தில் ஐந்து வயதுக் குழந்தைகள் சற்று பெரியவர்களாகி விடுவார்கள், ஐந்து வயதுக் குழந்தைக்கும் இரண்டரை

**வயதுக் குழந்தைக்கும் இடையே இருமடங்கு வித்தியாசம் இருக்கும்). கபீர் சாஹேப் பாருங்கள் சுவாமி ஜி, நான் இப்படித்தான் இருந்தேன் என்று சொல்லி, சுவாமி ராமானந்தர் முன் நின்று கொண்டே, இரண்டரை வயது குழந்தையின் மற்றொரு ரூபத்தை பெற்று அங்கு ஒரு சேவகரின் கட்டிலில் அமர்ந்தார். அப்போது சுவாமி ராமானந்தர் ஆறு முறை இங்கும் அங்கும் பார்த்தார், பிறகு சந்தேகத்தில் கண்களைத் தேய்த்து பார்த்தார், கபீர் சாகேப் ஜியின் குழந்தை உருவம் எழுந்து கபீர் சாகேப் ஜியின் ஐந்து வயது உருவத்துடன் இணைந்து 5 வயது சிறுவன் கபீர் சாகேப் மட்டும் நின்று கொண்டிருந்தார்.**

மன்கி பூஜா தும் லக்கி, முகுத் மால் பர்பேஷ் //
கரிப்தாஸ் கதி கோ லகை, கவுன் வரண் க்யா பேஷ் //483//
யெஹ் தௌ தும் ஷிக்ஷா தயீ, மானி லயீ மன்மோர் //
கரிப்தாஸ் கோமல் புருஷ், ஹமரா பதன் கடோர் //484//

**பிறகு ராமானந்தர் சொன்னார், என் சந்தேகம் தீர்ந்துவிட்டது. பிரபுவே! உங்களை நாங்கள் எப்படி அறிய முடியும்? நீங்கள் எந்த ஜாதியில், என்ன உடையில் நிற்கிறீர்கள். அறியாத பிராணி நாங்கள் உங்களுடன் வாக்குவாதம் செய்து பாவிகள் ஆகிவிட்டோம், என்னை மன்னியுங்கள், பூரண பிரபுவே, நான் உங்கள் அறிவில்லா குழந்தை என்றார்.**

**சுவாமி ராமானந்த் ஜியின் சத்லோக் வருகை**

சுன்ள் பச்சா மைன் ஸ்வர்க கீ, கைசை சான்டௌ ரீதி //
கரிப்தாஸ் குத்ரி லகி, ஜனம் ஜாத் ஹை பீத் //486//
ச்யாரி முக்தி பைகுன்ட் மைன், ஜின் கி மோரை சாஹ் //
கரிப்தாஸ் கர் அகம் கீ, கைசைன் பாவுன் தாஹ் //487//
தாராயன் திரிலோக் சப், சல்சி இந்திர குபேர் //
கரிப்தாஸ் சப் ஜாத் ஹைன், சுரக் பாதால் சுமேர் //506//
ச்யாரி முக்தி பைகுன்ட் பட், ஃபனாஹுவா கயீ பார் //
கரிப்தாஸ்அலப் ரூப் மக், க்யா ஜானைன் சன்சார் //507//
கஹௌ ஸ்வாமி கித் ரஹௌகே, சௌதா புவன் பிஹந்த் //
கரிப்தாஸ் பீஜக் கஹ்யா, சலத் ப்ரான் அவுர் பிண்ட் //508//
சுன் ஸ்வாமி ஏக் சக்தி ஹை, அரதங்கி ஓம்கார் //
கரிப்தாஸ் பீஜக் தஹான், அனந்த் லோக் சிங்ஹார் //509//
ஜைசே கா தைசா ரஹை, பார்லோ ஃபனா பிரான் //
கரிப்தாஸ் உஸ் சக்திகூன், பார் பார் குர்பான் //510//
கோடி இந்திர பிரம்மா ஜஹான், கோடி கிருஷ்ண கைலாஸ் //
கரீப்தாஸ் ஷிவ் கோடி ஹைன், கரௌ கௌங்கி ஆஷ் //511//
கோடி விஷ்ணு ஜஹான் பசத் ஹைன், உஸ் சக்தி கே தாம் //
கரிப்தாஸ் குல் பௌஹத் ஹைன், அல ஃப் பஸ்த் நிஹகாம் //512//
ஷிவ் சக்தி ஜாசைஹுயே, அனந்த் கோடி அவதார் //
கரிப்தாஸ் உஸ் அலஃப்கூன், லகை சோ ஹோய் கர்தார் //513//
அலஃப் ஹமாரா ரூப் ஹை, தம் தேஹி நஹின் தந்த் //
கரிப்தாஸ் குல்சைன் பரை, சல்னா ஹை பின் பந்த் //514//
பினா பந்த் உஸ் கன்தகை, தாம் சலன் ஹை மோர் //
கரிப்தாஸ் கதி நா கிசீ, சங்க் சுரக் பர் டோர் //515//
சங்க் சுரக்பர் ஹம் பாசைன், சுனி ஸ்வாமி யே சைன் //
கரிப்தாஸ் ஹம் அல ஃப் ஹைன்,யௌஹ் குல் ஃபோகட் ஃ பேன் //516//

ஜோ தை கஹ்யா சௌ மைன் லஹ்யா, பின் தேகை நஹின் தீஜ் //
கரீப்தாஸ் ஸ்வாமி கஹை, கஹான் அல ஃ ப் வௌ பீஜ் //517//
ஆனந்த் கோடி பிரஹ்மாண்ட ஃபன், அனந்த் கோடி உத்கார் //
கரீப்தாஸ் ஸ்வாமி கஹை, கஹான் அல ஃப் தீதார் //518//
ஹத் பெஹத் கஹின் நா கஹின், நா கஹின் தர்பி டௌர் //
கரீப்தாஸ் நிஜ் பிரம்மாகி, கவுன் தாம் வஹ் பௌர் //519//
சல் ஸ்வாமி சர் பர் சலைன், கங் தீர் சுன் ஞான் //
கரிப்தாஸ் பைகுன்ட் பட், கோடி கோடி கட் தியான் //520//
தஹாங் கோடி வைகுண்ட்ஹைம், நா கஹீம் தரபி டௌர் //
கரிப்தாஸ் ஸ்வாமி சுனை, ஜாத் அனந்த் ஜுக் பீத் //521//
பிரான் பிண்ட் புர்மைன் தாஸௌ, கயே ராமானந்த் கோடி //
கரிப்தாஸ் சர் சுரகமைன், ரஹௌ ஷப்தகி ஓட் //522//
தஹான் வஹான் சித் சக்ரித் பயா, தேகி ஃபஜல் தர்பார் //
கரிப்தாஸ் சிஜ்தா கியா, ஹம் பாயே தீதார் //523//
தும் ஸ்வாமி மைன் பால் புத்தி, பர்ம கர்ம கியே நாஷ் //
கரிப்தாஸ் நிஜ் பிரம்மா தும், ஹமரை த்ரிட் விஸ்வாஸ் //524//
சுன்ன-பெசுன்ன சைன் தும் பரை, உரைன் சே ஹம்ரை தீர் //
கரீப்தாஸ் சர்பங்மைன், அவிகத் புருஷ் கபீர் //525//
கோடி கோடி சிஜ்தே கரைன், கோடி கோடி பிராணம் //
கரிப்தாஸ் அன்ஹத் அதர், ஹம் பர்சைன் தும் தாம் //526//
சுனி ஸ்வாமி ஏக் கல் குஜ், தில் தாரி பல் ஜோரி //
கரிப்தாஸ் சர் ககன் மைன், சூரஜ் அனந்த் கரோரி //527//
ஷஹர் அமான் அனந்த்பூர், ரிம்ஜிம் ரிம்ஜிம் ஹோய் //
கரிப்தாஸ் உஸ் நகர் கா, மரம் ந ஜானை கோய் //528//
சுனி ஸ்வாமி கைசைன் லகௌ, கஹி சமஜாஊம் தோஹி //
கரிப்தாஸ் பின் பர் உடைன், தன் மன் ஷீஷ் ந ஹோயே //529//
ரவன்புரி ஏக் சக்ர ஹை, தஹான் தஞ்சய் பாய் //
கரிப்தாஸ் ஜீதே ஜனம், யாகுன் லெத் சமாய் //530//
ஆசன் பதம் லகாய்கர், பிரங் நாத் கோ சைஞ்சி //
கரிப்தாஸ் அச்வன் கரை, தேவ்தட் கோ ஐசி //531//
காளி ஊன் குலீன் ரங், ஜாகை தோ ஃபுன் தார் //
கரிப்தாஸ் குரம்ப் ஷிர், தாஸ் கரே உத்கார் //532//
சிஷ்மே லால் குலால் ரங், தீனி கிராஹ் நப் பென்ச் //
கரிப்தாஸ் வா நாக்னி கூன், ஹௌனே ந தேவே ரேச் //533//
கும்பக் ரேசக் சப் கரை, ஊன் கரத் உத்கார் //
கரிப்தாஸ் உஸ் நாகினி கூன், ஜீதை கோயி கிலார் //534//
கும்ப பரை ரேசக் கரை, ஃபிர் டுடத் ஹை பௌன் //
கபீர்தாஸ் ககன் மண்டல், நகீம் ஹோத் ஹை சௌன் //535//
ஆகே காடி பந்த் ஹை, இங்லா-பிங்லா தோய் //
கரிப்தாஸ் சுஷ்மான் குலே, தாஸ் மிலாவா ஹோய் //536//
ஜ்யுங்கா தியுன்ஹி பைடி ரஹோ, தஜி ஆசன் சப் ஜோக் //
கரிப்தாஸ் பல் பீச் பத், சர்வ சைல் சப் போக் //547//
கோடி கோடி பைகுன்ட் ஹைன், கோடி கோடி ஷிவ் ஷேஷ் //
கரிப்தாஸ் உஸ் தாம்மைன், பிரம்மா கோடி நரேஷ் //553//
அவாதான் அமான்பூர், சலி ஸ்வாமி தஹான் சால் //

கரிப்தாஸ் பர்லோ அனந்த், பௌஹரி ந ஜம்பைன் கால் //554//
அமர் சீர் தஹான் பஹ்ரி ஹை, அமர் ஹன்ஸ் சுக் தாம் //
கரிப்தாஸ் போஜன் அஜர், சல் ஸ்வாமி நிஜ்தாம் //555//
போலட் ராமானந்த்ஜி, சன் கபீர் கர்தார் //
கரிப்தாஸ் சப் ரூப்மைன், தும்ஹீம் போலன் ஹார் //556//
தும் சாஹிப் தும் சந்த் ஹௌ, தும் சத்குரு தும் ஹன்ஸ் //
கரிப்தாஸ் தும் ரூப் பின் அவுர் நா தூஜா அன்ஸ் //557//
மைம் பக்த முக்தா பயா, கியா கர்ம குந்த் நாஷ் //
கரிப்தாஸ் அவிகத் மிலே, மேடி மன் கி பாஸ் //558//
தோஹூன் டௌர் ஹை ஏக் தூம், பயா ஏக் சே தோய் //
கரிப்தாஸ் ஹம் காரனைன், உதரே ஹைன் மக் ஜோய் //559//
கோஷ்டி ராமானந்த்சைன், காசி நகர் மஞ்சார் //
நாகி பர் ஜாங்கி லகி, ஜாங்கி பீச் த்வார்,
கரீபதாஸ் உஸ் மஹால் சடை, உதரே பர்லே பார் //562//
பாலா லகே மிசரி பகே, சுன் ஸ்வாமி யஹ் சாச்,
கரீபதாஸ் பத்மே மிலே, மேடே தன் கா நாச் //567//

பொருள் : கபீர் சாஹிப் (கவிர்தேவ்) சுவாமி ராமானந்தரிடம், நீங்கள் என்ன வழிபாடு செய்கிறீர்கள்? என்று கேட்டார். சுவாமி ராமானந்தர், வேதங்கள் மற்றும் கீதையின் முறைபடி நான் வழிபடுகிறேன் என்றார். கபீர் சாஹிப், வேதங்கள் மற்றும் கீதையின்படி வழிபாடு செய்து எங்கு செல்வீர்கள்? என்று கேட்டார். சுவாமி ராமானந்தர், நான் சொர்க்கத்திற்குச் செல்வேன் என்றார். கபீர் சாகேப் சொர்க்கத்தில் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார். அதற்கு சுவாமி ராமானந்தர், அங்கே அன்புமிக்க கடவுள் விஷ்ணு இருக்கிறார், அவரை தரிசிப்பேன். அங்கே பாலாறு ஓடுகிறது, ஒரு கவலையும் இல்லை, மகிழ்ச்சியுடன் இருப்பேன் என்றார்.

கபீர் பரமேஸ்வரர், சுவாமி ஜி, சொர்க்கத்தில் எத்தனை நாட்கள் இருப்பீர்கள்? என்று கேட்டார். (ராமானந்தர் ஒரு ஞானி உடனே புரிந்து கொண்டார்). ராமானந்தர் சொன்னார், எனது பக்தியின் செல்வம் தீரும் வரை இருப்பேன் என்றார். கபீர் சாகேப், அதன்பின் எங்கு செல்வீர்கள்? என்று கேட்டார். சுவாமி ராமானந்தர், கர்மவினைப்படி நான் எங்கே, எந்தப் பிறவியில் இருப்பேன் என்பது கடவுளுக்கு தான் தெரியும் என்றார். கபீர் சாஹிப் கூறினார், சுவாமி ஜி, நீங்கள் இந்த வழிபாட்டை எண்ணற்ற முறை செய்துள்ளீர்கள். இதனால் ஆன்மா முக்தி அடையாது. நீங்கள் ஸ்ரீ விஷ்ணுவை வழிபட்டு சொர்க்கத்திற்கு செல்ல விரும்புகிறீர்கள். ஆனால் பிரம் உடைய வழிபாட்டை செய்து பிரம்மலோகத்திற்குச் செல்லும் பக்தர்களும் பிறப்பு-இறப்பு சுழற்சியில் இருப்பார்கள், ஏனென்றால் கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 16 இன் படி பிரம்மலோகத்தில் உள்ள மகா சொர்க்கமும் ஒரு நாள் அழிந்துவிடும். சுவாமி ராமானந்தர் ஒரு கற்றறிந்த ஞானி. சுலோகங்களை அவர் விரல் நுனிகளில் வைத்திருந்தார். சுவாமி ராமானந்தர், நீங்கள் சொல்வது சரிதான் அப்படித்தான் கூறப்பட்டுள்ளது என்றார். கபீர் சாஹிப் கேட்டார், சொல்லுங்கள் குருவே, பிறகு எங்கு இருப்பீர்கள்?. ஸ்ரீ கிருஷ்ணரும் இருக்கமாட்டார். பிரம்ம லோகத்திலும், விஷ்ணு லோகத்திலும் உள்ள அனைத்து உயிர்கள் மற்றும் ஸ்ரீ விஷ்ணு போன்ற மூன்று தெய்வங்களும் இருக்கமாட்டார்கள். பிறகு எங்கே இருப்பீர்கள் குருவே? என்று கேட்டார். பின்னர் ராமானந்தர் சிந்திக்க தொடங்கினார். கபீர் சாகேப், கீதையின் அறிவை கூறியது யார்? என்று

கேட்டார். ஸ்ரீ கிருஷ்ணர் என்று சுவாமி ராமானந்தர் பதிலளித்தார். கபீர் பரமேஸ்வரர் கூறினார், சுவாமி ஜி, சுருக்கமான மகாபாரதம் இரண்டாவது காண்டத்தில் (பக்கம் 1531 பழையது, மற்றும் 667 புதியதில்), கீதையின் ஞானம் இப்போது எனக்கு நினைவில்லை, அந்த அறிவை என்னால் மீண்டும் சொல்ல முடியாது என்று அர்ஜுனனிடம் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார் என்று எழுதப்பட்டுள்ளது என்றார். பிறகு கபீர் சாஹிப் ஜி அனைத்து ஆதாரங்களையும் விளக்கினார்.

**கீதை அத்தியாயம் 8 சுலோகம் 13ல் பிரம் சொல்கிறார்,**

ஓம் இதி ஏகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாம் அநுஸ்மரந்
ய: ப்ரயாதி த்யஜந் தே₃ஹம் ஸ: யாதி பரமாம் க₃திம் //13//

**மொழிபெயர்ப்பு:-** கீதையை கூறும் பிரம் அதாவது காலன் சொல்கிறார்: (மாம் ப்ரஹ்ம) எனது பிரம் உடைய (இதி) இந்த (ஓம் ஏகாக்ஷரம்) ஓம் என்ற ஓர் எழுத்தை (வ்யாஹரந்) உச்சரித்து (அநுஸ்மரந்) ஜபம் செய்யவேண்டும் (த்யஜந் தே₃ஹம்) உடலை விட்டு பிரியும் வரை அதாவது கடைசி மூச்சு வரை (ப்ரயாதி) ஜபம் செய்யும் (ய:) சாதகன் (ஸ:) என்னுடைய (பரமாம் க₃திம்) பரம கதியை (யதி) அடைகிறான்.

பொருள் : ஸ்ரீ கிருஷ்ணரின் உடலுக்குள் ஆவியாக நுழைந்து, ஆயிரம் கைகள் கொண்ட ஜோதி நிரஞ்சன் அதாவது பிரம்ம காலன், ஓம் என்ற ஒரே ஒரு மந்திரத்தால் என்னை (பிரம்) இறுதி மூச்சுவரை வழிபடுபவன் என்னை அடைவான் என்றும் வேறு எந்த மந்திரமும் என் பக்திக்கு உரியது அல்ல என்று கூறுகிறார்.

கீதை அத் 8, ஸ்லோகம் 5, 7 மற்றும் 13 இல் கீதையின் ஞானத்தை கொடுப்பவர், ஓம் என்ற மந்திரத்தால் கடைசி மூச்சு வரை பக்தி செய்பவன் என்னை அடைகிறான் என்று தனது வழிபாட்டைப் பற்றி விளக்கியுள்ளார். எனவே, நீ போரிடு அதோடு ஓம் மந்திரத்தையும் ஜபித்து என்னை வழிபடு என்று கூறிஉள்ளார்.

பிறகு கீதை அத். 8 ஸ்லோகம் 6ல், கடைசி மூச்சில் ஒருவன் எந்த தேவனை நினைவுகூர்ந்து, தன் உடலை விட்டு வெளியேறுகிறானோ, அவன் அவரையே அடைகிறான் என்பது விதி என்று கூறப்பட்டுள்ளது. மேலும் கீதையின் ஞானத்தை கொடுப்பவர், கீதை அத். 8 ஸ்லோகம் 8, 9, 10 மூன்றிலும், பிரம் தன்னை தவிர வேறு ஒரு பரமாத்மாவைப் (பரம திவ்ய புருஷ் பரமேஷ்வர் அதாவது பூரண பிரம்) பற்றி கூறுகிறார். அவரை வழிபடும் ஒருவன் உடலை விடும்போது, அவன் அந்த பரமாத்மாவையே (பரமேஸ்வர்) அடைகிறான். அவரிடமிருந்து பூரண முக்தியையும் சத்யலோகத்தையும் பரம சாந்தியும் அடைகிறான். அதனால்தான் அந்த பரமேஸ்வரரின் சரணடியை நாடு (கீதை அத் 18 ஸ்லோகம் 62-66 மற்றும் அத் 15 ஸ்லோகம் 4), நானும் (கீதை ஞானம் கூறும் பிரம்) அவருடைய சரணடியில் இருக்கிறேன்.

எல்லா ஆதாரங்களையும் கண்களால் பார்த்த ராமானந்தர் வியப்பில் ஆழ்ந்தார், எல்லா உண்மையை ஏற்றுக்கொண்டார். அவர் சொன்னார், "குழந்தாய், நீ சொல்லும் சாஸ்திரங்களின் விசயம் அனைத்தும் உண்மைதான். அத்தகைய ஞானத்தை எங்களுக்கு இதுவரை யாரும் கொடுக்கவில்லை, நாங்கள் என்ன செய்வது? கபீர் சாஹேப் மேலும் விளக்கினார், புனித கீதையில், அத் 8, ஸ்லோகம் 8, 9 மற்றும் 10ல் மற்றும் அத் 18 ஸ்லோகம் 62 படித்து பாருங்கள் என்றார்.

மேலும் புனித கீதையை கூறும் பிரம் (கால்) சொல்கிறார், அர்ஜுனா அந்த பரமாத்மாவிடம் சரணடைந்த பிறகு நீ இறக்க மாட்டாய். அதற்காக, (அத் 4 ஸ்லோகம் 34) அந்த பரமாத்மாவின் உண்மையான ஞானத்தை அறிந்த குருவை நாடு. அவர் முன் சாஷ்டாங்கமாக வணங்கி, பணிவுடனும் கபடமில்லாமல் அவரை வணங்கு. அந்த தத்வதர்ஷி குரு மகிழ்ச்சியடைந்தால், அவரிடம் தீட்சை கேள். அப்போது உனக்கு மறுபிறப்பும் இறப்பும் இருக்காது. புனித கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1-4 இல், இந்த உலகம் தலைகீழான மரம் போன்றது, மேலே வேர் ஆதி புருஷ் நித்திய கடவுள் என்றும், கீழே மூன்று குணங்களின் (ரஜோகுணம்-பிரம்மா, சத்குணம்-விஷ்ணு, தமோகுணம்-சிவன்) கிளைகள் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த உலகம் போன்ற மரத்தின், அதாவது முழு படைப்பின் ஞானம் என்னிடம் (பிரம்-கால்) இல்லை. இங்கே, அதாவது கீதையின் அறிவில் என்னால் உங்களுக்கு பூரண ஞானத்தை கொடுக்க முடியாது. அதற்கு தத்வதரிசி குருவை நாடு (கீதை அத் 4 ஸ்லோகம் 34). அவர் உனக்கு படைப்பின் முழு ஞானத்தையும், எல்லா கடவுள்களின் நிலையையும் சரியாக விளக்குவார். பிறகு அந்த பரம ஸ்தானமும் பரமேஸ்வரனையும் நாட வேண்டும். அங்கு சென்றவர்கள் மீண்டும் பிறப்பதோ, இறப்பதோ இல்லை, அதாவது பூரண முக்தியை பெறுவார்கள். நானும் (பிரம்-கால்), அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்த அந்த பரமேஸ்வரரின் சரணடியில் இருக்கிறேன். எனவே அந்த பரமேஸ்வரரை பூஜிக்க வேண்டும் என்று விளக்கினார்.

சுவாமி ராமானந்தர் சொன்னார், குழந்தாய், உண்மையில் அப்படித்தான் எழுதப்பட்டுள்ளது. ஆனால் சத்யலோகத்தை பற்றி யாரிடமும் கேள்விப்பட்டதில்லை, அதனால் அது உண்மையா என சந்தேகமாக உள்ளது. கபீர் சாகேப், நீங்கள் எப்படி தியானம் செய்கிறீர்கள் என்றுகேட்டார். அதற்கு சுவாமி ராமானந்தர், நான் முழு உடலையும் அடக்கி வைத்திருக்கிறேன், தவம் மூலம் உள்ளே இருக்கும் கமலங்களை கடந்து திரிவேணியை (நெற்றி கமலம்) அடைகிறேன் என்று கூறினார்.

கபீர் சாகேப், நீங்கள் மீண்டும் ஒரு முறை திரிவேணிக்கு செல்லுங்கள் என்றார். உடனே சுவாமி ராமானந்தர் சமாதி நிலைக்கு சென்றுவிட்டார் (தினசரி செய்வது போல). திரிவேணியை அடைந்த பிறகு மூன்று வழிகள் வருகின்றன. ஒவ்வொரு பிரபஞ்சத்தில் உள்ள பிரம்மலோகத்தில் நுழையும் போது, மூன்று வழிகள் வருகின்றன. அதுபோல 20 பிரபஞ்சங்களுக்கு மேலே 21வது பிரபஞ்சத்திலும் இதே போன்று தான் உள்ளது. எதிரில் ஒரு வழி பிரம்மலோகத்தில், ஜோதி நிரஞ்சன் மூன்று வடிவங்களாக வசிக்கும் மூன்று ரகசிய இடங்களுக்கு செல்கிறது. கபீர் சாஹிப் ஜி, எதிரில் இருக்கும் பிரம்மரந்திரம் (வழி) உங்கள் மந்திரத்தால் திறக்காது என்றார். இந்த பிரம்மரந்திரம் சத்யநாம் மந்திரத்தின் மூலம் தான் திறக்கப்படும் என்றார். பிறகு கபீர் சாஹேப் தனது சுவாசம் மூலம் சத்யனாம் மந்திரத்தை உச்சரித்தார், உடனே முன் கதவு திறந்தது. கபீர் சாகேப் சொன்னார், நீங்கள் உருவமற்றவர் என்று சொல்லும் கால் பகவானை இப்போது உங்களுக்குக் காட்டுகிறேன் என்றார். கீதையில், அர்ஜுனா! நான் எல்லோரையும் விழுங்க வந்துள்ளேன், நான் எப்பொழுதும் யாருக்கும் தரிசனம் கொடுப்பதில்லை, நான் யார்முன்னும் ஒருபோதும் தோன்றுவதில்லை என்று கூறியவர் அவர். அந்த காலனை உங்களுக்கு இப்போது காட்டுகிறேன் என்று கபீர் சாகேப் கூறினார். முதலில், ஒரு பிரபஞ்சத்தின் பிரம்மலோகத்தில் உள்ள இரகசிய

இடங்களில், பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ரூபங்களில் உள்ள பிரம்ம காலனை காட்டினார். பிறகு பிரம்மலோகத்தைக் கடக்கும் துவாரத்திலிருந்து வெளியேற்றி இருபத்தியோராம் பிரபஞ்சத்திற்கு அழைத்துச் சென்றார். யாரும் தப்பிக்ககூடாது என்பதற்க்காக, ஜட்டா குண்டலி சரோவர் என்ற ஏரிக்கு மேலே உள்ள பிரம்மலோகத்திற்கு செல்லும் வழியை பிரம்ம காலன் கண்காணித்து வருகிறான். 21 பிரபஞ்சத்தின் கடைசி லோகம் கால பிரம்மனின் (ஷர் புருஷ்) தனிப்பட்ட இடம் ஆகும். கபீர் சாகேப் கூறினார், “பாருங்கள், நீங்கள் உருவமற்றவர் என்று அழைக்கும் கடவுள் அங்கே அமர்ந்திருக்கிறார் என்று காலனை காட்டினார் (ஏனென்றால், வேதத்தின் அடிப்படையில் ரிஷிகள் ஓம் என்ற மந்திரத்தால் தவம் செய்தும் இறைவனை அடையவில்லை. சித்த சக்திகள் பெற்று சொர்க்கம், மகாசொர்க்கமும் சென்றனர் பிறகு, விலங்குகளாகப் பிறந்தனர். எனவே, இறைவன் உருவமற்றவன் என்று அனைவரும் கருதுகின்றனர். ஆனால், இறைவன் உருவமாக இருப்பதாக வேதங்களில் எழுதப்பட்டுள்ளது). பிறகு காலனின் அருகில் சென்றபோது, கபீர் சாகேப் சதய்நாம் மற்றும் சார்நாம் மந்திரத்தை உச்சரித்தார், உடனே காலனின் தலை கீழே குனிந்தது. காலனின் தலைக்கு பின்னால் சத்யலோகத்திற்கு செல்லும் வழி உள்ளது, அந்த வழி பரபிரம்ம லோகத்திற்குள் நுழைகிறது. அதன் பிறகு ஒரு சூழல் குகை தொடங்குகிறது. (காலனின் லோகத்திலும் ஒரு சூழல் குகை உள்ளது). கபீர் ஜியின் ஆன்மாக்கள் (குறையற்ற பக்தர்) காலனின் தலை மீது கால்களை வைத்து மேலே செல்கின்றன. காலன் அவர்களுக்கு படியாக செயல்படுகிறார். பரபிரம்மனின் லோகத்தைக் கடந்து, கபீர் சாகேப் ஸ்ரீ ராமானந்தரின் ஆன்மாவை சத்யலோகத்திற்கு அழைத்துச் சென்றார். (அங்கேயும் ஒரு சூழல் குகை உள்ளது). ஸ்ரீ ராமானந்தர் சத்யலோகத்திற்குச் சென்ற பிறகு, கபீர் சாஹிப் (கவிர்தேவ்) தனது உண்மையான வடிவத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டார். அங்கே கபீர் சாஹிப் உடைய பிரகாசம், கோடிக்கணக்கான சூரிய ஒளியை விட (ஆனால் வெப்பம் அல்லாதது) அதிகமானது. கபீர் ஜி அங்கே சென்று சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த தன்னுடைய இன்னொரு ரூபத்திற்கு சாமரம் வீசிக்கொண்டிருந்தார். ஸ்ரீ ராமானந்தர் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் தான் இறைவன்-கடவுள், இந்த கபீர் இங்குள்ள சேவகராக இருப்பார் என்று மனதில் நினைத்தார். இந்த லோகம் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டதாக உள்ளது, கடவுள் மிகவும் பிரகாசமாக இருக்கிறார் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, கடவுளின் பிரகாசமான ரூபம் சிம்மாசனத்திலிருந்து எழுந்தது மற்றும் ஐந்து வயது குழந்தையின் வடிவில் உள்ள கபீர் பரமேஸ்வரர் சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டார். மேலும் கடவுளின் பிரகாசமான ரூபம், குழந்தை வடிவில் உள்ள கபீர் சாகேப் மீது சாமரம் வீச தொடங்கினார். அதன் பிறகு கடவுளின் பிரகாசமான ரூபம், கபீர் சாகேப் உடைய குழந்தை ரூபத்தோடு ஒன்றிணைந்தது, பிறகு கபீர் பரமேஸ்வர் ஐந்து வயது குழந்தையாக சிம்மாசனத்தில் தனியாக அமர்ந்திருந்தார், சாமரம் தானாகவே வீசிக்கொண்டிருந்தது. பிறகு, அவர் ஸ்ரீ ராமானந்தரின் ஆன்மாவை மீண்டும் தனது உடலுக்கு அனுப்பினார். ஸ்ரீ ராமானந்தரின் தியானம் கலைந்தது, எதிரில் கபீர் சாஹேப் ஐந்து வயது குழந்தையின் வடிவில் அமர்ந்திருப்பதைக் கண்டார்.

அப்போது சுவாமி ராமானந்தர் அவர்கள் கூறியதாவது:-

தஹான் வஹான் சித் சக்ரித் பயா, தேகி ஃபஜல் தர்பார் //

கரிப்தாஸ் சிஜ்தா கியா, ஹம் பாயே தீதார் //523//
தும் ஸ்வாமி மைன் பால் புத்தி, பர்ம கர்ம கியே நாஷ் //
கரிப்தாஸ் நிஜ் ப்ரஹ்ம தும், ஹமரை த்ரிட் விஸ்வாஸ் //524//
சுன்ன-பெசுன்ன சைன் தும் பரை, உரைன் சே ஹம்ரை தீர் //
கரிப்தாஸ் சர்பங்மைன், அவிகத் புருஷ் கபீர் //525//
கோடி கோடி சிஜ்தே கரைன், கோடி கோடி ப்ரணாம் //
கரிப்தாஸ் அன்ஹத் அதர், ஹம் பர்சைன் தும் தாம் //526//
போலத் ராமானந்த்ஜி, சன் கபீர் கர்தார் //
கரிப்தாஸ் சப் ரூப்மேம், தும்ஹின் போலன் ஹார் //556//
தும் சாஹிப் தும் சந்த் ஹௌ, தும் சத்குரு தும் ஹன்ஸ் //
கரிப்தாஸ் தும் ரூப் பின், அவுர் நா தூஜா அன்ஸ் //557//
மெயின் பகதா முக்தா பயா, கியா கர்ம குந்த் நாஷ் //
கரிப்தாஸ் அவிகத் மிலை, மேடி மன் கி பாஸ் //558//
தோஹூன் தௌர் ஹை ஏக் தூம், பயா ஏக் சே தோய் //
கரிப்தாஸ் ஹம் காரனைன், உதரே ஹைன் மக் ஜோய் //559//
போலத் ராமானந்த் ஜி, சன் கபீர் கர்தார் /
கரீப்தாஸ் சப் ரூப் மேம், தூஹீ போலன்ஹார் //

**சுவாமி ராமானந்தர், இறைவா! கபீர் பரமேஸ்வரா! கபீர் கர்த்தரே! (அனைத்தையும் படைத்தவரே) நீங்கள் எங்கும் நிறைந்த பூரண பரமேஸ்வர் என்று கூறினார்.**

தஹூன் தௌர் ஹை ஏக் தூ, பயா ஏக் சே தோ /
கரிப்தாஸ் ஹம் காரணே, ஆயே ஹோ மக் ஜோ //

**பரமேஸ்வர் கபீரே! நீங்கள் சத்யலோகத்திலும் என் முன்னேயும் இருக்கிறீர்கள், ஒன்றிலிருந்து இரண்டு வடிவங்களை கொண்டு, எங்களுக்காக இங்கு வந்துள்ளீர் என்றார்.**

மைம் பக்த முக்தா பயா, கர்ம் குண்த் பயே நாஷ் /
கரிப்தாஸ் அவிகத் மிலே, மிட் கை மன் கி பான்ஸ் //

**104 வயது கொண்ட மகான் சுவாமி ராமானந்தர், ஐந்து வயது பாலகனான கபீர் பரமேஸ்வரிடம், உங்ககள் சேவகனான நான் மோட்சம் பெற்று விட்டேன் என்று கூறுகிறார். என் மனதில் இருந்த சந்தேகங்களும் விலகி விட்டன. பரமாத்மாவின் உண்மையான உருவத்தை தரிசித்து விட்டேன். இறைவா! (கவிர்தேவ்) நான்கு புனித வேதங்களும் புனித கீதையும் உங்கள் புகழை பாடுகின்றன.**

**கபீர் பரமேஸ்வர் அவரே இவ்வாறு கூறியுள்ளார் –**

பேத் ஹமாரா பேத் ஹைம், மைன் நா பேதன் கே மாஹின் /
ஜிஸ் பேத் சே மைம் மிலூம் பேத் ஜாந்தே நாஹீம் //

**பொருள் : நான்கு புனித வேதங்களில் பரமாத்மாவைப் பற்றிய ஞானம் உள்ளது, ஆனால் வழிபாட்டு முறை பிரம்ம காலன் (ஜோதி நிரஞ்சன்) வரை மட்டுமே உள்ளது. பரமேஸ்வர் கபீரின் (கவிர்தேவ்) வழிபாட்டு முறை மற்றும் தத்வஞானத்தை, பரமாத்மா தானே அல்லது அவருடைய உண்மையான பிரதிநிதியான தத்துவதர்ஷி குருவால் மட்டுமே சொல்ல முடியும் என்று புனித வேதங்களிலும் புனித கீதையிலும் கூறப்பட்டுள்ளது. அவரிடமிருந்து தீட்சை பெறுவதன் மூலம் பூரண முக்தியும் பரம சாந்தியும் பெறப்படுகிறது.**

*****

# புனித சாஸ்த்திரங்களும் கபீர் பரமேஸ்வரரின் (கவிர்தேவ்) சாட்சி

கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) முஸ்லீம்களைத் தவறாக கூறவில்லை, புனித குர்ஆன் ஷெரீப்பை குறை கூறவில்லை, குர்ஆன் ஷெரீப்பின் உண்மையான அறிவுக்கு மாறாக சமூகத்தை வழிநடத்தும் காஜிகளையும் முல்லாக்களையும் மட்டுமே அவர் சாடியுள்ளார்.

புனித வேதங்களின் உரையாசிரியர், பிரம்ம காலன் கூறுவது, பூரண பரமாத்மா கவிர்தேவனை பற்றி, சிலர் பிறப்பால் அவதார வடிவில் வருகிறார் என்று நம்புகிறார்கள் சிலர் அவரை உருவமற்றவர், பிறக்காதவர் என்று நம்புகிறார்கள். அதை பற்றிய தீராணாம் தத்துவதரிசி குரு மட்டுமே சொல்லுவார்கள், அதை பற்றி எனக்கு (பிரம்) தெரியாது என்று கூறுகிறார் (யஜுர்வேதம் அத். 40 மந்திரம் 10). அதன் ஆதாரம் புனித கீதை அத். 4 ஸ்லோகம் 34 மற்றும் அத். 15 ஸ்லோகம் 1-4 வரை உள்ளது. அந்த தத்வதரிசி குருவை அடையாதவரை மோட்சம் சாத்தியமற்றது. அந்த தத்வதரிஷி குரு இப்போது வந்திருக்கிறார், இந்த தத்வதரிசி சந்த் ராம்பால் ஜியை அடையாளம் காணுங்கள்.

### புனித குர்ஆன் ஷெரீப்பில் ஆதாரம்

புனித குர்ஆன் ஷெரீப்பில், அத்தியாயம் சூரத் ஃபுர்கானி எண். 25, ஆயாத் 52-59 வரையில், உண்மையில் (இபாதஹி கபீரா) கபீர் அல்லாஹ் பூஜிக்க தகுதியானவர் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் ஆறு நாட்களில் பிரபஞ்சத்தைப் படைத்து ஏழாவது நாள் சிம்மாசனத்தில் அமர்ந்த அதே பூரண பரமாத்மாதான் இந்த கபீர், அவரை பற்றி "பாகபரிடம்" (அவரை முழுமையாக அறிந்தவர்) கேளுங்கள்.

புனித குர்ஆன் ஷெரீப்பை விவரிக்கும் அல்லாஹ், தானும், கபீர் என்ற வேறு கடவுளை சுட்டிக்காட்டி, பூரண பரமாத்மா கபீரைப் பற்றி எனக்கும் தெரியாது, அவரைப் பற்றி தத்வதர்ஷி குருவிடம் (பாகபர்) கேளுங்கள் என்று கூறுகிறார்.

கவிர்தேவ் இதைத்தான் கூறினார், நானே பூரண பரமாத்மா (அல்லாஹ் கபீர் - அக்பிரு), நானே எனது ஞானத்தின் தூதனாக வந்துள்ளேன், என்னை அறிந்து கொள்ளுங்கள். ஆனால் முந்தைய ஆச்சாரியார்கள் கடவுளின் உண்மையான ஞானத்தை மக்களுக்குச் சென்றடைய விடவில்லை. கபீர் படிக்காதவர், அவருக்கு சமஸ்கிருதம் தெரியாது, நாங்கள் படித்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார். இதனால், முன்பு பக்தர்களின் பாதை மாறியது, ஆனால் இன்று முழு சமூகமும் கல்வி அறிவு பெற்றுள்ளதால், வழி தவறிய குருமார்கள் வெற்றி பெற இயலாது.

சல்லி அலா :- ஜா-ஸ-தி முஹம்மதின் ஃபில் அஜ்ஸாதி அல்லாஹும்ம ஸல்லி அலா கபீர் (கபீர்) முஹம்மது ஃபில் குபூரி ஃபஜைலே ஜிக்ர்.

5. ஹஜ்ர் அக்தஸ் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் கூற்று இது, "லாயிலா-ஹ்-இல்லல்லாஹ்" என்று சொல்லி வானத்தின் கதவுகள் திறக்கப்படாமல் எவரும் இல்லை, இந்த கலிமா (உரை) ஒருவரை அர்ஷுக்கு (வானத்திற்கு) அழைத்துச் செல்கிறது, கபீரா பாவங்களிலிருந்து காப்பாற்றுகிறார்.

இந்த கல்மா ஒருவரை நேராக வானத்திற்கு (அர்ஷ்) அழைத்துச்

٥- عَنْ أَبِيْ هُرَيْرَةَ رض قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ مَا
قَالَ عَبْدٌ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ إِلَّا فُتِحَتْ لَهُ أَبْوَابُ السَّمَاءِ حَتّٰى يُفْضِيَ إِلَى الْعَرْشِ
مَا اجْتُنِبَتِ الْكَبَائِرُ۔ رواه الترمذی وهكذا فی المشكوٰة لكن ليس فيها
حسن بل غريب فقط قال القاری و رواه النسائی وابن حبان وعزاه
السيوطی فی الجامع الی الترمذی و رقم له بالحسن وحكاه السيوطی فی
الدر من طريق ابن مردويه عن ابی هريرة وليس فيه ما اجتنبت الكبائر
وفی الجامع الصغير برواية الطبرانی عن معقل ابن يسار لكل شی مفتاح
ومفتاح السموات قول لا اله الا الله ورقم له بالضعف۔

செல்வது எவ்வளவு பெரிய தர்மம் மற்றும் கபீரை பாவங்களுடன் சொன்னாலும், அந்த நேரத்திலும் அது பலனளிக்கும் என தற்போது தெரிய வந்துள்ளது.

முல்லா அலி காரி ரஹ் கூறுகிறார், கபைரிடமிருந்து (கபீர்) காப்பாற்றும் வாக்குறுதியை விரைவாக ஏற்றுக்கொண்டதாகவும், இந்த நம்பிக்கையுடன் வானத்தின் அனைத்து கதவுகளும் திறக்கப்படும் என்றும், இல்லையெனில் கபைர் (கபீர்) கூட வெகுமதி மற்றும் ஏற்பு இல்லாமல் இல்லை என்றும் கூறுகிறார்.

அப்படிப்பட்டவரின் மரணத்திற்குப் பிறகும், அவரது ஆன்மாவைப் போற்றும் வகையில், வானத்தின் அனைத்து கதவுகளும் திறக்கப்படும் என்று பாஜ் உலமா இந்த செய்தியின் அர்த்தத்தை அறிவித்துள்ளார்.

இது போன்ற இரண்டு கலிமாக்கள் இருப்பதாக ஒரு செய்தியில் வந்துள்ளது, அவற்றில் ஒன்றுக்கு, சிம்மாசனத்திற்கு கீழே முடிவே இல்லை. இரண்டாவது வானத்தையும் பூமியையும் அதன் ஒளி அல்லது சக்தியால் நிரப்ப முடியும் – ஒன்று “லையிலா–ஹ்–இல்லாலா”. இரண்டாவது “அல்லாஹு அக்பர், (கபீர்)”

## புனித வேதங்களில் உள்ள ஆதாரம்

கவிர்தேவ் தனது ஞானத்தின் தூதராக தானே வந்து அவரது தத்துவ ஞானத்தை அவரே வழங்குகிறார். கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அவர்களே தனது புனித உரையில் கூறியிருக்கிறார்.

**(உரை)** அவிகத் சே சல் ஆயே, கோயீ மேரா பேத் மர்ம நஹின் பாயா / ந மேரா ஜனம் ந கர்ப பசேரா, பாலக் ஹோ திக்லாயா / காசி நகர் ஜல் கமல் பர் டேரா, வஹான் ஜுலாஹே நே பாயா / மாத்–பிதா மேரே குச் நாஹின், நா மேரே கர் தாசி (பத்னி) / ஜுல்ஹா கா சுத் ஆன் கஹாயா, ஜகத் கரீன் மேரி ஹான்சி / பாஞ்ச் தத்வ் கா தட் நஹின் மேரா, ஜானு கியான் அபாரா / சத்ய ஸ்வரூபி (வாஸ்த்விக்) நாம் சாகேப் (பூர்ண பிரபு) கா, சோய் நாம் ஹமாரா / அதர் த்வீப் (ஊபர் சத்யலோக் மே) ககன் குஃபா மேம் தஹான் நிஜ் வஸ்து சாரா/ ஜ்யோத் ஸ்வரூபி அலக் நிரஞ்சன் (பிரம்ம), பி தர்தா தியான் ஹமாரா / ஹாட் சாம் லகு நா மேரே கோயீ ஜானே சத்யநாம் உபாஸி / தாரன தரன் அபய் பத் தாதா மைம் ஹூம் கபீர் அவினாஷி //

மேற்கூறிய உரையில் கபீர் பரமேஸ்வரர் சொல்கிறார், எனக்கு

மனைவி இல்லை. என் உடல் ஐம்புலங்களால் (எலும்பு, சதை, ரத்த நரம்புகளால் பின்னிய உடல்) அமைந்துள்ள உடல் அல்ல. நான் (சுயம்பு) சுயமாகத் தோன்றியவன். காசியில் லஹர் தாரா என்ற குளத்தில் ஒரு தாமரை மீது குழந்தை வடிவத்தில் தோன்றினேன். அங்கிருந்து நீரு என்ற நெசவாளர் என்னை எடுத்து சென்றார். பரமேஸ்வரரின் உண்மையான பெயர் தான் (வேதங்களில் கவிர்தேவ், குரு கிரந்த் சாஹிப்பில் ஹக்கா கபீர் மற்றும் குரான் ஷெரீப்பில் அல்லா கபீர்) எனது பெயர், நான் மேலே ரித் தாமில் (சத்யலோகம்) வசிக்கிறேன், உங்கள் கடவுள் ஜோதி நிரஞ்சனும் (பிரம்) என்னை பூஜிக்கிறார்.

இதன் ஆதாரம் சத்யார்த் பிரகாஷ் நூலின், ஏழாவது சாமுல்லாஸ் (பக்கம் 152-153, தீனா நகர், பஞ்சாப் வெளியீடு) இல் உள்ளது. சுவாமி தயானந்தர், யஜுர்வேதம் அத்தியாயம் 13 மந்திரம் 4 மற்றும் ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 49 மந்திரம் 1 ஆகியவற்றை மொழி பெயர்த்துள்ளார். இதில் வேதங்களை கூறும் பிரம் கூறுகிறார், மனிதர்களே! படைப்பிற்கு முன் அனைத்தையும் படைத்து, அனைவரின் எஜமானராக இருப்பவன், எதிர்காலத்திலும் இருப்பவன் அவனே முழு பிரபஞ்சத்தையும் உருவாக்குகிறான். அந்த மகிழ்ச்சி தரும் பரமாத்மாவை நாங்கள் (பிரம், மற்ற தேவர்களும்) வழிபடுவது போல நீங்களும் வழிபட வேண்டும்.

**ஆதாரம் – 1. புனித யஜுர்வேதம் அத்தியாயம் 29 மந்திரம் 25,**

ஸமித்தே$_3$ாஅத்$_3$ய மநுஷோ து$_3$ரோணே தே$_3$வோ தே$_3$வான்யஜஸி ஜாத்வேத$_3$: // ஆ ச வஹ மித்ராமஹஷ்சிகித்வாந்த்வம் தூ$_3$த: கவிரஸி ப்ரசேதா: //25//

சமித்$_3$த$_4$: - அத்$_3$ய - மநுஷ்: - து$_3$ரோணே - தே$_3$வ: - தே$_3$வான் - யஜ் - அசி - ஜாத் - வேத$_3$: - ஆ - ச - வஹ - மித்ராமஹ: - சிகித்வான் - த்வம் - தூ$_3$த: - கவிர் - அசி - ப்ரசேதா: /

**மொழிபெயர்ப்பு:–** (அத்$_3$ய) இன்று அதாவது தற்சமயம் (து$_3$ரோணே) உடல் எனும் மாளிகையில் (மநுஷ்:) தவறான வழிபாட்டில் மூழ்கியிருப்பவர்களின் (சமித்$_3$த$_4$:) தீங்கு விளைவிக்கும் தற்போதைய சாஸ்திர முறையற்ற வழிபாடு, அவரை எரித்து சாம்பலாக்கிவிடும். வேதத்திற்கு எதிரியான வழிபாடு சாதகனின் வாழ்க்கையை அழித்துவிடுகிறது. அதற்கு பதிலாக (தே$_3$வான்) தெய்வங்களின் (தே$_3$வ:) தெய்வம் (ஜாத் வேத$_3$:) பூரண பரமாத்மா சத்யபுருஷின் உண்மையான (யஜ்) வழிபாடு (அசி) இருக்கிறது. (ஆ) இரக்கமுள்ள (மித்ரமாஹ:) உயிர்களின் உண்மையான துணையான பூரண பரமாத்மாவின் (சிகித்வான்) சிறந்த ஞானம் அதாவது உண்மையான பக்தியை (தூ$_3$த:) தூதரின் வடிவில் (வஹ) கொண்டு வருபவர் (ச) மற்றும் (ப்ரசேதா:) போதிப்பவரும் (த்வம்) நீங்களே (கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வர்) கபீர் (அசி) ஆவீர்.

**பொருள்:–** **சாஸ்திரங்களுக்கு மாறாக வழிபாட்டில் பக்தர் சமூகத்தை வழிநடத்தப்படும் போது, கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) தத்துவ ஞானத்தை வெளிப்படுத்துகிறார்.**

**ஆதாரம் 2. புனித சாமவேதம், எண். 1400, எண். 359,**

**அத்தியாயம் 4, கண்டம் 25, ஸ்லோகம் 8,**

புராம் பி$_4$ந்து$_3$ர்யுவ கவிர்மித்தௌஜா அஜாயத் //

இந்த்$_3$ரோ விஸ்வஸ்ய கர்மணோ த$_4$ர்தா வஜ்ரி புருஷ்டுத: //8//

புராம் - பி$_4$ந்து$_3$: - யுவா - கவிர் - அமித் - ஔஜா - அஜாயத் - இந்த்$_3$ர: - விஸ்$^2$வஸ்ய - கர்மண: - த$_4$ர்தா - வஜ்ரி - புருஷ்டுத: //

**மொழிபெயர்ப்பு:-** (யுவா) பூரண திரன் கொண்டவர் (கவிர்) கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வரர் (அமித் ஔஜா) சர்வ சக்தி கொண்டவர், அதாவது சர்வ வல்லமை உள்ளவர் (அஜாயத்) ஒளி உடலை கொண்டு (த$_4$ர்தா) தோன்றி அதாவது அவதரித்து (வஜ்ரி) தனது சத்யசபத் மற்றும் சத்யநாம் போன்ற சாஸ்த்திர மூலம் (புராம்) கால-பிரம்மனின் பாவ வடிவிலான விலங்கை (பி$_4$ந்து$_3$:) துண்டு துண்டாக உடைப்பவர் (இந்த்$_3$ர:) சர்வ சுகங்களை அளிக்கும் பரமேஸ்வர், (விஸ்$^2$வஸ்ய) பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் (கர்மண:) மனம்-பேச்சு-செயல்களால் அதாவது முழு நம்பிக்கையுடன், ஒருமனதுடன் மத வழிபாடு மூலம் சத்திய பக்தியால் (புருஷ்டுத:) போற்றப்படுவதற்கும் வழிபடுவதற்கும் தகுதியானவர்.

(அதாவது குழந்தையும் முதியவரும் அனைத்து காரியங்களை செய்ய இயலாது, ஆனால் இளைஞன் எல்லாவற்றையும் செய்யும் திறன் கொண்டவர். அதேபோல் பரபிரம் - பிரம் மற்றும் முக்குண பிரம்மா-விஷ்ணு-சிவன் மற்றும் பிற தெய்வங்களை குழந்தையாகவும் முதியவராகவும் கருதுங்கள், அதனால்தான் கபீர் பரமேஸ்வரரை வேதத்தில் யுவா (இளம்) என பொருள் கொடுத்துள்ளார்)

**பொருள்:- உலகிற்கு தத்துவஞானத்தை கொண்டு வரும் கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அவர்கள், சர்வ வல்லமை படைத்தவர் மற்றும் காலனின் (பிரம்) கர்மவினை போன்ற கோட்டையை உடைப்பவர், அவர் எல்லா சுகங்களையும் அளிப்பவர், அனைவராலும் பூஜிக்க தகுதியானவர்.**

**சாமவேதம் எண். 1400, உத்தராச்சிகம் அத். 12 கண்டம் 3 ஸ்லோகம் 5**

ப$_4$த்$_3$ரா வஸ்த்ரா ஸமந்யா3வசாநோ மஹான் கவிர்நிவசநாநி ஸ$^2$ன்சன்/
ஆ வச்யஸ்வ சம்வோ: பூயமாநோ விச்க்ஷ்ணோ ஜாக்ருவிர்தே$_3$வவிதௌ /5/

ப$_4$த்$_3$ரா - வஸ்த்ரா - ஸமந்யா - வஸ்அந: - மஹான் - கவிர் - நிவச்நாநி - ஸ$^2$ன்சன் - ஆவச்யஸ்வ - சம்வோ: - பூயமான்: - விசக்ஷண்: - ஜாக்ரவி: - தே$_3$வ் - வீதேள

**மொழிபெயர்ப்பு:-** (விசக்ஷண்:) தந்திரமான மக்கள் (ஆவச்யஸ்வ) தங்கள் பேச்சுக்கள் மூலம் பூரண பிரம் உடைய வழிபாட்டிற்கு மாறாக வழிநடத்தி அதாவது அமிர்தத்திற்குப் பதிலாக, (பூயமான்:) விஷம் போன்ற மாறான வழிபாட்டை **{** பூதங்கள், பித்ருக்கள், முக்குணங்களான ரஜோகுணம் பிரம்மா, சத்வ குணம் விஷ்ணு, தமோகுணம் சிவன் மற்றும் பிரம்ம காலனின் வழிபாடுகள்**}** (சம்வோ:) அன்புடன் வழிநடத்தப்படுவதை அதாவது தவறான வழிபாட்டை ஒழிப்பதற்கு (ப$_4$த்$_3$ரா) சகல சுகங்களை அளிக்கும் (மஹான் கவிர்) மகான் கவிர் அதாவது பூரண பரமேஸ்வரர் கபீர் ஒரு சாதாரணமான சாது வேஷத்தில் (ஸமந்யா) தனது சத்யலோகத்தில் உள்ள உடலை போலவே மற்றொரு காணகூடிய ஒளி உடலை கொண்டு (வஸ்அந:) ஒரு சாதாரண மனிதனைப் போல சில நாட்கள் இந்த உலகில் வாழ்ந்து (நிவச்நாநி) தனது புனித உரைகள் மூலம் தத்வஞானத்தின்

(ஸ$^2$ன்சன்) வர்ணனை செய்து (தே$_3$வ்) பூரண பரமாத்மாவின் (வீதேள) மறைந்திருக்கும் சற்குணம் - நிர்குணம் ஞானத்தின் (ஜாக்ரவி:) விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

**பொருள்:- கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) சாஸ்திரங்களுக்கு எதிரான வழிபாட்டை சார்ந்திருக்கும் பக்தர் சமுதாயத்திற்கு தத்துவ ஞானத்தை விளக்குவதற்காக உலகில் தோன்றுகிறார். அந்த நேரத்தில் அவர் தனது பிரகாசமான உடலுக்கு பதிலாக குறைந்த பிரகாசம் கொண்ட மற்றொரு உடலில் வருகிறார். (ஏனெனில், பரமேஸ்வரரின் உண்மையான ஒளி உடலை கண்களால் பார்க்க முடியாது.) சில நாட்களுக்கு சாதாரண மனிதனைப் போல லீலை செய்து கொண்டு, பரமேஸ்வரரை (தன்னை) அடைவதற்கான ஞானத்தை வெளிப்படுத்துகிறார்.**

**ரிக் வேதம் மண்டலம் 9, சூக்தம் 96, மந்திரம் 17.**

ஸி$^2$ஸூ$^2$ம் ஜஞாநம் ஹர்யதம் ம்ருஜந்தி ஸூ$^2$ம்ப$_4$ந்தி வஹி மருதௌ க$_3$ணேந் // கவிர்கீ$_3$ர்பி$_4$: காவ்யேநா கவி: சந்த்சோம்: பவித்ரமத்யேதி ரேப$_4$ன் //17//

ஸி$^2$ஸூ$^2$ம் - ஜஞாநம் - ஹர்ய - தம் - ம்ருஜந்தி - ஷூம்ப$_4$ந்தி - வஹின் - மருத: - கணேன் - கவிர்கீ$_3$ர்பி$_4$: - காவ்யேனா - கவிர் - சந்த் - சோம்: - பவித்ராம் - அத்யேதி - ரேப$_4$ன்.

**மொழிபெயர்ப்பு:-** பூரண பரமாத்மா (ஹர்ய ஸி$^2$ஸூ$^2$ம்) ஒரு மனிதக் குழந்தையின் வடிவில் (ஜஞாநம்) வேண்டுமென்றே தோன்றுகிறார் மற்றும் தனது உண்மையான ஆன்மீக ஞானத்தை - தத்துவஞானத்தை (தம்) அந்த சமையம் (ம்ருஜந்தி) தூய்மையுடன் (ஷூம்ப$_4$ந்தி) உச்சரிக்கிறார். (வஹின்) கடவுளை அடைய நினைக்கும் (மருத:) பக்தர்களின் (கணேன்) சமூகத்திற்கு (காவ்யேனா) உரைகள் கவிதைகள் மூலம் (பவித்ரம் அத்யேதி) மிக தூய்மையுடன் பனிஉடன் (கவிர்கீ$_3$ர்பி$_4$:) கவிர் வாணி அதாவது கபீர் வாணி மூலம் (ரேப$_4$ன்) உரத்த குரலில் கூறுகிறார் (கவிர்-சந்த்-சோம்:) அந்த அழிவற்ற புருஷ் அதாவது சத்யபுருஷ் தான் ரிஷியின் வடிவில் உள்ள கவிர்தேவ் ஆவார். ஆனால் அந்த பரமாத்மாவை அறியாமல், கவி என்று அழைக்கத் தொடங்குகிறார்கள். ஆனால் அவரே பூரண கடவுள், அவரது உண்மையான பெயர் கவிர்தேவ்.

**பொருள்: ரிக்வேதம் மண்டலம் 9, சூக்தம் 96, மந்திரம் 16 இல், பூரண பரமாத்மாவின் உண்மையான பெயரை அறிந்து கொள்வோம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த மந்திரம் 17 இல், அந்த பரமாத்மாவின் பெயர் மற்றும் முழுமையான அறிமுகம் கொடுக்கப்பட்டுள்ளது. வேதங்களை கூறும் பிரம் கூறுகிறார், பூரண பரமாத்மா கவிர்தேவ் ஒரு அசாதாரண குழந்தையின் வடிவத்தில் தோன்றி தனது உண்மையான ஞானத்தை தனது உரைகள் மூலம் புண்ணிய ஆன்மாக்களுக்கு பழமொழிகள் மற்றும் கவிதைகள் மூலம் உச்சரிப்பார். இந்த தத்வஞானம் இல்லாததால், அப்போது தோன்றிய பரமாத்மாவை அறியாமல், அவரை ஒரு ரிஷி, சாது மற்றும் கவிஞராக மட்டுமே ஏற்றுக்கொள்கிறார்கள். நான் பூரண பிரம் என்று அந்த பரமாத்மாவே கூறுகிறார், ஆனால் அறியாமையின் அடிப்படையில், கடவுள் உருவமற்றவர் என்று நம்பும் மக்கள் அவரை அறியவில்லை. கரீப்தாஸ் ஜி மகராஜ் காசியில் தோன்றிய பரமாத்மாவை அறிந்து அவரது மகிமையை வெளிப்படுத்தினார் மற்றும் அந்த பரமாத்மா தன்னை பற்றி விளக்கிய மகிமையை தனது உரையில் விவரித்தார்.**

கரீப், ஜாதி ஹமாரி ஜகத் குரு, பரமேஷ்வர் ஹை பந்த் /
தாஸ்கரிப் லிக் படே, நாம் நிரஞ்சன் கந்த் //
கரீப், ஹம் ஹீ அலக் அல்லாஹ் ஹைன், குதூப் கோஸ் அவுர் பீர் /
கரிப்தாஸ் காலிக் தனி, ஹம்ரா நாம் கபீர் //
கரீப், ஏ ஸ்வாமி சர்ஷ்டா மைம், சர்ஷ்டி ஹமரே தீர் /
தாஸ் கரிப் அதர் பஸூ, அவிகத் சத் கபீர் //

**இதைத் தெளிவுபடுத்திய பிறகும், அவரை கவி அல்லது மகான் மற்றும் பக்தர் அல்லது நெசவாளர் என்று அழைக்கிறார்கள். ஆனால் அவர் பூரண பரமாத்மா ஆவார், இவரது உண்மையான பெயர் கவிர்தேவ். அந்த சத்யபுருஷ் கபீர் தான், ஒரு ரிஷி அல்லது சாது வடிவில் இருக்கிறார். ஆனால் தத்வஞானம் இல்லாத ரிஷிகள் மற்றும் குருக்களின் அறியாமையின் அடிப்படையிலான மக்கள், அப்போது தோன்றிய பரமாத்மாவை அறியவில்லை, ஏனெனில் அந்த அறியாமை ரிஷிகள் மற்றும் குருக்கள் கடவுளை உருவமற்றவர் என்று சொல்லி வைத்துள்ளனர்.**

**ரிக் வேதம், மண்டலம் 9, சூக்தம் 96, மந்திரம் 18.**

ரிஷிமநா ய ரிஷிக்ரித்ஸ்வர்ஷா: ஸஹஸ்த்ராணீத்$_2$: பத்$_3$வி: கவீநாம்/
த்ருதீயம் த$_4$ாம் மஹிஷ் ஸிஷாசந்த்சோமோ விராஜ்மநு ராஜ்தி ஸ்டுப் //18//

ரிஷிம்நா - ய - ரிஷிக்ருத் - ஸ்வர்ஷா: - ஸஹஸ்த்ராணீத$_2$: - பத்$_3$வி: - கவீநாம்/ த்ருதீயம் - த$_4$ாம் - மஹிஷ: - ஸிஷா - சந்த் - சோம: - விராஜ்மாநு - ராஜ்தி - ஸ்டுப் //18//

**மொழிபெயர்ப்பு:-** வேதங்களை கூறும் பிரம் கூறுகிறார் (ய) குழந்தை வடிவில் தோன்றும் பூரண பரமாத்மா (கவீநாம்) புகழ்பெற்ற கவிஞர்கள் என்ற (பத்$_3$வி:) பதவியை பெற்று ஒரு சாது ரிஷியின் பாத்திரத்தை வகிக்கிறார் (ரிஷிக்ருத்) அந்த மகான் ரூபத்தில் தோன்றிய பரமேஸ்வர் மூலம் இயற்றப்பட்ட (ஸஹஸ்த்ராணீத்$_2$:) ஆயிரம் கணக்கான உரைகள் (ரிஷிமநா) சாது குணம் கொண்ட பக்தர்களுக்கு (ஸ்வர்ஷா:) சொர்க்கத்தை போன்று இனிமையானவை (சோம:) அந்த அழிவற்ற புருஷ் அதாவது சத்யபுருஷ் (த்ருதீயம்) மூன்றாவது (த$_4$ாம்) முக்தி லோகம் அதாவது சத்யலோகத்தின் (மஹிஷ:) திடமான பூமியை (ஸிஷா) படைத்த (அனு) பிறகு (சந்த்) மனதினை போல காணக்கூடிய வடிவில் (ஸ்டூப்) ஒரு குவிமாடத்தில் உயரமான சிம்மாசனத்தில் (விராஜ்மானு ராஜ்தி) பிரகாசமான உருவத்தில் அதாவது மனிதனைப் போன்ற பிரகாசமான காணக்கூடிய ஒளிரும் உடலில் அமர்ந்திருக்கிறார்.

**பொருள்:- மந்திரம் 17ல், கவீர்தேவ் குழந்தை வடிவத்தில் தோன்றி லீலைகள் செய்து கொண்டே வளர்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் கவிதைகள் மூலம் தத்வஞானத்தை விவரிப்பதால், அவர் கவிஞர் ஸ்தானத்தை அடைகிறார், அதாவது மக்கள் அவரை ரிஷி, சாது மற்றும் கவி என்று அழைக்கிறார்கள். உண்மையில் அவர் பூரண பரமாத்மா கவீர் ஆவார். அவர் இயற்றிய புனித உரை கபீர் வாணி எனப்படும், அது பக்தர்களுக்கு சொர்க்கம் போன்றது. அதே பரமாத்மா மூன்றாவது முக்தி ஸ்தலம், அதாவது சத்யலோகத்தை தோற்றுவித்து, ஒரு குவிமாடத்தின் கீழ் சிம்மாசனத்தில் பிரகாசமான மனித உடல் போன்ற வடிவில் அமர்ந்திருக்கிறார்.**

**இந்த மந்திரத்தில், சத்யலோகத்தை மூன்றாவது ஸ்தலம் என்று**

**குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று, 21 பிரபஞ்சங்களான பிரம் உடைய லோகம் இரண்டாவது, ஏழு சங்க் பிரபஞ்சங்களான பரபிரம் உடைய லோகம் மூன்றாவது பரம் அக்ஷர் பிரம் அதாவது பூரண பிரம் உடைய சத்யலோகம், ஏனெனில் பூரண பரமாத்மா சத்யலோகத்தில் சத்யபுருஷ் வடிவில் அமர்ந்து கீழ் லோகங்களை உருவாக்கியுள்ளார். எனவே, கீழ் லோகங்களும் கணக்கிடப்பட்டுள்ளன. இதையே, சந்த் கரீப் தாஸ் ஜி கண்ணால் கண்ட சாட்சியாக, கூறியுள்ளார்,**

அர்ஸ் குர்ஸ் பர் சபேத் கும்பஜ் ஹாய் ஜஹான் சதகுரு கா டேரா/

**இதன் பொருள் என்னவென்றால், மேலே வானத்தின் மேல் முனையில், கபீர் பரமேஸ்வரர் ஒரு வெள்ளை குவிமாடத்தில் இருக்கிறார்.**

**ரிக்வேதம், மண்டலம் 9 சூக்தம் 96, மந்திரம் 19,**

சமூஷச்ச$_{2}$யேந: ஸ$^{2}$குநோ விப்$_{4}$ரத்வா கோ$_{3}$விந்து$_{3}$ர்த்$_{3}$ரப்ஸ் ஆயுதா$_{4}$நி பி$_{3}$ப்$_{4}$ரத் / அபாமூர்பி$_{4}$ ஸச்மாநா: ஸமுத்$_{3}$ரம் துரியம் தா$_{4}$ம் மஹிஷோ விவக்தி //19//

சமூஸத் – ஸ்$^{2}$யேந: – ஸ$^{2}$குந: – விப்$_{4}$ரத்வா – கோ$_{3}$பி$_{3}$ந்து$_{3}$: – த்$_{3}$ரப்ஸ் – ஆயுதா$_{4}$நி – பி$_{3}$ப்$_{4}$ரத்/ அபாமூர்பி$_{4}$: – ஸச்மாந: – ஸமுத்$_{3}$ரம் – துரியம் – தா$_{4}$ம் – மஹிஷ: – விவக்தி //

**மொழிபெயர்ப்பு:–** புனிதமான (கோ$_{3}$பி$_{3}$ந்து$_{3}$:) காமதேனு போன்ற எல்லா ஆசைகளையும் நிறைவேற்றும் பூரண பரமாத்மா கவிர்தேவ் (விப்$_{4}$ரத்வா) அனைவரையும் காப்பவர் (ஸ்$^{2}$யேந:) வெள்ளை நிறமுடையவர் (ஸ$^{2}$குந:) மங்களகரமான குணமுடையவர் (சமூஸத்) சர்வ வல்லமை படைத்தவர். (த்$_{3}$ரப்ஸ்) பாலில் இருந்து தயிர் செய்யும் முறை உள்ளது போலவே, வேத முறையான வழிபாட்டு மூலம் பூரண முக்தியை கொடுப்பவர் (ஆயுதா$_{4}$நி) தத்வஞானம் வடிவில் காலனின் வலையை அழிக்கும் வில் உடையவர் சாரங்கபாணி கடவுள் ஆவார். (ஸச்மாந:) உண்மையில் (விப்$_{4}$ரத்வா) அனைவரையும காக்கிறார் (அபாமூர்பி$_{4}$:) ஆழமான நீரின் (ஸமுத்$_{3}$ரம்) கடலை போல ஆழமான பிரம்மாண்டமான (துரியம்) நான்காவது (தா$_{4}$ம்) லோகம் அதாவது அனாமி லோகத்தில் (மஹிஷ:) பிரகாசமான பூமி மீது (விவக்தி) வேறு இடத்திலும் தனியாக இருக்கிறார். இதை பற்றி விளக்கம் கவிர்தேவ் தானே தருகிறார்.

**பொருள் :– மந்திரம் 18 இல், பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) மூன்றாவது முக்தி ஸ்தலமான சத்யலோகத்தில் ஒரு குவிமாடத்தில் இருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. இந்த மந்திரம் 19 இல், காமதேனுவைப் போல அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றும் பூரண பிரபு மிகவும் வெண்மை நிறமுடையவர், உண்மையில் அனைவரையும் காப்பவர் என்று கூறப்பட்டுள்ளது. பூலோகத்தில் குழந்தை வடிவில் வரும் அதே கவிர்தேவ், பாலில் இருந்து தயிர் செய்யும் முறை உள்ளது போலவே, பூரண முக்தி அடைவதற்கான சாஸ்திர முறையான வழிபாட்டை கூறி பூரண முக்தியை அளிக்கிறார். சாஸ்திர வடிவில் தத்வஞானம் போன்ற வில் போல, அவர் சாரங்கபாணி என்று அழைக்கப்படுகிறார். மேலும் அனைத்து நீருக்கும் கடல் ஆதாரமாக உள்ளது போலவே பூரண பரமாத்மாவிடமிருந்து அனைவரும் தோன்றியுள்ளனர். கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 3ல், உலகம்போன்றமரத்தைதத்துவஞானம்போன்றசாஸ்திரத்தால்வெட்டிவிட்டு,**

அதாவது தத்வஞானத்தால் அனைத்து சந்தேகங்களையும் தீர்த்துவிட்டு, ஒருவர் அந்த (பரம பத் பரமேஷ்வர்) பரமாத்மாவை நாட வேண்டும், அங்கு சென்ற பக்தர் ஒருபோதும் இவ்வுலகிற்கு திரும்புவதில்லை, அதாவது பூரண முக்தி அடைகிறார். எந்த பரமேஸ்வரால் உலகம் போன்ற மரம் முழுவதும் விரிவடைந்துள்ளதோ, அந்த பூரண பிரபு நான்காவது லோகத்தில் அதாவது அனாமி லோகத்தில் இருக்கிறார், அதாவது முதலாவது சத்யலோகம், இரண்டாவது அலக் லோகம், மூன்றாவது அகம் லோகம், நான்காவது அனாமி லோகம் ஆகும். எனவே, இந்த மந்திரம் 19 இல், கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) தான் அனாமி புருஷ் வடிவில் நான்காவது ஸ்தலத்தில் அதாவது அனாமி லோகத்தில் பிரகாசமான ஒளி வடிவத்தில் இருக்கிறார் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**ரிக் வேதம் மண்டலம் 9 சூக்தம் 96, மந்திரம் 20.**

மர்யோ ந ஸூ$^2$ப்$_4$ரஸ்தந்வ ம்ரஜானோத்யோ ந ஸ்ரத்வா ஸன்யே த$_4$நாநாம்/
வ்ரஷேவ் யூதா$_2$ பரி கோஸ$^2$மர்ஷன்கனிக்ரத$_3$ச்சம்போ3ரா விவேஸ்$^2$ //20//

மர்ய: - ந - ஸூ$^2$ப்$_4$ரஸ்தந்வம் - ம்ரஜாந: - அத்ய: - ந - ஸ்ரத்வா - ஸன்யே - த$_4$நாநாம் - வ்ரஷேவ் - யூதா$_2$ - பரிகோஸ$^2$ஷம் - அர்ஷன் - கனிக்ரத$_3$த் - சம்வோ: - இரா - விவேஷ்

**மொழிபெயர்ப்பு:-** பூரண பரமாத்மா கவிர்தேவ் நான்காவது ஸ்தலத்தில் அதாவது அனாமி லோகத்தில், மற்றும் மூன்றாவது ஸ்தலம் அதாவது சத்யலோகத்தில் இருக்கிறார், அவர் (ந மர்ய:) மனித வடிவில் இருக்கிறார் ஆனால் அழிவில்லாதவர் அதாவது அழிவற்ற (ம்ரஜாந:) தூய்மையான முகத்துடன் உருவத்தில் (அத்ய:) மிக (ஸூ$^2$ப்$_4$ரஸ்தந்வம்) பிரகாசமான வெள்ளை நிற உடலைப் பெற்று மேல் லோகங்களில் இருக்கிறார் மற்றும் அங்கிருந்து (ஸ்ருத்வா) பயணித்து வருகிறார், இதை யாரும் அறிவதில்லை, அந்த பரமாத்மா (இரா) பூமியில் (விவேஷ்) வேறு வேடத்தில் அதாவது மற்றொரு ரூபத்தில் (சம்வோ:) வருகிறார். சத்யலோகத்திலும் பூமியிலும் லீலை செய்கிறார் (யூதா$_2$) பெரிய பெரிய சமூகத்திற்கு உண்மையான (ஸ ன்யே) சனாதன பூஜை முறை அறிவின் (வ்ரஷேவ்) மழையை பொழிந்து (த$_4$நாநாம்) கடவுளின் சக்தி இல்லாதவர்களுக்கு (கனிக்ரத$_3$த்) சுவாசங்கள் மூலம் மனதுக்குள் ஜபம் செய்து வழிபடவைக்கிறார், இதனால் எண்ணற்ற பக்த சமூகம் (பரிகோஸ$^2$ஷம்) முந்தைய மகிழ்ச்சிக் கடலான சத்யலோகத்தை (அர்ஷன்) வழிபாடு செய்து அடைகிறார்கள்.

பொருள் : பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) மேலே மூன்றாவது ஸ்தலத்தில் அதாவது சத்யலோகத்தில் வசிக்கிறார், அதே பரமேஸ்வர் நான்காவது ஸ்தலத்தில் அதாவது அனாமி லோகத்தில் மற்றொரு மனித வடிவில் இருக்கிறார். அதே பரமாத்மா, மனிதனை போன்ற அழகிய முகத்துடனும், வெண்மையான உடலுடனும் இங்கு வருகிறார். மேலும் தனது உண்மையான வழிபாட்டு முறையை விளக்கி, அனைத்து பக்த சமூகத்தை சத்பக்தி நிறைந்தவர்களாக மாற்றுகிறார். எண்ணற்ற பின்பற்றுபவர்களின் முழு சமூகமும், சத்பக்தியின் செல்வதால் முந்தைய மகிழ்ச்சியின் லோகத்தை அதாவது பூரண மோட்சத்தின் பொக்கிஷமான சத்யலோகத்தை வழிபாடு செய்து அடைகிறார்.

**அதர்வண வேதம் கண்டம் 4, அனுவாக்கியம் 1, மந்திரம் 7.**

யோத$_2$ர்வாணம் பித்ரம் தே$_3$வப$_3$ந்து$_4$ம் ப்$_3$ரஹஸ்பதிம் நமசாவ் ச க$_3$ச்ச$_2$ாத்/
த்வம் விஸ்$^2$வேஷாம் ஜநிதா யத$_2$ாஸ: கவிர்தே$_3$வோ ந த$_3$ப$_4$ாயத் ஸ்வத$_4$ாவான் //7//

ய: - அத$_2$ர்வாணம் - பித்ரம் - தே$_3$வப$_3$ந்து$_4$ம் - ப்$_3$ரஹஸ்பதிம் - நம்சா - அவ - ச - க$_3$ச்ச$_2$ாத் - த்வம் - விஸ்$^2$வேஷாம் - ஜநிதா - யத$_2$ா - ஸ: - கவிர்தே$_3$வ்: - ந - த$_3$ப$_4$ாயத் - ஸ்வத$_4$ாவான் /

**மொழிபெயர்ப்பு:-** (ய:) அந்த (அத$_2$ர்வாணம்) மாறாத அதாவது அழியாத (பித்ரம்) உலக பிதா (தே$_3$வப$_3$ந்து$_4$ம்) ஆன்மாவின் உண்மையான துணை (ப்$_3$ரஹஸ்பதிம்) எல்லோரையும்விட பெரிய ஞானி உலக குரு (ச) மற்றும் (நம்சா) பணிவான முறையான சாதகனை (அவ) பாதுகாப்புடன் (க$_3$ச்ச$_2$ாத்) சத்யலோகம் சென்றவர்களை அதாவது பூரண முக்தி அடைந்தவர்களை சத்லோகத்திற்கு அழைத்து செல்பவர் (விஸ்$^2$வேஷாம்) அனைத்து பிரபஞ்சங்களையும் (ஜநிதா) உருவாக்கிய ஜக்தாம்பா அதாவது தாயின் குணங்கள் உடையவர் (ந த$_3$ப$_4$ாயத்) காலனை போல ஏமாற்றாத (ஸ்வத$_4$ாவான்) குணங்கள் கொண்டவர் (யத$_2$ா) அவர் (த்வம்) நீங்களே (கவிர்தே$_3$வ்: கவிர்-தேவ்) கபீர் பரமேஸ்வர் அதாவது கவிர்தேவ் ஆவீர்.

**பொருள்:- "அன்னையும் நீயே, தந்தையும் நீயே, உறவும் நீயே, நண்பனும் நீயே, அறிவும் நீயே, செல்வமும் நீயே, எந்தன், ஆதி தேவனும் நீயே", என்று சொல்லப்படும் அந்த அழிவற்ற பரமேஸ்வர் அனைவருக்கும் தாய்-தந்தை, சகோதரனாகவும், நண்பராகவும், உலக குருவாகவும் இருப்பவர். உண்மையான பக்தியை அளித்து அனைவரையும் சத்யலோகத்திற்கு அழைத்துச் செல்பவர், காலனை போல ஏமாற்றாதவர், அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்தவர் கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) ஆவார்.**

*****

# கபீர் பரமேஸ்வர் நான்கு யுகங்களிலும் வருகிறார்

சத்குரு புருஷ் கபீர் ஹைன், சாரோன் யுக் பிரவான் /
ஜூட்டே குருவா மர்கயே, ஹோ கயே பூத் மசான் //

## சத்யுகத்தில் கவிர்தேவ் (கபீர் சாகேப்) சத்சுக்ரத் என்ற பெயரில் தோற்றம்

தத்வஞானம் இல்லாததால், 1398 ஆம் ஆண்டு கபீர் சாகேப் நெசவாளர் வடிவில் காசிக்கு வந்தார், காசியின் இந்த (தானக்) நெசவாளர் எப்படி வேதங்களில் உள்ள கவிர்தேவ் பூரண பரமாத்மாவாக ஆக முடியும்? என்ற சந்தேகத்தை பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விஷயத்தில் இந்த தாஸனின் (சந்த் ராம்பால் தாஸ்) ஓர் வேண்டுகோள், இதே பூரண பரமாத்மா கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்), வேதங்களுக்கு முன்பே சத்யலோகத்தில் இருந்தார், மேலும் நான்கு யுகங்களிலும் தனது உண்மையான தத்துவஞானத்தை வழங்குவதற்காக தானே தோன்றினார். அவர் சத்யுகத்தில் சுக்ரத் என்றும், திரேதாயுகத்தில் முனிந்தர் என்றும், துவாபரயுகத்தில் கருணாமய என்றும், கலியுகத்தில் கவிர்தேவ் (கபீர் பிரபு) என்ற அவரது உண்மையான பெயரில் தோன்றியுள்ளார். மேலும் எந்த நேரத்திலும், அவர் வெவ்வேறு வடிவங்களில் தோன்றி தனது லீலை செய்து மறைந்து விடுகிறார். அந்த சமயத்தில் லீலை செய்ய வந்த பரமாத்மாவை பக்தர்கள் அடையாளம் காண முடியவில்லை, ஏனென்றால் அனைத்து குருமார்களும் ரிஷிகளும், இறைவனை உருவமற்றவர் என்று வர்ணித்துள்ளனர். உண்மையில் கடவுள் உருவத்தில் இருக்கிறார். அவர் மனிதர்களைப் போன்ற உடலைக் கொண்டுள்ளனர். ஆனால் பரமேஸ்வரரின் உடல் பஞ்சபூதங்களால் ஆன நாடி-நரம்பு போன்ற உடல் அல்ல, ஒளியினால் ஆன உடல். பூரண பரமாத்மா தான் விரும்பும் போதெல்லாம் இங்கு தோன்றுகிறார் அவர் ஒரு தாயிடமிருந்து பிறப்பதில்லை, ஏனென்றால் அவர் அனைத்தையும் படைத்தவர்.

பூரண பிரபு கபீர் சாகேப் (கவிர்தேவ்) சத்யுகத்தில் சத்சுக்ரத் என்ற பெயரில் தோன்றினார். அந்த நேரத்தில் அவர் ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன் மற்றும் ஸ்ரீ கருடர் போன்றோருக்கு தத்துவ ஞானத்தை விளக்கினார். மகா முனிவரான ஸ்ரீ மனு முனிவருக்கு தத்வஞானத்தை விளக்க முயன்றார். ஆனால் மகா முனிவரான ஸ்ரீ மனு, பரமேஸ்வரரின் ஞானத்தை ஏற்றுக்கொள்ளாமல், ஸ்ரீ பிரம்மாவிடம் இருந்து கேட்ட வேதங்களின் அறிவிலும், தன்னால் பெறப்பட்ட வேதங்களின் முடிவுகளிலும் உறுதியாக இருந்தார். மாறாக, பரமேஸ்வர் சத்சுக்ரத் அவர்களை, நீங்கள் கூறுவது அனைத்தும் எதிர் அறிவு என்று கேலி செய்ய ஆரம்பித்தார். எனவே, அவர் பரமேஸ்வரர் சத்சுக்ரத்திற்கு வாமதேவன் என்ற மாற்றுப் பெயரைக் கொடுத்தார் (வாம் என்பதன் பொருள் எதிர்-தலைகீழ்). இவ்வாறே சத்யுகத்தில் சத்சுக்ரத் பெயரில் வந்த பரமேஸ்வரர் கவிர்தேவ் ஜி, ரிஷி களுக்கும் பக்தர்களுக்கும் உண்மையான ஞானத்தை விளக்கி வந்தார். ஆனால் ரிஷிகள் அதை ஏற்கவில்லை. “சத்சுக்ரத்” என்பதற்குப் பதிலாக, பரமேஸ்வரரை வாமதேவன் என்று அழைக்கத் தொடங்கினர்.

எனவே, யஜுர்வேதம் அத்தியாயம் 12 மந்திரம் 4 இல், யஜுர்வேதத்தின் உண்மையான அறிவை வாமதேவன் ரிஷி புரிந்து கொண்டு மற்றவர்களுக்கு விளக்கினார் என்று விவரிக்கப்பட்டுள்ளது. புனித வேதங்களின் ஞானத்தைப் புரிந்து கொள்ள, தயவுசெய்து சிந்திக்கவும்:

உதாரணமாக, யஜுர்வேதம் ஒரு புனித நூல். சமஸ்கிருத மொழியில் எங்காவது யஜு அல்லது யஜும் என்று எழுதப்பட்டிருந்தால், அது புனித நூலான யஜுர்வேதத்தை குறிப்பதாகும். அதேபோல, பூரண பரமாத்மாவின் உண்மையான பெயர் கவிர்தேவ். இது பல்வேறு மொழிகளில் கபீர் சாகேப், கபீர் பரமேஸ்வர் என்று அழைக்கப்பட்டது.

பல பக்தர்கள், கவிர் என்பதை எப்படி கபீராக நிரூபித்தீர்கள், இலக்கணத்தின் பார்வையில், கவி என்பதன் பொருள் சர்வஞானம் ஆகும் என்று சந்தேகம் தெரிவிக்கின்றனர். இங்கு தாஸின் ஓர் வேண்டுகோள், ஒவ்வொரு வார்த்தைக்கும் ஏதாவது ஒரு அர்த்தம் இருக்கும். இலக்கணத்தைப் பொறுத்த வரையில், வேதங்கள் இறைவனால் கூறப்பட்டதால் மொழி முதலில் உருவாக்கப்பட்டது, இலக்கணம் பின்னர் ரிஷிகளால் உருவாக்கப்பட்டது. அதில் பிழைகள் இருக்கலாம். வேதங்களின் மொழிபெயர்ப்பில் இலக்கணம் பொருத்தமற்றது மற்றும் முரண்பாடானது, ஏனெனில் வேதங்களின் உரை மந்திரங்கள் மூலம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக, பல்வால் நகரைச் சுற்றியுள்ள மக்கள் பல்வாலை பர்வார் என்று அழைக்கிறார்கள். பல்வாலை எப்படி பர்வார் என்று நிரூபித்தீர்கள் என்று யாராவது சொன்னால்? கவிர் என்பதை எப்படி கபீராக நிரூபித்திருக்கிறீர்கள் என்று சொல்வது போல் உள்ளது. பிராந்திய மொழியில் பல்வால் நகரம் பர்வார் என்று அழைக்கப்படுகிறது. அதேபோல், கவிர் என்பதை கபீர் என்று அழைக்கப்படுகிறது, பரமேஸ்வரர் ஒன்று தான். மகரிஷி தயானந்த் ஜி, “சத்யார்த் பிரகாஷ்” நூலில் (துயானந்த் மத் தினநகரில் இருந்து வெளியீடு), சமுல்லாஸ் 4, பக்கம் 100 இல், “தேவ்ரகமா” என்பதன் பொருளை “தேவர் கி காம்னா” என்று செய்துள்ளார் அவர் “ர்” எழுதுவதன் மூலம் (தேவ்ர)என்பதை (தேவர்) என்று எழுதியுள்ளார். ஆக கவிர் என்பதை கபீர் என்று சொல்வதில் இலக்கணத்தில் ஆட்சேபனையோ பிழையோ இல்லை. இந்த ஆதாரம் யஜுர்வேதம் அத்தியாயம் 29 மந்திரம் 25 மற்றும் சாமவேதம் எண் 1400 இல் உள்ளது, அது பின்வருமாறு:-

யஜுர்வேதம், அத்தியாயம் 29, ஸ்லோகம் 25,

(சந்த் ராம்பால் ஜி பொழிப்புரை)

ஸமித்$_3$தே$_4$ாஅத்$_3$ய மநுஷோ து$_3$ரோணே தே$_3$வோ தே$_3$வான்யஜஸி ஜாத்வேத$_3$: /

ஆ ச வஹ மித்ராமஹஸ்$^2$சிகித்வாந்த்வம் தூ$_3$த: கவிரஸி ப்ரசேதா: //25//

சமித்$_3$த$_4$: - அத்$_3$ய - மநுஷ்: - து$_3$ரோணே - தே$_3$வ: - தே$_3$வான் - யஜ் - அசி - ஜாத்வேத்$_3$: - ஆ - ச - வஹ - மித்ரமஹ: - சிகித்வான் - த்வம் - தூ$_3$த: - கவிர் - அசி - ப்ரசேதா: /

**மொழிபெயர்ப்பு:-** (ஆத்$_3$ய) இன்று அதாவது தற்சமயம் (து$_3$ரோணே) உடல் எனும் மாளிகையில் (மனுஷ்:) தவறான வழிபாட்டில் மூழ்கியிருப்பவர்களின் (சமித்$_3$த$_4$:) தீங்கு விளைவிக்கும் தற்போதைய சாஸ்திர முறையற்ற வழிபாடு, அவரை எரித்து சாம்பலாக்கிவிடும். வேதத்திற்கு எதிரியான வழிபாடு ஒரு சாதகனின் வாழ்க்கையை அழித்துவிடுகிறது. அதற்க்கு பதிலாக (தே$_3$வான்) தெய்வங்களின் (தே$_3$வ:) தெய்வம் (ஜாத்வேத்$_3$:) பூரண பரமாத்மா சத்யபுருஷின் உண்மையான (யஜ்) வழிபாடு (அசி) இருக்கிறது. (ஆ) இரக்கமுள்ள (மித்ரமஹ:) உயிர்களின் உண்மையான துணையான பூரண பரமாத்மாவின் (சிகித்வான்) சிறந்த

ஞானம் அதாவது உண்மையான பக்தியை (தூ$_3$த:) தூதரின் வடிவில் (வஹ) கொண்டு வருபவர் (ச) மற்றும் (ப்ரசேதா:) போதிப்பவரும் (த்வம்) நீங்கள் (கவிர் - அசி) கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வர் ஆவீர்.

**பொருள்: பூரண பரமாத்மா தோன்றும் போது, அந்த நேரத்தில் அனைத்து ரிஷிகளும், குருக்களும், சாஸ்திர விதிகளை விட்டு, தன்னிச்சையான வழிபாட்டின் மூலம் முழு பக்த சமூகத்தையும் வழிநடத்துவார்கள். அப்பொழுது, கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வர் தத்துவ ஞானத்தைப் பரப்பும் தூதராக தானே தோன்றுவார்.**

**சாமவேதம், எண் 1400, அத்தியாயம் 12 கண்டம் 3 ஸ்லோகம் 5**

(சந்த் ராம்பால் ஜி மொழிப்புரை)

ப$_4$த்$_3$ரா வஸ்த்ரா ஸமந்யா3வசாநோ மஹான் கவிர்நிவசநாநி ஸ$^2$ன்சன்/
ஆ வச்யஸ்வ சம்வோ: பூயமாநோ விச்க்ஷணோ ஜாக்ருவிர்தே$_3$வவிதௌ /5/

ப$_4$த்$_3$ரா - வஸ்த்ரா - ஸமந்யா - வஸ்அந: - மஹான் - கவிர் - நிவச்நாநி - ஷன்ஸன் - ஆவச்யஸ்வ - சம்வோ: - பூயமான்: - விசக்ஷண்: - ஜாக்ரவி: - தே$_3$வ் - வீதேள

**மொழிபெயர்ப்பு:-** (விசக்ஷண்:) தந்திரமான மக்கள் (ஆவச்யஸ்வ) தங்கள் பேச்சுக்கள் மூலம் பூரண பிரம் உடைய வழிபாட்டிற்கு மாறாக வழிநடத்தி அதாவது அமிர்தத்திற்குப் பதிலாக, (பூயமான்:) விஷம் போன்ற மாறான வழிபாட்டை **{** பூதங்கள், பித்ருக்கள், முக்குணங்களான ரஜோகுணம் பிரம்மா, சத்வ குணம் விஷ்ணு, தமோகுணம் சிவன் மற்றும் பிரம்ம காலனின் வழிபாடுகள்**}** (சம்வோ:) அன்புடன் வழிநடத்தப்படுவதை அதாவது தவறான வழிபாட்டை ஒழிப்பதற்கு (ப$_4$த்$_3$ரா) சகல சுகங்களை அளிக்கும் (மஹான் கவிர்) மகான் கவிர் அதாவது பூரண பரமேஸ்வரர் கபீர் ஒரு சாதாரணமான சாது வேஷத்தில் (ஸமந்யா) தனது சத்யலோகத்தில் உள்ள உடலை போலவே மற்றொரு காணகூடிய ஒளி உடலை கொண்டு (வஸ்அந:) ஒரு சாதாரண மனிதனைப் போல சில நாட்கள் இந்த உலகில் வாழ்ந்து (நிவச்நாநி) தனது புனித உரைகள் மூலம் தத்வஞானத்தின் (ஸ$^2$ன்சன்) வர்ணனை செய்து (தே$_3$வ்) பூரண பரமாத்மாவின் (வீதேள) மறைந்திருக்கும் சற்குணம் - நிர்குணம் ஞானத்தின் (ஜாக்ரவி:) விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

**பொருள் : யஜுர் வேதம், அத்தியாயம் 5, மந்திரம் 1ல், "அக்னே தனு அசி" பரமேஸ்வர் உடலுடன் உள்ளார். "விஷ்ணுவே துவா சோமஸ்ய தனு அசி" அனைவரையும் போஷிக்க அந்த அழிவற்ற பிரபுவிற்கு மற்றொரு உடல் உள்ளது, அதில் சில நாட்களுக்கு விருந்தினராக இந்த உலகத்திற்கு வருகிறார். தத்துவஞானத்தின் அறியாமையில் உள்ளவர்களை எழுப்புகிறார் என்று கூறப்பட்டுள்ளது. அதே ஆதாரம் இந்த மந்திரத்திலும் உள்ளது, கபீர் பரமாத்மா தன் உருவத்தை மாற்றி சாதாரண மனிதராக இந்த பூமியில் சிறிது காலம் தோன்றுகிறார் மற்றும் "கவிநிர்வசனாணி ஷன்சன்" அதாவது கவிர் வாணி (உரை) மூலம் தத்துவ ஞானத்தை பரவ செய்கிறார். மகா ரிஷி என்று அழைக்கப்படும் தந்திரமானவர்கள் சாஸ்திர வழிபாட்டிற்கு பதிலாக, சாஸ்திரத்திற்கு மாறாக பிறரை வழிநடத்தும் பொழுது, பூரண பரமாத்மா தாமே தோன்றி தத்வஞானத்தின் மூலம் சாஸ்திர முறையான வழிபாட்டை விளக்குகிறார்.**

**யஜுர்வேதம் அத்தியாயம் 5 மந்திரம் 1**

அக்$_3$நே: தனு: அசி / விஷ்ணவே த்வா சோமஸ்ய தனு: அசி /
விஷ்ணவே த்வா அதிதே$_2$: அதித்$_2$யம் அசி /
விஷ்ணவே த்வா ஸ்$^2$யேநாய, த்வா ஸோம் ப்$_4$ரத்தே விஷ்ணவே த்வா
அக்$_3$நயே த்வா ராய: போஷ்தே$_3$ விஷ்ணவே த்வா / (1)

பொருள்: இந்த மந்திரம் இறைவனின் இரண்டு நிலைகளை விவரிக்கிறது. ஒன்று பரமேஸ்வரர் மேல் லோகத்தில் பிரகாசமான ஒளி உடலில் இருக்கிறார். இரண்டாவது ஒரு சாதாரண மனிதனை போல ரிஷி அல்லது சாது வடிவில் வந்து அனைத்து ஆன்மாக்களையும் காக்கிறார். உதாரணமாக, திடீரென சிறிது நேர விருந்தினராக வருகிறார். அந்த பரமேஸ்வரர் இரண்டு வழிகளில் விருந்தாளியாக வருகிறார்:

1. பரமேஸ்வர் சாதாரண மனிதனை போல சில காலம் உலகில் இருந்து தனது தத்துவஞானத்தை பரப்புகிறார். அவர் பரமேஸ்வர் கபீர் வடிவில் தோன்றி 120 ஆண்டுகள் காசி நகரில் இருந்தார். திடீரென்று ஒரு தாமரை மலர் மீது குழந்தை வடிவில் தோன்றி, பின்னர் லீலைகள் செய்துகொண்டே வளர்ந்து, 120 ஆண்டுகள் இந்த உலகில் விருந்தினராக இருந்தார். பிறகு சரீரத்துடன் சத்யலோகத்திற்குச் சென்றார்.

2. பரமேஸ்வரர் திடீரென ஒரு குரு, ரிஷி அல்லது வேறு சாதாரண மனித வடிவத்தில் தோன்றி தனது பக்தருக்கு தரிசனம் கொடுத்து தத்துவஞானத்தை விளக்கி, அவரை சத்யலோகத்திற்கு அழைத்து செல்கிறார். பிறகு அந்த பரம பக்தர் கண்ணால் கண்ட பரமாத்மாவின் மகிமையை விவரிக்கிறார். இதை அலல் பறவை (ஆகாயத்தில் வாழும் பறவை) என்று சொல்லப்பட்டுள்ளது. அலல் பறவை உணவிற்காக விரைந்து இறங்கி வந்து யானைகளை தூக்கி விரைந்து மீண்டும் வானத்திற்கு சென்றுவிடுகிறது. அதாவது கடவுள் திடீரென்று தோன்றி ஸ்ரீ குரு நானக் அவர்களை பேயி நதிக்கரையில் சந்தித்தார். அவருக்கு சத்யலோகத்தை காண்பித்து மூன்றாம் நாள் திடீரென அவரை பூமிக்கு அனுப்பினார். அதன் பிறகு ஸ்ரீ நானக் சாகேப் ஜி பரமாத்மாவின் மகிமையை தனது அமுத உரைகளில் விவரித்தார். குரு கிரந்த் சாஹிப் நூலில் மஹலா-பஹல்ல என்ற அத்தியாயத்தில் உள்ளது. இதேபோல், 1727 ஆம் ஆண்டு சந்த் கரீப்தாஸ் ஜியை, ஹரியானாவில் ஜஜ்ஜர் மாவட்டத்தில், சுடானி கிராமத்தில் உள்ள "நாலா" என்ற வயலில் பரமாத்மா ஜிந்தா மகாத்மா வடிவில் சந்தித்தார். அவருக்கு சத்யலோகத்தை காட்டிய பிறகு, மீண்டும் பூமிக்கு அனுப்பினார். அதன் பிறகு கரீப்தாஸ் சாகேப் ஜி கடவுளின் மகிமையை வர்ணித்தார். இது அவரது புனித நூலில் "வாணி கரிப்தாஸ்" அத்தியாயத்தில் உள்ளது. இதேபோல தாது சாகேப் ஜியை சந்தித்தார். மேலும் மலுக் தாஸ் சாகேப் ஜி, தரம்தாஸ் சாகேப் ஜி, கிசாதாஸ் சாகேப் ஜி, ஹஸ்ரத் முஹம்மது சாகேப் ஜி, மற்றும் மன்னர் இப்ராஹிம் ஆதாம் சுல்தான் ஜியை சந்தித்தார். மேலும் பல புனித ஆன்மாக்களை பரமாத்மா விருந்தாளி போல சந்தித்து, தனது தத்வஞானத்தை விளக்கி முக்தி அளித்தார். சுவாமி ராமானந்தரையும் சந்தித்து, அவருக்கு சத்யலோகத்தை காண்பித்தார். சுவாமி ராமானந்தர், கண்ணால் கண்ட கபீர் சாகேப் ஜியின் மகிமையை விவரித்தார்.

தோஹூ டோர் ஹாய் எக் தூ பயா எக் சே தோ /
ஹே கபீர் ஹம் காரணே ஆயே ஹேன் மக் ஜோய் /

சுவாமி ராமானந்தர் கூறுகிறார், கபீர் பரமேஷ்வரரே நீங்கள் ஒளி

உடலில் மேலே மற்றும் இங்கே இரண்டு இடங்களிலும் இருக்கிறீர்கள். எங்களுக்காக இவ்வளவு தூரம் பயணித்து வந்திருக்கிறீர்கள்.

(அக்னே) சுயமாக ஒளிரும் கடவுள் (தனுஹ்) உடல் உருவத்தில் (அசி) இருக்கிறார், அதாவது இறைவன் ஒளிமயமான உடலுடன் இருக்கிறார். (விஷ்ணவே) போஷிக்கி அதாவது அனைத்து லோகங்களின் ஆன்மாக்களின் தேவையை பூர்த்தி செய்ய (சோமஸ்ய) அந்த அழிவற்ற பரமேஸ்வரருக்கு (தனுஹ) உடல் (அசி) உள்ளது. சோம் புருஷ் அதாவது அழியாத கடவுள் மூன்று லோகங்களிலும் வந்து அனைவரையும் காக்கிறார். அவர் விருந்தினராக வருகிறார், அதாவது திடீரென்று தோன்றுகிறார். (த்வா) அந்த பரமாத்மா (விஷ்ணுவே) மூன்று லோகங்களிலும் போஷிக்க வருகை தருகிறார் (அதிதே) விருந்தாளி வடிவில் தோன்றிய பரமேஸ்வரர் (அதித்யம்) பூஜிக்க தகுதி (ஆசி) உடையவர். (த்வா) அந்த பரமாத்மாவின் வருகை (விஷ்ணுவே) போஷிப்பதற்கும் (சோம்ப்ரத்தே) நித்திய மகிழ்ச்சியை அளிக்க அதாவது பூரண முக்தியின் பாதையை அளித்து பக்தியை பரிபூரணமாக்க இரண்டு வழிகளில் செய்கிறார். ஒன்று (துவா) அந்த பரமாத்மாவின் வருகை (விஷ்ணுவே) சில காலம் உலகில் மனிதனை போல லீலை செய்து புண்ணிய ஆன்மாக்களுக்கு தத்துவஞானத்தை விளக்கி, அனைத்து சுகங்களையும் வழங்குகிறார். அதாவது, பரமேஸ்வரர் நான்கு யுகங்களிலும் லீலைகள் செய்ய குழந்தை வடிவில் தோன்றி, சாதாரண மனிதனைப் போல வளர்ந்து சில காலம் உலகில் இருக்கிறார். கலியுகத்தில், பூரண பரமாத்மா அவர்கள் கபீர் என்ற பெயரில் 1398 ஆம் ஆண்டு காசியில் ஒரு தாமரை மலரில் தோன்றினார் மற்றும் 120 ஆண்டுகள் உலகில் இருந்தார், பின்னர் சத்யலோகத்திற்கு உடலுடன் திரும்பினார். இரண்டாவது வழி (த்வா) அந்த பரமேஸ்வரரின் வருகை (ஷ்யேமான்) ஷயேன் பறவை போல விரைந்து திரும்புவதாகும். உதாரணமாக, கழுகு அல்லது அலல் பறவை உணவுக்காக உயிரினங்களை குதித்து பிடித்தவுடன் விரைந்து மேலே திரும்புகின்றன. அதே போல் இரண்டாவது வழியில், அறியாமையில் உறங்குபவர்களை எழுப்ப திடீரென தோன்றி தனது பக்தருக்கு தத்துவஞானத்தை உபதேசித்து தன்னுடன் சத்யலோகத்திற்கு அழைத்துச் செல்கிறார். பிறகு அனைத்தையும் காட்டிவிட்டு அந்த பக்தரை மீண்டும் பூமிக்கு அனுப்பிவிடுகிறார். பிறகு பரமாத்மாவை அடைந்த பக்தன் கண்களால் கண்ட மகிமையை விவரிக்கிறார். உதாரணமாக, ஸ்ரீ நானக் ஜியை பேயி நதிக்கரையில் சந்தித்து, அவரை சத்யலோகத்திற்கு அழைத்துச் சென்று மூன்று நாட்களுக்குப் பிறகு அதே நதிக்கரையில் விட்டுச் சென்றார். மேலும் சந்த் கரிப்தாஸ் ஜியை சந்தித்து அவரையும் சத்யலோகத்திற்கு அழைத்துச் சென்று பிறகு மீண்டும் பூமியில் விட்டுச் சென்றார். இரு மகாத்மாக்களும் கண்ணால் கண்ட பரமாத்மாவின் மகிமையை தங்களது அமுத உரைகளில் விவரித்துள்ளனர். (த்வா) அந்த பரமேஸ்வரரின் லீலைகளையும் (அக்னயே) மகிமையையும் விளக்க லீலையை செய்கிறார். (த்வா) அவர் (விஷ்ணவே) அனைத்து லோகங்களை போஷிக்க வருகை தருகிறார். (ராய: போஷ்த்தே) இந்த குலத்தின் எஜமான் தான் அனைத்தையும் காப்பவர். அவர் அனைத்து லீலைகளையும் தனது ஆன்மாக்களை கரைசேர்க்க மட்டுமே செய்கிறார்.

பின்வரும் புனித ரிக்வேதத்தின் மந்திரங்களில், பூரண பரமாத்மா லீலை செய்ய உலகிற்கு வரும்பொழுது குழந்தை வடிவம் பெறுகிறார் என்று கூறப்பட்டுள்ளது. அந்த பரமாத்மா (அதன்யா தேனவ்) கன்னி பசு மூலம் வளர்க்கப்படுகிறார். அவர் லீலை செய்து கொண்டே வளர்ந்து,

**கபீர் வாணி (தத்துவ உரைகள்) மூலமும், கவிதைகள் மூலம் பூரண முக்திக்கான தத்வஞானத்தை கூறுகிறார், இதனால் அவர் ஒரு கவிஞராக அறியப்படுகிறார். ஆனால் அவர் பூரண பரமாத்மா ஆவார், மூன்றாவது முக்தி ஸ்தலமான சத்யலோகத்தில் வசிக்கிறார்.**

**ரிக் வேதம், மண்டலம் 9, சூக்தம் 1, மந்திரம் 9,**

அபி$_4$ இமம் அத$_4$ந்ன்யா உத் ஶ்ரீணந்தி தே$_4$நவ: ஸி$^2$ஸு$^2$ம்/
சோமமிந்த்$_3$ராய பாத்வே //9//

அபி$_3$ - இமம் - அத$_4$ன்யா - உத் - ஶ்ரீணந்தி - தே$_4$நவ: - ஸி$^2$ஸு$^2$ம் - சோமம் - இந்த்$_3$ராய - பாத்வே

**மொழிபெயர்ப்பு:-** (உத்) குறிப்பாக (இமம்) இந்த (ஸி$^2$ஸு$^2$ம்) குழந்தை வடிவில் தோன்றிய (சோமம்) பூரண பரமாத்மா அழிவற்ற கடவுளின் (இந்த்$_3$ராய) வளர்ச்சி அடையும் உடலின் (பாத்வே) வளர்ச்சிக்கு (அபி$_3$) முற்றிலும் (அத$_4$ன்யா தே$_4$நவ:) காளையால் தொடாத பசு அதாவது கன்னிப் பசுவால் (ஶ்ரீணந்தி) பராமரிக்கப்படுகிறது - வளர்க்கப்படுகிறது.

**பொருள் : பூரண பரமாத்மா லீலைகள் செய்து கொண்டு பாலகனாக தோன்றும்போது, அவரை பராமரிக்க பசுங்கன்று ஒன்று தானே பால் சுரக்கிறது.**

**ரிக் வேதம், மண்டலம் 9, சூக்தம் 96, மந்திரம் 17,**

ஸி$^2$ஸு$^2$ம் ஜஞானம் ஹர்ய தம் ம்ருஜந்தி ஸு$^2$ம்ப$_4$ந்தி வஹிமருதௌ க$_3$ணேன் //
கவிர்கீ$_3$ர்பி$_4$: காவ்யேநா கவிர்: சந்த் சோம்: பவித்ரம் அத்யேதி ரேப$_4$ன் //17//

**மொழிபெயர்ப்பு:-** பூரண பரமாத்மா (ஹர்ய ஸி$^2$ஸு$^2$ம்) ஒரு மனிதக் குழந்தையின் வடிவில் (ஜஞானம்) வேண்டுமென்றே தோன்றுகிறார் மற்றும் தனது உண்மையான ஆன்மீக ஞானத்தை - தத்துவ ஞானத்தை (தம்) அந்த சமயம் (ம்ருஜந்தி) தூய்மையுடன் (ஸு$^2$ம்ப$_4$ந்தி) உச்சரிக்கிறார். (வஹின்) கடவுளை அடைய நினைக்கும் (மருதௌ) பக்தர்களின் (க$_3$ணேன்) சமூகத்திற்கு (காவ்யேநா) கவிதைகள் மூலம் (பவித்ரம் அத்யேதி) மிக தூய்மையுடன் (கவிர்கீ$_3$ர்பி$_4$:) கவிர் வாணி அதாவது கபீர் வாணி மூலம் (ரேப$_4$ன்) உரத்த குரலில் கூறுகிறார் (ககவிர்: சந்த் சோம்:) அந்த அழியாத புருஷ் அதாவது சத்யபுருஷ் தான் ரிஷியின் வடிவில் உள்ள கவிர்தேவ் ஆவார். ஆனால் அந்த பரமாத்மாவை அறியாமல், கவி என்று அழைக்கத் தொடங்குகிறார்கள்.

**பொருள் : வேதம் கூறும் பிரம் சொல்கிறார், பூரண பரமாத்மா கவிர்தேவ் ஒரு அசாதாரண மனிதக் குழந்தையின் வடிவத்தில் தோன்றி, கபீர் வாணி மூலம் தனது உண்மையான ஞானத்தை, தன்னை பின்பற்றும் புண்ணிய ஆன்மாக்களுக்கு கவிதை மற்றும் பழமொழி மூலம் உச்சரித்து விளக்குகிறார். அவரே சத்யபுருஷ் கபீர் ஆவார்.**

**ரிக்வேதம், மண்டலம் 9 சூக்தம் 96, மந்திரம் 18.**

ரிஷிமநா ய ரிஷிக்ரித்ஸ்வர்ஷா: ஸஹஸ்த்ரமணீத்$_2$: பத்$_3$வி: கவீநாம்/
த்ருதீயம் த$_4$ாம் மஹிஷ் ஸிஷாசந்த்சோமோ விராஜ்மநு ராஜ்தி ஸ்டுப் //18//

**மொழிபெயர்ப்பு:-** வேதங்களை கூறும் பிரம் கூறுகிறார் (ய) குழந்தை வடிவில் தோன்றும் பூரண பரமாத்மா (கவீநாம்) புகழ்பெற்ற கவிஞர்கள்

என்ற (பத்$_3$வி:) பதவியை பெற்று ஒரு சாது ரிஷியின் பாத்திரத்தை வகிக்கிறார் (ரிஷிக்ருத்) அந்த மகான் ரூபத்தில் தோன்றிய பரமேஸ்வர் மூலம் இயற்றப்பட்ட (ஸஹஸ்த்ராணீத்$_2$:) ஆயிரம் கணக்கான உரைகள் (ரிஷிமநா) சாது குணம் கொண்ட பக்தர்களுக்கு (ஸ்வர்ஷா:) சொர்க்கத்தை போன்று இனிமையானவை (சோம:) அந்த அழிவற்ற புருஷ் அதாவது சத்யபுருஷ் (த்ருதீயம்) மூன்றாவது (த$_4$ாம்) முக்தி லோகம் அதாவது சத்யலோகத்தின் (மஹிஷ:) திடமான பூமியை (ஸிஷா) படைத்த (அனு) பிறகு (சந்த்) மனதினை போல காணக்கூடிய வடிவில் (ஸ்டூப்) ஒரு குவிமாடத்தில் உயரமான சிம்மாசனத்தில் (விராஜ்மானு ராஜ்தி) பிரகாசமான உருவத்தில் அதாவது மனிதனைப் போன்ற பிரகாசமான காணக்கூடிய ஒளிரும் உடலில் அமர்ந்திருக்கிறார்.

பொருள்:– மந்திரம் 17 இல், கவிர்தேவ் குழந்தை வடிவம் எடுத்து லீலை செய்துகொண்டே வளர்கிறார், கவிதை மூலம் தத்துவஞானம் போதிப்பதால் கவிஞர் என்று அழைக்கப்படுகிறார். உண்மையில் அவரே பூரண பரமாத்மா கவிர்தேவ் ஆவார். அவர் கூறிய அமுத உரை கபீர் வாணி எனப்படும். அது பக்தர்களுக்கு சொர்க்கம் போலவே சுகம் தரக்கூடியது. அவர் மூன்றாவது முக்தி தாம் அதாவது சத்யலோகத்தை படைத்து, வட்ட வடிவ கோபுரத்தின் கீழ் சிம்மாசனத்தில் மனிதனை போன்ற ரூபத்தில் அமர்ந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மந்திரத்தில் சத்யலோகத்தை மூன்றாவது ஸ்தலம் என்று கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒன்று பிரம் காலனின் இருபத்தொரு பிரபஞ்சங்கள், இரண்டாவது பரபிரம் உடைய ஏழு சங்கப் பிரபஞ்சம் ஆகும், மூன்றாவது பரம் அக்ஷர் பிரம் அதாவது பூரண பிரம் உடைய ரித்தாம் அதாவது சத்யலோகம் ஆகும்.

## திரேதாயுகத்தில் கவிர்தேவ் (கபீர் சாகேப்) முனிந்தர் என்ற பெயரில் தோற்றம்

நல் மற்றும் நீலனுக்கு அடைக்கலம் கொடுத்தல்.

திரேதாயுகத்தில் சுயம்பு (தானே தோன்றுபவர்) கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வரர்), முனிந்தர் ரிஷி என்ற பெயரில் வந்தார். அனல் என்ற நல், அனீல் என்ற நீல், இருவரும் சகோதரர்கள் ஆவார். தாய் தந்தையை இழந்த அவர்கள் உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு, எல்லா ரிஷி, முனி, சாதுக்களிடம் நிவாரணம் வேண்டி பிரார்த்தனை செய்தார்கள். அனைத்து ரிஷிகளும், அது அவர்களது கர்மவினை பாவத்தின் தண்டனை எனக் கூறி, நீங்கள் அனுபவித்தே ஆகவேண்டும் எனச் சொன்னார்கள். அந்த இரு சகோதரர்களும் வேறு வழியின்றி சாவை எதிர்பார்த்து இருந்தார்கள்.

ஒரு நாள் முனிந்தர் பெயரில் தோன்றியிருந்த பூரண பரமாத்மாவின் சத்சங்கத்தில் கலந்துகொள்ள அவர்களுக்குக் சந்தர்ப்பம் கிடைத்தது. சத்சங்கத்திற்குப் பிறகு, இருவரும் முனிந்தர் ரிஷியின் பாதங்களில் பணிய, முனிந்தர் ரிஷி அவர்கள் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தவுடன், அவர்களின் தீராத நோய் மாயமானது, இருவரும் பூரண குணம் அடைந்தனர். இந்த அதிசயத்தை கண்டு, இருவரும் முனிந்தர் ரிஷி ியின் காலில் விழுந்து கண்ணீர் விட்டு கதறினர். முனிந்தர் ரிஷியிடம்

தீட்சை பெற்று, அவருக்கு சேவை செய்யத் தொடங்கினர். முந்தைய காலத்தில், நீர் வசதிக்காக ஆற்றங்கரையில் சத்சங்கம் நடைபெறுவது வழக்கம். நல், நில் சூதுவாது தெரியாத பக்தர்கள். கூட்டத்திற்கு வரும் முதியவர்கள், நோயாளிகள், மாற்றுத்திறனாளிகளின் துணிகளைத் துவைப்பது, பாத்திரங்களை சுத்தம் செய்வது, என பல சேவைகள் செய்தனர். ஆனால், இறைவனைப் பற்றியே சிந்தித்து, அவரைப் பற்றி பேசிக் கொண்டே தன்னிலை மறப்பார்கள். அதனால், அவர்கள் சில பொருட்களை ஆற்றில் தொலைத்து விடுவார்கள். இதைப் பார்த்த மக்கள், நல் மற்றும் நீலனிடம், நீங்கள் இருவரும் நன்கு சேவை செய்கிறீர்கள் ஆனால் பொருள்களை தொலைத்துவிடுகிறீர்கள், உங்கள் சேவை இனி வேண்டாம், எங்கள் சேவையை நாங்களே செய்துகொள்கிறோம் என்று கூறுவார்கள். உடனே இருவரும் எங்கள் சேவையை பறிக்க வேண்டாம், இனி தொலைக்க மாட்டோம் என்று கூறி அழத் தொடங்கி விடுவார்கள். பின்னர் மீண்டும் கடவுளைப் பற்றி பேசிக்கொண்டே பொருள்களை நீரில் தொலைத்துவிடுவார்கள். எனவே, பக்தர்கள் முனிந்தர் ரிஷியிடம் முறையிட்டார்கள். முனிந்தர் ரிஷி அவர்களுக்கு பல முறை விளக்கினார். எங்களிடம் இருந்து சேவையை பறிக்காதீர்கள் என்று இருவரும் அழத்தொடங்கினர். பிறகு முனிந்தர் ரிஷி அவர்களிடம், இனி உங்கள் கையிலிருந்து எந்தப் பொருளும், கல்லாக இருந்தாலும், இரும்பாக இருந்தாலும், தண்ணீரில் மூழ்காது, நன்கு சேவை செய்யுங்கள் என கூறி அவர்களை ஆசீர்வதித்தார்.

நீங்கள் ராமாயணம் கேட்டிருப்பீர்கள், ஸ்ரீ ராமரின் மனைவி சீதையை ராவணன் தூக்கிச் சென்றபோது, ஸ்ரீ ஹனுமாருடைய உதவியால் சீதை இலங்கையில் இருப்பதை ராமர் அறிந்தார். ராமர் அமைதித் தூதரை அனுப்பி, சீதையை திருப்பி அனுப்புமாறு கேட்ட பிறகும் ராவணன் ஒப்புக் கொள்ளாததால் யுத்தம் தயாரானது. அப்போது கடலை எப்படி கடப்பது? என்ற பிரச்சனை எழுந்தது.

ஸ்ரீ ராமர் முழங்கால்வரை கடல் நீரில் நின்று, கடல் அரசனை வழிகேட்க, கடலரசன் மசியவில்லை. கோபம் கொண்ட ராமர் தனது அக்னி வில்லால் கடலை அழிக்க நினைத்தார். பயந்து போன கடலரசன் பிராமணன் வடிவில் எதிரில் வந்து, என்னை எரிக்காதீர்கள், என்னை எரித்தால், என்னை நம்பி வாழும் பல்லாயிரம் உயிர்கள் இறந்துவிடும். மேலும் இங்கு மிக பெரிய பள்ளம் உண்டாகும், அதை உங்களால் கடக்க முடியாது அதற்கு வேறு ஒரு வழி இருக்கிறது என்று கூறினார். ராமர் என்ன வழி என்று கேட்டார்.

கடலரசன் சொன்னார், உங்களுடைய படையில் நல் நீல் என்ற இருவருக்கும் அவர்கள் குருவால் அளிக்கப்பட்ட ஓர் சக்தி உள்ளது. அதாவது, அவர்கள் கடலில் தனது கையால் எதைப் போட்டாலும், அது மிதக்கும், எனவே அவர்களை வைத்து கற்களால் மிதக்கும் பாலம் கட்டுங்கள் எனக் கூறினார். ஸ்ரீ ராமரும் நல், நீல் இருவரையும் அழைத்துக் கேட்க, அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ராமர் அவர்களை சோதிக்க, செய்து காட்ட சொன்னார்.

நல்-நீல் இருவரும், இன்று எல்லோர் முன்னிலையிலும் தங்களது மகிமை கூடும் என்று தவறாக நினைத்தார்கள். அவர்கள் தங்கள் குரு முனீந்திரரை நினைவு கூறவில்லை, நாம் அவரை வணங்கினால், ஸ்ரீ ராமர், இவர்களிடம் சக்தி இல்லை, வேறு யாரிடமோ பிரார்த்திக்கிறார்

என எண்ணிவிடுவார் என்று நினைத்து, குருவை வணங்காமல் கடலில் கல்லை போட்டதும் கல் மூழ்கிப் போனது. இருவரும் பலமுறை முயன்றும் கற்கள் மிதக்கவில்லை. உடனே ராமர், அவர்களிடம் எந்த சக்தியும் இல்லை, நீ பொய் சொல்கிறாய் என்று கடல் அரசனை பார்த்து சொன்னார். சமுத்திரராஜன், நல் நீல் இருவரின் தவறுகளை உணர்த்தினார். இருவரும் தங்கள் குரு முனிந்தர் பிரபுவை வணங்கினர். உடனே சத்குரு முனிந்தர் (கபீர் சாஹேப்) அங்கு வந்தார். ஸ்ரீ ராமர், ரிஷிவரே! இன்று உங்கள் சீடர்களால் கற்கள் மிதக்காமல் இருப்பது என் துரதிர்ஷ்டம் என்றார். முனிந்தர் ரிஷி, இவர்களுக்கு அகங்காரம் வந்துவிட்டதால் இனி இவர்கள் கைகளால் கற்கள் மிதக்காது என்றார். சத்குருவின் உரை அதை நிரூபிக்கிறது:-

கரிப், ஜைசே மாதா கர்ப கோ, ராகே ஜதன் பனாய் /
டேஸ் லகே தோ க்ஷீன் ஹோவே, தேரி ஐஸே பக்தி ஜெய்//

அதன் பிறகு நல், நீல் இருவரின் சக்தி முடிந்துவிட்டது. ஸ்ரீ ராமர், பரமேஸ்வர் முனிந்தர் ரிஷியிடம், ரிஷிவரே! என்மீது மிக பெரிய சோதனை வந்துள்ளது, படைகள் கடலை கடக்க வேண்டும் கருணை காட்டுங்கள் என்று பிரார்த்தித்தார். முனீந்திர பிரபு எதிரே இருந்த மலையை சுற்றி கோடு கிழித்து, இந்த மலையில் இருந்து எடுக்கப்படும் கற்கள் கடலில் மூழ்காது என்று சொன்னார். ஸ்ரீராமர் கல்லை சோதித்து பார்த்தார், கல்லை கடல் மீது வைத்ததும் கல் நீந்தத் தொடங்கியது. ஹனுமார் தனது தினசரி வழிபாட்டு செயலை போல ராம்-ராம் என எழுதி பாறைகளை கொண்டு வந்தார். நல்-நீல் இருவரும் கற்களை உடைத்து செதுக்கி அவற்றை பாலத்தில் அமைத்தனர். இந்த வழியில் பாலம் கட்டப்பட்டது. ஸ்ரீ தரம்தாஸ் ஜி கூறியதாவது:-

ரஹே நல்-நீல் ஜதன் கர் ஹார், தப் சத்குரு சே கரீ புகார் /
ஜா சத் ரேகா லிகீ அபார், சிந்து பர் ஷிலா திரானே வாலே /
தன்-தன் சத்குரு சத் கபீர், பகத் கி பீர் மிடானே வாலேனை /

பொருள்:- தர்மதாஸ் ஜி சொல்கிறார், சிலர், ஹனுமார் கற்களின் மேல் ராம் என்று எழுதப்பட்டதால் கற்கள் மிதந்தன என்கிறார்கள், சிலர் நல், நீல் பாலம் கட்டினார்கள் என்கிறார்கள். சிலர், ராமர் தான் பாலம் கட்டினார் என்கிறார்கள். ஆனால், அந்தப் பாலம் எப்படிக் கட்டப்பட்டது என மேலே விவரித்துள்ளோம்.

(சத் கபீர் கி சாகி – பக்கம் 179 முதல் 182 வரை)

கபீர், தீன் தேவ் கோ சப் கோயீ த்யாவை, சௌதே தேவ் கா மரம் நா பாவை /
சௌதா சாட் பஞ்சம் கோ த்யாவை, கஹே கபீர் ஸோ ஹம்பர் ஆவை //3//
கபீர், ஓம்கார் நிஷ்சய் பயா, யே கர்தா மத் ஜான் /
ஸாசா சப்த கபீர் கா, பர்தே மான்ஹி பஹ்சான் //5//
கபீர், ராம் கிருஷ்ண் அவதார் ஹைன், இன்கா நாம்ஹி சன்சார் /
ஜின் சாகெப் சம்சார் கியா, சோ கின்ஹூம் ந ஜன்மயா நார் //17//
கபீர், சார் புஜா கே பஜன் மே, பூலி பரே சப் சந்த் /
கபீரா சுமிரோ தாசு கோ, ஜாகே புஜா அனந்த் //23//
கபீர், சமுத்ர பாட் லங்கா கயே, சீதா கோ பர்தார் /
தாஹி அகஸ்த் முனி பீய் கயோ, இன்மேன் கோ கர்தார் //26//
கபீர், கோவர்தனகிரி தார்யோ கிருஷ்ணா ஜி, துரோணகிரி ஹனுமந்த் /
ஷேஷ் நாக் சப் சிருக்ஷ்டி சஹாரி, இன்மேம் கோ பகவந்த் //27//
கபீர், காடே பந்தன் விபதி மே, கடின் கியா சங்க்ராம் /

சின்ஹோா ரே நர் பிராணியா, கருட் படோ கி ராம் //28//
கபீர், கஹ் கபீர் சித் சேதஹுன், சப்த் கரௌ நிருவார் /
ஸ்ரீ ராம்ஹி கர்தா கஹத் ஹைன், பூலி பர்யோ சன்சார் //29//
கபீர், ஜின் ராம் கிருஷ்ணா வ நிரஞ்சன் கியோ, சோ தோ கர்தா ன்யார் /
அந்தா ஞான் நா புஜாயீ, கஹை கபீர் விசார் //30//
கபீர், ஜின் ராம் கிருஷ்ணா வ நிரஞ்சன் கியோ, சோ தோ கர்தா ன்யார் /
அந்தா ஞான் நா புஜாயீ, கஹை கபீர் விசார் //30//

## துவாபரயுகத்தில் கவிர்தேவ் (கபீர் சாகேப்) கருணாமய என்ற பெயரில் தோற்றம்

பரமேஸ்வர் கபீர் துவாபர யுகத்தில் கருணாமய என்ற பெயரில் தோன்றினார். அந்த சமயம் வால்மீக ஜாதியைச் சேர்ந்த சுபச் சுதர்சன் என்பவர் அவருடைய சீடர் ஆனார். இந்த சுதர்சனன் தான் பாண்டவர்களுடைய யாகத்தை வெற்றி பெறச் செய்தவர். ஸ்ரீ கிருஷ்ணரும், முப்பத்து முக்கோடி தேவர்களும், எண்பத்தெட்டாயிர முனிவர்களும், பன்னிரண்டு கோடி பிராமணர்களும், ஒன்பது நாத சம்பிரதாயத்தவர்களும், எண்பத்து நான்கு சித்தர்களும் உணவு உண்ட பிறகும் அந்த யாகம் பூர்த்தி அடையவில்லை. பக்தர் சுதர்சனன் பூரண குருவிடமிருந்து மூன்று மந்திரங்களையும் பெற்று, பக்தியின் எல்லைக்குள் இருந்து வழிபாடு செய்து கொண்டிருந்தார்.

### துவாபரயுகத்தில் இந்திரமதிக்கு அடைக்கலம் கொடுத்தல்

துவாபரயுகத்தில் சந்திரவிஜய் என்ற அரசன் இருந்தான். அவருடைய மனைவி இந்திரமதி ஆன்மீக சிந்தனை கொண்ட பெண். சாதுக்களையும் மகாத்மாக்களையும் அதிகம் மதிப்பவர். அவருக்கு ஒரு குரு இருந்தார். அந்த குரு அவளிடம், "மகளே, மகான்களுக்கும் சாதுக்களுக்கும் சேவை செய்து, உணவு அளித்தால், பல நன்மைகள் கிடைக்கும் என்றார். குரு கூறியபடி அவளும் ஏகாதசி விரதம், மந்திர ஜபம், ஆகிய இறைவழிபாட்டில் தீவிரமாக ஈடுபட்டாள். சாதுக்களுக்கு உணவு அளித்தால், அடுத்த பிறவியிலும் ராணியாகி, சொர்க்கத்தைப் பெறுவாய் என்று அந்த குரு கூறினார். எனவே இது மறக்காமல் இருக்க தினமும் ஒரு சாதுவிற்கு உணவளித்த பின்னரே உணவு உண்பேன் என்று மனதில் உறுதிகொண்டாள். ஒவ்வொரு நாளும் ராணி, முதலில், ஒரு சாதுவிற்கு உணவு அளித்த பிறகே தான் உணவை உண்பாள். இப்படி பல ஆண்டுகளாக தொடர்ந்தது.

ஒருமுறை ஹரித்துவாரில் கும்பமேளா கூடியது. அனைத்து சாதுக்களும் கங்கையில் நீராடப் சென்றுவிட்டார்கள். இதனால் ராணிக்கு அன்னதானம் கொடுக்க எந்த சாதுவும் கிடைக்கவில்லை. ராணியும் சாப்பிடாமலேயே இருந்தாள். நான்காவது நாள், ராணி தன் பணிப் பெண்ணிடம், யாராவது சாது தென்பட்டால் அழைத்துவா, இல்லையென்றால், நான் உணவு உண்ணாது இறந்து போவேன் என்று சொன்னாள். கபீர் பரமேஸ்வர் தனது பூர்வ ஜென்ம பக்தையை தன்னிடம் சரண் அடைய வைக்க என்னென்ன லீலைகள் செய்கிறார்! பணிப்பெண் மாளிகையின் மாடியிலிருந்து தொலைவில் வெள்ளை நிற ஆடையில் ஒரு சாதுவை கண்டாள். துவாபர யுகத்தில் கபீர் பரமேஸ்வர் கருணாமய என்ற பெயரில் வந்தார். பணிப்பெண் ஓடிவந்து ராணியிடம் கூறினாள். ராணி உடனே அவரை அழைத்துவரச் சொன்னாள். பணிப்பெண் வெளியில்

சென்று அந்த சாதுவிடம், ராணி உங்களை அழைக்கிறார்கள் என்று சொன்னாள். கருணாமய சாகேப் பணிப்பெண்ணிடம், ஏன் ராணி என்னை அழைக்கவேண்டும் என கேட்டார். பணிப்பெண் அனைத்து விவரத்தையும் கூறினாள். கபீர் சாகேப், ராணிக்கு தேவைப்பட்டால் அவள் இங்கே வரட்டும் என்றார். மேலும் நீ ஒரு பணிப்பெண் அவள் ராணி, நான் அங்கு வந்த பிறகு ராணி அல்லது ராஜா உன்னை யார் அழைத்தது என்று சொன்னால், மகளே, மகான்களை அவமதிப்பது மகா பாவமாகும். பணிப்பெண் ராணியிடம் வந்து விவரத்தை சொல்ல, ராணி பணிப்பெண்ணின் உதவியுடன் சென்று, அவர் பாதகமலங்களில் விழுந்து, கடவுளே! உங்களை தோளில் சுமந்து கொண்டு செல்ல விரும்புகிறேன் ஆனால் முடியவில்லை என்று வணங்கி, அழைத்து செல்ல வேண்டினாள். உனக்கு பணிவும் பக்தியும் இருக்கிறதா என்று பரிசோதிக்கவே நான் அப்படி சொன்னேன் என்று கருணாமய சாஹேப் கூறினார். ராணி அவரை அழைத்து வந்து, தானே உணவை சமைத்தாள். கருணாமய ரூபத்தில் வந்த கவிர்தேவ், தான் உணவு உண்பதில்லை, தனது உடல் வேறுபட்டது ஆகாரம் தேவையில்லை என்றார். ராணியும் சாப்பிட மறுத்துவிட்டாள். எனவே பிறகு கருணாமய சாகேப் உணவு உண்டார். பிறகு கருணாமய சாகேப் ராணியிடம், இந்த வழிபாடு யார் உனக்குச் சொன்னது? என்று கேட்டார். தனது குருவின் உத்தரவு என்று ராணி கூறினாள். கருணாமய சாகேப் வேறு என்ன சொன்னார் என்று கேட்டார். ராணி சொன்னாள், பிரம்மா விஷ்ணு சிவன் ஆகியோரின் பூஜைகள், ஏகாதசி விரதம், புனித யாத்திரை, சிரார்த்தம், கோவிலுக்குச் செல்வது மற்றும் சாதுக்களுக்கு சேவை செய்ய சொன்னார் என்றாள். பிறகு கருணாமய (கபீர் சாகேப்), உன்னுடைய குரு அளித்த வழிபாட்டால், நீ பிறப்பு இறப்பு, சொர்க்கம் நரகம் மற்றும் 84 லட்சம் உயிரினங்களின் துன்பங்களிலிருந்து விடுபட முடியாது என்றார். உடனே ராணி, மகாராஜ் ஜி, எல்லா சாதுக்களும் தன் புகழையே பாடுவார்கள், எனது குருவைப் பற்றி பேசாதீர்கள், எனக்கு முக்தி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை என்று பதில் அளித்தாள்.

இந்த அப்பாவி ஜீவனை திருத்த முடியாது என்று நினைத்து கருணாமய (கபீர்) சாஹிப் சொன்னார், மகளே, நான் உன் குருவை இகழவில்லை, உண்மையான பக்தி மார்க்கத்தை விளக்குகிறேன், சாஸ்திரத்திற்கு எதிரான இந்த பக்தி உன்னைக் கரை சேர்க்காது, உனக்கு வரும் துன்பங்களையும் நீக்காது, மேலும் கேட்டுக்கொள், இன்று முதல் மூன்றாவது நாள் நீ இறந்துவிடுவாய் அதற்க்கு மேல் உனக்கு ஆயுள் இல்லை. உன் குருவாலும், உனது தவறான பக்தியாலும் உன்னை காப்பாற்ற முடியாது என்றார். சாது சொன்னால் உண்மையாகதான் இருக்கும் என்று ராணி பயந்தாள். என் உயிரை காப்பாற்ற முடியுமா என்று கேட்டாள். (மரணம் நெருங்கும்போது தான் மனதிற்கு பயம் வருகிறது, இல்லையென்றால் கேட்பதில்லை). கபீர் சாஹிப் (கருணாமய), நீ தீட்சை பெற்று முந்தைய பக்தியை கைவிட்டால் பிழைக்கலாம் என சொன்னார். குருவை மாற்றுவது பாவமல்லவா என இந்திரமதி வினவ, கபீர் சாஹிப் (கருணாமய) சொன்னார், “மகளே, இதுவும் உனது பிரம்மை, ஒரு மருத்துவரால் முடியவில்லை என்றால் மற்ற மருத்துவரிடம் செல்வதில்லையா? ஐந்தாம் வகுப்புக்கு ஒரு ஆசிரியர் இருப்பார், மேல் வகுப்புகளில் வேறு ஆசிரியர்கள் இருப்பார்கள், வாழ்நாள் முழுவதும் ஐந்தாம் வகுப்பிலேயே இருப்பாயா? நீ இதை விட்டு மேல் வகுப்புக்கு செல்லவேண்டும், நான் உனக்கு கற்பிக்க வந்துள்ளேன் என்றார். ராணி ஏற்கமாட்டாள், ஆனால் மரணம் நெருங்கியதால் ஒப்புக்கொண்டாள்.

கருணாமய (கபீர்) சாஹிப் இந்திரமதிக்கு தீட்சை அளித்து, பிறகு சொன்னார், "மூன்றாம் நாள் என் ரூபத்தில் காலன் வருவான். நீ பேச வேண்டாம், நான் அளித்த மந்திரத்தை இரண்டு நிமிடங்கள் உச்சரித்த பிறகு, அவனை வணங்கவேண்டும், பொதுவாக குரு வந்தவுடன் அவர் பாதங்களில் பணிய வேண்டும், ஆனால் இந்த முறைக்கு மட்டுமே இந்த உத்தரவு என்றார். ராணி சரி என்றாள்."

ராணி கவலையில் பக்தியுடன் ஜபம் செய்துகொண்டே இருந்தாள். காலன், கருணாமய (கபீர் சாஹிப்) வேஷத்தில் குரு ரூபத்தில் வந்து இந்திரமதி, இந்திரமதி என்று அழைத்தான். பயந்திருந்த இந்திரமதி, காலனை பார்க்காமலேயே மந்திரத்தை ஜபித்துக்கொண்டே இருந்தாள். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு பார்த்தபோது குரு வேஷத்தில் வந்த காலனின் ரூபம் தனது நிஜ ரூபமாக மாறியது. தனது ரூபம் மாறியதை கண்ட காலன், இந்திரமதியிடம் மிக பெரிய சக்தி இருந்ததை உணர்ந்து, இன்று தப்பித்துவிட்டாய், உன்னை பிறகு பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி அங்கிருந்து சென்றுவிட்டான். ராணி மகிழ்ச்சியில், தன் பணிப் பெண்களிடமும், அரசனிடமும், தன் குருநாதர் தன்னை மரணத்தில் இருந்து காப்பாற்றி விட்டதாகக் கூறினாள். அரசன் சொன்னான், "அரசி, காலன் வந்திருந்தால் உன்னை விட்டு வைத்திருப்பானா? நீ நாடகம் ஆடுகிறாய், எல்லா சாதுக்களும் இப்படித்தான் சொல்லி ஏமாற்றுவார்கள்" என்றார். பிறகு ராணி தன் படுக்கை அறைக்குச் சென்றுவிட்டாள். சிறிது நேரம் கழித்து, அந்தக் காலன் பாம்பு வடிவில் வந்து ராணியைத் தீண்டினான். ராணி கூச்சலிட, அனைவரும் ஓடி வந்து பார்த்தபோது, பாம்பு சாக்கடை வழியாக ஓடிவிட்டது. தன் குருவை வேண்டிக்கொண்டே ராணி மயங்கிவிட்டாள். பிறகு கருணாமய (கபீர்) சாஹிப் அங்கு தோன்றினார். மக்களுக்கு காட்டுவதற்காக மந்திரம் ஓதி இந்திரமதியை உயிர்ப்பித்தார். உயிர் பெற்ற ராணி "இன்று உங்கள் அடைகலத்தில் இல்லாவிட்டால் நான் இறந்திருப்பேன்" என்று நன்றி கூறினாள். கபீர் பரமேஸ்வர் இந்திரமதியிடம் சொன்னார், நான் இந்தக் காலனை உன் வீட்டுக்குள் நுழையக் கூட விடமாட்டேன். அவன் உன்னை தாக்கி இருக்க மாட்டான், ஆனால் நீ என்னை நம்பியிருக்க மாட்டாய். எந்த ஆபத்தும் இல்லை, குருநாதர் ஏமாற்றி தீட்சை கொடுத்தார் என்று நினைத்திருப்பாய். எனவே, உனக்கு சிறிய அதிர்ச்சியை கொடுத்தேன். இல்லையெனில் மகளே, உனக்கு நம்பிக்கை வந்திருக்காது" என்று கூறினார்.

தர்மதாஸ் யஹான் கனா அந்தேரா, பின் பரிசய் ஜீவ் ஜம் கா சேரா //

இனி நான் விரும்பும்போது தான் உனக்கு மரணம் சம்பவிக்கும் என்று கபீர் பரமேஸ்வர் (கருணாமய) சொன்னார். கரீப்தாஸ் ஜி கூறுகிறார்:–

கரிப், கால் டரே கர்தார் சே, ஜெய ஜெய ஜெய ஜகதீஷ் //
ஜௌரா ஜௌரி ஜாடதி, பக் ரஜ் டாரே ஷீஷ் //

பொருள்: இந்த காலன் கபீர் பரமேஸ்வரருக்கு பயப்படுகிறான். மரணம் என்பது, கபீர் சாகேப் உடைய காலடி தூசிகளை தலையில் பூசி, இனி உங்கள் பக்தர்களிடம் வர மாட்டேன் என வேண்டுகிறது.

கரீப், கால் ஜோ பீசை பீஸ்னா, ஜௌரா ஹை பனிஹார்/
யே தோ அசல் மஜூர் ஹைன், மேரே சாகேப் கே தர்பார் //

பொருள்: இந்தக் காலன் (பிரம்) 21 பிரபஞ்சங்களின் கடவுள் மற்றும் பிரம்மா, விஷ்ணு, சிவனுக்குத் தந்தையாவார். இவர் எனது கபீர் பகவானின்

வேலைக்காரன் மற்றும் மரணம் என்பது வேலைக்காரி. இந்த இருவரும் எனது கபீர் பரமேஸ்வரரின் சபையின் வேலைக்காரர்கள்.

பிறகு சில காலம் கழித்து கருணாமய சாகேப், இந்திரமதியின் ஈடுபாட்டைக் கண்டு சார்நாம் (3வது மந்திரம்) அளித்தார். கபீர் பரமேஸ்வரர் அவ்வப்போது வரும் போதெல்லாம், இந்திரமதி தன் கணவனான அரசனுக்கும், அறிவுரை அருள பிரார்த்தித்தார். கபீர் சாஹேப் சந்திரவிஜய்யிடம், நீங்களும் தீட்சை எடுத்துக் கொள்ளுங்கள், இந்த ராஜ பதவி சிறிது காலம்தான், பிறகு 84 லட்சம் உயிரினங்களில் பிறக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். சந்திரவிஜய் அரசன், தெய்வமே, நான் இந்திரமதியை தடுக்க மாட்டேன், உங்கள் சிஷ்யை எவ்வித சத்சங்கம் செய்தாலும் எவ்வளவு தானம் செய்தாலும் நான் மறுக்க மாட்டேன். ஆனால் நான் தீட்சை எடுக்க மாட்டேன், ஏனென்றால், நான் பெரிய பெரிய அரசர்களின் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும் என்றார். பிறகு கபீர் சாஹேப் ஜி (கருணாமய) கேட்டார், “கூட்டங்களில் கலந்து கொண்டால் என்ன? அங்கு பால் பழரசம் அருந்துங்கள் மது அருந்த வேண்டாம், மது அருந்துவது பெரும் பாவம்” என்றார். ஆனால் அரசன் கேட்கவில்லை.

ராணியின் வேண்டுகோளுக்காக, கருணாமய (கபீர்) சாஹேப் மீண்டும் மன்னரிடம், தீட்சை பெறாமல் வாழ்க்கை வீணாகிவிடும், நீங்கள் தீட்சை எடுத்துக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினார். மன்னர் மீண்டும், குருவே, இனி என்னை தீட்சைக்காக கட்டாயப்படுத்தாதீர், இந்திரமதியை நான் தடுக்கமாட்டேன் என்று சொன்னார். பிறகு கபீர் பரமேஸ்வரர் சொன்னார், மகளே! இந்த இருநாள் வாழ்க்கை சுகத்தை கண்டு இவனுக்கு புத்தி கெட்டுவிட்டது, நீ இறைவனை வழிபட்டு முக்தி அடைய பார். இங்கு யாரும் கணவனோ மனைவியோ இல்லை, எல்லாம் சிறிய காலம் உறவு தான் என்றார். பிறகு இந்திரமதி 80 வயது மூதாட்டியானவுடன் (40 வயதில் இறந்திருக்க வேண்டியது), கருணாமய சாகேப் வந்து இந்திரமதியிடம், “சத்யலோகம் செல்ல தயாரா? அல்லது பேரன் பேத்தியில் இன்னும் ஆசை மோகம் உள்ளதா” என்று கேட்டார். அதற்க்கு ராணி, “கடவுளே நான் தயாராக உள்ளேன், இந்த கெட்ட உலகத்தில் ஆசைப்பட ஒன்றும் இல்லை, அப்படிப்பட்ட ஞானத்தை வழங்கியுள்ளீர்கள்”, என்று சொல்லி ராணி இறந்து விட்டாள். பரமேஸ்வர் கபீர் (கருணாமய), இந்திரமதியின் ஆன்மாவை மேலே பிரபஞ்சத்தில் உள்ள ஓர் அமுத குளத்திற்கு கொண்டு சென்றார். அங்கு ஆன்ம நீராட வேண்டி இருக்கும். கபீர் பரமேஸ்வர் குரு வடிவில் தோன்றி, உயிரினத்தை சிறிது நேரம் அந்த அமுத குளத்தில் வைத்திருப்பார். பிறகு கபீர் பரமேஸ்வர், இந்திரமதியிடம், உன் மனதில் ஏதாவது ஆசை இருந்துவிட்டால், நீ மீண்டும் பிறப்பாய், சத்யலோகத்திற்கு செல்ல முடியாது என்றார். அப்போது இந்திரமதி, “குருவே நீங்கள் எல்லாம் அறிந்தவர், எனக்கு எந்த ஆசையும் இல்லை, ஒரே ஒரு குறை உள்ளது, என் கணவர் என்னை ஒருபோதும் பக்திக்கு மறுத்ததில்லை. இல்லையெனில், இன்றைய கணவர்கள் அனுமதிப்பதில்லை. ஒரு வேளை அவர் என்னை மறுத்திருந்தால் இன்று நான் உங்கள் சரணடியில் வந்திருக்கமாட்டேன். எனவே, அவர் உதவியதற்கு ஏதாவது பலன் இருந்தால், கடவுளே அவர்மீதும் கருணை காட்டுங்கள்” என்று கூறினாள். கபீர் பரமேஸ்வர், அவள் கணவனின் மோகத்தில் இருப்பதை கண்டு, மகளே, சில வருடங்களுக்கு நீ இங்கேயே இரு என்றார்.

பிறகு இரண்டு வருடங்கள் கழித்து, ராஜாவுக்கு மரணம்

நெருங்கியது, எமனின் தூதர்கள் வந்தார்கள். மன்னன் சபையில் மயங்கி விழுந்தான். எமனின் தூதர்கள் அவன் கழுத்தை நெறிக்க, மல மூத்திரம் வெளியேறியது. கருணாமய (கபீர்) சாஹிப், ராணியிடம் சொன்னார், பக்தி செய்யாத அரசனின் நிலையை பார் என்று சொல்லி அங்கிருந்து காட்டினார். இதைப் பார்த்த இந்திரமதி, கருணை காட்டுங்கள் என வேண்டினாள். கபீர் சாகேப் (கருணாமய) அவள் கனவனின் மோகத்தால் மீண்டும் காலனின் வலையில் சிக்கிவிடுவாள் என்று நினைத்து, மன்னர் மயங்கி கிடந்த இடத்திற்கு சென்றார். கபீர் சாகேப் வந்தவுடன், எமனின் தூதர்கள் கழுகுகள் போல பறந்து ஓடிவிட்டன. பிறகு சந்திரவிஜய்க்கு சுயநினைவு வந்தது, சந்திரவிஜயனுக்கு மட்டுமே கபீர் சாஹிப் தெரிந்து கொண்டிருந்தார், வேறு யாருக்கும் தெரியவில்லை. சந்திரவிஜயன் காலில் விழுந்து, என்னை மன்னித்துவிடுங்கள், என் உயிரைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்ச ஆரம்பித்தார். கபீர் சாகேப், "ராஜா, அன்றும் இதேதான், இன்றும் இதேதான், தீட்சை எடுத்து பக்தி செய்ய வேண்டும்" என்றார். ராஜா, ஒப்புக்கொள்ள, கபீர் சாகேப் தீட்சை அளித்து, இப்போது உனக்கு மேலும் இரண்டு வருட ஆயுளைத் தருகிறேன், இதில் ஒரு மூச்சு கூட ஜெபிக்காமல் காலியாக போனால் தண்டனை நிச்சயம் என்று கூறினார்.

கபீர், ஜீவன் தோ தோடா பலா, ஜை சத் சுமரண் ஹோா /
லாக் வர்ஷகா ஜீவ்னா, லேகே தரே நா கோ //

சுப காரியங்களில் உதவிய புண்ணியமும், இரண்டு வருட பக்தியையும் சேர்த்து, மூன்று மந்திரங்களையும் கொடுத்து, கபீர் சாகேப் சந்திரவிஜய்யை கரை சேர்த்தார். அவருடைய மகிமையே மகிமை, சத்குரு தேவிற்கு ஜெய். "ஜெய் பந்தி சோட்".

கபீர் பரமேஸ்வர், உண்மையான பக்தனின் ஆயுளை நீட்டித்து அவனது குடும்பத்தையும் காப்பார் என்பது மேலுள்ள விவரங்களிலிருந்து தெரிகிறது. இந்த நிகழ்வு முந்தைய காலத்தில் நடந்தது, இன்று சாதாரண மனிதன் நம்புவதில்லை. தற்போது, பரமேஸ்வரர் கபீரின் அருளால், இந்த தாஸ் (ராம்பால் ஜி) மூலம் துன்பங்கள் நீங்கி ஆயுள் அதிகரித்த பல பக்தர்களின் ஆதாரங்களை "பரமேஸ்வர் கா சார் சந்தேஷ்" என்ற புத்தகத்தில் படியுங்கள்.

## கலியுகத்தில் கபீர் சாகேப்ஜியின் (கவிர்தேவ்) தோற்றம்

கி.பி. 1398 ஆம் ஆண்டு (ஹிந்தி வருடம் 1455) வைகாசி மாதம், பௌர்ணமி அன்று, அதிகாலை பிரம்மமுகூர்த்தத்தில் பூரண பரமேஸ்வர் கபீர் ஜி (கவிர்தேவ்), தனது சத்யலோகத்திலிருந்து பூமிக்கு வந்தார். காசியில், லகர்தாரா என்ற குளத்தில் தாமரை மலர் மீது ஒரு குழந்தையாக தோன்றினார். முதலில் நீரு, நீமா, யார் என்று அறிந்து கொள்ளுங்கள். நீரு-நீமா துவாபரயுகத்தில் சுபச் சுதர்ஷனின் பெற்றோர் ஆவார். அப்போது அவர்கள் கபீர் சாகேப் அளித்த தத்துவஞானத்தை ஏற்கவில்லை. கடைசியில் சுதர்சனன், கருணாமய வடிவில் வந்த கபீர் சாகேப் ஜியிடம் வேண்டிக்கொண்டார், மகாபிரபு, நீங்கள் எனக்கு தீட்சையை வழங்கி சகலமும் கொடுத்துவிட்டீர்கள், உண்மையான பக்தியின் செல்வத்தால் பரிபூரணம் ஆகிவிட்டேன். இந்த சேவகனின் ஒரு வேண்டுகோள், சரி என்று நினைத்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். இன்னொரு முறை என்

பெற்றோர்கள் மனித உடல் பெற்றால் அவர்களையும் கரை சேர்க்கவும் பிரபு. அவர்கள் மிகவும் புண்ணிய ஆத்மாக்கள், உங்களை ஏற்காதது என் பெற்றோர்களுடைய அறிவீனம். கபீர் சாகேப் சொன்னார், “அவர்களை நினைத்து நீ இங்கே சிக்கிக் கொள்வாய், கவலைப்படாதே, நேரம் வரட்டும் நான் அவர்களை பார்த்துக் கொள்கிறேன். காலனின் வலையில் இருந்து விடுவிப்பேன். நீ நிம்மதியாக சத்யலோகத்திற்கு செல்லலாம்” என்றார். பிறகு சுதர்சனன் சத்யலோகத்திற்கு சென்றார்.

நீருவும், நீமாவும் கலியுகத்தில் இதற்கு முன் இருமுறை பிராமண குலத்தில் பிறந்தார்கள், அப்போது அவர்களுக்கு குழந்தைகள் எதுவும் இல்லை. மூன்றாவது முறை காசியில் கௌரிசங்கர், சரஸ்வதி என்ற பெயரில் பிராமண குலத்தில் பிறந்தார்கள். இம்முறையும் அவர்களுக்குக் குழந்தை எதுவும் இல்லை.

நீரு மற்றும் நீமா இருவரின் பெயர் கௌரி சங்கர் மற்றும் சரஸ்வதி, இருவரும் பிராமண சாதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் சிவபக்தர்கள். சிவபெருமானின் புகழை சிவபுராணம் மூலம் பக்தர்களுக்கு எடுத்துரைத்து வந்தார். அவர்கள் மிகவும் தன்மையான ஆன்மாக்கள், யாரிடமும் காசு வாங்குவதில்லை. யாராவது தட்சனை கொடுத்தாலும், தங்கள் உணவிற்க்கு உரிய காசு வைத்து, மிச்சத்தை மற்றவர் உணவிற்கு கொடுத்துவிடுவார்கள். தன்னலமற்ற கௌரிசங்கர் மற்றும் சரஸ்வதி மீது மற்ற சுயநல பிராமணர்கள் பொறாமை கொண்டனர், ஏனென்றால் அவர் பணத்திற்காக பக்தர்களை தவறாக வழி நடத்தவில்லை, இதனால் இவர் புகழ் உயர்ந்தது. இவருக்கு இந்து பிராமணர்களின் ஒத்துழைப்பு இல்லாததை அறிந்து, இஸ்லாமியர்கள் இவர்களை பலவந்தமாக மத மாற்றம் செய்தார்கள். அவர்கள், தாம் தீண்டிய தண்ணீரை இவர் மீதும் இவரது வீட்டின் மீதும் தெளித்து, இவரையும் குடிக்க செய்தனர். எனவே, இந்து பிராமணர்கள் அனைவரும் இவரை இஸ்லாமியர் என்று சொல்லி, அன்றுமுதல் இவருக்கும் ஹிந்துக்களுக்கும் எந்த உறவும் இல்லை என்று சொல்லிவிட்டனர்.

## நீரு, நீமாவிற்கு நெசவாளர் பட்டமும், கடவுள் அருளும்

அப்பாவியான கௌரிசங்கரும், சரஸ்வதியும் ஆதரவற்றவர்களாக இருந்தனர், முஸ்லீம்கள் அவர்களுக்கு நீரு, நீமா என பெயர் இட்டனர். முன்னர், பூஜைகள் மூலம் வரும் தட்சணையில் வாழ்வாதாரம் நடத்தினர், அதில் மிச்சத்தில் அன்னதானம் செய்து வந்தனர். பூஜையில் வரும் தட்சணை நின்றதால், அவர்கள் துணி நெய்யும் கைத்தறி வைத்து வருமானம் ஈட்டினர். தங்கள் செலவுபோக, மிஞ்சியதை முன்புபோலவே தானம் செய்தார்கள். அவர்கள் மதம் மாற்றப்பட்டதால், அவர்களை ஹிந்து பிராமணர்கள் கங்கையில் குளிக்க அனுமதிக்கவில்லை. கங்கையின் நீர் அலைகளால், காசியில் உள்ள லகர்தாரா என்ற குளம் தூய்மையான நீரால் நிரம்பியிருக்கும். அதில் தாமரை மலர்கள் வளர்ந்திருந்தன. கிபி 1398 ஆம் ஆண்டு (ஹிந்தி வருடம் 1455) வைகாசி மாத பௌர்ணமி அன்று, பிரம்மமுகூர்த்தத்தில் (சூரிய உதயத்திற்கு ஒன்றரை மணிநேரம் முன்பு), கபீர் பரமேஸ்வர் (கவிர்தேவ்) அவரது (ரித்தாம்) சத்யலோகத்திலிருந்து, குழந்தை வடிவில் வந்து, காசி நகரத்தில் உள்ள லகர்தாரா குளத்தில் தாமரை மலர் மீது அமர்ந்தார். அதே குளத்தில் நீருவும், நீமாவும் தினமும்

அதிகாலையில் குளிப்பதற்குச் செல்வார்கள். மிகவும் பிரகாசமான ஒளி பந்து (பரமேஸ்வர் கபீர் சாகேப் மிகவும் பிரகாசமான ஒளி உடலுடன் குழந்தை வடிவில் வந்தார் அது தூரத்திலிருந்து ஒளி வட்டம் போல் காணப்படும்) மேலே சத்யலோகத்திலிருந்து வந்து ஒரு தாமரை மலர் மீது நின்றது. அதன் மூலம் லகர்தாரா குளம் முழுவதும் மின்னியது, பின்னர் அது ஒரு மூலையில் சென்று மறைந்துவிட்டது. இந்தக் காட்சியை, சுவாமி ராமானந்தரின் சீடரான அஷ்டானந்தர் நேரடியாகக் கண்டார். அஷ்டானந்தர் அதே குளத்தில் தினமும் குளிப்பதற்குச் செல்வது வழக்கம். அங்கு உள்ள ஒரு தனிமையான இடத்தில் அமர்ந்து இயற்கையை ரசித்து, தன் குரு அளித்த மந்திரத்தை ஜபிப்பார். சுவாமி அஷ்டானந்தர், கண்கள் கூசும் அளவுக்கு பிரகாசமான ஒளியைக் கண்டு, தனது பக்தியின் பலனா அல்லது ஏமாற்றமா என்று எண்ணி, காரணம் கேட்க தன் குருநாதரிடம் சென்றார்.

அஷ்டானந்தர், மதிப்பிற்குரிய சுவாமி ராமநந்தரிடம், “குருவே! என் வாழ்நாளில் இதுவரை பார்த்திராத ஒரு ஒளியை இன்று கண்டேன்” என்று சொன்னார். பிறகு அனைத்தையும் விவரித்தார், “வானத்திலிருந்து ஒரு ஒளி வட்டம் வந்தது, அதை பார்த்ததும், அதன் ஒளியின் பிரகாசத்தால் என் கண்கள் தானே மூடிக்கொண்டன. மூடிய கண்களில் ஒரு குழந்தையின் உருவத்தைப் பார்த்தேன். (சூரியனைப் பார்த்து கண்களை மூடிய பிறகு ஒரு பந்து போல் அதன் வடிவம் தெரியும், அதே போல தான் குழந்தையும் தெரிந்தது.) இது என் பக்தியின் பலனா அல்லது பார்வைக் குறைபாடா?” என்று கேட்டார்.

சுவாமி ராமானந்தர், ‘மகனே, மேல் லோகங்களிலிருந்து அவதாரங்கள் வரும்போது இப்படி நடக்கும் என்றார். அவர் ஒருவருடைய இடத்தில் தோன்றி, ஏதாவது ஒரு தாயிடமிருந்து பிறந்து, பிறகு லீலைகளை செய்வார்கள் என்றார்.” (ஏனென்றால், ரிஷிகளுக்கு உள்ள ஞானம் இவ்வளவுதான், ஒரு தாயிடமிருந்து மட்டுமே பிறக்க முடியும் என்று கருதுகிறார்கள்) அவருக்கு தெரிந்த அளவிற்கு, அவர் தனது சீடரின் சந்தேகத்தை தீர்த்தார்.

நீருவும் நீமாவும் அன்று வழக்கம் போல் குளிக்கச் சென்று கொண்டிருந்தனர். செல்லும் வழியில், நீமா கடவுளை வேண்டினாள் (ஏனெனில், அவர்கள் முஸ்லீம்களாக மாறியிருந்தாலும், பல ஆண்டுகளாக செய்து வந்த வழிபாடு அவர்களால் மறக்க முடியவில்லை), சிவபெருமானே! எங்களுக்காக உன்னிடம் ஒரு பிள்ளை கூட இல்லையா, எங்களுக்கும் ஒரு பிள்ளையை கொடுத்திருந்தால் எங்கள் வாழ்வும் மகிழ்ச்சி அடைந்திருக்கும் என கூறி கதறி அழுதாள். நீரு நீமாவிடம், இறைவனின் விருப்பத்தில் மகிழ்ச்சியாக இருப்பதுதான் நமக்கு நன்மை, இப்படி நீ அழுது கொண்டே இருந்தால் உடல் பலவீனமாகி, பார்வையும் குறையும் என்று கூறினார். நமது தலைவிதியில் குழந்தை இல்லை என்றார், இவ்வாறு கூறிக்கொண்டே லகர்தாரா குளத்தை வந்தடைந்தனர். சற்று இருளாக இருந்தது. நீமா குளித்துவிட்டு வெளியே வந்த பிறகு நீரு குளத்தில் இறங்கி குளிக்க ஆரம்பித்தார். நீமா துணியைத் துவைக்க மீண்டும் குளக்கரைக்குச் சென்றாள், அதற்குள் சற்று வெளிச்சம் வந்துவிட்டது, சூரியன் உதயமாகும் நேரம் ஆகிவிட்டது. எதிரே குளத்தில் தாமரை மலரில் ஏதோ அசைவதை நீமா பார்த்தாள். குழந்தை வடிவில் கபீர் சாகேப் அவரது கால் கட்டை விரலை வாயில் வைத்து மற்றொரு காலை ஆட்டிக்கொண்டிருந்தார். முதலில் நீமா அது பாம்பாக இருக்கும், தன் கணவரை நோக்கி வருகிறதோ

என்று நினைத்து சற்று கவனித்து பார்த்தபோது, உடனே அது ஒரு குழந்தை என்பதை உணர்ந்தாள். குழந்தை அதுவும் தாமரை மலர் மீது! உடனே கணவனிடம், அங்கு பாருங்கள் குழந்தை மூழ்கிவிடும், மூழ்கிவிடும் என்று நீமா கத்தினாள். குழந்தையின் ஆசையில் பைத்தியமாகிவிட்டாய், இப்போது தண்ணீரிலும் உனக்கு குழந்தை தெரிகிறது என்று நீரு சொன்னார். நீமா, எதிரே தாமரை மலரைப் பாருங்கள் என்றாள். நீமாவின் சத்தத்தால் நீரு அவள் கைகாட்டிய இடத்தைப் பார்த்தார், தாமரை மலரில் பிறந்த குழந்தை ஒன்று படுத்திருந்தது. நீரு குழந்தையை பூக்களுடன் சேர்த்து எடுத்து வந்து நீமாவிடம் கொடுத்து குளிக்க ஆரம்பித்தார். நீரு குளித்துவிட்டு வெளியே வந்தார். நீமா குழந்தை வடிவில் வந்த பரமேஸ்வரரை கொஞ்சிக்கொண்டே, சிவபெருமானை துதித்து கொண்டிருந்தாள், “கடவுளே! பல வருட ஆசையை நிறைவேற்றி விட்டீர்கள், (ஏனென்றால் அவள் சிவ வழிபாடு செய்பவள்) சிவபெருமானே! இன்று தான் இதயத்திலிருந்து வேண்டினேன், இன்றே நிறைவேற்றி விட்டீர்கள்” என்று துதித்தாள்.

கபீர் பரமேஸ்வருடைய பெயரைச் சொல்லும் போதே, நம் இதயத்தில் ஒரு விசேஷமான உணர்வு உண்டாகிறது, ஆத்ம திருப்தியும், அன்பில் ஆனந்த கண்ணீர் வருகிறது. அவரை, அந்த தாய்-சகோதரி தன் பிள்ளை போல் கொஞ்சும் போது கிடைத்திருக்கும் ஆனந்தத்தையும், மகிழ்ச்சியையும் விவரிக்க முடியாதது. வெல்லத்தை சுவைத்தவன் மட்டுமே அதன் சுவை அறிவான். தாய் கொஞ்சுவது போல, குழந்தை வடிவமான பரமேஸ்வரரை, சில சமயம் முகத்தில் முத்தமிட்டும், சில சமயம் மார்போடு அனைத்துக்கொண்டு, மீண்டும் மீண்டும் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். இதற்கிடையில் நீரு குளித்துவிட்டு வெளியே வந்தார். அவர் மனதிற்குள், முஸ்லிம்களோடு அதிக நட்பும் இல்லை, இந்து பிராமணர்களும் நம்மை வெறுக்கிறார்கள் என்று அவர் நினைத்துக்கொண்டிருந்தார். முன்னதாக, முஸ்லிம்கள் இதை பயன்படுத்தி நம்மை முஸ்லிம்களாக்கினர். நமக்கு உதவ யாரும் இல்லை. இந்தக் குழந்தையை எடுத்துச்சென்றால், இதன் பெற்றோர் யார்? நீங்கள் குழந்தையைத் திருடிவிட்டீர்கள், அதன் தாய் அழுதுகொண்டிருக்கும் என்று மக்கள் கேட்பார்கள். தாமரை மலர் மீது கண்டோம் என சொன்னால் நம்ப மாட்டார்கள் என்று நினைத்து, நீமாவிடம் குழந்தையை இங்கேயே விட்டுவிட சொன்னார். நீமா, என்னால் இந்தக் குழந்தையை விட முடியாது, இந்தக் குழந்தை என் மீது என்ன தந்திரம் செய்தது என்று தெரியவில்லை, நான் என் உயிரைக் கூட கொடுக்க முடியும், ஆனால் என்னால் இதை விட முடியாது என்றாள். நீரு, நீமாவிடம் நமக்கும் பல பிரச்சனை வரும் என்று எல்லாவற்றையும் விளக்கினார். இந்தக் குழந்தைக்காக என்னை நாடுகடத்தினாலும் பரவாயில்லை, நான் இதை விடமாட்டேன் என்றாள். அவளுடைய முட்டாள்தனத்தைக் கண்டு, அவள் பைத்தியமாகிவிட்டாள், சமூகத்தை கூட பார்க்கவில்லை என்று நீரு நினைத்து, நீமாவிடம், “நமக்கு குழந்தை இல்லாததால், இன்றுவரை உன்பேச்சை நான் தட்டியதில்லை. நீ என்ன சொன்னாலும் நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால் இன்று நான் உன் பேச்சைக் கேட்கமாட்டேன். நீ இந்தக் குழந்தையை இங்கேயே விட்டுவிடு, இல்லையென்றால் உன்னை அறைந்து விடுவேன் என்றார். நீரு முதன்முறையாகத் தன் மனைவியை அறைய கையை ஓங்கினார், அதே கணம், குழந்தை வடிவில் இருந்த கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்), நீரு, என்னை வீட்டிற்கு கொண்டு செல்லுங்கள், உங்களுக்கு எந்த ஆபத்தும்

வராது என்று கூறினார். குழந்தை வடிவில் பரமேஸ்வரரின் வார்த்தைகளைக் கேட்டு, இது ஒரு தேவனோ, அல்லது சித்தராக இருக்கும் என்று பயந்து அமைதியாக நடக்க ஆரம்பித்தார்.

குழந்தையை வீட்டிற்கு கொண்டு வந்ததும், அதை பற்றி கேட்க அனைவரும் மறந்துவிட்டனர். காசியின் மக்கள் குழந்தையைப் பார்க்க வந்து, தேவனை போல் இருக்கிறது என்றும், இவ்வளவு பிரகாசமான, அழகான குழந்தையை இதுவரை பார்த்ததில்லை என்றார்கள். சிலர் பிரம்மா, விஷ்ணு அல்லது சிவனாக இருக்கலாம் என்றார்கள். இது மேல் லோகங்களில் இருந்து வந்த சக்தியாக இருக்கலாம் என்று பிரம்மா, விஷ்ணு, சிவன் கூறுகிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் தங்களின் கருத்துகளை கூறினர்.

கரீப், சௌராசி பந்தன் காடன், கீனி கலப் கபீர்
பவன் சதுர்தஷ் லோக் சப், டூடைன் ஜம் ஜன்ஜீர் //376//
கரீப், அனந்த் கோடி பிரம்மான்ட் மேம், பந்தி சோர் கஹாய் /
சோ தௌ ஏக் கபீர் ஹைன், ஜனனி ஜன்யா நா மாய் //377//
கரீப், சப்த் ஸ்வரூப் சாஹிப் தனி, சப்த் சிந்து சப் மான்ஹி /
பாஹர் பீதர் ரமி ரஹ்யா, ஜஹான் தஹான் சப் டான்ஹி //378//
கரீப், ஜல் தால் பிருத்வி ககன் மேம், பாஹர் பீதர் ஏக் /
புரண் பிரம் கபீர் ஹைன், அவிகத் புருஷ் அலேக் //379//
கரீப், சேவக் ஹோய் கரி உதரே, இஸ் ப்ரித்வி கே மான்ஹி /
ஜீவ் உதாரன் ஜகத்குரு, பார் பார் பலி ஜான்ஹி //380//
கரீப், காசிபுரி கஸ்த கியா, உத்ரே அதர் ஆதார் /
மோமன் கூன் முஜ்ராஹுவா, ஜங்கல் மேம் தீதார் //381//
கரீப், கோடி கிரண் ஷஷி பான் சுதி, ஆசன் அதர் பிமான் /
பர்சத் புரண் பிரம் கூன், ஷீதல் பிண்ட்ரு பிரான் //382//
கரீப், கோத் லியா முக் சூம்பி கரி, ஹேம் ரூப் ஜல்கந்த் /
ஜகர் மகர் காயா கரை, தம்கேன் பதம் அனந்த் //383//
கரீப், காஷி உமடி குல் பயா, மோமன் கா கர் கேர் /
கோயி கஹே பிரம்மா விஷ்ணு ஹை, கோயி கஹை இந்திர குபேர் //384//
கரீப், கோயி கஹே சல் ஈஸ்வர் நஹின், கோய் கின்னர் கஹ்லாய் /
கோய் கஹே கன் இஷ் கா, ஜ்யூ ஜ்யூ மாத் ரிசாய் //388//
கரீப், கோயி கஹை வருண் தர்மராய் ஹை, கோயீ கோயீ கஹ்தே ஈஷ்/
சோலா கலா சுபானன் கதி, கோய் கஹை ஜகதீஷ் //385//
கரீப், பக்தி முக்தி லே ஊதரே, மேடன் தீனு தாப் /
மோமன் கே டேரா லியா, கஹை கபீரா பாப் //386//
கரீப், தூத் ந பீவை ந அன்ன பகை, நஹின் பல்னே ஜூலந்த் /
அதர் அமான் தியான் மெய்ன், கமல் கலா ஃபூலந்த் //387//
கரீப், காஷி மே அசரஜ் பயா, கயீ ஜகத் கி நீந்த்
ஐசே துல்ஹே ஊதரே, ஜ்யூன் கன்யா வர் பீந்த் //389//
கரீப், கலக் முலக் தேகன் கயா, ராஜா ப்ரஜா ரீத் /
ஜம்புதீப் ஜிஹ்வான் மேம், உத்ரே சப்த அதீத் //390//
கரீப், துனி கஹை யோஹ் தேவ் ஹை, தேவ் கஹத் ஹைம் இஷ் /
இஷ் கஹை பார்பிரஹ்ம ஹை, பூரண் பீஸ்வே பீஸ் //391//

பரமேஸ்வர் கபீர் ஜி மட்டுமே ஆதி குரு ஆவார். அவரே, சாது மற்றும் ரிஷி ரூபத்தில் தன்னை மாற்றிக் கொண்டு அவ்வப்போது (ஸ்வயம்பு) தானே

தோன்றுகிறார். காலனின் தூதர்களால் (குருக்கள்) அழிந்த தத்வஞானத்தை அவர் சரி செய்கிறார். கபீர் சாகேப் ஜி தான் சத்யலோகத்திலிருந்து வந்து பிரம்மா, விஷ்ணு, சிவன் மற்றும் தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் மற்றும் சாதுக்களுக்கு அவ்வப்போது உபதேசித்தார்.

மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜி மகராஜ் தனது உரையில் கபீர் ஜி அவர்களே கூறியதை எழுதியுள்ளார்:–

ஆதி அந்த ஹமரா நஹீம், மத்திய மிலாவா மூல்/
பிரம்ம ஞான சுனாயியா, தர் பிண்டா அஸ்தூல் //
ஸ்வேத் பூமிகா ஹம் கே, ஜஹாம் விஸ்வம்பரநாத் /
ஹரியம் ஹீரா நாம தே, அஷ்ட கமல் தல் ஸ்வாந்தி //
ஹம் பைராகி பிரம்ம பத், சன்யாசி மஹாதேவ் /
சோஹம் மந்தர் தியா சங்கர் கூ, கரத் ஹமாரி சேவ் //
ஹம் சுல்தானி நானக் தாரே, தாது கூ உப்தேஸ் தியா /
ஜாதி ஜுலாஹா பேத் ந பாயா, காஷி மாஹே கபீர் ஹுயா //
சத் யுக் மே சத் சுக்ரத் கஹ டேரா, திரேதா நாம் முனிந்தர் மேரா /
துவாபர் மே கருணாமய கஹலாயா, கலியுக் மே நாம் கபீர் தராயா//
சாரோன் யுக் மே ஹம் புகாரேன், கூக் கஹேன் ஹம் ஹெல் ரே /
ஹீரே மானிக் மோதி பர்சென், யே ஜக் சுகதா டேல் ரே //

கபீர் பரமேஷ்வர் அழிவற்ற பரமாத்மா ஆவார் என்பது மேற்கண்ட உரையிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர் மட்டுமே நித்தியமானவர், அழியாதவர். அவர் நான்கு யுகங்களிலும் இவ்வுலகில் வந்து உண்மையான பக்தி மார்க்கத்தை தருகிறார்.

*****

# பூரண குருவை அறிதல்

(புனித நூல்கள் மூலம் பூரண குருவை அறிதல்)

எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து, அதர்மம் பெருகிவிடுகிறதோ, மற்றும் போலி மகான்கள், குருக்களால் பக்தி மார்க்கத்தின் நிலை மாறும்பொழுது, இறைவன் தானே அல்லது தனது பரம ஞானியை அனுப்பி தத்துவஞானத்தின் மூலம் தர்மத்தை மீண்டும் நிலைநாட்டுகிறார் என்று வேதங்கள், கீதை போன்ற புனித நூல்களில் ஆதாரங்கள் உள்ளது. அவர் பக்தி மார்க்கத்தை சாஸ்திரப்படி விளக்குவார். அனைத்து குருக்களும் அவருக்கு எதிராக நின்று அரசையும் மக்களையும் தவறாக வழிநடத்தி அவர் மீது அட்டூழியங்களை நடத்துவர் என்பது அவரது அடையாளம். கபீர் சாகேப் ஜி தனது உரையில் கூறுகிறார்.

ஜோ மம் சந்த் சத் உப்தேஷ் த்ர்டாவை (பதாவை), வாகே சங்க் சபீ ராட் படாவே //
யா சப் சந்த் மகந்தன் கி கர்ணீ, தர்மதாஸ் மைன் தோ சே வர்ணீ //

கபீர் சாகேப் இந்த உரையில் தனது சீடர் தரம்தாஸ் ஜியிடம் விளக்குகிறார், உண்மையான பக்தி மார்க்கத்தை காட்டும் குருவிடம் அனைத்து சாதுக்களும், ரிஷிகளும் சண்டையிடுவார்கள், இதுவே அவரது அடையாளம். 2வது அடையாளம், அவர் அனைத்து மத – நூல்களையும் அறிந்தவர் ஆவார். சத்குரு கரீப்தாஸ் ஜியின் உரையில் உள்ள ஆதாரம்:–

சத்குரு கே லக்ஷன் கஹூன், மதுரே பைன் வினோத்/
சார் வேத் ஷட் சாஸ்தர், கஹை அடாரா போத் //

சத்குரு கரீப்தாஸ் ஜி மகராஜ் தனது உரையில் பூரண குருவின் அடையாளத்தை விளக்குகிறார். அவர் நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், 18 புராணங்களை முழுமையாக அறிந்தவராக இருப்பார், அதாவது அவற்றின் சாரத்தை எடுத்து சொல்வார். இது யஜுர்வேதம் அத்தியாயம் 19 மந்திரம் 25, 26 இல் கூறப்பட்டுள்ளது. அதாவது, அவர் வேதங்களின் முழுமையற்ற வாக்கியங்களை நிறைவு செய்து அவற்றை விரிவாக விளக்குவார். மற்றும் மூன்று சமய பூஜையை பற்றி கூறுவார். காலையில் பூரண பரமாத்மாவின் பூஜையும், மதியம் உலக தெய்வங்களை போற்றுவதும், மாலையில் சந்தியா ஆரத்தி செய்யச் சொல்வார், அவர் உலகுக்கு அருள் புரியும் மகான் ஆவார்.

**யஜுர் வேதம், அத்தியாயம் 19, மந்திரம் 25.**

அர்த்$_3$த$_4$ ரிச்சை: உக்தா$_2$நாம் ரூபம் பதை$_3$: ஆப்நோதி நிவித$_3$: /
ப்ரண்வை: ஸா$^2$ஸ்த்ராணாம் ரூபம் பயசா சோம்: ஆப்யதே //25//

**மொழிபெயர்ப்பு:–** ஒரு ஞானி (அர்த்$_3$த$_4$ ரிச்சை:) வேதங்களின் முழுமையற்ற வாக்கியங்களை அதாவது குறியீட்டுச் சொற்களை (நிவித$_3$:) பூர்த்தி செய்கிறார் (பதை$_3$:) ஸ்லோகத்தின் நான்காவது பகுதியை அதாவது பகுதி வாக்கியங்களை (உக்தா$_2$நாம்) ஸ்தோத்திரங்கள் (ரூபம்) வடிவில் (ஆப்நோதி) முழுமையாக்குகிறார் அதாவது பகுதி வாக்கியங்களை முழுமையாகப் புரிந்து கொண்டு விளக்குகிறார் அதாவது (ஸ ா$^2$ஸ்த்ராணாம்) சாஸ்திரங்களை பூரணமாக இயக்க தெரிந்தவர், அவற்றை (ரூபம்) முழுமையாகப் பயன்படுத்துவார், அத்தகைய முழுமையான குரு (ப்ரண்வை:) ஓம் காரம் அதாவது ஓம்-தத்-சத் என்ற மந்திரங்களை (பாசா) முழுமையாகப் புரிந்து கொண்டு விளக்குகிறார் (பயசா) நீரையும்

பாலையும் சலித்து அதாவது நீரற்ற பால் போன்ற தத்வஞானத்தை வழங்குகிறார், இதன் மூலம் (சோம:) அழிவில்லாத புருஷ் அதாவது அழிவற்ற பரமாத்மாவை (ஆப்யதே) அடைய செய்கிறார். அந்த பூரண மகான் வேதங்களை அறிந்தவர் என்று கூறப்படுகிறது.

**பொருள்: தத்துவதர்ஷி குரு என்பவர், வேதங்களின் குறியீடாக உள்ள வார்த்தைகளை விரிவாக விளக்குபவர், இதன் மூலம் பூரண பரமாத்மாவை அடைய முடியும். அவர் வேதங்களை அறிந்தவர் என்று கூறப்படுவர்.**

**யஜுர் வேதம், அத்தியாயம் 19, மந்திரம் 26,**

அஸ்$^2$விப்$_4$யாம் ப்ராத: சவ்னம் இந்த்$_3$ரேண் ஏந்த்$_3$ரம் மாத்$_4$யந்தி$_3$நம்
வைஸ்$^2$வதை$_3$வம் சரஸ்வத்யா த்ருதியம் ஆப்தம் ஸவ்நம் //26//

**மொழிபெயர்ப்பு:-** அந்த பூரண குரு மூன்று சமையங்களின் சாதகத்தை கூறுகிறார் (அஸ்$^2$விப்$_4$யாம்) சூரியனின் உதயம் மற்றும் அஸ்தம் என்ற ஒரு நாளின் அடிப்படையில் (இந்த்$_3$ரேண்) முதன்மையாக அனைத்து தெய்வங்களின் எஜமானரான பூரண பரமாத்மாவின் (ப்ராத: சவ்னம) பூஜையை தினமும் காலையில் செய்ய சொல்வார் (இந்த்$_3$ரேண்) அது பரம இறைவனுக்கானது. இரண்டாவதாக (மாத்$_4$யந்தி$_3$நம்) நண்பகலில் (வைஸ்$^2$வதை$_3$வம்) அனைத்து தெய்வங்களுக்கும் மரியாதை செலுத்தும் விதமாக அமுத உரைகள் மூலம் சாதகம் செய்ய சொல்வார் மற்றும் (த்ருதியம்) மூன்றாவது (ஸவ்நம்) பூஜை மாலையில் (ஆப்தம்) செய்யப்படுகிறது அதாவது மூன்று வேளையும் தனித்தனியாகச் சாதகம் செய்யச் சொல்பவர், உலகின் கருணைமிக்க மகான் ஆவார்.

**பொருள் : மந்திரம் 25 இல் குறிப்பிடப்பட்டுள்ள அந்த பூரண குரு, தினமும் மூன்று முறை (காலை - மதியம் - மாலை) வழிபாடு செய்யச் சொல்வார். காலையில் பூரண பரமாத்மாவின் பூஜையும், மதியம் அனைத்து தெய்வங்களை வணங்கவும், மாலையில் சந்தியா ஆரத்தியை புனித உரைகள் மூலம் செய்யச் சொல்பவர், அவரே உலகிற்கு நன்மை செய்பவர்.**

**யஜுர் வேதம், அத்தியாயம் 19, மந்திரம் 30,**

வ்ரதேன் தீ$_3$க்ஷாம் ஆப்நோதி தீ$_3$க்ஷ்யா ஆப்நோதி த$_3$க்ஷிணாம்
த$_3$க்ஷிணா ஸ்ரத்$_3$தா$_4$ம் ஆப்நோதி ஸ்ரத்$_3$த$_4$யா சத்யம் ஆப்யதே //30//

**மொழிபெயர்ப்பு:-** (வ்ரதேன்) தீமைகளின் விரதங்களை செய்பவன் அதாவது கஞ்சா, மது, மாமிசம், புகையிலை முதலியவற்றைத் தவிர்த்துக் கொள்ளும் ஒரு சாதகன் (தீ$_3$க்ஷாம்) ஒரு பூரண குருவிடமிருந்து தீட்சை (ஆப்நோதி) பெறுகிறான், அதாவது அவன் பூரண குருவின் சீடனாகிறான். (தீ$_3$க்ஷ்யா) பூரண குரு, தீட்சை பெற்ற சீடனிடமிருந்து (த$_3$க்ஷிணாம்) தானம் (ஆப்நோதி) பெறுகிறார், அதாவது அந்த குரு தன்னிடமிருந்து தீட்சை பெறுபவரிடமிருந்து மட்டுமே தானம் பெறுகிறார். இவ்வாறு (த$_3$க்ஷிணாம்) குருவின் வழிகாட்டுதலின்படி முறையாக தானம் தர்மம் செய்பவன் (ஸ்ரத்$_3$தா$_4$ம்) நம்பிக்கை (ஆப்நோதி) அடைகிறான், (ஸ்ரத்$_3$த$_4$யா) நம்பிக்கையுடன் பக்தி செய்வதன் மூலம் (சத்யம்) நிரந்தரமான மகிழ்ச்சியும் மற்றும் நித்தியமான பரமாத்மாவை (ஆப்யதே) அடைகிறான்.

**பொருள்:- பூரண குரு நல்ல ஒழுக்கமுள்ள, தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களை உட்கொள்ளாமல் இருக்க உறுதியளிப்பவர்களை மட்டுமே சீடராக்குகிறார். அவர் தன்னிடம் தீட்சை பெற்றவர்களிடம்**

மட்டுமே தானம் பெறுகிறார். தானம் மூலம் பக்தனுக்கு பக்தி பெருகும். நம்பிக்கையுடன் சத்பக்தி செய்வதன் மூலம் ஒருவன் அழிவற்ற பரமாத்மாவை அடைகிறான் அதாவது பூரண முக்தி பெறுகிறான். பூரண குரு பிச்சை மற்றும் நன்கொடை கேட்க மாட்டார்.

ககபீர், குரு பின் மாலா பேர்தே, குரு பின் தேதே தான்/
குரு பின் தோனோம் நிஷ்பல் ஹைம், பூசோ வேத புராண்//

மூன்றாவது அடையாளம், அவர் மூன்று விதமான மந்திரங்களை (நாம்) மூன்று முறையாக தீட்சை அளிப்பார். அதன் விளக்கம் கபீர் சாகர் நூலில், பக்கம் 265ல், மற்றும் கீதை அத்தியாயம் 17, ஸ்லோகம் 23 இல், மற்றும் சாமவேதம் எண். 822 இல் உள்ளது.

கபீர் சாகர் நூலில் அத்தியாயம் அமர் மூல் போத் சாகர் பக்கம் 265:-

தப் கபீர் உஸ் கஹேவே லீன்ஹா, கியான்பேத் சகல் கஹ் தீன்ஹா //
தர்மதாஸ் மைம் கஹோ பிசாரி, ஜிஹிதே நிபஹை சப் சன்சாரி //
ப்ரதமஹி ஷிஷ்ய ஹோய் ஜோ ஆயி, தா கஹை பான் தேஹு தும் பாயீ //1//
ஜப் தேகஹு தும் த்ரிட்தா ஞானா, தா கஹைன் கஹு சப்த ப்ரவானா //2//
சபத் மான்ஹி ஜப் நிஷ்சய் ஆவை, தா கஹைன் ஞான் அகாத் சுனாவை //3//

அவர் மீண்டும் விளக்கியுள்ளார்.

பாலக் சம் ஜாகர் ஹை ஞானா தாஸோ கஹுஹ வசன் பிரவானா //1//
ஜா கோ சூக்ஷ்ம் ஞான் ஹை பாயீ / தா கோ ஸ்மரன் தேஹு லகாயீ //2//
ஞான் கம்ய ஜா கோ புனி ஹோயீ / சார் ஷப்த ஜா கோ கஹ் சோயீ //3//
ஜா கோ ஹோய் திவ்ய க்யான் பர்வேஷா,
தாகோ கஹே தத்வ்ஞான் உப்தேஷா //4//

மேற்கூறிய உரையிலிருந்து, பூரண குரு சார்நாம் மந்திரம் வரை மூன்று நிலையாகவும், நான்காவது நிலையில் சார்சபத் வழங்குவார் என்பது தெளிவாகிறது. ஏனென்றால், கபீர் சாகர் நூலில் ஆதாரங்களை நான் பின்னர் பார்த்தேன், ஆனால் தீட்சை முறையை ஏற்கனவே எனது மதிப்பிற்குரிய குருவுடைய குரு மற்றும் கபீர் சாகிப் ஜி ஆகியோர் எனது மதிப்பிற்குரிய குருநாதருக்கு வழங்கியுள்ளனர், அவர் ஆரம்பத்தில் இருந்து மூன்று நிலைகளில் எங்களுக்கு தீட்சை அளித்து வருகிறார்.

நமது குருதேவ் சந்த் ராம்பால் ஜி மகராஜ் முதன்முதலில் நமது மனித உடலில் அமைந்திருக்கும் சக்கரங்களில் வசிக்கும் ஸ்ரீ கணேஷ், ஸ்ரீ பிரம்மா-சாவித்திரியும், ஸ்ரீ விஷ்ணு-லக்ஷ்மியும், ஸ்ரீ சிவன்-பார்வதியும் மற்றும் அன்னை துர்க்கை (ஷேராவாலி) ஆகியோரின் மந்திரங்களை ஜெபிக்கக் கொடுக்கிறார். மூலாதார சக்கரத்தில் விநாயகர் வசிக்கிறார், ஸ்வாதிஸ்டான சக்கரத்தில் பிரம்மா-சாவித்திரியும், தொப்புள் சக்கரத்தில் விஷ்ணு-லக்ஷ்மியும், இதய சக்கரத்தில் சிவன்-பார்வதியும், தொண்டை சக்கரத்தில் துர்க்கை மாதா வசிக்கிறார். மேலும் இந்த அனைத்து தெய்வங்களுக்கும் ஆதி மந்திரங்கள் உள்ளன, அவை இப்போதுள்ள குருக்களுக்கு தெரியாது. இந்த மந்திரங்களை ஜெபிப்பதால் ஐந்து சக்கரங்கள் திறந்து கொள்கின்றன. சக்கரங்கள் திறந்த பிறகு தான் மனிதன் பக்தி செய்யத் தகுதி பெறுகிறான்.

சத்குரு கரீப்தாஸ் ஜி தனது உரையில் இதற்கு ஆதாரம் தருகிறார்:-

பாஞ்ச் நாம் குஜ் காயத்ரி ஆத்ம தத்வ ஜகாவோ /
ஓம் கிலியம் ஹரியம் ஸ்ரீயம் சோஹம் தியாவோ //

பொருள்: "குஜ் காயத்ரி" என்ற இந்த ஐந்து மந்திரங்களின் ஜபம் செய்து உங்கள் ஆன்மாவை விழிக்க செய்யுங்கள்.

இரண்டாவது முறையில், இரண்டெழுத்தின் ஜெபத்தை கொடுக்கிறார், அதில் ஒன்று ஓம், மற்றொன்று தத் (இது ரகசியமானது தீட்சை பெறுபவர்களுக்கு மட்டும் சொல்லப்படும்), இது சுவாசத்தின் மூலம் ஜபிக்கப்படும். மூன்றாவதாக சார்நாம் கொடுக்கிறார், அது முற்றிலும் ரகசியமானது.

## மூன்று முறையில் மந்திர ஜபம் தருவதற்கான ஆதாரம்

**கீதை அத்தியாயம் 17 ஸ்லோகம் 23:**

ஓம், தத், சத், இதி, நிர்தே$_3$ஸ்:, ப்$_3$ரஹ்மண:, த்ரிவித$_4$:, ஸ்ம்ருத:,
ப்$_3$ராஹ்மணா:, தேந, வேத$_3$ா:, ச, யக்ஞா:, ச, விஹிதா:, புரா //23//

**மொழிபெயர்ப்பு:-** (ஓம்) பிரம் உடைய மந்திரம் (தத்) இது குறியீடு பரபிரம் உடையது மந்திரம், (ஸத்) இது பூரண பிரம் உடைய மந்திரம் (இதி) இப்படி (த்ரிவித$_4$:) மூன்றுவிதமாக (ப்$_3$ரஹ்மண:) பூரண பரமாத்மாவின் மந்திர ஜபத்தின் (நிர்தே$_3$ஸ்:) குறிப்பு (ஸ்ம்ருத:) சொல்லப்பட்டுள்ளது (ச) மற்றும் (புரா) படைப்பின் ஆதிகாலத்தில் (ப்$_3$ராஹ்மணா:) வித்துவான்கள் கூறினார் (தேந) அதே பூரண பரமாத்மா தான் (வேத$_3$ா:) வேதம் (ச) மற்றும் (யக்ஞா:) யக்ஞும் (விஹிதா:) படைத்தார்.

**சாமவேதம் எண். 822 அத்தியாயம் 3, கண்டம் 5, சுலோகம் 8**

(சந்த் ராம்பால் தாஸின் பொழிப்புரை)

மநீஷிபி$_4$: பவதே பூர்வ்ய: கவிர்நர்பி$_4$ர்யத: பரி கோஷாம் அஸிஷ்யத$_3$த் /
த்ரிதஸ்ய நாம ஜநயந்மது$_4$ ஷரந்நிந்த்$_3$ரஸ்ய வாயும் சக்$_2$யாய் வர்த$_4$யன் //8//

மநீஷிபி$_4$: - பவ்தே - பூர்வய: - கவிர் - நர்பி$_4$: - யத்: - பரி - கோஸ$^2$ான் - அஸிஷ்யத$_3$த் - த்ரி - தஸ்ய - நாம் - ஜன்யன் - மது$_4$ - க்ஷரந: - ந - இந்த்$_3$ரஸ்ய - வாயும் - சக்$_2$யாய் - வர்த$_4$யன்.

**மொழிபெயர்ப்பு:-** (பூர்வய:) ஆதியான அழிவற்ற (கவிர்-நர்பி$_4$:) கபீர் பரமேஸ்வரர் மனித வடிவில் அதாவது குரு ரூபத்தில் தோன்றி (மநீஷபி$_4$:) இதயத்திலிருந்து அவரை நேசிக்கும் நம்பிக்கையுடன் பக்தி செய்யும் ஆத்மாவுக்கு (த்ரி) மூன்று (நாம்) மந்திரம் அதாவது தீட்சை அளித்து (பவ்தே) தூய்மைப்படுத்தி (ஜன்யன்) பிறப்பு மற்றும் (க்ஷரந:) இறப்பிலிருந்து (ந) விடுவிக்கிறார் மற்றும் (தஸ்ய) அவனுடைய (வாயும) உயிரை அதாவது விதியில் உள்ள உயிர்மூச்சுகளின் எண்ணிக்கையை (கோஸ$^2$ான்) தனது சக்தியிலிருந்து (சக்$_2$யாய்) நட்பின் அடிப்படையில் (பரி) பூரணமாக (வர்த$_4$யன்) அதிகரிக்கிறார் (யத) இதனால் (இந்த்$_3$ரஸ்ய) பரமேஸ்வரரின் (மது$_4$) உண்மையான ஆனந்தத்தை (அஸிஷ்யத$_3$த்) தனது ஆசீர்வாதம் மூலம் அடைய வைக்கிறார்.

**பொருள் : இந்த மந்திரத்தில், பூரண பரமாத்மா கவிர் அதாவது கபீர் மனித உடலில் குரு வடிவில் தோன்றி, இறைவனை நேசிப்பவர்களுக்கு மூன்று மந்திரங்களின் ஜபத்தை கொடுத்து உண்மையான பக்தியை செய்ய வைத்து அந்த பக்தரை தூய்மைப்படுத்தி ஆசிர்வதித்து பூரண பரமாத்மாவை அடைந்து பூரண சுகத்தை அடைய செய்கிறார், மேலும்**

பக்தரின் ஆயுளையும் அதிகரிக்கிறார் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதே ஆதாரம் கீதை அத்தியாயம் 17 ஸ்லோகம் 23ல் உள்ளது,

"ஓம்-தத்-சத் இதி நிர்தேஷ்ஹ பரஹ்மண்ஹ தரிவித்ஹ ஸ்மிருத்ஹ"

அதாவது பூரண பரமாத்மாவை அடைவதற்கு 1. ஓம் 2. தத் 3. சத், இந்த மூன்று மந்திரத்தை தத்துவதர்ஷி குருவிடமிருந்து பெற்று ஜபிக்க அறிவுறுத்துகிறது.

தத்வதர்ஷி குருவை பற்றி, கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 34 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1– 4 வரை, தத்துவதர்ஷி குருவை அறியும் குறிப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் தத்வதர்ஷி குருவிடமிருந்து தத்துவஞானத்தை பெற்று, அந்த ஆதி பரமாத்மாவை நாடவேண்டும். அங்கு சென்ற பிறகு, சாதகர்கள் மீண்டும் பூலோகத்திற்கு திரும்புவதில்லை, அதாவது பூரண முக்தி பெறுகிறார்கள். அந்த பரமாத்மாவிடமிருந்து உலகம் படைக்கப்பட்டது.

சிறப்பு :– மேற்கூறிய விளக்கத்திலிருந்து, பூரண பரமாத்மா மட்டுமே பூஜிக்க தகுதியானவர் என்பதற்கு நான்கு புனித வேதங்களும் சாட்சி, அவருடைய உண்மையான பெயர் கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) மற்றும் மூன்று மந்திரங்களின் ஜபம் மூலம் மட்டுமே பூரண முக்தி அடையப்படும் என்பது தெளிவாகிறது.

பரமேஸ்வர் கபீர் சாஹேப், தரம்தாஸ் ஜிக்கு சார்சபத் (தீட்சை) கொடுக்க மறுத்துவிட்டார். சார்சபத் காலனின் தூதுவருக்கு கிடைத்துவிட்டால், கலியுகத்தின் மத்திய பாகத்தின் தலைமுறையின் ஆன்மாக்கள் முக்தி அடையாது என்று கூறினார். கலியுகத்தின் தொடக்கத்தில் ஆன்மாக்கள் கல்வியறிவு இல்லாதவர்களாகவும், கலியுகத்தின் இறுதியில் ஆன்மாக்கள் நன்றியற்றவர்களாகவும் மாறிவிடுவார்கள். இப்போது 1947 இல் இருந்து பாரதம் சுதந்திரம் அடைந்த பிறகு கலியுகத்தின் மத்திய அதாவது இரண்டாவது பாகம் (இடைநிலை) தலைமுறை தொடங்கியது. 1951 ஆம் ஆண்டு சத்குரு ராம்பால் ஜி மகராஜ் அனுப்பப்பட்டுள்ளார். இப்போது பக்தர்கள் அனைவரும் படித்தவர்களாவார். வேதங்களும் நம்மிடம் உள்ளது. இப்போது இந்த சத்ய மார்க்கமும் வழிபாடும் உலகம் முழுவதும் பரவி, போலி குருக்களும், மகான்களும் மறைந்து விடுவார்கள்.

கபீர் சாகர் நூல், ஜீவ தரம் போத், போத் சாகர், பக்கம் 1937:–

தர்மதாஸ் தோஹி லாக் துஹாயீ, ஸார் ஷப்த் கஹின் பாஹர் நஹின் ஜாயீ /
சார் ஷப்த் பாஹர் ஜோ பரி ஹை, பிச்லி பீடி ஹன்ஸ் நஹின் தரி ஹை //

"தனி தரம்தாஸ் ஜீவன் தர்ஷன் ஏவம் வண்ஷ் பரிச்சேய்" (தரம்தாஸ் ஜியின் வாழ்க்கை வரலாறு) என்ற நூலில் பக்கம் 46ல், தரம்தாஸ் உடைய பதினோராம் தலைமுறைக்கு குரு பதவி கிடைக்கவில்லை, அவர் பெயர் "தீரஜ் நாம் சாகிப்", அவர் கவர்தாவில் வசித்து வந்தார். அதன்பிறகு, பன்னிரெண்டாவது தலைமுறையின் குரு "உக்ர நாம் சாஹிப்" அவர்கள் தாமாகேடா கிராமத்தில் தானே ஆசிரமம் அமைத்து தன்னை குரு என்று அறிவித்தார். இதற்கு முன் தாமாகேடாவில் குருவின் தலைமை பதவி இல்லை. எனவே, சத்குரு ராம்பால் ஜி மகராஜியை தவிர, உலகத்தில் யாரிடமும் உண்மையான பக்தி மார்க்கம் இல்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது. சந்த் ராம்பால் ஜி மகராஜ் தனது சொற்பொழிவுகளில் மீண்டும் மீண்டும் இறைவனை நேசிக்கும் அனைத்து பக்தர்களிடமும், தன்னை இறைவனால் அனுப்பப்பட்ட சேவகனாக கருதி தீட்சை பெற்று

**பயன் அடையுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.**

யஹ் சன்சார் சமஜ்தா நாஹின், கஹந்தா ஷ்யாம் தோபஹரே நூம் /
கரிப்தாஸ் யஹ் வக்த் ஜாத் ஹை, ரோவோகே இஸ் பஹரே நூம் //

**பன்னிரெண்டாவது தலைமுறையின் குருவை பற்றி (கபீர் சாகர் நூலில், கபீர் சரிதர் போத், பக்கம் எண் 1870 இல், கரீப்தாஸ் ஜி பன்னிரெண்டாவது குரு என குறிப்பிட்டுள்ளார்) கபீர் சாகர் நூலில், பக்கம் 136, 137ல் உள்ளது பின்வருமாறு:-**

சம்வத் சத்ரசோ பச்ஹத்தர் ஹோயீ, தா தின் பிரேம் ப்ரகடே ஜக் சோயீ /
சாகி ஹமாரி லே ஜீவ் சம்ஜாவே, அசங்க்ய ஜன்ம டௌர் நஹின் பாவே /
பார்வேன் பந்த் பிரகட் ஹை பானி, சப்த் ஹமாரே கி நிர்ணய் டானி /
அஸ்திர் கர் கா மரம் நா பாவே, யே பாரா பந்த் ஹம்ஹி கோ த்யாவே /
பார்வே பந்த் ஹம் ஹி சலி ஆவைன்,
சப் பந்த் மேட்டி ஏக் ஹி பந்த் சலாவேன் /
தர்மதாஸ் மோரி லாக் தோஹாயீ, சார் சப்த் பாஹர் நஹின் ஜாயீ /
சார் ஷப்த் பாஹர் ஜோ பர்ஹி, பிச்லி பிட்டி ஹன்ஸ் நஹின் தர்ஹீன் /
தேதிஸ் அர்ப ஞான் ஹம் பாகா, சார் ஷப்த் குப்த ஹம் ராகா /
மூல் ஞான் தப் தக் சுபாயீ, ஜப் லக் துவாதஷ் பந்த் மிட் ஜாயீ /

**இதில், கபீர் சாகேப் ஜி தனது சீடரான தரம்தாஸ் ஜிக்கு விளக்குகிறார், ஹிந்தி வருடம் சம்வத் 1775ல், 12வது குரு தலைமுறையில் எனது ஞானம் உரைகள் மூலம் வெளிப்படும், ஆனால் அதில் வழிபாட்டு முறை இருக்காது. பின்னர் 12வது (பந்த்) பிரிவின் குரு தலைமுறையில் தானே வந்து அனைத்து பிரிவான இயக்கங்களையும் ஒன்றாக்கி ஒரே இயக்கமாக நடத்துவோம். தரம்தாஸ் எந்த ஒரு தகுதியற்றவருக்கும் சார்சபத் மந்திரத்தை அளித்து விடாதீர், ஏனென்றால் பின்னர் வரும் ஆன்மாக்கள் கரை சேராது. அதனால் 12 பிரிவுகளும் அழிந்து ஒரே பிரிவாக இயங்கும் வரை இந்த மூல ஞானத்தை மறைத்து வைத்திருப்பேன்.**

**சந்த் கபீர்தாஸ் ஜி மகராஜ் ஜியின் உரையில் மந்திரத்தின் பெருமை:-**

நாம் அபைபத் ஊஞ்சா சந்தோ, நாம் அபைபத் ஊஞ்சா /
ராம் துஹாயீ சாச் கஹத்ஹூம் சத்குரு சே பூசா //
கஹை கபீர் புருஷ் பரியாம், கரிப்தாஸ் ஏக் நௌகா நாம் //
நாம் நிரஞ்சன் நீகா சந்தோ, நாம் நிரஞ்சன் நீகா /
தீரத் வ்ரத் தோதரே லாகே, ஜப் தப் சஞ்சம் ஃபீகா //
கஜ் துரக் பால்கி அர்த்தா, நாம் பினா சப் தானம் வ்யர்தா /
கபீர்,நாம்கஹேசோசந்த்சுஜானா,நாம்பினாஜக்உரஜானா/
தாஹிநஜானேயேசன்ஸாரா,நாம்பினாசப்ஜம்கேசாரா//

**சந்த் நானக் சாகேப் உரையில் நாமத்தின் மகிமை:-**

நானக் நாம் சட்தி கலாம், தேரே பானே சர்பத் தா பலா /
நானக் துஹ்கியா சப் சன்சார், சுகியா சோய் நாம் ஆதார் //
ஜாப் தாப் ஞான் சப் தியான், ஷட் சாஸ்தர் சிமரத் வ்யாகான் /
ஜோக் அப்யாஸ் கர்ம தர்ம சப் க்ரியா, சகல் தியாக்வண் மத்திய ஃபிரியா/
அநேக் ப்ரகார் கியே பஹுத் யத்னா, தான் புண்ய ஹோமை பஹு ரத்னா/
ஷீஷ் கடாயே ஹோமை கர் ராதி, வரத் நேம் கரே பஹு பான்தி //
நஹின் துல்யா ராம் நாம் விசார், நானக் குருமுக் நாம் ஜபியே ஏக் பார் //

**பரமேஸ்வர் கபீர் சாகேப் ஜியின் (கவிர்தேவனின்) அமுத உரை:-**

சந்தோ ஷப்தாயி சப்த் பகானா //டெக்//
சப்த ஃபன்ஸ் ஃபன்ஸா சப் கோயி சப்த நஹின் பஹ்சானா //
பிரதமஹி பிரம் ஸ்வம் இச்சா தே பாஞ்சௌ சபத் உசாரா /
சோஹம், நிரஞ்சன், ரங்ரகர், சக்தி அவுர் ஓம்காரா //
பாஞ்சௌ தத்வ பிரகர்தி தீனோ குன் உபஜாயா /
லோக் த்வீப் சாரோன் கான் சௌராசி லக் பனாயா //
ஷப்தயி கால் கலந்தர் கஹியே ஷப்தயி பர்ம புலாயா /
பாஞ்ச் சப்தகீ ஆஷா மே சர்வஸ் மூல் கன்வாயா //
ஷப்தாயி ப்ரஹ்ம பிரகாஷ் மேம்ட் கே பைடே மூந்தே துவாரா /
ஷப்தயி நிர்குண் சப்தயி ஸர்குண் சப்தாயி வேத புகாரா //
ஷுத்த ப்ரஹ்ம காயா கே பீதர் பைட் கரே ஸ்தானா /
ஞானி யோகி பண்டிட் ஔ சித்த ஷப்த மேம் உர்ஜானா //
பஞ்சஇ சப்த பாஞ்ச் ஹைன் முத்ரா காயா பீச் டிகானா /
ஜோ ஜிஹ்சங்க் ஆராதன் கர்தா சோ திஹி கரத் பகானா //
சப்த நிரஞ்சன் சாஞ்சரி முத்ரா ஹை நைனன் கே மான்ஹி /
தாகோ ஜானே கோரக் யோகி மஹா தேஜ் தப் மான்ஹி //
சப்த ஓம்கார் பூசரி முத்ரா திரிகுடி ஹை ஸ்தானா /
வியாஸ் தேவ் தாஹி பஹிசானா சாந்த் சூர்ய திஹி ஜானா //
சோஹம் ஹப்த அகோசரி முத்ரா பன்வர் குஃபா ஸ்தானா /
சுக்தேவ் முனி தாஹி பஹிசானா சன் அன்ஹத் கோ கானா //
ஷப்த் ரங்கார் கேசரி முத்ரா தஸ்வேன் த்வார் டிகானா /
பிரம்மா விஷ்ணு மகேஷ் ஆதி லோ ரங்ரகார் பஹிசானா //
சக்தி சப்த தியான் உன்முனி முத்ரா பஸே ஆகாஷ் சனேஹி /
ஜில்மில் ஜில்மில் ஜோத் திகாவே ஜானே ஜனக் விதேஹி //
பாஞ்ச் சப்த பாஞ்ச் ஹைன் முத்ரா சோ நிஷ்சய் கர் ஜானா /
ஆகே புருஷ் பூரான் நிஹக்ஷர் தினகி கபர் ந ஜானா //
நௌ நாத் சௌராசி சித்தி லோ பாஞ்ச் சப்த் மே அட்கே /
முத்ரா சாத் ரஹே கட் பீதர் ஃபிர் ஓந்தே மச் லட்கே //
பாஞ்ச் சப்த பாஞ்ச் ஹை முத்ரா லோக் த்வீப் யம்ஜாலா /
கஹைன் கபீர் அக்ஷர் கே ஆகே நிரக்ஷர் உஜியாலா //

**மேற்கூறிய "சந்தோ ஷப்தை சபத் பகானா" என்ற உரையின் பொருள்:- அனைத்து ஞானி மகான்களும் மந்திரத்தின் பெருமையை விவரிக்கிறார்கள். பூரண பிரம் கபீர் சாகேப், இந்த ஷபத் என்பது சத்யபுருஷ் உடைய சின்னம் ஆகும் மற்றும் ஜோதி நிரஞ்சனின் (கால்) சின்னமும் சபத் என்றும் சொல்கிறார். ஜோதி நிரஞ்சன் எனும் சபத் சாஞ்சரி முத்திரையை அடைய செய்கிறது, இதை கோரக்நாதர் ரிஷி அதிக தவம் செய்து அடைந்தார், இது சாதாரண மனிதரால் இயலாதது. பின்னர் கோரக்நாதர் காலன் வரை பக்தி செய்து சித்தர் ஆனார், முக்தி அடையவில்லை. பிறகு கபீர் சாகேப் சத்நாம் மற்றும் சார்நாம் மந்திரத்தை கொடுத்த பிறகு, கோரக்நாதர் காலனிடமிருந்து விடுபட்டார்.**

**எனவே ஜோதி நிரஞ்சன் என்ற மந்திரத்தை ஜெபிப்பவர்கள் காலனின் வலையில் இருந்து விடுபட முடியாது, அதாவது சத்யலோகம் செல்ல முடியாது. ஓம்காரத்தை (ஓம்) ஜபம் செய்வதன் மூலம், சாதகன் பூஞ்ஜரி முத்திரையை அடைகிறான். வேத வியாசர் முனி இந்த சாதகத்தை செய்து**

காலனின் வலைக்குல்லேயே இருந்தார். “சோஹம்” எனும் மந்திரத்தின் ஜெபத்தால் ஒருவர் அகோச்சரி முத்திரையை பெற்று, காலனின் லோகத்தில் உள்ள சூழல் குகையை அடைகிறார். சுக்தேவ் ரிஷி இதைச் செய்து ஸ்ரீ விஷ்ணு லோகத்தில் உள்ள சொர்க்கத்திற்கு சென்றார். “ரரங்கார்” என்ற மந்திரத்தின் ஜபத்தால், ஒருவர் பத்தாவது துவாரமான (சுஷம்னா) கேஞ்சரி முத்திரையை அடைகிறார். பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும், “ரரங்கார்” மந்திரம் மட்டுமே உண்மையானது எனக் கருதி, காலனின் வலையிலேயே சிக்கிக் கொண்டனர்.

“சக்தி (ஷிரியம்)” என்ற மந்திரம் உன்மணி முத்திரையை அடையச் செய்கிறது. ராஜா ஜனக் என்பவர் இதை அடைந்திருந்தார், ஆனால் முக்தி பெறவில்லை. சில மகான்கள் ஐந்து மந்திரங்களில் “சக்திக்கு” பதிலாக “சத்யநாம்” என்று சேர்த்துள்ளனர். சத்யநாம் என்பது ஜெபிக்கும் மந்திரம் இல்லை. இது உண்மையான மந்திரத்தை நோக்கிய குறிப்பாகும். சத்யலோகம் சச்கண்ட் என்றும் அழைக்கப்படுகிறது, அதே போல் சத்யநாம் மற்றும் சச்சாநாம் உள்ளது. சத்யநாம் – சத்யநாம் என்பது ஜபம் அல்ல. இந்த ஐந்து நாமங்களின் சாதகம் செய்யும் ஒன்பது நாதர்களும், 84 சித்தர்களும் கூட இதன் எல்லைக்குள் தான் இருந்தார்கள் மற்றும் உடலுக்குள் (துன்) ஒலியை கேட்டு மகிழ்ந்தனர். உண்மையான ஸ்தானம் சத்யலோகம் இந்த (பிண்டம்) உடலிலிருந்தும், (அண்டம்) பிரபஞ்சத்திலிருந்தும் அப்பார் பட்டது, எனவே அவர்கள் மீண்டும் தாயின் கருவில் தலைகீழாக தொங்கி வந்தனர் அதாவது பிறப்பு இறப்பு என்ற துன்பம் முடிவடையவில்லை. உடலுக்குள் (பிண்டத்தில்) அடைவது அனைத்தும் காலன் (பிரம்) வரையிலானது மட்டுமே, ஏனென்றால் பரமாத்மாவின் மூல ஸ்தானம் (சத்யலோகம்), மற்றும் அவரது உடலின் ஒளியும் பரபிரம் போன்றவர்களை விட மிகவும் அதிகமானது மற்றும் வெகு தொலைவில் உள்ளது. அதற்காக பூரண குரு மட்டுமே முழுமையான வழிபாட்டை கூறுவார், அது இந்த ஐந்து மந்திரங்களிலிருந்து வேறுபட்டது.

சந்தோ, சத்குரு மோஹே பாவே, ஜோ நைனன் அலக் லகாவே /
டோலத் திகே நா போலத் பிஸரை, சத் உபதேஷ் த்ரதாவை //
ஆங் நா மூன்தை கான் நா ருன்தைன், ந அன்ஹத் உர்ஜாவை /
பிரான் பூஞ்ச் கிரியாவோன் சே ந்யாரா, சஹஜ் சமாதி பதாவை //

**கட் ராமாயணத்தின் ஆசிரியர், மரியாதைக்குரிய துளசிதாஸ் ஜி அவர்கள் கூறுவது (கட் ராமாயணம், பாகம் 1 பக்கம் எண். 27):-**

பாஞ்சோன் நாம் கால் கே ஜானௌ தாப் தானி மன் சங்கா ஆனௌ /
சுரதி நிரத் லை லோக் சிதாவூன், ஆதிநாம் லே கால் கிராவூன் /
சத்நாம் லே ஜீவ் உபாரி, அஸ் சல் ஜாவூன் புருஷ் தர்பாரி //
கபீர், கோடி நாம் சன்சார் மேம், இன்சே முக்தி ந ஹோ /
சார் நாம் முக்தி கா தாதா, வாகோ ஜானே நா கோஏ //
பூர சத்குரு சோயே கஹாவை, தோய் அகர் கா பேத் பதாவை /
ஏக் சுடாவை ஏக் லகாவை, தோ ப்ரானி நிஜ் கர் ஜாவை //

**குருநானக் ஜியின் உரையில் மூன்று நாமங்களின் ஆதாரங்கள் :-**

ஜை பண்டித் து படியா, பினா துஉ அகர் துஉ நாமா /
பரண்வத் நானக் ஏக் லங்காஏ, ஜெ கர் சச் சமாவா /
வேத் கதேப் சிம்ரித் சப் சான்சத், இன் படி முக்தி ந ஹோயீ //

ஏக் அக்ஷர் ஜோ குருமுக் ஜாபை, திஸ் கி நிர்மல் ஹோயீ //

பொருள் : குருநானக் ஜி தனது உரையில், இரண்டு எழுத்து மந்திர ஜபம் பற்றி அறிந்தவர் மட்டுமே முழுமையான சத்குரு என்பதை விளக்குகிறார். அதில், ஒன்று காலன் மற்றும் மாயையின் பிடியிலிருந்து விடுவிக்கிறது, இரண்டாவது பரமாத்மாவை தரிசிக்க வைக்கிறது, மூன்றாவது ஓர் எழுத்து மந்திரம் பரமாத்மாவுடன் இணைக்கிறது.

**சந்த் கரீப்தாஸ் ஜி மஹாராஜியின் புனித உரையில் சுவாசம் மூலம் ஜபிக்கும் மந்திரத்தின் ஆதாரங்கள்:-**

கரீப், ஸ்வான்சா பாரஸ் பேத் ஹமாரா, ஜோ கோஜே சோ உதரே பாரா /
ஸ்வான்ஸ பாரா ஆதி நிஷானி, ஜோ கோஜே ஸோ ஹோய் தர்பானி //
கரீப் ஸ்வான்ஸா ஹி மே சார் பத், பத் மே ஸ்வான்ஸா சார் /
தம் தேஹி கா கோஜ் கரோ, ஆவாகமன் நிவார் //
கரீப், ஸ்வான்ஸ் ஸுரதி கே மத்ய ஹை, ந்யாரா கதே நஹின் ஹோய் /
சத்குரு சாக்ஷி பூத் கூன், ராகோ சுரதி சமோய் //
கரிப், சார் பதார்த உர் மேம் ஜோவை, சுரதி நிரதி மன் பவன்சமோவை /
சுரதி நிரதி மன் பவன் பதார்த (நாம்), கரோ இக்தர் யார் //
த்வாதஸ் அந்தர் சமோய் லே, தில் அந்தர் தீதார் /
கபீர், கஹ்தா ஹூன் கஹி ஜாத் ஹூன், கஹூன் பஜா கர் டோல் //
ஸ்வான்ஸ் ஜோ காலி ஜாத் ஹை, தீன் லோக் கா மோல் /
கபீர், மாலா ஸ்வான்ஸ் உஸ்வான்ஸ் கி, ஃபெரேங்கே நிஜ் தாஸ் /
சௌராசி பிரமே நஹின், கடைன் கர்ம கி ஃபான்ஸ் //

**குருநானக் தேவ் ஜியின் உரையில் ஆதாரம்:-**

சஹாவூன் கா சாங், சஹாவூன் கா மீட், ஜாமே சாரி ஹதாவே நித் /
மன் பவன் கோ ராகே பண்த், லஹே த்ரிகுடி திரிவேனி சந்த் //
அகண்ட் மண்டல் மெய்ன் சுன் சமான, மன் பவன் சச்க் கந்த் திகான //

பொருள்:மூன்று நிலையாக (நாம்) தீட்சை அளித்து, சுவாசத்துடன் ஜபம் செய்யும் முறையைக் கூறுபவர் தான் பூரண சத்குரு ஆவார். அப்போதுதான் ஆன்மாவின் முக்தி சாத்தியமாகும். பரமாத்மா நித்தியமானவர், அதே போல பரமாத்மாவின் தரிசன முறையும் முக்தி அடையும் முறையும் நித்தியமானது, இது ஒருபோதும் மாறாது. கரீப்தாஸ் ஜி மகராஜ் தனது உரையில் கூறுகிறார் –

பக்தி பீஜ் பலடை நஹின், யுக் ஜான்ஹி அசங்க் /
சாயீ சிர் பர் ராகியோ, சௌராசி நஹின் ஷங்க் //
கீசா ஆயே ஏகோ தேஷ் சே, உத்ரே ஏகோ காட் /
சம்ஜோன் கா மார்க் ஏக் ஹை, மூர்க் பாரஹ் பாட் //
கபீர் பக்தி முக்தி பீஜ் பலடை நஹின், ஆன் படே பஹு ஜோல் /
ஜை கஞ்சன் பிஷ்டா பரை, கடை நா தாகா மோல் //

பல மகான்களுக்கு உண்மையான மந்திரம் பற்றிய விவரம் தெரியாது. அவர்கள் தன்னிச்சையான மந்திரத்தை கொடுக்கிறார்கள், இதன் மூலம் மகிழ்ச்சியோ அல்லது முக்தியோ அடைய முடியாது. சிலர் தவம், ஹோமம், யக்ஞம் போன்றவற்றைச் செய்யச் சொல்கிறார்கள், சில குருமார்கள் கண்கள், காது மற்றும் வாயை மூடிக்கொண்டு உள்ளுக்குள் தியானம் செய்ய கூறுகிறார்கள், இது அவர்களின் மனம் போனபடியான வழிபாட்டின் அடையாளமாகும். ஆனால், கபீர் சாகேப், சந்த் கரீப்தாஸ் ஜி மகராஜ், குரு

நானக் ஜி போன்ற உயர்ந்த மகான்கள் அனைத்து வழிபாட்டையும் விடுத்து, ஒரே ஒரு மந்திர (நாம்) ஜபம் மட்டும் செய்ய கூறியுள்ளனர்.

நாஸ்டர்டாமஸ் எனும் ஒரு தீர்க்கதரிசி, சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய நிகழ்வுகள் இன்றுவரை உண்மையாகி வருகின்றன. 2006-ம் ஆண்டு இந்து குரு ஒருவர் தோன்றுவார், அவர் உலக அளவில் பேசப்படுவார் என்று கூறியுள்ளார். மேலும் அந்த குரு முஸ்லிமாகவோ, கிறிஸ்துவராகவோ இருக்க மாட்டார், இந்துவாக மட்டுமே இருப்பார். அவருடைய பக்தி மார்க்கம் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டதாகவும், உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கும். அவரை ஞானத்தில் யாராலும் வெல்ல முடியாது. 2006 ஆம் ஆண்டில், அந்த குருவின் வயது 50 முதல் 60 வயதிற்குள் இருக்கும். (சந்த் ராம்பால் ஜி மகராஜ், 8 செப்டம்பர் 1951 இல் பிறந்தார். ஜுலை 2006 இல் அவருக்கு சரியாக 55 வயதாகிறது, இது தீர்க்கதரிசனத்தின்படி சரியாகப் பொருந்துகிறது). அந்த இந்து குருவால் அளிக்கப்படும் ஞானம் உலகமே ஏற்றுக்கொள்ளும். அந்த இந்து குருவின் தலைமையின் கீழ், இந்தியா உலகம் முழுவதையும் ஆளும் மற்றும் அனைத்து பணிகளும் அவரது கட்டளைப்படி செயல்படும். அவருடைய மகிமை வானத்தையே எட்டும். நாஸ்டர்டாமஸ் கூறிய அந்த மகான் சந்த் ராம்பால் ஜி மகராஜ் ஆவார், அவர் 2006 ஆம் ஆண்டில் பிரபலமடைந்தார். அறியாதவர்களால் எதிர்மறையான வழியில் பிரபலமடைந்தாலும், மகான் மீது எந்தக் குறையும் இல்லை. மேற்கூறிய அனைத்து குணங்களும் தத்துவதரிசி சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் நிறைந்துள்ளது.

*****

# குருவை துன்புறுத்தினால் தண்டனை

மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜி மகராஜ், ஜஜ்ஜார் மாவட்டத்தில், புனித கிராமமான சுடானியில் ஸ்ரீ பல்ராம்ஜி தன்கட் (ஜாட்) குடும்பத்தில் பிறந்தார். பூரண பரமாத்மா கபீர் பரமேஷ்வர் (கவிர்தேவ்) 1727 ஆம் ஆண்டு சத்யலோகத்திலிருந்து மனித வடிவில் வந்து அவரை சந்தித்தார். கரீப் தாஸ் ஜியின் ஆன்மாவை சத்யலோகத்திற்கு அழைத்துச் சென்றார். பின்னர் குடும்ப உறுப்பினர்கள் அவரை இறந்துவிட்டதாகக் கருதி, அவர் உடலை சிதையில் வைத்திருந்தனர். அந்த நேரத்தில், கவிர்தேவ் அவர் ஆன்மாவை மீண்டும் உடலுக்கு அனுப்பினார். அதன்பிறகு மரியாதைக்குரிய கரீப்தாஸ் ஜியும் பரமேஸ்வர் கவிர்தேவனை (கபீர் பரமேஸ்வர்) கண்ணால் கண்ட மகிமையை அனைவருக்கும் எடுத்துரைக்கத் தொடங்கினார். கஷ்டத்தில் உள்ளவர்கள் அவரிடமிருந்து தீட்சை எடுத்தவுடன் நலம் பெறுகின்றன. அவருடைய புகழ் மற்றும் தத்துவ ஞானத்துக்கு முன்னால் நிற்க முடியாத போலி குருமார்கள், பொறாமை கொள்ளத் தொடங்கினர். சுற்றியிருந்த முக்கிய தலைவர்களை தவறாக வழிநடத்தினர். இதன் காரணமாக கபீரின் அன்பு பிள்ளையான மரியாதைக்குரிய கரிப்தாஸ் ஜியை சுற்றியுள்ள கிராம மக்கள் வெறுக்கத் தொடங்கினர்.

தில்லியின் வாஜித்பூர் கிராமத்தில் கரீப்தாஸ் ஜியின் ஒரு சீடர் இருந்தார். அவர் மீதும் கிராம மக்கள் பொறாமை கொண்டார்கள். அவரது வேண்டுகோளால் கரீப்தாஸ் ஜி சில நாட்கள் வாஜித்பூரில் தங்கினார். அந்த சமயம், வெட்டுக்கிளிகளின் கூட்டம் சுற்றுவட்டார பகுதியின் கம்பு வயல்களை நாசம் செய்தது. ஆனால், கரீப்தாஸ் ஜியின் சேவகர் உடைய வயலை ஒன்றும் செய்யவில்லை. இதை கண்டு கிராம மக்கள் அனைவரும் ஈர்க்கப்பட்டு கரிப்தாஸ் ஜியின் ஞானத்தை ஏற்று முக்தி பெற்றன.

கரீப்தாஸ் ஜியின் உத்தரவால், பக்தர் அந்த கம்புகளை கிராமம் முழுவதும் விநியோகித்தார், மேலும் கரிப்தாஸ் ஜி மறுத்த பிறகும், கம்பை அவரது மாட்டு வண்டியில் நிரப்பி, ஒவ்வொரு பௌர்ணமியிலும் அன்னதானம் செய்கிறீர்கள், உங்கள் சேவகரின் தானமும் இருக்கட்டும் என்றார். பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று அவர் இதற்கு சம்மதித்தார் (மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜிக்கு நான்கு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் இருந்தனர் மற்றும் சுமார் 1300 ஏக்கர் நிலத்தின் எஜமானராக இருந்தார்). கரீப்தாஸ்ஜி அதே வண்டியில் அமர்ந்து சுடானி கிராமத்திற்குப் புறப்பட்டார். வழியில் மாட்டு வண்டி கானோதா என்ற கிராமத்தை அடைந்தபோது, பொறாமையில் உள்ள குருமார்களின் (ஆச்சார்யர்கள்) சதித்திட்டத்தின்படி சந்த் கரீப்தாஸ் ஜியை சுற்றி வளைத்தனர். அவருடைய தானியங்களைக் கொள்ளையடித்தனர். அந்த கிராமத்துத் தலைவன் சௌதரி சாஜுராம் சிக்காரா (ஊர் தலைவர்) என்பவருக்கு தாங்கள் மத துரோகியை பிடித்து விட்டதாக செய்தி கொடுத்தனர்.

சௌத்ரி சாஜுராம் ஜியின் உத்தரவின்படி, கரீப்தாஸ் ஜி ஒரு அறையில் கட்டி வைக்கப்பட்டார். அரசாங்க தரப்பில் சௌத்ரி சாஜுராம் அவர்களுக்கு சில அதிகாரங்கள் இருந்தன. பொறாமை குருமார்களின் வசியத்தில் இருந்த சௌத்ரி சாஜுராம் ஜி, மரியாதைக்குரிய கரீப்தாஸ் ஜி மகாராஜை மர எந்திரத்தில் கட்டிவைத்தனர். (மர இயந்திரம் என்பது கால் முட்டிக்கு மேல் இரண்டு தடிமனான கட்டைகள் வைத்து, இரண்டு கைகளையும், பின்புறம் கட்டுவதால், குற்றவாளி உட்கார முடியாமல், கால் வீங்கி துன்பப்படுவான்) மாட்டு வண்டிக்காரன் காலி வண்டியுடன் கானோன்தா கிராமத்தில்

இருந்து சுமார் 10 கிமீ தொலைவில் உள்ள வாஜித்பூர் கிராமத்திற்கு திரும்பி சென்றான். தகவல் அறிந்ததும், வாஜித்பூர் கிராமத்தின் சில முக்கியஸ்தர்கள் உடனே கானோன்தாவுக்கு வந்து சௌத்ரி சாஜ்ராம் ஜியிடம் பிரார்த்தனை செய்து விளக்கினார், கரீப்தாஸ் ஜி சாதாரண மனிதர் அல்ல, பரம சக்தி மிக்கவர், நீங்கள் அவரிடம் மன்னிப்பு கேளுங்கள் என்றனர். சௌத்ரி சாஜ்ராம் ஜி மிகவும் நேர்மையான, தயவு உள்ள, மென்மையான இதயமுள்ள நபர். ஆனால் அந்த சுயநலவாதி குருமார்கள் (ஆச்சார்யர்கள்) அவரிடம் பொய்களை கூறி, மரியாதைக்குரிய கரீப்தாஸ் ஜி மீது வெறுப்பை உண்டாக்கினார்கள். அதன் காரணமாக சௌத்ரி சாஜ்ராம் ஜி காரணம் தெரிந்து கொள்ளாமல் தண்டனையை கொடுத்தார். வாஜித்பூரின் பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று மரியாதைக்குரிய கரிப்தாஸ் ஜியை விடுவித்தார். மதிப்பிற்குரிய கரீப்தாஸ் சாகேப் ஜி எதுவும் சொல்லாமல் தனது சுடானி கிராமத்திற்கு வந்துவிட்டார். மறுநாள் காலை, சௌத்ரி சாஜ்ராம் காலைக்கடன் முடிக்க, ஒரு குளக்கரை பக்கம் சென்றபோது, குதிரை சவாரி செய்பவர்கள், அவருடைய இரு கைகளையும் வெட்டி விட்டு, அவர் முன்னரே மாயமாக மறைந்து போயினர். இதை அங்குள்ள ஏராளமானோர் பார்த்தனர். அவருக்கு மருத்துவம் செய்தும் வலி மற்றும் இரத்தப்போக்கு நிற்கவில்லை. பல நாட்களாக அவர் வலியால் துடித்தார். அப்போது ஒருவர், சந்த் கரீப்தாஸ் ஜியிடம் சென்று மன்னிப்புக் கோருங்கள் என்றார், அவர் குடும்பத்தினர் சௌத்ரியை குதிரையில் ஏற்றி சுடானிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சென்றதும், மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜியின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினார். சந்த் கரீப்தாஸ் ஜி அவரை ஆசீர்வதித்து, அவருக்கு நாம் தீட்சை அளித்து, அவரை வாழ்நாள் முழுவதும் பக்தி செய்யச் சொன்னார்.

உங்களைப் பற்றி தவறாக கூறி, என்னை ஏமாற்றிவிட்டார்கள், நீங்கள் பூரண பரமாத்மா என்று எனக்கு தெரியாது என்று சவுத்ரி சாஜ் ராம் ஜி கூறினார். மதிப்பிற்குரிய கரீப்தாஸ் ஜி, நான் பூரண பரமாத்மா கபீர் சாகேப் (கவிர்தேவ்) நெசவாளி அனுப்பிய சேவகன் என்று கூறினார். அவருடைய சக்தியால்தான் நீங்கள் குணமடைந்தீர்கள். நான் உங்களை சபிக்கவில்லை. உங்களது கர்மவினை உங்களுக்கு கிடைத்துள்ளது. நீங்கள் இங்கு வந்திருக்காவிட்டால் உங்கள் குடும்பம் மேலும் பாவங்களால் பாதிக்கப்பட்டிருக்கும். நீங்கள் தீட்சை பெற்றுவிட்டதால் இனி அது இருக்காது என்றார். சௌத்ரி சாஜ்ராம் ஜி தனது முழு குடும்பத்தையும் தீட்சை எடுக்க வைத்தார். இன்றும், அதே சாஜ்ராமின் வம்சர்கள் “சாஜ்வாடா” என்று அழைக்கப்படும் சுமார் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மரியாதைக்குரிய கரீப்தாஸ் ஜியை வழிபடுகின்றன.

தும்னே உஸ் தர்காஹ் கா மஹல் நா தேக்யா /
தர்மராய் கே தில்தில் கா லேக் //
ராம் கஹை மேரே சாத் கோ, துஹ்க் ந தீஜோ கோஏ /
சாத் துகாய் மைன் துஹ்கி, மேரா ஆபா பீ துகி ஹோய் //
ஹிர்ண்யக் ஷிபு உதார் (பேட்) விதாரியா, மைன் ஹீ மார்யா கன்ஷ் /
ஜோ மேரே சாது கோ சதாவை, வகா கோ-தூன் வன்ஷ் //
சாத் சதாவன் கோடி பாப் ஹை, அன்கின் ஹத்யா அப்ராதம் /
துர்வாசா கி கல்ப கால் சே, பிரலய் ஹோ கயே யாதவ் //

மேற்கூறிய உரையில் பரமாத்மா கூறியதை சத்குரு கரீப்தாஸ் ஜி விவரிக்கிறார். எனது சீடனை துன்புறுத்தாதீர், என் சீடனை

துன்புறுத்துபவன், என்னை துன்புறுத்துகிறான். எனது பக்தன் பிரகலாதனைத் துன்புறுத்தியபோது, நான் தான் ஹிரண்யகஷ்யனின் வயிற்றைப் பிளந்தேன், மேலும் நான் தான் கம்சனை கொன்றேன் மற்றும் என் சாதுவை துன்புறுத்துபவரின் வம்சத்தை அழித்திடுவேன். ஒரு மனிதன் இன்னொருவனைக் கொன்றால், அவன் அடுத்த ஜென்மத்தில் திரும்ப கொல்வதால் அவன் கணக்கு முடிந்துவிடும். ஆனால் ஒரு பூரண குருவை துன்புறுத்தினால் மிக பெரிய தண்டனை உண்டு, அது எண்ணற்ற பிறவிகளில் கூட தீராது. சத்குரு தனது உரையில் கூறுகிறார்:-

அர்த்முகி கர்பவாஸ் மேம், ஹர்தம் பாரம்பார் /
ஜூனி பூத் பிஷாச் கி, ஜப் லக் சிருஷ்டி சன்ஹார் //

இப்படிப்பட்ட தவறைச் செய்பவனை இறைவன் வெவ்வேறு உயிரினங்களில் மீண்டும் மீண்டும் தாயின் கருவில் வைக்கிறார், பிறந்த உடனேயே மீண்டும் இறந்துவிடுவான் மற்றும் இயற்கை அழியும் வரை பூத பிறவிகளிலும், தாயின் வயிற்றிலும் துன்பப்படுவான். மேலும் துன்புறுத்தப்பட்ட குரு தானே மன்னிக்கும் வரை மன்னிப்பு கிடைக்காது.

ஒருமுறை துர்வாசர் ரிஷி அகங்காரத்தில் அம்பரீஷ் ரிஷியைக் கொல்ல தனது சக்தியால் ஒரு சுதர்சன சக்கரத்தை ஏவி விட்டார். சுதர்சன சக்கரம் அம்பரீஷ் ரிஷியின் பாதங்களைத் தொட்டு திரும்ப துர்வாசர் முனியை கொல்ல துர்வாசரை நோக்கி வந்தது. துர்வாசர் முனி பெரிய தவறு செய்துவிட்டதை உணர்ந்து, நேரம் இல்லாததைக் கண்டு துர்வாசர் ஓடினார். ஸ்ரீ பிரம்மரிடம் சென்று கடவுளே! தயவு செய்து என்னை இந்த சுதர்சன சக்கரத்திலிருந்து காப்பாற்றுங்கள் என்றார். ஸ்ரீ பிரம்மர் தான் தப்பிக்க, இது எனது கையில் இல்லை, நீங்கள் சிவபெருமானிடம் செல்லுங்கள் அவர் காப்பாற்றுவார் என்று கூறினார். உடனே துர்வாசர் ரிஷி சிவனிடம் சென்று கடவுளே! தயவு செய்து என்னை காப்பாற்றுங்கள் என்றார். சிவபெருமானும் ஸ்ரீ பிரம்மாவைப் போலவே தப்பிக்க நீங்கள் ஸ்ரீ விஷ்ணுவிடம் செல்லுங்கள் அவர் காப்பாற்றுவார் என்று கூறினார். இதைக் கேட்ட துர்வாசர் ரிஷி, விஷ்ணுவிடம் சென்று, ஆண்டவரே! இந்த சுதர்சன சக்கரத்தில் இருந்து உங்களால் மட்டுமே என்னைக் காப்பாற்ற முடியும், இல்லையெனில் அது என்னைக் கொன்றுவிடும் என்றார். அதற்கு ஸ்ரீ விஷ்ணு, முனிவரே! சுதர்சன சக்கரம் ஏன் உங்களை கொல்ல வருகிறது? என்று கேட்டார். துர்வாசர் ரிஷி எல்லாவற்றையும் விவரித்தார், பிறகு ஸ்ரீ விஷ்ணு சொன்னார், துர்வாசரே! அதே அம்பரிஷ் ரிஷியின் பாதங்களில் விழுந்து மன்னிப்பு கேட்டால், இந்த சுதர்சன சக்கரம் உங்கள் உயிரைக் காப்பாற்றும், மற்றபடி எந்த கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்றார். பின்னர் துர்வாசர் ரிஷி திரும்பி சென்று அம்பரீஷ் ரிஷியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு அழுதுகொண்டே மன்னிப்பு கேட்டார். அப்போது அம்ப்ரிஷ் ரிஷி அந்த சுதர்சன சக்கரத்தை தன் கையில் எடுத்து துர்வாசர் ரிஷியிடம் கொடுத்து, சாதுக்களையும்-ரிஷிகளையும் அவமரியாதை செய்யக் கூடாது, அதன் விளைவுகள் மிக மோசமானது என்று கூறினார்.

"ஸ்ரீ கிருஷ்ண குரு கஸ்னி ஹூயீ, அவுர் பசேகா கௌன்"

ஸ்ரீ கிருஷ்ணரின் குரு ஸ்ரீ துர்வாசர் போன்ற முனிவர்களின் நிலை இப்படி இருக்கும்போது, சாதாரண மனிதன் எப்படி தப்பிக்க முடியும்.

*****

# வழி தவறியவர்களுக்கு மார்க்கம்

## பக்த சமூகம் இறைவனின் உண்மையான பக்தியிலிருந்து வெகு தூரத்தில் உள்ளது

ஹரியானாவின் ரோத்தக் மாவட்டத்தில், கரோந்தாவில் உள்ள சத்லோக் ஆசிரமத்தில், கபீர் பரமேஸ்வர் (கவிர்தேவ்) தோன்றிய தினத்தை முன்னிட்டு ஐந்து நாட்களுக்கு (2005 ஜுன் 18 முதல் 22 வரை) நடைபெற்ற சத்சங்க கூட்டத்தில் பக்தர் பசந்த் சிங் சைனி தனது கதையை விவரித்தார். தயவு கூர்ந்து படியுங்கள், அது பின்வருமாறு:-

## இறை தாகம் கொண்ட பசந்த் சிங் சைனிக்கு வழி பிறந்தது.

நான் பசந்த் சிங் சைனி, ஹரியானாவின், ரோத்தக் மாவட்டத்தில், கரோந்தா கிராமத்தில் வசிக்கிறேன். என் பழைய விலாசம், வீட்டு எண் 161, பாண்டவ் நகர், மதர் டைரி அருகில், யமுனாபார், தில்லி 92.

எங்கள் குடும்பம் துக்கத்தில் மூழ்கியிருந்தது. ஆனாலும் இறைவனை அடையவும், துக்கங்களை நீக்குவதற்காகவும், சாதுக்கள் மற்றும் மகான்களிடம் சென்றேன், ஆனால் எந்த பயனும் இல்லை. கடைசியில் ஒரு புகழ்பெற்ற குரு சந்த் ஸ்ரீ ஆசாராம் பாபாவை சந்தித்தோம். அப்போது டெல்லியில் ஆயிரம் கணக்கில் பாபாஜியின் பக்தர்கள் இருந்தன. அதனால் அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. எங்கள் கஷ்டங்களையும், கடவுளை அடைய வேண்டும் என்ற விருப்பத்தையும் அவரிடம் தெரிவித்தோம். அவர் எங்களுக்கு 7 மந்திரங்களை ஓம் குரு, ஹரி ஓம், ஓம் எவ் நம, ஓம் நம சிவாய், ஓம் நமோ பகவதே வாசுதேவாய, ஹ்ரீம் ராமாய நம மற்றும் காயத்ரி மந்திரம் போன்றவை) கொடுத்து அதில் ஒன்றை தேர்ந்தெடுக்கும்படி சொன்னார். மேலும் “சோஹம்” மந்திரத்தை, மூச்சு இழுக்கும்போது “சோ” மற்றும் மூச்சு விடும்போது “ஹம்” என்று ஜபிக்க சொன்னார். நாங்கள் ஏகாதசி, பௌர்ணமி, திங்கள் கிழமை மற்றும் அஷ்டமி விரதங்கள் இருந்து, திரிபந்த் என்ற பிராணாயாமா மற்றும் சித்தாசனத்தில் அமர்ந்து தியானம் செய்யுமாறு சொன்னார்கள்.

நாங்கள் தீட்சை எடுத்த பிறகு, அவர்முன் எங்கள் சோகங்கள் அனைத்தையும் சொன்னோம். நாற்பது வருடங்களுக்கு முன்பு இறந்து போன எங்கள் மாமா பூதமாக இருக்கிறார், அவர் எங்கள் இரண்டு சகோதரர்களைக் கொன்றுவிட்டார், சுமார் பத்து எருமைகளையும் கொன்றுவிட்டார், ஐந்து-ஆறு பசுக்களையும் கொன்றுவிட்டார், வீட்டில் அனைவரும் நோய்வாய்ப்பட்டுள்ளனர், எந்த தொழிலையும் நடத்த விடுவதில்லை, இப்போது தந்தையை கொண்டு செல்வதாகச் சொல்கிறான் என்று அழுது எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அவரிடம் கதறி பிரார்த்தனை செய்தோம். ஆனால் ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த பூதம் சொன்னபடி எங்கள் தந்தையையும் கொண்டு சென்றது. ஆசாராம் பாபு சொன்னார், நடக்கவேண்டியது நடந்தே தீரும், பசு மற்றும் பண இழப்பு மற்றும் உடல் நோய் ஆகியவை பாவத்தின் விளைவாகும், விதியை மாற்ற முடியாது அதை அனுபவித்தே ஆக வேண்டும். நீங்கள் பக்தி செய்து கொண்டிருங்கள் என்றார். நாங்களும் இறைவனை அடைய பக்தி செய்து கொண்டே இருந்தோம். பாபாஜியின் அறிவுரைக்குப் பிறகு, கடவுள் பக்தியில் முழுமையாக ஈடுபட்டோம் மற்றும் நான் (பசந்த் தாஸ்) முதலில், டெல்லியில் உள்ள ஸ்ரீ ஆசாராம் பாபு ஆசிரமத்தில் நரேந்திரன் பிரம்மச்சாரியின்

ஆலோசனைபடி நாற்பது நாட்களின் யாகம் செய்தேன். இதற்குப் பிறகு, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பஞ்செட் ரத்லாமில் உள்ள ஆசாராம் பாபா ஆசிரமத்தில் மஹந்த் காக்காஜி என்றவரின் மேற்பார்வையில் நாற்பது நாட்களின் யாகத்தை ஆறு முறை செய்தேன். இதற்குப் பிறகு, குஜராத்தின் அகமதாபாத், சாபர்மதியில் ஆசாராம் ஆசிரமத்தில் உள்ள மௌன கோயிலில் இரண்டு முறை யாகம் செய்தேன், அங்கு ஸ்ரீ ஆசாராம் ஜியுடன் பேச வாய்ப்பு கிடைத்தது. அப்போது நான் ஆசாராம்ஜியிடம், பாபாஜி, பரமாத்மா யார்? எப்படி இருப்பார்? எங்கு இருக்கிறார்? தயவுசெய்து சொல்லுங்கள் என்று கேட்டேன். பாபாஜி சொன்னார், நீங்கள் பக்தி செய்து கொண்டே இருங்கள், எல்லாம் தெரிந்துவிடும் என்று கூறி, தினமும் கீதையின் ஒரு அத்தியாயத்தை படிக்க சொன்னார். நீங்கள் என்னை தரிசனம் செய்ய விரும்பினால், ஒரு சாதகத்தை செய்யுங்கள், மூன்று நாட்களுக்கு ஒரே அறைக்குள்ளேயே இருக்க வேண்டும், அறையை மூடுவதற்கு முன் பகலில் சாப்பிடுவதையும் குடிப்பதையும் நிறுத்த வேண்டும். பிறகு மூன்று நாட்களுக்கு உண்ணாமலும், வெளியில் செல்லாமல் இருக்க வேண்டும், அறைக்குள்ளேயே திராடகம் (ஒரு கலை) செய்யுங்கள் என்றார். வீடு திரும்பியதும், இதை மூன்று முறை செய்தேன், ஆனால் பாபாஜியை காணமுடியவில்லை. யாகத்தின் போது, நோய்வாய்ப்பட்டு உயிருக்கும் போராடினேன், ஆனாலும் கடவுள் பக்தியை விடவில்லை.

செப்டம்பர் 2000 இல் ரோத்தக்கில் உள்ள காட்மண்டியில் சந்த் ராம்பால் தாஸ் ஜி மகராஜின் சொற்பொழிவை கேட்டேன், அவர் தத்துவஞானத்தின் அடிப்படையில் பகவத் கீதையை விளக்கினார். அதன் பிறகு கீதையை படிக்கும்போது கடவுள் சொல்வதும், பாபாஜி சொல்வதும் மாறாக இருப்பதை கண்டு, உண்மையில் நாம் கடவுளுக்கு எதிராக வழிபாடு செய்கிறோமா? என்று மனதில் தோன்ற ஆரம்பித்தது. சந்த் ராம்பால் ஜி மூலம் கீதையின் மொழிபெயர்ப்பைப் புரிந்து கொண்டபோது, எனது மனம் அழத் தொடங்கியது, பாபாஜியிடம் இந்த சந்தேகங்களை கேட்க விரும்பினேன். நான் புனித கீதையை பாபாஜியிடம் கொண்டுசென்று, அதை காட்டி என் சந்தேகங்களையெல்லாம் கேட்டேன். ஆனால் பாபாஜி எந்த சந்தேகத்தையும் தீர்க்கவில்லை. நான் பாபாஜியிடம், உங்களுக்கு இறைவனை பற்றி தெரியவில்லை என்றால், ஏன் பக்தர்களை உங்களிடம் சிக்க வைக்கிறீர்கள் என்று கேட்டேன். பிறகு பாபாஜி என்னை பார்த்து முறைத்துக்கொண்டு, உனக்கு பக்தியைப் பற்றி என்ன தெரியும்? என்றார். நான் அழுது கொண்டே திரும்பி வீட்டிற்கு வந்துவிட்டேன்.

இறைவனை அடையாமல் வாழ்க்கை வீணாகி, கடின விரதங்களால் உடல் வீணாகி மரணம் நெருங்கியது. பின்னர் மற்ற குருமார்களிடமும் (ராதாசுவாமி, தன்-தன் சத்குரு, ஸ்ரீ சத்பால் ஜி மகராஜ், ஸ்ரீ பாலயோகேஷ்வர் ஜி மகராஜ், திவ்ய ஜோதி, பிரம்மகுமாரி, நிரங்காரி மிஷன், ஜெய் குருதேவ்) அலைந்தேன். ஆனால் சந்த் ராம்பால் ஜி மகராஜ் சொன்ன உண்மையான ஞானம் மேற்கூறிய எந்த குருவிடமும் பிரிவினரிடமும் இல்லை. பரமாத்மாவை அடைந்தவர்கள், பரமாத்மா யார்? எப்படி இருப்பார்? எங்கு இருக்கிறார்? என்று சொல்லக்கூடியவர் யாவரும் இப்பொழுது பூமியில் இல்லை என்று நினைத்து மிகவும் வருந்தி அழுதுகொண்டே இருந்தேன். எனக்கு குருமார்கள் மீது நம்பிக்கை போய்விட்டது. மனதில் ஸ்ரீ ஆசாராம் ஜி போன்ற மிக பெரிய குருவே, சாஸ்திரத்திற்கு மாறாக எல்லோரையும் வழி நடத்துகிறார் என்றால், பின்னர் யாரை நம்புவது என்று நினைத்து

கொண்டிருந்தேன். சந்த் ராம்பால் ஜி மகராஜ் உண்மையான ஞானத்தை கூறுகிறார், ஆனால் அவரிடம் கூட்டமே இல்லை. இவர் எப்படி பூரண குரு ஆவார் என்ற சந்தேகம் மனதில் இருந்தது. சில நாட்களுக்குப் பிறகு எங்கள் கிராமத்தில் சந்த் ராம்பால் ஜி மகராஜின் ஒரு சீடர் என்னை சந்தித்தார், என் கதையைக் கேட்ட பிறகு, அவர் மீண்டும் என்னை பூரண குரு சந்த் ராம்பால் ஜி மகாராஜின் சத்சங்கத்திற்கு அழைத்து சென்றார். நான் ஒரு மணி நேரம் அவருடைய சொற்பொழிவுகளை கேட்ட பின்னர், அழுதுகொண்டே மகாராஜை சந்தித்தேன். மகராஜ் ஜி என்னை மார்போடு அனைத்து, உங்களுடைய குருவின் வழிபாடு முறை வேதங்களுக்கு எதிரானது என்று கூறினார். அதாவது எனது தேவைகளை அவர் ஏற்கனவே அறிந்துகொண்டார், சந்த் ராம்பால் ஜி மகராஜ் தன்னிடம் அமரவைத்து எனது சந்தேகங்கள் அனைத்தையும் தீர்த்தார்.

தத்துவதரிஷி சந்த் ராம்பால் ஜி மகராஜ் புனித கீதையில் அத்தியாயம் 9 மந்திரம் 25ல், பித்ரு பூஜை அதாவது சிரார்த்தம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதை விளக்கினார். மற்ற தெய்வங்களை வழிபடுபவர்கள் அறியாதவர்கள் என்று விவரிக்கப்பட்டுள்ளது. (கீதை அத்தியாயம் 7 மந்திரம் 12-15 மற்றும் 20-23 வரை). ஆனால் ஸ்ரீ ஆசாராம் ஜி “சிரார்த்தின் மகிமை” என்ற புத்தகத்தில் சிரார்த்தம் செய்யும் சிறந்த முறையை விளக்குகிறார். சந்த் ஸ்ரீ ஆசாராம் ஜியின் அகமதாபாதில் சாபர்மதியில் உள்ள ஆசிரமத்திலிருந்து வெளியிடப்பட்ட ரிஷி பிரசாத் என்ற மாத இதழ்-136 ஏப்ரல் 2004, பக்கம் 19 இல், பூதத்தை பூஜிப்பவர்கள் பூதலோகத்திற்கும், பித்ருக்களை பூஜிப்பவர்கள பித்ரு லோகத்திற்கும், ஸ்ரீ கிருஷ்ணரை பூஜிப்பவர்கள் வைகுண்டத்திற்கும் செல்வார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது.

குறிப்பு: ஸ்ரீ ஆசாராம் ஜி அவர்கள் வெளியிட்ட “சிரார்த்தம் மகிமை” என்ற நூலில், பித்ருக்களை வழிபடும் சிறந்த முறையை எழுதியுள்ளார்.

சற்று சிந்தியுங்கள்: ஒருவர், கிணற்றில் விழுபவர்கள் இறந்து விடுவார்கள் என்று கூறுகிறார். பின்னர் அவரே கிணற்றில் விழுமாறும் அறிவுரை கூறி, கிணற்றில் குதிக்க சிறந்த வழியையும் கூறுகிறார், அவ்வாறு செய்யாதவன் பாவி என்றும் கூறுகிறார்.

அந்த நபர் உண்மையானவரா? ஸ்ரீ ஆசாராம் ஜி ஒருபுறம், பித்ருக்கள் மற்றும் பூதங்களை பூஜிப்பவர்கள் பித்ரலோகம் மற்றும் பூதலோகம் செல்வார்கள், அவர்களின் பசி மற்றும் தாகத்தை சிரார்த்தத்தால் பூர்த்தி செய்யப்படும் என்று கூறுகிறார். யோசிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், நமது பெற்றோர்கள் உயிருடன் இருந்தபோது அவர்கள் ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு முறையாவது சாப்பிடுவார்கள். இப்போது அவர்கள் இறந்த பிறகு வேதத்திற்கு எதிரான வழிபாட்டால் அவர்கள் பூதங்கள் மற்றும் பித்ருக்கள் பிறப்பு அடைந்துள்ளனர். இப்போது ஒரு நாள் சிரார்த்தம் மூலம் எப்படி பூர்த்தி அடைவார்கள்? அவர்கள் 364 நாட்களுக்கு என்ன சாப்பிடுவார்கள்? அப்பாவி பக்தர்களை தவறாக வழிநடத்தும் மகான்களும் குருமார்களும் குற்றவாளிகள் ஆவார். சாஸ்திர ஞானம் அறியாத குருமார்கள் தான், இந்த உயிரினத்தை வேதத்திற்கு எதிரான வழிபாடுகளை செய்ய வைத்து, துன்பமான பிறவிகளில் தள்ளுகிறார்கள்.

ஸ்ரீ ஆசாராம் ஜி, சிவ வழிபாட்டிற்கு (ஓம் நம சிவாய) மற்றும் விஷ்ணு வழிபாட்டிற்கு (ஓம் நமோ பகவதே வாசுதேவாய) மந்திரத்தைச் சொல்கிறார்.

இது தவிர, ஓம் குரு, ஹரி ஓம் போன்ற மந்திரங்களில் இருந்து ஒன்றை தேர்ந்தெடுக்கும்படி சொல்கிறார், மற்றும் சோஹம் மந்திரத்தை இரண்டாகப் பிரித்து சுவாசத்தின் மூலம் ஜபிக்க கொடுக்கிறார். எந்த சாஸ்திரத்திலும் இதன் ஆதாரம் இல்லை.

தயவு செய்து சிந்தியுங்கள்: வயிற்று வலி உள்ள ஒரு நோயாளிக்கு முன்பு ஆறு வகை மாத்திரைகளை வைத்து, அதில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க மருத்துவர் சொன்னால், அவர் உண்மையான மருத்துவரா?

புனித கீதை அத்தியாயம் 8, ஸ்லோகம் 13 இல் கூறியதாவது :-

ஓம் இதி ஏகாக்ஷரம் ப்ரஹம் வ்யாஹரந் மாம் அநுஸ்மரன்
ய: ப்ரயாதி த்யஜந் தே$_3$ஹம் ஸ: யாதி பர்மாம் க$_3$திம் //13//

**மொழிபெயர்ப்பு:-** கீதையின் ஞானத்தை அருளிய பிரம் அதாவது காலன் சொல்கிறார்: (மாம் ப்ரஹம்) எனது பிரம் உடைய (இதி) இந்த (ஓம் ஏகாக்ஷரம்) ஓம் என்ற ஓர் எழுத்தை (வ்யாஹரந்) உச்சரித்து (அநுஸ்மரன்) ஜபம் செய்யவேண்டும் (த்யஜந் தே$_3$ஹம்) உடலை விட்டு பிரியும் வரை அதாவது கடைசி மூச்சு வரை (ப்ரயாதி) ஜபம் செய்யும் (ய:) சாதகன் (ஸ:) என்னுடைய (பர்மாம் க$_3$திம்) பரம கதியை (யதி) அடைகிறான்.

இதன் பொருள் என்னவென்றால், பிரம்ம காலன் அதாவது ஆயிரம் கரங்கள் கொண்ட ஜோதி நிரஞ்சன், ஸ்ரீ கிருஷ்ணரின் உடலுக்குள் ஆவியாக நுழைந்து, ஒரே ஒரு ஓம் என்ற மந்திரத்தால் இறுதி மூச்சு வரை என்னுடைய (பிரம்) வழிபாடு செய்யும் சாதகன், என்னிடம் இருந்து கிடைக்கும் பலனை அடைகிறான், என் வழிபாட்டிற்கு வேறு எந்த மந்திரமும் இல்லை என்று கூறுகிறார். மேலும் கீதை அத்தியாயம் 7 மந்திரம் 18 இல், அவர் தனது நிலையை - முக்தியை அனுத்தமாம் அதாவது சிறந்ததல்ல - மிகவும் தாழ்வானது என்றும் கூறியுள்ளார். மேலும் கீதை அத்தியாயம் 9 மந்திரம் 20 முதல் 25 வரையில், மூன்று வேதங்களிலும் (ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம்) கூறப்பட்டுள்ள முறைப்படி என்னை வழிபடுபவர்கள், மற்றும் பிற தெய்வங்களை வழிபடுபவர்களுக்கு, பிறப்பு-இறப்பு மற்றும் சொர்க்கம்-நரகம் தொடர்ந்துகொண்டே இருக்கும். மேலும் பித்ருக்களை வழிபடுபவர்கள் (சிரார்த்தம் செய்பவர்கள்) பித்ருக்களை அடைவார்கள். பூதங்களை வழிபடுபவர்கள் (13ஆம் நாள் திதி, திவசம், கங்கையில் அஸ்தி கரைத்தல், பிண்டம் வைத்தல் போன்ற சடங்குகள் பூத பூஜையாகும்) பூதங்களாகி பூத லோகம் செல்வர், பிறகு பூமியில் ஆவியாக அலைவார்கள். இந்த வழிபாடு வேதத்திற்கு எதிரானது அறியாமை மற்றும் தன்னிச்சையானது. எனவே இது பயனற்றது. ஆதாரம் கீதை அத்தியாயம் 16 சுலோகம் 23-24.

சிறப்பு:- இங்கு நான்காவது அதர்வண வேதத்தின் விளக்கம் கொடுக்கவில்லை, ஏனெனில் அதில் வழிபாட்டு முறை குறைவாகவும், படைப்பு பற்றிய விளக்கம் அதிகமாகவும் உள்ளது. கீதை அத்தியாயம் 18, மந்திரம் 62ல், அந்த பரமேஸ்வரரை நாடு, அவருடைய அருளால் பரம சாந்தி மற்றும் சாஸ்வத் ஸ்தானம் அதாவது சத்யலோகத்தை அடைவாய் என்று கூறப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 15, மந்திரம் 4ல், தத்துவதரிசி குருவை அடைந்த பிறகு சாஸ்திர முறையான வழிபாடு செய்து, அந்த பரம பிதா பரமேஸ்வரரை அடைய வேண்டும். அவரிடம் சென்ற பிறகு சாதகனுக்கு பிறப்பு இறப்பு இல்லாத மோட்சம் கிட்டும். (கீதையை அருளிய காலன் அதாவது ஷர் புருஷ் - பிரம்) நானும் அந்த பரமேஸ்வரரிடம்

சரணடைந்துள்ளேன் என்று கூறுகிறார்.

சந்த் ராம்பால் ஜி மகராஜ் சொன்னார், மற்ற குருமார்கள் உங்கள் கர்மவினையின் பாவங்களை அனுபவித்தே ஆகவேண்டும், பக்தி செய்து கொண்டே வந்தால், அடுத்த பிறவி சுகமாக அமையும் என்று சொல்வார்கள் என்று கூறினார்.

சற்று சிந்தித்து பாருங்கள்: ஒருவர் காலில் முள் குத்தி வலியால் அவதிபட்டு, முள்ளை எடுக்க மருத்துவரிடம் சென்றால், மருத்துவர் முள்ளை எடுக்க முடியாது, காலனியை அணிந்துகொள் இனி முள் குத்தாது என்று சொன்னால், இது சரியா? முள்ளை நீக்காமல் காலனியை அணிய முடியாது. முதலில் முள்ளை நீக்கி, பிறகு மேலும் முள் குத்தாமல் இருக்க காலனியை அணிய வேண்டும். அதே போல் பூரண பரமாத்மாவின் பூரண குருவிடம் சரணடைந்தால் பாவம் என்ற முள் நீங்கி, சாஸ்திர முறையான பக்தி எனும் காலனி மூலம் பாவம் எனும் முள் குத்தாமல் இருக்கும்.

அனைத்து குருமார்களும் கீதையை தவறான அர்த்தத்தோடு மொழிபெயர்த்துள்ளனர். கீதை அத்தியாயம் 7, மந்திரம் 18, 24ல் “அனுத்தமாம்” என்பதன் பொருள் “மிகச் சிறந்தது” என்றும், அத்தியாயம் 18, மந்திரம் 66ல் “வ்ரஜ்” என்பதன் பொருள் “வருதல்” என்று மொழிபெயர்த்துள்ளனர். ஆனால் அனுத்தமாம் என்றால் மிக கெட்டது மற்றும் வ்ரஜ் என்றால் செல்லுதல் என்று பொருள் ஆகும். தத்துவஞானம் இல்லாத குருமார்களின் காரணத்தால் பக்த சமூகம் சாஸ்திர முறை அற்ற பக்தியால் மனித வாழ்க்கையை வீணடிக்கிறது. (கீதை அத்தியாயம் 16, மந்திரம் 23, 24) அனைத்து புனித மதங்களின் புனித ஆன்மாக்கள் தத்துவஞானம் அறியாததால், போலி மகான்களும் குருமார்களும் பெருகிவிட்டன. பக்தர் சமூகம் தத்துவ ஞானத்தை அறியும்போது இந்த போலிச் சாமியார்கள் ஓடி ஒளிய இடம் இருக்காது.

மேற்கூறிய உண்மைகளை நான் கண்ணால் பார்த்து, நானும் எனது குடும்பத்தில் அனைவரும் சந்த் ராம்பால் ஜி அவர்களின் பாத கமலத்தைப் பற்றி உள்ளோம். இப்போது குடும்பத்தில் நோய், நொடி எதுவும் இல்லை. பூதமோ, ஆவியோ எங்களை அண்டுவதில்லை. முன்பு துன்பங்கள் கொடுத்த பூதங்கள் எங்கள் கிராமத்தை விட்டே போய்விட்டது, ஆசாராம் ஜியை பூஜிக்கும் பக்தர்களுடைய வீடுகளுக்குச் சென்று விட்டன. அங்கு சென்ற பூதங்கள், பசந்த் வீட்டில் பரமாத்மாவின் பூரண குரு இருப்பதால் இனி நாங்கள் அந்த கிராமத்திற்கே செல்ல முடியாது எனச் சொல்கின்றன. ஆசாராம் ஜி பக்தர்களாக இருந்த எனது உறவினர்கள் சுமார் 200 பேர் சந்த் ராம்பால் ஜியிடம் தீட்சை எடுத்துள்ளார்கள். மேலும் ஆசாராம் ஜியின் சீடர்கள் சுமார் பத்தாயிரம் பேர் சந்த் ராம்பால் ஜி மகாராஜின் தத்துவஞானம் புரிந்து அவரைப் பின்பற்றுகின்றனர். தயவு செய்து சந்த் ராம்பால் ஜி மகராஜின் அடைக்கலத்தில் வந்து உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கி இறைவனை அடையுமாறு பக்தர் சமூகத்தையும் இறைவனை தேடும் உள்ளங்களை வேண்டிக்கொள்கிறேன்.

*பசந்த் தாஸ், செல்: **90532-75569***

## ஒரு அற்புத அதிசயம்

வணக்கத்திற்குரிய குருவை தாழ்ந்து வணங்குகிறேன்.

நான் பக்தன் நாதுராம், டெல்லி, சாவ்லா கிராமத்தை சேர்ந்தவன்.

எனது குடும்பத்தின் மகிழ்ச்சியை பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறேன், ஜனவரி 2000 தொடக்கத்தில், சந்த் ராம்பால் ஜி மகாராஜின் சொற்பொழிவு தாஜ்பூர் கிராமத்தில் உள்ள பக்தர் ஸ்ரீ முராரியின் இல்லத்தில் நடந்து கொண்டிருந்தது. மற்றொரு பக்தரின் மகள் என் மனைவி திருமதி பிமலா தேவியிடம், பக்கத்து கிராமத்தில் சத்சங்கம் நடக்கிறது, அந்த மகராஜிடம் நீங்கள் தீட்சை பெற்றால், உங்கள் தீராத நோய் (முதுகுத்தண்டில் ஒரு அங்குல இடைவெளி) குணமாகிவிடும் என்று சொன்னாள். என் மனைவி அந்தப் பெண்ணிடம், டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவக் கழக ஆராய்ச்சி மையத்தில் இரண்டரை வருடம் சிகிச்சை பெற்று பலன் இல்லாதபோது, அந்த தீட்சையில் என்ன சக்தி இருக்க போகிறது என்று கூறினார். வெகுநேரம் விவாதித்த பிறகு, என் மனைவி அருளுரை கேட்க செல்ல முடிவெடுத்தாள். சந்த் ராம்பால் ஜி மகராஜின் சொற்பொழிவைக் கேட்டு, விடுபட்டுப் போன பக்தியின் பாதையில் குருஜியால் மீண்டும் இணைந்தேன், இரண்டரை வருட சிகிச்சையால் குணம் அடையாத நோய், மந்திர ஜபத்தால் ஐந்தே நாட்களில் தீராத நோய் குணமானது. இதற்கு முன், மருத்துவர்கள், அவளை உட்காரவும் நிற்கவும் தடை விதித்தனர். அது இன்னும் சிகிச்சை அறிக்கையில் எழுதப்பட்டுள்ளது மற்றும் ஒரு அங்குல இடைவெளியின் எக்ஸ்ரேவும் உள்ளது. என் மனைவியின் முக்கிய பிரச்சனை என்னவென்றால், அவளால் மலம் கழிக்க உட்கார இயலாது, கை கழுவும் நேரத்தில் குனிவதால் அதிக வலி ஏற்பட்டு அழ வேண்டியிருந்தது. இப்போது சத்குரு ராம்பால் ஜி மகராஜின் ஆசீர்வாதத்தால், அவள் 50 கிலோ எடையை தூக்க முடிகிறது, முற்றிலும் ஆரோக்கியமாக இருக்கிறாள். வாசகர்கள் அனைவரையும், கவிர்தேவனின் (கபீர் பரமேஸ்வர்) ஆசிபெற்ற சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் இலவச தீட்சை பெற்று, குடும்ப நலன்பெற்று, முக்தியையும் சத்யலோகத்தையும் அடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*தங்கள் சேவகன் பக்தன் நாதுராம்*

*சாவ்லா கிராமம், தில்லி, செல்: **98119-57912***

## சாத்தியமில்லாததை சாத்தியமாக்கிய பரமேஸ்வர்

நான், பக்தர் சுரேந்தர் தாஸ், ஹரியானாவின் ரோத்தக் மாவட்டம், காந்தர கிராமத்தில் வசிப்பவன். 31 வயதாகும் நான் சிறுவயதில் இருந்தே பக்தியுடன் கோவிலுக்கு செல்வது, விரதம் இருப்பது, சிரார்த்தம் போன்றவை செய்து வந்தேன். ஆனாலும் உடல் சிக்கல்களும், அமைதியின்மையும் மாறாமல் இருந்தது. ஆனாலும், இறைவனின் நம்பிக்கையும், அடைய வேண்டுமென்ற ஆசையும், என்னை 1995 ஆம் வருடம் திரு. ஆசாராம் பாப்புவிடம் கொண்டுசென்றது. அவரிடமிருந்து தீட்சை பெற்று அவர் சொன்ன பக்தி மார்க்கத்தை தீவிரமாக பின்பற்றினேன். ஆனால் ஒரு பலனும் இல்லை, மாறாக துன்பங்கள் அதிகரித்துக்கொண்டே இருந்தன. பாப்பு ஜி சொன்னது போல், காலையிலும் மாலையிலும் 250 கிராம் பால் மட்டுமே குடித்துவிட்டு, மந்திரத்தில் எத்தனை எழுத்துக்கள் உள்ளதோ, அத்தனை லட்சத்திற்கு மந்திர ஜபம் செய்து, சமாதி அடையவேண்டும். இது ஒரு நாற்பது நாள் யாகம் ஆகும், இப்படி பதினான்கு முறை யாகங்களை செய்தேன்.

ஒருமுறை பாப்புஜி அவரது சத்சங்கத்தில், ஏழு நாட்களுக்கு உண்ணாமல் இருந்து, மந்திர ஜபம், சமாதி, பிரணாயாமம் செய்தால் இறைவனை அடையலாம் என்றார். இதை உண்மை என கருதி

அப்படியே செய்தேன். ஆனால் இறைவனுக்கு பதிலாக, பசியால் மரணம் நெருங்கியது, பிராணாயாமம் செய்ததால் மனநிலை பாதித்து, பைத்தியம் பிடித்தது போல் ஆகிவிட்டேன். அந்த நேரத்தில், பூரண குரு சந்த் ராம்பால் ஜி மகராஜின் அருள் கிடைத்தது. செப்டம்பர் 2000 இல், சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் தீட்சை பெற்றேன். தீட்சை எடுத்தவுடன், அணையும் விளக்கில் நெய் ஊற்றியது போல் இருந்தது, என் வாழ்க்கையில் அமைதி நிலவியது. பூரண குருவால் மட்டுமே பாவங்களை அளிக்க முடியும். இது என் வாழ்க்கையில் தெளிவாகத் தெரிந்தது, மே 2004 இல், மகாராஷ்டிராவின் அவுரங்காபாத்தில், சந்த் ராம்பால் ஜி மகாராஜின் சத்சங்கத்திற்காக கூடார (டென்ட்) சேவை செய்து கொண்டிருந்தபோது, நான் 25 அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டேன். அன்று பிரம்ம காலன் வேறு எதையோ செய்ய இருந்தான், ஆனால் எனது முதுகெலும்பு உடைந்து, உடலின் கீழ் பகுதி செயலிழந்துவிட்டது. உடனே சந்த் ராம்பால் ஜி மகராஜை நினைத்தேன், உடனே அவர் அருளால் இரண்டு கால்களும் மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்தன.

கரீப், கால் டரை கர்த்தார் சே, ஜெய் ஜெய் ஜகதீஷ் /
ஜௌரா ஜௌரி ஜாட்த்தி, பக் ரஜ் டாரே ஷீஷ். //

பிறகு நான் அவுரங்காபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு (பட்வர்தன் மருத்துவமனை) எடுத்து செல்லப்பட்டேன். அங்கு டாக்டர். டி.ஜி. பட்வர்தன் உடலைப் பரிசோதித்து, முதுகெலும்பு உடைந்து துண்டாகிவிட்டது என்று சொன்னார். டாக்டர் மீண்டும் மீண்டும் என் கால்களை தொட்டு பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்து, உங்கள் முதுகெலும்பு உடைந்து, அதில் ஒரு துண்டு தனியாக உடைந்திருக்கிறது, ஆனால் உங்கள் கால்கள் நன்றாக வேலை செய்கிறது, உங்கள் மீது இறைவனின் விசேஷ அருள் உள்ளது, ஏனென்றால், உங்கள் மருத்துவ அறிக்கையின்படி நீங்கள் பக்கவாதத்தில் இருந்திருக்க வேண்டும் என்று சொன்னார். மூன்று நாட்களுக்குப் பிறகு நான் வீடு திரும்பினேன். இங்கு ரோதக்கில், பிரபலமான எலும்பு மருத்துவர் சட்டாவிடம் சிகிச்சை எடுத்தேன். டாக்டர் சட்டாவும் என் அறிக்கையை பார்த்து ஆச்சரியமடைந்து, நீங்கள் எப்படி நடக்கிறீர்கள், உங்கள் ரிப்போர்ட்டின் படி உங்களுக்கு பக்கவாதம் இருந்திருக்க வேண்டும் என்று சொன்னார்.

டாக்டர். சட்டா மீண்டும் கலர் எக்ஸ்ரே செய்து, இதன் சிகிச்சை சாத்தியமில்லை, ஆனால் அறுவை சிகிச்சையால் எலும்பு மேலும் உடையாமல் இருக்கும் என்று கூறினார். எலும்புகளை வலுப்படுத்த மூன்று மாதம் வரை ஊசி செலுத்தினார். பிறகு டாக்டர், கண்டிப்பாக ஆப்ரேஷன் செய்ய வேண்டும், இல்லையேல் மீதி எலும்பும் உடைந்து போகலாம் என்றும், அறுவை சிகிச்சைக்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவாகும் என்றார். பின்னர் அதே நேரத்தில் டாக்டர், ரிப்போர்ட்டின்படி நீங்கள் மூன்று மாதங்களுக்குள் இறந்திருக்க வேண்டும், ஆனால் இன்று நீங்கள் இறைவனின் அருளால் உயிருடன் இருக்கிறீர்கள் என்றார். ஆபரேசனுக்கு பணம் இல்லாததால், வேறொரு டாக்டரிடம் சென்றேன். அவரும் என் ரிப்போர்ட்டைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, ஆப்ரேசன் தாமதமானால் எலும்பு மேலும் உடைந்து போகலாம் என்றார். ரிப்போர்ட்யின்படி உங்களால் அசையவே முடியாது, ஆனால் எப்படி நடக்கிறீர்கள் என்றார். கடைசியில் எனது குரு சந்த் ராம்பால் ஜி மகாராஜியிடமே சென்று வேண்டினேன். அப்போது அவர் என்மீது கருணை கொண்டு, என் தலையில் கை வைத்து சொன்னார், மகனே, பூரண நலமாகிவிடுவீர்கள், இன்று கபீர்

பரமேஸ்வரரின் சரணடியில் இல்லாதிருந்தால், துன்பப்பட்டு இறந்திருக்க வேண்டும். உங்களுக்கு மேற்கொண்டு ஆயுள் இல்லை. மீண்டும் ஒருமுறை மருத்துவரிடம் காட்டுங்கள் என்றார். குருஜியின் உத்தரவுப்படி, மறுநாளே மருத்துவரைப் பார்த்தேன், அவர் எனக்கு எக்ஸ்ரே எடுத்து பார்த்ததும், ஆச்சரியப்பட்டு உடைந்து பிரிந்த எலும்பு, எப்படி தானே மேலே நகர்ந்து இணைந்தது. உங்கள் எலும்பு மேல்நோக்கி நகர்ந்து இணைந்தது மருத்துவ வரலாற்றுக்கு அப்பாற்பட்டது, முடியாததைச் சாத்தியமாக்கும் ஏதோவொரு சக்தி இருப்பதை நானும் உணர்கிறேன் என்றார் டாக்டர். ஆபரேஷன் மூலமும் இது முடியாதது. அறுவைசிகிச்சையால், அந்த இடைவெளியை நிரப்பிருந்தாலும், பாரத்தை தூக்கும் வேலையை செய்திருந்தால் மீண்டும் எலும்பு நழுவி கட்டிலில் தவித்து இறந்திருப்பீர்கள். டாக்டரால் கூட புரிந்து கொள்ள முடியவில்லை. பூரண பிரம் கபீர் பரமேஸ்வரரின் ரூபத்தில் சந்த் ராம்பால் ஜி மகராஜ் அவர்கள் என் பாவங்களைப் போக்கி, மரணத்தை நீக்கி, எனக்கு புது வாழ்வு அளித்துள்ளார் என மருத்துவரிடம் கூறினேன். பரமேஸ்வர் கபீர் சாஹேப் கூறுகிறார்:–

"ஜோ மேரி பக்தி பிச்ஹோடி ஹோய், தோ ஹமரா நாம ந லெவே கோயி."

இன்று நான் நலமுடன் இருக்கிறேன், சத்குருவின் சரணடியில் சேவை ஆற்றி வருகிறேன். இன்று 50 கிலோ சுமையை என்னால் தூக்க முடிகிறது.

நமது குருவின் உண்மையான நோக்கம், ஆன்மாவை புனிதமாக்கி சத்யலோகத்திற்கு அழைத்துச் செல்வதுதான், இங்கு தேவைப்படும் அனைத்தையும் தனது பொக்கிஷத்திலிருந்து தருகிறார், அதனால் ஆத்மா பக்தி மார்க்கத்தில் தொடர்ந்து ஈடுபடும். எனவே, அனைவரும் நமது குருவின் சரணடியில் வந்து, உண்மையான பக்தி செய்து, நலன்பெறுவதோடு, முக்திக்கான பாதையையும் பெற வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். ! சத் சாகேப் !

சிறப்பு:– ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 161 மந்திரம் 2 இல், பூரண பரமாத்மா கூறியிருக்கிறார். சாஸ்திரப்படி வழிபடும் சாதகனே! என்னிடம் தஞ்சம் அடைந்து, சந்தேகமின்றி வழிபடுங்கள், நான் உனது நோயை தீர்த்து, உனது ஆயுளையும் 100 வருடங்களாக உயர்த்துவேன். மேற்கூறிய விஷயம் இறைவனின் சாமர்த்தியத்தை நிரூபிக்கிறது.

*பக்தர் சுரேந்திர தாஸ், செல்: 80597-09819*

## இறைவன் என்றால் இப்படி

நான், மகாவீர் சிங், ஸ்ரீ கேஹர் சிங்கின் மகன், ஹரியானா, ஜெஜ்ஜர் மாவட்டம், டரானா கிராமத்தில் வசிக்கிறேன். நான் ஒரு சிவபக்தன். என்னுடைய கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தில் சீழ் ஏற்பட்டது. என் சகோதரர் மகேந்திர சிங் என்னை (P.G.M.I.S) மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார், அதற்கு முன்பும் நிறைய செலவழிக்கப்பட்டது ஆனால் எந்த பலனும் இல்லை.

மருத்துவமனையில் அல்ட்ரா சவுண்ட் எடுத்த பிறகு மூன்று ஆபரேஷனுக்கு சொல்லிவிட்டார்கள். நான் பயந்துபோய் மறுத்து விட்டேன். என் நிலைமை மோசமடைந்து உணவு கூட சாப்பிட முடியாமல் இருந்தது. என் மூத்த சகோதரர் மகேந்திரர், சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் தீட்சை பெற்றுக்கொள் அவர் பூரண பரமாத்மாவின் அவதாரமாக வந்துள்ளார், அவர் கபீர் பரமேஸ்வர் பூரண பிரம் என கூறிக்கொண்டிருப்பார்.

சிவபெருமானுக்கு முன் உன்னுடைய கபீர் ஒன்றுமே இல்லை, கபீர் ஒரு கவி, அவர் கடவுள் இல்லை என்று நான் கூறுவதுண்டு. எனது சகோதரர் மகேந்திர சிங்க் உடைய குடும்பமும் சீரழிந்து போயிருந்தது. சந்த் ராம்பால் ஜி மகராஜின் சரணடியில் போன பிறகு நலமுடன் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். முந்தைய வழிபாடுகளையும் நிறுத்திவிட்டார்கள், பிறகும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்கள், நானும் இதை கவனித்தேன். ஆனால் சிவபெருமானை விட்டு யாரையும் ஏற்கவில்லை. என் சகோதரர் சொன்னார், எல்லோரும் அப்படித்தான் நினைக்கிறார்கள். பூரணபிரம் கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) அவர்களுக்கு முன்னால், பிரம்மா, விஷ்ணு, சிவன், பிரம் மற்றும் பரபிரம் ஆகியோர் சக்தி குறைந்தவர்கள். நாட்டின் பிரதம மந்திரி மற்றும் ஜனாதிபதிக்கு முன்னால், மாநில முதலமைச்சரின் சக்தி உள்ளது போலவே, பரமேஸ்வர் கபீர் ஜி மற்றும் சிவபெருமானுக்கும் உள்ள வித்தியாசம். இப்போது நீங்களே சிந்தியுங்கள். சந்த் ராம்பால் ஜி மகராஜ் அனைத்து புனித வேதங்களை ஆராய்ந்து, பக்தியின் சக்தி மூலம் இது உண்மை என்று கண்டறிந்தார். பின்னர் தனது ஜே. இ. வேலையை ராஜினாமா செய்து பக்தி மைதானத்துக்கு வந்தார். அவர் மகான்கள் மற்றும் மகரிஷி தயானந்த் போன்றவர்களை, அவர்கள் எழுதிய நூல்களில் இருந்து தோல்வி அடைய வைத்தார். நாளிதழ்களில் அனைவருக்கும் வெளிப்படையாக சவால் விடுத்துள்ளார். யாரும் பேச முடியவில்லை, ஏனென்றால் சந்த் ராம்பால் ஜி மகாராஜ் ஆதாரங்களுடன் வழிநடத்துகிறார், மற்றவர்கள் ஆதாரமற்ற கதைகளின் அடிப்படையில் வழிநடத்துகிறார்கள். சத்தியத்திற்கு முன் அசத்தியம் நிற்க முடியாது.

அண்ணனின் இந்த பேச்சைக் கேட்டு வெகுண்டு எழுந்தேன். ஆனால் மரியாதை கருதி பேசவில்லை. ஆனால் உண்மையில் கபீர் சாகேப் தான் பூரண பரமேஸ்வர் என்று இப்பொழுது தெரிகிறது. அன்று அண்ணன் மகேந்தரிடம் என்னை காப்பாற்றும்படி கேட்டேன். அவர் கரோந்த ஆசிரமத்திற்குச் சென்றால் நீ பிழைக்கலாம் என்றார். ஆபரேஷன் உடைகளை அணிந்து இருந்த நான், எழுந்து எனது ஆடைகளை அணிந்து, என் அண்ணன் மகேந்திரனிடம், நானும் தீட்சை எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். நாங்கள் P.G.I.M.S மருத்துவமனையிலிருந்து வாடகை டாக்ஸியில் சத்குரு ராம்பால் ஜி மகராஜியிடம் வந்தோம். பிறகு நான் தீட்சை எடுத்துக்கொண்டேன். அதன் பிறகு ஆசிரமத்தில் உணவு அருந்தினேன். பிறகு நான் மீண்டும் P.G.I.M.S யில் சென்று பரிசோதித்தேன். டாக்டர் வியந்து போனார், எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை, நான் குணமடைந்துவிட்டேன் என்றார். எனக்கு ஆசிரமத்தில் எந்த செலவும் இல்லை. மந்திர ஜபத்தின் கையேடு இலவசமாக கிடைத்தது. எனது முழு குடும்பமும் மற்ற தெய்வங்களையும் வழிபட்டனர், ஆனால் அவர்கள் தீட்சை பெற்ற பிறகு, அனைத்தையும் துறந்து, முன்பை விட மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள். இரவும் பகலும் சத்குரு ராம்பால் ஜி மகராஜைப் போற்றுகிறார்கள்.

சந்த் ராம்பால் ஜியின் முக்கிய குறிக்கோள், மந்திர தீட்சை கொடுத்து, பக்தி செய்ய வைத்து, காலனின் வலையிலிருந்து விடுவிப்பதாகும். சமூக சீர்திருத்தம் மற்றும் நன்மைகள் தானாக கிடைக்கும். சத் சாகேப்!

*பக்தர் மகாவீர் சிங்*

## குரு என்றால் இப்படி அல்லவா

நான் சசி பிரபா, ஜிந்த் மாவட்டம், டிகானாவில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளியின் முதல்வராக உள்ளேன். எனது வீட்டின் சண்டை மற்றும் மன உளைச்சல்களால் சுமார் 35 ஆண்டுகளாக நான் சிரமப்பட்டேன். கணவர் என்னை அடிப்பார், என் சம்பளத்தையும் பிடுங்கி அவரால் முடிந்த வரை கொடுமைப்படுத்துவார். 32 ஏக்கருக்கு சொந்தக்காரராக இருந்தும், நாய்களைப் போல நடத்துவார். எனது மற்றும் அவருடைய உறவினர்கள் அனைவரிடமும், சமூக பஞ்சாயத்தார் இடமும், உதவி கேட்டேன் எவரும் உதவவில்லை. சாதுக்கள் கஷ்டங்களை போக்குவார்கள் என நம்பி, ஆனந்த்பூர் (பினா) மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவரை எனது குருவாக ஆக்கினேன். ஆனால் வீட்டில் அதே தகராறு தொடர்ந்தது. இறைவனின் அருளால் சொந்த முயற்சியால் பெண்களை படிக்கவைத்தேன், ஆனால் திருமணம் நடத்தமுடியவில்லை. கணவர் மாப்பிள்ளை தேடுவதை நிறுத்திவிட்டார். இந்த சிக்கலை போக்க, நான் பாலாஜிக்கு போனேன், பிறகு பகட் (ராஜஸ்தான்), தௌலி தார் இமாச்சலப் பிரதேசம் சென்றேன், பீர் ஃபகிர், குருத்வாராவை வேண்டினேன். கடைசியில் வீட்டில் தனிமையில் கடவுளே இல்லை என்று அழுவேன். கொடுமையையும் அநீதியையும் தொடர்ந்து தாங்கிக்கொண்டு பைத்தியமானேன்.

ஒரு நாள் இந்த துக்கப்பட்ட ஆன்மா, துக்கங்களை நீக்கும் பரமாத்மாவிடம் சென்றடைந்தது. எனது பக்கத்து வீட்டில் 3 நாள் பாட் அதாவது பஜனை (கபீர் தாஸ் ஜியின் புனித உரைகளின் தொடர் உச்சரிப்பு) நடைபெற்றது. பெண் தோழி என்னை பிரசாதம் வாங்க அழைத்தாள். அங்கு போன பிறகு, என்னிடம் பாட் (பஜனை) பற்றி சொன்னாள், இது பரமாத்மாவின் உண்மையான உரைகளின் உச்சரிப்பு, இதன்மூலம் துன்பங்கள் நீங்கும், ஆனால் இந்த பாட் சந்த் ராம்பால் ஜியின் அனுமதியுடன் செய்தால் மட்டுமே பயனளிக்கும், இல்லையெனில் பலன் அளிக்காது என்றாள்.

உதாரணமாக, ராஜா பரீக்ஷித்துக்கு கீதையை கூற எந்த முனிவரும் துணியவில்லை. ஏனெனில் அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அதனால்தான் சொர்க்கத்திலிருந்து சுக்தேவ் ரிஷியை வரவழைத்து, மன்னன் பரீக்ஷித்திற்கு தீட்சை அளித்து (அவரை சீடராக்கி) ஏழு நாட்கள் கீதையை விளக்கினார். அப்போது ராஜாவிற்கு விமோசனம் கிடைத்தது. இன்றைய காலகட்டத்தில் உண்மையான ஞானமும், உண்மையான வழிபாடும் யாருக்கும் தெரியாது. இன்றோ, மெய்ஞானம் இல்லாத யார் யாரோ உபதேசம் செய்கிறார்கள். பக்தர்களுக்கு எந்த பலனும் கிடைப்பதில்லை.

அந்த சகோதரி, சந்த் ராம்பால் ஜி மஹாராஜிடமிருந்து தான் கேட்ட வேதத்தின் ஆழமான ரகசியங்களை விவரித்தார். நான் பள்ளி முதல்வராக இருந்தாலும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது, கடவுள் என் கையைப் பிடிப்பது போல் உணர்ந்தேன். எங்கள் குரு துன்பங்களை நீக்குகிறார் என்று அந்த சகோதரி கூறினார். நானும் உங்கள் குருவை தரிசிக்கலாமா என்று கேட்டேன், இறைவனின் அருளால், மறுநாளே சத்குரு ராம்பால் ஜி மகராஜ் ஒரு சாதாரண நாற்காலியில் அமர்ந்திருப்பதைக் கண்டேன். எனக்கு உண்மையான குருவை பற்றி தெரியாது. மிக உயர்ந்தவர்கள் எளிமையாகத்தான் இருப்பார்கள். பூமியில் தாழ்ந்த நிலையில் உள்ள நாம் பரமாத்மாவின் மகிமையை எவ்வாறு புரிவது. குருஜி என் துக்கத்தைக் கேட்டு தீட்சை எடுத்து கடவுளை வழிபடுங்கள் எல்லாம் சரியாகிவிடும் என்றார். மறு

நாளே எனக்கு தீட்சை அளித்தார். ஒரு மாதத்திற்குள் நிகழ்ந்த மாற்றங்கள் நம்ப முடியாததாக இருந்தன. என் கணவரே என் பெண்ணிற்கு மாப்பிள்ளை பார்த்து திருமணம் நடத்தி வைத்தார். சிறிது நாட்களுக்குப் பின்னர் என் பெரிய மகளின் வயிற்றில் நீர்க்கட்டி வந்தது, அவளுக்கு குழந்தையும் இல்லை என்ற கவலையும் இருந்தது. நான் தாஜ்பூரில் (டெல்லி) சத்குருவின் சத்சங்கத்தில் சேவை செய்யச் சென்றேன். அங்கிருந்து மருத்துவமனையில் உள்ள மகளிடம் சென்றேன். ஆபரேஷன் நன்றாக நடந்தது. புற்று நோய் சந்தேகம் கூட நீங்கியது. பிறகு என் மகள் கர்ப்பமானாள். இதற்கிடையில் எனது மருமகன் மீது டிராக்டர் பைக் விபத்துக்குள்ளான செய்தி வந்தது. அப்போது என் மதிப்பிற்குரிய குருவை தவிர வேறு எதையும் என்னால் நினைக்கமுடியவில்லை. ஒன்றரை மாதத்தில் என் மருமகன் குணமாகி வீடு திரும்பினார். என் குருவின் மகிமையை எவ்வளவு சொன்னாலும் போதாது.

தீட்சை எடுத்த நாளிலிருந்து அந்த போலி சாதுக்களின் புகைப்படங்களை அகற்றிவிட்டேன். அன்று முதல் என் வாழ்க்கை சரியான பாதைக்கு வந்தது. 23 செப்டம்பர் 2003 அன்று, அதிகாலை 4-5 மணியளவில், விழித்த கண்களால் ஒரு கொடூரமான உருவத்தை கண்டேன். தீட்சை எடுக்காமல் இருந்திருந்தால் என் இருதய துடிப்பு நின்றிருக்கும், அவ்வளவு பயங்கரமான உருவம் அது. நான் பயப்படவில்லை, ஆனால் அது எமனின் தூதர் என்று புரிந்துவிட்டது. அடுத்த நாள் நான் குருஜிக்கு தெரிவித்தேன், அன்றுடன் எனது ஆயுள் முடிந்ததை அவர் தெளிவுபடுத்தினார். இப்போது நான் எனது குருவின் அருளால் மட்டுமே வாழ்கிறேன். அவர் அருளால் கடந்த ஆண்டு இரண்டாவது மகளுக்கு என்ஜினீயர் பையனுடன் திருமணம் நடந்தது. என் வேலையும் இரண்டு முறை பறிபோவதாக இருந்தது. பரமாத்மாவின் அருளால், அதற்கு பதிலாக இரண்டு பதவி உயர்வுகள் கிடைத்தன. சந்த் ராம்பால் ஜி மகராஜ் கூறுவது அரசனும் இறைவனின் பிள்ளைதான், அவர்களிலும் இறை சக்தி செயல்படுகிறது. தன் பக்தனுக்காக பரமேஸ்வர் அரசன் மூலமாக எல்லா மாற்றங்களையும் ஏற்படுத்துகிறான். என்னைப்போலவே சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் யார் அருள் பெற்றாலும் துன்பம் நீங்கும். பரமாத்மா ஆதரவற்றவர்களுக்கு ஆதரவளிக்கிறார். இந்த சில வருடங்களில் எனக்கு நடந்தவை இறைவனால் மட்டுமே செய்ய முடியும். குருஜியின் மகிமையை விவரிக்க வார்த்தைகள் இல்லை, அவர் கபீர் சாகேப்ஜியின் அவதாரம். பரமாத்மாவை காண விரும்புவோர், கரொந்தாவுக்கு வரவும். இந்த சிறியவளை எப்படி உயர்த்தினாய்? உமது மகிமையை பாட வார்த்தைகள் இல்லை. வாசகர்களை, என் வார்த்தைகளை நினைவில் கொண்டு பயன் பெறுங்கள்.

*ஒரு ஈனப்பிறவி, பகத்மதி சசி, செல்: 78277-41248*

## இறைவனின் அருளால் மகனின் உயிர் காப்பாற்றப்பட்டது

நான் முகமது சிராஜ் கான், பீகார், கயா மாவட்டத்தைச் சேர்ந்தவன். இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்ததால், என் முன்னோர்கள் செய்த வழிபாடுகள், நமாஜ் படிப்பது, பக்ரீத், முஹரம் கொண்டாடுவது போன்றவை செய்து வந்தேன். சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் வருவதற்க்கு முன்பு, முஸ்லீம் மதத்தின்படி எனக்கு இரண்டு குருக்கள் (பிர்) இருந்தன. அவரது வழிகாட்டின்படி அனைத்தையும் செய்து வந்தேன்.

எங்கள் குருக்களின் உபதேசங்கள் எங்களுக்குத் தவறாகத் தோன்ற

ஆரம்பித்தன. பின்னர் நாங்கள் சந்த் ராம்பால் ஜி மகராஜ் ஜியின் ஒரு சீடரைச் சந்தித்தோம், அவருடன் ஒரு மதத்திற்கு ஆன்மீக விவாதங்கள் நடந்துகொண்டே இருந்தது. அவர் அசூர் நிகண்தன் ரமைனி எனும் பிற்பகல் ஆரத்தி மற்றும் மாலை சந்தியா ஆரத்தி பாடும்பொழுது நானும் கேட்பேன். அந்த பக்தர் சந்த் ராம்பால் ஜி மகாராஜிக்கு ஜெய் சொல்லும்பொழுது, நானும் அவருடன் சேர்ந்து ஜெய் சொல்வேன். சந்த் ராம்பால் ஜி மகராஜிக்கு ஜெய், கபீர் சாகேப் ஜிக்கு ஜெய் என்று கோஷமிடும்போது, மனதிற்கு பலம் வருவதை உள்ளிருந்து உணர்ந்தேன்.

ஒரு நாள் பணியில் இருந்தபோது, கீழே கிடந்த கபீர் பந்தி புத்தகம் ஒன்று கண்டேன். அதை படிக்க ஆரம்பித்தபோது, சந்த் ராம்பால் ஜி மகராஜின் சீடர் சொன்னார், சத் சாகேப் பாய்! நீங்கள் எந்த புத்தகம் படிக்கிறீர்கள்? ஞான கங்கா புத்தகத்தை தருகிறேன் அதை படியுங்கள், அதை சாதாரண புத்தகமாக கருதாதீர்கள். அல்லாஹ் சந்த் ராம்பால் ஜி ரூபத்தில் பூமிக்கு வந்துள்ளார். அவர் சொல்வது சரிதான் என்று உள்மனதில் உணர்ந்தேன். வீட்டில் அந்த புத்தகத்தை கொஞ்சம் கொஞ்சமாக படிக்க ஆரம்பித்தேன். சரியாகப் படிக்கத் தெரியாவிட்டாலும், புத்தகத்தை பார்த்து கொண்டிருந்தேன், என் மனைவியும் குழந்தைகளும் என்னைப் பார்த்து, அப்பா! நீங்கள் எப்போதும் படிப்பதில்லை, இன்று புத்தகத்தைப் படிக்கிறீர்கள் என்று சொல்லி சிரித்தார்கள். முதலில் நான் பிரபஞ்சத்தின் படைப்பைப் படித்தேன், படித்ததும், இப்படிப்பட்ட அமுத ஞானம் எங்கு மறைந்திருந்தது என்று எண்ணி நான் உள்ளுக்குள் அழ ஆரம்பித்தேன். ஓரிரு நாட்களுக்குப் பிறகு, திடீரென என் குழந்தையின் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது. புத்தகத்தை கொடுக்கும்போது, சந்த் ராம்பால் ஜி மகராஜின் பக்தர், உங்களுக்கு ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால், நீங்கள் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் சாஷ்டாங்கமாக வணங்கி பிரார்த்தனை செய்யுங்கள், உங்களின் பிரச்சனை தீரும் என்று சொன்னார். உடனே நான் ஞான கங்கா புத்தகத்தில் உள்ள குருஜியின் புகைப்படத்தை விழுந்து வணங்கினேன், சில நிமிடங்களில் என் குழந்தை பூரண குணமடைந்தது. நான் ஆச்சரியப்பட்டேன், என் குழந்தையை 10 நிமிடங்களில் குணப்படுத்திவிட்டார், இவர் தான் எங்கள் அல்லாஹ் பரமாத்மா என்று முழு நம்பிக்கை வந்துவிட்டது. அதே சமயம், சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் தீட்சை எடுக்க முடிவு செய்தோம். அந்த பக்தர் சந்த் ராம்பால் ஜி மகராஜின் சொற்பொழிவின் மெமரி கார்டு கொடுத்தார், அனைத்தையும் கேட்டு, சில நாட்களுக்குப் பிறகு சந்த் ராம்பால் ஜி மகராஜின் பர்வாலா ஆசிரமத்திற்குச் சென்று தீட்சை பெற்றோம்.

சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் தீட்சை எடுத்த பிறகு, பல நன்மைகளைப் பெற்றோம். என் மனைவி பைல்ஸ் நோயால் அவதிப்பட்டதால், அதையும் பரமாத்மா குணப்படுத்தினார். என்னுடைய தீட்சைக்குப் பிறகு, என் மனைவி என் மீது கோபமடைந்து ரயில் தண்டவாளத்தில் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தாள். நான் தினமும் வழிபடும் இடத்தில் பரமாத்மாவை வணங்கி கடவுளே! இந்த தாஸனின் வாழ்க்கை உங்கள் கையில், சிறு சிறு குழந்தைகள் உள்ளனர், மனைவிக்கு ஏதாவது நேர்ந்தால், மானம் போய்விடும் என்று பிரார்த்தனை செய்தேன். சிறிது நேரம் கழித்து, என் மனைவி பத்திரமாக திரும்பி வந்து மன்னிப்பு கேட்டு அழ ஆரம்பித்தாள். நான் பரமாத்மாவிடம் மன்னிப்பு கேள் என்றேன். இவ்வாறே பரமாத்மா என் மனைவிக்கு ஞானத்தைக் கொடுத்து அவள் உயிரைக் காப்பாற்றினார். எனது ஒரு

மகன் தினமும் குருவை வணங்கும் ஸ்தலத்தின் அருகில் தூங்குவான். காலையில் என் மகள் சுத்தம் செய்யும்போது, அவன் தூங்கும் இடத்தில் குருஜியின் புகைப்படத்திற்கு முன் ஒரு பாம்பு இறந்து கிடந்தது. பரமாத்மா என் மகனையும் காப்பாற்றினார். என் மூத்த மகனுக்கு சிறுநீரகத்தில் கல் இருந்தது. மருத்துவர்கள் அல்ட்ரா சவுண்ட் செய்து அறுவை சிகிச்சை மூலம் மட்டுமே குணப்படுத்த முடியும் என்று சொல்லிவிட்டார். ஆனால் சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் பிரார்த்தனை செய்தபோது, அறுவை சிகிச்சையின்றி கல் பிரச்சனை குணமாகிவிட்டது.

தீட்சை எடுப்பதற்கு முன்பு, நான் போதைக்கு அடிமையாக இருந்தேன். மது, கஞ்சா, பாங், பீடி- சிகரெட் அனைத்தையும் அருந்தி குடும்பத்தில் எல்லோரையும் கொடுமைப் படுத்தி கொண்டிருந்தேன். ஆனால், சந்த் ராம்பால் ஜி மகாராஜிடமிருந்து நாம்-தீட்சை பெற்ற பிறகு என்னை போதையிலிருந்து விடுவித்து, எனக்கும் என் குடும்பத்திற்கும் மிகுந்த நன்மைகளை கொடுத்தார். எங்கள் குருஜி சந்த் ராம்பால் ஜி மகராஜ் அவர்கள் எங்களை முஸ்லீம்களில் இருந்து இந்துக்களாக மாற்றவில்லை, நமது மத சாஸ்திரங்களின்படி உண்மையான வழிபாட்டு முறையைக் கொடுத்து நம்மை பக்தி செய்யவைக்கிறார்.

நீங்களும் அருகில் உள்ள சந்த் ராம்பால் ஜி மகராஜின் தீட்சை மையத்திற்கு சென்று, நாம் தீட்சை எடுத்து, சரியான பக்தி முறையைப் பெற்று முக்திபெற அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

*முகமது சிராஜ் கான், கயா (பீகார்),*
*தொடர்பு எண்:- **70338-33375***

## பாவங்களை பரமேஸ்வரர் மட்டுமே அழிக்க முடியும்

*பக்தர் ராம்குமார், டாக்காவின்* **(Ex.Headmaster M.A.B.ED.)** *அனுபவங்கள்.*

நான் ராம்குமார் டாக்கா ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் டெல்லி, ரோத்தக் மாவட்டம், சுந்தனா கிராமம். தற்போதைய முகவரி – ஆசாத் நகர், ரோத்தக்கில் வசிக்கிறேன். என் மனைவியும், இரு மகன்களும் 1996 ஆம் ஆண்டு முதல் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டனர். இந்த நோயால் தொண்டை அடைப்பு மற்றும் மூச்சுத்தினறல் ஏற்படும். உடனே மருத்துவரை அழைத்து வருவோம், அவர் மயக்க ஊசி போடுவார். அதனால் இருவரும் வேலைக்கு செல்ல முடியவில்லை. சில சமயங்களில் மருத்துவர் இரவில் இருமுறை கூட வர வேண்டியிருந்தது. யாருக்காவது சந்தேகம் இருந்தால், ரோத்தக்கில் உள்ள இரட்டை கேட் அருகில் டாக்டர் சச்தேவாவின் கிளினிக் உள்ளது, அவரிடம் மாஸ்டரின் வீட்டின் நிலை என்ன என்று கேட்கலாம்.

யார் எங்கு சொன்னாலும் அங்கு ஓடினேன், உ.பி.யில் கராணா, சாம்லி மற்றும் கேக்டா சென்றேன், ராஜஸ்தானில் உள்ள பாலாஜிக்கு பல முறையும், காட்டுஷியாம் மற்றும் பல மந்திரவாதிகளிடமும் பலமுறையும் ஹரியானாவின் பல இடங்களுக்கு சென்றேன். ஆனால் எந்த பலனும் கிடைக்கவில்லை கரேலாவுக்கு அருகில் கேடா காஞ்சனி, கோகானா, சம்சனா, சிகந்தர்பூர், போன்ற பல இடங்களுக்குச் சென்று சுமார் மூன்று லட்சம் ரூபாய் வரை செலவழித்தும் பலனில்லை.

நான் நொந்து போய்விட்டேன், என் குடும்பமே சிதைந்துவிட்டது. என் மனைவி என்னிடம், என் வாழ்க்கை முடியப் போகிறது, மகேந்திரனின்

மகன் போலீஸ்காரர் பக்தரான சுபாஷ் கூறிய சந்த் ராம்பால் ஜி இடம் நாம் தீட்சை பெற்று பாக்கலாம் என்றாள். முன்பு நான் எதையும் நம்புவதில்லை, நான்தான் உன் குரு, நான் M.A.B.ED. என்னைவிட பெரிய குரு யார்? என்று கூறிக் கொண்டிருந்தேன். ஆனால் சூழ்நிலையின் கட்டாயத்தால், தீட்சை எடுத்துக்கொள்ள அனுமதித்தேன், ஏனென்றால், அப்போது என் மனைவியின் எடை 80ல் இருந்து 50 கிலோவாகக் குறைந்துவிட்டது. அவளால் எழுந்து உட்காரவோ நடக்கவோ முடியவில்லை. நீ பாதி இறந்துவிட்டாய், உன் ஆசையை நிறைவேற்றிக்கொள், தீட்சை எடுத்துக்கொள் நான் தடுக்கவில்லை என்று சொன்னேன். ஏனென்றால், என் அண்ணன் மகன் சுபாஷ் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வந்து, சந்த் ராம்பால் ஜியிடம் தீட்சை எடுக்கும்படி என் மனைவியை வற்புறுத்துவார். நான், “நாங்க எந்த டாக்டரையும் விட்டு வைக்கவில்லை, பாலாஜியையும், தாந்திரிகர்களையும் பார்த்துவிட்டோம், உங்கள் குருவிடம் என்ன இருக்க போகிறது ?” என்று சொல்லிக்கொண்டிருப்பேன்.

எனது குடும்பத்தினரை ஆசிரமத்திற்கு அனுப்ப எனக்கு பிடிக்கவில்லை. ஆனால் வேறு வழின்றி மனைவியை தீட்சை எடுக்க அனுப்பினேன். ஜனவரி 16, 2003 அன்று அவள் தீட்சை எடுத்து, “கெஹ்ரி நசர் கீதா மே (கீதையில் ஒரு பார்வை)” என்ற புத்தகத்தைக் கொண்டு வந்தாள். ஒரு மாதத்தில், அணையும் தீபத்தில் எண்ணெய் ஊற்றியது போல் பிரகாசம் ஆனது, ஒவ்வொரு மாதமும் மூன்று கிலோ எடை அதிகரிக்கத் தொடங்கியது. என் மனைவி தீட்சை எடுத்த பிறகு, என் மூத்த மகன் நன்றாக தூங்க ஆரம்பித்தான், பிறகு அவன் மனைவியும் தீட்சை எடுத்தாள். பிறகு நான் “கஹேரி நசர் கீதா மே” புத்தகத்தைப் படித்தேன், இப்படிப்பட்ட ஞானத்தை இதுவரை பார்த்ததும் இல்லை கேட்டதுமில்லை. மேலும் ஏப்ரல் 2003 இல் நானும் தீட்சை எடுத்தேன். இன்று என் வீட்டில் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவரும் தீட்சை எடுத்து பக்தி செய்கின்றன. முன்னர் வீட்டில் அமைதியின்மை, வேலையில் சிக்கல்கள், அடிக்கடி மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைக்கு ஓடிக்கொண்டிருந்தோம். இன்று வீடு சொர்க்கமாகிவிட்டது.

ஒரு மாதத்திற்கு முன்பு, பரமேஸ்வர் கபீர் சாகேப் ஜி கனவில் வந்து, எனக்கு ஒரு ப்ளாட் பதிவு செய்து சென்றார். பின்னர் குழுக்கள் நடந்தபோது, கனவில் கபீர் சாகேப் பதிவு செய்த அதே எண் கொண்ட ப்ளாட் கிடைத்தது. எங்களைப் போல் துக்கம் அடைந்தவர்கள் எவருமில்லை. சந்த் ராம்பால் ஜி உபதேசம் பெற்ற பிறகு மிகக்குறுகிய காலத்தில் நாங்கள் நலம் பெற்று மகிழ்ச்சி அடைந்தோம்.

ஒரு நாள், என் வீட்டில் ஒரு பூதம்–ஆவி தோன்றி, நான் உங்கள் ஆசிரமத்திற்குச் சென்று எல்லாவற்றையும் பார்த்து இருக்கிறேன். ஆனால் அந்த குரு அமர்ந்திருக்கும் அறைக்கு செல்வதில்லை, ஏனென்றால் அங்கு சென்றால் எனக்கு அடி விழும் என்று எனக்கு தெரியும், அதனால் மீண்டும் வெளியில் வந்துவிடுவேன் என்று கூறியது. மேலும் நீங்கள் முன்பு தாந்திரிகளிடமும், பாலாஜியிடமும் சென்றபோது, நான் உள்ளே வரவில்லை வெளியில் இருந்தேன். என்னை யாரும் பிடிக்க முடியாது. உங்களையும் உங்கள் மகளின் குடும்பத்தை நாசம் செய்ய வேண்டும் என்று நான் மந்திரவாதியால் விடுவிக்கப்பட்டவன். நீங்கள் எங்கு ஓடினாலும்,

அனைவரையும் அழிக்க வேண்டும் என்று நான் விடுவிக்கப்பட்டேன்.

சில நாட்களுக்குப் பிறகு, மீண்டும் அந்த ஆவி என் வீட்டில் தோன்றியது. எங்கே உன் குரு ராம்பால்? எங்கே உன் எஜமான் கபீர் ? என்று கத்த ஆரம்பித்தது. தோன்றும்போது மனிதனைப் போலவே பேசுவான். அப்போது, என் மனைவி பூஜை அறைக்கு சென்று சாஷ்டாங்கமாக குருவை வணங்கினாள், உடனே, அந்த ஜின்னுக்கு அடி விழ தொடங்கியது, அது, நான் வீட்டையே இடித்துவிடுவேன் என்று கத்தியது. பிறகு நல்ல அடி விழுந்ததும், ஐயோ இது சுவர் அல்ல இரும்பு கரங்கள், இந்த ராம்பால் ஜி எஜமான் எங்கிருந்து வந்துவிட்டார் என கத்தி அலறியது, அவர் சத்சங்கம் செய்ய பர்வாலாவுக்குச் சென்றுவிட்டார் இவர் இங்கு இல்லாததால் நான் வந்துவிட்டேன் (அன்று அவர் ஹிசார் மாவட்டத்தில் பர்வாலாவுக்கு சத்சங்கம் செய்யச் சென்றார்).

பிறகு அந்த ஆவி, நான் உன்னைப் பலிகடா ஆக்க வந்தேன், ஆனால் நானே பலி ஆகிவிட்டேன், என்னை நரகத்தில் போடுவார்கள், நான் போய்விடுகிறேன், என்னை விட்டு விடச்சொல்லுங்கள் என்று அலறியது. கரோந்தா ஆசிரமத்தில் அமர்ந்திருக்கும் சந்த் ராம்பால் ஜி மகாராஜை சாதாரண மனிதராக எண்ண வேண்டாம். பூரண பரமாத்மாவே வந்துள்ளார், அவர் அடைக்கலத்தை விடவேண்டாம், இல்லையெனில் நீங்கள் நாசமாகிவிடுவீர்கள் என்று அந்த பூதம் சொன்னது. இதேபோல், கெடா கச்சினியின் பண்டிதரும் சொன்னார்.

நான் கேடா காஞ்சனிக்கு சென்றபோது, அந்த பண்டிதர், ஒருவர் பின் ஒருவராக உங்கள் குடும்பம் அழிந்துவிடும் என்று கூறினார். நான் நம்பவில்லை. என் சகோதரனின் மகள்களை சாகாபூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளனர், அந்த பண்டிதரும் அதே சாகாபுரை சேர்ந்தவர். அந்த பண்டிதர் எங்கள் சம்மந்தியிடம், ராம்குமார் குடும்பத்திற்கு பயங்கரமான ஆபத்து இருப்பதாகவும், மொத்த குடும்பமும் அழிந்துவிடும், அவரை அழைத்து வாருங்கள் என்றார். அப்போது எங்கள் சம்மந்தி அவர் மகனை அனுப்பி விஷயத்தை சொல்லி எங்களை அழைத்து சென்றார். எங்களை அழைப்பது எளிதாக இருந்தது, ஆனால் சிகிச்சை மிகவும் கடினமாகிவிட்டது. அந்த பண்டிதரால் பூதங்களை கட்டுப்படுத்த முடியவில்லை. செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில், இரவில் ஐந்து பூதங்கள் வரும். அவைகளை பிடித்து குளத்தில் விட்டுவிடுவார். இப்படி நான்கு ஆண்டுகள் செய்த பின்னர் பண்டிதர் முடியவில்லை என்றார்.

நான் போத்தவாலாவில் ஒரு பேயோட்டுபவரை சந்தித்தேன். உன் பிரச்சனை எனக்கு தெரியும், நான் நீக்கிடுவேன் என்றார். அவரும் பலமுறை எங்களை பாலாஜிக்கு அழைத்துச் சென்றார், அந்த “ஆவி” இந்த பேயோட்டியின் கட்டுப்பாட்டில் வரவில்லை. செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் வரும் ஐந்து ஆவிகள் மிகவும் தொந்தரவு செய்ததால், அவரும் கையை விரித்துவிட்டார். ஏனென்றால், ஆவிகளும் பூதங்களும் வரும்போது, பண்டிதர் என்னையும் இரவு 9 மணி முதல் 2 மணி வரை, கையில் நெருப்பை வைத்துக்கொண்டு, சொம்பில் நீர் மற்றும் தடியுடன் இருக்க வேண்டும் என்றார். இப்படி 1996 முதல் 2002 வரை நடந்தது. போத்தவாலாவிடம் அந்த ஆவி வந்தபோது, ஒரு கடிதம் வந்தது. அதில் பேய்யோட்டியை, விலகிக்கொள் இல்லையென்றால் உன்னையும்

அழித்திடுவேன் என்றது. அவரும் பயத்தில் கையை விரித்துவிட்டார். நான் பகலில் டெல்லியில் வேலை பார்த்து, இரவில் டாக்டர் அழைப்பதில் காவல் காத்தேன். பணமும் பல லட்சம் செலவிடப்பட்டது.

என் மனைவிக்கு தைராய்டு இருந்தது. ஜனவரி 2003 இல், டாக்டர் ஓ.பி. குப்தா டெல்லி, திமார்பூரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்க சொன்னார். ஆனால் நான் ரோத்தக்கில் டாக்டர். சுக் என்ற ஸ்பெஷலிஸ்ட் இடம் காட்டினேன். அவர் வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிட சொன்னார். தற்போது 2003-ல் தீட்சை எடுத்த பிறகு தைராய்டு குணமடைந்துவிட்டது. பிறகு மீண்டும் பரிசோதித்த டாக்டர் சுக் இது எப்படி நடந்தது என்று ஆச்சரியமடைந்தார், நான் நடந்ததை கூறினேன்.

இப்போது கபீர் ஜியால் என் மனைவி மற்றும் மகன்களின் நோய் குணமடைந்துவிட்டது. சுரேந்தர் குமார் மற்றும் மனோஜ் குமார் இரு மகன்களும் ஹரியானா காவல்துறையில் பணிபுரிகின்றனர். அவர்கள் இருவரையும் பூதங்கள் பலமுறை தாக்கியது, தீட்சை எடுத்திருந்ததால், கபீர் சாஹிப் அவர்களைக் காப்பாற்றினார்.

தத்துவதரிசி ஜகத்குரு சந்த் ராம்பால் ஜி மகராஜ் நமக்காகவே வந்துள்ளார், ஒரு குடும்பத்தில் இரு மகன்கள் மற்றும் மனைவி எல்லோருக்கும் ஆவி பிடித்திருந்தால், அந்த வீட்டின் நிலை எப்படி இருக்கும், அவர்கள் வாழ்க்கை எப்படி இருக்கும்? சந்த் ராம்பால் ஜி மகராஜ் பற்றி அறியாதவர்கள் இருளில் உள்ளனர். ஏனென்றால், படிப்பதற்கும் சிந்திக்கவும் இறைவன் அறிவை தந்துள்ளான், சிந்தியுங்கள் உண்மையை உணருங்கள். எங்கள் குடும்பம் சீரழிந்து இருந்தது. என் மகன்களும் மனைவியும் குணமடைந்த பிறகுதான் நான் சத்குரு ராம்பால் ஜியிடம் சரணடைந்தேன். என் உடல், பொருள், ஆவி, அனைத்தும் அவர்களுக்கு அர்ப்பணம்.

என் மகளும் மருமகனும் தீட்சை எடுத்தார்கள். மகளின் வீடு சொர்க்கமாகிவிட்டது. மருமகனும் மது பழக்கத்தை விட்டுவிட்டார். என் மகளுக்கு பிரமோஷன், மனை, வீடு போன்றவை சில நாட்களிலேயே கிடைத்து அனைவரும் மகிழ்கின்றனர்.

2003 இல் சத்குரு ராம்பால் ஜி மகராஜ், மலை போல் குவிந்திருந்த எங்களது பாவங்களை சத்னாம் என்ற மந்திர நெருப்பால் எரித்து அழித்துவிட்டார். கயிறு, தாயத்துக்கள், சாம்பல் எதுவுமே இல்லாமல், வெறும் தீட்சை அளித்த மந்திர ஜபத்தால் அனைத்து கஷ்டங்களும் நீங்கிவிட்டது. தீட்சை அளிப்பது எல்லா பந்தங்களிலிருந்தும் விடுபட்டு முக்தி அடைந்து சத்யலோகத்திற்கு அழைத்து செல்வதற்கு. வியாதிகள் அனைத்தும் கவிர்தேவின் அருளால் தானாக போய்விடுகிறது. இது நடக்கவில்லை என்றால், பக்தியின் மீது நம்பிக்கை இழந்துவிடும். இப்போது நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். யார் என்ன செய்தாலும், கபீர் சாகேப் ஜியின் ஆன்மாக்களுக்கு எதுவும் ஆகாது. முன்பு நானும் இதை மூடநம்பிக்கை என்று நினைத்தேன். ஆனால் டாக்டரிடம் அலைந்து, அதிக பணம் செலவழித்த பிறகு, பூதங்கள் உண்மை என்று உணர்ந்தேன். இந்த விஷயங்கள் உண்மையானவை. ஏனென்றால் பின்னோக்கிப் பார்த்தால் நான் என் வீட்டை இழந்திருப்பேன். எனவே, அனைத்து துன்பங்களிலிருந்து விடுபட, உண்மையான பக்தியை பெற சந்த் ராம்பால் ஜி மகராஜிடம்

இலவச தீட்சை பெற்று, வாழ்வில் பயனடையுமாறு வாசகர்களை கேட்டுக் கொள்கிறேன்.

*தலைமை ஆசிரியர் ராம்குமார்* **(M.A.B.ED.)**

*தொலைபேசி என். 86848-69051*

மேலே குறிப்பிட்ட பக்தர்களின் அனுபவங்களை படித்திருப்பீர்கள். இப்படி மற்றவர்கள் லட்சக்கணக்கான பக்தர்கள் உள்ளனர். ஆனால் இடப்பற்றாக்குறை காரணமாக சிலவற்றை மட்டுமே கொடுக்க முடிந்தது. எல்லா பக்தர்களின் அனுபவங்களை எழுத ஆரம்பித்தால் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அச்சிடப்படும். எனவே, அறிவாளிகளுக்கு குறிப்புகளே போதுமானது.

பக்தியில் வேறுபாடு: பல்வேறு விதமான வழிபாடுகளில் நிறைய வேறுபாடுகள் உள்ளன. எந்த தெய்வத்தை வழிபட்டாலும் அதன் பலன் நிச்சயமாக கிடைக்கும், ஆனால் முக்தி பெற முடியாது, பாவங்களை அனுபவிக்க மீண்டும் மீண்டும் பல பிறவி எடுக்க வேண்டியிருக்கும். பூரண குருவிடம் தீட்சை பெற்று பூரண பரமாத்மாவின் வழிபாடு செய்தால் மட்டுமே முக்தி சாத்தியமாகும்.

யே சன்சார் சமஜ்தா நாஹின், கஹந்தா ஷ்யாம் துபஹரே நூ /
கரிப்தாஸ் யே வக்த் ஜாத் ஹை, ரோவோகே இஸ் பஹரே நூ /

*****

# கபீர் சாகேப் ஜியுடன் காலனின் பேச்சு வார்த்தை

பரமேஸ்வர் அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்து தனது சத்யலோகத்தில் ஓய்வெடுத்தார். அதன் பிறகு, காலனின் பிரபஞ்சத்தில் நாம் நமது கர்மவினைகளையும், துன்பங்களையும் அனுபவித்து வந்தோம். சுகமும் நிம்மதியும் தேடி அலைந்தோம். சத்யலோகத்தின் நினைவு கொண்டு அங்கு செல்ல பக்தி செய்யத் தொடங்கினோம். சிலர் நான்கு வேதங்களை படித்தனர், சிலர் தவம், யாகம், தியானம், சமாதி போன்றவற்றை செய்ய தொடங்கினர். ஆனால் சத்யலோகத்திற்கு செல்ல முடியவில்லை, ஏனென்றால் மேற்கூறிய வழிபாடுகளை செய்து மறுபிறவியில் ராஜா, மகாராஜா, அதிகாரியாகப் பிறந்து மீண்டும் 84 லட்சம் உயிரினங்களின் சுழற்சியில் பிறக்க ஆரம்பித்தோம். நாம் துன்பப்பட்டு, இறைவா! நாங்கள் திரும்புவதற்கு வழி காட்டுங்கள். உங்களை முழுமனதுடன் வழிபடுகிறோம், எங்களுக்கு தரிசனம் கொடுங்கள் என்று இறைவனை பிரார்த்தித்தோம்,

மேலும் தரம்தாஸ் ஜியிடம் கபீர் சாகேப் விவரித்தார், இந்த உயிரினங்களின் பிரார்த்தனைகளை கேட்டு, நான் சத்யலோகத்திலிருந்து ஜோக்ஜித் என்பவரின் ரூபத்தில் இந்த காலனின் லோகத்திற்குள் வந்தேன் என்றார். அப்போது இருபத்தியோராம் பிரபஞ்சத்தில் அக்னி பாறைமீது ஆன்மாக்கள் எரிந்து கொண்டிருந்தன. நான் சென்றவுடன் அக்னி தணிந்து ஆன்மாக்கள் குளிர்ச்சி அடைந்தன. ஆன்மாக்கள் என்னைப் பார்த்ததும், சுவாமி தாங்கள் யார்? உங்கள் தரிசனத்தால் மிகுந்த இன்பமும் அமைதியையும் உணர்கிறோம் என்று சொன்னது. அப்போது நான் பூரண பிரம் பரமேஸ்வரன் கபீர், நீங்கள் அனைவரும் என்னுடைய லோகத்திலிருந்து காலனின் லோகத்தில் வந்து சிக்கிக் கொண்டீர்கள். மேலும், இந்தக் காலன் தினமும் ஒரு லட்சம் மனிதர்களின் சூட்சும உடலில் இருந்து கசடுகளை உண்கிறான், பின்னர் பல்வேறு பிறவிகளில் அனுப்பிவிடுகிறான் என்று விவரித்தேன். அப்போது அந்த ஆன்மாக்கள், பரமேஸ்வரா! எங்களை இந்த காலனின் சிறையிலிருந்து காப்பாற்றுங்கள் என்று சொன்னது. நான் அவர்களிடம் சொன்னேன், காலன் மூன்று முறை தவம் செய்து இந்த பிரபஞ்சங்களை என்னிடமிருந்து பெற்றுள்ளான், நீங்கள் அனைவரும் உங்கள் விருப்பத்துடன் இங்கு வந்திருக்கிறீர்கள். மேலும் இங்கு நீங்கள் உபயோகிக்கும் பொருட்கள் அனைத்தும் காலனுடையது. எனவே, இப்போது நீங்கள் காலனிடம் கடன் பட்டிருக்கிறீர்கள், என்னுடைய உண்மையான மந்திரத்தின் ஜபத்தால் மட்டுமே இந்த கடன் தீர்க்கமுடியும்.

உங்களின் கடன் தீராத வரை நீங்கள் காலனின் சிறையிலிருந்து விடுபட முடியாது என்று சொன்னேன். நீங்கள் என்னிடமிருந்து (நாம்) தீட்சை பெற்று பக்தி செய்தால், நான் உங்களை விடுவித்து அழைத்துச் செல்வேன் என்றேன். அதற்குள் பிரம்ம காலன் உயிர்களை உண்ண அங்கு தோன்றி கோபத்துடன் என்னைத் தாக்கினான். நான் சபத் சக்தியால் அவனை மயக்கமடையச் செய்தேன். பின்னர் சிறிது நேரம் கழித்து சுயநினைவு கொண்டான். பிறகு என் பாதங்களில் விழுந்து மன்னிப்பு கோரி, நீங்கள் மூத்தவர் கருணை காட்டுங்கள் என்று கூறி, எதற்காக எனது லோகத்திற்குள் வந்தீர்? என்று கேட்டான். அப்போது நான் காலனிடம், சில ஆன்மாக்கள் பக்தி செய்து மீண்டும் சத்யலோகத்திற்கு செல்ல விரும்புகிறது, ஆனால் உண்மையான பக்தி மார்க்கம் கிடைக்காததால், அவர்கள் பக்தி செய்த பிறகும் இதே லோகத்தில் இருக்கிறார்கள் என்று கூறினார். மேலும் அவர்களுக்கு, உண்மையான பக்தி மார்க்கத்தை காட்டவும், மேலும் நீ

தினமும் ஒரு லட்சம் உயிர்களை உண்கின்றாய் மற்றும் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் உயிர்களை பிறப்பிக்கிறாய் மற்றும் கடவுளாக ஆட்டி படைக்கிறாய் என்று உன் ரகசியத்தை சொல்ல வந்துள்ளேன் என்றார். மேலும் நீங்கள் வழிபடுவது காலனை, இறைவனை அல்ல என்று அவர்களுக்கு விளக்க வந்துள்ளேன் என்றார். இதைக் கேட்ட காலன், அனைத்து உயிர்களும் திரும்பிச் சென்றுவிட்டால், எனக்கு உணவு எப்படிக் கிடைக்கும்? நான் பட்டினியில் இறந்துவிடுவேன் என்று பிரார்த்தனை செய்தான், மூன்று யுகங்களிலும் குறைந்த அளவிலான ஆன்மாக்களை மட்டும் அழைத்து செல்லுங்கள், நான் காலன் என்றும் அனைவரையும் உண்பவன் என்றும் யாரிடமும் சொல்லாதீர்கள் என்றும், கலியுகத்தில் விரும்பும் அளவிற்கு ஆன்மாக்களை அழைத்து செல்லுங்கள் என்று வேண்டி என்னிடம் சம்மதம் பெற்றுக்கொண்டான்.

கபீர் சாகேப் தரம்தாஸ் ஜியிடம் மேலும் விவரித்தார், நான் சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகத்திலும் வந்தேன், பல ஆன்மாக்களை சத்யலோகத்திற்கு அழைத்துச் சென்றேன், ஆனால் காலனின் ரகசியத்தை சொல்லவில்லை. இப்பொழுது நான் கலியுகத்தில் வந்துள்ளேன், பிரம்ம காலன் என்னிடம், நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் உங்கள் பேச்சை யாரும் கேட்க மாட்டார்கள், முதலாவதாக, நான் அனைவரையும் பக்திக்குத் தகுதியற்றவராக ஆக்கிவிட்டேன். அவர்களை பீடி, சிகரெட், மது, இறைச்சி போன்ற தீய பழக்கத்திற்கு அடிமை ஆக்கிவிட்டேன், அவர்களின் மனோபாவத்தைக் கெடுத்து விட்டேன். மேலும் பல்வேறு வகையான தவறான வழிபாடுகளில் ஈடுபடுத்திவிட்டேன் என்று கூறியுள்ளான். இரண்டாவது, நீங்கள் உங்கள் ஞானத்தை கொடுத்து சென்ற பிறகு, நான் (கால்) உங்களை போலவே என் தூதுவர்களை அனுப்பி உயிரினங்களை குழப்பிவிடுவேன். சத்யலோகத்தின் மகிமையை கூறி, உங்கள் ஞானத்தை சொல்லி என்னுடைய மந்திரத்தை ஜபிக்க வைப்பேன், அதனால் அவர்கள் எனக்கு உணவாக இருப்பார்கள். இதைக் கேட்ட கபீர் சாஹிப், உன்னால் முடிந்தவரை முயற்சி செய், சத்ய பாதையை காண்பித்த பிறகுதான் திரும்பிச் செல்வேன், என் ஞானத்தை புரிந்துகொண்டவர் ஒருபோதும் உன் வலையில் சிக்கமாட்டார் என்று கூறினார். மேலும் சத்குரு கபீர் சாகேப் சொன்னார், நிரஞ்சனே! நான் நினைத்தால் உன்னுடைய சித்த விளையாட்டை ஒரு நொடியில் நிறுத்த முடியும், ஆனால் அப்படி செய்தால் என் வாக்குறுதி மீறப்படும், அதனால் என் அன்பான ஆத்மாக்களுக்கு உண்மையான ஞானத்தை அளித்து, சபத் சக்தியால் பரிபூரணமாக்கி சத்யலோகத்திற்கு அழைத்து செல்வேன் என்று பதிலளித்தார். மேலும் தனது உரையில் கூறினார்:–

சுனோ தர்மராயா, ஹம் சங்கோன் ஹன்சா பத் பர்சாயா //
ஜின் லீன்ஹா ஹம்ரா பர்ரவானா, ஸோ ஹன்ஸா ஹம் கியே அமானா //

(புனித கபீர் சாகர் நூலில், உயிர்களை குழப்புவதற்கு வெவ்வேறு வழிகளைப் பற்றிய விளக்கம்)

துவாதஸ் பந்த் கருண் மைன் சாஜா, நாம் தும்ஹாரா லே கருன் ஆவாஜா /
த்வாதஸ் யம் சன்சார் படஹோ, நாம் தும்ஹாரே பந்த் சலைஹோ //
ப்ரதம் தூத் மம் ப்ரகடே ஜாயீ, பீசே அன்ஷ் தும்ஹாரா ஆயி //

யஹி விதி ஜீவன்கோ ப்ரமாஊ, புருஷ் நாம் ஜீவன் சமஜாஊம் //
த்வாதஸ் பந்த் நாம் ஜோ லைஹோ, ஸோ ஹமரே முக் ஆன் ஸமை ஹோ //
கஹா தும்ஹாரா ஜீவ் நஹின் மானே, ஹமாரி ஓர் ஹோய் பாத் பக்கானை //
மைம் த்ரிட் ஃபந்தா ரசி பனாயி, ஜாமேன் ஜீவ் ரஹே ஊர்ஜாயீ //
தேவல் தேவ் பாஷான் பூஜாயீ, தீர்த்த வ்ரத் ஜப்-தப் மன் லாயீ //
யக்ஞ ஹோம் அரு நேம் ஆசாரா, அவுர் அனேக் ஃபந்த் மே டாரா //
ஜோ ஞானி ஜாவோ சன்ஸாரா, ஜீவ் ந மானை கஹா தும்ஹாரா //

**(சத்குரு வசனம்) – சத்குருவின் விளக்கம்**

ஞானி கஹே சுனோ அன்யாயி, காட்டோ ஃபந்த் ஜீவ் லே ஜாயீ //
ஜெதிக் ஃபந்த் தும் ரசே விசாரி, சத்ய சபத் தை சபை பின்டாரி //
ஜௌன் ஜீவ் ஹம் சப்த த்ரிதாவை, ஃபந்த் தும்ஹாரா சகல் முகவாவை //
சௌகா கர் ப்ரவானா பாயீ, புருஷ் நாம் திஹி தேஊம் சின்ஹாயீ //
தாகே நிகட் கால் நஹின் ஆவை, சந்தி தேகி தாகஹ் சிர் நாவை //

**மேற்கூறிய உரையிலிருந்து, வழிபாட்டில் பல சமுதாயங்கள் இயங்கி வருகின்றன, அதில் கபீர் சாகேப் கூறிய உண்மையான பக்தி மார்க்கம் இல்லாதவர்கள், பிரம் காலனால் ஈர்க்கப்பட்டவை என்று நிரூபணமாகிறது. எனவே, அறிவுள்ளவர்கள் கவனமாக சிந்தித்து பக்தி மார்க்கத்தை தேர்ந்தெடுக்க வேண்டும், ஏனென்றால் மனிதப் பிறவி விலைமதிப்பற்றது, அது மீண்டும் மீண்டும் கிடைக்காது.**

கபீர் மானுஷ் ஜன்ம துர்லப் ஹை, மிலே நா பரம்பார் /
தருவர் சே பத்தா டூட் கிரே, பஹுரிர் நா லக்தா டாரி //

*****

# உலகம் வென்ற குரு

(சந்த் ராம்பால் ஜி மகராஜின் தலைமையில், இந்தியா உலக மத குருவாக போற்றப்படும்)

## சந்த் ராம்பால்ஜி மகராஜ் பற்றி நாஸ்டர்டாமஸின் கணிப்புக்கள்

1555 ஆம் ஆண்டில், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த நாஸ்டர்டாமஸ் என்ற புகழ்பெற்ற தீர்க்கதரிசி, எதிர்காலத்தைப் பற்றிய கணிப்புகளை ஆயிரம் ஸ்லோகங்களில் குறியீடாக எழுதியுள்ளார். தலா நூறு ஸ்லோகங்கள் கொண்ட பத்து சதம் (பகுதிகளாக) எழுதியுள்ளார். இவை அனைத்தும் இதுவரை உண்மை ஆகிவிட்டது. இந்தியாவில் உண்மையாகிய கணிப்புகளில்: –

1. இந்தியாவின் முதல் பெண் பிரதமர் மிகவும் திறமையானவராக இருப்பார் (ஸ்ரீமதி இந்திரா காந்தியை குறிக்கிறது), மற்றும் அவர் நெருங்கிய காவலரால் கொல்லப்படுவார் என்று எழுதப்பட்டது, அது உண்மையாகியது.

2. அதன் பிறகு அவரது மகன் குறுகிய காலத்திற்கு ஆட்சி செய்வார் மற்றும் திடீரென மரணத்தை சந்திப்பார், இதுவும் உண்மையாகியது. (மறைந்த முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை குறிக்கிறது )

3. சந்த் ராம்பால் ஜி மகாராஜ் பற்றிய நாஸ்டர்டாமஸ் இன் கணிப்புகள் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

அவர் தனது எதிர்கால கணிப்பில், சதம் 5இன் இறுதியில் மற்றும் சதம் 6 இன் தொடக்கத்தில் எழுதியதாவது, இன்று அதாவது கிபி 1555 முதல் 450 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 2006 இல் ஒரு இந்து மத குரு (சைரன்) தோன்றுவார், அவர் உலகம் முழுவதும் பேசப்படுவார். அந்த சமயம் அந்த இந்து மத குருவின் (சைரன்) வயது 50 முதல் 60 வரை இருக்கும். சந்த் ராம்பால் ஜி மகராஜின் நடுத்தர வயதின் உடலை பரமேஸ்வரர் நாஸ்டர்டாமஸ் அவர்களுக்கு காட்டினார், மற்றும் அனைத்து நிகழ்வுகளையும் படம் போலக் காட்டி விளக்கினார். நாஸ்டர்டாமஸ் 16 ஆம் நூற்றாண்டை முதல் பகுதியாக கூறியுள்ளார், இது போல் 20 ஆம் நூற்றாண்டு ஐந்தாம் பகுதியாக ஆகிறது. ஐந்தாம் பகுதியின் இறுதியில் அதாவது 1999 ஆம் ஆண்டு அந்த இந்து மத குரு வெளியில் வந்து, தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு சாஸ்திர முறையான பக்தி பாதையை வழிநடத்துவார் என்று நாஸ்டர்டாமஸ் கூறியுள்ளார். அந்த மகானின் வழிகாட்டுதலின்படி பின்பற்றுபவர்களுக்கு தனித்துவமான ஆன்மீக மற்றும் உடல் நன்மைகள் கிடைக்கும். மேலும் அந்த தத்துவதரிசி குரு அளித்த சாஸ்திர நிரூபணம் கொண்ட தத்வஞானத்தைப் புரிந்து கொண்ட பக்தர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுவது போல ஆச்சரியத்தில் வியந்து போவார்கள். 1999ல் அந்த தத்துவதரிசி இந்து குருவின் ஆன்மீகப் புரட்சி 2006 வரை தொடரும். அதற்குள் ஏராளமான பக்தர்கள், தத்துவ ஞானத்தைப் புரிந்து கொண்டு, பலன் அடைந்திருப்பார்கள். பிறகு அதையும் தாண்டி செல்வார்கள். அதன் பிறகு 2006 முதல் பொற்காலம் தொடங்கும்.

குறிப்பு: அன்பான வாசகர்களே, பின்வரும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த நாஸ்டர்டாமஸ் கூறிய கணிப்பைப் படியுங்கள். இதை பற்றி சென்னை ஜோதிடர் கே.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கூறியது, “1555 இல் நாஸ்டர்டாமஸ் எழுதிய தீர்க்கதரிசனங்களின் உண்மையான மொழிபெயர்ப்பை

மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஒரு ஜோதிடர் 1998 ஆம் ஆண்டில் செய்வார். அந்த ஜோதிடர், நாஸ்டர்டாமஸின் தீர்க்கதரிசனங்களில் உள்ள குறியீட்டு மொழியைத் தெளிவுபடுத்துவதன் மூலம் எதிர்கால நிகழ்வுகளுக்கு அர்த்தத்தை அளிப்பார். அதே ஜோதிடரால் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகத்தில் உள்ளதை படியுங்கள்.

1. (பக்கம் 32, 33):- பொறுங்கள், பொற்காலம் (ராமராஜியம்) வருகிறது. ஒரு நடுவயதில் உள்ள பெரும் சக்தி உடையவர், பாரதம் மட்டுமல்லாமல் பூமி முழுவதிலும் பொற்காலத்தைக் கொண்டு வருவார். மேலும் தனது சனாதன தர்மத்தை மீட்டெடுத்து உண்மையான பக்தி மார்க்கத்தைக் காட்டி சிறந்த இந்து தேசத்தை உருவாக்குவார். பிறகு அவர் பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, நேபாளம், திபெத், ஆப்கானிஸ்தான், மலாயா போன்ற நாடுகளுக்கு மதத் தலைவராக இருப்பார். ஆளும் சக்திகள் மீது அதிகாரம் கொள்வார். அந்தத் தலைவர் (சைரன்) திடீரென்று உலகறியப்படுவார் பார்த்துக்கொண்டே இருங்கள்.

2. (பக்கம் 40ல் மீண்டும் எழுதப்பட்டுள்ளது):- பொறுங்கள்! ராமராஜியம் (பொற்காலம்) வருகிறது. ஜுன் 1999 முதல் 2006 வரை நடக்கும் புரட்சியில், பொற்காலம் உயரும். இந்தியாவில் தோன்றும் மகான் (சைரன்) உலகிற்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் வழங்குவார். தோன்றும் சைரன் இன்னும் தெரியவில்லை, ஆனால் அவர் நிச்சயமாக ஒரு கிறிஸ்தவரோ அல்லது முஸ்லீமோ இல்லை என்று நாஸ்டர்டாமஸ் உறுதியாகக் கூறியுள்ளார். அவர் இந்துவாக இருப்பார், நாஸ்டர்டாமஸ் ஆகிய நான் பெருமைப்படுகிறேன், ஏனென்றால் அந்த தெய்வீக சைரன் உதயமானவுடன், தன்னை உயர்ந்தவர் என்று சொல்லிக் கொள்ளும் தலைவர்கள் எல்லாம் அவரிடம் பணிந்து போவார்கள். அந்த பாரத மகான் தத்துவதர்ஷி, அனைவருக்கும் ஓர் அற்புதமான ராஜியத்தை வழங்குவார். அவர், ஆண், பெண், ஏழை, பணக்காரர், ஜாதி, மதம் என்ற வேறுபாடு இல்லாமல் சம விதிகளை உருவாக்குவார், அநீதியை அனுமதிக்க மாட்டார். அந்த தத்துவதரிசி ஞானிக்கு அனைவரும் சிறப்பு மரியாதை கொடுப்பார்கள். பெற்றோர்கள் மரியாதைக்குரியவர்கள், ஆனால் ஆன்மீகத்தின் அடிப்படையில், அந்த ஷைரன் (தத்வதர்ஷி குரு) பெற்றோரை போல மரியாதைக்குரியவராக இருப்பார். நாஸ்டர்டாமஸ் ஒரு யூதர் மற்றும் பிரான்சின் குடிமகன். அவர் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால் நாஸ்டர்டாமஸ், தோன்றும் சைரன் ஒரு இந்துவாக மட்டுமே இருப்பார் என்று கூறியுள்ளார்.

3. (பக்கம் 41ல்) அனைவருக்கும் ஒரே விதி, ஒரே கட்டுப்பாடு, ஒழுக்கம், என சத்ய பாதையில் கொண்டு செல்வார். நான், நாஸ்டர்டாமஸ் உறுதியாகச் சொல்கிறேன். அந்த சைரன் (மதத் தலைவர்) புதிய ஞானத்தை கொண்டுவருவார். உண்மையான பாதையைக் காட்டும் அந்த இரட்சகர், ஆசிய பகுதியில் சமுத்திரத்தின் பெயர் (இந்திய பெருங்கடல்) கொண்ட நாட்டில் (இந்தியா) பிறப்பார். அவர் கிறிஸ்தவராகவோ, முஸ்லீமாகவோ, யூதராகவோ இருக்க மாட்டார், இந்துவாகவே இருப்பார். (நாஸ்டர்டாமஸ் தீர்க்கதரிசனத்தின் சதம் 6, கூற்று 70 இல் ஒரு முக்கியமான குறிப்பை சொல்கிறார்). எல்லோரும் அவரை நேசிப்பார்கள். அவர்மீது பயமும் இருக்கும், யாரும் தவறு செய்ய நினைக்க மாட்டார்கள். அவருடைய பெயரும் புகழும் விண்ணைத் தாண்டி எதிரொலிக்கும். இதுவரை அறியாமையின் உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் சமுதாயத்தை

தத்துவ ஞானத்தின் ஒளியால் எழுப்புவார். ஒட்டுமொத்த மனிதகுலமும் விழித்தெழுந்து, அவரது தத்வஞானத்தின் அடிப்படையில் பக்தி செய்வார்கள். முழு சமுதாயத்தையும் உண்மையான வழிபாடு செய்ய வைப்பார். அதன் காரணமாக அவர் அனைத்து பக்தர்களையும் தனது ஆதி நித்திய இடத்திற்கு (சத்யலோகத்திற்கு) அழைத்துச் செல்வார். அவர் இந்த கொடூரமான பூமியிலிருந்து (கால லோகம்) விடுவிப்பார்.

4. (பக்கம் 42, 43):- கொடூரமான குருர் சந்திரர் (மகா கால்) யார், எங்கே இருக்கிறார் என்று ஷைரன் (தத்வதர்ஷி குரு) மட்டுமே கூறுவார். அந்த குருர் சந்திரரிடம் இருந்து இந்த சைரன் தான் விடுவிப்பார். சைரனின் (தத்வதர்ஷி குரு) தலைமையில், இந்த உலகத்தின் புனித பூமியில் (இந்தியாவில்) பொற்காலம் தோன்றும், பின்னர் உலகம் முழுவதும் பரவும். அந்த உலகத் தலைவனின் பெருமையும், நற்குணங்களும் அவருக்குப் பிறகும் போற்றப்படும். அவரது மனதின் அமைதியும் பணிவும் மிகவும் பிரபலமாக இருக்கும், முன்பு, சதம் 6 கூற்று 70 இன் கடைசி வரியில் குறிப்பிடப்பட்ட விளக்கம், சைரன் மூன்று வார்த்தைகளை மட்டுமே கூறுகிறார். தன்னைப் பற்றி “ஒரு வெற்றி பேரறிஞர்”. அதனுடன் வேறு எதையும் இணைக்க வேண்டாம் நான் ஏற்க மாட்டேன். (இது பக்கம் 42, சதம் 6 கூற்று 71ல் உள்ள விளக்கம் 4 இல் இருந்து).

இந்து சைரன் தனது ஞானத்தால் தனித்துவமான தத்துவஞானத்தை மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டு வருவார், **(Chyren will be chief of the world, Loved feared and unchallenged)** மற்றும் மனித கலாச்சாரத்தை சீர்திருத்துவார், இதில் எந்த சந்தேகமும் இல்லை.

இன்னும் யாருக்கும் தெரியாது, ஆனால் நரசிங்கன் திடீரென்று தோன்றியதைப் போலவே அவரது நேரம் வரும்போது, அந்த மாபெரும் உலகத் தலைவன் (கிரேட் சைரன்) அவனுடைய ஆன்மீக ஞானத்தாலும், பக்தியின் பிரகாசத்தினாலும் புகழ் பெறுவான். நான் (நாஸ்டர்டாமஸ்) ஆச்சரியப்படுகிறேன். எனக்கு அவருடைய நாட்டை பற்றியும் (எங்கிருந்து அவதரிப்பார் என்று, அதாவது சத்யலோகம்) அவரைப் பற்றியும் தெரியாது, நான் அவரை என் எதிரில் நேரில் பார்க்கிறேன், அவருடைய பெருமையை யாராலும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நான் அவரை கிரேட் சைரன் (பெரும் மதத் தலைவர்) என்று அழைக்கிறேன்,

தனது மதச் சகோதரர்களின் சமகாலப் பிரச்சனைகளால் கலங்கி, சுதந்திர ஞான சூரியனின் உதயத்துடன், தனது பக்தியின் பிரகாசத்தால் உலக இரட்சகர், 5 ஆவது சதம் இறுதியில் (20 ஆம் நூற்றாண்டின் கடைசி ஆண்டில்) கி.பி 1999 இல், ஒரு நடுத்தர வயது கொண்ட உலக மத தலைவர் (கிரேட் சைரன்) எல்லை கடந்து என் மனதை ஆய்வு செய்கிறார். நான் (நாஸ்டர்டாமஸ்) அவரை வரவேற்பதில் ஆச்சரியப்படுகிறேன், மேலும் உலகம் அவரை அறியாததால், என் சைரன் (தத்வதர்ஷி குரு) புறக்கணிப்புக்கு ஆளாகி வருவதால், எனக்கும் வருத்தமாக இருக்கிறது.

என்னுடைய (நாஸ்டர்டாமஸின்) இதயத்தை துளைக்கும் தீர்க்கதரிசனத்தையும், அந்த உலக மகானையும் புறக்கணிக்காதீர்கள். அவரது தோற்றம் மற்றும் அவரது ஞான சூரியனின் உதயத்தின் போது, இலட்சியவாத நபர்களின் மறுமலர்ச்சி இருக்கும் மற்றும் பொற்காலத்தின் விடியல் 6 ஆம் சத்தத்தில், இன்று கி.பி.1555ல் இருந்து 450 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 2006 ஆம் ஆண்டு தொடங்கும். இந்த

வெற்றிகரமான தொடக்கத்தை நான் (நாஸ்டர்டாமஸ்) நேரில் பார்க்கிறேன்.

5. (பக்கம் 44, 45, 46) :- (நாஸ்டர்டாமஸ் சதம் 1, வசனம் 50ல் மீண்டும் கூறுகிறார்) அந்த மகான் மூன்று புறம் கடல் சூழ்ந்த தீவில் (இந்திய நாடு) பிறப்பார், தத்துவஞானம் இல்லாமல் அந்த சமயம் அறியாமையின் இருள் இருக்கும், ஒழுக்கத்தின் வீழ்ச்சி இருக்கும். அந்த சைரன் (மதத் தலைவர்) குருவை உயர்ந்தவராகக் கருதி பக்தி செய்வார். அந்த மதத் தலைவர் (தத்வதர்ஷி) தனது பக்தி மற்றும் தத்துவஞானத்தின் சக்தியால் அனைத்து நாடுகளையும் பணியவைப்பார். ஆசியாவில் அவரையும், அவரது வளர்ச்சியையும் நிறுத்துவது பைத்தியக்காரத்தனமாக இருக்கும். (சதம் 1 வசனம் 50).

(குறிப்பு:- நாஸ்டர்டாமஸின் கணிப்புகள் பிரான்ஸ் நாட்டு மொழியில் எழுதப்பட்டது. பின்னர், பால் புருண்டன் என்ற ஆங்கிலேயர், பிரான்சில் சில ஆண்டுகள் தங்கியிருந்து, நாஸ்டர்டாமஸின் "செஞ்சுரி புக்" நூலை புரிந்துகொண்டு, ஆங்கிலத்தில் எழுதினார். அவர், "குருவர்" என்ற வார்த்தையை "குருவார்" அதாவது "வியாழன்" என்று கருதி, வியாழன் சைரனின் வழிபாடு தினம் என்று எழுதினார். உண்மையில், குருவர் என்றால், குருக்களிலும் சிறந்த தத்துவஞானி குரு என்று பொருள், குருவை முதன்மையாகக் கருதி வழிபட வேண்டும். வேதத்தில் "பிரகஸ்பதி, குருவர்" என்பதற்கு உலககுரு மற்றும் பரமேஸ்வர் என்று பொருள்.

அவர் தனது நடுத்தர வயதில், தத்துவ ஞானியாகி, மூவுலகிலும் புகழ் பெறுவார். எனக்கு (நாஸ்டர்டாமஸ்) அவரது புதிய ஞானம், செயல்முறை மற்றும் வழிபாட்டு மந்திரம், ஒரு பாம்பாட்டி அதிக விஷமுள்ள பாம்பை வசியப்படுத்துவது போல தெரிகிறது. புதிய செயல்முறை, புதிய விதிகளை உருவாக்கும் அந்த தத்துவஞானி உலகத்தின் முன் தோன்றுவார், அவரை நான் (நாஸ்டர்டாமஸ்) ஆச்சரியத்துடன் "கிரேட் சைரன்" என்று அழைக்கிறேன், அவருடைய ஞானத்தின் தெய்வீக பிரகாசத்தால், அந்தத் தீவில் (இந்தியாவில்) ஒரு ஆக்ரோஷமான புயல் எழும் அதாவது அறியாமை குருக்களால் களங்கம் ஏற்படும். ஒரு கொடூரமான பாம்பை அடக்குவது போல, அதை சமாதானப்படுத்தும் வழியும் அவருக்கு மட்டுமே தெரியும். அவர் சிங்கத்தைப் போன்ற சக்தி வாய்ந்தவராகவும், பிரகாசமான உடலைக் கொண்டவராகவும் இருப்பார். நான் (நாஸ்டர்டாமஸ்), அவர் குண்டலினி சக்தி உடையவர் என்பதை தெளிவாக கூறுகிறேன். மேலும், அவர் கடல் சூழ்ந்த நாட்டில் தோன்றும்போது, அவர் தோன்றிய நாட்டின் பெயரால் அந்த சமுத்திரம் அழைக்கப்படும் என்று தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் சிறப்பானது, அவர் அந்நாட்டின் குண்டலனி சக்தியை முழுமையாக அறிந்தவர் ஆவார். அந்த சைரன் (மத தலைவர்) இரக்கமுள்ளவராகவும், கனிவானவராகவும், நித்திய பேரரசு அதிகாரியாகவும், ஆதி புருஷனை (சத்யபுருஷ்) வழிபடுபவராக இருப்பார். அவருடைய சக்தி உலகளாவியதாக இருக்கும், அவருடைய மகிமை, குரு பக்தியை, அதாவது குரு இல்லாமல் எந்த வழிபாடும் வெற்றியடையாது என்பதை வலுப்படுத்துவார். முதலில் தத்வஞானத்தின் சொற்பொழிவுகளால், அறியாமையில் உறங்கும் தனது சகோதரர்களை (இந்துக்களை) எழுப்பி, மூடநம்பிக்கையில் வழிபாடு செய்யும் பக்தர்களுக்கு சாஸ்திரத்திற்கு எதிரான வழிபாட்டு முறையின் திரையைக் கிழித்து உண்மையான தத்வஞானத்தை விளக்குவார். அவர்களைத் தனது சனாதன தர்மத்தைப் பின்பற்றச் செய்து அமைதி அடையச் செய்வார். அதன்பிறகு, அவரது தத்வஞானம் உலகம் முழுவதும்

பரவும். அவரது ஞானத்தை ஒப்பிட முடியாது, அவருக்கு ஈடாக யாராலும் நிற்க முடியாது. அவருடைய ஞானத்திற்கு முன்னால் சூரியனின் பிரகாசமும் மங்களாகிவிடும். எனவே, அந்த உலக மகானின் பெருமையை என்னால் (நாஸ்டர்டாமஸ்) வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. நான் அந்த கிரேட் சைரனை பார்த்து கொண்டிருக்கிறேன்.

மேற்கூறிய விளக்கத்தின் பொருள் என்னவென்றால், "அந்த உலகத் தலைவரின் 50 வயதில், அதாவது 2001 ஆம் ஆண்டில் அனைத்து மத சாஸ்திரங்களையும் அறிந்தவர் (தத்துவஞானி) ஆவார். பிறகு இறைவனின் தத்துவஞானத்தை கற்றுக்கொடுப்பவராக ஆவார். மேலும் அவரது ஆன்மீக பிறப்பு அமாவாசை அன்று நிகழும். அவர் பிரபலமடையும் போது, அவர் வயது 50 முதல் 60 வயது வரை இருக்கும்".

6. (பக்கம் 46, 47):- உலகின் தலைசிறந்த தத்துவஞானி (கிரேட் சைரன்) பற்றிய எனது கணிப்புகளின் ஒவ்வொறு வார்த்தைகளையும் மற்ற தலைவர்கள் மீது ஒப்பிட்டு பார்த்தல், யாரும் பொருந்த மாட்டார்கள் என்று சந்தேகமின்றி நாஸ்டர்டாமஸ் கூறுகிறார். நான் அடித்து சொல்கிறேன், 2006 ஆம் ஆண்டு வரட்டும், நான் குறிப்பிடும் அந்த கிரேட் சைரன் உடைய செயல் தன்மையும், அவருடைய ஆழ்ந்த தத்துவஞானம் அனைவரையும் வியக்க வைக்கும். இதன் ஒவ்வொரு வார்த்தையும் சைரன் மட்டுமே முழுமையாக உறுதிப்படுத்துவார்.

7. (பக்கம் 52):- 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், உலகின் வானத்தில் "சைரனின்" உதயம் ஆகும் என்று நாஸ்டர்டாமஸ் தனது கணிப்பில் கூறியுள்ளார். என் (நாஸ்டர்டாமஸின்) விருப்பத்தால் எந்த மாற்றமும் ஏற்படாது, சைரனின் உத்தரவின்படி விதியின் விருப்பத்தின்படி அனைத்து மாற்றங்களும் நடக்கும். அதில், புதிய மாற்றம் என்பது இந்தியா மிக உயர்ந்த நாடாக மாறும். பல நூற்றாண்டுகளாக காணாத இந்துக்களின் மகிழ்ச்சி சாம்ராஜ்ஜியம் காணப்படும். அந்த நாட்டில் பிறந்த மத குரு, உலக இரட்சகராகவும், உலகுக்கு அறிவைக் கொடுப்பவராகவும், தத்துவதரிசியாகவும் இருப்பார். அந்த தத்துவதரிசி குருவின் ஞானம், ஆசியப் பகுதிகளில் இந்துக்களிடையே நிலவும் ராமாயணம், மகாபாரதம் போன்ற ஞானத்தையும் தாண்டி வேறுபட்டதாக இருக்கும். அவர் பரமேஸ்வரனை பின்பற்றுபவராக இருப்பார். அவர் ஒரு தனித்துவமான குருவாக இருப்பார்.

8. (பக்கம் 74): பல குருமார்களும் தலைவர்களும் வந்து போவார்கள், அனைவரும் கடவுளின் எதிரிகளாவும், அகங்காரமாகவும் இருப்பார்கள். நான் (நாஸ்டர்டாமஸ்) உள்ளுக்குள் அந்த சைரனை தரிசித்தேன். அந்த மாபெரும் இந்து மதத் தலைவரை புரிந்து கொள்ளாமல் அவர் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்படும் என்று நாஸ்டர்டாமஸ் கூறியுள்ளார். எனக்கு வருத்தம் என்னவென்றால், அந்த மகான் சைரன் புறக்கணிக்கப்படுவார். ஆனால் இந்தியாவின் பக்தி ஞானம் இல்லாத குருமார்களுக்கும், சீர்கெட்ட (சகோதரியையே கொல்லும் சகோதரனுக்கும், ஹிந்துவை எதிரியாக நினைக்கும் இந்துவிற்கும், முஸ்லிமையே எதிரியாக நினைக்கும் இஸ்லாமியருக்கும், மாயையில் சிக்கி ஓடும் மனிதர்களுக்கும்) உலகத்திற்கு புதிய ஒளியை காட்டும், உலக மத தலைவர், மனிதகுலத்தின் முக்திக்கான கவலையைத் தவிர வேறு எந்த சுயநலமும் விருப்பமும் கொண்டிருக்க மாட்டார், ஆணவமும் இருக்காது. அவரால் கொடுக்கப்படும் ஞானம் பல நூற்றாண்டுகள் நீடிக்கும். அந்த மகான் விஞ்ஞானிகளை

கூட வியக்கும் அளவுக்கு ஆன்மீக அற்புதங்களை செய்வார். அவருடைய ஞானம் சாஸ்திர நிரூபணம் கொண்டதாகும். பகுத்தறிவு உள்ளவர்கள் அவரை புறக்கணிக்கக் கூடாது, அவரது அறிவை சிறிய விளக்காக என்ன வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தத்துவ மேதையை (சைரனின்) அரியணையில் அமர்த்தி, அவரைத் தெய்வமாகக் கருதி பூஜிக்க வேண்டும். அந்த ஆதி புருஷனை (சத்புருஷனை) பின்பற்றுபவரே உலக இரட்சகராக இருப்பார்.

## சந்த் ராம்பால் ஜி மகாராஜ் பற்றி மற்ற தீர்க்கதரிசிகளின் கணிப்புக்கள்

1. இங்கிலாந்தின் ஜோதிடர் "கிரோ", 1925 இல் எழுதிய புத்தகத்தில் கணித்துள்ளார்: 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (அதாவது 1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு) பிறந்த ஒரு மகான் உலகில் ஒரு "புதிய நாகரிகத்தை" கொண்டு வருவார், அது உலகம் முழுவதும் பரவும், அவர் உலகம் முழுவதும் ஆன்மீக புரட்சியை ஏற்படுத்துவார்.

2. ஜோதிடர் "திரு வெஜிலெட்டின்" அவர்களின் கணிப்பு படி, 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பரஸ்பர அன்பு குறைவு, மனிதநேயத்தின் சீரழிவு, செல்வத்தை சேகரிக்கும் இனம், அநீதியான தலைவர்கள் மற்றும் பல்வேறு பேரழிவுகள் காணப்படும். ஆனால் இந்தியாவில் தோன்றும் சகோதரத்துவத்தின் புதிய நாகரீகம் நாடு, பிரதேசம், சாதி என்ற எல்லைகளை கலைத்து உலகில் அன்பும் அமைதியையும் உருவாக்கும்.

3. அமெரிக்காவின் பெண் ஜோதிடர் "ஜீன் டிக்சன்" அவர்களின் கணிப்பு படி, 20 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள், உலகில் மனிதகுலத்தின் பேரழிவு இருக்கும். யுத்தங்களுக்கு பிறகு ஆன்மீக அடிப்படை கொண்ட ஒரு புதிய நாகரீகம், இந்தியாவின் கிராமப்புறக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் தலைமையில் தோன்றும், அது யுத்தங்களை நிரந்தரமாக உலகத்திலிருந்து விளக்கிவிடும்.

4. அமெரிக்காவின் "திரு. ஆண்டர்சன்" கருத்துப்படி, 20 ஆம் நூற்றாண்டின் இறுதிக்கு முன் அல்லது 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், உலகில் நாகரீகத்தின் கோரத்தாண்டவம் இருக்கும். இதற்கிடையில், இந்தியாவில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், ஒரே மதம், ஒரே மொழி மற்றும் ஒரே கொடி என்ற அரசியலமைப்பை உருவாக்கி உலகிற்கு ஒழுக்கம், தாராள மனப்பான்மை, மனிதாபிமான சேவை மற்றும் அன்பின் பாடத்தை புகட்டுவார். இந்த மேசியா 1999 ஆம் ஆண்டிற்குள், அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு உலகில் மகிழ்ச்சி மற்றும் அமைதியை நிலைக்க வைப்பார்.

5. ஹாலந்தின் ஜோதிடர் "திரு ஜெரார்ட் கிரைஸ்" இன் கணிப்புப்படி, 20ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் அல்லது 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், யுத்தம் காரணமாக பல நாடுகள் காணாமல் போய்விடும். ஆனால் இந்தியாவின் ஒரு மகான் உலகத்தை மனிதநேயத்தால் இணைத்து, வன்முறை, தீய செயல்பாடு இவை அனைத்தையும் அழிப்பார்.

6. அமெரிக்காவின் தீர்க்கதரிசி "திரு. சார்லஸ் கிளார்க்" இன் கணிப்புப்படி, 20ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள், ஒரு நாடு விஞ்ஞானத்தில் அனைத்து நாடுகளையும் பின் தள்ளிவிடும், ஆனால் இந்தியாவின் புகழ் தர்மம் மற்றும் ஆன்மீகத்தால் ஏற்படும், அதை உலகம் முழுவதும்

ஏற்றுக்கொள்ளும். இந்த புரட்சி 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகத்தையே ஈர்த்து, ஆன்மீகத்தை நோக்கி தள்ளும்.

7. ஹங்கேரிய பெண் ஜோதிடர் “போரிஸ்கா” வின் கணிப்புப்படி, கிபி 2000 திற்கு முன், கொலை மற்றும் கொள்ளை சூழ்நிலைக்கு மத்தியில் மனித நற்குணங்களின் வளர்ச்சி ஒரு இந்திய தேவரின் போராட்டத்தின் விளைவாக நிரந்தரமாக இருக்கும், இந்த ஆன்மீக நபரைப் பின்பற்றுபவர்கள் ஏராளமானோர் பொருள்முதல்வாதத்தை ஆன்மீக மாக மாற்றுவார்கள்.

8. பிரான்ஸ் டாக்டர். ஜுலர்வனின் படி, 1990க்குப் பிறகு, ஐரோப்பிய நாடுகள் இந்தியாவின் நாகரிகத்தை நோக்கி பணியும். 2000ம் ஆண்டுக்குள் உலக மக்கள் தொகை 640 கோடியாக இருக்கும். இந்தியாவில் வெளிப்படும் ஞான புரட்சி புயலாக நாத்திகத்தை அழிக்கும். அந்த பாரத மகானை பின்பற்றுபவர்கள் ஒரு அமைப்பாக “ஆத்மசக்தியால்” உலகத்தினை தன்வசம் ஈர்ப்பார்.

9. பிரான்சின் ”நாஸ்டர்டாமஸ்” இன் கணிப்புபடி, இராணுவப் புரட்சிகளுக்குப் பிறகு, சில நல்ல மனிதர்கள் உலகத்தை சீர்படுத்த வருவார்கள். 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கிழக்கு நாட்டில் பிறந்த ஒரு மகான், சகோதரத்துவம் மூலம் உலகம் முழுவதையும் ஒற்றுமையில் பிணைப்பார்.
மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவில் அந்த மகான் பிறப்பார். அந்த நேரம் உலகமே தத்துவஞானம் அறியாத இருளில் இருக்கும். அந்த சைரன் (மத தலைவர்) குருவர் அதாவது குருஜியை மிகவும் மரியாதைக்குரியவர் எனக் கருதி வழிபட்டு மற்றவரையும் வழிபட வைப்பார். அந்த மதத் தலைவர் (தத்துவதரிசி) அனைத்து தேசங்களையும் தனது பக்தி மற்றும் தத்துவஞானத்தின் சக்தியால் தலைவணங்கச் செய்வார். ஆசியாவில் அவரைத் தடுப்பது அல்லது அவருக்கு இடையூறு செய்வது பைத்தியக்காரத்தனம் ஆகும். (செஞ்சூரி 1, கண்ணா 50).

10. இஸ்ரேலிய பேராசிரியர். ஹராரேவின் கணிப்புப்படி, இந்தியாவின் ஒரு தெய்வீக மகான் மனிதநேய சிந்தனைகளுடன் கி.பி 2000 க்கு முன்னர் ஆன்மீகப் புரட்சியை கொண்டுவருவார், மேலும் உலகம் முழுவதும் அவரது கருத்துக்களைக் கேட்டு கட்டுப்படும். இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்கள் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் இருக்கும், ஆனால் பின்னர் தலைமைத்துவம் பக்தியுள்ள ஆன்மீக அமைப்பைச் சேர்ந்த மக்களின் கீழ் இருக்கும்.

11. நார்வேயின் ஸ்ரீ ஆனந்தாச்சார்யாவின் தீர்க்கதரிசனத்தின்படி, 1998க்குப் பிறகு, இந்தியாவில் ஒரு சக்திவாய்ந்த ஆன்மீக அமைப்பு மலரும். அதன் எஜமானரின் நெறிமுறைகளை உலகம் முழுவதும் பின்பற்றும். படிப்படியாக இந்தியா மதம் மற்றும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் உலகை வழிநடத்தும் மற்றும் அதன் அறிவியல் (ஆன்மீக அறிவு) உலகம் முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்கூறிய கணிப்புகளின்படியே இன்று உலகில் சம்பவங்கள் நடக்கின்றன. சகாப்த மாற்றம் என்பது இயற்கையின் மாறாத கொள்கை. வேத தத்துவத்தின்படி, சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகம் மற்றும் கலியுகம் என நான்கு யுகங்களின் அமைப்பு உள்ளது. பூமியில் பாவிகளின் ராஜ்யம் பெருகும்போது, இறைவன் மனித உருவில் பூமியில் தோன்றுகிறார்.

ஆதிகாலத்திலிருந்தே மனிதத் தன்மை வளர்ச்சிக்கான காரியங்களை

இந்தியா மட்டுமே செய்து வருகிறது. காலங்காலமாக இந்த புண்ணிய பூமியில் தான் அவதாரங்கள் அவதரித்து வருகின்றன. ஆனால், ரிஷி, முனிவர்கள், அவதாரங்கள் போன்றவர்களின் தெய்வீகப் பேச்சுகளையும், தத்துவங்களையும், அன்றைய பொதுமக்களும் ஆட்சியாளர்களும் பொருட்படுத்தாமல், மறைந்தவுடன் அவர்களை இருமடங்கு வழிபடத் தொடங்கினர் என்பதுதான் கொடுமை. சில சுயநலவாதிகள் பொதுமக்களை தவறாக வழிநடத்தி பூரண குருவை அவமதித்து தடையாகின்றன. இந்த கொடுமை எல்லா யுகங்களிலும் நடக்கிறது, இன்றும் நடந்து வருகிறது.

ஆயிரம் துன்பங்களைத் தாங்கிக்கொண்டு தவத்திலும் சத்தியத்திலும் உறுதியாக நிற்கும் மகான்களின் வார்த்தைகள் பொய்யாகாது. சத்தியத்தில் உறுதியாக நின்று, இயேசு கிறிஸ்து தனது உடலில் ஆணிகளின் வலியை அனுபவித்தார், சாக்ரடீஸ் ஒரு கோப்பை விஷத்தை குடித்தார், ஸ்ரீ ராமரும், ஸ்ரீ கிருஷ்ணரும் கூட பல வேதனைகளை அனுபவித்தனர்.

இயேசு சொன்னார், பூமியும், ஆகாயமும் அழியலாம், சூரிய உதயம் அஸ்தமனம் மாறலாம், ஆனால் என் பேச்சு என்றும் பொய்யாகாது.

நண்பர்களே! இன்று அனைத்து மக்களும், அந்த பரமஞானி தத்துவதரிசியை கண்டுபிடித்து, அவரை ஏற்று, அவர் வழிநடத்தும் முறையில் நடந்தால், உலகத்தில் நல்லெண்ணம், பரஸ்பர சகோதரத்துவம், கருணை மற்றும் பக்தி சூழல் உருவாகும். இன்றைய மனிதர்கள் படித்தவர்கள், அந்த மகானின் ஞானத்தை நிச்சயமாக ஏற்று பலன் பெறுவார்கள். அந்த மகான் ஜகத்குரு தத்துவதரிசி சந்த் ராம்பால் ஜி மகராஜ் ஆவார். அனைத்து கணிப்புகளிலும் துல்லியமாக பொருந்தும் சந்த் ராம்பால் ஜி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக படியுங்கள்.

## சந்த் ராம்பால்ஜி மகராஜ் பற்றி சுருக்கமான அறிமுகம்

சந்த் ராம்பால் ஜி, 1951ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் தேதி ஹரியானாவின் சோனிபத் மாவட்டத்திலுள்ள தனானா கிராமத்தில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்தார். படிப்பை முடித்து, ஹரியானா மாநிலத்தில் நீர்ப்பாசனத் துறையில் **J.E.** ஜுனியர் இன்ஜினியராக 18 ஆண்டுகள் பணியாற்றினார். 1988 ஆம் ஆண்டு, பரம சந்த் ராம்தேவானந்த் ஜியிடம் தீட்சை பெற்று, அவர் காட்டிய வழியில், உடலாலும் மனதாலும் பக்தி செய்து இறைவனை தரிசித்தார்.

பிப்ரவரி 17, 1988 அமாவாசை அன்று இரவில் சந்த் ராம்பால் ஜி தீட்சை பெற்றார். அப்பொழுது அவருடைய வயது 37, தீட்சை பெற்ற நாளை ஆன்மீகத்தில் பக்தரின் ஆன்மீக பிறந்த நாளாக கருதப்படுகிறது.

மேற்கூறிய விளக்கம், நாஸ்டர்டாமஸின் கணிப்புகளுடன் பொருந்துகிறது. கணிப்புகள் பக்கம் எண் 44, 45, “அந்த தத்துவதரிசி சைரனின் ஆன்மீக பிறப்பு அன்று அமாவாசை இருட்டாக இருக்கும். அப்போது அவருடைய வயது 16, 20, 25 ஆக இல்லாமல், முதிர்ச்சியடைந்தவராக இருப்பார், மேலும் அவர் 50 முதல் 60 வயதிற்குள் உலகில் புகழ் பெறுவார். அது 2006 ஆம் ஆண்டாக இருக்கும்.

1993 இல், சுவாமி ராம்தேவானந்த் ஜி மகராஜ் சந்த் ராம்பால் ஜிக்கு சத்சங்கம் செய்யவும், 1994 இல், மற்றவருக்கு தீட்சை அளிக்க உத்தரவிட்டார். பக்தியில் மூழ்கிய காரணத்தால், அவர் J.E. பதவியை ராஜினாமா செய்தார். ஹரியானா அரசால் 16.5.2000 அன்று ராஜினாமா கடிதம் எண். 3492. 3500 அங்கீகரிக்கப்பட்டது. 1994 முதல் 1998 வரை,

சந்த் ராம்பால் ஜி மகராஜ் வீடு வீடாக, கிராமம் கிராமமாக சென்று சத்சங்கம் செய்தார். ஏராளமான பின்பற்றுபவர்கள் இருந்தன, போலி சாதுக்களின் எதிர்ப்பும் அதிகரித்தது. 1999 ஆம் ஆண்டு, ஹரியானாவின் ரோத்தக் மாவட்டத்தில், கரோன்த்தா கிராமத்தில் சத்லோக் ஆசிரமத்தை நிறுவி, 1 ஜூன் 1999 முதல் 7 ஜூன் 1999 வரை, கபீர் ஜி தோன்றிய தினத்தை முன்னிட்டு ஏழு நாள் கொண்ட சத்சங்கத்தை நடத்தி ஆசிரமத்தை தொடங்கினர், மேலும் ஒவ்வொரு பௌர்ணமிக்கும் மூன்று நாள் கொண்ட சத்சங்கத்தைத் நடத்தினார். சத்சங்கத்திற்கு வெகு தொலைவில் இருந்து பக்தர்கள் வரத் தொடங்கினர், தத்துவஞானத்தை புரிந்துகொண்டு தீட்சை பெற தொடங்கினர். சில நாட்களில், சந்த் ராம்பால்ஜி மகராஜின் பக்தர்களின் எண்ணிக்கை லட்சத்தை தாண்டியது. மற்ற குருமார்களின் சீடர்கள் சந்த் ராம்பால் ஜியிடம் வந்து சீடராகி, பின்னர் அந்த குருமார்களிடம் கேள்வி கேட்கத் தொடங்கினர், "நீங்கள் சாஸ்திரத்திற்கு மாறான அறிவை சொல்கிறீர்கள், யஜூர்வேதம் அத்தியாயம் 8 மந்திரம் 13 இல் பூரண பரமாத்மா தனது பக்தனின் அனைத்து பாவங்களையும் அழித்துவிடுகிறார் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் உங்கள் புத்தகத்தில், பரமாத்மா தன் பக்தனின் பாவங்களை அழிப்பதில்லை என்று எழுதப்பட்டுள்ளது". உங்கள் புத்தகம் சத்யார்த் பிரகாஷ், சாமுல்லாஸ் 7 இல், பூமியைப் போல சூரியனிலும் மனிதர்களும் மற்ற உயிரினங்களும் வாழ்கின்றன, அங்கு தோட்டம், ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் உள்ளன என்று எழுதப்பட்டுள்ளது, இதெல்லாம் சாத்தியமா?

மேலும், புனித யஜூர்வேதம், அத்தியாயம் 5, மந்திரம் 1 இல், பரமாத்மா உடலுடன் உள்ளதாக எழுதப்பட்டுள்ளது. "அக்னே தனு அசி, விஷ்ணுவே த்வாம் சோமஸ்ய தனுர் அசி", இந்த மந்திரத்தில் இறைவனுக்கு உடல் உருவம் உண்டு என்று இருமுறை கூறப்பட்டுள்ளது. அந்த பரமாத்மா எல்லோரையும் காக்க உடல் கொண்டுள்ளார், அதாவது, பரமாத்மா தனது பக்தர்களுக்குத் தத்துவஞானத்தை போதிக்க இவ்வுலகிற்கு சில காலம் வரும்போது, அவர் தனது ஒளிரும் உடலுக்கு பதிலாக லேசான ஒளி உடலில் வருகிறார். அதனால்தான், மேற்கூறிய மந்திரத்தில் இரண்டு முறை ஆதாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாத போலி மகான்களும், ஆச்சார்யாக்களும் தங்கள் குறைகள் அம்பலமாகிவிடுமோ என்ற பயத்தில், சத்லோக் ஆசிரமத்தை சுற்றியுள்ள கிராமங்களில் சந்த் ராம்பால் ஜி மகராஜ் பற்றி தவறான பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். மற்றும் 12.7.2006 அன்று, அவர்கள் தங்கள் சீடர்களுடன், சந்த ராம்பால் ஜியை கொன்று ஆசிரமத்தை அழிக்க, சத்லோக் ஆசிரமத்தைத் தாக்கினார்கள். அரசாங்கம் சத்லோக் ஆசிரமத்தைக் கைப்பற்றி, சந்த் ராம்பால் ஜி மகராஜ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது பொய் வழக்குகள் போட்டு சிறையில் அடைத்தது. இப்படி 2006ல் சந்த் ராம்பால் ஜி மகராஜ் பிரபலமானார். அறியாதவர்கள் பொய்களை கூறி பிரபலமாக்கினாலும், அவர் குற்றமற்றவர். அன்பார்ந்த வாசகர்களே, நாஸ்டர்டாமஸின் தீர்க்கதரிசனத்தைப் படித்த பிறகு, இவர் எப்படி உலகில் ஆன்மீக பிரச்சாரம் செய்ய முடியும்? என்று நினைப்பீர்கள். ஆனால் இறைவன் ஒரு நொடியில் எதையும் மாற்ற முடியும். கபீர் சாஹிப் சொல்கிறார்,

கபீர், சாகேப் சே சப் ஹோத் ஹை, பந்தே சே கச்சு நாஹிம் /
ராயீ சே பர்வத் கரே, பர்வத் சே ஃபிர் ராயீ //

பரமேஸ்வர் கபீர் ஜி தனது பக்தர்களின் இரட்சிப்புக்காக தத்துவஞானம் மூலம் சமூகத்திற்கு உண்மை தன்மையை அறிய வைப்பார், பின்னர் உலகம் முழுவதும் சந்த ராம்பால் ஜி மகராஜின் ஞானத்தை ஏற்றுக்கொள்ளும்.

சந்த ராம்பால் ஜி மகராஜ், 2003 ஆம் ஆண்டு முதல், பத்திரிக்கைகளிலும், டிவி சேனல்களிலும் ஞான பிரச்சாரம் செய்து மற்ற குருமார்களிடம் கூறி வருகிறார். நீங்கள் பக்த சமுதாயத்தை சாஸ்திரத்திற்கு மாறாக வழிபடவைத்து பாவத்திற்கு ஆளாகிறார்கள். நான் சொல்வது தவறாக இருந்தால் பதில் சொல்லுங்கள் என்றார், இன்றுவரை, எந்த குருவும் பதில் சொல்லத் துணியவில்லை.

சந்த் ராம்பால் ஜி மகராஜிக்கு 2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் முதல் வியாழன் அன்று, திடீரென்று, "அனைத்து மதங்களின் சாஸ்திரங்களை படிக்க வேண்டும்" என்று தோன்றியது. முதன் முதலில் அவர் புனித ஸ்ரீமத் பகவத் கீதையைப் படித்து "கஹ்ரி நாசர் கீதா மே" என்ற புத்தகத்தை எழுதினார். அதன் மூலம் மார்ச் 2002 இல் ராஜஸ்தானில், ஜோத்பூர் நகரில் சத்சங்கத்தைத் தொடங்கினார். அதனால்தான், உலக மத இந்து குரு (சைரன்) ஐம்பது வயதில் அதாவது 2001 இல் சாஸ்திர ஞானி ஆகி பிரச்சாரம் செய்வார் என்று நாஸ்டர்டாமஸ் கூறியுள்ளார். சந்த் ராம்பால் ஜி மகாராஜ் புனித இந்து மதத்தில் 1951 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் தேதி ஹரியானா (இந்தியர்) மாநிலம் சோனிபத் மாவட்டத்தில், தனானா கிராமத்தில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்தார். எனவே, 2001 ஆம் ஆண்டு, அவருக்கு ஐம்பது வயதாகிறது, இது நாஸ்டர்டாமஸின் கணிப்புப்படி சரியானது. எனவே, அந்த உலக-மதத் தலைவர் சந்த் ராம்பால் ஜி மகாராஜ் தான், அவரது தலைமையில் இந்தியா முழு உலகையும் ஆளும். உலகம் முழுவதும் ஒரே ஞானம் (பக்தி பாதை) இருக்கும். ஒரே சட்டம் இருக்கும், யாரும் துன்பப்பட மாட்டார்கள், உலகம் முழுவதிலும் அமைதி இருக்கும். எதிர்ப்பவர்களும் இறுதியில் வருந்துவார்கள், மேலும் தத்துவஞானத்தை ஏற்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பார்கள், மற்றும் அனைவரும் மனித மதத்தைப் பின்பற்றி, பூரண முக்தி அடைந்து சத்யலோகத்திற்குச் செல்வார்கள்.

அந்த உலக மகானின் வேத நிரூபணமான தத்துவஞானத்திற்கு முன், முந்தைய சாதுக்கள் அனைவரும் தோல்வியடைவார்கள் என்றும், அனைவரும் தலைவணங்கி பணிவார்கள் என்றும் நாஸ்டர்டாமஸ் தனது கணிப்பில் குறிப்பிட்டுள்ளார். இதைப் பற்றி, கபீர் பரமேஸ்வர் தனது புனித "கபீர் சாகர்" நூலில் (550 வருடம் முன்பு சந்த் தரம்தாஸ் ஜி எழுதியது) தனது அமுத உரையில், ஒரு நாள் உலகத்தில் என்னுடைய ஞானம் மட்டுமே இருக்கும், உலகமே அமைதியாக பக்தி செய்யும், ஒருவருக்கொருவர் அன்போடு இருப்பார்கள், சத்யுகம் போன்ற பொற்காலம் மலரும். சந்த் ராம்பால் ஜி மகராஜ், கபீர் பரமேஸ்வரரின் ஞானத்தை புரிந்து கொண்டார். இந்த தத்துவ ஞானத்தை பற்றி கபீர் பரமேஸ்வர் தனது உரையில் கூறினார்:-

கபீர், அவுர் ஞான் சப் ஞான்டீ, கபீர் ஞான் ஸோ ஞான்/
ஜைசே கோலா தோப் கா, கர்தா சலே மைதான் //

பொருள் : இந்தத் தத்துவ ஞானத்தின் முன் எந்த ரிஷியாலும் குருவாலும் நிற்க முடியாது, அவ்வளவு வலிமையானது. பீரங்கி குண்டு போல, எங்கு விழுந்தாலும், அந்த இடம் மைதானம் போல் ஆக்கிவிடும்.

சந்த் கரீப் தாஸ் ஜியும் (சுடானி, ஜஜ்ஜார் மாவட்டம், ஹரியானாவைச்

சேர்ந்தவர்), கபீர் பரமேஸ்வர் அனுப்பிய தத்துவதரிசி குரு டெல்லி பகுதியில் இருந்து வருவார் என்று கூறியுள்ளார்.

கரீப், சத்குரு டில்லி மண்டல் ஆயசி, சூத்தி தரணீ சூம் ஜகாயசீ /

பரமாத்மாவின் பக்தியில் உறங்கிய மனிதர்களை எழுப்புவார். சோனிபத் மாவட்டத்திலுள்ள தனானா கிராமம், முன்பு டெல்லியின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால்தான் சத்குரு டெல்லி மண்டலுக்கு வருவார் என்று சந்த் கரீப்தாஸ் ஜி மகராஜ் கூறினார்:–

சாகேப் கபீர் தக்த கவாசா, டில்லி மண்டல் லீஜை வாசா /

பொருள் :- கபீர் பரமேஸ்வரரின் சேவகர் அதாவது பிரதிநிதி டெல்லி பிராந்தியத்தில் பிறப்பார். முதலில் தனது இந்து சகோதரர்களுக்கு தத்துவஞானத்தை போதிப்பார். இந்து சகோதரர்கள் அலறிக்கொண்டு விழிப்பார்கள், அதாவது அந்த குரு அளிக்கும் தத்வஞானத்தைப் புரிந்துகொண்டு அவரிடம் தஞ்சம் அடைவார்கள். பிறகு அந்த தத்துவத்தரிசி இந்து மத குருவின் ஞானத்தை உலகமே ஏற்றுக்கொள்ளும். நாஸ்டர்டாமஸ் இதைத்தான் கணித்துள்ளார். அந்த தத்துவதரிசி சைரனை அறியாமல், அவர் அவமதிப்புக்கு ஆளாவது வருத்தமளிக்கிறது என்றும் நாஸ்டர்டாமஸ் எழுதியுள்ளார். மேலும், புத்தி உள்ள மக்களே! அவரை புறக்கணிக்காதீர்கள். அவர் சிம்மாசனத்தில் அமர்த்தி தெய்வ வடிவில் பூஜிக்க தகுதியானவர். அந்த இந்து மதகுரு சைரன் ஆதி புருஷ் பூரண பரமாத்மாவின் பக்தர், உலக இரட்சகர் ஆவார்.

நாஸ்டர்டாமஸ், பக்கம் 41, 42 இல் மூன்று வார்த்தைகளைக் குறிப்பிட்டுள்ளார். உலகையே வெல்லும் தத்துவதரிசி குரு, கிருர் சந்திரனிடமிருந்து அதாவது காலனின் துயரமான பூமியிலிருந்து விடுவித்து, முக்தி அடையச் செய்வார் என்று கூறியுள்ளார். இதில், அந்த சைரன் மூன்று மந்திரங்களை (ஓம்-தத்-சத்) மட்டும் ஜபிக்க கொடுப்பார் என்று தீட்சை மந்திரத்தை நோக்கி குறிப்பு உள்ளது. மேலும் முக்தியடைய, இந்த மூன்று மந்திரங்களோடு வேறு எதையும் சேர்க்கமாட்டார்.

புனித ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 90 மந்திரம் 16இல் மற்றும் சாமவேதம் ஸ்லோகம் எண். 822 மற்றும் ஸ்ரீமத் பகவத் கீதை அத்தியாயம் 17 ஸ்லோகம் 23 இல், பூரண குரு (தத்துவதரிசி) மூன்று மந்திரங்களை (ஓம்-தத்-சத் இதில் தத் மற்றும் சத் குறியீடு ஆகும்) கொடுத்து, பூரண பரமாத்மாவின் (ஆதி புருஷ்) பக்தியை செய்ய வைத்து ஆன்மாவை காலனின் வலையிலிருந்து விடுவிக்கிறார் என்று ஆதாரம் உள்ளது. பின்னர் அந்த சாதகன், பக்தியின் பலத்தால், ஆதி லோகத்தில் வசிக்கும் ஆன்மாக்களிடம் செல்கிறான். அங்கிருந்துதான் தன் முன்னோர்களை விட்டு, குருர்ச்சந்திரனுடன் (கால் பகவான்) வந்து, இந்த லோகத்தில் சிக்கி துன்பப்படுகிறான். நாஸ்டர்டாமஸ் இதையும் தெளிவுபடுத்தியுள்ளார், மத்திய காலம் அதாவது. மத்திய தலைமுறையினர் இந்து மதத்தின் லட்சியமான வாழ்க்கையை வாழ்வார்கள். சைரன் தனது தத்துவஞானம் மூலம் வேத அடிப்படையிலான பக்தி மார்கத்தை மீண்டும் வெளிப்படுத்துவார், மேலும் மனித கலாச்சாரத்தை சுயநலமின்றி சீர்திருத்தம் செய்வார். (மதல்யா காலாத் ஹிந்து தர்மார்ச்சே வ ஹிந்துச்யா ஆதர்ஷ்வத் ஜாலேல்) இது பக்கம் 42 இல் மராத்தி மொழியில் எழுதப்பட்டுள்ளது. சைரன் மத்திய தலைமுறையைக் காப்பாற்றுவார் என்று மேற்கூறியவற்றின் பொருள். இந்த பக்கம் 42 இன் குறிப்பு ஹிந்தி மொழிபெயர்ப்பில் தவறிவிட்டது, எனவே இதை இங்கே எழுதி விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. கபீர் பரமேஸ்வரரும் இதையே

கூறியுள்ளார்:–

தர்மதாஸ் தோஹே லாக் துஹாயீ,
சார்ஞான் வா சார்ஷப்த கஹின் பாஹர் ந ஜாயீ /
சார்நாம் பாஹர் ஜோ பர்ஹி, பிச்லி பீடி ஹன்ஸ் நஹின் தர் ஹி //
சார்ஞான் தப் தக் சுபாயீ, ஜப் தக் த்வாதஸ் பந்த் ந மிட் ஜாயீ /

கி.பி 1947 இல் பாரதம் ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை பெற்றது. அதற்கு முன் இந்தியாவில் கல்வி இல்லை. 1951 இல், பரமேஸ்வர் சந்த் ராம்பால் ஜி மகாராஜை பூமிக்கு அனுப்பினார். 1947 க்கு முன், கலியுகத்தின் முதல் தலைமுறை என அறிந்து கொள்ளுங்கள், 1947 முதல் மத்திய தலைமுறை தொடங்கியது. ஓராயிரம் ஆண்டுகள் இந்தத் தலைமுறை பக்தி செய்யும். இதில் பக்தி முழுமையாக செய்பவர் சத்யலோகம் செல்வார். சத்யலோகத்திற்குச் செல்ல முடியாதவர்கள், அரைகுறை பக்தி செய்தவர்கள் இந்த கலியுகத்தில் ஆயிரக்கணக்கான மனிதப் பிறவிகளை அடைவார்கள், ஏனெனில் இது வேதம் சார்ந்த வழிபாட்டின் பலனாகும். இப்படியே பல ஆயிரம் வருடங்கள் கலியுகம் நிகழ்காலத்தை விட சிறப்பாக இருக்கும். பிறகு கடைசி தலைமுறை நாஸ்திகவாதியாக தோன்றும், ஏனென்றால் பக்தி யுகத்தில் சேமித்த புண்ணியம், மீண்டும் மீண்டும் பிறவிகள் எடுத்து முடிந்துவிடும். இதனால் கலியுகத்தின் கடைசி இறுதி தலைமுறை நன்றி கெட்டவர்களாக இருக்கும். அவர்களால் பக்தி செய்ய முடியாது. எனவே 1947 முதல் கலியுகத்தின் மத்திய தலைமுறை நடக்கிறது என்று கூறப்படுகிறது. 2006 முதல், அந்த சைரன் அனைவரின் முன்னிலையில் தோன்றியுள்ளார், அவர் “சந்த் ராம்பால் ஜி மகராஜ்” ஆவார்.

மேற்கூறிய மூன்று தலைமுறை பற்றி, சந்த் ராம்பால் ஜி மகாராஜ் பல ஆண்டுகளாக தனது சொற்பொழிவுகளில் சொல்கிறார், இப்போது நாஸ்டர்டாமஸின் கணிப்புகளால் தெளிவாகிறது. எனவே, பூரண குருவிடம் தீட்சை பெற்று கபீர் பரமேஸ்வரரின் பக்தி செய்யுங்கள், இல்லையென்றால் இந்த அரிய வாய்ப்பு கைவிட்டு போகும் என்று சந்த் கரீப்தாஸ் ஜி மகராஜ் கூறுகிறார். ;

கரீப், சமஜா ஹை தோ சிர் தர் பாவ், பஹுர் நஹின் ரே ஐசா தாவ் //

பொருள்: நீங்கள் தத்வஞானத்தைப் புரிந்து கொண்டால், தத்துவதரிசி சந்த் ராம்பால் ஜி மகராஜியிடம் தீட்சை பெற்று முக்தி பெறுங்கள். இந்த அறிய வாய்ப்பும், மனித பிறப்பும், தத்துவதரிசி குருவும், தற்போதைய மத்திய நடுநிலை தலைமுறையின் சமயம் மீண்டும் கிடைக்காது. இப்போதும் பக்தி செய்யவில்லை என்றால், இவ்வாறு கூறப்படுகிறது:–

யே சன்சார் சமஜ்தா நாஹின், கஹந்தா ஷ்யாம் துபஹரே நூ /
கரிப்தாஸ் யஹ் வக்த ஜாத் ஹை, ரோவோகே இஸ் பஹ்ரே நூ / /


பொருள்:– இந்த அப்பாவி உலகம் வேதத்திற்கு மாறான வழிபாட்டை செய்கிறது, அது துன்பங்களை அளிக்கும், இதையே இன்பமாக கருதுகிறார்கள் என்று சந்த் கரீப்தாஸ் ஜி மகராஜ் கூறுகிறார். ஒரு குடிகாரன் மது அருந்திவிட்டு பகலில் சாலையில் கிடக்கும்போது, அவனிடம் ஏன் வெயிலில் எரிகிறாய் நிழலுக்கு வா என்றால், அவன் குடிபோதையில், இது மதியம் இல்லை சாயங்காலம் என்று சொல்வது போல, சாஸ்திர விதியை விட்டு, தன் மனம் போன படி பக்தி செய்பவர்கள் வாழ்க்கையை வீணாக்குகிறார்கள். அதையே சிறந்ததாக கருதி கால் லோகத்தின் நெருப்பில் எரிகிறார்கள். இத்தனை ஆதாரங்களை பார்த்த பிறகும்,

பூரண குரு சொல்லும் உண்மையான பக்தி செய்யாவிட்டால், இந்த விலைமதிப்பற்ற மனித உடலும், மத்திய நடுநிலை தலைமுறையின் யுகமும் கையை விட்டுப் போய்விடும், இந்த நேரத்தை நினைத்து வருந்தி அழுவீர்கள் என்று சந்த் கரீப்தாஸ் ஜி மகராஜ் கூறுகிறார். பந்தி சோட் கபீர் பரமேஸ்வர் சொல்கிறார்:–

ஆச்சே தின் பாச்சை கயே, சத்குரு சே கியா நா ஹேத் /
அப் பச்தவா க்யா கரே, ஜப் சிடியா சுக் கயி கேத் //

பூரண குரு சந்த் ராம்பால் ஜி மகராஜை அறிந்து கொண்டு, தாமும் தங்கள் குடும்பமும் மோட்சம் பெற அனைத்து மனித சமுதாயத்தையும் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமும் கூறி பூரண முக்தியை பெறுங்கள். பொற்காலம் தொடங்கிவிட்டது. தத்துவதரிசி குருவான சந்த் ராம்பால் ஜியை அறிந்து, லட்சக்கணக்கான புண்ணிய ஆன்மாக்கள் உண்மையான பக்தி செய்து எல்லாத் தீமைகளையும் விட்டுவிட்டு, மிக்க மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

மேலும், பின்வரும் மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஜோதிடரால் மராத்தி மொழியில் நாஸ்டர்டாமஸின் கணிப்புகளின் மொழிபெயர்ப்பின் புகைப்பட நகலை படிக்கவும்:–



की
भविष्यवाणियों का अपूर्व अर्थग्रहण व सम्प्रेषण
भारत के उज्ज्वल भविष्य के दर्शन
महायुद्धों से सम्बन्धित उद्घोषणा
उन्मादियों द्वारा धर्मस्थलों को नेस्तनाबूद
के कर्णधारों का तख्तापलट
भी बहुत-बहुत-बहुत कुछ

होते ही वे फिर से विश्व में योग्यमार्ग से भ्रमण करके शत्रुत्व के भाव से भारत को त्रस्त करेंगे। देखिए, प्रथम मुस्लिम समाज रूप से शुक्र भारत पर आक्रमण करके उस भूमि को तहस-नहस कर देगा। उसके बाद भारत में घुसकर वे सत्ता पर कब्जा करेंगे, अंधश्रद्धालु और दुर्बल भारतीय जनता को सतायेंगे और उन्हें मुस्लिम धर्म की दीक्षा देंगे। उसके कारण महान् भारतमाता मुस्लिमों की दासी बनेगी। भारतीय प्रदेश और समाज भ्रष्ट होगा। यह कार्य इ.स. 1291 से 1999 तक चलेगा।

इसी काल में भारत माता का (कामदुहिता का) बंधु गुरु पिंगल सम शत्रुत्व भाव धारण करके पश्चिम यूरोप के क्रिश्चनों को व्यापारी और नाविक बनाकर भारत की ओर भेज देगा। वे प्रथम व्यापारी बनकर भारतमाता को लूटेंगे। उसके बाद एक-एक प्रदेश हाथ में लेकर उन्हें और-वहाँ की जनता को भ्रष्ट क्रिश्चन बनाकर उन पर शासन करेंगे। धीरे-धीरे अपना प्रभाव बढ़ाकर वे संपूर्ण भारत माता को अपने कब्जे में ले लेंगे। उसी समय भारतीय गुलाम दुर्बल जनता मोक्षप्राप्ति के लिए मंदिर बाँधकर देवी-देवता के भजन-कीर्तन करती रहेगी।

इसी काल में धोखेबाज क्रिश्चन गुरु का भ्रष्टाचारी रूप लेकर आयेंगे। यहाँ के प्राचीन ज्योतिष शास्त्रों का अध्ययन कर किरो जैसे यूरोपीयन विश्व प्रसिद्ध ज्योतिषी होंगे। लेकिन भारतीय अंध और झूठे ज्योतिषियों को अपने ज्योतिष-ग्रंथों का अर्थ नहीं समझेगा। वे गुलाम होंगे। उन्हें अपनी मानसिकता और प्रवृत्ति के कारण अंग्रेजी भाषा में मौजूदा ज्ञान ही सत्य लगेगा। लेकिन कीरोसम भारतीय ज्योतिषशास्त्र का अध्ययन करके महान् विद्वताधारक लेखकों द्वारा लिखित अंग्रेजी पुस्तक के आधार पर ज्योतिषशास्त्र नहीं समझेगा अन्त में वे शापित होंगे और उसके कारण उनमें मूर्खता और क्रूरता होगी।

उसके कारण महापरिवर्तन काल का आरंभ होगा। वह काल होगा इ.स. 1905 से 2028 तक। सबसे पहले भारत को स्वातंत्र्य प्राप्त करने के लिए काँग्रेस की स्थापना होगी। भारतीय जनता महान् राक्षस कुंभकर्ण के अनुसार गहरी नींद में से जागृत होने लगेगी। झूठा ज्योतिषशास्त्र नष्ट करके अचूक भविष्य ज्ञान देने के लिए मद्रास में के.एस.कृष्णमूर्ति का जन्म होकर वे भारतीय जनता को कृष्णमूर्ति पद्धति का ज्ञान देंगे। 1998 में महाराष्ट्र में एक ज्योतिषशास्त्री नॉस्ट्रॅडॅमस की भविष्यवाणी में अंकित सांकेतिक भाषा का स्पष्टीकरण कर उसमें लिखित भविष्य घटनाओं का अर्थ देकर अपना भविष्यग्रंथ प्रकाशित करेगा। उस समय वह भारत में अज्ञात ज्योतिष द्वारा कलियुग के विषय में दिये गए महान् सांकेतिक भाषा में अर्थ को सुलझाकर उसमें लिखित महान् भविष्यवाणी का अर्थ स्पष्ट करेगा। लेकिन भारतीय जनता पर और सत्ताधारियों पर झूठे प्रचंड ज्योतिषियों का प्रभुत्व होगा। वे इन नये महान् ज्ञानी ज्योतिषियों को प्रकाश में नहीं आने देंगे। लेकिन उन पर स्वार्थ के अंधकार से, झूठे धर्म जाति का भूत सवार हुआ होगा। अब भी वे मातंग (गारुड़ी) कार्य में मग्न होकर सत्य का, मानवता धर्म का, ज्योतिष ज्ञान का खून करते रहेंगे।


२१ व्या शतकात झेपावताना जगातील
सर्व श्रेष्ठ भविष्यवेत्ता
नॉस्ट्राडेमस्
यांचे जागतिक स्तरावरचे भविष्य
- डॉ. रामचंद्र ज. जोशी

२१ व्या शतकाकडे झेपावतांना
जगातील सर्वश्रेष्ठ भविष्यवेत्ता!

# मायकेल द नॉत्रदेम (नॉस्ट्राडेमस)

यांचे जागतिक स्तरावरचे भाविष्य

**डॉ. रामचंद्र ज. जोशी.**

**ग्रंथ मिळण्याचे ठिकाण**

| | |
|---|---|
| **जोशी ब्रदर्स**<br>अप्पा बळवंत चौक,<br>पुणे २.<br>फोनः ४४५९४२४ | **श्री गजानन बुक डेपो**<br>भरत नाट्य मंदिरासमोर,<br>पुणे ३०.<br>फोन : ४४७३३०४ |
| **श्री गजानन बुक डेपो**<br>कबुतरखाना, दादर,<br>मुंबई २८.<br>फोन: ४२२७५८४ | **श्री गजानन बुक डेपो**<br>बिल्डिंग नं. १३२, पहिला माळा,<br>पंतनगर, घाटकोपर, मुंबई ७५.<br>फोन: ५१३८००९ |

...(32)...

आफ्रिकेला वळसा घालण्याचा द्राविडी-प्राणायाम त्या सुवेज कालव्याच्या निर्मितीने कमी झाला हे खरेच, पण त्या कालव्याच्या निर्मितीची कल्पना नॉस्ट्राडेमसच्या विलक्षण भाकिताने फ्रेंच वास्तुशास्त्रविशारद लेसेप्स याला सुचलेली आहे ही वस्तुस्थिती आहे.

पाहिल्या प्रकरणातच स्पष्ट केले आहे की, १९९९ साली छेडल्या जाणाऱ्या तिसऱ्या जागतिक महायुध्दात, आज वरवर पाहता परस्पर विरोधी राष्ट्रे मित्र बनून, अमेरिका व रशिया यांचे एकत्रित बळ प्रचंड असेल. नॉस्ट्राडेमसच्या मृत्यूनंतर २०९ वर्षांनी जन्माला आलेली अमेरिका आपल्या सामर्थ्याच्या शिखरावर असेल असे, शतक २, श्लोक ४९ मध्ये हा द्रष्टा ज्योतिर्विद सांगतो हे सत्य किती चित्तथरारक आहे?

## 'भारत' सर्वश्रेष्ठ हिंदु राष्ट्र?

या पूर्वीच्या लेखात कै. इंदिरा गांधींचा नॉस्ट्राडेमसने केलेला उल्लेख आपण वाचला. त्या संदर्भात हेन्री सी रॉबर्टस 'कंप्लीट प्रोफेसीज ऑफ नॉस्ट्राडेमस' या १९४२ साली प्रसिध्द झालेल्या आपल्या पुस्तकात लिहितो- 'डॉमिनन्ट प्रिमियर' (म्हणजेच प्रभावी पंतप्रधान) इंदिराजी गांधी यांच्या आकस्मिक खुनानंतर दोन बदल होतील. त्यातील क्रमांक पहिल्या बदलाप्रमाणे त्यांचे पुत्र राजीव गांधी जरी पंतप्रधान झाले असले तरी दुसरा जो बदल होणार आहे तो म्हणजे एक मध्यम वयाचा नेता पाकिस्तान, ब्रह्मदेश, बांगला देश, श्रीलंका, नेपाळ, तिबेट, अफगाणिस्तान, मलाया आदी देश जिंकून हिंदुस्थानाला जगातील सर्वश्रेष्ठ हिंदुराष्ट्र म्हणून निर्माण करणार आहे. तो सार्वभौम असेल. औदार्यात अजोड व आपल्या सनातन धर्माला पुनरुज्जीवन देईल आणि भारत खंडातच नव्हे तर साऱ्या पृथ्वीवर सुवर्णयुग आणील. (सेंच्युरी शतक ५, श्लोक ४१ वा). या श्लोकाबद्दल सर्वच भाष्यकारांत एकमत आहे. वरील दोन बदलांच्या दरम्यानच्या काळात सत्ताधारी मंडळीत वावरणारी चांडाळ चौकडी सत्ताकेंद्र आपल्या ताब्यात ठेवून बराच काळ मनमानी करील. वर उल्लेख केलेला नेता फक्त जगाला अद्याप माहीत व्हायचा आहे!

...(33)...

: ४ :

# थांबा, इ. स. २००६ मध्ये रामराज्य येतेय!

## हिंदु जगज्जेता भूतलावर सुवर्ण-युग आणणार आहे!

### ज्योतिष हे हि एक शास्त्र आहे

'शितावरून भाताची परीक्षा' या वाकप्रचारानुसार नॉस्ट्राडेमस यांनी वर्तविलेल्या अनेक भाकितांचे खरेपण आपण गेल्या प्रकरणात पाहिले. नॉस्ट्राडेमस यांना हे सर्व ज्ञान आगामी पिढीला देणे आवश्यक वाटले; व त्याने 'सेंच्युरी' मंध्ये दहा शतके (१००० श्लोक) लिहिलीं व १५५५ साली तें पुस्तक प्रसिध्द झाले. या पुस्तकातील श्लोकांची वर्गवारी केली तर असे आढळते की पहिले सुमारे १०० श्लोक फ्रान्स व युरोपसाठी, म्हणजे नॉस्ट्राडेमसच्या काळातील घटनांबद्दल केलेल्या भाकितांवरच खर्च झाले आहेत. त्यानंतर ३५० - ४०० श्लोक १९ - २० व्या शतकातील घटनांच्या भाकितांचा ऊहापोह करण्यात लागले असून उरलेल्या ४५० - ५०० श्लोकांत २१ व्या शतकापासून इ. स. ३७९२ पर्यंतच्या कालखंडात होऊ घातलेल्या भाकितांचे विवरण आलेले आहे.

-ज्योतिष शास्त्र हे असे चमत्कारिक शास्त्र आहे की सर्वसामान्य माणसांपासून अधिकारी वर्ग, देशा-राष्ट्रांचे शास्ते, धनाढ्य, श्रीमंत, राजेरजवाड्यापर्यंत सर्वांनाच त्याचे आकर्षण आहे. उघडरीत्या त्या शास्त्राचा निषेध, परंतु खाजगीरीत्या त्याची चाचपणीच केवळ नव्हे तर आवर्जून त्या शास्त्राच्या पारंगत ज्योतिर्विदाची मनधरणी करण्याची प्रथा सर्वकाली व सर्व देशांतून रूढ असल्याचे दिसते. ज्योतिष हे शास्त्र आहे, त्याचे आकाशस्थ ग्रहांच्या गतीनुसार ठरलेले आडाखे आहेत. इथून तिथून निसर्ग हा सारखाच असल्याने त्या त्या काळच्या ग्रहस्थितीनुसार व्यक्ति, समाज, देश नि त्यांचे धर्म, संस्कृती यावर परिणाम घडत असतात. ज्योतिषी फक्त त्याने केलेल्या शास्त्राभ्यासाच्या आधाराने मिळविलेल्या ज्ञानाने जे परिणाम घडायचे असतात त्याची आगाऊ माहिती सांगतो, त्याचे आनंददायी, सुखसंवर्धक बदल स्पष्ट करतो. ते बदल केव्हा कसे होतील त्याबद्दल भाकित वर्तवतो. त्याचप्रमाणे दुःख वर्धक उलथापालथी काय होतील त्याचीही नोंद करीत असतो. जे घडायचे असते ते ज्योतिषाला टाळता येत नाही - किंवा तो ते घडवीतही नाही. म्हणून नॉस्ट्राडेमससारखे जगप्रसिध्द ज्योतिर्विद आत्मविश्वासाने म्हणतात की, 'मी लिहिले, सांगितले - त्यात काहीही बदल करण्याची माझी इच्छा नाही.'

...(40)...

गेली नऊ वर्षे इराकबरोबर विध्वंसक युध्दात गेली. जवळ जवळ एक हजार किलोमीटर प्रदेश इराकने सोडलेला नाही. युध्दकैदी सोडविता आले नसल्याने युध्द थांबले, परंतु इराणची मानहानी संपलेली नाही. या युध्दात पेट्रोलियमच्या उद्योगाची महत्त्वाची साधने उद्ध्वस्त झाली, अर्थव्यवस्था, उद्योगधंदे, रोजगार यांची झालेली हानी फार मोठी आहे. शाह यांच्या पदच्युतीच्या सुमारास जी स्थिती होती त्यापेक्षा कितीतरी पटीने सध्याची इराणची आर्थिक स्थिती ढासळली आहे.

आपले घरदार, कौटुंबिक सुख व सुरक्षितता या बाबींचा विचार टाळता येणे अशक्य झाले आहे; आणि त्याबद्दल बहुजनसमाज बोलू लागला आहे. इराणी राष्ट्रांच्या समस्यांना तोंड फुटू लागले आहे आणि त्या समस्यांची सोडवणूक करायला इस्लामची अथवा धर्माची वाढ पुरेशी पडणार नाही याची जाणीव बहुजन समाजालाच नव्हे तर सत्तारूढ पक्षातल्या मवाळांनाही होऊ लागली आहे.

नॉस्ट्राडेमस यांनी शतक १ श्लोक ७० मध्ये असे स्वच्छ लिहून ठेवले आहे की, खोमेनीच्या कडव्या हेकटपणाला विरोधकच कडवेपणाने मोडून काढतील नि खोमेनी 'विरोधकांची सरशी होईल; त्यांचा विजय होईल. अखेरीस फ्रान्सच मध्यस्थी करून खोमेनी व त्याचे साथीदार यांना दया दाखवावी असे सांगेल व बंडखोर फ्रान्सचा सल्ला मानतीलही! नॉस्ट्राडेमस या सर्व घडामोडींचे वर्णन करून सांगतोय. 'थांबा, रामराज्य येतेय!' जुलै १९९९ ते इ. स. २००६ पर्यंत चालणाऱ्या या सर्व संहारक युध्दाच्या शेवटी सुवर्णयुग अवतरेल; हिंदुस्थानात उगवणारा तारणहार शायरन व फ्रेंच नेता मार्स यांची युति होईल. त्यानंतर ७५ वर्षे जगात सुख-समृध्दि, व शांतता नांदेल. (१० / ८९)

नॉस्ट्राडेमसने निःसंधिग्धपणे म्हटलेय, की नव्याने प्रकट होणारा शायरन (CHYREN) आजच्या घटकेला अज्ञान आहे. परंतु तो ख्रिश्चन वा मुस्लिम नसेल. पाश्चात्य विद्वानांनीही हे विधान मान्य केले आहे.

नॉस्ट्राडेमस स्वतः ज्यू वंशाचा, ख्रिश्चन धर्म स्वीकारलेला, फ्रान्सचा नागरिक. तो ४५० वर्षांनी अवतरणारा विश्वनेता हिंदूच असेल असे छातीठोकपणे सांगतो, त्या हिंदु नेत्याचा गौरव करतो तो ह्याच कारणांनी की त्या स्वातंत्र्यसूर्य शायरनच्या उदयाबरोबर आधीते नेते निष्प्रभ होऊन नम्र होतील. 'तो' शायरन तिसऱ्या जागतिक युध्दाच्या काळानंतर वाचलेल्या नागरिकांना कायद्याचे राज्य देईल. कुणावरही अन्याय होणार नाही. 'गुणाः पूजास्थानं नच लिंगम् नच वयः' बरोबरच 'नच श्रध्दास्थानः' ही त्या लोकशाही राज्याची वेदी असे. सामाजिक रचना 'गुणकर्मविभागशः' असेल. जन्मदात्या मातापित्याच्या श्रध्दास्थानांवर ती आधारलेली असणार नाही. राखीव जागा, खास हक्क ही भाषा असणार नाही. त्याचप्रमाणे दलित, मागासलेला समाज अशी विभागणीही या साम्राज्यात असणार नाही. प्रत्येकाच्या वैयक्तिक गतिशील प्रयत्नांना प्रोत्साहन दिले जाईल; त्याच्या प्रगमनशील कर्तृत्वाला भरपूर संधि व वाव दिला जाईल, सरसकट आमिषांची खिरापत वाटली जाणार नाही. यामुळे जो मेहनत करील

...(41)...

त्याला 'संधि' मिळेलच मिळेल अशी आश्वासक खात्री पटल्याने राष्ट्रसंवर्धनाला आवश्यक असणारी चढाओढ समाजात मानवाला कार्यप्रवण करील. शासन अमानवी वागणारांना वठणीवर आणीलच, शिवाय त्यांच्यातील अतिरेक्यांचा निःपात केला गेला जाईल. सर्वांना लागू पडणारा समान कायदा राज्यभर कसोशीने पाळण्यात येईल.

आता एक गोष्ट निर्विवादपणे सिध्द झाली आहे की तिसऱ्या अतिसंहारक महायुध्दातून नव्याने दर्शन घडविणारा तारणहार 'आशिया खंडात जन्म घेतलेला असेल, (शतक २० श्लोक २५).' युरोपात नाहीच नाही! तो ख्रिश्चन नसेल, मुसलमान तर नसेलच नसेल. ज्यूही असणार नाही. तर हिंदूच असेल असे जे नॉस्ट्राडेमसने निःसंदिग्धपणे म्हटलेय् ते पाश्चात्य विद्वानांनाहि मान्य आहे. तो हिंदू-नेता अन्य सर्व भूतपूर्व नेत्यांपेक्षा महत्तर असेल, बुध्दिमान असेल, अजिंक्यही! नॉस्ट्राडेमसचा शतक ६ श्लोक ७० फार महत्त्वाचा मानावा लागेल.

The grest CHYREN will be
chief of the world.
Loved feard and unchallenged
even at the death
His name and praise will reach
beyond the skies.
And he will be content to be
known only as Victor.

महान् शायरन जगाचा प्रमुख नियंता होई ल. त्याच्यावर सर्वसामान्य जनता प्रेम करील; त्याचबरोबर त्याचा वचक येवढा असेल की प्रजाजन काहीही अपकृत्य करायला धजणार नाहीत. त्याच्या मृत्युनंतरही त्याचा दबदबा कायम राहील, त्याचे नाव आणि पराक्रम नागरिकांच्या मनावर इतके खोलवर परिणाम करतील की त्याची कीर्ति त्रिखंड पसरेल. सामर्थ्य इतके प्रचंड असेल की शत्रू त्याच्या देशाला घाबरतील, त्याच्या राज्याची, नव्हे साम्राज्याची दहशत मानतील. तो सार्वभौम असेल, त्याच्या कर्तृत्वाचा प्रभाव संपूर्ण जगावर पडेल. हा महान् हिंदु नेता भारताला भूमि आणि सागर यावर अजिंक्यपद प्राप्त करून देईल. आतापर्यंत निद्रिस्त असलेल्या हिंदूंना खडबडून जागृत करून त्यांच्याकरवी अशी काही चिरंतन कामगिरी करवील की ज्याने ते आपल्या पूर्वजांचे सार्थ वारस ठरतील.

शतक २, श्लोक ७९ द्वारा फ्रेंच द्रष्टा नॉस्ट्राडेमस स्वच्छपणे सांगतोय की, शायरन क्रूर आणि हिंसक जमातीतल्यांना ठिकाणावर आणिल आणि चंद्रकोरीच्या ताब्यातील भूमि मुक्त करील. त्याचे हे शब्दच पहा किती बोलके आहेत!

फ्रेंच - Subjuguva 10 gent crelle add fiere Le grand chyren ostera du longin Tous les captifs par seline baniaet.

...(42)...

इंग्लिशमध्ये स्वैर भाषांतरित शब्दात सांगायचे तर -

1) Will subjugate the cruel and
violent freed,
The great CHYREN will
take from distance,
All those held captive by
crescent moon

वरील श्लोकातील Cruel and Violent held captive by crescent moon म्हणजेच - हिंसक आणि क्रूरचंद्र हे शब्द इतके अर्थवाही आहेत की वरील उल्लेख मुसलमानांना उद्देशूनच आहेत याबाबत दुमत न व्हावे.

थोडक्यात सांगायचे तर शायरनच्या कारकीर्दीत या भूतलावर सुवर्णयुग अवतरेल. त्याच्या मृत्यूनंतरही त्याच्या महानतेचे व सद्‌गुणांचे आवर्जून गुणगान होत राहिल. पण त्याच्या मनाची शालिनता, विनम्रपणा व औदार्य इतके ढळढळीतपणे दिसते की यापूर्वी नमूद केलेल्या शतक ६ श्लोक ७० व्या श्लोकाच्या शेवटच्या ओळीत त्याबद्दल केलेला उल्लेख फार बोलका आहे. (शायरन म्हणतोय) 'जनतेने त्याच्याबद्दलचा उल्लेख फक्त' एक विजयी नेता या तीन शब्दात करायचा तर करावा आणखी.विशेषणे त्याच्या नावाला चिकटवू नयेत.

मधल्या काळात हिंदूधर्माचे व हिंदूंच्या आदर्शवत् जीवनाचे पुसट झालेले क्षणचित्र, पुन्हा आपल्या देदिप्यमान उत्तुंग स्वरूपात प्रस्थापित होणारच, आणि मानवी संस्कृती निर्धोक बनेल हे नॉस्ट्राडेमसने पुरेशा स्पष्टपणे सुचविले आहे. त्यात संदिग्धता कुठेही नाही. हे सर्व घडवून आणणारा आज अज्ञात असणारा परंतु योग्य समयी प्रकट होणारा महापुरुष तथा शायरन हा हिंदुधर्मीयच असेल असेही नॉस्ट्राडेमस निखालसपणे सांगतो, नव्हे नव्हे, जवळ जवळ साडेचारशे वर्षापूर्वी अक्षरबध्द करतो. त्याने या शायरनच्या मनाचा घेतलेला वेधही इतका काही तर्कशुध्द व अचूक आहे की नॉस्ट्राडेमसच्या द्रष्टेपणाचे आश्चर्य वाटते! नॉस्ट्राडेमसने म्हटलेय की, शायरन बेचैन मनाने खूप प्रवास करील. या बेचैनीचे कारण काय असणे शक्य आहे? आपल्या धर्मबांधवांच्या समस्या आणि त्यांची सद्यःकालीन दयनीय अवस्था हे असू शकेल! त्या बेचैन अस्वस्थ मनाचा कानोसा आपण पुढच्या प्रकरणात घेऊ!

...(43)...

# : ५ :

# नॉस्ट्राडेमसच्या भाकितांना दुजोरा देणारी आणखी कांही भाकिते

उभ्या आयुष्यात भारताला कधीही भेट न दिलेल्या महर्षी नॉस्ट्राडेमसने, सुमारे ४००-४५० वर्षांपुर्वी,'२००१ साली प्रलययंकारी विनाशाच्या उंबरठ्यावर असलेल्या जगाला शायरन (CHYREN) हा हिंदू नेता आपल्या क्षात्रतेजाने तारणहार होईल.' या स्वातंत्र्यसूर्याच्या आगमनाने बलाढ्य हिंदू राष्ट्राचा उदय होऊन हिंदूंचे पुनरुत्थान होईल, हिंदू साम्राज्य स्थापन होऊन 'सुवर्णयुग अवतरेल' असे भविष्य शब्दबध्द केले आहे.

१९९९ साली सुरू होणाऱ्या व इ. स. २००६ ला संपणाऱ्या महायुध्दासंबंधी अनेक श्लोकात नॉस्ट्राडेमस लिखित, 'सेंच्युरी' मध्ये 'शायरन' या टोपण नावाचा उल्लेख 'विश्वनेता' म्हणून ठिकठिकाणी केलेला आढळतो. गेली जवळ जवळ २०० वर्षे या 'शायनर' चा शोध घेण्याचे काम नॉस्ट्राडेमस विषयातील तज्ञ हिरीरीने करीत आहेत. गेल्या प्रकरणांत या विश्वनेत्याबद्दल नॉस्ट्राडेमसच्या कित्येक अभ्यासकांनी लढविलेले तर्क-कुतर्क किती विसंगत आहेत हे दाखविले; आणि त्या संदर्भात सध्याचा इराणचा धर्मनेता आयातुल्ला खोमेनीचे नाव आग्रहाने घेतले जाते ते तर किती असंबध्द आहे त्याचीही चर्चा केली.

नॉस्ट्राडेमसच्या भविष्यवाणीत 'क्रम' नसतो-सकारण नसतो, त्यामुळे हे तर्काधिष्ठित घोटाळे होतात हे जरी खरे असले तरी नॉस्ट्राडेमस वेगवेगळया लोकांमधून शायरन् बाबत जे विखुरलेले उल्लेख करतो त्यावरून येऊ पाहाणाऱ्या ३ऱ्या जागतिक युध्दकालातील क्षितिजावर नव्याने उगवणारा पण आज जगाला अज्ञात असलेला जगज्जेता कोण असेल, कुठचा असेल याबाबत सुसंगत तर्ककरायला अडचण पडू नये.

पृष्ठसंख्येचे बंधन लक्षांत घेऊन आतापर्यंत नॉस्ट्राडेमसच्या श्लोकांचे 'शतक अमुक व श्लोक क्रमांक अमुक' एवढाच निर्देश करून त्याने वर्तविलेल्या भाकितांचा मागोवा घेत घेत गूढार्थांची उकल केली. परंतु, आता यापुढे महान् शायरनच्या कर्तृत्वाचा प्रकाश पाडणाऱ्या भाकितांबद्दलचे लेखन, नुसतेच शतक 'श्लोक' क्रमांक अशा संदर्भात न देता, आवश्यक तेवढे मूळ श्लोक, जसेच्या तसे, उध्दृत केल्याशिवाय वाचकांचेही समाधान होणार नाही म्हणून ते प्रसिध्द करण्याचे योजिले आहे. मूळ फ्रेंच भाषेतील श्लोक देणे अशक्य नाही. तरी ती भाषा अत्यल्प लोकांना समजणारी असल्याने त्या श्लोकांचे इंग्रजीत भाषांतर उध्दृत केले जाईल. त्यावरून नॉस्ट्राडेमसच्या एकेका विधानाचे निरुपण करणे सोपे होईल.

...(44)...

यापूर्वीच्या २ ऱ्या प्रकरणांत नॉस्ट्राडेमसचा जीवनवृतांत देतांना, त्याने गूढ भाषेत भविष्यकथन कसे केले आहे त्याचे उदाहरण म्हणून, 'सेंच्युरीं' च्या शतक ४ श्लोक १४ चा पूर्वार्ध मूळ फ्रेंच व त्याचेच इंग्रजीत रुपांतरित भाग उध्दृत करून त्याबद्दल विवरण केले. तिसरे प्रकरण नॉस्ट्राडेमसच्या तंतोतंत खऱ्या झालेल्या भाकितांची ओळख वाचकांना व्हावी म्हणून लिहीले, त्यात पुन्हा वरील शतका-श्लोकाच्या आधारे भारताच्या 'डॉमिनंट प्रिमिअर' कै. इंदिरा गांधी यांच्या अकस्मात (इंग्रजी शब्द आहे Sudden) हत्येने 'भारत' सर्वश्रेष्ठ हिंदुराष्ट्र घडविण्याच्या संभाव्य दोन बदलांचा उल्लेख केला तो असा- इंदिराजींचे पुत्र राजीव गांधी हे पंतप्रधान होतील (श्लोकातील शब्द shall cause change) हा पहिला बदल तर, वरील शब्दांपाठोपाठ त्याच श्लोकात आलेल्या 'and put another in the reign soon' या अधोरेखित शब्दांनी ध्वनित होणारे राजीव गांधींच्या पाठोपाठ २० व्या शतकाचा अस्त होण्याचे काळी उगवणारे दुसरे सत्ताधारी म्हणजेच नॉस्ट्राडेमसना अभिप्रेत असलेला 'शायरन' असेल हे सुसंगत वाटते. हेन्री सी. रॉबर्टस् नामक नॉस्ट्राडेमसचे एक प्रसिध्द भाष्यकार आहेत. यांनीही वरील विधान उचलून धरले आहे.

नॉस्ट्राडेमस येवढ्यावरच थांबत नाही तर विश्वनेत्याबद्दल आणखी काही महत्त्वाच्या खुणा दाखवतो.

शतक ५ श्लोक ४१ मध्ये नॉस्ट्राडेमसने स्पष्टच सांगितले आहे की, रात्री अंधाऱ्या वेळी (त्यांचे शब्द आहेत - Noctural time) 'तो' जन्माला येईल. तो सर्वभौम असेल आणि औदार्यात त्याच्याशी कुणीही बरोबरी करू शकणार नाही. तो आपल्या सनातन धर्माचे पुनरुज्जीवन करील आणि या अवनीतलावर सुवर्णयुग आणील!

'अंधाऱ्या वेळीं' या शब्दाचे अनेक अर्थ संभवतात. पैकी एक म्हणजे श्रीकृष्णाच्या जन्माचे वेळेप्रमाणे 'तो' शायरन रात्रीच केवळ नव्हे तर अमावास्येच्या अंधःकारमय रात्रीहि जन्म पावला असेल! दुसरा असाही अर्थ होऊ शकतो की, भोवतालचे जगात जेव्हा त्या जगास 'अंधार-युग' म्हणण्याइतकी काळ्या कृत्यांची बेबंदशाही माजली असेल तशा भयंकर कालावधीत 'शायरन'ने या जगात पदार्पण केले असावे. तिसराही अर्थ या 'रात्री'च्या उल्लेखाला चिकटवला जातो, तो म्हणजे, या अवनीतलावर चालू असलेल्या 'जगा'मध्ये आणीबाणी जाहीर होऊन (उदा. २ ऱ्या महायुध्दाचे वेळी जशी अंमलात होती तशी) ब्लॅक आऊट असेल तेव्हा जन्माला आलेले हे मूल असावे! या सर्व लेखनाचा इतकाच इत्यर्थ निघतो की आगामी महासंहारक तिसऱ्या महायुध्दात अमेरिका-रशियाच्या युतिसह 'शायरन' ही तिसरी भारतीय शक्ती महान कार्य करील. आज ती अज्ञात असली तरी ती व्यक्ती आजच्या जगात वावरत असेल. अमावस्येसारख्या कुठल्या तरी अंधेऱ्या रात्री जन्म घेतलेली व आगामी महान नेता ठरणारी ही व्यक्ती तरुण १६ते२०-२५ वर्षाची तरी असेल किंवा पन्नाशीसाठी गाठलेली अनुभवी ध्येयैकशरण प्रौढ व्यक्तीही असू शकेल; यापेक्षा शायरनच्या वयावर प्रकाश पाडणारा उल्लेख नॉस्ट्राडेमसने कुठे केल्याचे आढळत नाही.

...(45)...

नाही म्हणायला नॉस्ट्राडेमस हे मात्र नमुद करतो की या नेत्याच्या नेतृत्वाखाली भारत हा जगातील सर्व-श्रेष्ठ देश बनेल. इतकेच नव्हे तर दूरवर पसरलेले हिंदूंचे साम्राज्य नव्याने आकारास येईल.

शतक १, श्लोक ५० मध्ये त्या पुरुषाचा पुन्हा उल्लेख आढळतो तो असा-

'From Peninsula of three seas will be born one who will make Thursday his day of worship. His fame praise and rule will form mighty by land, sea. There will be a tempest of India.'

तीन सागरांनी बनलेल्या व्यापक द्वीपकल्पात तो जन्म घेईल; त्याचा गुरुवार हा प्रार्थनेचा दिवस असेल. त्याची कीर्ति त्रिखंडात पसरेल. त्याचे सामर्थ्य इतके प्रभावी असेल की त्याच्या आक्रमक घोडदौडीमुळे उत्पन्न झालेल्या त्याच्या प्रभावाने वादळी वातावरण उत्पन्न होईल. द्वीपकल्प, गुरुवार प्रार्थनेचा दिवस (या संदर्भात असेही म्हटले गेले आहे की शायरनचा विश्रांती घेण्याचा दिवस सोमवार असेल). या तिन्ही लाक्षणिक शब्दांद्वारे नॉस्ट्राडेमसला काय सुचवायचे असावे त्याबद्दल यापूर्वीच्या प्रकरणांतून स्पष्टीकरण केलेच आहे. या सर्वांचा निःसंदिग्धपणे आशय स्पष्ट होतो तो हा की शायरन हा महाम नेता भारतात जन्मलेला हिंदू नेताच असेल.

वरील भाकिताला दुजोरा देणारे भाष्य नॉस्ट्राडेमसने स्वतःच शतक ५, श्लोक २५ मध्ये केले आहे तेच पहा ना -

The Arab Primer, Mars, Sol, Venus, Leo,Rule of Church will surrender to the sea towards Persia, close to a million, True serpent power invade Turkey and Egypt.'

मागे उल्लेख केलेल्या हेन्री रॉबर्टस्ने याही श्लेकाखाली, आपल्या पुस्तकात टीप दिली आहे की -

'Christian Ideal will be overcome by Oriental Ideology where serpent meaning True serpent.....'

(म्हणजेच कुंडलिनी शक्ति धारण करणारी व्यक्ति). नॉस्ट्राडेमस भविष्याचा वेध घेऊन, वरील श्लोकात स्वच्छपणे सांगून टाकतो की सागराच्या नावाचा धर्म ज्याचा आहे (म्हणजेच हिंदी महासागर त्या अनुषंगाने हिंदुधर्म-तथा हिदुस्थान!) - कुठल्याहि प्रादेशिक भूमीकडे अंगुली निर्देश करण्याकरिता असा उल्लेख कुठल्याही भौगोलिक वाङमयात आढळत नाही-तो ज्याचा आहे त्याच्या पुढाकाराने युरोपमधील नव्हेत तर ख्रिश्चन व यावनी संस्कृतीचा खातमा केला जाईल. त्यांची सारी केन्द्रे ज्या ज्या राष्ट्रात विखुरलेली आहेत ती राष्ट्रेही पादाक्रांत केली जातील. इतर, कोणत्याही धर्मात ज्याप्रमाणे गुरुवार हा प्रार्थनेचा दिवस म्हणून पाळला जात नाही त्याचप्रमाणे कुंडलिनी शक्ति कुणाही बिगर हिंदूला ज्ञात नाही. हिंदूंचे ते खास शक्तिस्थान आहे, ते हिंदुच इजिप्त, तुर्कस्तान इत्यादी मध्यपूर्वेत असलेल्या सत्ताधाऱ्यांना दूर फेकून तिथे हिंदु संस्कृति केवळ नांदू लागेल असे नाही तर तिचा अम्मल सुखेनैव चालू राहील.

...(46)...

वरील भाकितावर आणखी झगझगीत प्रकाश टाकणारे भाकीत नॉस्ट्राडेमसने शतक १०, श्लोक ९६ मध्ये प्रसिध्द केले आहे ते असे -' Religion of the name of sea will against the sect of Caliphs of the Moon vanquish. The deplorably obstinate sect shall br afraid of wounded by Alef and Alef.'

फ्रेंच द्रष्ट्या ज्योतिषवर्याने केलेले वरील भविष्य फार महत्त्वाचे आहे. कारण, यात जास्तच स्पष्टपणे सांगितले आहे की समुद्राचे (तथा हिंदी महासागराचे) नाव असलेला देश - हिंदुस्थान - खलिफाच्या प्रशंसित पंथाचा नाश करील. वरच्या श्लोकातील २ऱ्या ओळीतील Sect हा शब्द महत्त्वाचा व नॉस्ट्राडेमसच्या मार्मिक शब्दयोजनांचा निदर्शक आहे. त्या शब्दाचा एक अर्थ जसा 'पंथ' होऊ शकतो तसाच तो शब्द फ्रेंच भाषेत वापरला जातो तो 'श्रध्दा' या अर्थाने! या दृष्टीने या काव्यपंक्तीचा अर्थ लावावयाचा तर समुद्राचे नाव असलेल्यांची श्रध्दा तथा धर्म, हा सद्धर्म आहे तर खलिफा प्रशंसित धर्म ही केवळ अंधश्रध्दा आहे. या वाक्याचा आणखी स्पष्टार्थ करायचा तर नॉस्ट्राडेमसला हिंदू हा 'धर्म' तर इस्लामला तो अंधश्रध्दा म्हणून अभिप्रेत आहे. Obstinate हे विशेषण खलिफाच्या पंथाला लावून नॉस्ट्राडेमसने हेही आडपडदा न ठेवता सांगून टाकले आहे की, 'खलिफ-प्रशंसित पंथ अपरिवर्तनशील, अतिरेकी आहे!'

या पूर्वीच्या प्रकरणात 'शायरन' म्हणून आयातुल्ला खोमेनीबद्दल लिहितांना सध्या जगभर चालू असलेल्या रश्दींच्या 'सॅटॅनिक व्हर्सेस' या कादंबरीवरून उसळलेल्या सैतानी उद्रेकाचा उल्लेख केलाच आहे. त्याला आणखी दुजोरा देणारी बातमी नुकतीच वाचण्यात आली, तीही या संदर्भात बरेच काही सांगून जाते असे वाटते म्हणून येथे तिचा उल्लेख करतो - पॅरिसहून आलेली ही सत्यकथा आहे. प्रसिध्द फ्रेंच गायिका व्हेरोनिक सान्साँ, आपल्या कार्यक्रमात 'अल्ला' हे गीत सादर करीत असे. (म. गांधी ज्याप्रमाणे त्यांच्या रामनामात - 'ईश्वर अल्ला तेरे नाम' असे खादीचे ठिगळ लावून म्हणत त्याप्रमाणे!) परंतु, गीत - गायकाला ठार मारू अशी धमकी त्यांना देण्यात आल्यावर त्यांनी ते गीत न गाण्याचे ठरविले. नभोवाणीवरील एका मुलाखतीत ही माहिती देऊन पुढे स्पष्टीकरणही केले की, 'वास्तविक या गीतात इस्लामचा अवमान करणारे काहीही नाही, ती एक प्रार्थना आहे. पण 'ज्ञानलव दुर्विदग्धं ब्रह्मापि नरं न रंजयति।।' हे जास्त अनुभवसिध्द वाक्य कुणाच्या खिजगणतीत आहे?

मुस्लिम धर्माच्या तत्त्वांना खोमेनीसारखे धर्मांध त्यांना अभिप्रेत असलेला वेगळाच रंग देण्याचा प्रयत्न करीत असतात. त्यामुळे होते काय तर काही मुस्लिम मूळ ग्रंथ न वाचताच विनाकारण कडवे धर्मांध बनत चाललेले आहेत. मशिदीमध्ये ठिय्या मारून बसलेले मुल्ला - मौलवी नि इमाम आपापले राजकारण पुढे रेटण्याचे मनसुबे उभारण्यात मश्गूल झाले आहेत. भारतीय शिक्षण यंत्रणेतून इस्लाम विरोधी (हेही त्यांनीच ठरवायचे) सारे उल्लेख काढून टाकावेत, पाठ्यपुस्तकांचे शुध्दीकरण (!) केले

...(47)...

जावे अशी मागणी करायला सुरुवात झाली आहे. या सर्वांची परिणती कशात होईल हे सांगणे आतापर्यंतच्या अतिरेकी अनुभवावरून जाणता येण्यासारखे असले तरी ज्या वेगाने १९९९ चा झंझावात समीप येत आहे त्या वेगाशी सुसंगत असा अत्याचारांचा नेहमी उसळणारा डोंब लक्षात आला की हीच वावटळ आगामी तिसऱ्या महायुध्दाची नांदी ठरण्याची शक्यता नाकारता येणार नाही.

१७ व्या शतकात ज्याप्रमाणे मुसलमानांच्या अत्याचारांनी हिंदुस्तानांत मर्यादा गाठली, तेव्हा मूठभर मावळ्यांना एकत्र करून परिस्थितीशी मुकाबला करणे अपरिहार्य झाले.

तेव्हा बाल शिवरायांनी विजापूर सोडून पुण्याच्या आपल्या जहागिरीत राहायला सुरुवात केली व आपल्या सवंगड्यांसह करंगळीचे बोट कापून श्रीशंकरावर (रोहिडोश्वर?) रक्ताचा अभिषेक करून स्वराज्याची मुहूर्तमेढ रोवली. हाताशी असलेले सीमित मनुष्यबळ, युध्दमान शस्त्रांचा तुटवडा, अर्धपोटी जेवण, आणि एकंदर समाजावर मुसलमानी अंमलाची खोलवर रूजलेली दहशत व त्यामुळे रूळलेली अगतिकता यामुळे गनिमी काव्याने या सत्तेशी दोन हात करावे लागले. पारतंत्र्याचा एक अवश्यमेव भाग असा असतो की त्याविरुध्द प्रथम उठाव करणाराला नामोहरम करणे, घरच्यापेक्षा बाहेरचा सत्ताधारी आपलासा वाटणे! घरभेदीपणा सत्कर्माचा रंग घेतो. प्रत्येक कृतीला धर्मांधता म्हणण्यात येते, जातीयतेचा छाप मारला जातो. सूर्याजी पिसाळाची अवलाद उत्तम होऊन फंद - फितुरी वाढते - या सर्वांवर मात करून शिवरायांनी राजगडावर तोरण बांधून, राज्याभिषेक करविला तेव्हाच भूषण कवींनी त्यांचा गौरव केला तो या शब्दांनी - 'शिवाजी न होता तो सब की होती सुन्ता'. इतिहासाची पुनरावृत्ती होत असते असे म्हणतात त्यानुसार आजही शायरनच्या नेतृत्त्वाने हिंदुत्वाची द्वाही फिरवण्याची नेमकी वेळ आली आहे. शिवरायांनी अनुसरलेला मार्ग धर्मांधतेचा नव्हता तर 'स्वत्व' टिकविण्याचा होता. त्याकरिता प्राणांची बाजी लावून मराठमोळ्यांनी लढा दिला होता. ती स्फूर्ति नंतर १९ व्या शतकापर्यंत कार्यरत होती. मराठ्यांचा भगवा जरिपटका अटकेपार लागला, दिल्लीचे तक्त फोडून आपल्या शौर्याची मुद्रा भारतभर पसरलेल्या भारतीयावर उमटवली. एवढी मर्दुमकी असूनही दिल्लीच्या सिंहासनावर - तक्तावर - .शेवटपर्यंत 'मराठा' न बसविता, मोगल बादशाहीच चालू राहिली. हे विषयांतर एवढ्यासाठीच केले की हिंदूंची युध्दप्रविणता ते सत्ताधीश होण्याइतकी बलशाली असूनही, त्यांच्या विशिष्ट मानसिक ठेवणीनुसार ते आक्रमक सत्ताधारी केव्हाच झाले नाहीत हे स्पष्ट व्हावे!

भारतीय हिंदू हे निसर्गतः व त्यांना मिळालेल्या धार्मिक व अध्यात्मिक वारसानुसार प्रवृत्तीने सौम्य प्रकृतीचे आहेत, आक्रमक नाहीत. परंतु, या आधी उध्दृत केलेल्या नॉस्ट्राडेमसच्या शतक १, श्लोक ५० प्रमाणे, 'शायरन' हा हिंदू नेता अखिल हिंदुविश्वाला जागृति आणून स्वतःच्या वादळी व्यक्तिमत्वाने, आपल्या भूमि नि सागरी सामर्थ्याचे दर्शन घडविणार आहे. अजिंक्य हिंदुनेता ही आपली प्रतिमा सर्व

...(52)...

प्रारंभी जगाच्या क्षितीजावर उगवणार आहे. हा जो बदल घडणार आहे तो नॉस्ट्राडेमसच्या इच्छेने घडणार नसून नियतीच्या इच्छेने हा सारा बनाव घडणार आहे. त्यातून नवीन जे घडणार आहे ते म्हणजे हिंदुस्थान हा सर्वश्रेष्ठ देश होणार आहे. आज कित्येक शतके न दिसलेले, दृष्टिआड झालेले हिंदुंचे साम्राज्य अवतरणार आहे.

आजच्या विज्ञानयुगात अणुशास्त्राचा जो अभ्यास चालू आहे, व अणु-अस्त्रे बनविण्याची वा संग्रही ठेवण्याची जी चढाओढ सर्व जगभर चालू आहे त्यावरून आगामी युध्दाची भीषणता स्पष्ट होत आहे. संयुक्त राष्ट्रसंघातर्फे तज्ज्ञांनी केलेल्या अभ्यासानंतर जो अहवाल प्रसिध्द झाला आहे त्यावरून निःसंदिग्ध शब्दात प्रामुख्याने सांगितले आहे की, आगामी युध्द हे अणुयुध्द झाल्यास - आणि आज, त्या दृष्टीने जी पावले पडत आहेत त्यानुसार ३ हे महायुद्ध अणुयुध्दच होणार याबद्दल दुमत होण्यासारखेही नाही - प्रत्यक्ष परिणाम प्रचंड मनुष्यहानी, उद्ध्वस्त झालेले देश, भस्मसात झालेली मालमत्ता व शेती या दृष्यांनी दिसतील हे तर खरेच, पण त्याहीपेक्षा त्याचे जे अप्रत्यक्ष परिणाम प्रदीर्घ कालपर्यंत जाणवतील ते मात्र फारच भयंकर स्वरूपाचे असतील.

या अणुयुध्दाने जगातील हवामानात बदल होईल. ज्या गोलार्धातील शहरांवर अणुबाँब किंवा रॉकेट्स यांचा मारा होईल - आणि उत्तर गोलार्धातील मोठ्या शहरांवर असा वर्षाव होण्याचा संभव जास्त - त्या गोलार्धातील तपमान शून्य अंश सेल्शिअस् खाली जाईल. सूर्यप्रकाश पुरेसा मिळणार नाही. पाऊस कमी पडेल. त्यामुळे शेती, वनस्पती उगवण्या - उत्पन्न होण्यावर विपरित परिणाम होईल. ओझोनचा संरक्षक थर कमी होत आहे, अशी आजच आवई उठली आहे. तो संरक्षक थरही अणुयुध्दाने आणखी कमी होऊन अतिनील किरण रोखले जाण्याचे प्रमाण कमी होईल.

नॉस्ट्राडेमसला हे सर्व प्रलयंकारी दृष्य दिसत असूनही त्याने केलेल्या ग्रहगणिताच्या आधारे तो म्हणतो की, या तिसऱ्या महायुध्दात अनेक तथाकथित प्रगत देश बेचिराख होतील. तरी त्यातून मानववंश टिकून राहील; हिंदुस्थान - म्हणजे हिंदुराष्ट्र - आणि त्या देशात जन्मलेला द्रष्टा नेताच, सर्व जगाचा तारणहार जगज्जेता असेल!

भगवान् श्री रामकृष्ण परमहंस यांचे एक फ्रेंच भक्त रीनकोर्ट नामक लेखक आहेत. त्यांनी परमहंसांचा निर्वाणापूर्वी जे सांगितले ते श्री रामकृष्णांचे शब्द उद्धृत करून म्हटले आहे की रामकृष्णांची ती भविष्यवाणी नॉस्ट्राडेमसच्या भाकितांना पुष्टीच देते. भगवान रामकृष्ण परमहंस म्हणाले होते की त्यांचा 'पुढचा जन्म भारताच्या वायव्येला होईल' हेच दुसऱ्या भाषेत विशद करून सांगायचे तर परमहंस रशियांत हिंदु संत म्हणून पुनः जन्म घेतील, नि हिंदुत्वाचे पुनरुत्थापन होईल. 'शक-हूण' आदि जमातींप्रमाणे रशियाहि हिंदुत्ववादी झालेला दिसेल, त्या जीवनपद्धतीचा स्वीकार करील कारण या आकाशाखाली सर्वकश विचारस्वातंत्र्य असलेली दुसरी जीवनपद्धतीच नाही. रशिया,

...(74)...

हिंदु संस्कृति, धर्म, व त्यांचे राष्ट्रप्रेम याबद्दल, नॉस्ट्राडेमस स्वतः ज्यू वा ख्रिश्चन असूनहि, जे उत्कटतेने उद्‌गार काढतो, ते त्याला काही आंतरिक साक्षात्कार झाल्यामुळें काढीत असावा असे वाटण्याइतके खणखणीत आहेत. भारतांतील हिंदु हे खरे हिंदुस्तानचे रहिवासी, भारतांतील मुस्लिम हे घुसखोर तरी किंवा बाटगे मुसलमान, त्यामुळें त्यांना, नॉस्ट्राडेमस, राष्ट्रद्रोही. म्हणतो. हिंदु धर्माशिवाय हिंदुस्तान अशक्य, आणि हिंदुस्तानची हिंदु संस्कृतीहि अशक्यच! आगामी प्रलयंकारी युद्धांतून जगाला नवा प्रकाश देणारा जगज्जेता म्हणून हिंदूच नेता असेल याबद्दल 'नॉस्ट्राडेमस' ठाम आहे!

# உண்மையான ஞானப்பிரகாச விஷயம்

## (பரமேஸ்வரனை பற்றி வேதங்களும் சாஸ்திரங்ளும் கூறுவது என்ன?)

பிரபு, சுவாமி, ஈசன், ராம், அல்லாஹ், தேவ், ரப், பகவான் இவை அனைத்தும் சர்வ சக்தியைக் குறிக்கும் சொற்கள். பல மொழிகளில் பல உச்சரிப்புகளால் சொல்லப்படுகின்றன.

ஏதோ ஒரு சக்தி எல்லா துன்பங்களையும் நீக்கி எல்லா சுகங்களையும் தருகிறது என்று ஒவ்வொரு உயிரும் "கடவுளின்" மகிமையைப் போற்றுகின்றன. அவர் யார்? எப்படி இருப்பார்? எங்கே இருக்கிறார்? எப்படி அடையலாம்? என்ற இந்த கேள்விகள் இதுவரை கேள்விக்குறியாகவே உள்ளது. இந்தப் புத்தகத்தைப் படித்து முடிக்கும் போது இதன் சந்தேகங்கள் முழுவதுமாக தீர்க்கப்பட்டு விடும்.

அந்த சக்தி உடையவர் குருடர்களுக்கு கண்களும், ஊமைகளுக்கு குரலும், செவிடர்களுக்கு காதையும், மலடிக்கு மகனையும், ஏழைக்கு செல்வமும், நோயுற்றவர்களை குணப்படுத்தி தன்னை தரிசிப்பவர்களுக்கு ஆனந்தத்தை கொடுப்பவர், அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்தவர், பரம சாந்தி அளிப்பவர், அவருடைய கட்டளையின்றி இலை கூட அசையாது அதாவது சர்வ வல்லமை கொண்டவர் அவருக்கு சாத்தியமற்றது எதுவும் இல்லை. இந்த குணங்களை கொண்டவர் உண்மையில் கடவுள் (சுவாமி, ஈஷ், ராம், பகவான், குதா, அல்லா, ரஹீம், ரப்) என்று அழைக்கப்படுகிறார்

இங்கு குறிப்பாக ஒன்று யோசிக்க வேண்டி உள்ளது. எந்தவொரு பக்தி பற்றிய அறிவு சாஸ்திரத்திலிருந்து மட்டுமே அறியமுடிகிறது. குருமார்கள் அதன் மூலம் பக்தர்களுக்கு வழி காட்டுகிறார்கள். அந்த சாஸ்திரங்கள், நான்கு வேதங்களும் (ரிக்வேதம், சாமவேதம், யஜுர்வேதம், அதர்வணவேதம்), பகவத் கீதை, ஶ்ரீமத் பகவத் சுதாசாகர், பைபிள், குர்ஆன், 18 புராணங்கள், மகாபாரதம் ஆகியவை சான்றளிக்கப்பட்ட புனித சாஸ்திரங்கள் ஆகும். பரமாத்மாவின் கட்டளைப்படி ஜோதி நிரஞ்சன் (கால்) தனது சுவாசம் மூலம் நான்கு வேதங்களையும் கடலுக்குள் மறைத்து வைத்தார். முதன்முறை, பாற்கடலை கடைந்த போது இந்த நான்கு வேதங்களும் பிரம்மாவினால் பெறப்பட்டது. ஷர் புருஷ் அதாவது காலனின் மூத்த மகனான பிரம்மா அதைப் படித்து தனக்கு புரிந்த வரை தனது ரிஷிகள் மூலமாக பரப்பினார். பூரண பரமாத்மா ஐந்தாவது வேதமான "ஸ்வாசம்" வேதம் அதாவது சூட்சம வேதத்தை காலனிடம் (பிரம்) கொடுத்தார், ஜோதி நிரஞ்ஜன் (காலன்) அதை ரகசியமாக வைத்து பிறகு அழித்துவிட்டார்.

சில காலத்திற்கு பிறகு ஒரு கல்பம் அதாவது ஓராயிரம் சதுர்யுகத்திற்கு பிறகு மூன்று லோகங்களில் (பூலோகம், சொர்க்கம் மற்றும் நரகம்) உள்ள அனைத்து ஜீவராசிகளும் அழிந்து விடுகின்றன. பின்னர், பிரம்மாவின் ஒரு இரவு (பிரம்மாவின் ஒரு இரவு ஒர் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது அதே போல் தான் பகலும்) முடிந்து அவரது பகல் (ஒரு ஆயிரம் சதுர்யுகம்) தொடங்கும் போது ஜோதி நிரஞ்சனின் (கால்) கட்டளையின்படி ரஜோகுணத்தின் தாக்கத்தால், மூவுலகிலும் உயிரினங்களின் உருவாக்கத்தை தொடங்குகிறார்.

பின்னர் சத்யுகத்தின் தொடக்கத்தில், (பிரம்) காலன் மீண்டும் அதே நான்கு வேதங்களை பிரம்மாவுக்குக் கொடுக்கிறார், பின்னர் இயற்கை அழிவின் காரணமாக நான்கு புனித வேதங்களின் ஞானம் மறைந்துவிடுகிறது. பிறகு, காலத்திற்கு ஏற்ப, (பிரம்) காலன் மற்ற ரிஷி

மற்றும் குருமார்களுக்குள் ஆவியாக நுழைந்து அவற்றை மீண்டும் எழுதி வைக்கிறார். இருப்பினும் காலத்தின் மாற்றங்களாலும், அழிவுகளாலும் சுயநல குருமார்களாலும் வேதங்கள் மாற்றப்பட்டு உண்மையான ஞானம் உலகிலிருந்து மறைக்கப்படுகிறது. அதே பிரம்ம காலனான ஜோதி நிரஞ்சன், மகாபாரத யுத்தத்தின் போது ஸ்ரீ கிருஷ்ணருக்குள் ஆவியாக புகுந்து வேதங்களின் சாரத்தை ஸ்ரீமத் பகவத் கீதை வடிவில் கொடுத்தார். மேலும் அர்ஜுனனிடம், நான் இந்த ஞானத்தை முன்பு சூரிய பகவானிடம் கூறி இருந்தேன், அவர் தனது மகன் வைவஸ்வத் அதாவது மனு இடமும், மனு தன் மகன் இஷ்வாகுவிடம் கூறினார்கள். இதன் இடையே இந்த உயர்ந்த ஞானம் மறைந்துவிட்டது.

இந்த காலன் (பிரம் ஜோதி நிரஞ்சன்), ஸ்ரீ வேத வியாசர் முனியின் உடலில் ஆவியாக புகுந்து நான்கு வேதங்கள், மகாபாரதம், 18 புராணங்கள், ஸ்ரீமத் பகவத் கீதை, ஸ்ரீ சுதாசாகர், ஆகியவற்றை சமஸ்கிருத மொழியில் எழுதி வைத்தார். இன்றும் அவைகள் காணக்கிடைக்கின்றன. சாஸ்திரங்கள் அனைத்தும் சிறந்தவை. இந்த சாஸ்திரங்களை கலியுக ரிஷிகள் ஹிந்தியில் மொழியாக்கம் செய்யும்போது தமது சொந்தக் கருத்துக்களைச் சேர்க்க முயற்சித்தனர் மற்றும் அந்த இடைச்சொற்கள் விளக்கத்தோடு பொருந்தாமல் தனியாக தவறாகத் தெரிகின்றன. இந்த சாஸ்திரங்கள் 5300 வருடங்களுக்கு முன் வியாச முனிவரால் மீண்டும் எழுதப்பட்டன. அப்பொழுது ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவம், சீக்கியம் எதுவுமில்லை. ஆரியர்களே வேதங்களை ஏற்றனர். செயலின் ரீதியில் சாதிகள் இருந்தன. சத்திரிய, வைசிய, சூத்திர, பிராமண எனும் நான்கு வகையினர் இருந்தனர்.

எனவே, இந்த சாஸ்திரங்கள் எந்த ஒரு மதத்திற்கும், தனிமனிதனுக்கும் சொந்தமானதல்ல. மனித சமுதாய நன்மைக்கே உள்ளன. நம் முன்னோர்கள் ஒருவரே என்றும், அவர்களுடைய பண்பாட்டில் ஒற்றுமை இருந்தது என்பதும் உறுதியாகிறது. முதலில் புனித நூலான கீதையைப் பற்றிப் பார்ப்போம்.

## புனித கீதையின் ஞானத்தை கூறியது யார்?

மகாபாரத யுத்தம் தொடங்கும்போது கீதையின் ஞானம் கூறப்பட்டது. அர்ஜுனன் யுத்தம் செய்ய மறுத்தான். பிறகு ஏன் யுத்தம் நடந்தது? இரண்டு குடும்பங்களுக்கு இடையே சொத்து பிரிப்பதில் வந்த யுத்தத்தை தர்மயுத்தம் என்று எப்படி சொல்வது? கௌரவர்கள் பாண்டவர்களுக்கு பாதி ராஜ்ஜியம் கூட தர மறுத்து விட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணர் மூன்று முறை இவர்களுக்கு இடையே தூது சென்று, சமரசம் செய்ய நினைத்தார். ஆனால் இரண்டு தரப்பினரும் அடம் பிடித்தனர். யுத்தத்தால் எத்தனை சகோதரிகள் விதவையாவர்? எத்தனை குழந்தைகள் அனாதையாவர்? எத்தனை பேர் இறந்து போவார்கள்? என்று சொல்லி யுத்தத்தினால் ஏற்படும் தீமைகளை ஸ்ரீ கிருஷ்ணர் எடுத்துரைத்தார். மூன்றாம்முறை ஸ்ரீ கிருஷ்ணர் சென்றபோது, இரண்டு தரப்பினரும் தம் பக்கம், எத்தனை அரசர்கள் பக்கபலமாக உள்ளார்கள் என்ற பட்டியலைக் காட்டினார்கள். இரண்டு தரப்பினரும் மசியவில்லை என்று அறிந்து, ஸ்ரீ கிருஷ்ணர் இன்னொரு யுக்தியைப் பிரயோகிக்க நினைத்தார். பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் நெருங்கிய சம்மந்தி (அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணரின் தங்கை சுபத்திரையை மணந்திருந்தார்) என்பதால், ஸ்ரீ கிருஷ்ணர் தங்கள் பக்கம் தான் ஆதரவு தருவார் என பாண்டவர்கள் நினைத்திருந்தார்கள்.

ஆனால், ஸ்ரீ கிருஷ்ணர், நான் ஒரு பக்கம் ஆயுதம் ஏந்தாமல் நிற்பேன். மறுபுறம் என் சேனை நிற்கும் எனச் சொன்னார். பாண்டவர்கள், அதிர்ந்து போனார்கள். அவர்கள் தமது தோல்வி உறுதி என நினைத்தனர். எனவே, தீவிரமாக யோசித்து ஸ்ரீ கிருஷ்ணரை சபையில் இருந்து அழைத்து, யுத்தம் வேண்டாம் எங்களுக்கு ஐந்து கிராமங்களாவது வாங்கி கொடுங்கள், எங்கள் மானம் காப்பாற்றப்படவேண்டும் என்று கேட்டனர்.

மகிழ்ச்சி அடைந்த ஸ்ரீ கிருஷ்ணர், சபையிலிருந்து துரியோதனன் மற்றும் கௌரவர்களிடம், “துரியோதனா, பாண்டவர்கள் போரை விரும்பவில்லை, அவர்களுக்கு ஐந்து கிராமங்கள் மட்டும் கொடுத்துவிடு” என்று சொன்னார். துரியோதனனோ, ஊசி முனை அளவு கூட பூமியை பாண்டவர்களுக்கு கொடுக்க மறுத்துவிட்டான். அவர்களை குருஷேத்திரப் போர் முனையில் சந்திப்போம் என்று சொல்லிவிட்டான். கிருஷ்ணர் கோபம் அடைந்து, “துரியோதனா, நீ மனிதனே இல்லை சைத்தான். பாதி ராஜ்ஜியம் எங்கே? ஐந்து கிராமங்கள் எங்கே? மரியாதையாகக் கொடுத்து விடு” என்று சொன்னார். துரியோதனன் கோபம் கொண்டு தன் வீரர்களை விட்டு கிருஷ்ணரை சிறைபிடிக்கச் சொன்னான். கிருஷ்ணர் தன் விஸ்வரூபத்தைக் காட்ட, வீரர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். அவர்கள் பார்க்க இயலாமல் கண்கள் மூடிக்கொண்டது, பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

சற்று சிந்திப்போம் : கீதா பிரஸ், கோரக்பூரில், இருந்து வெளியிட்ட சுருக்கமான மகாபாரதத்தில், ஸ்ரீ கிருஷ்ணரின் விஸ்வரூபம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. குருஷேத்திர மைதானத்தில் அர்ஜுனனுக்கு உபதேசம் தரும்போது அத்தியாயம் 11, ஸ்லோகம் 32ல் கிருஷ்ணர் சொல்கிறார், “அர்ஜுனா, நான் விஸ்வரூபம் கொண்ட மகா கால் ஆவேன். சர்வலோகங்களையும் விழுங்குவதற்கு தோன்றியுள்ளேன்”. சற்று சிந்திக்க வேண்டும், ஸ்ரீ கிருஷ்ணர் ஏற்கனவே ஸ்ரீ அர்ஜுனனுடன் இருந்தார், புனித கீதையை ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார் என்றால், இப்போது நான் தோன்றியுள்ளேன் என்று சொல்ல மாட்டார். ஸ்ரீ கிருஷ்ணர் காலன் அல்ல, ஸ்ரீ கிருஷ்ணரை கண்டு மனிதர்களும், பசுக்களும் மகிழ்ச்சியடைந்து, ஸ்ரீ கிருஷ்ணரிடம் வந்து அன்பை காட்டுவார்கள். அவரை தரிசிக்காமல் கோபியர்கள் உணவை உண்ணமாட்டர்கள். எனவே கால் என்பது வேறு ஒரு சக்தி. ஸ்ரீ கிருஷ்ணரின் உடலில் ஆவியாக நுழைந்து, புனிதமான ஸ்ரீமத் பகவத் கீதையின் வடிவில் நான்கு புனித வேதங்களின் சாரத்தைக் கூறினார். அவன் ஆயிரம் கரங்களை கொண்டவன். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரம், நான்கு கரங்களை கொண்டவர். பிறகு அத்தியாயம் 11 ஸ்லோகம் 21 மற்றும் 46ல், அர்ஜுனன் சொல்கிறார், “பகவானே! வேதமந்திரங்கள் மூலம் உங்களை வழிபடும் ரிஷி, முனி, தெய்வங்களையும் நீங்கள் விழுங்குகிறீர்கள், ஆயிரம் கரங்கள் கொண்டவரே, உங்கள் விஸ்வரூபத்தை என்னால் பார்க்க முடியவில்லை, தயவு செய்து அதே நான்கு கரங்களில் வாருங்கள்.

அத்தியாயம் 11, ஸ்லோகம் 47ல் காலன் சொல்கிறான். “அர்ஜுனா, என்னுடைய இந்த உண்மையான கால ரூபத்தை உன்னைத் தவிர வேறு யாரும் இதை பார்த்ததில்லை.”

மேற்கூறிய விவரங்களிலிருந்து, கௌரவர் சபையில் விஸ்வரூபம் எடுத்தது ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் குருக்ஷேத்திரத்தில் விஸ்வரூபம் எடுத்தது காலன் (ஸ்ரீ கிருஷ்ணர் உடலுக்குள் புகுந்த காலன்) என்று தெளிவாகிறது.

ஏனென்றால், இந்த விஸ்வரூபத்தை உன்னை தவிர வேறு யாரும் பார்த்ததில்லை என்று கூறியிருக்க மாட்டார்.

இரண்டாவதாக, புனித கீதையை கூறியது காலன் (பிரம், ஜோதி நிரஞ்சன்) ஸ்ரீ கிருஷ்ணர் அல்ல, என்பது நிரூபணமாகிறது. ஏனென்றால் ஸ்ரீ கிருஷ்ணர் தன்னை கால் என்று ஒருபோதும் சொன்னதில்லை. அனைத்து பக்தர்களும் காணத்துடிக்கும் கண்ணன் ஒருபொழுதும் காலன் ஆகமாட்டான்.

குறிப்பு : விஸ்வரூபம் என்பது என்ன?

பகலிலோ அல்லது நிலவொளியுள்ள இரவிலோ, உங்கள் உடலின் சிறிய நிழலின் இதயப் பகுதியை, கண் இமைக்காமல் இரண்டு நிமிடங்கள் பார்த்த பிறகு, வானத்தைப் பார்த்தால், உங்களுக்கு வானம் வரை எட்டும் உங்களுடைய வெள்ளை நிற விஸ்வரூபம் தெரியும். அதேபோல, ஒவ்வொரு மனிதனுக்கும் விஸ்வரூபம் உள்ளது, அவரவர் சக்திக்கு ஏற்ப பிரகாசமாகத் தெரியும்.

அதேபோல, கிருஷ்ணரும் தனது பூர்விக பக்தியின் சக்தியால் சித்த சக்தி பெற்றிருந்தார். அவரது சித்தி சக்தியால் விஸ்வரூபத்தை காட்டினார். அது காலனின் விஸ்வரூபத்தை விட, மிக குறைந்த ஒளியாக இருந்தது.

மூன்றாவதாக, புனித கீதையை கூறியது ஆயிரம் கரங்கள் கொண்ட காலன் என்று நிரூபணமாகிறது மற்றும் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரம் நான்கு கரங்களைக் கொண்டவர். ஸ்ரீ விஷ்ணு 16 கலைகளையும், ஜோதி நிரஞ்சன் (காலன்) ஆயிரம் கலைகள் கொண்டவர் ஆவார். உதாரணமாக, 60 வாட்ஸ், 100 வாட்ஸ், 1000 வாட்ஸ் பல்பு போல அவர்களது ஒளியின் சக்தி மாறுபட்டிருந்தது.

இந்த தத்துவஞானம் பெறுவதற்கு முன்பு கீதையின் ஞானத்தை உபதேசிக்கும் குருமார்களிடம் நான் (ராம்பால் தாஸ்)அடிக்கடி கேட்பேன், "ஸ்ரீ கிருஷ்ணர் கௌரவர்களிடம் மூன்று முறை சமரசம் பேச சென்று போர் செய்வது பாவம் என்றார். பிறகு அர்ஜுனனும் போருக்கு மறுத்து, தேவ நந்தனே! நான் போர் செய்யவிரும்பவில்லை என்றார். எதிரே நிற்கும் சகோதரர்கள், குருமார்கள், வீரர்களின் அழிவு குறித்து யோசித்து நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். மூன்று லோகங்களின் ராஜ்ஜியம் எனக்குக் கிடைத்தாலும், நான் போருக்கு விரும்பவில்லை. துரியோதனன் முதலியோர் அம்புகளால் இறக்க நினைக்கிறேன், என் மரணத்தால் போரின் அழிவு காக்கப்படும். பிச்சை எடுத்தாவது நான் உயிர் வாழ்வேன். பகவானே! சொந்தபந்தங்களை கொல்லும் இந்தப் பாவத்தைச் செய்ய நான் விரும்பவில்லை. என் அறிவு வேலை செய்யவில்லை. நீங்கள் எனது குரு, நான் உங்களது சீடன், நீங்கள் எந்த அறிவுரையும் எனக்குத் தரலாம். ஆனால், தங்களது போர் செய்யத்தூண்டும் அறிவுரை மட்டும் வேண்டாம். நான் போர் செய்ய மாட்டேன்". (ஆதாரம் புனித கீதை அத்தியாயம் 1 ஸ்லோகம் 31 முதல் 39 மற்றும் 46, அத்தியாயம் 2, ஸ்லோகம் 5 முதல் 8 வரை).

பிறகு ஸ்ரீ கிருஷ்ணரின் உடலில் புகுந்த காலன் மீண்டும் மீண்டும் சொல்கிறான். "அர்ஜுனா, நீ கோழை ஆகாதே, போரில் ஒருவேளை இறந்தால் சொர்க்கத்திற்குப் போவாய் இல்லை என்றால் இந்த பூமியை ஆள்வாய்", என்று இப்படிப் பலவற்றை சொல்லி சரித்திரத்திலேயே இல்லாத அழிவைக் கொண்டு வந்தான். அதற்கு அந்த அறிவற்ற குருமார்கள்

இவ்வாறு விளக்கம் தந்தார்கள் அதாவது அர்ஜுனன் போர் செய்ய மாட்டேன் என்று சொல்லி, சத்திரிய தர்மத்தில் இருந்து விலக நினைத்தான், அதனால் வீரத்தின் மகிமை அழிந்துவிடும். எனவே, ஷத்ரிய தர்மத்தைக் காப்பாற்ற கிருஷ்ணர் அப்படி செய்தார்.

மீண்டும் சற்று யோசியுங்கள்:– கிருஷ்ணரும் ஒரு சத்ரி ஆவார். கம்சனை வதம் செய்த பிறகு ஸ்ரீ உக்கிரசேனன் மதுராவின் பொறுப்பை ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஒப்படைத்தான். ஒரு நாள், நாரதர் கிருஷ்ணரிடம், "அருகில் ஒரு குகையில் சித்தி சக்தி பெற்ற ஒரு ராட்சஸ ராஜா முசுகுந்தன் உறங்கிக் கொண்டிருக்கிறான். அவன் ஆறுமாதம் தூங்குவான், ஆறு மாதம் விழித்துக் கொண்டிருப்பான். விழித்த பிறகு அந்த ஆறு மாதமும் சண்டை போடுவான். அவன் தூங்கும் காலத்தில் அவனை யாராவது தொந்தரவு செய்தால், அவன் கண்களிலிருந்து தீ பறக்கும். எதிரில் உள்ளவர்கள் இறப்பார்கள். எனவே, நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

சில காலம் கழித்து, இளமையில் மதுராவின் சிம்மாசனத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் அமர்ந்திருப்பதைக் கண்டு, காலயவன் என்ற மன்னன் பதினெட்டு கோடிப் படையுடன் மதுராவைத் தாக்கினான். ஆபத்தை உணர்ந்த ஸ்ரீ கிருஷ்ணர். முசுகுந்தனை வைத்து காலயவனனை ஏன் கொல்லக்கூடாது என நினைத்தார். ஸ்ரீ கிருஷ்ணர் கால்யவனை சண்டைக்கு அழைத்துவிட்டு பிறகு போரை விட்டு (சத்திரிய மதத்தை மறந்து, அழிவைத் தவிர்க்க நினைத்து) ஓடி முசுகுந்தன் தூங்கிக் கொண்டிருந்த குகைக்குள் நுழைந்தார். முசுகுந்தன் மீது தனது மஞ்சள் நிற சால்வையை போர்த்திவிட்டு ஒளிந்துகொண்டார். பின்னால் வந்த காலயவனன், முசுகுந்தனைக் கிருஷ்ணன் என நினைத்து, அவன் காலை பிடித்து இழுத்தான். வலியால் முசுகுந்தனின் தூக்கம் கலைந்தது, அவனது கண்களில் இருந்து நெருப்பு அம்புகள் வெளியேறி காலயவன் கொல்லப்பட்டான். உள்ளே வந்த வீரர்கள் தங்கள் அரசன் காலயவன் இறந்ததை கண்டு தோல்வியை ஒப்புக் கொண்டு, போகும்போது இன்னொரு அரசனை நியமித்து, மீண்டும் தாக்க வருவோம் என்று சொல்லி சென்றுவிட்டார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணர் தன் தலைமைப் பொறியாளரான விஸ்வகர்மாவைக் கூப்பிட்டு, மூன்று புறமும் கடல் உள்ள ஒரு நிலப்பகுதியில் ஒரே ஒரு நுழைவுவாயில் கொண்ட நகரத்தை அமைக்க சொன்னார். இங்கிருந்து நாம் போய்விடுவோம், இந்த முட்டாள் மக்கள் நம்மை அமைதியுடன் வாழ விடமாட்டார்கள் என்றார். ஸ்ரீ கிருஷ்ணர் மிகவும் நேர்மையான ஆன்மாவாக, போருக்கு எதிரானவராகவும் இருந்தார். அவர் தனது சத்ரியத்துவத்தை மறந்து போரைத் தவிர்த்தார். அப்படியிருந்த கிருஷ்ணர் தன் நண்பர்கள் மற்றும் சொந்த பந்தங்களைப் போர் செய்ய எப்படி தூண்டுவார்? மேலும் சண்டையிட மாட்டேன் என்று உறுதியளித்தவர் மற்றவர்களை போருக்கு தூண்டுவாரா? ஒரு பொழுதும் இல்லை. ஸ்ரீ கிருஷ்ணர் ரூபத்தில் ஸ்ரீ விஷ்ணுவே வந்து இருந்தார்.

ஒரு முறை பிருகு முனிவர், ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஸ்ரீ விஷ்ணுவின் மார்பில் எட்டி உதைத்தார். ஸ்ரீ விஷ்ணு அவர் கால்களை தடவிக்கொடுத்து 'முனிவரே, உங்கள் பொன்னான பாதம் புண்ணாகலாமா? ஏனென்றால், என் இதயம் கல்லால் ஆனது" என்று சொன்னார். விஷ்ணு நினைத்திருந்தால் தன் சுதர்சன் சக்கரம் கொண்டு பிருகு முனிவரை சின்னாபின்னமாக்கி இருப்பார்.

உண்மை என்னவென்றால், இருபத்தோரு பிரபஞ்சங்களுக்கு அதிபதியான காலன், தன் உண்மையான மனித ரூபம் போன்ற உருவத்தில் ஒரு பொழுதும் அனைவருக்கு முன்னால் தோன்ற மாட்டேன் என்று சபதம் எடுத்து இருந்தான். அவனே சூட்சும சரீரத்துடன் வந்து ஸ்ரீ கிருஷ்ணரின் உடலில் புகுந்து புனித கீதையின் ஞானத்தை சொன்னான், ஆனால் போர் நடத்துவதற்காக குழப்பி வைத்தார். கால் (பிரம்) யார்? இதை அறிய, இந்த "ஞான கங்கா" புத்தகத்தின் இயற்கையின் உருவாக்கம் என்ற பகுதியை படியுங்கள்.

மகாபாரத போர் முடிவு பெறாதவரை ஜோதி நிரஞ்சன் (கால் – பிரம் – ஷர் புருஷ்) கிருஷ்ணருடைய உடலைவிட்டு வெளியேறவில்லை. மேலும் அஸ்வத்தாமா இறந்து விட்டதாகவும், பீமனுடைய பேரனும், கடோர் கஜன் உடைய மகனுமாகிய பபரூப்பான் தலையைக் வெட்டி, தேரின் சக்கரத்தை ஆயுதமாக்கினேன் என்று யுதிஷ்டிரரை காலன் பொய் சொல்ல வைத்தான். இவை அனைத்தும் செய்தது காலன், கிருஷ்ணர் அல்ல. போர் முடிந்தவுடன் காலன் கிருஷ்ணருடைய உடலை விட்டு சென்றுவிட்டான். கிருஷ்ணர் யுதிஷ்டிரரை இந்திரப்பிரஸ்தம் என்கிற தில்லியின் சிம்மாசனத்தில் அமர வைத்து, தானும் துவார்காவிற்கு புறப்பட்டார். போகும்போது அர்ஜுனன் கிருஷ்ணரிடம், குருநாதரே, எங்களுக்கு ஒரு உபதேசம் அளித்துவிட்டுச் செல்லுங்கள், நாங்கள் உங்களுடைய உபதேசத்தின்படி நடந்து முக்தி பெறுவோம் என்று கேட்டார்கள்.

இதை ஏற்றுக்கொண்ட கிருஷ்ணர் நாள், நேரம், இடம், இவைகளைக் குறிப்பிட்டார். பிறகு அந்தத் தருணம் வந்தவுடன் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணரிடம், ஆண்டவரே, இன்று அதே புனித கீதையின் ஞானத்தை மீண்டும் அருளுங்கள், ஏனென்றால் நான் மறந்துவிட்டேன் என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னார் "அர்ஜுனா, நீ பொறுப்பற்றவன், புத்தி இல்லாதவன். அப்படிப்பட்ட புனித ஞானத்தை நீ ஏன் மறந்தாய்? இப்பொழுது அந்த கீதையின் ஞானத்தை என்னால் சொல்ல முடியாது, எனக்கு நினைவு இல்லை. அப்போது நான் யோகமயத்திலிருந்து சொன்னேன்."

சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், போர்க்களத்தில் யோகமயம் செய்யும் கிருஷ்ணர் அமைதியான நேரத்தில் யோகமயம் செய்ய முடியாதா? ஆனால், வியாசர் அந்த புனித கீதையைப் பல வருடங்களுக்குப் பிறகு எழுத்தில் வடித்தார். அந்த நேரம் காலன் (ஜோதி நிரஞ்சன்) வியாசர் உடலில் புகுந்து ஸ்ரீமத் பகவத் கீதையை எழுத்தில் வடித்தார். நிரூபனத்திற்கு சுருக்கமான மகாபாரதம் பக்கம் 667 மற்றும் பழைய புத்தகம் பக்கம் 1531ல் பார்க்கவும்.

ந ஷாக்யம் தந்ம்யா பூயஸ்ததா வக்துமஷேஷதஹ / பர ஹி ப்ரஹ்ம கதித்ம் கதை யோகயுக்தேன் தந்மயா // **மகாபாரதம், அஸ்ரவா 1612-13**

பகவான் கூறினார்:- "அதை அனைத்தையும் அப்படியே மீண்டும் திரும்பச் சொல்வது என்னால் இயலாது. அன்று நான் யோக நிலையில் இருந்து பரமாத்மா தத்துவத்தை போதித்தேன்/"

**சுருக்கமான மகாபாரதம் இரண்டாம் பாகத்தின் பக்கம் எண். 1531ல்**

(கிருஷ்ணனிடம் அர்ஜுனன் கீதை பற்றி கேட்பதும், சித்த மகரிஷி வைசம்பாயனார் மற்றும் காஷ்யபரின் உரையாடல்) - பாண்டு நந்தன் அர்ஜுனன் கிருஷ்ணருடன் மகிழ்ச்சியாக இருந்தார். ஒருநாள் அந்த அழகிய சபையில் அர்ஜுனன் பகவானிடம் கேட்டார், --- தேவநந்தனே! யுத்தம்

நடக்கும் சமயம், உங்களுடைய மகிமையின் ஞானமும் இறை ரூப தரிசனமும் கிடைத்தன. ஆனால் தேவ நந்தனே! நீங்கள் பிரியமுடன் அப்போது உபதேசித்த ஞானம் இப்போது என் புத்திக்குறைவால் மறந்துபோய்விட்டது. மீண்டும் அதைக் கேட்க வேண்டும் என என் மனம் ஏங்குகிறது. நீங்கள் விரைவில் துவாரகா செல்ல இருக்கிறீர்கள். எனவே மீண்டும் எனக்கு அதை உபதேசியுங்கள்.

வைசம்பாயனார் சொல்கிறார்: அர்ஜுனன் இப்படிக் கேட்டவுடன், பேச்சில் சிறந்தவரான ஸ்ரீ கிருஷ்ணர் கட்டிப்பிடித்து இப்படி பதிலளித்தார்.

**ஸ்ரீ கிருஷ்ணர் கூறினார்:–** அர்ஜுனா! அன்று நான் மிக ரகசியமான விஷயத்தை அருளினேன். என்னுடைய ரூபமான சனாதன புருஷோதம தத்துவத்தை அறிமுகப்படுத்தினேன். நித்தியமான லோகங்களை பற்றியும் விவரித்தேன். ஆனால் உன் அறியாமையால் அந்த உபதேசத்தை நீ மறந்துவிட்டாய், என்பது எனக்கு மிகவும் வருத்தம் அளிக்கிறது. அதை இப்போது முழுவதுமாக நினைவுகொள்வது சாத்தியமில்லை. பாண்டு நந்தனா! உண்மையில் நீ பக்தியற்றவன், புத்தி இல்லாதவன். நான் அந்த ஞானத்தை அப்படியே மீண்டும் சொல்வது இயலாத ஒன்று. ஏனென்றால் அந்த சமயம் நான் யோகமயத்தில் இருந்து பரமாத்மாவின் தத்துவத்தை விவரித்தேன். மேலும் அறிந்து கொள்ள, மகாபாரதம் பாகம் 2, படியுங்கள்.

**சற்று சிந்தியுங்கள்:** மேற்கூறிய மகாபாரதம் மற்றும் ஸ்ரீ விஷ்ணு புராணம் மற்றும் ஸ்ரீமத் பகவத் கீதையின் விஷயங்களிலிருந்து, ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையை உரைக்கவில்லை என்பது நிரூபணமாகிறது. இது பிரம்ம காலன் (ஜோதி நிரஞ்சன்) அதாவது ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்ரீ கிருஷ்ணரின் உடலில் ஆவியாக புகுந்து கூறினார்.

**மற்ற ஆதாரங்கள், 1. ஸ்ரீ விஷ்ணு புராணம், கீதா பிரஸ் கோரக்பூர் வெளியீடு, பாகம் 4 அத்தியாயம் 2. ஸ்லோகம் 26, பக்கம் 233ல், ஸ்ரீ விஷ்ணு (மகா விஷ்ணு அதாவது கால் வடிவில் பிரம்) தேவர்கள் மற்றும் அரக்கர்களுக்கு இடையிலான போரின்போது, தேவர்களின் வேண்டுதலை ஏற்று இப்படி சொன்னார், "நான் ராஜரிஷி சசாதனின் மகன் புரஞ்செயனின் உடலில் புகுந்து சில காலம் இருந்து, அசுரர்களை வதம் செய்வேன்."**

**2. ஸ்ரீ விஷ்ணு புராணம் (கீதா பிரஸ் கோரக்பூர் வெளியீடு) பாகம் 4, அத்தியாயம் 3, ஸ்லோகம் 6, பக்கம் 242 இல், கந்தர்வர்கள் மற்றும் நாகர்கள் இடையே நடந்த போரில், விஷ்ணு நாகர்களை ஆதரித்து சொன்னார், "நான் (கால ரூபமான பிரம்) மாந்தாதாவின் மகன் புருகுத்சனின் உடலில் புகுந்து அனைத்து கந்தர்வர்களை அழித்து விடுவேன்."**

**மற்ற ஆதாரங்கள் : சில காலம் கழித்து யுதிஷ்டிரருக்கு பயங்கரமான கெட்ட கனவுகள் வர தொடங்கின. கிருஷ்ணரிடம் காரணமும் அதற்கு பரிகாரமும் கேட்டபோது, ஸ்ரீ கிருஷ்ணர், "நீங்கள் போரில் மனிதர்களைக் கொன்ற பாவத்திற்கான துன்பங்களை அனுபவிக்கிறீர்கள், எனவே ஒரு யாகம் செய்ய வேண்டும்" என்று சொன்னார். ஸ்ரீ கிருஷ்ணரின் இந்த பேச்சை கேட்டு அர்ஜுனன் அதிர்ச்சி அடைந்தான், புனித கீதை சொல்லும் சமயம், அர்ஜுனா! உனக்கு ஒரு பாவமும் வராது, நீ யுத்தம் செய் (கீதை அத்தியாயம் 2 ஸ்லோகம் 37, 38), யுத்தத்தில் நீ இறந்தால் சொர்க்கம் செல்வாய். இல்லையென்றால் இந்த உலகத்தை ஆள்வாய் என்று சொன்ன கிருஷ்ணன் இன்று இப்படிச் சொல்கிறார் என மனதில்**

மிகவும் வருந்தினான். யுதிஷ்டிரருக்கு பலன் கிடைக்க இந்த யாகத்திற்கு கோடிக்கணக்கில் செலவாகும். எனவே இப்பொழுது நான் கிருஷ்ணரிடம் கீதையில் அவர் பாவம் ஆகாது என்று சொன்னதை பற்றி கேட்டால், கோடி கணக்கில் செலவாகும் என்பதால் என் பலனை விரும்பாததால் அர்ஜுனன் விவாதம் செய்கிறான் என்று யுதிஷ்டிரர் தவறாக நினைப்பார் என்று கருதி அர்ஜுனன் மௌனமாக இருந்து சம்மதம் தெரிவித்தார். பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் யாகத்தின் தேதியை நிர்ணயித்தார். அந்த யாகம் ஸ்ரீ சுதர்சன் சுபச் ரூபத்தில் கபீர் பரமேஸ்வர் உணவை அருந்தியதால் வெற்றி பெற்றது.

சில காலத்திற்கு பிறகு துர்வாசா முனிவரின் சாபத்தால், யாதவ குலமே அழிந்துவிட்டது. ஸ்ரீ கிருஷ்ணரின் கெண்டைக்காலில் ஒரு வேட்டைகாரன் (திரேதாயுகத்தில் சுக்ரீவனுடைய சகோதரன் வாலியின் அதே ஆன்மா) விஷ அம்பு எய்தான். பாண்டவர்கள் ஐந்து பேரும் அங்கு வந்தவுடன் ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னார், “நான் உங்கள் குரு எனவே நீங்கள் என்னுடைய கடைசி கட்டளையைக் கேளுங்கள். அர்ஜுனன் அனைத்து பெண்களையும் தில்லிக்கு (இந்திரப்பிரஸ்தம்) அழைத்துச் செல்லட்டும், ஏனென்றால் இங்கு ஆண்கள் யாருமே மிஞ்சவில்லை. நீங்கள் ஐந்து பேரும் ராஜியத்தை விட்டுவிட்டு இமயமலை சென்று உடல் கரையும் வரை சாதகம் செய்யுங்கள். ஏனென்றால், மகாபாரத போரில் நீங்கள் பல உயிர்களைக் கொன்ற பாவம் உங்கள் தலையில் உள்ளது” என்றார் .

அந்த சமயம் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் அர்ஜுனன் சொன்னார், பிரபுவே! உங்களுடைய இந்த நிலையில் நான் எதுவும் கேட்கக்கூடாது தான், ஆனால் இன்று என் சந்தேகம் தீரவில்லை என்றால் என்னால் நிம்மதியாக இறக்க கூட முடியாது என்றார். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணரும் நீ கேட்க விரும்புவதை கேள், இவை என் கடைசி நிமிடங்கள் என்றார். கண்ணீர் மல்க, அர்ஜுனன் கேட்டான், “தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள். நீங்கள் எனக்கு கீதை உரைக்கும்போது நான் போர் செய்ய மறுத்தேன். நீங்கள், உன்னுடைய இரண்டு கைகளிலும் லட்டு உள்ளது. அர்ஜுனா, போரில் இறந்தால் மோட்சம் இல்லையென்றால் ராஜ்ஜியம் ஆளும் சந்தோஷம் கிடைக்கும், மேலும் உனக்கு எந்த பாவமும் ஏற்படாது என்று சொன்னீர்கள். உங்கள் கட்டளைப்படி தான் போர் செய்தேன். (கீதை அத்தியாயம் 2, சுலோகம் 37, 38ல் ஆதாரம்) ஆனால், பிரபுவே! இன்று ஒரு கைகளில் கூட லட்டு இல்லை, அதாவது சொர்க்கமும் கிடைக்கவில்லை, இப்பொழுது ராஜ்ஜியம் ஆளவேண்டாம் என சொல்கிறீர்கள். இப்படி ஏமாற்றுவதில் உங்களுக்கு என்ன லாபம்?” அர்ஜுனனின் இந்த வார்த்தைகளைக் கேட்ட யுதிஷ்டிரர், அர்ஜுனா! கிருஷ்ணரின் கடைசி தருணத்தில் உனது இந்த ஒழுங்கற்ற நடத்தை சரி இல்லை என்றார். ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னார், “என் கடைசி மூச்சு இது, நீ எனக்குப் பிரியமானவன், இன்று ஒரு உண்மையைச் சொல்லுகிறேன் கேள், வில்லனைப் போன்ற ஏதோ ஒரு தீய சக்தி நம் எல்லோரையும் ஆட்டிப்படைக்கிறது. நான் கீதையில் என்ன சொன்னேன் என்று எனக்கு எதுவுமே தெரியவில்லை. ஆனால், இப்பொழுது நான் சொல்வது முற்றிலும் உண்மை” என்று கண்ணீர் மல்க கூறி உயிரை தியாகம் செய்தார். மேற்கண்ட விளக்கத்தின் மூலம் புனித கீதையின் ஞானத்தை கூறியது ஸ்ரீ கிருஷ்ணர் அல்ல, அதை கூறியது 21 பிரபஞ்சங்களின் அதிபதியான காலன் (ஜோதி நிரஞ்சன் – பிரம்) என்பது நிரூபணமாகிறது. காலன் (பிரம்) யார்? இதைத் தெரிந்துகொள்ள இந்தப் புத்தகத்தில் பக்கம் 23 முதல் 84

வரை படிக்கவும்.

ஸ்ரீ கிருஷ்ணருடன் மற்ற யாதவர்களின் இறுதி சடங்குகளை செய்துவிட்டு, அர்ஜுனனை விட்டு மற்றவர்கள் இந்திரப்பிரஸ்தம் தில்லிக்கு சென்றனர். பிறகு அர்ஜுனன் துவாரகாவின் அனைத்து பெண்களையும் அழைத்து சென்றான். வழியில் காட்டுவாசிகள், அனைத்து பெண்களையும் கொள்ளையடித்தனர் சிலரை கடத்தி சென்றன. அர்ஜுனனைக் கட்டிவைத்து அடித்தனர். மகாபாரதப் போரில் எண்ணற்ற மக்களைக் வதம் செய்த அதே காண்டீவ வில் அர்ஜுனன் கையில் இருந்தும் பயன் அளிக்கவில்லை. அப்போது அர்ஜுனன், கிருஷ்ணர் உண்மையில் பொய்யன், கபடன் என்று சொன்னார், யுத்தத்தில் என்னைப் பாவம் செய்யத் தூண்டி விட்டு, சக்தி கொடுத்து பல உயிர்களைக் கொல்ல வைத்தான், ஒரு அம்பில் நூற்றுக்கணக்கான வீரர்களை அழித்தேன். இன்று சக்தி இல்லாமல் அடி வாங்கி கொண்டிருக்கிறேன் என்றார். இது விஷயமாக பூரண பிரம் கவிர்தேவ் சொல்வது, கிருஷ்ணர் பொய்யனும், கபடனும் இல்லை. இந்த தீய வேலை எல்லாம் காலன் (ஜோதி நிரஞ்சன்) தான் செய்து வருகிறான் எனச் சொல்கிறார். ஒரு பூரண குரு (தத்வதரிசி) மூலம் ஆன்மா (சத்ய புருஷ்) கபீர் பரமேஷ்வரரின் அடைக்கலத்தில் வராத வரை, காலனின் இது போன்ற துன்பங்கள் தொடரும்.

முக்கியமான கருத்து :- ஸ்ரீமத் பகவத் கீதையின் ஞானம் ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லவில்லை அவரது உடலில் ஆவியாக புகுந்து பிரம் (கால் அதாவது ஜோதி நிரஞ்சன்) கூறினார் என்பதும் நிரூபணமாகிறது.

## ஸ்ரீமத் பகவத் கீதையின் சாரம்

தாகம் எடுத்தவன் தண்ணீரைத் தேடுவது போல, யுகம் யுகமாக ஆன்மா பரமாத்மாவைத் (இறைவனை) தேடுகிறது. ஆன்மா பரமாத்மாவைப் பிரிந்த பிறகு துன்பத்தை அனுபவித்து வருகிறது. பூரண பிரம் (சத்யபுருஷ்) உடைய சத்யலோகத்தில் (ரித்தம்) இருந்த சுகம், இந்த காலனின் (பிரம்) லோகத்தில் இல்லை. அது கோடீஸ்வரனோ, ராஜாவோ, இந்திரனோ, பிரம்மனோ, விஷ்ணுவோ, சிவனோ, யாராக இருந்தாலும் சரி யாருக்கும் நிம்மதி இல்லை. ஏனெனில் பிறப்பு, இறப்பு மற்றும் கர்மவினைகளின் பலனை அனுபவித்தே ஆகவேண்டும். (ஆதாரம் கீதை அத்தியாயம் 2 ஸ்லோகம் 12 அத்தியாயம் 4, ஸ்லோகம் 5). எனவே, புனித கீதையின் ஞானத்தை அருளிய காலன் (பிரம் பகவான்) அத்தியாயம் 15 ஸ்லோகம் 1 முதல் 4 வரை, அத்தியாயம் 18 ஸ்லோகம் 62ல், அர்ஜுனா, முழுமனதுடன் அந்த பரமேஸ்வரரின் சரணடியை நாடு, அவருடைய அருளால் பரம சாந்தியும் சத்யலோகத்தையும் அடைவாய். அந்த பரமேஸ்வரரின் பக்தி மார்க்கம் என்னிடத்தில் இல்லை என்று கூறியுள்ளார். மேலும் அந்த தத்துவ ஞானத்தை பெற தத்வதரிசி குருவிடம் சென்று, அவர்களை சாஷ்டாங்கமாக வணங்கி, பணிவுடன் கேளுங்கள், அந்த தத்வதரிசி ஞானிகள் பரமாத்மாவின் தத்துவஞானத்தை உபதேசிப்பார். பிறகு அதன்படி முழுமையாக பக்தி மார்க்கத்தில் செல்லவேண்டும் (ஆதாரம் கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 34). தத்துவதரிசியின் அடையாளத்தை பற்றி, கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1 இல், இந்த உலகம் தலைகீழான


மரம் போன்றது மேலே வேர் மற்றும் கீழே கிளைகள் உள்ளன. இவ்வுலக வடிவிலான மரத்தைப் பற்றி அறிந்தவர் தத்துவதரிசி ஆவார் என்று கூறப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 15 சுலோகம் 2 முதல் 4 வரையில், அந்த உலக வடிவிலான மரத்தின் கிளைகள் மூன்று குணங்களை (ரஜோ குணம்-பிரம்மா, சத்வகுணம்-விஷ்ணு, தமோகுணம் -சிவன்) கொண்டது, அவை மூன்று லோகங்களிலும் (சொர்க்கலோகம், பாதாள லோகம், பூலோகம்) மேலும் கீழும் பரவியுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அந்த உலக வடிவிலான மரத்தின் படைப்புக்களை பற்றிய ஞானம் இந்த கீதையில் என்னால் கூற இயலாது. உங்களுக்கு அருளும் இந்த கீதையின் ஞானம் பூரண ஞானம் அல்ல. அதற்கு கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 34 இல் குறிப்பாக பூரண ஞானத்திற்கு (தத்துவஞானம்) தத்துவதரிசியிடம் செல்லுங்கள், அவர் உங்களுக்கு உபதேசிப்பார், என்னிடம் பூரண ஞானம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. தத்துவதரிசி குருவை அடைந்த பிறகு, அந்த ஆதி பரமேஸ்வரனை (கீதை அத். 18 ஸ்லோகம் 62 இன்படி) நாட வேண்டும், அவரிடம் சென்ற பிறகு சாதகன் மீண்டும் இவ்வுலகுக்கு திரும்புவதில்லை அதாவது பூரண மோட்சமாகும். யாரால் இந்த உலகம் போன்ற மரம் விரிவடைந்துள்ளதோ அதாவது அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்த அந்த ஆதி புருஷ் பரமேஸ்வரனிடம் நான் சரணடைந்துள்ளேன். அவரை வழிபடுவதன் மூலம் பூரண முக்தி பெறமுடியும்.

மேலுள்ள வேர்கள், கீழ் உள்ள மூன்று குணங்கள் வடிவிலான கிளைகள் (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) மற்றும் தண்டுப்பகுதி பற்றிய முழுமையான ஞானம் கூறுபவரே தத்துவ தரிசி ஆவார். (தலைகீழாக இருக்கும் உலக வடிவான மரத்தின் படத்தைப் பார்க்கவும்)

தன்னுடைய படைப்பின் பூரண ஞானத்தை (தத்துவஞானத்தை) பூரண பரமாத்மா கவிர்தேவன் தானே தத்துவதரிசியாக அவதரித்து கபீர் வாணி (உரைகள்) மூலமாக கூறுகிறார். (ஆதாரம் ரிக்வேதம் மண்டலம் 9 சூக்தம் 96 மந்திரம் 16 முதல் 20 வரை, மற்றும் மண்டலம் 10 சூக்தம் 90 மந்திரம் 1 முதல் 5 வரை மற்றும் அதர்வணவேதம் கண்டம் 4 அனு வாக்கியம் 1 மந்திரம் 1 முதல் 7 ல்)

கபீர், அக்ஷர் புருஷ் ஏக் பெட் ஹை, ஜோதி நிரஞ்சன் வாகி டார் /
தீனோ தேவா ஷாக்கா ஹைன், பாத் ரூப் சன்சார் //

புனித கீதையிலும் மூன்று கடவுள்கள் (1. ஷர் புருஷ் அதாவது பிரம், 2. அக்ஷர் புருஷ் அதாவது பரபிரம், 3. பரம் அக்ஷர் புருஷ் அதாவது பூரண பிரம்) பற்றிய விளக்கம் உள்ளது. (ஆதாரம் கீதை அத்தியாயம் 15, ஸ்லோகம் 16, 17 மற்றும் அத்தியாயம் 8, ஸ்லோகம் 1 இன் பதிலாக ஸ்லோகம் 3ல், அவர் பரம் அக்ஷர் பிரம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் மூன்று கடவுள் பற்றிய மற்றொரு ஆதாரம் கீதை அத்தியாயம் 7, ஸ்லோகம் 25ல், கீதையை அருளிய காலன் (பிரம்) தன்னை புலப்படாதவன் - அருவமானவன் என்று கூறியுள்ளார். இவரே புலப்படாத முதல் கடவுள் ஆவார். மேலும் கீதை அத்தியாயம் 8, ஸ்லோகம் 18ல், இந்த உலகம் பகலில் அருவமானவன் (பரபிரம்) மூலம் உருவாக்கப்பட்டு பிறகு இரவில் அதிலேயே கலந்துவிடுகிறது என்று சொல்லப்பட்டுள்ளது. இவர் இரண்டாவது வெளிப்படாத அருவமான கடவுள் ஆவார். அத்தியாயம் 8 ஸ்லோகம் 20ல், மற்றொரு அருவமானவர்




மேல்பக்கம் வேர், கீழ்ப்பக்கம் இலைகள் என தலைகீழாகத் தொங்கும் மரம் போன்ற உலகத்தின் படம்

கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 1 முதல் 4 மற்றும் 16, 17 இன் சுருக்கமான படம்.

அனைத்து உயிர்கள் அழிந்தாலும், அழியாத பரம திவ்ய புருஷ் (பூரண பிரம்) ஆவார் என்று கூறப்பட்டுள்ளது. இவர் மூன்றாவது வெளிப்படாத கடவுள் ஆவார். இதே ஆதாரம் கீதை அத்தியாயம் 2, ஸ்லோகம் 17ல், யாராலும் அழிக்க முடியாத அந்த பரமாத்மாவை அழிவற்றவர் என்று அறிந்து கொள் என்று கூறப்பட்டுள்ளது. கீதையின் ஞானத்தை அருளிய (பிரம்) காலன் தன்னை பற்றி அத்தியாயம் 4 ஸ்லோகம் 5 மற்றும் அத்தியாயம் 2 ஸ்லோகம் 12ல், நான் பிறப்பு இறப்பு கொண்டவன் அழியக்கூடியவன் என்று கூறியுள்ளார்.

மேற்கூறிய உலக வடிவிலான மரத்தின் வேர் பரம அக்ஷர் பிரம், அதாவது பூரண பிரம் கவிர்தேவன் ஆவார். இவரைதான் மூன்றாவது அருவமான வெளிப்படாத இறைவன் என்று கூறப்பட்டுள்ளது. வேர் மூலமே மரம் முழுவதற்கும் சக்தி கிடைக்கிறது. அதனால் தான் கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 17ல், பரமாத்மா என்பவர் ஷர் புருஷ் (பிரம்) மற்றும் அக்ஷர் புருஷ் (பரபிரம்) இருவரிடமிருந்து வேறுபட்டவர் ஆவார், அவர் மூவுலகிலும் அனைவரையும் காப்பவர், உண்மையில் அவர் தான் அழிவற்றவர் என்று கூறப்பட்டுள்ளது.

1. ஷர் என்றால் அழியக்கூடியது. ஏனென்றால் கீதையின் ஞானத்தை அருளிய பிரம் தானே சொல்கிறார், அர்ஜுனா நீயும் நானும் இருவரும் பிறப்பிலும் இறப்பிலும் இருக்கிறோம். (ஆதாரம் கீதை அத்தியாயம் 2, ஸ்லோகம் 12 மற்றும் அத்தியாயம் 4, ஸ்லோகம் 5ல் உள்ளது)

2. அக்ஷர் என்றால் அழிவற்றது. இங்கு பரபிரம் அழிவற்றவர் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் அவருக்கும் அழிவு உண்டு. உதாரணத்திற்கு ஷர் புருஷ் (கால் - பிரம்) உடைய நிலை தேநீர் குடிக்கப் பயன்படும் மண் கோப்பை போன்றது, கீழே விழுந்தவுடன் உடைந்து விடும். அக்ஷர் புருஷ் உடைய நிலை இரும்பு கோப்பை போன்றது. இது மண் கோப்பையை விட நிலையானதாக (அழிவற்றது) அதிக காலத்திற்கு இருந்தாலும் துருபிடிப்பதால் அழிந்துவிடுகிறது. எனவே இதுவும் அழியக்கூடியது தான். மூன்றாவது தங்கத்தால் (ஸ்வர்ணத்தால்) ஆன கோப்பை, ஸ்வர்ண தாது ஒருபோதும் அழியாது எனவே அழிவற்றது.

பரபிரம் (அக்ஷர் புருஷ்) அழிவற்றவர் என்று சொன்னாலும், உண்மையில் அழிவற்றவர் என்பவர் இந்த இரண்டையும் விட வேறுபட்டவர், எனவே அக்ஷர் புருஷ் அழியக்கூடியவர் ஆவார்.

காரணம் :- ஏழு ரஜோகுணம் பிரம்மா இறந்த பிறகு ஒரு சத்வகுணம் விஷ்ணு இறக்கிறார். ஏழு சத்வகுணம் விஷ்ணு இறந்த பிறகு, ஒரு தமோகுணம் சிவன் இறக்கிறார். 70 ஆயிரம் தமோகுணம் சிவன் இறக்கும் போது ஒரு முறை ஷர் புருஷ் (பிரம்-காலன்) இறக்கிறார். இது பரபிரம் (அக்ஷர் புருஷ்) உடைய ஒரு யுகம் ஆகும். இப்படி ஆயிரம் யுகம் கொண்டது அக்ஷர் புருஷ் உடைய ஒரு பகல் ஆகும். அதே எண்ணிக்கையில் ஒரு இரவாகிறது. இப்படி முப்பது பகல் முப்பது இரவுகள் கொண்ட ஒரு மாதம், பன்னிரண்டு மாதங்கள் கொண்ட ஒரு வருடம் என்று இப்படி நூறு ஆண்டுகள் பரபிரம் (அக்ஷர் புருஷ்) உடைய ஆயுளாகும். அதன் பிறகு இந்த பரபிரம் மற்றும் சத்யலோகத்திற்கு கீழே உள்ள அனைத்து பிரபஞ்சங்களும் அழிந்துவிடும். பின்னர் சிறிது காலம் கழித்து, அனைத்து பிரபஞ்சங்களையும் பூரண பிரம் அதாவது பரம் அக்ஷர் புருஷ் மீண்டும் படைக்கிறார். பரம் அக்ஷர் புருஷ் அதாவது பூரண பிரம் (சத்யபுருஷ்) மற்றும் அவரது சத்யலோகம், மேலே அலக் லோகம், அகம் லோகம் மற்றும் அனாமி லோகம் ஆகியவை

ஒருபோதும் அழிவதில்லை.

அதனால் தான், கீதை அத்தியாயம் 15, ஸ்லோகம் 17ல், உத்தம புருஷ் அதாவது புருஷோத்தம் என்பவர், பிரம் (ஷர் புருஷ்) மற்றும் பரபிரம் (அக்ஷர் புருஷ்) இருவரிடமிருந்தும் வேறுபட்டவர் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அவர் பூரண பிரம் (பரம் அக்ஷர் பிரம்)ஆவார். அவர் தான் உண்மையிலேயே அழிவற்றவர். அவர் அனைவரையும் காப்பவர், உலக வடிவிலான மரத்தின் வேறான பூரண பரமாத்மா ஆவார். தரைக்கு மேல் உள்ள மரத்தின் தண்டு பகுதி அக்ஷர் புருஷ் என்று அழைக்கப்படுகிறது. தண்டிற்கு வேர் மூலம் தான் ஆகாரம் கிடைக்கிறது. தண்டிற்கு மேல் உள்ள மரத்தின் பெரிய கிளை பிரம் (ஷர் புருஷ்) என்று அழைக்கப்படுகிறது. அதற்கும் ஆகாரம் வேர் அதாவது பரம் அக்ஷர் புருஷ் இடமிருந்து தான் கிடைக்கிறது.

அந்த பெரிய கிளையில் (ஷர் புருஷ்–பிரம்) இருந்து மூன்று குணங்கள் (ரஜோகுணம் – பிரம்மா, சத்வகுணம் – விஷ்ணு மற்றும் தமோகுணம் – சிவன்) கொண்ட சிறிய கிளைகள் உள்ளன. இவைகளுக்கும் ஆகாரம் வேர் (பரம் அக்ஷர் புருஷ் அதாவது பூரண பிரம்) இடமிருந்து தான் கிடைக்கிறது. இந்த மூன்று கிளைகளில் இலைகள் வடிவில் மற்ற உயிரினங்கள் சார்ந்து இருக்கின்றன. அவைகளும் மூலத்திலிருந்தே (பரம் அக்ஷர் புருஷ் அதாவது பூரண பிரம்) ஆகாரம் பெறுகிறார்கள். எனவே பூரண பரமாத்மா மட்டுமே அனைவராலும் பூஜிக்க வேண்டியவர் என்பது நிரூபணமாகிறது. இலைகளுக்கு ஆகாரத்தை சேர்ப்பதில் தண்டு மற்றும் கிளைகளின் பங்களிப்பு உண்டு. எனவே எல்லோரும் மரியாதைக்குரியவர்கள், ஆனால் பூஜிக்க கூடியவர் வேர் ஒருவர் மட்டுமே. மரியாதைக்கும் வழிபாட்டிற்கும் வித்தியாசம் உள்ளது. அதாவது ஒரு கற்புடைய பெண் கணவனின் சகோதரர்களை தனது சகோதரர்களாக மரியாதை செலுத்துகிறாள், ஆனால் பூஜிப்பது கணவனை மட்டும்தான். அதாவது கணவன் மீது இருக்கும் பக்தி மற்றவர்கள் மீது இருக்க முடியாது.

இரண்டாவது உதாரணம்:– ஒரு சமயம் ஹரியானாவில் வெள்ளம் வந்து 600 கோடிக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஹரியானா அரசு அந்த நஷ்டத்தை ஈடுகட்ட முடியவில்லை, ஏனெனில் அந்த அரசாங்கத்தின் ஒரு வருட பட்ஜெட்டே 900 கோடிதான். நாட்டின் பிரதம மந்திரி அதை ஈடு செய்தார். அந்த 600 கோடியை ஹரியானா மாநில அதிகாரிகள் மூலம் விநியோகித்தார். அப்பாவி மக்கள் விநியோகிக்கும் அதிகாரிகளை காப்பவராக நினைக்கிறார்கள். எதிர்காலத்திலும் காப்பார் என அவருக்கு லஞ்சம் கொடுத்து அவரை பூஜிக்கிறார்கள். படித்தவர்களுக்கு இந்த ஊழியரின் பங்களிப்பு தெரியும். எனவே அவருக்கு மரியாதை தருவார், ஆனால் பூஜிக்க மாட்டார்.

நிவாரணத் தொகை கொடுக்கப்பட்ட பிறகு, அந்த இலாகா மந்திரி வந்து தான் நிவாரணமாக பத்து இலட்சம் கொடுத்ததாகக் கூறி அந்த கிராமத்தின் பட்டியலிலிருந்து ராமனுக்கு பத்தாயிரம் ரூபாய்.... என பெயர்களை படித்தார். பிறகு அதே கிராமத்திற்கு முதலமைச்சர் வந்து நிவாரணமாக பத்து லட்சம் கொடுத்ததாகக் கூறி அந்த பட்டியலை படித்தார். பிறகு அதே கிராமத்துக்கு நாட்டின் பிரதமர் வந்தார். அவரும் நிவாரணமாக உங்கள் கிராமத்திற்கு பத்து லட்சம் கொடுத்ததாகக் கூறி ராமனுக்கு பத்தாயிரம் ரூபாய்.... என அந்த பட்டியலை படித்தார். ஆனால் ராமன், அத்தனையும் பொய் பதிவாளர் தான் எனக்கு பணத்தை கொடுத்துள்ளார்


என்று கூறி அறியாமையில் கிராமத்தின் பதிவாளரை பூஜித்து மற்ற அனைத்து காரியங்களும் அவர் மூலம் நிறைவேற விரும்புகிறார். படித்தவர்கள் பிரதமர் உதவி செய்யவில்லை என்றால், முதலமைச்சரோ, அமைச்சரோ, பதிவாளரோ எதுவும் கொடுக்க முடியாது என்று அறிவார்கள். முதலமைச்சரே தனது நிதியிலிருந்து கொடுத்திருந்தால் கூட நபருக்கு 100 ரூபாயை சிரமத்துடன் தந்திருக்க முடியும். இப்படி புத்திசாலிகள் ஒருவரின் தகுதியை அறிந்துகொண்டு, பிறகு அவற்றிலேயே நம்பிக்கை வைக்கிறான். தகுதி அற்றவர்கள் யாரும் இல்லை, ஆனால் பூஜைக்குரிய நபர் யார் என்பது தான் முக்கியம். அதேபோல, கீதை அத்தியாயம் 2, ஸ்லோகம் 46ல், அர்ஜுனா பெரிய நீர்நிலையை அடைந்த பிறகு, சிறிய நீர்த்தேக்கத்தில் இருக்கும் நம்பிக்கை போலவே, பரமாத்மாவின் பலன்களை அறிந்த பிறகு மற்ற கடவுளில் உன் நம்பிக்கை இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

கீதை அத்தியாயம் 7, ஸ்லோகம் 12 முதல் 15 வரையில், மூன்று குணங்களால் (ரஜோகுணம் – பிரம்மாவால் உயிரினங்களின் உருவாக்கம், சத்வகுணம் – விஷ்ணுவிடமிருந்து பாதுகாத்தல் மற்றும் தமோகுணம் சிவனால் அழிப்பு போன்றவை) ஏற்படும் விளைவுகளுக்கு நான் தான் (பிரம் – காலன்) முக்கிய காரணம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த மூன்று குணங்களையும் வழிபடும் பக்தர்கள், அறியாதவர்கள் அஞ்ஞானிகள் என்னை வழிபடுவதில்லை. பிறகு கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18 இல், தனது வழிபாட்டையும் சிறந்ததல்ல மிக தாழ்வானது (அனுத்தமாம்) என்று கூறியுள்ளார். எனவே கீதை அத்தியாயம் 15, ஸ்லோகம் 4 மற்றும் அத்தியாயம் 18, ஸ்லோகம் 62ல், பூரண பரமாத்மாவை வழிபட்டால் தான் பூரண மோட்சம் கிடைக்கும், அதுவே சாஸ்திர முறையாகும். மற்ற கடவுளின் வழிபாடு சாஸ்திரத்திற்கு எதிரானது மற்றும் வீணானது (ஆதாரம் கீதை அத் 16, ஸ்லோகம் 23, 24) என்று கூறுகிறார்.


உதாரணமாக, ஒரு மாமர செடியைக் கொண்டு வந்து அதன் வேரை நிலத்தில் தோண்டி வைத்து, பிறகு வேருக்கு நீர் பாய்ச்சினால் (வழிபட்டால்) செடி வளர்ந்து கிளைகளில் பழம் காய்க்கும். யாராவது தலைகீழாக கிளைகளை நிலத்தில் அழுத்தி வேர்களை மேலே வைத்து நீர் பாய்ச்சினால், செடி காய்ந்துவிடும். (நேராகவும் தலைகீழாகவும் விதைக்கப்பட்ட பக்தி வடிவிலான செடியின் படத்தை காணவும்)

இதன் பொருள் என்னவென்றால், பூரண பரமாத்மாவை வழிபட்டால், அதன் பலனை பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் (சிறிய கிளைகள்) ஆகிய மூவரும் வழங்குவார்கள். ஏனெனில் இந்த தெய்வங்கள் செயல்களின் பலனை தானாக தருகிறார்கள்.

நீங்கள் ஒரு நிறுவனத்தில் வேலை பெற, நிறுவனத்தின் எஜமானரை வழிபட வேண்டும். வேலை விண்ணப்பப் படிவத்தின் மூலம் தான் கிடைக்கிறது, ஆனாலும் எஜமானருக்கு தான் சேவை (வழிபாடு) செய்கிறீர்கள். சேவையின் (வழிபாடு) ஊதியம் மற்றொரு அதிகாரியால் வழங்கப்படுகிறது. ஒரு அதிகாரி வருகையை கணக்கிட்டு ஊதியத்தை காசாளர் மூலம் அனுப்புகிறார். அதிகாரியும், கேசியரும் நீங்கள் செய்த வேலைக்குரிய ஊதியத்தை மட்டுமே தர முடியும், அதில் குறைக்கவும், கூட்டவும் முடியாது. நீங்கள் நேர்மையுடனும், நேர்த்தியுடனும், அந்த வேலையை (வழிபாடு) செய்தால் அந்த எஜமானர் கூலியை அதிகரித்து, கூடுதல் பணத்தை வெகுமதியாக வழங்குகிறார். எஜமானின் சேவையை (வழிபாட்டை) விட்டுவிட்டு, அதிகாரிகளின் சேவையை செய்தால்,



கீதை அத்தியாயம் எண். 15
ஸ்லோகம் எண். 1, 2
மற்றும் 16, 17ன் பொருள்
பிரம்மா (ரஜோகுணம்)
விஷ்ணு (சத்வகுணம்)
சிவன்
(தமோகுணம்)
கபீர்,
அக்ஷர் புருஷ் ஏக் பேட்
ஹேன், நிரஞ்ஜன் வாக்கி
டார் ।
தீனோ தேவா ஷாகா
ஹேன், பாத் ரூப்
சன்சார் ।।
பெரும் கிளை
பெரும் கிளை :
க்ஷர் பிரம் அதாவது
க்ஷர் புருஷ் (கால் பிரம்)
மரத்தண்டு
மரத்தண்டு :
அக்ஷர் பிரம் அதாவது
அக்ஷர் புருஷ் (பரபிரம்)
கபீர் சாகேப்
( மூலவேர் )
பரம் அக்ஷர் பிரம்
- கபீர் சாகேப்
சாஸ்திர
முறையான
வழிபாடு
நேராக நடப்பட்ட பக்தி போன்ற செடி


கீதை அத்தியாயம் எண். 15
ஸ்லோகம் எண். 1, 2
மற்றும் 16, 17ன் பொருள்
கபீர்,
அக்ஷர் புருஷ் ஏக் பேட்
ஹேன், நிரஞ்ஜன்
வாக்கி டார் |
தீனோ தேவா சஷாகா
ஹேன், பாத் ரூப்
சன்சார் ||
( மூலவேர் )
பரம்
அக்ஷர்
பிரம்
–
கபீர்
சாகேப்
மரத்தண்டு
பெரும் கிளை : ஷர் பிரம் அதாவது ஷர் புருஷ் (கால் பிரம்)
மரத்தண்டு : அக்ஷர் பிரம் அதாவது அக்ஷர் புருக்ஷ் (பரபிரம்)
பெரும் கிளை
சிவன் (தமோ குணம்)
பிரம்மா (ரஜோகுணம்)
விஷ்ணு
(சத்வ குணம்)
சாஸ்திர
விதிக்குமாறான
வழிபாடு
தலைகீழாக நடப்பட்ட பக்தி போன்ற செடி

எஜமானரிடமிருந்து கிடைக்கும் தொகை நின்றுவிடும். அதிகாரிகள் அவருக்கு போதுமான ஊதியம் வழங்க முடியாது. அவன் துன்பத்திற்கு ஆளாவான், அவன் மகா மூடன். கீதையின் தத்துவ ஞானத்தை இவ்வாறு புரிந்து கொள்ளுங்கள். பூரண பரமாத்மாவின் வழிபாட்டை விட்டுவிட்டு மற்ற தெய்வங்களை பூஜிப்பதால் சாதகன் முழு பலனை பெறுவதில்லை துன்பமே அடைவான்.

கீதை அத்தியாயம் 7, ஸ்லோகம் 12 முதல் 15 மற்றும் 20 முதல் 23ல், இந்த மூன்று குணங்களையும் வழிபடும் பக்தர்கள், அசுர குணம் கொண்ட அஞ்ஞானிகள் என்னை (பிரம் – ஷர் புருஷ் அதாவது எஜமானின் மேனேஜர் அதிகாரி) வழிபடுவதில்லை என்று கூறப்பட்டுள்ளது. அதாவது முப்பெரும் தெய்வங்களையும் மற்ற தெய்வங்களையும் வழிபடுபவர்களை (காசாளரை வழிபடுபவர்களை) அஞ்ஞானிகள் மற்றும் அசுர குணம் கொண்ட அரக்கர்கள் என்று கூறப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு வருமானம் குறைவாக இருக்கும் நபர், சில சமயங்களில் திருட்டு, கலப்படம் போன்ற வஞ்சக வழிகளை செய்கிறார். அதன் விளைவாக சமுதாயத்தால் தாழ்ந்தவனாக ஆகிறான். இதேபோல், முப்பெரும் தெய்வங்களையும் (ஸ்ரீ பிரம்மா, விஷ்ணு, சிவன்), பிற தெய்வங்களையும் வழிபடுவதால், ஒருவருக்கு முழு பலன் கிடைப்பதில்லை. அதனால் பொய், ஏமாற்றுதல் போன்ற பிற தவறுகளைச் செய்கிறார். பிறகு பாவச் செயலின் தண்டனையை அனுபவிக்க வேண்டும். அதனால்தான் பிரம் அதாவது ஷர் புருஷ் (மேனேஜர்), இந்த அஞ்ஞானி வழிபாட்டாளர்கள் என்னை வழிபடுவதில்லை (சேவை செய்வதில்லை). நான் இந்த பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரை விட அதிகமான பலனை (செயலுக்குரிய ஊதியத்தை) கொடுக்க முடியும் என்று கூறுகிறார். பிறகு கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18ல், என்னுடைய வழிபாடும் (சேவை) முழு பலனை தராது, அதாவது கீதையை அருளும் பிரபு (பிரம் – ஷர் புருஷ்), அவருடைய வழிபாடும் பயனற்றது, அதாவது தாழ்வானது (அனுத்தமாம்) என்று கூறியுள்ளார். அதனால் கீதை அத் 15 ஸ்லோகம் 4, அத் 18, ஸ்லோகம் 62ல், அந்த பரமேஸ்வரனின் அடைக்கலத்தை நாடு, அவருடைய அருளால் நீ பரம சாந்தியும், சத்யலோகத்தையும் (அழிவற்ற ஸ்தானத்தை) அடைவாய் என்று கூறப்பட்டுள்ளது. அங்கு சென்ற பிறகு, சாதகன் மறுபிறவி எடுப்பதில்லை அதாவது பூரண முக்தி அடைகிறான், மேலும் கீதையை அருளும் பிரபு (ஷர் புருஷ் – பிரம்) நானும் அதே ஆதி புருஷ் பரமேஸ்வரரிடம் சரணடைந்துள்ளேன் என்று கூறுகிறார். கீதை அத்தியாயம் 7, ஸ்லோகம் 12 முதல் 15, 18 மற்றும் 20 முதல் 23 வரை, இவற்றை புரிந்து கொள்ள, பின்வரும் விவரங்களை கவனமாக படிக்கவும்.

## மூன்று குணங்கள் யாவை ? – ஆதாரங்களுடன்

மூன்று குணங்களும், ரஜோகுணம் ஸ்ரீ பிரம்மா, சத்வகுணம் ஸ்ரீ விஷ்ணு, தமோகுணம் ஸ்ரீ சிவன் ஆவார். இவர்கள் பிரம் (கால்) மற்றும் பிரகிருதி (துர்க்கை) மூலம் பிறந்தவர்கள் மற்றும் அழியக் கூடியவர்கள்.

ஆதாரம் :- சிவ மகா புராணம் கீதா பிரஸ், கோரக்பூர் வெளியீடு, ஆசிரியர் ஸ்ரீ ஹனுமான் பிரசாத் போத்தார். பக்கம் 110 அத்தியாயம் 9 ருத்ர சம்ஹிதா, "இவ்வாறு, பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன், மூவருக்கும் குணங்கள் உள்ளன, ஆனால் சிவா (பிரம்–கால்) குணங்கள் அற்றவர் என்று கூறப்படுகிறது".

இரண்டாவது ஆதாரம்: – ஸ்ரீமத் தேவிபகவத் புராணம், கீதாபிரஸ்

கோரக்பூர் வெளியீடு, ஆசிரியர் ஸ்ரீ ஹனுமன் பிரசாத் போத்தர் மற்றும் சிமன் லால் கோஸ்வாமி, ஸ்கந்தம் 3, அத்தியாயம் 5, பக்கம் 123:- பகவான் விஷ்ணு துர்க்கையை துதிக்கிறார்: நான் (விஷ்ணு), பிரம்மா, சங்கர் மூவரும் உனது அருளால் உண்டாகினோம், எங்களுக்கு பிறப்பும் (ஆவிர்பாவம்), இறப்பும் (திரோபாவம்) உள்ளது, நித்தியமானவர்கள் (அழிவற்றவர்கள்) அல்ல. நீ மட்டுமே நித்தியமானவள், உலக தாய், பிரகிருதி, மற்றும் சனாதன தேவி ஆவாய். பகவான் சங்கரர் கூறினார்: பிரம்மாவும், விஷ்ணுவும் உன்னிடமிருந்து பிறந்தவர்கள் என்றால், அவர்களுக்கு பிறகு பிறந்த தமோகுணம் கொண்ட என்னையும் படைத்தவள் நீயே. இந்த உலகத்தின் படைத்தல், காத்தல், அழிவில் உன்னுடைய குணங்கள் எப்போதும் உள்ளன. இந்த மூன்று குணங்களால் பிறந்த பிரம்மா, விஷ்ணு மற்றும் சங்கர் ஆகிய நாங்கள் மூவரும், விதிகளின்படி வேலையில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டுள்ளோம்.

மேற்கூறிய விளக்கம், இந்தியில் மொழிபெயர்க்கப்பட்ட ஸ்ரீ தேவி மகாபுராணத்திலிருந்து மட்டுமே, அதில் சில உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. எனவே மற்றொரு ஆதாரத்தை பார்க்கவும், ஸ்ரீ மத்தேவி பகவத் மகாபுராணம் சபாஷ்டிகம் சமாஹத்யம், கேம்ராஜ் ஸ்ரீ கிருஷ்ண தாஸ் பிரகாஷன் மும்பை, இதில் சமஸ்கிருதம் உட்பட இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மூன்றாம் ஸ்கந்தம் அத்தியாயம் 4 பக்கம் 10, ஸ்லோக் 42:-

ப்ரஹமா - அஹம் ஈஸ்$^2$வர்: ஃபில் தே ப்ரபா$_4$வாத்ஸர்வே வயம் ஜநி யுதா ந யதா$_3$ து நித்யா: கே அந்யே ஸுரா: ஸ$^2$த்மக்$_2$ப்ரமுகா$_2$: ச நித்யா நித்யா த்வமேவ ஜனனி ப்ரக்ருதி: புராணா / (42)

மொழிபெயர்ப்பு :- ஸ்ரீ விஷ்ணு சொல்கிறார், "தாயே, பிரம்மனும் சிவனும் நானும் உங்களால் உருவானவர்கள். நாங்கள் அழியக்கூடியவர்கள். எனவே மற்ற இந்திரர்களும், தேவர்களும் எப்படி நிலையானவர்களாக முடியும்? நீயே நிலையானவள். நீ எங்களைத் தோற்றுவித்த தாயும், சனாதன தேவியும் ஆவாய்". (42)

பக்கம் 11, 12, அத்தியாயம் 5, ஸ்லோகம் 8:

யதி$_3$ த$_3$யார்த்$_3$ரமநா ந ஸதா$_3$ம்பி$_3$கே கத$_2$மஹ் விஹித: ச தமோகு$_3$ண: கமலஜஸ்ய ரஜோகு$_3$ண்ஸம்ப$_4$வ: ஸுவிஹித: கிமு ஸத்வகு$_3$ணோ ஹரி: / (8)

மொழியாக்கம்:- சிவன் சொல்கிறார்: தாயே! எங்கள் மீது நீங்கள் கருணை கொண்டால், ஏன் என்னை தமோகுணனாக ஆக்கினாய், தாமரையிலிருந்து வந்த பிரம்மாவை ஏன் ரஜோகுணனாக ஆக்கினாய், ஏன் விஷ்ணுவை சத்வகுணனாக ஆக்கினாய்? உயிர்களின் பிறப்பு இறப்பு என்ற தீய செயலில் எங்களை ஏன் ஈடுபடுத்தினாய்?

ஸ்லோகம் 12 : ரமயஸே ஸ்வபதிம் புருஷம் ஸதா$_3$ தவ க$_3$திம் ந ஹி விஹ வித$_3$ம் ஸி$^2$வே/ (12)

மொழியாக்கம் :- உன் கணவனாகிய காலனுடன் எப்பொழுதும் இன்பத்தில் ஈடுபட்டுள்ளாய். உன் நிலை யாருக்கும் தெரியாது.

ஸ்கந்தம் 3, பக்கம் 14, அத்தியாயம் 5, ஸ்லோகம் 43:-

ஏக்மேவ த்$_3$விதீயம் யத் ப்ரஹம் வேதா வத$_3$ந்தி வை /
சா கிம் த்வம் வா•ப்யஸௌ வா கிம் சந்தே$_3$ஹம் வினிவர்தய (43)

மொழியாக்கம்:- வேதங்களில் ஒரே ஒரு பூரண பிரம் என்று

அழைக்கப்படுகிறார், அது நீங்களா அல்லது வேறு ஒருவரா? எனது சந்தேகத்தை தெளிவுபடுத்துங்கள்.

**பிரம்மாஜியின் இந்த வேண்டுகோளுக்கு தேவி சொன்னாள் :–**

தே$_3$வ்யுவாச ஸதை$_3$கத்வம் ந பே$_4$தோ$_3$•ஸ்தி ஸர்வதை$_3$வ் மமாஸ்ய ச//
யோ்•சௌ சா•ஹமஹம் யோஹ்•சௌ பே$_4$தோ$_3$•ஸ்தி மதிவிப்$_4$ரமாத் //2//
ஆவ்யோரந்தரம் ஸூக்ஷ்ம் யோ வேத$_3$ மதிமான்ஹி ஸ்: //
விமுக்த: ஸ து ஸன்ஸாரான்முச்யதே நாத்ர ஸந்ஷய: //3//

**மொழியாக்கம்:– தேவி கூறினாள்: நானே அவர், அவரே நான். புத்தி குழப்பத்தால் வித்தியாசம் உணரப்படுகிறது (12) எங்கள் இருவருக்கிடையே உள்ள நுட்பமான உறவை அறிபவனே அறிவுள்ள அதாவது தத்துவதரிசி ஆவார், அவர் இந்த உலகத்திலிருந்து விடுதலை பெற்று முக்தி பெறுகிறார், இதில் எந்த சந்தேகமும் இல்லை (13)**

ஸூம்ரணாத்$_3$த$_4$ர்ஸ்$^2$னம் துப்$_3$யம் தா$_3$ஸ்யே•ஹம் விஷ்மே ஸ்தி$_2$தே // ஸ்வர்தவ்யா•ஹம் சதா$_3$ தே$_3$வா: பர்மாத்மா சனாதன: //80// உப்$_4$யோ: ஸூம்ரணாதே$_3$வ் கார்யசித்$_3$தி$_4$ர் சன்ஸயம் // ப்$_3$ரஹம்மோவாச் // இத்யுக்த்வா விஸ்ஸர்ஜாஸ்மாந்த$_3$ த்வா சக்தி: ஸூஸஸ்க்ருதான் //81// விஷ்ணவே•த்$_2$ மஹாலக்ஷ்மி மஹாகாளிம் ஸிவாய ச // மஹாசரஸ்வதிம் மஹ்யம் ஸ்தா$_2$னாத்தஸ்மாத்$_3$விசர்ஜிதா: //82//

**மொழியாக்கம் :– துன்பம் வரும்போது நீ என்னை நினைத்தால் நான் உனக்கு தரிசனம் கொடுப்பேன். தேவர்களே! பரமாத்மா சனாத்தன தேவனின் சக்தி ரூபத்துடன் என்னை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். (80) இருவரையும் நினைப்பதால் உங்கள் காரியம் கைகூடும். இப்படி சொல்லிவிட்டு சக்தி அளித்துவிட்டு அவள் விடைபெற்றாள் என பிரம்மா கூறினார். (81) விஷ்ணுவிற்கு லட்சுமியும், சிவனுக்கு மகாகாளியும், எனக்கு சரஸ்வதியும், கொடுத்துவிட்டு அவள் விடைபெற்றாள். (82)**

மம சைவ் ஸரீரம் வை ஸூத்ரமித்யாபி$_4$தீ$_4$யதே //
ஸ்தூ$_2$லம் ஸரீரம் வக்ஷ்யாமி ப்$_3$ரஹம்ண: பரமாத்மன: //83//

**மொழியாக்கம்:– என் உடல் துணி போன்றது என்றும், பரமாத்மா பிரம் உடல் ஒரு ஜட உடல் என்று கூறப்படுகிறது (83)**

### மேற்கூறிய புராண வாக்கியத்தின் பொருள்

**பிரம்மா ரஜோகுணமும், விஷ்ணு சத்வகுணமும் சிவன் தமோகுணம் கொண்டவர்கள் என்று தெளிவாகிறது. மேலும் இம்மூவரும் அழியக்கூடியவர்கள் மற்றும் பிறப்பு–இறப்பு உள்ளவர்கள். துர்க்கையை பிரகிருதி என்றும் சொல்லப்படுகிறது. துர்க்கையின் கணவன் பிரம் (க்ஷர் புருஷ்) ஆவார். இவர்கள் தாம்பத்திய உறவில் உள்ளார்கள். இருவரும் ஸ்தூல சரீரத்துடன் உருவத்தில் உள்ளார்கள்.**

**இதே ஆதாரம் கீதை அத்தியாயம் 14 ஸ்லோகம் 3, 4, 5ல் உள்ளது. கீதையை அருளிய காலன் சொல்கிறார், “துர்க்கை என் மனைவி ஆவாள், நான் அவள் கருவில் விதையை விதைக்கிறேன். அதனால் அனைத்து உயிர்களும் பிறக்கின்றன. இருபத்தோரு பிரபஞ்சங்களில் உள்ள அனைத்து உயிர்களுக்கு நான் தந்தை ஆவேன், துர்க்கை (பிரகிருதி – அஷ்டங்கி) அனைத்திற்கும் தாய் ஆவாள். துர்க்கை மூலம் உருவான மூன்று குணங்களும், அனைத்து உயிர்களையும் கர்மவினையோடு கட்டுகின்றன.”**

## முக்குண மாயை (ரஜோகுணம் - பிரம்மா, சத்வகுணம் - விஷ்ணு, தமோகுணம் - சிவன்) ஆன்மாவை மோட்சம் அடைய விடாது

புனித கீதை அத்தியாயம் 7, ஸ்லோகம் 1-2ல், பிரம்ம காலன் சொல்கிறான், அர்ஜுனா! நான் உனக்கு கூறப்போகும் ஞானத்தை தெரிந்த பிறகு உனக்கு அறியவேண்டியது எதுவுமே இருக்காது. கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 12ல், கீதையை கூறும் பிரம் (ஷர் புருஷ் - கால்) மூன்று குணங்களால் நடக்கும் அனைத்து செயல்களுக்கும் நானே காரணம் என்று கூறுகிறார். அதாவது ரஜோகுணம் பிரம்மா மூலம் படைத்தல், சத்வகுணம் விஷ்ணு மூலம் காப்பதும், தமோகுணம் சிவன் மூலம் அழிப்பதற்க்கு காரணம் நான் கால் பகவான் தான். மேலும் நான் அவர்களில் இல்லை என்று கூறுகிறார். ஏனெனில் இந்த காலன் வெகு தொலைவில் (இருபத்தியோராம் பிரபஞ்சத்தில்) இருக்கிறார், ஆனால் காலன் மனம் என்ற வடிவில் ரிமோட் மூலம் அனைத்து உயிரினங்கள் மற்றும் ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு மற்றும் ஸ்ரீ சிவனையும் இயந்திரம் போல இயக்குகிறார். கீதையை கூறிய காலன், என்னுடைய 21 பிரபஞ்சங்களில் உள்ள ஜீவராசிகளுக்கு என்னுடைய வழிபாட்டிலிருந்து தான் வேதங்களில் உள்ள சாஸ்திர முறையான வழிபாடு தொடங்குகிறது என்று கூறுகிறார். அனைத்து உயிரினங்களின் புத்தியும் என் கையில் உள்ளது. 21 பிரபஞ்சங்களுக்கும் நான் எஜமான் ஆவேன். எனவே (கீதை அத் 7, ஸ்லோகம் 12 முதல் 15 வரை) மூன்று குணங்களால் நடக்கும் உயிர்களின் படைத்தல், காத்தல், அழித்தல் இவைகளுக்கு மூல காரணமே நான் பிரம்ம காலன் தான். (ஏனென்றால், காலன் ஒரு லட்சம் மனித உயிர்களை கொன்று உண்ணும்படி சபிக்கப்பட்டுள்ளான்). என்னை (பிரம் – காலனை) வழிபடாமல் முக்குண மாயையை வழிபடும் சாதகன் சிறிய பலன்களை தான் பெறுகிறான், அதனால் துன்பங்களை அடைகிறான், மேலும் இவற்றை விட அதிக பலன்களை என்னால் (பிரம்-காலனால்) கொடுக்கமுடியும். ஆனால் தத்துவ ஞானம் இல்லாததால், இந்த அக்ஞானி பக்தர்கள் இந்த மூன்று குணங்கள் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) வரை மட்டுமே வழிபடுகிறார்கள். அவர்களின் புத்தி இந்த மூன்று தெய்வங்கள் வரை மட்டுமே உள்ளது. அதனால்தான், இவர்கள் மனிதர்களில் தாழ்ந்தவர்கள் அசுர குணம் கொண்ட தீய செயல்களைச் செய்யும் அக்ஞானிகள் என்னை (காலனை) வழிபடுவதில்லை. இதே ஆதாரம் கீதை அத்தியாயம் 16, ஸ்லோகம் 4 முதல் 20 மற்றும் 23, 24 மற்றும் அத்தியாயம் 17, சுலோகம் 2 முதல் 14 வரை மற்றும் 19, 20 இவைகளில் உள்ளன.

சற்று சிந்தியுங்கள்:- ராவணன் சிவனை மிருத்யுஞ்சயா விஜயன், அமரன், சர்வேஸ்வரன் எனப் போற்றி பத்து முறை தலையை வெட்டி சிவனுக்கு அர்ப்பணித்தார். அதன் பலனாக போரின் போது பத்து தலைகள் அவனுக்கு வாய்த்தன ஆனால் முக்தி பெறவில்லை, அவன் ராட்சசன் என அழைக்கப்பட்டான். இதற்கு காரணம் அவனது போலியான குரு ஆவார். அவர் வேதங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தமோகுணத்தைக் கொண்ட சிவபெருமானை பூரண பரமாத்மா என வழிகாட்டியதுதான், அப்பாவி ராவணனும் போலி குருவின் மீது வைத்த நம்பிக்கையால் தனது வம்சத்தையே நாசமாக்கி கொண்டான்.

1. ஒரு பஸ்மாகிரி என்ற பக்தன் சிவனை இஷ்ட தெய்வமாக வணங்கி, சிரசாசனம் (தலை கீழாக நிற்பது) செய்து பன்னிரண்டு வருடங்கள் தவம் செய்து, சிவனிடமிருந்து பஸ்மகண்டத்தை (பஸ்மம் ஆக்கும் வலையல்)

பெற்றான். அதை வைத்து, சிவனைக் கொன்று பார்வதியைத் தன் மனைவி ஆக்கும் நோக்கத்துடன் சிவனையே அழிக்க தாக்க தொடங்கினான். சிவபெருமான் பயத்தில் ஒடிவிட்டார். பிறகு விஷ்ணு பகவான் அவனை நிறுத்தி ஆடவைத்து பஸ்மகண்டத்தால் அவனை சாம்பலாக்கினார். தமோகுணம் கொண்ட சிவனின் பக்தன் பஸ்மாகிரி அவர்கள் பஸ்மாசுரன் அரக்கன் என்று அழைக்கப்பட்டான். (ரஜோகுணம்) பிரம்மாவை வழிபட்ட ஹிரண்யகசிபும் அசூரன் அரக்கன் என அழைக்கப்பட்டான்.

2. சுமார் 335 ஆண்டுகளுக்கு முன்னர், ஹரித்வாரில் உள்ள கங்கை படிக்கட்டுகளில் ஒரு கும்பமேளா (சாஸ்திர விதியற்ற முறையில் சாதகம் செய்பவர்களின்) நடைபெற்றது. அனைத்து ரிஷிகளும் சாதுக்களும் (முக்குண வழிபாட்டாளர்கள்) குளிப்பதற்கு அங்கு வந்தார்கள். அதில் கிரி, பூரி, நாத, நாக போன்றவர் சிவபெருமானை (தமோகுணம்) வழிபடுபவர்கள் ஆவார் மற்றும் வைஷ்ணவர்கள் ஸ்ரீ விஷ்ணு பகவானை (சத்வகுணம்) வழிபடுபவர்கள் ஆவார். அங்கு முதலில் யார் குளிப்பது என்ற விவகாரத்தில் நாக மற்றும் வைஷ்ணவ சாதுக்களிடையே ஒரு போரே நிகழ்ந்தது. சுமார் 25,000 முக்குண பக்தர்கள் கொல்லப்பட்டனர். ஒரு சிறிய விஷயத்திற்காக இப்படி படுகொலை செய்பவர்கள் சாதுக்களா அல்லது அசுரர்களா? என யோசியுங்கள். ஒரு சாதாரண மனிதன் கூட எங்காவது குளிக்கும் போது, மற்றவர்கள் குளிப்பதற்கு இடம் கேட்டால், இடத்தை விட்டுக்கொடுப்பார்கள். அதனால் தான் கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 12 முதல் 15 வரையில், என்னுடைய திரிகுண மாயையின் (ரஜோகுணம் - ஸ்ரீ பிரம்மா, சத்வகுணம் ஸ்ரீ விஷ்ணு மற்றும் தமோகுணம் - ஸ்ரீ சிவன்) பூஜை செய்து மதிமயங்கி போனவர்கள் புகழுக்காக பசித்த அசுர குணம் கொண்டவர்கள், மனிதர்களில் தாழ்வானவர்கள், கெட்ட காரியம் செய்யும் மூடர்கள் என்னையும் வழிபடுவதில்லை என்று கூறப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 16, 17, 18 இல், புனித கீதையை கூறும் காலன், என்னை வழிபடும் பக்தர்கள் நான்கு வகையினர் என்று கூறியுள்ளார். ஒன்று அர்த்தார்த்திகள் (இவர்கள் செல்வத்தைத் தேடுபவர்கள்), அவர்கள் வேத மந்திரங்களால் ஜபம், யாகம் போன்றவற்றைச் செய்கிறார்கள். இரண்டாவது ஆரத் (துன்பங்களை போக்க வேத மந்திரங்களால் ஜபம், யாகம் போன்றவற்றைச் செய்வார்கள்). மூன்றாவது ஜிக்யாசர், இவர்கள் இறைஞானத்தை விரும்புபவர்கள், இறை ஞானத்தை பெற்று பேச்சாளர்களாக மாறி மற்றவர்களை விட சிறந்தவர் என்ற கர்வத்தால் பக்தி அற்றுபோவார்கள். நான்காவது ஞானி, இவர்கள் மனித பிறவி அபூர்வமானது என்றும், இறைவனை வழிபடவில்லை என்றால் வாழ்க்கை வீணாகிவிடும் என்றும் அறிந்தவர்கள். இவர்கள் வேதங்கள் மூலம் முக்குணம் (பிரம்மா-விஷ்ணு-சிவன்) மற்றும் பிரம் (ஷர்புருஷ்), பரபிரமிற்க்கும் (அக்ஷர்புருஷ்) மேலான பூரண பரமாத்மாவை மட்டுமே வழிபடவேண்டும் என்று அறிந்தவர்கள். அவர்கள் எனக்கு பிரியமானவர்கள், ஏனென்றால் முக்குணங்களைவிட (பிரம்மா, விஷ்ணு, சிவனுக்கு) மேலான என்னை (காலனை) வழிபடுகிறார்கள். ஆனால் அவர்கள் வேதங்களில் உள்ள “ஓம்” என்ற பிரம்ம காலனுடைய மந்திரத்தை, பூரண பரமாத்மாவின் மந்திரம் என சுயமாக நினைத்து பல ஆண்டுகளுக்கு வழிபட்டு வந்தனர், ஆனால் இறைவனை அடையாமல் மற்ற சித்தி என்ற சக்திகள் அடைந்தன. ஏனென்றால் புனித கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 34 மற்றும் புனித யஜுர்வேதம் அத்தியாயம் 40 மந்திரம் 10 இல் கூறியுள்ள தத்துவதர்ஷி ஞானி அவர்களுக்கு கிடைக்கவில்லை, எனவே ஞானிகள் கூட காலனை

வழிபட்டு பிறப்பு மற்றும் இறப்பு சுழற்சியில் சுழல்கின்றனர்.

சுனக் ரிஷி என்னும் ஒரு பெரிய ஞானி வேதங்களைப் படித்து, "ஓம்" மந்திரத்தை இறை வழிபாட்டின் மந்திரமாக கருதி பல ஆண்டுகளுக்கு ஜபம் செய்தார். மான்தாத்தா சக்ரவர்த்தி எனும் ஒரு மன்னன் இருந்தான் (சக்ரவர்த்தி என்றால் பூமியை ஆள்பவன்). தனக்குக் கீழ் இருந்த மன்னர்களை எதிர்த்துப் போரிடச் சொல்லி, ஒரு குதிரையின் கழுத்தில் ஒரு கடிதம் கட்டி அனைத்து ராஜ்ஜியத்திலும் சுற்ற வைத்தார். அதில் மன்னன் மான்தாத்தாவிடம் அடிபணியாதவன் குதிரையைப் பிடித்து வைத்து போரிட வேண்டும் என்பது நிபந்தனை. யாரும் குதிரையை பிடிக்க துணியவில்லை. இதை அறிந்த சுனக் ரிஷி, மன்னனின் ஆணவத்தை அடக்க போரை ஏற்றுக்கொண்டார். சக்கரவர்த்தியிடம் 72 கோடி சேனைகள் இருந்தன. அதை நான்காக பிரித்து, 18 கோடி சேனையை அனுப்பி முனிவரை தாக்கினர். மறுபுறம், சுனக் ரிஷி அவர்கள் தான் சேமித்து வைத்த வழிபாட்டின் சித்த சக்தி மூலம் நான்கு வெடி குண்டுகளை உருவாக்கி, மன்னரின் நான்கு படைகளையும் அழித்தார்.

சிறப்பு : ஸ்ரீ பிரம்மா, விஷ்ணு, சிவன், பிரம் மற்றும் பரபிரம் உடைய பக்தியால், பாவம் மற்றும் புண்ணியத்தின் கர்மவினை பலன்களை அனுபவித்தே ஆக வேண்டும். புண்ணியங்கள் சொர்க்கத்திலும் பாவங்கள் நரகத்தில் மற்றும் 84 இலட்சம் உயிரினங்களின் உடலில் அனுபவிக்க வேண்டும். உதாரணமாக, சுனக் மகரிஷி அவர்கள் "ஓம்" மந்திரத்தின் ஜபத்தால் சேமித்த பக்தி செல்வத்தின் சிலவற்றை சித்த சக்தி மூலம் (நான்கு குண்டுகளை உருவாக்குவதன் மூலம்) தீர்த்துவிட்டார். இதன் விளைவாக அவர் மகா ரிஷி என்று அழைக்கப்பட்டார். மீதமுள்ள புண்ணியத்தை மகா சொர்க்கத்தில் அனுபவித்துவிட்டு, பிறகு நரகத்திற்குச் சென்று பிறகு மீண்டும் 84 லட்சம் உயிரினங்களில் பிறந்து துன்பங்களை அனுபவிப்பார். மேலும் அவர் 72 கோடி வீரர்களை கொன்ற பாவ பலனையும் அனுபவிப்பார். ஒருவரை ஆயுதத்தால் அல்லது மந்திர சொல்லால் கொன்றாலும் இறைவன் இரண்டிற்கும் ஒரே தண்டனையை வழங்குவார். பிறகு சுனக் ரிஷியின் ஆன்மா நாயாக பிறக்கும்போது, அவர் உடலில் காயம் ஏற்பட்டு, அந்த வீரர்களின் ஆன்மாக்கள் புழுக்களாக மாறி பழிவாங்கும். சில சமயம் கால் உடைந்து, வெயில், குளிரில் தாங்க முடியாத வலியை அனுபவிக்க வேண்டிவரும்.

அதனால்தான், புனித கீதையை அருளிய காலன் (பிரம்), கீதை அத் 7 ஸ்லோகம் 18 இல், ஞானிகள் சிறந்தவர்கள் தான், ஆனால் பூரண பரமாத்மாவின் மூன்று மந்திரங்களின் உண்மையான வழிபாட்டு முறையை சொல்லும் ஒரு தத்வதர்ஷி ஞானி கிடைக்காததால், இவர்கள் என்னுடைய தாழ்ந்த கெட்ட (அனுத்தமம்) முக்தி நிலையை அடையும் ஆசையில் இருக்கிறார்கள், அதாவது எனது வழிபாடும் சிறந்ததல்ல என்று கூறுகிறார். எனவே கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 62 இல், அர்ஜுனா! நீ முழு மனதுடன் அந்த பூரண பரமாத்மாவை சரணடை. அவர் கருணையால் நீ பரம சாந்தியும், சத்யலோகமும் அடைவாய் என்று கூறப்பட்டுள்ளது. பிரம்ம காலன் ஸ்ரீ கிருஷ்ணரின் உடலுக்குள் ஆவியாக புகுந்து புனித கீதையை விவரித்தார். பின்னர், பல ஆண்டுகளுக்குப் பிறகு, மகரிஷி வியாசரின் உடலில் ஆவியாக நுழைந்து, அதே பிரம்ம காலன் (ஷர் புருஷ்) தானே புனித கீதை மற்றும் புனித நான்கு வேதங்களை எழுதினார். இவற்றில் பரமாத்மா யார், அவரை எப்படி வழிபட வேண்டும், என்ன பலன் கிடைக்கும்

என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் வழிபாட்டு முறை பிரம் (க்ஷர் புருஷ்) அதாவது ஜோதி நிரஞ்சன் – காலன் வரை மட்டுமே உள்ளது.

பூரண பரமாத்மாவை வழிபட, புனித கீதை அத் 4 ஸ்லோகம் 34 இல் புனித கீதையை கூறும் பிரம், பூரண பரமாத்மாவின் வழிபாட்டிற்காக ஒரு தத்துவதர்ஷியை நாடு, பின்னர் அவர் சொல்லும்படி செய்யுங்கள் என்று கூறுகிறார். கீதையை கூறும் பிரம், பூரண பரமாத்மாவை அடையும் வழி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். தனது வழிபாட்டை பற்றி, கீதை அத் 8 ஸ்லோகம் 13 இல், என்னுடைய வழிபாடு ஒரே ஒரு “ஓம்” மந்திர ஜபம் மட்டுமே, இதை கடைசி மூச்சு வரை உச்சரிப்பதன் மூலம் என்னை அடைய முடியும் என்று கூறியுள்ளார். பிறகு கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18 இல், இறைவனை நேசிக்கும் ஆன்மாக்களுக்கு பூரண பரமாத்மாவின் வழிபாட்டை அறிந்த ஒரு தத்வதர்ஷி கிடைக்காததால், எனது தாழ்வான முக்தியைச் சார்ந்து இருக்கிறார்கள் என்று கூறியுள்ளார். (புனித கீதையை கூறும் கடவுள், தன்னுடைய பக்தியால் கிடைக்கும் முக்தியும் (மோட்சம்) மிக தாழ்வானது–மட்டமானது என்று தானே கூறுகிறார்).

## மற்ற தெய்வங்களை (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) வழிபடுவது அறியாமை

கீதை அத்தியாயம் 7, ஸ்லோகம் 15 முதல் 20 வரையில் கூறியதாவது: ஸ்லோகம் 15ல், முக்குண மாயையில் (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோ குணம் சிவன் வரை மட்டுமே வழிபட்டு அதன் பலனால்) மதிமயங்கியவர்கள் அசூர குணம் கொண்ட மூடர்கள் என்னை வழிபடுவதில்லை. மேலும் ஸ்லோகம் 20ல், அந்த அந்த ஆசைகளின் காரணத்தால் அவர்கள், தங்கள் இயல்பினால் ஈர்க்கப்பட்டு, அறியாமையால் மற்ற தெய்வங்களை வணங்குகிறார்கள். அத்தியாயம் 7 ஸ்லோகம் 21ல், எந்த தெய்வத்தை ஒரு பக்தன் வழிபட விரும்புகிறானோ, அதே தெய்வத்தின் மீது அந்த பக்தனின் நம்பிக்கையை நான் நிலையாக்குகிறேன் என்று கூறியுள்ளார்.

அத்தியாயம் 7, ஸ்லோகம் 22ல், சாதகன் எந்த தெய்வத்தை வழிபடுகிறாரோ, அதே தெய்வத்தின் மூலம் என்னால் விதிக்கப்பட்ட சில இன்பங்களை பெறுகிறார் என்று கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு முதல்வர் சொல்கிறார், “என் கீழ் பணி செய்யும் அதிகாரிகளுக்கு சில அதிகாரங்களை வழங்கியுள்ளேன். இவர்களை சார்ந்திருப்பவர்கள் பெறும் பலனும் என் மூலம் வழங்கப்படுகிறது. ஆனால் அவைகள் முழுமையான பலன்கள் அல்ல”. அத்தியாயம் 7, ஸ்லோகம் 23ல், அந்த மூடர்களின் பலன் நிலையற்றது. தெய்வங்களை வழிபடுபவர்கள் தெய்வங்களை அடைகிறார்கள். சாஸ்திர முறைபடி பக்தி செய்யும் பக்தர்களும் என்னை தான் அடைகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது, அதாவது காலனின் வலையிலிருந்து யாரும் விடுபடமுடியாது.

சிறப்பு : அத்தியாயம் 7, ஸ்லோகம் 20 முதல் 23 வரை, சிலர் பித்ருக்களுக்கும், பூதங்களுக்கும், தேவர்களுக்கும், இயல்பாக பூஜை செய்கிறார்கள். நான் அவர்களை அதே தெய்வங்கள் மீது நம்பிகையை எற்படுத்துகிறேன். அவர்கள் அந்த தெய்வங்கள் மூலம் பெரும் லாபமும் நான் அந்த தெய்வங்களுக்கு கொடுத்த சக்தியால் தான் பெறுகின்றன. அதன் அடிப்படையில் தான் தெய்வ வழிபாடு செய்பவர்கள் தெய்வங்களை

அடைகின்றன. ஆனால் அந்த சாதகர்களின் வழிபாடு 84 இலட்சம் உயிரினங்களில் கொண்டு செல்லும், மேலும் என்னை (காலனை) வணங்குபவர்கள், அக்னிபறைமீதும், பின்னர் மகா சொர்க்கத்திற்கும் (பிரம்லோகம்) செல்வார்கள். அதன்பிறகு பிறப்பு-இறப்பு சுழற்சியில் இருப்பார்கள், முக்தி அடைய மாட்டார்கள்.

இதன் பொருள் என்னவென்றால் தெய்வங்களையும், பிரம்மா, விஷ்ணு, சிவன் மற்றும் துர்க்கை ஆகியோரை விட பிரம் காலனின் வழிபாடு அதிக பலனை தரும். ஆனால் சாதகன் மகா சொர்க்கத்திற்குச் சென்று பல யுகத்திற்கு அங்கு இருந்தாலும், பிறகு நரகத்திலும் பிற உயிரினங்களிலும் துன்பங்கள் தொடரும். பூரண முக்தி-மோட்சம் கிடைக்காது அதாவது காலனின் வலையிலிருந்து விடுபட முடியாது.

## மற்ற ஆதாரங்கள் :

புனித கீதை மற்றும் புனித வேதங்களில், பிற தெய்வங்கள் மற்றும் பித்ருக்களின் வழிபாடு, சிரார்த்தம் மற்றும் இறந்தவர்களை வணங்குவது (அஸ்தி கரைதல், பிண்டம் வைத்தல்) தடைசெய்யப்பட்டுள்ளது.

## புனித வேதங்களில் உள்ள வழிபாட்டின் பலன் சொர்க்கம் மற்றும் மகாசொர்க்கம் அடைவது, முக்தி அல்ல

புனித கீதை அத்தியாயம் 9, ஸ்லோகம் 20, 21ல், விருப்பங்களை நிறைவேற்ற மூன்று வேதங்களில் சொல்லப்பட்டுள்ள சாஸ்திர முறையாக என்னை வழிபடுபவர்கள் மகா சொர்க்கத்திற்கு சென்று ஆனந்தமாய் மகிழ்ந்த பிறகு மீண்டும் பிறப்பு இறப்பு சக்கரத்தில் வந்துவிடுகிறார்கள் அதாவது சாஸ்திர முறையான வழிபாடாக இருந்தாலும் அதன் பலன் உலக இன்பமும், சொர்க்கமும் தான், பின்னர் நரகம் மற்றும் 84 லட்சம் உயிரினங்களின் பிறவிகள் ஆகும். பூரண குருவிடமிருந்து மூன்று மந்திரங்களை (ஓம் மற்றும் தத், சத் இது குறீயிடு) பெறாதவரை, அத்தியாயம் 9 ஸ்லோகம் 22ல் கூறிய படி, சாஸ்திர முறைபடி என்னை வழிபடுபவர்களின் வழிபாட்டை நானே பாதுகாக்கிறேன், ஆனால் முக்தியில்லை.

## சாஸ்திரத்திற்கு எதிரான வழிபாடு வீழ்ச்சிக்கு காரணம்

கீதை அத்தியாயம் 9, ஸ்லோகம் 23, 24ல், மற்ற தெய்வங்களை வழிபடும் பக்தர்கள் என்னுடைய (காலனின் வலையில் இருக்கும்) வழிபாட்டை தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களின் வழிபாடு சாஸ்திரத்திற்கு மாறானது. ஏனென்றால் நான் எல்லா யாகங்களின் பலனை அனுபவிப்பவன் மற்றும் எஜமானாக இருக்கிறேன். அந்த பக்தர்கள் என்னை சரியாக அறிவதில்லை, அதனால் அவர்கள் வீழ்ச்சியை அடைகிறார்கள், அதாவது நரகம் மற்றும் 84 லட்சம் உயிரினங்களில் பிறப்பு இறப்பு என்ற சக்கரத்தில் துன்பப்படுகிறார்கள். கீதை அத்தியாயம் 3, ஸ்லோகம் 14, 15 இல் கூறியதுபோல, எல்லா யாகங்களிலும் மதிக்கப்படுபவர், யாருக்கு யாகம் அர்ப்பணிக்கப்படுகிறதோ, அந்த இறைவன் பூரண பிரம் ஆவார். அவரே கர்மவினை அடிப்படையில் எல்லா உயிர்களுக்கும் பலன்களை வழங்குகிறார். ஆனால் பூரண குருவை அடையாத வரை, அனைத்து யாகங்களின் பலனை கால் (மனதின் வடிவில்) தான் அனுபவிக்கிறான். அதனால்தான் எல்லா யாகங்களின் பலனை அனுபவிப்பவன் என்று கூறுகிறார்.

## சிரார்த்தம் செய்பவர் பித்ருக்களை அடைவார், முக்தி அடையமாட்டார்

கீதை அத்தியாயம் 9, ஸ்லோகம் 25ல், தெய்வங்களை பூஜிப்பவர் தெய்வங்களையும், பித்ருக்களை பூஜிப்பவர் பித்ருக்களையும், இறந்தவர்களை பூஜிப்பவர் பூதமாகிறார். சாஸ்திரங்களின்படி (வேதங்கள் மற்றும் கீதையின்படி) வழிபடுபவர்கள் என்னை அடைகிறார்கள், அதாவது, அவர்கள் காலனால் உருவாக்கப்பட்ட சொர்க்கம் மற்றும் மகா சொர்க்கத்தில் அதிக காலம் அனுபவிக்கிறார்கள்.

சிறப்பு : அதாவது ஒருவன் தாசில்தாரை பூசிப்பவன் தாசில்தாராக மாறமுடியாது. அவர் கொடுக்கும் பணத்தில் வாழ்வாதாரம் நடக்கும், அதாவது அவரை சார்ந்து இருப்பான். அதேபோல், தெய்வங்களை (முக்குணங்களை) வழிபடுபவர்கள், தெய்வங்களால் கிடைக்கும் பலனை மட்டுமே பெறுகிறார். ஆனால் கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 12 முதல் 15 மற்றும் 20 முதல் 23 வரையில், முக்குண மாயை, அதாவது மூன்று குணங்களை (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம்விஷ்ணு, தமோகுணம் சிவன்) வழிபடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அதே போல, பித்ருக்களை பூஜிப்பவர் (சேவை செய்தல்) பித்ருக்களிடம் சென்று சிறிய பித்ருக்களாக மாறி துன்பப்படுவார். அதேபோல, ஒருவர் பூதங்களை பூஜித்தால் (சேவை செய்தால்) அவர் ஆவியாக மாறுவார், ஏனெனில், வாழ்நாள் முழுவதும் யாரை ஈர்க்கிறோமோ, இறுதியில் அவனது மனம் அவர்களிடமே சென்று சிக்கிக் கொள்கிறது, அதன் காரணமாக அவர்களிடமே செல்கிறது.

சிலர், உங்களிடமிருந்து தீட்சை பெற்று பக்தி செய்துகொண்டே பித்ருக்களையும் தெய்வங்களையும் நாங்கள் தொடர்ந்து வழிபடுவோம் என்றும் கேட்கிறார்கள். ஆனால் கீதையிலும், வேதங்களிலும் தடை செய்யப்பட்டதை செய்வது சாஸ்திரத்திற்கு மாறானது. இதை புனித கீதை அத்தியாயம் 16 ஸ்லோகம் 23-24 இல் கூறப்பட்டுள்ளது, சாஸ்திர முறையை விட்டுவிட்டு மனம்போனபடி வழிபாடு செய்பவர்கள் சுகமோ அல்லது மோட்சமோ அல்லது சித்தியோ அடைவதில்லை, அதாவது வாழ்க்கையை வீணாக்குகிறார்கள். எனவே அர்ஜுனா, உனக்கு எந்த வழிபாட்டை செய்யவேண்டும் மற்றும் எந்த வழிபாட்டை செய்யக் கூடாது என்று அறிய சாஸ்திரங்கள் தான் ஆதாரம் ஆகும்.

இதற்கான ஆதாரம் மார்க்கண்டே புராணத்திலும் உள்ளது (கீதா பிரஸ் கோரக்பூர் வெளியீடு, பக்கம் 237, இதில் மார்க்கண்டே புராணமும் பிரம்ம புராணமும் இணைக்கப்பட்டுள்ளது). ருச்சி என்கிற ஒரு ரிஷி பிரம்மச்சாரியாக இருந்து வேதங்களின்படி பக்தி செய்தார். அவருடைய 40 வயதில், சாஸ்திரத்திற்கு மாறாக பக்தி செய்து பித்ருக்களாகி துன்பப்பட்டு கொண்டிருந்த அவருடைய நான்கு முன்னோர்கள் தென்பட்டார்கள். அவர்கள், “மகனே ருச்சி! நீ திருமணம் செய்து எங்களுக்கு சிரார்த்தம் செய், நாங்கள் துன்பப்படுகிறோம்” என்று சொன்னார்கள். ரிஷியான ருச்சி சொன்னார், “பித்ரு பிதாக்களே, வேதங்களின் முறைபடி கர்ம காண்டத்தின் மார்க்கம் (சிரார்த்தம், பிண்டம் வைத்தல் போன்றவை) தவறானது முட்டாள்தனமானது. பிறகு ஏன் என்னை அந்தத் தவறான வழியை (சாஸ்திரத்திற்கு மாறாக) பின்பற்ற சொல்கிறீர்கள்?” பித்ருக்கள் சொன்னார்கள், ‘மகனே, வேதங்களில் பித்ருக்களையும் தெய்வங்களையும் வழிபடுவது தவறானது முட்டாள்தனமானது என்று சொல்லப்பட்டது

உண்மைதான், இதில் துளி கூட பொய் இல்லை” என்றார்கள். மேற்கூறிய மார்க்கண்டே புராணத்தில் இதே கட்டுரையில், “பித்ருக்களும் சில நன்மைகளை தருவார்கள்” என்று அந்த பித்ருக்கள் சொன்னார்கள்.

சிறப்பு: பித்ருக்கள் சுயநலத்திற்காக இப்படி சொல்லி இருக்கிறார்கள், அதை நாம் பின்பற்ற வேண்டியதில்லை. ஏனெனில் புராணங்களில் பித்ருக்கள் இறந்தவர்கள் மற்றும் தெய்வங்களை வழிபடச் சொல்வது ரிஷிகளின் உத்தரவு. ஆனால் வேதங்களில் ஆதாரம் இல்லாததால் இறைவனின் உத்தரவு அல்ல. எனவே, ஏதோ ஒரு சாது அல்லது ரிஷியின் பேச்சைக் கேட்டு இறைவனுடைய கட்டளையை மீறுதல் தண்டனைக்கு உரியதாகும்.

ஒரு முறை, ஒரு மனிதன், ஒரு காவலருடன் நட்புக் கொண்டான். அவன் காவலரிடம் தன் பக்கத்து வீட்டுக்காரன் தினமும் தன்னை தொந்தரவு செய்வதாக சொன்னான். அதற்கு அந்த காவலர், நீ அவனை தடியால் அடி, நான் பார்த்துக்கொள்கிறேன் நீ கவலைப்படாதே என்றான். அந்த மனிதனும் பக்கத்து வீட்டுக்காரனைத் தடியால் அடிக்க, தலையில் அடிப்பட்டு அவன் இறந்து போனான். அந்த இலாகா அதிகாரியாக இருந்ததால், அந்த காவலர் தனது நன்பனை கைது செய்து சிறையில் அடைத்தார், அவனுக்கு மரண தண்டனையும் கிடைத்தது. அவருடைய நண்பர் (காவலர்) எந்த உதவியும் செய்ய முடியவில்லை. ஏனென்றால், ஒருவரைக் கொன்றால் அவனுக்கு மரண தண்டனை கிடைக்கும் என்பது அரசனின் விதி. தன் நண்பன் சொன்னதை கேட்டு, அவன் அரசாங்க விதியை மீறியதால் வாழ்க்கையை இழந்தான். அதே போல் புனித கீதையும் புனித வேதங்களும் இறைவனின் விதிகளாகும். இதில் ஒரே ஒரு இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்ற விதி உள்ளதால், மற்ற தெய்வங்களையும் பித்ருக்களையும் இறந்தவர்களையும் வணங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. புராணங்களில் ரிஷிகளின் சுயமான கட்டளைகள் உள்ளது. அதை பின்பற்றினால் இறைவனின் விதி மீறல் ஆகும், எனவே துன்பம் மீது துன்பம் பெற வேண்டியிருக்கும்.

## ஓர் உண்மைக்கதை

என்னுடைய மதிப்பிற்குரிய குருநாதர் சுவாமி ராம்தேவானந்தர் தன்னுடைய 16வது வயதில், இறைவனை அடைய வேண்டி திடீரென வீட்டை விட்டு சென்றுவிட்டார். தனது வயலுக்கருகே உள்ள அடர்ந்த காட்டில் இறந்து கிடந்த ஒரு விலங்கின் எலும்புகளுக்கு அருகே தான் உடுத்தியிருந்த உடைகளை போட்டு சென்றுவிட்டார். அவர் வீடு திரும்பாததை கண்டு தேடிய உறவினர்கள், ஆடைகளை அடையாளம் கண்டு, சிறுவனை காட்டு விலங்கு ஒன்று தின்றுவிட்டதாக கருதி, அந்த விலங்குகளின் எலும்புகளை சிறுவனின் எலும்புகளாகக் கருதி வீட்டிற்கு எடுத்து வந்தனர். பிறகு அவருக்கு இறுதிச் சடங்குகள் செய்தனர். மற்ற எல்லா சடங்குகளும் செய்து, சிரார்த்தமும் செய்ய தொடங்கினர். பிறகு சுமார் 104 வயதானவுடன் குருநாதர் திடீரென ஒரு நாள், தனது சொந்த கிராமமான பெரிய பைந்தாவாஸ்க்கு (பிவானி மாவட்டம், ஹரியானா) சென்றார். சுவாமிஜியின் பருவ பெயர் ஸ்ரீ ஹரித்வாரி ஆகும், பிராமண குலத்தில் பிறந்தவர். எனக்குத் தகவல் கிடைத்தவுடன் நானும் அவரை தரிசிக்கச் சென்றேன். சுவாமியுடைய அண்ணியின் வயது 92 ஆனது. நான் அவரிடம் சுவாமிஜி வீட்டை விட்டுச் சென்ற பிறகு, நீங்கள் என்ன செய்தீர்கள் என கேட்டேன். அந்த மூதாட்டி சொன்னார், “நான்

திருமணம் ஆகி வந்தபோது, கணவருக்கு ஒரு தம்பி இருந்ததாகவும், ஒரு காட்டு விலங்கு அவரை கொன்று விட்டதாக என்னிடம் கூறப்பட்டது. பிறகு என்னையும் சிரார்த்தம் செய்ய சொன்னார்கள். இதுவரை எனது கைகளால் சுவாமிஜிக்கு 70 சிரார்த்தங்கள் செய்துவிட்டேன்" என்று கூறினார். மேலும் சில நேரம் விளைச்சல் சரியில்லை அல்லது வீட்டில் யாருக்கவாது உடல்நிலை சரியில்லை என்றால் நாங்கள் ஒரு சாதுவிடம் காரணத்தைக் கேட்போம், அவர் ஹரித்வாரி பித்ருவாகி உங்களை தொந்தரவு செய்கிறான், முந்தைய சிரார்த்தத்தில் ஏதோ குறை இருந்துவிட்டது அடுத்த முறை சரியாக செய்கிறேன், அதுவரை ஏதாவது காணிக்கை கொடுங்கள் அவரை சாந்தம் ஆக்குகிறேன் என்று கூறுவார். பிறகு பயந்து அவர் சொல்லும் காணிக்கையை கொடுப்போம். பிறகு சிரார்த்தம் நேரத்தில் குருஜியே சிரார்த்தத்தை செய்வார். பிறகு நான் இனியாவது இந்த கீதைக்கு எதிரான சிரார்த்தத்தினை விட்டுவிடுங்கள் இல்லைஎன்றால் நீங்களும் பூதமாவீர்கள் என்று சொல்லி, "கீதை அத்தியாயம் 9, ஸ்லோகம் 25யை படித்து காட்டினேன். உடனே அவர் நானும் தினமும் கீதையை படிக்கிறேன் என்று சொன்னார். அப்போது நான், நீங்கள் படித்தீர்கள் ஆனால் புரிந்துகொள்ளவில்லை இனியாவது இதை விட்டுவிடுங்கள் என்று சொன்னேன். அதற்கு அந்த மூதாட்டி, இதை எப்படி விடுவது, பரம்பரை பரம்பரையாக செய்து வருகிறோம் விடமுடியாது என்றார். இது அப்பாவி ஆன்மாக்களின் தவறு அல்ல. புனித நூல்களைப் புரிந்து கொள்ளாமல், தன்னிச்சையான வழிபாடு முறையை வகுத்த போலி குருக்களின் தவறு இது. இதனால் எந்த ஒரு பலனும், முக்தியும், அமைதியும் அடைய முடியாது. ஆதாரம் புனித கீதை அத்தியாயம் 16 ஸ்லோக் 23-24.

இந்த சேவகனின் ஒரு பிரார்த்தனை என்னவென்றால், படித்தவர்கள் கவனம் செலுத்தி, வேத முறைப்படி பக்தி செய்து, பூரண பரமாத்மாவின் நித்திய பரம ஸ்தானத்தை (சாஷ்வதம் ஸ்தானம்) அதாவது சத்யலோகத்தை அடைய வேண்டும், இதனால் பூரண முக்தியும் பரம சாந்தியும் கிடைக்கிறது (கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 62) அதற்காக ஒரு தத்வதர்ஷி குருவை நாடுங்கள் (கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 34).

ஒரு பக்தர் , உங்களிடம் தீட்சை பெற்று நீங்கள் சொல்லும் பக்தியை செய்துகொண்டே கூட சிராா்த்தமும் செய்துகொண்டு தெய்வங்களையும் வணங்கிக்கொள்வேன், இதில் என்ன தவறு? என்று சொன்னார்.

இந்த தாஸனின் ஒரு வேண்டுகோள், "சட்டத்தின் எந்தப் பிரிவையும் மீறினாலும் நிச்சயம் தண்டனை கிடைக்கும்". எனவே புனித கீதையிலும் நான்கு புனித வேதங்களிலும் விவரிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு மாறாக வழிபாடு செய்வது பயனற்றது. (ஆதாரம் கீதை அத்தியாயம் 16, ஸ்லோகம் 23, 24). பயணம் செய்யும் காரை நான் பஞ்சர் செய்து கொள்ளட்டுமா என யாராவது கேட்டால் எப்படி இருக்கும்? பக்தி என்னும் வாகனத்தை பஞ்சர் செய்யக்கூடாது. அதுபோல சாஸ்திரத்திற்கு எதிராக பக்தி செய்வது தீங்காகும்.

இன்னொரு பக்தர், "எனக்கு புகை பிடிப்பதைத் தவிர வேறு எந்த கெட்ட பழக்கமும் இல்லை. நீங்கள் சொல்லும் பக்தி மார்க்கம் மிக சிறந்தது. நான் 25 வருடங்களாக சுற்றித் திரிந்து மூன்று குருமார்களை மாற்றிவிட்டேன். ஆனால் இப்படிபட்ட ஞானம் இதுவரை எந்த குருவிடமும் கண்டதில்லை. புகைபிடிக்க மட்டும் எனக்கு விதிவிலக்கு கொடுங்கள், மற்றபடி அனைத்தையும் ஏற்கிறேன். புகை பிடிப்பது பக்தியில் எப்படி

தடையாக இருக்கும்?" என்று கேட்டார்.

இந்த தாஸனின் வேண்டுகோள்:- நமது உடலுக்கு பிராணவாயு அவசியம் தேவை. புகை பிடிப்பதால் புகை நுரையீரலுக்குச் சென்று, அதைக் கெடுத்து இரத்தத்தை மாசுபடுத்துகிறது. மனித உடல் இறைவனை அடையவும், மோட்சம் பெறுவதற்கு மட்டுமே பெறப்பட்டது. இதில் இறைவனை அடையும் வழி சுஸ்மனா எனும் நாடியிலிருந்து தொடங்குகிறது. நமது இரண்டு நாசிகளில் வலதுபுறம் இடா என்றும் இடப்புறம் பிங்குலா என்றும் அழைக்கப்படுகின்றன. இவ்விரண்டிற்கும் மத்தியில் சிறிய ஊசிமுனை அளவிற்கு சுஷ்மண நாடி உள்ளது. இது புகையிலையின் புகையால் அடைபட்டு, இறைவனை அடைவதில் தடை ஏற்படுகிறது. இறை வழி மூடப்பட்டால் மனித உடல் பயனற்றது. எனவே இறைவனை வழிபடுபவர்கள் உடலைக் கெடுக்கும் எந்த போதை பொருட்களையும் உபயோகிக்கக்கூடாது.

ஒரு பக்தர்: "நான் புகைப்பதில்லை ஆனால், மதுவும், மாமிசமும் சாப்பிடுகிறேன். இவைகள் சாப்பிடும் பண்டங்கள்தானே? இவைகளால் பக்திக்கு என்ன பாதகம்? தாவரங்களுக்கும் உயிர் உண்டல்லவா? அப்போது தாவரங்களும் மாமிசம் போன்று தானே?" என்று கேட்டார்.

தாசனின் பதில் : நம் தாய் தந்தையர் சகோதர சகோதரிகளை யாராவது கொன்று சாப்பிட்டால் எப்படி இருக்கும்?

ஜெய்சா தர்த் ஆப்னே ஹோவே, வைசா ஜான் பிரானே /
கஹே கபீர் வே ஜாஏன் நரக் மே, ஜோ காட்டேன் ஷீஷ் குரானேன் //

நமக்கு உள்ள வலி போல் தான் மற்ற உயிர்களுக்கும் இருக்கும். எனவே, உயிர்களை கொன்று இறைச்சியை உண்பவனுக்கு நரகமே வாசம் என்று கபீர் சாகேப் சொல்கிறார். தாவரங்களை உண்ண இறைவன் கட்டளையிட்டுள்ளான். பிற உயிர்களைக் கொல்வது இறைவனின் கட்டளைக்கு எதிரானது எனவே பாவமாகும்.

மதுவிலக்கு பரமாத்மா ஆணை மட்டுமல்ல, முற்றிலும் தடை செய்யப்பட்டதாகும். மது உடல் நலத்திற்குக் கேடு. குடிகாரன் எந்த தவறையும் செய்வான். செல்வம், ஆரோக்கியம், குடும்ப அமைதி, சமூக கலாச்சாரம், அனைத்திற்கும் மது எதிரி ஆகும். அன்பான குழந்தைகளின் எதிர்காலத்தை அது இருளாகும். குடிப்பவன் எவ்வளவுதான் நேர்மையானவனாக இருந்தாலும், அவன் மீதுள்ள மரியாதையும் நம்பிக்கையும் போய்விடும். ஒரு சமயம் சத்சங்கம் (சொற்பொழிவு) செய்ய ஒரு கிராமத்திற்கு சென்றிருந்தேன். அன்று மதுவிலக்கு பற்றி சத்சங்கம் செய்தேன். சொற்பொழிவு முடிந்ததும், பதினோரு வயது சிறுமி தேம்பித் தேம்பி அழுதாள். விவரம் கேட்ட போது அவள் சொன்னாள், 'மகராஜ்ஜி, என் தந்தை விமான நிலையத்தில் பணி புரிகிறார். ஆனால், தன் வருமானம் அனைத்தையும் மதுபானம் குடித்தே அழிக்கிறார். என் தாய் தடுத்தால், அவள் உடலில் தழும்பு பதியும் அளவு அடிக்கிறார். ஒருமுறை என் தாயின் மேல் சாய்ந்து நான் தடுத்த போது, எனக்கும் அடி விழுந்தது. என் உதடு வீங்கிவிட்டது. தாய் எங்களை விட்டுவிட்டு மாமா வீட்டிற்கு சென்றாள். ஆறு மாதத்திற்குப் பிறகு என் பாட்டி மீண்டும் அவரை அழைத்து வந்தார். காலை வேலைக்கு செல்லும் தந்தை மாலை வீடு திரும்பினால், சகோதரிகள் நாங்கள் மூன்று பேரும் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொள்வோம்." என்று அந்த சிறுமி கூறினாள்.

நண்பர்களே சற்று சிந்தியுங்கள், தந்தை என்ன வாங்கி வருவார் என்று எதிர்நோக்கும் குழந்தைகளை மார்பு மீது வைத்துக் கொஞ்ச

வேண்டிய தகப்பன் செய்வதைப் பாருங்கள். இதற்குக் காரணம் சமூக எதிரியான மது ஆகும். அது வீட்டை இரண்டு படுத்துகிறது. குடிகாரன், தான் அழிவது மட்டுமின்றி மற்றவர்களையும் துன்பப்படுத்தி பாவத்திற்கு ஆளாகிறான். அதாவது மனைவியின் துக்கத்தால் அவளுடைய பெற்றோர், சகோதரர், சகோதரிகள், பிறகு குடிகாரனின் பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், தாத்தா பாட்டி போன்றவர்கள் துன்பப்படுகிறார்கள். குடிகாரன் தன்னைச் சுற்றியுள்ள நல்ல மனிதர்களின் அமைதியைக் கெடுக்கிறான். ஏனென்றால், குடித்துவிட்டு குடும்பத்தில் தகராறு செய்கிறான், மனைவி, குழந்தைகளின் அலறல் சத்தம் கேட்டு, அக்கம் பக்கத்தினர் தலையிட்டால் அவரிடமும் குடிகாரன் சண்டை இடுகிறான். நல்லவர்கள் தடுக்க வில்லை என்றால் அவர்களுக்கு நிம்மதியாக தூக்கம் வராது. இந்த தாசனிடமிருந்து தீட்சை பெற்ற பிறகு, தினமும் மது அருந்தும் சுமார் ஒரு லட்சம் பேர் போதை, இறைச்சி உண்பதை முற்றிலுமாக கைவிட்டனர், முன்னர் மாலையில் மதுவின் ஆட்டம் இருக்கும் நேரத்தில், இப்போது தங்கள் குழந்தைகளுடன் மாலையில் பஜனை (சந்தியா ஆரத்தி) செய்கிறார்கள். இன்றும் ஹரியானா மற்றும் சுற்றியுள்ள மாநிலங்களில் சுமார் பத்தாயிரம் கிராமம் மற்றும் நகரங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் நான்கு ஐந்து பேர் எல்லாத் தீய பழக்கத்தை விட்டு திருந்திய மொடா குடிகாரர்கள் உதாரணமாக உள்ளார்கள். சிலர் தாங்கள் எப்போதாவது, கொஞ்சம் தான் குடிப்பதாகச் சொல்கிறார்கள். கொஞ்சம் தான் என்றாலும் விஷம் விஷம் தானே. அது பக்திக்கு பாதகம் தான் செய்யும். உதாரணத்திற்கு, சப்பாத்தி மாவுடன் கொஞ்சம் மணலை அத்துடன் கலந்தால் என்னஆகும்? அதாவது முழு முயற்சியும் வீணானது. எனவே, பூரண பரமாத்மாவை அடைய, ஒரு பூரண குருவை நாடி, வாழ்நாள் முழுவதும் ஒழுக்கத்துடன் இருந்தால் மட்டுமே பூரண முக்தி கிடைக்கும்.

## தத்துவஞானம் அடைந்த பிறகு பக்தி தொடங்குகிறது

கீதை அத்தியாயம் 9 ஸ்லோகம் 26, 27, மற்றும் 28ல், ஒருவர் ஆன்மீகம் அல்லது உலகப் பணிகளில் எதைச் செய்தாலும், அதை வேதங்களின் அடிப்படையில் செய்ய வேண்டும், அந்த வழிபாட்டாளர் என்னால் (கால்) மட்டுமே பயனடைகிறார் என்று கூறப்பட்டுள்ளது. இதே விளக்கம் ஸ்லோகம் 20, 21 இலும் உள்ளது. அத்தியாயம் 9, ஸ்லோகம் 29ல், எனக்கு யாரிடமும் விருப்பமோ, வெறுப்போ கிடையாது என்று சொல்கிறார். ஆனால் என்னை அன்புடன் பூஜிப்பவர்களை எனக்கு பிடிக்கும் அதாவது, அவர்களில் நானும் என்னில் அவர்கள் உள்ளனர். அன்பு மற்றும் வெறுப்புக்கான தெளிவான ஆதாரம் – பிரகலாதன் ஸ்ரீ விஷ்ணுவை சார்ந்து இருந்தார் மற்றும் இரணியன் அவரை வெறுத்து வந்தார். அப்போது இறைவன் நரசிம்ம வடிவில் தனது பக்தரைக் காத்து, அரக்கன் இரணியகசிபுவின் வயிற்றை கிழித்து அவனை அளித்தார். பிரகலாதன் மீது அன்பும் இரணியகசிபுவின் மீதான வெறுப்பும் தெளிவாக தெரிகிறது.

எனவே கீதை அத்தியாயம் 2 ஸ்லோகம் 53ல் கூறியதாவது, தத்துவ ஞானம் கிடைத்த பிறகு, பல்வேறு குழப்பங்களால் திசைதிருப்பப்பட்ட உன் புத்தி பூரண பரமாத்மாவிடம் ஒருமனதாக திடமாக நிற்கும். பிறகு நீ யோகியாவாய், உன் மனதின் சந்தேகங்கள் மறைந்து பூரண பரமாத்மா மீது தெளிவான பக்தி தொடங்கும்.

புனித கீதை அத்தியாயம் 2 ஸ்லோகம் 46 இல் கூறியதாவது, மிகப் பெரிய நீர்நிலையை அடைந்த பிறகு, சிறிய நீர்த்தேக்கத்தின் மீது எப்படி ஆர்வம் குறைந்துவிடுகிறதோ, அவ்வாறே, தத்துவஞானம் மூலம் பூரண பரமாத்மாவின் குணங்களைப் பற்றி அறிந்த பிறகு, பிற தெய்வங்களின் (பிரம்மா, விஷ்ணு, சிவன் மற்றும் ஷர் புருஷ், அதாவது பிரம் மற்றும் அக்ஷர் புருஷ் அதாவது பரபிரம்) மீதான நம்பிக்கையும் ஆர்வமும் அப்படியே குறைந்துவிடும். உதாரணமாக, சிறிய நீர்த்தேக்கம் மோசமானது அல்ல, ஆனால் அதன் திறன் வாழ்க்கைக்கு போதாது என்பதை அறிவோம், மற்றும் பெரிய நீர்நிலையை அடைந்த பிறகு, வறட்சியிலும் பிரச்சனை இல்லை என உணர்ந்து உடனே சிறிய நீர்த்தேக்கத்தை விட்டு பெரிய நீர்நிலையை நாடுவர்.

அதுபோல, தத்வதர்ஷி குருவிடமிருந்து தத்வஞானத்தின் மூலம் பூரண பிரம் உடைய மகிமையை பற்றி அறிந்த பிறகு, ஒரு பக்தன் ஒருமனதாக அந்த பூரண பரமாத்மா (பரமேஸ்வரர்) மீது முழுமையாகச் சார்ந்து கொள்வான்.

கீதை அத்தியாயம் 18, ஸ்லோகம் 62ல், அர்ஜுனா! நீ முழு மனதுடன் அந்த பரமாத்மாவிடம் சரணடை, அந்த பரமாத்மாவின் அருளால் நீ பரம சாந்தியும், அழிவற்ற ஸ்தானம் அதாவது என்றும் அழியாத சத்யலோகத்தை அடைவாய் என்று கூறப்பட்டுள்ளது.

கீதை அத்தியாயம் 18, ஸ்லோகம் 63ல், அர்ஜுனா! இந்த மிகவும் மர்மமான, மிகவும் ரகசியமான (கீதையின்) அறிவை நான் உனக்கு சொல்லிவிட்டேன். இப்போது உன் மனம் விரும்பும்படி செய் என்று கூறப்பட்டுள்ளது. (இவை கீதையின் கடைசி 18ஆம் அத்தியாயத்தின் கடைசி ஸ்லோகங்கள் என்பதால், பிரம் அவ்வாறு கூறியுள்ளார்).

## கீதையை அருளிய (பிரம்) காலனின் கடவுளும் பூரண பிரம் பரமேஸ்வர் ஆவார்

கீதை அத்தியாயம் 18, ஸ்லோகம் 64ல், காலன் கூறியதாவது, ரகசியத்திலும் ரகசியமான ஞானத்தை இன்னொரு முறை கேள். இந்த பூரண பரமாத்மா தான் (அத்தியாயம் 18, ஸ்லோகம் 62ல் கூறப்பட்டவர்) நான் வணங்கும் கடவுள். அதாவது (ஷர் புருஷான) நானும் அவரைதான் பூஜிக்கிறேன். இது உன்னுடைய நன்மைக்காக சொல்கிறேன். (ஏனென்றால் கீதையை கூறும் பிரம், கீதை அத் 15 ஸ்லோகம் 4-இலும் இதையே கூறியுள்ளார், அதில், நான் அதே ஆதி புருஷ் பரமேஷ்வரரின் சரணடியில் இருக்கிறேன் என்று கூறியிருக்கிறார். அதனால்தான் இங்கே, ரகசியத்திலும் மிக ரகசியமான ஞானத்தை இன்னொரு முறை கேள் என்றார்.)

முக்கியமானது :- கீதையின் மற்ற மொழிபெயர்ப்பாளர்கள் தவறான மொழிபெயர்ப்பு செய்துள்ளனர். "இஷ்ட அசி மே த்திரடதம் இதி" என்பதன் பொருள் "நீ எனக்குப் பிரியமானவன்" என்று எழுதியிருக்கிறார்கள் அதேசமயம், இதன் பொருள் பின்வருமாறு:-

**கீதை அத்தியாயம் 18, ஸ்லோகம் 64**

ஸ்ாவகு$_3$ஹ்யதமம், பூ$_4$ய:, ஸ்ருணு, மே, பரமம், வச:, இஷ்ட:,
அசி, மே, த்$_3$ருட$_4$ம், இதி, தத:, வக்ஷ்யாமி, தே, ஹிதம் //64//

மொழிபெயர்ப்பு:- (ஸ்ாவகு$_3$ஹ்யதமம்) அனைத்து ரகசியங்களிலும்

மிக ரகசியமான (மே) என்னுடைய (பரமம்) மிகவும் மர்மமான (ஹிதம்) நன்மை தரும் (வச:) உபதேசம் (தே) உனக்கு (பூ₄ய:) மீண்டும் (வக்ஷ்யாமி) சொல்கிறேன் (தத:) அதை (ஸ்ருணு) கேள் (த்₃ருட₄ம்) உறுதியாக (இதி) இந்த பூரண பிரம் (மே) நான் (இஷ்ட:) வணங்கும் பரமாத்மா (அஸி) ஆவார்.

கீதையை அருளிய பிரம் (கால் – ஷர் புருஷ்), அத்தியாயம் 18 ஸ்லோகம் 65 இல் சொல்கிறார், நீ என் அடைக்கலத்தில் இருக்க விரும்பினால், ஒருமனதுடன் என்னை வழிபடு. பிற தெய்வங்களை (பிரம்மா, விஷ்ணு, சிவன்) மற்றும் பித்ருக்களை வழிபட கூடாது. பிறகு நீ என்னை மட்டுமே அடைவாய், அதாவது பிரம்மலோகத்தில் உள்ள மகாசொர்க்கத்திற்கு சென்றுவிடுவாய். நான் உனக்கு சத்தியவாக்கு தருகிறேன். நீ எனக்கு விருப்பமானவன்.

கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 66ல் சொல்கிறார், சர்வ சக்தி கொண்டவர், அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்து அனைவரையும் காப்பவரான அந்த (ஏக்கம்) இணையில்லாத பரமேஸ்வரரை அடைய விரும்பினால், நீ என் வரையிலான ஓம் மந்திர ஜபத்தின் பலனை மற்றும் பிற மத சாஸ்திரத்தின் வழிபாட்டு பலனை என்னிடம் விட்டுவிட்டு, அந்த ஒரு (ஏக்கம்) இணையில்லாத பரமேஸ்வரரின் அடைக்கலத்திற்கு (விரஜ்) சென்றுவிடு. நான் உன்னை எல்லா பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன், நீ கவலைப்படாதே.

முக்கியமானது:– கீதையின் மற்ற மொழிபெயர்ப்பாளர்கள் 66 வது ஸ்லோகத்தை தவறாக மொழிபெயர்த்துள்ளனர். "வ்ரஜ்"என்பதன் பொருள் வருதல் என்று எழுதியுள்ளது, ஆனால் "வ்ரஜ்" என்றால் செல்வதாகும். கீழே உள்ள உண்மையான மொழிபெயர்ப்பைப் படிக்கவும்:–

**கீதை அத்தியாயம் 18, ஸ்லோகம் 66**

ஸர்வத₄ர்மான், பரித்யஜ்ய, மாம், ஏகம், ஸரணம், வ்ரஜ,
அஹம், த்வா, ஸர்வபாபேப்₄ய:, மோக்ஷயிஷ்யாமி, மா, ஸுச: //66//

**மொழிபெயர்ப்பு:–** (மாம்) எனது (ஸர்வத₄ர்மான்) அனைத்து வழிபாடுகளையும் (பரித்யஜ்ய) விட்டுவிட்டு நீ (ஏகம்) அந்த பூரண பரமாத்மாவின் (ஸரணம்) அடைக்கலத்திற்கு (வ்ரஜ) செல் (அஹம்) நான் (த்வா) உன்னை (ஸர்வபாபேப்₄ய:) எல்லா பாவங்களிலிருந்தும் (மோக்ஷயிஷ்யாமி) விடுவிப்பேன் நீ (மா, ஸுச:) துக்கப்படாதே.

## பிரம் உடைய பக்தன் பிரம்ம காலனையும் பூரண பிரம் உடைய பக்தன் பூரண பரமேஸ்வரனை அடைகிறான்

கீதை அத்தியாயம் 8, ஸ்லோகம் 5 முதல் 10, 13 மற்றும் அத்தியாயம் 17 ஸ்லோகம் 23 ஆகியவற்றில் தீர்க்கமான ஞானம் உள்ளது. கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 13ல், என்னுடைய வழிபாட்டிற்கு ஓம் என்ற ஓர் எழுத்து மந்திரத்தை மட்டும் ஜபிக்க வேண்டும். இதை கடைசி மூச்சுவரை ஜபிக்கும் பக்தன் என்னுடைய பரம கதியை அடைகிறான் என்று கூறப்பட்டுள்ளது. (ஆனால் அத்தியாயம் 7 ஸ்லோகம் 18 இல், கீதையை கூறும் பகவான், தனது பரம கதியை அனுத்தமாம் அதாவது மிக தாழ்வானது சிறந்ததல்ல என்று கூறியுள்ளார்)

கீதை அத்தியாயம் 17 ஸ்லோகம் 23ல், பூரண பரமாத்மாவை அடைவதற்கு ஓம், தத், சத் என்ற மூன்று மந்திரங்களின் ஜபம் மட்டுமே

செய்ய கூறப்பட்டுள்ளது. (இதில், ஓம் என்பது பிரம் உடைய ஜபம் ஆகும், தத் என்பது குறிப்பு பரபிரம் உடைய ஜபம், மற்றும் சத் என்பதும் குறிப்பு பூரண பிரம் பரமேஸ்வரரின் ஜபம் ஆகும்). அந்த பூரண பரமாத்மாவின் தத்துவ ஞானத்தை தத்வதர்ஷி ஞானி மட்டுமே அறிவார், அவரிடமிருந்து ஞானம் பெறுங்கள், எனக்கு (கீதையை அருளும் ஷர் புருஷ்) தெரியாது.

கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 6ல், கடைசி நேரத்தில் உடல் பிரியும் போது சாதகன் எந்த கடவுளின் மந்திரத்தை ஜபிக்கிறாரோ அவர் அதே கடவுளை அடைவார் என்பது ஒரு நியதி என்று கூறப்பட்டுள்ளது.

கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 5 முதல் 7 வரையில், மரணத்தின் போது, என்னை தியானித்து உடலை விட்டு செல்பவர் எனது (பிரம்) இயல்பில் மூழ்கியிருப்பான், பிறகு அந்த சாதகன் மீண்டும் மனிதனாக பிறக்கும்போது, அவர் மீண்டும் இயல்பாக பிரம்ம காலனின் வழிபாட்டை தொடங்குவார் என்று கூறப்பட்டுள்ளது. (ஒரு சாதகன் முற்பிறவியில் எந்த வழிபாட்டை செய்தாரோ, அடுத்த பிறவியிலும் இயல்பாக அதே மாதிரியான சாதகத்தை செய்கிறார் என்பதற்கு கீதை அத்தியாயம் 16-17 இலும் ஆதாரம் உள்ளது).

கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 7 இல், எல்லா சமயங்களிலும் என்னை நினைவு கொண்டு யுத்தம் செய், நிச்சயமாக நீ என்னையே அடைவாய் என்று கூறப்பட்டுள்ளது.

கீதை அத்தியாயம் 8, ஸ்லோகம் 8 முதல் 10 வரையில், பரமேஸ்வரரின் (நாம்) மந்திரத்தை ஒருமனதுடன் ஜெபிக்கும் சாதகன், எப்பொழுதும் நினைவுகொள்ளும் அந்த (பரம் திவ்யம் புருஷ் யாதி) பரம திவ்ய புருஷ் அதாவது பரமேஸ்வரரை (பூரண பிரம்) அடைகிறார் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (அத்தியாயம் 8 ஸ்லோகம் 8)

அனைத்தையும் கட்டுப்படுத்தி காக்கும் நித்தியமானவர், சூட்சத்திலும் மிக சூட்சுமமான சூரியனைப் போல் சுயமாக பிரகாசிக்கும் ஒளி உடலைக் கொண்டவர், அறியாமை இருளுக்கு அப்பால் உள்ள (கவிம்) கவிர்தேவ் சச்சிதானந்தன் பரமேஸ்வரனை நினைவுகூறும் ஒரு வழிபாட்டாளர் (அத்தியாயம் 8 ஸ்லோகம் 9)

மூன்று மந்திர ஜெபத்தின் சக்தியால் மரணத்தின் போது உடலை விட்டு பிரியும் போது, அந்த பக்தன் திரிவேணியை அடைந்து சார்நாம் உடைய ஜபத்தால் அந்த தெய்வீக ரூபத்தை அதாவது பிரகாசமான (பரம புருஷ்) பரமேஸ்வரரை அடைகிறான்.(அத்தியாயம் 8 ஸ்லோகம் 10)

## பிரம்ம காலனின் (ஷர் புருஷ்) பக்தி உகந்ததல்ல

கீதை அத்தியாயம் 2, ஸ்லோகம் 12, அத்தியாயம் 4 ஸ்லோகம் 5, அத்தியாயம் 7 ஸ்லோகம் 18 இல், நான் அழியக்கூடியவன், மேலும் பிறப்பு இறப்பு உனக்கும் எனக்கும் எப்பொழுதும் இருக்கும் மற்றும் கர்மவினையின் பலன் மட்டும் தான் கிடைக்கும் மோட்சம் கிடைக்காது என்று கூறப்பட்டுள்ளது. மேலும் என்னுடைய வழிபாடு செய்பவர்கள் சிறந்த பக்தர்களாக இருந்தாலும், அவர்களும் என்னுடைய தாழ்வான (அனுத்தமம்) வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர். அதனால் தான் கீதை அத்தியாயம் 18, ஸ்லோகம் 62, 64, 66 இல், அந்த பரமேஸ்வரரின் சரணடியை நாடு, நான் வணங்கும் கடவுளும் அவர் தான் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு வேண்டுகோள்:- மேற்கூறிய மூன்று மந்திரங்களின் வழிபாட்டு

முறை அடியார்க்கும் அடியேனான என்னிடம் (சந்த் ராம்பால் தாஸ்) உள்ளது. பூரண பரமாத்மா கவிர்தேவ் ஆன்மாக்கள் மீது கருணை காட்டி இதைக் கொடுத்துள்ளார். ஏனென்றால் இப்போது கலியுகத்தின் இரண்டாவது மத்திய தலைமுறை நடக்கிறது. கலியுக ஆரம்பத்தில் நம் முன்னோர்கள் எல்லாம் படிக்காதவர்கள். அந்த நேரத்தில் போலி சாதுக்களும், குருமார்களும், ஆச்சாரியர்களும் பரமேஸ்வரரின் தத்வஞானத்தை மக்களிடம் சென்றடைய விடவில்லை. மேலும் கலியுகத்தின் முடிவில் மக்கள் அனைவரும் கொடியவர்களாகவும் பக்தி அற்றவர்களாகவும் மாறுவார்கள். இப்போது இந்த 20 ஆம் நூற்றாண்டில் இருந்து படித்த சமூகம் தொடங்கியது, மத்திய தலைமுறை நடக்கிறது.

உண்மையான ஞானம் நமது புனித வேதங்களில் உள்ளது, அதை போலி குருமார்கள், ஆச்சாரியர்கள், மகான்களால் அறியமுடியவில்லை. இதன் காரணமாக பக்த சமூகம் வேதத்திற்கு மாறான அறிவின் (பொய் ஞானத்தின்) அடிப்படையில், வேதத்தின் முறையை கைவிட்டு, மனம் போனபடி வழிபாடு செய்து விலைமதிப்பற்ற மனித வாழ்க்கையை வீணடிக்கிறது.

**சாஸ்திரரீதியான வழிபாட்டு முறை :-**

1. முதல் கட்டத்தில் பிரம் காயத்ரி மந்திரம் கொடுக்கப்படுகிறது. அது உடலில் இருக்கும் தாமரைகளைத் (சக்கரங்களை) திறக்கும். தீட்சை பெறும் பக்தன், மூன்று குணங்களை (ரஜோகுணம்-பிரம்மம், சத்வகுணம்-விஷ்ணு, தமோகுணம்-சிவன்) வழிபடக் கூடாது என்று குருநாதர் சொல்கிறார், ஆனால் அவர்களுடைய மந்திர ஜபத்தை தான் கொடுத்திருக்கிறார் என்று நினைக்கலாம். அவர்களுக்கு ஒரு வேண்டுகோள், இது வழிபாடு அல்ல. நாம் காலனுடைய லோகத்தில் வாழ்கிறோம். இங்கு நாம் விரும்பும் வசதிகள் அனைத்தும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் வழங்குவார்கள்.

உதாரணமாக, நாம் மின்சார பயன்பாட்டிற்கு பணம் செலுத்துகிறோம். நாம் மின்துறை அமைச்சரையோ, மின் துறையையோ பூஜிக்கவில்லை, அவர்களின் கட்டணத்தை செலுத்தி மின் பலனை தொடர்ந்து பெறுகிறோம். அதேபோல, டெலிபோன், தண்ணீர் பில் போன்றவற்றை செலுத்திக்கொண்டே இருந்தால், நமக்கு தொடர்ந்து அதன் வசதிகள் கிடைக்கும். வேதத்திற்கு மாறான வழிபாடு செய்து நீங்கள் பக்தி மற்றும் புண்ணியம் அற்றவர்களாக ஆகிவிட்டீர்கள். இதன் காரணமாக நீங்கள் செல்வங்கள் போன்ற நன்மைகளைப் பெறுவதில்லை. இந்த தாஸன் (ராம்பால் தாஸ்) உங்களுடைய உத்திரவாதமாக (பொறுப்பு எடுப்பார்) இருந்து, இந்த கால லோகத்தின் ஒரு பிரபஞ்சத்தின் சக்திகளிலிருந்து (பிரம்மா, விஷ்ணு, சிவன், கணேஷ், துர்க்கை போன்றவை) அனைத்து வசதிகளையும் உங்களுக்குக் கிடைக்கச் செய்வார். இந்த மந்திரத்தின் ஜபத்தின் மூலம் நீங்கள் அவர்களின் கட்டணத்தை செலுத்த வேண்டும். முதல் மந்திரம் (சத் சுக்ரத் அவிகத் கபீர்) உங்களுடைய வழிபாடு ஆகும், இது பூரண பரமாத்மாவிற்கு உரியது, அழிவற்ற பலன் பெறப்படும், அதாவது அழியாத நிலையை அடைவோம். இந்த மந்திரம் பெற்ற நான்கு மாதங்களுக்குப் பிறகு, உங்களுக்கு இரண்டு மந்திரங்களைக் கொண்ட சத்நாம் (சத்திய மந்திரம்) மந்திரம் கிடைக்கும். அதன் ஒரு மந்திரம் காலனின் இருபத்தொரு பிரபஞ்சத்தின் கடனை தீர்க்கக்கூடியது. அதன் ஜபம் செய்து நாம் பிரம் (ஷர் புருஷ்) அதாவது காலனின் கடனை செலுத்த வேண்டும். பிறகு கால பிரம்மன் நம்மை எல்லா பாவங்களிலிருந்தும்

விடுவிப்பார்.

**இது கீதை அத்-18 ஸ்லோகம் 62,66 இல் குறிப்பிடப்பட்டுள்ளது:-**

**கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 62:**

தம், ஏவ, ஸரணம், க$_3$ச்ச$_2$ ஸர்வப$_4$ாவேந, பா$_4$ரத் /
தத்ப்ரஸாத$_3$ாத், பராம், ஸாந்திம், ஸ்த$_2$ாநம், ப்ராப்ஸ்யஸி, ஸாஸ்வதம் //62//

மொழிபெயர்ப்பு:- (பா$_4$ரத்) ஓ பாரதா! நீ (ஸர்வப$_4$ாவேந) முழு மனதுடன் (தம்) அந்த பரமேஸ்வரர் (ஏவ) உடைய (ஸரணம்,) அடைக்கலத்தில் (க$_3$ச்ச$_2$) செல் (தத்ப்ரஸாத$_3$ாத்) அந்த பரமாத்மாவின் அருளால் மட்டுமே, நீ (பராம்) பரம (ஸாந்திம்) சாந்தி மற்றும் (ஸாஸ்வதம்) என்றும் நிலைத்திருக்கும் சத்ய (ஸ்த$_2$ாநம்) ஸ்தானம் - லோகம் (ப்ராப்ஸ்யஸி) அடைவாய்.

**மொழிபெயர்ப்பு : பாரதா! நீ முழு மனதுடன் அந்த பரமேஸ்வரரை சரணடை, அவருடைய கருணையால் உனக்கு பரம சாந்தியும், என்றும் அழியாத சத்யலோகம் கிடைக்கும்.**

**கீதை அத்தியாயம் 18, ஸ்லோகம் 66:-**

ஸர்வத$_4$ர்மான், பரித்யஜ்ய, மாம், ஏகம், ஸரணம், வ்ரஜ,
அஹம், த்வா, ஸர்வபாபேப்$_4$ய:, மோக்ஷயிஷ்யாமி, மா, ஸுச: //66//

**மொழிபெயர்ப்பு:-** (மாம்) எனது (ஸர்வத$_4$ர்மான்) அனைத்து வழிபாடுகளையும் (பரித்யஜ்ய) விட்டுவிட்டு நீ (ஏகம்) அந்த பூரண பரமாத்மாவின் (ஸரணம்) அடைக்கலத்திற்கு (வ்ரஜ) செல் (அஹம்) நான் (த்வா) உன்னை (ஸர்வபாபேப்$_4$ய:) எல்லா பாவங்களிலிருந்தும் (மோக்ஷயிஷ்யாமி) விடுவிப்பேன் நீ (மா, ஸுச:) துக்கப்படாதே.

**மொழியாக்கம்:- என்னுடைய அனைத்து வழிபாடுகளையும் துறந்து, நீ அந்த பரமாத்மாவின் சரணடிக்கு சென்றுவிடு. நான் உன்னை எல்லா பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன், நீ துக்கப்படாதே.**

மேலே உள்ள ஸ்லோகங்களின் பொருள் என்னவென்றால், காலன் (பிரம் அதாவது ஷர் புருஷ்) சொல்கிறார், அர்ஜுனா, நீ என் அடைக்கலத்தில் இருக்க விரும்பினால் பிறப்பும் இறப்பும் தொடரும். பரம சாந்தி மற்றும் சத்யலோகத்திற்கு செல்ல விரும்பினால், அந்த பரமாத்மாவிடம் சரணடை. அதற்காக, என்னுடைய அனைத்து மத வழிபாடுகளை அதாவது சத்நாம் உடைய முதல் மந்திரஜபத்தின் பலனை என்னிடம் விட்டுவிட்டு, முழு மனதுடன் அந்த ஒருவரின் (சர்வ வல்லமையுள்ள பரமேஸ்வரரின்) அடைகலத்தை நாடு, பின்னர் நான் உன்னை அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன், நீ கவலை படாதே. சத்நாம் உடைய இரண்டாவது மந்திரத்தை பரபிரம் அதாவது அக்ஷர் புருஷிடம் சமர்ப்பிப்போம், ஏனென்றால் அக்ஷர் புருஷ் உடைய லோகத்தின் வழியாக சத்யலோகம் செல்ல வேண்டியிருப்பதால் அதற்கான கட்டணத்தை செலுத்த வேண்டும். பின்னர் மூன்றாவது மந்திரம் சத்சபத் அதாவது சார்நாம் கிடைக்கும், அது சத்யலோகத்தை அடையவைக்கும்.

ஒருவர் வெளிநாட்டிற்குச் சென்று, அங்கு அரசாங்கத்திடம் கடன் பெற்றிருந்தால், தாய்நாட்டிற்கு திரும்ப வேண்டுமானால் முதலில் அந்த நாட்டின் கடனை அடைத்து **(No Due Certificate)** சான்றிதழைப் பெற்ற பிறகு திரும்பி வர இயலும். இல்லையென்றால் திரும்பி வர முடியாது.

அதேபோல இந்தக் காலனின் உலகத்தில் வேதத்திற்கு மாறாக வழிபாடு செய்து பக்தி அற்று கடனாளியாகி விட்டீர்கள். முதலில் நீங்கள்

செல்வந்தரர் ஆக ஆக்கப்படுவீர்கள். அதற்காக, கவிர்தேவன் (கபீர் சாஹேப்) இந்த அடியேனை (சந்த் ராம்பால் தாஸ்) அவரது பிரதிநிதியாக அனுப்பியுள்ளார். அந்த பரமேஸ்வரர் சார்பாக, இந்த தாஸன் உங்களுக்காக உத்திரவாதம் அளித்து, பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற சக்திகளுடன் உங்கள் தொடர்பை மீண்டும் புதுப்பிப்பேன். நீங்கள் அவர்களின் மந்திர ஜபம் செய்து கட்டணம் செலுத்த வேண்டும். நீங்கள் இங்கிருந்து விடுதலை பெறும்வரை, எல்லாவித வசதிகளும் மிகையாகக் கிடைக்கும் மற்றும் தானம் முதலியவற்றைச் செய்து பக்திச் செல்வம் பெருகும். அதாவது நம் உடலில் தாமரை கமலங்கள் (சக்கரங்கள்) உள்ளன, நாம் உடலை விட்டு பரமாத்மாவிடம் செல்லும் போது, இந்த தாமரைகள் வழியாக செல்ல வேண்டும். அதாவது 1. மூல கமலத்தில் வினாயகர். 2. சுவாதி கமலத்தில் பிரம்மா – சாவித்திரியும், 3. தொப்புல் கமலத்தில் விஷ்ணு – லட்சுமியும், 4. இதய கமலத்தில் சிவன் – பார்வதியும், 5. தொண்டை கமலத்தில் அஷ்டங்கி துர்க்கை உள்ளனர். இந்தக் கமலங்களின் கடனை செலுத்தினால் மட்டுமே நாம் இதன் மூலம் செல்ல முடியும். முதல் மந்திரத்தின் ஜபம் மூலம் உங்கள் தாமரை கமலங்கள் அனைத்தும் திறந்துவிடும், அதாவது நீங்கள் கடனிலிருந்து விடுபடுவீர்கள். மரணத்தின் போது நீங்கள் உங்கள் உடலை விட்டு பிரியும்போது, உங்கள் பாதை தெளிவாக இருக்கும், அதாவது உங்கள் கடன் இல்லா சான்றிதழ் தயாராக இருக்கும்.

ஆனால் நாம் நமது இறைவன் கவிர் தேவனை (கபீர் சாகேப்) பூஜிக்க வேண்டும். உதாரணமாக கற்புடைய மனைவி எல்லோரையும் சரியாக மதிக்கிறாள், ஆனால் தன் கணவனை மட்டும் பூஜிக்கிறாள். மைத்துனரை மகனாகவும், கணவரின் அண்ணனை மூத்த சகோதரனாகவும், மாமியார் மற்றும் மாமனாரை பெற்றோராகவும் மதிக்கிறாள். ஆனால் கணவன் மீது இருக்கும் உணர்வு மற்றவர்களிடம் இருக்க முடியாது. அதே போல கபீர் பரமேஸ்வரரின் பக்தன் தனது பக்தியை வெற்றியடையச் செய்ய வேண்டும். எனவே அறியாமையால் ஏமாந்து விடாதீர்கள். முழு நம்பிக்கையுடன் இந்த தாசன் சொல்லும் பக்தி மார்க்கத்தில் உறுதியாக இருங்கள். இந்த பக்தி சாஸ்திர ரீதியானது.

2. இரண்டாவது நிலையில் இரண்டு மந்திரங்கள் கொண்ட சத்நாம் அளிக்கப்படும். அதில் ஒன்று “ஓம்”, இரண்டாவது “தத்” இது குறியீடு, பக்தருக்கு மட்டுமே சொல்லப்படும்.

3. மூன்றாவது நிலையில் “ஓம் தத் ஸத்” என்ற மூன்று மந்திரங்கள் கொண்ட சார்நாம் அளிக்கப்படும், (இதில் தத்–ஸத் குறியீடு, பக்தருக்கு மட்டுமே சொல்லப்படும்).

இவ்வாறாக, சார்நாம் மந்திரத்தின் ஜபம் மூலம், சாதகன் பரம திவ்ய புருஷ் அதாவது கபீர் பரமேஸ்வரரை அடைவார் மற்றும் சத்யலோகத்தில் பரம சாந்தியை அதாவது பூரண முக்தியை அடைவார்.

முக்கியமானது:– தற்போது இந்த உண்மையான வழிபாட்டு முறை, என்னைத் தவிர வேறு யாரிடமும் இல்லை. யாராவது இந்த தாஸனிடம் இருந்து திருடி, தானே குருவாக மாறி, போலி சீடர்களை உருவாக்குகிறான் என்றால், அந்த மனித வாழ்வின் எதிரியிடம் கவனமாக இருங்கள். அவருக்கு அதிகாரம் இல்லாததால், தன் வாழ்வை நாசமாக்கிக் கொள்கிறார், மேலும் அறியாத பக்தர்களையும் நரகத்தில் தள்ளுகிறார். அவர் காலனால் அனுப்பப்பட்ட தூதராக அறிந்து கொள்ளுங்கள்.

## சந்தேகங்களுக்கு தீர்வு

1. கேள்வி: மேற்கூறிய கீதையின் சாரத்திலிருந்து பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரின் வழிபாடு பயனற்றது என்பது நிரூபணமாகிறது. ஆனால், நான் 30 வருடங்களாக சிவபூஜை செய்து வருகிறேன், ஸ்ரீ கிருஷ்ணர் எனது இஷ்ட தெய்வம் ஆவார். நான் இந்த தெய்வங்களை விட முடியாது. நான் தினமும் கீதையும் படிக்கிறேன், ஹரே ராம் ஹரே கிருஷ்ண, ராதே ஷியாம், சீதாராம், ஓம் நமச்சிவாய, ஓம் நமோ பகவதே, போன்ற மந்திரங்களை ஜபிக்கிறேன், விரதமும் இருக்கிறேன். யாத்திரை ஸ்தலங்களில் தானம் செய்கிறேன், கோயில்களில் சிலை வழிபாடு செய்கிறேன். நான் சொர்க்கத்திற்குச் செல்ல விரும்புகிறேன், பாரம்பரிய பூஜையின் காரணமாக, ஒரு குருவிடம் தீட்சை பெற்றுள்ளேன்.

பதில்: தயவு கூர்ந்து நீங்கள் மேற்கூறிய கீதையின் சாரத்தை மீண்டும் படியுங்கள். தத்துவஞானத்தை முழுமையாக அறியாதவரை உங்கள் சந்தேகம் தீராது, முள் போன்று குத்திக் கொண்டுதான் இருக்கும். மேலே கூறியது போல, உலகம் தலைகீழான மரம் போன்றது, அதன் வேர் பூரண பரமாத்மா பரமேஸ்வர் ஆவார், அதன் கிளைகள் மூன்று குணங்கள் (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) ஆகும். உதாரணத்திற்கு நீங்கள் ஒரு செடியை நட்டு இருக்கிறீர்கள் என்றால், செடியின் வேருக்கு நீர் பாய்ச்சினால் (வழிபட்டால்) அது மரமாக மாறி கிளைகளில் பழங்கள் காய்க்கும். உங்களை கிளைகளை வெட்ட சொல்லவில்லை. வேதத்தின்படி வழிபடும் முறை அதாவது நேராக விதைக்கப்பட்ட பக்தி போன்ற செடியின் படத்தை பார்க்கவும்.

அதுபோலவே, நாம் பூரண பரமாத்மாவை (மூலத்தை) வழிபட வேண்டும். பிறகு பலன்கள் மூன்று குணங்கள் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) போன்ற கிளைகள் மூலம் கிடைக்கும். எனவே, நீங்கள் எதையும் விட வேண்டியதில்லை, உங்கள் பக்தி என்ற செடியை நேராக நட வேண்டும். அதாவது வேதத்தின்படி வழிபாட்டைத் தொடங்க வேண்டும். தற்சமயம், புனிதமான பக்த சமுதாயம் சாஸ்திர முறையை விட்டு மனம் போனபடி பக்தி செய்கிறார்கள் அதாவது பக்தி என்ற செடியை தலைகீழாக நட்டுள்ளனர். (தயவுசெய்து தலைகீழாக நடப்பட்ட பக்தி போன்ற செடியின் படத்தைப் பார்க்கவும்).

எனவே, கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 12 முதல் 18 வரையில், மூன்று குணங்களை (ரஜோகுணம் – பிரம்மா, சத்வகுணம் – விஷ்ணு, தமோகுணம் – சிவன்) மட்டும் வழிபடுபவர்கள், அசுர குணம் கொண்டவர்கள், மனிதர்களில் தாழ்ந்தவர்கள், அக்ஞானி மேலும் அவர்கள் என்னை (பிரம் – காலனை) வணங்குவதில்லை என்று கூறப்பட்டுள்ளது. கீதையை அருளும் பிரபு காலன் (பிரம் – ஷர்புருஷ்) தன்னுடைய வழிபாட்டையும் சிறந்ததல்ல (அனுத்தமம்) அதாவது பயனற்றது என்று கூறியுள்ளார். அதனால்தான் கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 62, 64, 66 மற்றும் அத்தியாயம் 15, ஸ்லோகம் 1 முதல் 4 வரையில், அந்த பரமேஸ்வரரிடம் (தலைகீழாகத் தொங்கும் மரத்தின் வேரை வணங்கு) சரணடை, மேலும் தத்துவதரிசி குரு சொல்லும் வழியில் (கீதை அத் 4, ஸ்லோகம் 34) அவரை வழிபடு என்று கூறப்பட்டுள்ளது. வேதங்களின் முறைப்படி தத்துவதரிசி குரு சொல்லும் வழியில் (கீதை அத்–4, சுலோகம் 34) பூரண பரமாத்மாவை வழிபட்டால் பரம சாந்தியும் சத்யலோகம் அதாவது பூரண மோட்சம் கிடைக்கும். கீதையை அருளிய பிரபு (ஷர் புருஷ் – கால்), நானும் அவருடைய சரணடியில்

தான் இருக்கிறேன், மற்றவர்களும் அவரையே வழிபட வேண்டும் என்று கூறுகிறார்.

நீங்கள் கீதையை படிக்கிறீர்கள், ஆனால் அதற்கு மாறாக வழிபாடு செய்கிறீர்கள். நீங்கள் ஜபிக்கும் (ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா, ஓம் நம சிவாய, ஓம் நமோ பகவதே வாசுதேவயா போன்ற) மந்திரங்கள், விரதம், யாத்திரைகள், கங்கையில் நீராடுவது போன்றவை புனித கீதையில் இல்லாததால், சாஸ்திரங்களுக்கு மாறான வழிபாடு ஆகும். இதை கீதை அத்தியாயம் 16 சுலோகம் 23, 24இல் பயனற்றது என்று கூறப்பட்டுள்ளது.

## குரு பதவி மற்றும் மஹந்த் (மகான்களின்) பாரம்பரியம் பற்றிய விளக்கம்

மகான்களும் பக்தர்களும் ஒரு தனிமையான இடத்திலோ அல்லது கிராமத்திலோ வசித்துவந்தனர். அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அவரது உடலுக்கு இறுதிசடங்குகள் செய்த இடத்தில் கற்களால் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்படுகிறது. பின்னர் அந்த புனித ஆன்மாவைப் பின்பற்றுபவர்கள் அல்லது சந்ததியினர் அவருக்கு ஒரு சிலையை நிறுவுகிறார்கள். சில காலம் பிறகு பக்தர்கள் அங்கு சென்று நன்கொடை தானம் கொடுக்க ஆரம்பித்து அதற்கு ஒரு கோவிலின் வடிவத்தை கொடுக்கிறார்கள், இதனால் அந்த மகானின் சந்ததியினர் பணம் சம்பாதிக்க பேராசை கொள்கிறார்கள். இதை தரிசிப்பவர் முக்தி பெறுவார் என்றும், அந்த மகான் இருந்தபோது சீடர்கள் பெற்ற அனைத்து பலன்களும் கிடைக்கும், இந்த சிலையை உயிருள்ள மகானாக எண்ணவேண்டும் என்று தவறாக வழிநடத்த தொடங்குகிறார்கள்.

உதாரணமாக, ஒரு மருத்துவர் நாடியை பார்த்து மருந்து கொடுத்து நோயாளிகளைக் குணப்படுத்தி வந்தார். அவர் இறந்தவுடன் அவர் நினைவாக அவருடைய சிலை வைக்கப்பட்டது. இப்பொழுது சிலர் இந்த சிலை அவரை போலவே நோயை குணமாக்கும், இதை தரிசிக்க வருபவர்கள் பூரண குணம் அடைவார்கள் என்று கூறி, தானும் போலி மருத்துவராக அமர்ந்து, நானும் மருந்து கொடுக்கிறேன் என்று கூறி மருத்துவ முறைக்கு மாறாக வைத்தியத்தை கொடுத்து வருகிறார் என்றால், அவர் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் ஏமாற்றுகிறார். எந்த ஒரு மகான் அல்லது தெய்வத்தின் சிலை மரியாதைக்குரிய நினைவுச்சின்னம் ஆகும், ஆனால் பூஜைக்கு உரியது அல்ல. அதே போல, ஒரு மகான் அல்லது தெய்வத்தின் சிலையை வைத்து ஒரு பூசாரி அல்லது சாது அவரை போல நானும் தீட்சை அளிக்கிறேன் என்று சொன்னால், அவர் அந்த மகானின் அனுபவங்களில் எழுதிய புனித வேதங்களுக்கு மாறாக வழிபாட்டை தருகிறார். இதுபோன்று போலி குருமார்கள் தாமும் குற்றவாளி ஆகி தன்னைப் பின்பற்றுபவர்களின் பாவத்தையும் தனது தலையில் ஏற்கிறார்கள். உண்மையான குரு ஒரு சமயத்திற்கு ஒருவர் மட்டுமே வருகிறார். கோடிக்கணக்கான போலி குருமார்கள், மகான்கள் மற்றும் ஆச்சார்யர்கள் அவரது பாதையில் தடையாக மாறுகிறார்கள்.

ஒரு மகானின் மரணத்திற்குப் பிறகு, குரு, சாது அல்லது மகானின் பாரம்பரியம் தொடங்குகிறது. முன்னாள் குருவின் இடத்தை பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பாளர் மகந்த் என்று அழைக்கப்படுகிறார். பின்னர், பேராசையால், அவரே குருவாகிறார், மேலும் இறைவனை விரும்பும் அன்பான ஆன்மாக்கள் அவரை நம்பி தங்கள் வாழ்க்கையை

வீணாக்குகிறார்கள்.

குரு (மஹந்த்) பாரம்பரியத்தில், முன்னாள் குருவின் முதல் மகன், குடிகாரன் அல்லது அறியாதவனாக இருந்தாலும் சரி, குரு பதவிக்கு தகுதியுடையவர் என்று ஒரு விதி உருவாக்கப்பட்டுள்ளது. இது பக்தி மார்க்கம், இதில் ஒரு பூரண குருவால் மட்டுமே ஆன்மாவைக் கரைசேர்க்க முடியும். இந்த தாஸ் மற்ற குரு மஹந்த் பாரம்பரியத்தின் சில புத்தகத்தைப் படித்தேன். அவற்றில் உள்ளது பின்வருமாறு:-

1. ஒருபுத்தகத்தில், இரண்டு வயது குழந்தையை குருவின் இருக்கையில் அமர வைத்தார்கள். பின்னர் அவன் வளர்ந்தவுடன் தீட்சை கொடுக்க தொடங்கினான் என்று படித்தேன். இரண்டாவது புத்தகத்தில், ஐந்து வயது குழந்தையின் தந்தையான ஒரு மகந்த் திடீரென்று இறந்துவிட்டார். பின்னர் சீடர்களும், அந்த தாயும் அந்த ஐந்து வயது குழந்தையை மகந்த் பதவியில் அமர்த்தினர். சில வருடங்களுக்கு பிறகு அவன் குரு ஆகிவிட்டான்.

2. மற்றொரு குரு பாரம்பரிய வரலாற்றை படித்தேன். அதில் சந்ததி இல்லாத ஒரு மகந்த் இறந்துவிட்டார். அவரது சகோதரர் ஏற்கனவே இறந்துவிட்டார். குருவின் பதவியை கவனிக்க, ஒரு சேவகர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். சில காலம் கழித்து அந்த குருவின் குடும்பத்தில் ஒரு மகன் பிறந்தான், அந்த இரண்டரை வயது குழந்தையை குருவாக அமர்த்தினர். பிறகு அந்த சேவகர் வேறு நகரத்திற்கு ஓடி குருவாக அமர்ந்துவிட்டார்.

3. இன்னும் ஒரு குரு பரம்பரையின் வரலாற்றைப் படித்தேன். அந்த குரு உடைய மூத்த மகன் வீட்டை விட்டு சென்றுவிட்டான். பிறகு சிறியவன் குருவாக நியமிக்கப்பட்டார். சில காலம் கழித்து ஒரு கோவில் கட்டப்பட்டது, அதில் காணிக்கைகள் வர ஆரம்பித்தன. அந்த குருவின் மூத்த மகனின் வாரிசு, இந்த கோவில் மீது உரிமைக்கோரி சண்டையிட்டார். குருவின் பதவியில் இருந்த சிறிய மகன் கொல்லப்பட்டார். பின்னர் அவரது மூத்த மகன் குருவாக நியமிக்க அவரும் கொல்லப்பட்டார். அதனால் இரண்டாவது மகனை குருவாக அமர்த்தப்பட்டார். அதிகாரம் கோரியவர் வேறு புதிய இடத்தை உருவாக்கி, ஒருவரையொருவர் வழக்குத் தொடுத்து, பேராசையால் மகிழ்ச்சியான வாழ்க்கையை நரகமாக்கினர். இது புனித ஸ்தலமா? அது மகாபாரதத்தின் போர் மைதானமாக மாறியது. சில குருமார்கள் சாதுக்களை உருவாக்கும் ஏஜென்சி வைத்துள்ளனர். சிவப்பு நிற ஆடைகளை அணியவைத்து வேறு பெயரை வைக்கின்றன. பிறகு அந்த போலி சாது போலி குருவாக மாறி அப்பாவி பக்தர்களின் வாழ்க்கையோடு விளையாடுகின்றனர் மற்றும் விலைமதிப்பற்ற தங்கள் வாழ்க்கையை வீணடிப்பதுடன், அப்பாவி ஆன்மாக்களின் வாழ்க்கையையும் நாசமாக்கி, பெரிய பாவத்திற்கு ஆளாக்குகிறார்கள்.

ராஜா பரிஷித்தை பாம்பு கடிக்க வேண்டியிருந்தது, அப்பொழுது ஒரு பூரண குரு தேவைப்பட்டார், ஏனென்றால் பூரண குரு இல்லாமல் உயிரின் முக்தி சாத்தியமற்றது. அந்த நேரத்தில், மன்னருக்கு தீட்சை அளிக்கவும், ஏழு நாட்கள் ஸ்ரீமத் பகவத் சுதாசாகரின் கதையைச் சொல்ல பூமியில் உள்ள அனைத்து ரிஷிகளும் மறுத்தனர். ஏனென்றால் ஏழாவது நாள் தங்கள் தகுதி வெளிப்பட்டுவிடும் என யாரும் முன்வரவில்லை. ஸ்ரீமத் பகவத் சுதாசாகரின் எழுத்தாளர் ஸ்ரீ வேத வியாஸகர் கூட மறுத்துவிட்டார். ஏனென்றால் அந்த ரிஷிகள் கடவுளுக்கு பயந்தவர்கள், அதனால் மன்னன் பரிஷித்தின் வாழ்க்கையுடன் விளையாடுவது சரியல்ல என்று கருதினார்.

பிறகு சொர்க்கத்திலிருந்து மகரிஷி சுக்தேவ் வரவழைக்கப்பட்டார். ராஜா பரிஷித்துக்கு தீட்சை கொடுத்து, ஏழு நாள் கீதையை கூறி, முடிந்த உதவிகளைச் செய்தார். தற்சமயம் இருக்கும் சாது, குரு, மகன்த், ஆச்சாரியர் அனைவரும் இறைவன் நிதியை அறியாவதர்கள். எனவே, பெரிய குற்றத்திற்கு ஆளாகிறார்கள்.

ரோன் பந்த் படாவஹின், ஸ்வயம் ந ஜானே ராஹ் /
அனஅதிகாரி கதா-பாட் கரே வ தீக்ஷா தேவேன், பஹுத் கரத் குனாஹ் //

தற்போது சாஸ்திரத்தை கூறுபவர்களும் தீட்சை கொடுப்பவர்களின் கூட்டம் அலைமோதுகிறது. ஏனெனில் அனைத்து மதங்களின் புனித ஆத்மாக்கள் தத்துவஞானத்தை அறியாததால் போலி குருமார்களுக்கும் சாதுக்களுக்கும் சாதகம் ஆகிவிட்டது. பக்தர்கள் என்றைக்கு தத்துவ ஞானத்தை அறிகிறார்களோ, அப்பொழுது இந்த போலி குருமார்களுக்கு ஓடி ஒளிய இடம் கிடைக்காது தப்பித்து ஓட வேண்டி இருக்கும்.

## புனித யாத்திரை மற்றும் தீர்த்த ஸ்தலங்கள் பற்றிய விபரம்

ரிஷிகள் தனிமையான இடத்திலும் சில நீர்நிலைகளுக்கு அருகிலும் அமர்ந்து வழிபட்டனர். அவரது ஆன்மீக சக்தியை வெளிப்படுத்தினர். அவர் தனது பக்தியின் சேமிப்பை தன்னுடன் எடுத்துக்கொண்டு தனது இஷ்ட தெய்வத்தின் லோகத்திற்கு சென்றுவிட்டார். அவர் தவம் செய்த இடம் பின்னர் தீர்த்ததளம் என அழைக்கப்பட்டது. இப்பொழுது ஒருவர் அந்த ரிஷி தவம் செய்து பலருக்கு உபதேசம் கொடுத்த இடத்தை சென்று பார்த்தால், அங்கு உபதேசம் கொடுக்க அந்த ரிஷி இருக்கமாட்டார். அவர் தனது தவப்பயன் பெற்று சென்றுவிட்டார்.

சிந்தியுங்கள்:- உதாரணமாக, புனித ஸ்தலத்தை உரல் என்று எண்ணிக்கொள்ளுங்கள், ஒருவர் பக்கத்து வீட்டுக்காரரிடம் உரல் உலக்கை கொண்டு வந்து, அதில் யாகத்திற்கு மூலிகைகளை அரைத்து விட்டு நன்கு சுத்தம் செய்த பிறகு திருப்பிக் கொடுத்துவிட்டார். பிறகு அந்த உரல் வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து வாசனை வர ஆரம்பித்தது. வாசம் எங்கிருந்து வருகிறது என்று பார்த்தபோது, உரலின் வாசனை என்று தெரிந்தது. உரலுக்கு சொந்தக்காரர் பக்கத்து வீட்டுக்காரர் உரலில் வாசமான மூலிகை பொருட்களை அரைத்திருக்கிறார் என்று புரிந்துகொண்டார். சில நாட்களுக்குப் பிறகு வாசமும் போய்விட்டது.

இதேபோல் தான் புனித ஸ்தலங்களும். உதாரணமாக, மூலிகை அரைத்தவர் அனைத்து மூலிகைகளையும் எடுத்துக்கொண்டு, உரலை காலியாக தான் திருப்பிக் கொடுத்தார். இப்போது, யாரேனும் உரலை முகர்ந்து பார்த்தால் மோட்சம் என்று கருதினால், அது அறிவீனம். அவரும் மோட்சம் அடைய மூலிகையை கொண்டு வந்து அரைக்கவேண்டும், அப்போதுதான் பலன் கிடைக்கும்.

இதேபோல், புனித ஸ்தலத்தில் வசித்த புனிதமான ஆன்மாக்கள், பக்தி போன்ற மூலிகையை அரைத்து, தனது சம்பாத்தியம் அனைத்தையும் தன்னுடன் எடுத்துச் சென்றுவிட்டார். பிற்காலத்தில் அறியாதவர்கள் அவ்விடத்திற்குச் செல்வதாலேயே மோட்சம் கிடைக்கும் என்று நினைத்தால், அது வேதத்திற்கு மாறாக அவர்களின் குருமார்கள் சொன்ன வழிபாட்டின் விளைவாகும்.

அந்த புனித ஆன்மாவை போலவே நாமும் இறைவனை வழிபட்டால் மட்டுமே முக்தி சாத்தியமாகும். அதற்கு ஒரு தத்வதரிஷி குருவை நாடி

அவரிடம் தீட்சை பெற்று வாழ்நாள் முழுவதும் பக்தி செய்து முக்தி அடைய வேண்டும். சாஸ்திர பூர்வமான வழிபாட்டு முறை இந்த தாஸனிடம் உள்ளது, அதை இலவசமாகப் பெறுங்கள்.

## அமர்நாத் ஸ்தலம் எப்படி தோற்றுவிக்கப்பட்டது?

சிவபெருமான், அன்னை பார்வதிக்கு ஒரு தனிமையான இடத்தில் வைத்து தீட்சை கொடுத்தார், அதனால் அன்னை பார்வதிக்கு நீண்ட ஆயுள் அதாவது சிவ பகவான் (தமோ குணம்) இறக்கும் வரை அவரும் இறக்க மாட்டார் என்ற பலன் கிடைத்தது. ஏழு (ரஜோகுணம்) பிரம்மா இறந்த பிறகு, ஒரு விஷ்ணு (சத்வ குணம்) இறந்துவிடுவார். ஏழு விஷ்ணு இறந்த பிறகு ஒரு சிவன் இறந்துவிடுவார். அப்போது அன்னை பார்வதியும் மரணம் அடைவார், அவரும் பூரண முக்தி பெறவில்லை. அதுவும் அதிகாரம் கொண்டவரிடமிருந்து தீட்சை மந்திரம் பெற்ற பிறகுதான் பார்வதிக்கு பலன் கிடைத்தது. பின்னர், பக்தர்கள் அந்த இடத்தை நினைவுச்சின்னமாக பாதுகாப்பாக வைத்தனர், பக்தர்களும் தரிசிக்க செல்ல தொடங்கினர்.

இந்த தாசன் (சந்த் ராம்பால்) பல இடங்களுக்குச் சென்று கூடாரம் அமைத்து சத்சங்கம் செய்கிறேன். அங்கு அன்னதானத்தோடு பாயாசமும் தயாரிக்கப்படுகின்றன. அங்கு தீட்சை பெறும் பக்தன் நலம் பெறுகிறான். சத்சங்கம் முடிந்ததும் அனைத்து கூடாரங்களையும் அகற்றிவிட்டு வேறு இடத்திற்கு சத்சங்கம் செய்ய சென்றுவிடுவோம். இந்த இடத்தில மண்ணாலும் செங்கலாலும் செய்யப்பட்ட அடுப்பு மட்டுமே மிஞ்சும். பிறகு யாராவது, சந்த் ராம்பால் தாஸ் ஜியின் சத்சங்கம் நடைபெற்று, பாயசம் தயாரித்த இடத்தை பார்க்க சென்றால், அங்கு பாயாசமும் கிடைக்காது, சத்சங்கத்தின் சொற்பொழிவுகளையும் கேட்க முடியாது. எனவே மோட்சத்திற்கு தீட்சையும் பெற முடியாது. அதற்காக சத்சங்கம் நடத்தும் குருவை தேடி செல்லவேண்டும். அங்கே தான் அனைத்து பலனும் பெற முடியும். அதேபோல, தீர்த்த ஸ்தலங்களுக்குச் செல்வது அந்த நினைவுச் சின்னமான மண் அடுப்பை பார்ப்பது போன்றது. இது கீதையில் சொல்லப் படாததால் சாஸ்திரத்திற்கு மாறானது. அதனால் ஒரு பயனும் இல்லை. (அத்தியாயம் 16, ஸ்லோகம் 23, 24,).

தத்வஞானம் இல்லாத குருமார்களாலும் மகான்ககளாலும் தவறாக வழிநடத்தப்படும் பக்தர்கள், முக்தி பெற தீர்த்தங்களுக்கு செல்கிறார்கள். ஸ்ரீ அமர்நாத் யாத்திரை சென்ற பக்தர்கள் பல முறை பனிப்புயலில் சிக்கி ஆயிரக்கணக்கில் இறந்தனர். ஸ்ரீ அமர்நாத்தின் தரிசனமும் பூஜையும் பலனளிக்கும் என்றால், சிவபெருமான் அந்த பக்தர்களைக் காப்பாற்ற மாட்டாரா என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். அதாவது வேதத்திற்கு மாறான வழிபாடு சிவபெருமானுக்கு கூட பிடிக்கவில்லை.

## வைஷ்ணவ தேவி கோவில் தோன்றியது எப்படி

உமாதேவி (பார்வதி) தனது தந்தை தக்ஷனன் நடத்திய யாக குண்டத்தில் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார். சிவபெருமான் அத்தருணத்தில் மோகத்தால் மிஞ்சிய எலும்புகளை பார்வதியாக நினைத்து பத்தாயிரம் வருடங்கள் தனது தோள்மீது சுமந்து சுற்றினார். ஸ்ரீ விஷ்ணு பகவான், தன் சுதர்ஷன சக்கரத்தால் அந்த உமாதேவியின் எலும்புக்கூட்டை சிதைத்தார். தலை பகுதி, விழுந்த இடத்திலேயே புதைக்கப்பட்டது. அந்த இடத்தில் நினைவுச்சின்னமாக ஒரு கோவில் எழுப்பப்பட்டது. அங்கே

ஒரு பெண்ணுருவம் குறிக்கப்பட்டது. அதை வைஷ்ணவி தேவி என அழைக்கின்றனர். பக்தர்களுக்கு இந்தக் கதையை சொல்ல ஒரு மனிதர் நியமிக்கப்பட்டார். பிறகு வந்த சந்ததியர் மக்களிடம் காணிக்கை வாங்கத் தொடங்கினர், மேலும் வியாபாரத்தில் நஷ்டம் அடைந்த ஒருவர், அம்மாவிடம் நூறு ரூபாயும் ஒரு தேங்காயும் கொடுத்ததால் அவர் பணக்காரர் ஆனார் என்றும், குழந்தை இல்லாத தம்பதியர் இருநூறு ரூபாயும் ஒரு சேலையும் தங்க சங்கிலியும் கொடுக்க அவருக்கு ஒரு மகன் பிறந்தான் என்று சொல்ல தொடங்கினர்.

இவ்வாறாக பக்தர்கள் இந்த கதைகள் மீது நம்பிக்கை வைத்து, புனித வேதம் மற்றும் புனித கீதையை மறந்தனர். இதில் இவை அனைத்தும் சாஸ்திர விதிகளுக்கு மாறானது என்று கூறப்பட்டுள்ளது. இதனால் எந்த பலனும், சுகமும், பூரண மோட்சமும் கிடைப்பதில்லை (கீதை அத்-16, மந்திரம் 23, 24). இவ்வாறாக தேவியின் கண்கள் விழுந்த இடத்தில் நைனா தேவி கோயிலும், நாக்கு விழுந்த இடத்தில் ஸ்ரீ ஜ்வாலாஜி கோயிலும், தலை விழுந்த இடத்தில் வைஷ்ணோ தேவி கோயிலும் நிறுவப்பட்டன.

## பூரியில் உள்ள ஸ்ரீ ஜெகந்நாதரின் கோவில் அதாவது தீர்த்த ஸ்தலம் எப்படி கட்டப்பட்டது

ஒடிசா மாநிலத்தில் இந்திரதமன் என்ற ஒரு அரசன் இருந்தார். அவர் ஸ்ரீ கிருஷ்ணரின் தீவிர பக்தர். ஒரு நாள் இரவு ஸ்ரீ கிருஷ்ணர் மன்னரின் கனவில் தோன்றி தனக்கு ஜெகந்நாதர் பெயரில் ஒரு கோயிலை கட்டும்படி சொன்னார். மேலும் அதில் சிலை வழிபாடு இருக்ககூடாது, தரிசிக்க வருபவர்களுக்கு புனித கீதையை கூற ஒரு குருவை அமர்த்தும்படி கூறினார். கடற்கரையில் கோயில் கட்ட வேண்டிய இடத்தையும் காட்டினார். காலையில் எழுந்ததும், மன்னன் ராணியிடம் கனவு பற்றி கூறினார். சுபகாரியங்களில் தாமதம் எதற்கு? அனைத்து செல்வமும் அவன் கொடுத்ததுதான். எனவே, உடனே அவனுக்குக் கோவில் கட்டி சமர்ப்பிப்போம் என்று ராணி கூறினாள். ஸ்ரீ கிருஷ்ணர் கனவில் காட்டிய இடத்தில் அரசர் கோவில் கட்டினார். கோவில் கட்டப்பட்ட பிறகு புயல் கோவிலை சூறையாடி, கோவில் இருந்த இடம் தெரியாமல் அழிந்தது. இப்படி மன்னன் ஐந்து முறை கோவில் கட்டினான். ஐந்து முறையும் கடல் அதை அழித்துவிட்டது.

இதனால் மனம் உடைந்த அரசன், “கடல் என்மீது கோபம் கொண்டு பழிவாங்குகிறது, எனது நிதிக் களஞ்சியம் காலியாகி விட்டது, இனி கோவில் கட்ட வேண்டாம்” என தீர்மானித்தான். சில காலம் கழித்து, பூரண பரமேஸ்வர் (கவிர்தேவ்) ஜோதி நிரஞ்சனுக்குக் (காலனுக்கு) கொடுத்த வாக்குறுதியின்படி ராஜா இந்திரதமனிடம் வந்து கோவில் கட்டச் சொன்னார். கடல் அழிக்காமல் தாம் காப்பதாகச் சொன்னார். அரசன் சொன்னான். “சுவாமிஜி எனக்கு நம்பிக்கை இல்லை. நான் ஸ்ரீ கிருஷ்ணரின் (விஷ்ணுவின்) கட்டளைப்படி கோவிலை கட்டினேன். அவரால் கடலைத் தடுக்க முடியவில்லை. ஸ்ரீ கிருஷ்ணர் என்னை சோதிக்கிறாரோ என நினைத்து ஐந்து முறை கோவிலை கட்டினேன். என் செல்வமும் காலியாகிவிட்டது, நான் சோதனைக்கும் தகுதியற்றவன் ஆகிவிட்டேன். இனி, என்னால் கோவில் கட்ட இயலாது” என்றார். பரமேஸ்வரர் இந்திரதமனிடம் சொன்னார், அனைத்து பிரபஞ்சங்களையும் படைத்த அந்த பரமேஸ்வரனின் சக்தி என்னிடம் உள்ளது. என்னால் கடல் அரசனை தடுக்க முடியும் என்றார்.

அரசன் கூறினான், “சுவாமிஜி கிருஷ்ணரை விட சக்திசாலி யாரும் இருக்க முடியாது. அவரே கடலைத் தடுக்க முடியாதபோது. நீங்கள் எம்மாத்திரம்? எனக்கு நம்பிக்கையும் இல்லை, கோயில் கட்ட என்னிடம் செல்வமும் இல்லை” என்றார். சாது ரூபத்தில் வந்த கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்), அரசனே கோயில் கட்டும் எண்ணம் தோன்றினால் என்னிடம் வாருங்கள், இந்த முறை கோயிலை கடல் அழிக்காது என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

அந்த இரவே ஸ்ரீ கிருஷ்ணர் மீண்டும் மன்னரின் கனவில் தோன்றி, “இந்திரதாமா, மீண்டும் ஒரு முறை கோவில் எழுப்பு, உன்னிடம் வந்த மகான் சாதாரன மகான் அல்ல அவர் சக்தி எல்லை அற்றது அவரிடம் உதவி நாடு” என்று கூறினார்.

உடனே அரசன், தன் கனவு பற்றி ராணியிடம் சொன்னார். ராணி, கடவுளின் உத்தரவை தவறவிட வேண்டாம் என்றாள். ராணி சொன்னதை கேட்ட அரசன், தன் கஜானாவும் காலி ஆகிவிட்டது, கோவில் கட்டவில்லை என்றால் பாவி ஆகிவிடுவேன் தர்மசங்கடத்தில் உள்ளேன் என்று சொன்னார். ராணி, தான் வைத்திருந்த நகைகள் அனைத்தையும் கோவில் திருப்பணிக்காக அர்ப்பணித்தாள். இந்திரதமன் மன்னர், மகான் ரூபத்தில் வந்த பரமேஸ்வர் சொன்ன இடத்திற்குச் சென்று கடலைத் தடுக்க பிரார்த்தனை செய்தார். பரமேஸ்வரர் கபீர் ஜி (கவிர்தேவ்) கடல் எழும்பும் திசையின் கரையில் ஒரு திண்ணை அமைக்க சொன்னார், அதில் அமர்ந்து பக்தி செய்து கடலைத் தடுப்பேன் என்றார். அரசனும் அங்கிருந்த பாறையை வெட்டி ஒரு திண்ணை உருவாக்கினான், அதன் மீது கபீர் பரமேஸ்வரர் அமர்ந்துகொண்டார். ஆறாவது முறையாக கோயில் கட்டும் பணி தொடங்கியது. அதே சமயம் நாத மரபின் ஒரு சித்தர் வந்தார். அவர் ராஜாவிடம் அழகான கோயிலைக் கட்டுகிறாய், சிலை இல்லை என்றால் எப்படி? அதில் ஒரு சிலையையும் நிறுவ வேண்டும் இது எனது உத்தரவு என்று கூறினார். மன்னன் இந்திரதமன் கைகளைக் கூப்பி, சித்தரிடம், ஸ்ரீ கிருஷ்ணர் கனவில் வந்து கோயில் கட்டும்படி கட்டளையிட்டார், மேலும் கோவிலில் சிலை வைக்கக்கூடாது, உருவ வழிபாடும் செய்யக்கூடாது என்று உத்தரவிட்டதாக கூறினார். இதை கேட்ட சித்தர், கனவு எல்லாம் நிஜமல்ல என்று சொல்லி, சந்தன மர சிலையை அமைக்க உத்தரவிட்டு சித்தர் உணவு தண்ணீர் அருந்தாமல் சென்றுவிட்டார். மன்னன் பயந்து போய் சந்தன மரத்தில் சிலை செய்ய உத்தரவிட்டான். சித்தரின் உத்தரவுப்படி ஸ்ரீ கிருஷ்ணரின் சிலையை செய்ய சொன்னார். பிறகு மற்ற குருமார்களும் சாதுக்களும் மன்னரிடம், ஸ்ரீ கிருஷ்ணர் தனியாக எப்படி இருப்பார்? அவர் எப்போதும் ஸ்ரீ பலராமை தன்னுடன் வைத்திருப்பார் என்று கூறினார்கள். மற்றொருவர் சுபத்ரா ஸ்ரீ கிருஷ்ணரின் அன்பு சகோதரி, கிருஷ்ணர் தனது சகோதரி இல்லாமல் எப்படி இருக்க முடியும் என்றும் கூறினார். அதனால் மூன்று சிலைகள் செய்ய முடிவு செய்யப்பட்டது. மூன்று சிற்பி கலைஞர்களை நியமித்தார். சிலைகள் தயாரானவுடன் துண்டு துண்டாய் உடைந்து போயின. இப்படி மூன்று முறை சிலைகள் உடைந்தன. ராஜா தனக்கு பாக்கியம் இல்லை, கோவில் கட்டினாலும் உடைகிறது, சிலைகளும் உடைகின்றன, சித்தரும் கோபித்து உண்ணாமல் சென்று விட்டார் என நினைத்து மிகவும் கவலைப்பட்டான். சிலைகள் உடைகிறது என்று சித்தரிடம் சொன்னால், மன்னன் பொய் சொல்கிறான் என்று கருதி அவர் கோபத்தில் சாபம் கொடுப்பாரோ என எண்ணி பயந்தார். உணவும் உறக்கமும் இன்றி

அமைதி இழந்து, காலையில் அரசவைக்கு சென்றான். அதே சமயம், பூரண பரமாத்மா (கவிர்தேவ்) கபீர் பிரபு எண்பது வயது சிற்பி ரூபத்தில் அங்கு தோன்றினார். இடுப்பில் ஒரு பையில் ரம்பம் போன்றவை வெளியில் தெரியும்படி வைத்திருந்தார். சிற்பி ரூபத்தில் இருந்த பிரபு, ராஜாவிடம், கோவிலுக்கு சிலைகள் சரிவர அமையவில்லை என்று கேள்விப்பட்டேன். எனக்கு 80 வயது ஆகிறது, 60 வருட அனுபவம் உள்ளது. எல்லோராலும் சந்தன சிலை செய்ய முடியாது. தாங்கள் கட்டளையிட்டால், சேவகன் தயாராக இருக்கிறேன் என்று கூறினார். அரசன், கடவுளே வந்தது போல இருக்கிறது, நான் மிகவும் கவலைப்பட்டேன், அனுபவம் வாய்ந்த சிற்பி கிடைத்தால் பிரச்சனை தீரும் என நினைத்து கொண்டிருந்தேன் என்று கூறினார். நீங்கள் சீக்கிரம் சிலைகளை செய்யுங்கள் என்றார். சிற்பி வடிவில் வந்த கவிர்தேவ் (கபீர் பிரபு) சொன்னார், அரசனே எனக்கு ஓர் அறை வேண்டும். கதவை பூட்டிவிட்டு சிலையை தயார் செய்வேன், தயார் செய்த பிறகே கதவை திறப்பேன். இடையே, திறந்தால், சிலைகள் எதுவரை தயாரானதோ அதுவரை அப்படியே இருந்துவிடும் என்றார். மன்னர் ஒப்புக்கொண்டார்.

12 நாட்கள் கடந்ததும், சித்தர் வந்தார் ராஜாவிடம், சிலைகள் தயாரா? என்று கேட்டார். ராஜா கைகளை கூப்பி உங்கள் உத்தரவுப்படி தான் செய்தேன், ஆனால் எனது துரதிர்ஷ்டம் சிலைகள் பாதியில் துண்டு துண்டாக உடைந்து விடுகிறது என்று கூறி உடைந்த சிலைகளை வரவழைத்து காண்பித்தார். சித்தர் சிலை அவசியம் செய்ய வேண்டும், என் முன்னர் செய்யுங்கள் நான் பார்த்துக்கொள்கிறேன் என்றார். அனுபவம் வாய்ந்த 80 வயது சிற்பி ஒருவர் மூடிய அறையில் சிலை செய்கிறார். சிலைகள் தயாரானதும் கதவு தானாக திறக்கும் என்றும், இடையில் கதவைத் திறந்தால், சிலைகள் பாதியில் நின்றுவிடும் என்று சிற்பி கூறியதாகவும், மேலும் இன்றுடன் 12 நாட்கள் ஆகின்றன, வெளியே வரவில்லை, உணவும் தண்ணீரும் எதுவும் எடுக்கவில்லை என்று ராஜா சித்தரிடம் சொன்னார். சித்தர் அரசனிடம், சிலைகள் எவ்வாறு செய்யப்படுகிறது? அதை பார்க்க வேண்டும், சரியாகச் செய்யவில்லை என்றால், அதைச் சரிசெய்வோம் என்று கூறி, அரசன் இந்திரதமனை அழைத்துக் கொண்டு சிலை செய்யும் அறையின் முன் சென்று கதவைத் திறக்குமாறு சிற்பியை அழைத்தார். பலமுறை சொல்லியும், சிற்பி கதவு திறக்காதது கண்டு, 80 வயது முதியவர் ஆகாரம் தண்ணீர் இல்லாமல் இறந்து போயிருக்கலாம், என எண்ணிக் கதவை உடைத்தார். அங்கே, மூன்று சிலைகளும் இருந்தன. ஆனால் உள்ளங்கைகளும், பாதங்களும், செய்யப்படாமல் இருந்தன. சிற்பி மாயமாகிவிட்டார்.

பிறகு கோயிலும் தயாராகிவிட்டது, சித்தர் இந்த சிலைகளை இப்படியே வைத்துவிடுங்கள் என்றார். ஆண்டவன் இதைத் தான் விரும்புகிறானோ, ஒருவேளை ஸ்ரீ கிருஷ்ணரே சிலைகளை உருவாக்கினார் போல் தெரிகிறது என்று சொன்னார். பண்டிதர்கள் அடுத்த நாளே நல்ல நேரம் பார்த்து சிலைகளை நிறுவினர். அனைத்து பூசாரிகளும், அரசனும், வீரர்களும், பக்தர்களும் சிலைகளுக்கு பிரதிஷ்டை செய்ய புறப்பட்டனர். கவிர்தேவ் ஒரு சூத்திரனாக வடிவெடுத்து, கோவிலின் பிரதான வாயிலில், கோவிலைப் பார்த்தபடி நின்று கொண்டார். கடவுளின் பிரதிஷ்டை செய்பவர்கள் பின்னால் வருவதை அறியாதது போல் லீலை செய்து கொண்டிருந்தார். அருகில் வந்தவுடன் கோயிலின் தலைமை பூசாரி,

சூத்திர வடிவில் நின்றுகொண்டிருந்த பரமேஸ்வரரை தள்ளிவிட்டார், அவர் வெகுதூரம் போய் கீழே விழுந்தார், அந்த இடத்திலேயே சூத்ரன் போல லீலை செய்து அமர்ந்துக்கொண்டார். மன்னன் உட்பட அனைத்து பக்தர்களும் கோவிலுக்குள் சென்று பார்த்தபோது, மூன்று சிலைகளும் வெளியே நின்ற சூத்திரனை போலவே மாறியிருந்தன. இந்த அதிசயத்தை அங்கிருந்தவர்கள் பார்த்து வியந்தனர். அந்த சூத்திரன் பிரதான வாயிலை களங்கப்படுத்தியதால் கடவுள் கோபமடைந்ததால் அனைத்து சிலைகளும் சூத்திர வடிவத்தை எடுத்துள்ளன என்று தலைமை பூசாரி கூற ஆரம்பித்தான். சிறிது நேரம் கழித்து, சிலைகள் பழையபடி மாறிவிட்டது. பல முறை கங்கை நீர் தெளித்து சிலைகள் பிராண பிரதிஷ்டை செய்யப்பட்டன.

{கபீர் பரமேஸ்வரர் சொன்னார், அறியாமை மற்றும் மூடத்தனத்தின் உச்சத்தை பாருங்கள். சிற்பி சிலையை கடவுள் ஆக்குகிறான். பிறகு பூசாரி அந்த சிலைக்கு பிராண பிரதிஷ்டை செய்கிறார், அதாவது உயிர் கொடுக்கிறார். பின்னர் அந்த சிலை கடவுளின் வேலையை செய்கிறது. நயவஞ்சகர்களே, கடவுளை நேசிக்கும் ஆத்மாக்களை ஏமாற்றிவிட்டீர்கள்}

சிலைகள் நிறுவப்பட்ட சில நாட்கள் பிறகு, சுமார் 40 அடி உயரம் கொண்ட கடல் அலை கோவிலை நோக்கி வேகமாக வந்தது. எதிரே, கபீர் பரமேஸ்வரர் திண்ணையில் அமர்ந்திருந்தார். ஆசீர்வாதம் கொடுப்பது போல, அவர் தன் கையை உயர்த்தினார், எழுந்த அலைகள் பாறை போல அப்படியே நின்றன. முன்னோக்கி நகர முடியவில்லை. கடலரசன் வந்து மேடையில் அமர்ந்திருந்த கபீர் பரமேஸ்வரரிடம் தயவு செய்து எனக்கு வழி விடுங்கள், நான் கோயிலை அளிக்க போகிறேன் என்று சொன்னான். கவிர்தேவ், இது கோவில் அல்ல, மாளிகை, ஆசிரமம். இதில் மகான்கள் புனித கீதை பாடம் சொல்வார்கள். இதை அழிப்பது என்பது உங்களுக்கு அழகல்ல என்று சொன்னார். கடலரசன், இதை அழித்தே தீருவேன் என்றான். கபீர் பரமேஸ்வர், சரி, அழித்துகொள் யார் உன்னைத் தடுத்தார்கள் என்றார். கடலரசன், என்னால் முடியவில்லை, உங்கள் சக்தி மிகப்பெரியது. பிரபுவே



ஜகன்னாதர் கோவிலை கடலரசன் அழிப்பதை பரமேஸ்வர் கபீர் ஜி காக்கும் படம்

வழி விடுங்கள் என்று சொன்னான். கபீர் சாகேப் ஏன் இதை இழக்கிறீர்கள்? என்று கேட்டார். பிராமண வடிவில் வந்த கடல் அரசன் சொன்னார், “இந்த கிருஷ்ணர் திரேதாயுகத்தில் ராமச்சந்திரர் ரூபத்தில் வந்தபோது, என் மீது அக்னி அம்பை ஏவி, என்னை திட்டி அவமதித்து வழிவிடச் சொன்னார். அதற்காகத்தான் பழிவாங்க போகிறேன்” என்றான். நீங்கள் ஏற்கனவே துவாரகாவை மூழ்கடித்துவிட்டு பழிவாங்கிவிட்டீர்கள் என்று பரமேஸ்வர் கபீர் கூறினார். அதற்கு அந்த கடல் அரசன், அதை என்னால் முழுமையாக மூழ்கடிக்க முடியவில்லை, அங்கேயும் பெரும் சக்தி கொண்ட ஒரு மகான் குறுக்கே வந்துவிட்டார், அதனால் முழுமையாக அழிக்க முடியவில்லை. இப்போது முயன்றாலும் என்னால் அங்கு செல்ல முடியவில்லை என்றான்.

அப்போது கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்) சொன்னார், அங்கேயும் நான்தான் வந்தேன், அந்த நினைவுச்சின்னத்தையும் நான்தான் காப்பாற்றினேன். இப்போது மீதமுள்ள துவாரகாவை விழுங்கிக்கொள், ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரின் உடல் தகனம் செய்யப்பட்ட நினைவிடத்தை விட்டுவிடு என்றார். (அந்த இடத்தில் ஒரு பெரிய கோவில் கட்டப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணர் இறந்தது உண்மை என்பதற்கு இந்த நினைவுச்சின்னம் ஆதாரமாக இருக்கும். இல்லையெனில் வரும் காலத்தில் கிருஷ்ணர் இறக்கவே இல்லை என்று மக்கள் கூறுவார்கள்). அனுமதி கிடைத்ததும், மீதமுள்ள துவாரகாவை கடல் மூழ்கடித்தது. கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்), இனி எப்போதும் இந்த ஜெகந்நாதர் கோயிலை அழிக்க முயற்சிக்காதீர்கள், தூரமாக சென்றுவிடுங்கள் என்று சொன்னார். இதை ஏற்று கடல் அரசன் தலைவணங்கினான், கோயிலில் இருந்து ஒன்றரை கிலோமீட்டர் தூரம் கடல் பின்வாங்கியது. இவ்வாறே ஸ்ரீ ஜகந்நாதரின் கோயில் நிறுவப்பட்டது.

## ஸ்ரீ ஜகந்நாதர் கோவிலில் தீண்டாமை கிடையாது

சில நாட்களுக்குப் பிறகு, சூத்திரன் ரூபத்தில் வந்த கபீர் பரமேஸ்வரரை தள்ளிவிட்ட கோயில் தலைமை பூசாரி குஷ்ட நோயால் பாதிக்கப்பட்டார். எந்த மருந்தாலும் குணமாகவில்லை. குஷ்ட நோய் மேலும் மேலும் அதிகரித்தது. அவர் எல்லா வழிபாடு செய்தும், ஸ்ரீ ஜெகந்நாதரிடமும் அழுது பிரார்த்தனை செய்தும் பலனளிக்கவில்லை. ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ணர் கனவில் வந்து, “பூசாரியே, கோவில் வாசலில் நீ தள்ளிவிட்ட சாதுவின் பாதங்களைக் கழுவி, அந்தத் தண்ணீரைக் குடித்தால் அவருடைய ஆசிர்வாதத்தால் உன் குஷ்ட நோய் குணமாகும். அதுவும் அவர் மனதால் உன்னை மன்னித்தால் மட்டுமே, இல்லையெனில் இல்லை” என்று சொன்னார்.

அந்த தலைமை பூசாரி அதிகாலையில் எழுந்து மற்ற பூசாரிகளுடன் சூத்திர ரூபத்தில் கபீர் பரமேஸ்வரர் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றார். பூசாரி அருகில் வந்தவுடன், கபீர் பரமேஸ்வரர் எழுந்து தள்ளி சென்று, “ஓ பூசாரி, நான் தீண்டத்தகாதவன், என்னை விட்டு விலகி இரு, உனக்கு தீட்டு ஆகிவிடும்” என்றார். பூசாரி மீண்டும் அருகில் வர பரமேஸ்வரர் மேலும் தூரமாக சென்றுவிட்டார். பிறகு பூசாரி கதறி அழுதுகொண்டே, இறைவா தயவுசெய்து என்னை மன்னியுங்கள் என்றார். பின்னர் கருணையுள்ள பரமேஸ்வரர் நின்றுகொண்டார். அவரை சுத்தமான ஆசனத்தில் அமர வைத்து அவரது பாதங்களை கழுவி தண்ணீரை பாத்திரத்தில் எடுத்துக்கொண்டார். கபீர் ஜி அந்த பூசாரியிடம், 40 நாட்களுக்கு இதை குடித்துவிட்டு, சிறிது தண்ணீரை நீரில் கலந்து குளிக்கச் சொன்னார். நாற்பதாம் நாள் உன் குஷ்ட நோய் முடிந்துவிடும் என்றார். மேலும்

எதிர்காலத்திலும் இந்த ஜெகந்நாதர் கோயிலில் யாராவது தீண்டாமை செய்தால் அவரும் இதே போல் தண்டிக்கப்படுவார் என்றார். அங்கிருந்த அனைத்து பூசாரிகளும் இனி இந்த புனித தலத்தில் தீண்டாமை இருக்காது என உறுதியளித்தனர்.

சிந்தியுங்கள்:– பாரதத்தின் இந்த ஒரே ஒரு கோவிலில் தான் ஆரம்பம் முதலே தீண்டாமை இல்லை.

எனக்கும் (சந்த் ராம்பால் ஜி மகராஜ்) அந்த கோவிலை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. சில ஆதாரங்களைச் சேகரிப்போம் என்று நினைத்து அந்த இடத்தைப் பார்க்க பல சீடர்களுடன் சென்றிருந்தேன். இன்றும் அங்கு அனைத்து ஆதாரங்களையும் கண்டோம். கபீர் பரமேஸ்வரர் கோயிலை காப்பாற்ற திண்ணையில் அமர்ந்து கடல் சீற்றத்தை தடுத்த அந்த கல்மேடை இன்றும் உள்ளது. அதன்மீது நினைவுச்சின்னமாக ஒரு கூடாரம் எழுப்பப்பட்டுள்ளது. மிக பழமையான மகந்த் (பாதுகாவலர்) பாரம்பரிய ஆசிரமம் உள்ளது. அதில் இருந்த 70 வயதான பூசாரியிடம், கடலில் இருந்து கோயிலைப் பாதுகாப்பது பற்றிய தகவல்களைக் கேட்டதற்கு, அவர் எனது முன்னோர்கள் பல தலைமுறைகளாக இங்கு மகந்த்களாக (பாதுகாவலர்களாக) இருந்ததாகக் கூறினார். ஸ்ரீ தரம்தாஸ் ஜி மற்றும் அவரது மனைவி ஆம்னி தேவியும் இங்குதான் உயிரை தியாகம் செய்தார்கள், இருவரின் சமாதிகளும் ஒன்றாக உள்ளதை கண்டோம்.

பிறகு ஸ்ரீ ஜெகந்நாதர் கோவிலுக்குள் சென்றோம். இன்றும் அங்கு சிலைகளுக்கு பூஜை நடப்பது இல்லை. ஆனால் பக்தர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கோவிலில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர், பலராம் மற்றும் சகோதரி சுபத்ரா ஆகியோரின் மூன்று சிலைகளுக்கும் உள்ளங்கைகள் இல்லை. அங்குள்ள ஒரு வழிகாட்டி பூசாரியிடம், இந்தக் கோயில் ஐந்து முறை கடலால் அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டதாக கேள்விப்பட்டோம், கடல் ஏன் அழித்தது? பிறகு கடலை யார் நிறுத்தியது? என்று கேட்டோம். அதற்கு அந்த பூசாரி, இதெல்லாம் எனக்கு தெரியாது. இது ஜகந்நாதரின் லீலை, அவர் கடலைத் தடுத்து நிறுத்தினார், கடல் மூன்று முறை கோயிலை உடைத்ததாகக் கேள்விப்பட்டோம் என்று சொன்னார். பிறகு முதல் முறையில் ஏன் ஜெகந்நாதர் கடலை தடுக்கவில்லை என்று நான் கேட்டேன். அதற்கு அந்த பூசாரி, இதுவும் ஜகந்நாதருடைய லீலை என்று பதிலளித்தார். பிறகு நான், இங்கு தீண்டாமை இருக்கிறதா இல்லையா என்று கேட்டேன். அவர், கோயில் ஆரம்ப முதல் இங்கு தீண்டாமை கிடையாது என்றார், சூத்திரர்களும் பூசாரிகளும் ஒரே இலையில் உண்ணலாம் என்றார். பிறகு, மற்ற இந்து கோவில்களில் தீண்டாமை அதிகமாக இருக்கிறது, ஏன் இதில் இல்லை? அதே கடவுள் தானே இங்கும் என்று கேட்டேன். அதற்கு பூசாரி ஜெகந்நாதனின் லீலை என பதில் அளித்தார்.

புண்ணிய ஆத்மாக்களே சிந்தியுங்கள், ஜகந்நாதரின் லீலை என்று சொல்லி உண்மையை எவ்வளவு மறைத்து வைத்திருக்கிறார்கள். புனித நினைவுச்சின்னங்கள் மரியாதைக்குரியவை, கபீர் பரமேஸ்வர் வழங்கிய தத்துவஞானத்தின்படி புனித கீதை மற்றும் புனித வேதங்களின் முறை படி பக்தி செய்தால் மட்டுமே முக்தி சாத்தியமாகும், இல்லையெனில் வேதத்திற்கு எதிராகச் செல்வதால் மனித வாழ்க்கை வீணாகிவிடும். (ஆதாரம் கீதை அத்தியாயம் 16. மந்திரம் 23, 24). ஜெகன்நாதர் கோவிலில் பரமேஸ்வரர் சொன்னபடி கீதை ஞானத்தின் பெருமையைப் பாடுவதுதான் நல்லது. மேலும் பகவத் கீதையில் உள்ள வேதங்களின் முறை படி பக்தி

செலுத்தினால் மட்டுமே மோட்சம் கிடைக்கும். ஜெகன்நாதரின் தரிசனம் பெற்று பஞ்சாமிர்தம் சாப்பிடுவதால் பலன் இல்லை. ஏனென்றால், இது கீதையில் குறிப்பிடப்படாததால், சாஸ்திரத்திற்கு எதிரானதாகும் (அத்தியாயம் 16, ஸ்லோகம் 23, 24ல் ஆதாரம் உள்ளது)

## சொர்க்கத்தின் விளக்கம்

சொர்க்கத்தை உதாரணமாக ஒரு ஹோட்டலாக கருதுங்கள். ஒரு பணக்காரர் கோடையில் சிம்லா, குல்லுமணாலி போன்ற குளிரான இடங்களுக்குச் செல்கிறார். அங்கு ஹோட்டலில் தங்குவதற்கு பணம் செலுத்த வேண்டும். ஓர் இரண்டு மாதம் பணத்தை செலவழித்து, மீண்டும் அவர் தனது பணியிடத்திற்கு திரும்ப வேண்டும். பிறகு பத்து மாதங்கள் உழைத்து சம்பாதித்ததை ஓரிரு மாதம் செலவு செய்துவிட்டு திரும்பி வரவேண்டும். சில வருடம் லாபம் இல்லை என்றால், அந்த இரண்டு மாத சொகுசிற்காக ஏங்க வேண்டும்.

சொர்க்கமும் இதேபோல் தான்: இந்த பூமியில் பக்தி செய்தவன், சில காலம் சொர்க்கம் போன்ற ஹோட்டலுக்குச் சென்று, புண்ணியத்தின் செல்வத்தை செலவழித்துவிட்டு, பாவ புண்ணியங்களின் அடிப்படையில் மீண்டும் நரகத்திலும் 84 லட்சம் உயிரினங்களிலும் துன்பப்பட வேண்டும். ஒரு தத்வதரிசி குரு கிடைக்காத வரை, பிறப்பு, இறப்பு, சொர்க்கம், நரகம் மற்றும் 84 லட்சம் உயிரினங்களின் துன்பம் தொடரும். ஏனென்றால், பூரண பரமாத்மாவின் சத்நாம் மற்றும் சார்நாம் மந்திரத்தால் மட்டுமே பாவங்கள் அழியும். பிற தெய்வங்களை வழிபடுவதால் பாவங்கள் அழிவதில்லை, கர்மவினை படிதான் பலன் கிடைக்கும்.

அதனால்தான் கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 16ல், பிரம்மலோகம் (மகா சொர்க்கம்) வரை உள்ள அனைத்து லோகமும் அழியக்கூடியவை என்று கூறப்பட்டுள்ளது. சொர்க்கமும், மகா சொர்க்கமும் இல்லாதபோது, சாதகன் எங்கே இருப்பான் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

கேள்வி : கீதையை தினமும் படிப்பதால் எந்தப் பலனும் இல்லையா? நாய்க்கு ரொட்டி, பசித்தவனுக்கு உணவு, எறும்புகளுக்கு சர்க்கரை, யாத்திரைத் தலங்களில் அன்னதானம் போடுவது பயனற்றதா?

பதில்: மத நூல்களைப் படிப்பதால் ஞான யாகத்தின் பலன் கிடைக்கும். சில காலம் சொர்க்கம் அல்லது எதை நினைத்து செய்யப்படுகிறதோ அந்த இடம் கிடைக்கும், ஆனால் மோட்சம் கிடைக்காது. தினசரிப் படிப்பதன் முக்கியக் காரணம், புனித வேதத்தில் செய்ய வேண்டியது மற்றும் செய்யக்கூடாத வழிபாட்டு முறையை நினைவுப்படுத்தும். ஏனென்றால் நம் குறிக்கோளை விட்டுவிட்டு சாஸ்திர முறைக்கு மாறான வழிபாடுகளில் ஈடுபட்டுவிடக்கூடாது, மற்றும் மனித வாழ்வின் முக்கிய நோக்கம் முக்தி அடைவது மட்டுமே என்பது நினைவு இருக்கும், இது சாஸ்திர முறையிலான வழிபாட்டால் மட்டுமே சாத்தியமாகும்.

உதாரணமாக, ஒரு விவசாயிக்கு வயதான காலத்தில் ஒரு மகன் பிறந்தான். அந்தக் குழந்தை வளர்ந்து விவசாயத்திற்கு வரும் சமயம் நான் இறந்துவிடலாம் என்று அந்த விவசாயி நினைத்தான். எனவே, விவசாயி தனது அனுபவத்தை புத்தகத்தில் எழுதிவைத்து, மகனிடம், “மகனே, நீ வளர்ந்த பிறகு, விவசாயத்தை புரிந்துகொள்ள எனது அனுபவத்தை எழுதிய புத்தகத்தை தினமும் படித்து விவசாயத்தை செய்யவேண்டும்” என்று கூறினார். தந்தை இறந்த பிறகு, அந்த மகன் தனது தந்தை

எழுதிய புத்தகத்தை தினமும் படித்துவந்தான். ஆனால் அதில் கூறியபடி செய்யவில்லை. அந்த விவசாயி உடைய மகனுக்கு பலன் கிடைக்குமா? ஒருபோதும் இல்லை. தந்தை அனுபவத்தில் கூறியபடி அவரும் செய்ய வேண்டும். அதே போல, பக்தர்கள் புனித கீதையை தினமும் படிக்கிறார்கள், ஆனால் அதற்கு மாறாக வழிபாடு செய்கிறார்கள். எனவே, கீதை அத்தியாயம் 16 ஸ்லோகம் 23, 24 படி இந்த வழிபாடு வீணானது.

எனவே, மூன்று குணங்களையும் ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) வழிபடுவது கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 12 முதல் 15 மற்றும் 20 முதல் 23 வரையில் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் கீதை அத்தியாயம் 9 ஸ்லோகம் 25ல், சிரார்த்தம் அதாவது முன்னோர்களை வழிபடுவது, பிண்டம் வைத்தல், கங்கையில் அஸ்தியை கரைப்பது, பதின்மூன்றாம் நாள், மாதத்திதி, வருஷதிதி போன்றவை, தடை செய்யப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 6 ஸ்லோகம் 16 இல் விரதம் இருப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. அதில், அர்ஜுனா! உண்ணாமல் இருப்பவனுக்கு (விரதம் இருப்பவனுக்கு) பக்தி வெற்றியளிக்காது என்று கூறப்பட்டுள்ளது அதாவது விரதம் தடைசெய்யப்பட்டுள்ளது.

பசித்தவருக்கு உணவு அளிப்பது, விலங்குகளுக்கு உணவு அளிப்பது தவறல்ல, ஆனால் பூரண குரு மூலம் உத்தரவு பெற்று தர்மம் மற்றும் யாகம் போன்றவற்றைச் செய்வது பூரண பலன் கிடைக்கும்.

உதாரணமாக, பணக்காரரின் நாய் காரில் அமர்ந்து செல்கிறது. மனிதனான டிரைவர் கார் ஓட்டுகிறார். அந்த நாய் சாதாரண மனிதனை விட அதிக வசதிகளைப் பெறுகிறது. தனி அறை, மின்விசிறி மற்றும் குளிரூட்டி, போன்றவை.

அந்த அப்பாவி விலங்கு மனித உடலில் இருந்தபோது, அவர் தானமும் செய்தார், ஆனால் சாஸ்திரத்திற்கு மாறான பக்தி மூலம் தானம் செய்ததால் பலன் அளிக்கவில்லை. எந்த செயல் செய்தாலும் அதன் பலன் நிச்சயம் கிடைக்கும் என்பது இறைவனின் விதி. குரு பூரண பரமாத்மாவின் வழிகாட்டியான தத்வதரிசி கிடைக்காத வரை இந்த விதி பொருந்தும்.

தன் கர்ம வினையின் படிதான் பலன் கிடைக்கும். இந்த விதியின்படி, புனித ஸ்தலங்களில் அன்னதானம் செய்து, விலங்குகளுக்கு உணவு கொடுத்த பலன் மூலம் ஒருவன் பணக்கார நாயின் பிறப்புக்குச் சென்று, கர்மவினை பலனை பெறுகிறான். முற்பிறவியின் புண்ணியங்கள் முடிந்த பிறகு கழுதையின் பிறப்பில் செல்கிறான், அதில் அவனுக்கு எந்த வசதியும் கிடைக்காது. அதில் நாள் முழுவதும் கல்லும், மண்ணும் சுமப்பான். அதன் பிறகு மற்ற உயிரினங்களில் துன்பம் அடைவதுடன், நரகத்திற்கும் செல்கிறான். 84 லட்சம் உயிரினங்களின் துன்பத்தை அனுபவித்த பிறகு, மீண்டும் ஒரு மனித பிறவி கிடைக்கிறது. பிறகு பக்தி செய்வாரா இல்லையா என்பது யாருக்குத் தெரியும். மேலும் யாத்திரைக்குச் செல்பவரின் காலடியில் அல்லது வாகனத்திற்கு அடியில் இறக்கும் உயிரினங்களின் பாவங்களையும் அவர் அனுபவிக்கவேண்டும். பூரண பரமாத்மாவின் வழிபாட்டைச் சொல்லும் பூரண குரு அடையாத வரை பாவங்களை அழிக்க முடியாது (மன்னிக்கப்படாது), ஏனென்றால், பிரம்மா, விஷ்ணு, சிவன், பிரம் (ஷர் புருஷ் – காலன்) மற்றும் பரபிரம் (அக்ஷர் புருஷ்) உடைய வழிபாட்டால் பாவங்கள் அழியாது, பாவம் புண்ணியம் இரண்டையும் அனுபவிக்க வேண்டும். கீதையின் ஞானத்தின்படி, அவர் பூரண குருவிடம் தீட்சை பெற்று பூரண பரமாத்மாவின் வழிபாடு செய்திருந்தால், சத்யலோகத்திற்கு

சென்றிருப்பார் அல்லது மீண்டும் மனித உடலைப் பெற்றிருப்பார். பூர்வஜென்ம புண்ணியத்தால் மீண்டும் பூரண குருவை அடைந்து வழிபாடு செய்து மோட்சம் அடைந்திருப்பார். எனவே மேற்கூறிய தன்னிச்சையான வழிபாடு பலனளிக்காது.

கேள்வி : கீதை அத்தியாயம் 3 ஸ்லோகம் 35 மற்றும் அத்தியாயம் 18 ஸ்லோகம் 47 இல், நல்ல முறையான மற்ற மதம் இருந்தாலும், நற்குணம் இல்லை என்றாலும் தனது மதத்தை பின்பற்றுவதே நல்லதாகும். தனது மதத்தில் இறப்பதே நல்லது. பிற மதங்கள் அச்சத்தை கொடுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. எந்த வழிபாடு செய்தாலும் அதை விடக்கூடாது, மேலும் ஒருவன் தனது மதத்தில் இறப்பது மோட்சம் ஆகும் என இதில் கூறப்பட்டுள்ளது.

பதில்: மேற்கூறியபடி ஒருவர் எந்த வழிபாட்டை செய்கிறாரோ அதையே தொடர்ந்து செய்ய வேண்டும் என்றால், புனித ஸ்ரீ பகவத் கீதையின் அறிவின் தேவை என்ன? ஒரு ஸ்லோகமே போதுமானது.

கீதையின் இந்த ஸ்லோகம் சரியானது, ஆனால் மொழி பெயர்ப்பாளர்கள் நேர்மாறான பொருளைக் கொடுத்துள்ளனர். மேலே உள்ள இரண்டு வசனங்களின் உண்மையான அர்த்தத்தை கீழே படிக்கவும்:

**அத்தியாயம் 3, ஸ்லோகம் 35,**

ஸ்ரேயான், ஸ்வத$_4$ர்ம:, விகு$_3$ண:, பரத$_4$ர்மாத், ஸ்வநுஷ்டி$_2$தாத்,
ஸ்வத$_4$ர்மே, நித$_4$நம், ஸ்ரேய:, பரத$_4$ர்ம:, ப$_4$யாவஹ: //35//

**மொழிபெயர்ப்பு:-** (விகு$_3$ண:) குணங்கள் அற்ற அதாவது சாஸ்திர முறையை விட்டுவிட்டு (ஸ்வநுஷ்டி$_2$தாத்) சுயமாக கொண்டு வரப்பட்ட தன்னிச்சையான (பரத$_4$ர்மாத) மற்றொருவரின் மத வழிபாட்டை விட (ஸ்வத$_4$ர்மே) தனது வேத சாஸ்திர முறையான வழிபாடு (ஸ்ரேயான்) மிகவும் சிறந்தது. வேதம் சார்ந்த (ஸ்வத$_4$ர்மே) தனது வழிபாட்டு முறையில் (நித$_4$நம்) இறப்பதும் மங்களகரமானது மேலும் (பரத$_4$ர்ம:) மற்றவர்களின் வழிபாட்டு (ப$_4$யாவஹ:) பயத்தை உண்டாக்கும்.

**அத்தியாயம் 18, ஸ்லோகம் 47,**

ஸ்ரேயான், ஸ்வத$_4$ர்ம:, விகு$_3$ண:, பரத$_4$ர்மாத், ஸ்வநுஷ்டி$_2$தாத்,
ஸ்வபா$_4$வ்நியதம், கர்ம, குர்வன், ந, ஆப்நோதி, கில்பி$_3$ஷம் //47//

**மொழிபெயர்ப்பு:-** (விகு$_3$ண:) குணங்கள் அற்ற (ஸ்வநுஷ்டி$_2$தாத்) சுயமான தன்னிச்சையான சாஸ்திர முறையற்ற (பரத$_4$ர்மாத்) மற்றவர்களின் மத வழிபாட்டை விட (ஸ்வத$_4$ர்ம:) தனது தர்மம் அதாவது சாஸ்திர முறையான மத வழிபாடு (ஸ்ரேயான்) சிறந்தது (ஸ்வப$_4$ாவ்நியதம்) தன்னிச்சையாக உருவாக்கிய (கர்ம) பக்தியை (நா குர்வன்) செய்யவேண்டாம் (கில்பி$_3$ஷம்) இதனால் (ஆப்நோதி) பாவம் ஏற்படுகிறது.

சிறப்பு:- இதன் ஆதாரம் கீதை அத்-17, ஸ்லோகம் 1-6 இல் உள்ளது.

மேற்கூறிய ஸ்லோகங்களில், ஒருவரது சாஸ்திர முறையான பக்தியே சிறந்தது, மற்றவர்களின் ஆடம்பரமான வழிபாட்டு முறை எவ்வளவு நன்றாக இருந்தாலும், அது தீங்கு விளைவிக்கும் என்பது தெளிவாகிறது.

உதாரணமாக, அம்மனின் பஜனை செய்பவர்கள், இனிமையான குரலால் கற்பனை கவிதைகள் மூலம் மாதாவை போற்றுகிறார்கள். சாஸ்திரத்திற்கு மாறான அந்த (ஸ்வானுஷ்டிதத்) சுய வழிபாட்டு

முறையால் ஈர்க்கப்பட்டு, ஒருவர் தனது சாஸ்திர முறையான வழிபாட்டை விட்டுவிடக்கூடாது. ஒரு சாதகன் உண்மையான வழிபாட்டில் ஈடுபடும் போது, பித்ருக்கள் வழிபாடு, கோவிலுக்குச் செல்வது போன்ற சாஸ்திரங்களுக்கு மாறான முந்தைய வழிபாட்டை விட்டுவிடுவார். பிறகு மற்ற தெய்வங்களை வழிபடுபவர்கள், நீங்கள் அனைத்து பூஜைகளையும் விட்டுவிட்டீர்கள், தெய்வக்குற்றம் ஆகிவிடும் என்று கூறுவார்கள். இவ்வாறு, மற்றவர்களின் சாஸ்திரத்திற்கு மாறான வழிபாடு பயத்தை உண்டாக்குகிறது, ஆனால் நாம் சாஸ்திர முறையான வழிபாட்டை இறுதி மூச்சு வரை தொடர்ந்து செய்வது மங்களகரமானது.

கேள்வி:- கீதை, அத்தியாயம் 6, ஸ்லோகம் 10 முதல் 15 வரை உள்ள விளக்கத்தின்படி ஒரு ஆசனத்தில் அமர்ந்து தியானம் செய்கிறேன், ஏகாதசி விரதம் இருக்கிறேன், இதனால் நான் அமைதி அடைந்திடுவேன்.

பதில்:- தயவு செய்து கீதை அத்தியாயம் 6 ஸ்லோகம் 16ஐ மீண்டும் படிக்கவும், அதில், அர்ஜுனா, இந்த பக்தி அதிகம் சாப்பிடுபவனுக்கும் மற்றும் சாப்பிடாமல் இருப்பவருக்கும் (விரதம் இருப்பது), அதிகம் விழித்திருப்பவனுக்கும், அதிகம் தூங்குபவனுக்கும், ஒரே இடத்தில் அமர்ந்து தியானம் செய்பவனுக்கும் வெற்றி கிடைக்காது என்று கூறப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 6, ஸ்லோகம் 10 முதல் 15 வரையில் விவரித்துள்ள விதிகளை, கீதை அத்தியாயம் 3, ஸ்லோகம் 5 முதல் 9 வரையில் அதை மறுக்கப்பட்டுள்ளது. அதில் உடலை கட்டாயப்படுத்தி ஒரே இடத்தில் அமர்ந்து சிந்தனை செய்யும் முட்டாள், நயவஞ்சகர் எனப்படுகிறான் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, ஒரு கர்மயோகி (வேலை செய்துகொண்டே வழிபாடு செய்பவன்) மட்டுமே சிறந்தவன். உண்மையான பக்தி முறைக்கு, கீதையை அருளும் கடவுள் (பிரம்) ஒரு தத்துவதரிசியை தேட சொல்கிறார் (கீதை அத்-4 ஸ்லோகம் 34). இதனால் கீதையை அருளும் கடவுள் (பிரம்) சொல்லும் பக்தி முறை முழுமையானது இல்லை என்று நிரூபணமாகிறது. அதனால் தான், கீதை அத்தியாயம் 6 ஸ்லோகம் 10 முதல் 15 வரையில், பிரம் (ஷர் புருஷ், காலன்) தனது வழிபாட்டால் கிடைக்கும் அமைதி சிறந்ததல்ல (அனுத்தமாம்) என்று கூறியுள்ளார். மேற்கூறிய, அத்தியாயம் 6 ஸ்லோகம் 10 முதல் 15 வரையில் கூறியதாவது, மனதையும் புலன்களையும் அடக்கிய ஒரு பக்தன் சிறப்பான ஆசனத்தில் அமர்ந்து, மனதையும் புலன்களையும் கட்டுப்படுத்தி, மனதை ஒருநிலை படுத்தவேண்டும். நேராக அமர்ந்து பிரம்மச்சரியத்தைப் பின்பற்றி, மனதை நிறுத்த வேண்டும், இப்படி சாதகம் செய்யும் சாதகன் என்னில் வசிக்கும் (நிர்வான்பர்மாம்) உயிரற்ற அமைதியை அடைகிறார். அதனால்தான் கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18 இல், தன்னுடைய வழிபாட்டினால் பெறும் முக்தி சிறந்ததல்ல (அனுத்தமம்) என்று கூறப்பட்டுள்ளது. இதே கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 62 மற்றும் அத்தியாயம் 15 ஸ்லோகம் 4ல், அர்ஜுனா! நீ பரம சாந்தி மற்றும் சத்யலோகத்தை அடைந்தால், பின்னர் மறுபிறப்பு இருக்காது, பூரண முக்தி அடைவாய். நானும் (கீதையை அருளும் பிரபு) அதே ஆதி நாராயண புருஷ் பரமேஸ்வரரிடம் தஞ்சம் அடைந்துள்ளேன். எனவே, நம்பிக்கையுடன் உறுதியுடன் அவரை வழிபட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

தனது அனுமான ஞானத்தின் அடிப்படையில் கூறிய மார்கத்தை, அத்தியாயம் 6 ஸ்லோகம் 47 யிலும் "யுக்தமஹ மதஹ" அதாவது அறியாமையின் இருள் என்று அவரே விவரித்துள்ளார். மற்ற மொழிபெயர்ப்பாளர்கள் "மே யுக்தமஹ் மத்ஹ" என்பதன் பொருள் "மிக

சிறந்தது", என்று எழுதியுள்ளார்கள். ஆனால் இதன் பொருள், "இது அறியாமையின் இருளை கொண்ட எனது அனுமான கருத்து" என்பதாகும். ஏனெனில் உண்மையான ஞானத்தை பற்றி அறிய, ஒரு தத்வதர்ஷி குருவிடம் அறியும்படி கேட்கப்பட்டுள்ளது (கீதை அத்-4 ஸ்லோகம் 34 இல்).

**கீதை அத்-6 ஸ்லோக் 47 இன் உண்மையான மொழிபெயர்ப்பு:**

யோகி$_3$நாம், அபி, ஸர்வேஷாம், மத்$_3$க$_3$தேன், அந்தராத்மநா,

ஸ்ரத்$_3$தா$_4$வான், ப$_4$ஜ்தே, ய:, மாம், ஸ:, மே, யுக்ததம:, மத: // 47 //

**மொழிபெயர்ப்பு:-** மேற்கூறிய சுலோகம் 10 முதல் 15 வரையில், என் மூலம் விவரிக்கப்பட்டுள்ள வழிபாட்டு முறை குழப்பமானது. அது அனுமானமாக நான் வழங்கியது, பூரண ஞானம் அல்ல, ஏனெனில் (ஸர்வேஷாம்) அனைத்து (யோகி$_3$நாம்) பக்தர்களுக்குள் (ய:) ஒருவன் (ஸ்ரத்$_3$தா$_4$வான்) முழு நம்பிக்கையுடன் (அந்தராத்மநா) முழு மனதுடன் (மத்$_3$க$_3$தேன்) நான் கொடுத்த வழிபாட்டு முறைபடி (மாம்) என்னை (ப$_4$ஜ்தே) வழிபடுபவன் (யுக்ததம:) அறியாமையின் இருளால் பிறப்பு-இறப்பு, சொர்க்கம்-நரகம் உடைய வழிபாட்டில் மூழ்கியுள்ளான். இது (மே) எனது (மத:) கருத்து ஆகும்.

இதன் ஆதாரம் புனித கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18ல், மற்றும் அத்தியாயம் 5 ஸ்லோகம் 29 இல், மற்றும் அத்தியாயம் 6 ஸ்லோகம் 15 இல் தெளிவாக உள்ளது. அதனால் தான், கீதை அத்தியாயம் 18, சுலோகம் 62ல், "அர்ஜுனா! நீ முழுமனதுடன் அந்த பரமாத்மாவிடம் சரணடை, அவருடைய அருளாள், நீ பரம சாந்தியும், சத்யலோகமும் அடைவாய் என்று கூறப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 15 ஸ்லோக் 4 இல், தத்வதரிசி குருவை அடைந்த பிறகு, நீ அந்த பரம ஸ்தானமான பரமேஸ்வரனை தேட வேண்டும், அங்கு சென்ற சாதகன் மீண்டும் இந்த உலகத்திற்குத் திரும்புவதில்லை, அதாவது பிறப்பு இறப்பு நிரந்தரமாக முடிந்துவிடுகிறது. உலக வடிவிலான மரத்தைப் படைத்த அந்த ஆதி புருஷ் பரமேஸ்வரரிடம் நானும் சரண் அடைந்துள்ளேன். அவரை வழிபட வேண்டும்.

கீதையின் அத்தியாயம் 6 ஸ்லோகம் 10 முதல் 15 வரை உள்ள ஞானத்தை, கீதை அத்தியாயம் 3 ஸ்லோகம் 5 முதல் 9 வரையில் அதை தவறானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. மனதைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம் என்று அர்ஜுனன் கேட்டான். அதற்கு பகவான் சொன்னார், அர்ஜுனா, மனதை நிறுத்துவது காற்றை நிறுத்துவது போன்றது. மேலும், சந்தேகமின்றி ஒரு கணம் கூட கர்ம செயலை செய்யாமல் யாரும் இருப்பதில்லை. முட்டாள் மனிதர்கள், வெளியில் உடல் முழுவதையும் கட்டுப்படுத்தி, உள் மனதில் எதையாவது நினைத்துக் கொண்டே இருப்பார்கள். அதனால்தான் ஒரே இடத்தில் தவம் செய்வதற்கு பதிலாக உலக செயல்களை செய்து கொண்டே (கர்மயோகம்) வழிபாடு செய்வது சிறந்தது. கர்ம செயல் செய்யாமல் ஒரே இடத்தில் அமர்ந்து கொடிய தவம் வழிபாடு செய்வதை விட, செயலுடன் கூடிய வழிபாட்டு முறை சிறந்தது. ஒரே இடத்தில் அமர்ந்து சாதகம் செய்தால் நீ எப்படி வாழ்வாய்? சாஸ்திர விதிகளுக்கு மாறாக வழிபாடு (ஒரே இடத்தில் அமர்ந்து தவம் செய்வது) செய்வது கர்மவினைக்கு காரணம். அதனால்தான் சாஸ்திர முறையான வழிபாடு செயல்களுடன் செய்வது சிறந்தது. கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 7 இல், யுத்தமும் செய், என்னையும் நினைத்துக்கொண்டே இரு, இந்த வழியில், நீ என்னையே அடைவாய் என்று கூறப்பட்டுள்ளது. கீதை

அத்தியாயம் 7 ஸ்லோகம் 18 மற்றும் அத்தியாயம் 18 ஸ்லோகம் 62 இல் கூறியதாவது, எனது வழிபாடு மூலம் கிடைக்கும் பலன் (முக்தி) சிறந்ததல்ல மிகவும் தாழ்வானது (அனுத்தமம்). எனவே, அந்த பரமேஸ்வரரிடம் சரணடை, அவருடைய அருளால் நீ பரம சாந்தியும் (சாஸ்வதம் ஸ்தானம்) சத்யலோகத்தையும் அடைவாய். அந்த பரமேஸ்வரரின் ஞானம் (தத்வஞானம்) மற்றும் வழிபாட்டு முறையை ஒரு தத்வதரிசி குருவிடம் கேள், அதை பற்றி எனக்கு (பிரம் – ஷர் புருஷ், கீதையை அருளும் பிரபு) தெரியாது.

கேள்வி : கீதை அத்தியாயம் 15, ஸ்லோகம் 18ல், நான் வேதத்திலும், லோகத்திலும் புருஷோத்தமன் என அழைக்கப்படுகிறேன். இதிலிருந்து கீதையை அருள்பவர் தான் எல்லாம் வல்லவர் என்று நிரூபணமாகிறது, கீதை அத். 12 முழுவதும் கீதை அருள்பவரின் மகிமையை கூறுகிறது.

பதில்: கீதையில், கீதை கூறும் காலன், தன்னுடைய வழிபாடு முறை மற்றும் திறமையை விவரிப்பதோடு, அந்த பரமாத்மாவின் மகிமையையும் கூறுகிறார் மற்றும் அந்த பரமாத்மாவின் வழிபாட்டிற்காக ஒரு தத்வதரிசி குருவை சுட்டிக்காட்டுகிறார். கீதை அத்தியாயம் 12 முழுவதும் பிரம் (ஷர் புருஷ் – காலன்) உடைய மகிமை கூறப்பட்டுள்ளது, மற்றும் கீதை அத்தியாயம் 13 முழுவதுமே அந்த பூரண பரமாத்மா அதாவது ஆதி புருஷ் பரமேஸ்வரரின் மகிமை கூறப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 15, ஸ்லோகம் 1 முதல் 4 மற்றும் 16, 17ல், அந்த பூரண பரமாத்மா, பரபிரம், பிரம், இவர்களைப் பற்றி உண்மையான ஞானம் உள்ளது.

கீதை அத்தியாயம் 15, ஸ்லோகம் 16 இல், பூமியின் தனிமத்தால் ஆன லோகத்தில் இரண்டு கடவுள்கள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. (பிரம் உடைய 21 பிரபஞ்சங்கள் மற்றும் பரபிரம் உடைய ஏழு சங்க் பிரபஞ்சங்கள்). ஒன்று ஷர் புருஷ் அதாவது பிரம். இரண்டாவது அக்ஷர் புருஷ் அதாவது பரபிரம். இந்த இரண்டு கடவுள்கள் மற்றும் இவர்களுக்கு கீழ் உள்ள அனைத்து உயிரினங்களின் ஸ்தூல உடல்கள் அழியக்கூடியவை மற்றும் ஆன்மா அழியாதது என்று கூறப்படுகிறது.

கீதை அத்தியாயம் 15, சுலோகம் 17 இல், உண்மையில் புருஷோ ாத்தமன் அதாவது பூரண பரமாத்மா மேற்கூறிய இரண்டு கடவுளிலிருந்து வேறுபட்டவர் ஆவார். அவர் மூன்று லோகங்களில் உள்ள அனைவரையும் காப்பவர், அவர் உண்மையில் அழிவற்ற பரமேஸ்வர் என்று அழைக்கப்படுகிறார்.

கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 18 இல், கீதையை அருள்பவர் (ஷர் புருஷ்–பிரம்) தன்னுடைய நிலையை கூறுகிறார், புராண கதைகளின் அடிப்படையில் நான் புருஷோத்தம் என்று அழைக்கப்படுகிறேன், ஏனென்றால் எனது இருபத்தொரு பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிரினங்களை விட நான் சிறந்தவன். எனவே நான் புராண கதைகளின் அடிப்படையில் புருஷோத்தம் என்று பிரபலமாகிறேன். ஆனால் உண்மையில் புருஷோத்தமன் என்பவர் வேறு ஒரு பரமேஸ்வரர், கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 17 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேள்வி : கீதை அத்தியாயம் 10, சுலோகம் 2, 3 இல், எனது தோற்றம் பற்றி யாருக்கும் தெரியாது. பிறப்பில்லாத என்னை தத்வஞானம் மூலம் அறிந்தவன், எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான் என்று கூறப்பட்டுள்ளது. இதன்படி பிரம் பிறப்பில்லாதவன் என்றும், எல்லாப் பாவங்களையும் அழிப்பவன் என்று தெரிகிறது.

பதில் : கீதை அத்தியாயம் 10, ஸ்லோகம் 2 இல், (பிரம்மா, விஷ்ணு,

சிவன் போன்று) தெய்வங்களுக்கும் ரிஷிகளுக்கும் எனது தோற்றம் பற்றி தெரியாது, ஏனென்றால் அவர்கள் அனைவரும் என்னிடமிருந்து தோன்றியவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஸ்லோகத்தின் மூலம் கீதையை அருளும் கடவுளுக்கும் பிறப்பு உள்ளது ஆனால் தெய்வங்களும் முனிவர்களும் இதை அறிய மாட்டார்கள், ஏனென்றால் அவர்கள் காலனிடமிருந்து (பிரம்) பிறந்தவர்கள் என்பது தானாகவே நிரூபணமாகிறது. உதாரணமாக, தந்தையின் பிறப்பு பற்றி குழந்தைகளுக்கு தெரியாது ஆனால் தந்தையின் தந்தை அதாவது தாத்தா அதை அறிவார். பூரண பரமாத்மா தானே காலனின் லோகத்தில் தோன்றி காலன் உடைய தோற்றம் பற்றிக் கூறியுள்ளார். தயவுசெய்து இந்த “ஞான கங்கை” புத்தகத்தில் உள்ள “இயற்கையின் உருவாக்கத்தில்” படியுங்கள்.

கீதை அத்தியாயம் 10 ஸ்லோகம் 3 இன் மொழிபெயர்ப்பு தவறானது. அதாவது கீதை அத்-2, ஸ்லோகம் 12 மற்றும் அத்-4, ஸ்லோகம் 5 இல், தன்னை அழியக்கூடியவர் என்றும், பிறப்பு இறப்பு உள்ளவர் என்றும் கூறியுள்ளார். மேலும் அத்-2 ஸ்லோகம் 17 மற்றும் அத்-8, ஸ்லோகம் 3, 8, 9, 10 மற்றும் 20, அத்-15 ஸ்லோகம் 4 மற்றும் 16, 17 இவைகளில், வேறு ஒரு அழிவற்ற பரமாத்மாவை பற்றி கூறப்பட்டுள்ளது.

அதனால்தான் கீதை அத்தியாயம் 10 ஸ்லோகம் 3ல், என்னையும், அந்த ஆதியானவன் பிறப்பில்லாதவன் அனைத்து லோகத்தின் எஜமானரான அந்த பரமேஸ்வரனை தத்துவஞானம் மூலம் அறிந்த ஒரு தத்வதரிசி ஞானி உண்மையான ஞானத்தை உச்சரிப்பார், அதனால் உண்மையான வழிபாட்டை செய்து சாதகன் பாவத்திலிருந்து விடுபடுகிறான் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் கீதை அத்-10 ஸ்லோகம் 2, 3 இன் உண்மையான மொழிபெயர்ப்பைப் படிக்கவும்:

**அத்தியாயம் 10, ஸ்லோகம் 2:**

ந, மே, விது$_3$:, ஸுரக$_3$ணா:, ப்ரப$_4$வம், ந, மஹர்ஷய:,
அஹம், ஆதி$_3$:, ஹி, தே$_3$வாநாம், மஹர்ஷீணாம், ச, ஸர்வஸ: //2//

**மொழிபெயர்ப்பு:-** (மே) என்னுடைய (ப்ரப$_4$வம்) பிறப்பு பற்றி (ஸுரக$_3$ணா:) தெய்வங்களும் (மஹர்ஷய:) ரிஷிகளும் (விது$_3$:) அறிய (ந) மாட்டார்கள் (ஹி) ஏனென்றால் (அஹம்) நான் (ஸர்வஸ:) எல்லா வகையிலும் (தே$_3$வாநாம்) தெய்வங்கள் (ச) மற்றும் (மஹர்ஷீணாம்) ரிஷிகளின் (ஆதி$_3$:) பிறப்பிற்கு காரணமானவன்.

**அத்தியாயம் 10, ஸ்லோகம் 3:**

ய:, மாம், அஜம், அநாதி$_3$ம், ச, வேத்தி, லோகமஹேஸ்வரம்,
அஸம்மூட$_4$:, ஸ:, மர்த்யேஷு, ஸர்வபாபை:, ப்ரமுச்யதே //3//

**மொழிபெயர்ப்பு:-** (ய:) எந்த வித்துவான் (மாம்) என்னை (ச) மற்றும் (அநாதி$_3$ம்) ஆதியான அதாவது நித்தியமான (அஜம்) பிறப்பற்றவன் (லோகமஹேஸ்வரம்) அனைத்து லோகங்களின் ஈஸ்வரன், அதாவது பூரண பரமேஸ்வரனை (வேத்தி) அறிகிறானோ (ஸ:) அவர்(மர்த்யேஷு) வேதங்களைச் சரியாக அறிந்தவர் அதாவது வேதங்களின்படி ஞானம் பெற்றவர் அதாவது (அஸம்மூட$_4$:) தத்வதரிசி வித்துவான் (ஸர்வபாபை:) அனைத்து பாவங்களையும் (ப்ரமுச்யதே) விரிவாக விளக்குபவர் அதாவது அவரே படைப்பு மற்றும் கர்மவினை பற்றி சரியாக விவரிப்பவர் அதாவது அஞ்ஞானத்திலிருந்து விடுவிப்பவர். அந்த தத்துவதரிசி கூறும் வழிபாடு

மூலம் பக்தனின் அனைத்து பாவங்களும் அழிந்துவிடுகின்றன.

## கீதையை அருளிய (பிரம்) காலனின் தோற்றம் பற்றிய குறிப்பு

அத்தியாயம் 10 ஸ்லோகம் 2ல், அர்ஜுனா, என்னுடைய பிறப்பு பற்றி தெய்வங்களுக்கோ ரிஷிகளுக்கோ தெரியாது, ஏனென்றால் அவர்கள் அனைவரும் என்னிடமிருந்து தோன்றியவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து பிரம் (கால்) பிறப்புள்ளவன், ஆனால் தெய்வங்களும் முனிவர்களும் அறிவதில்லை என்பது தானாக நிரூபணமாகிறது. அதாவது, தந்தையின் பிறப்பைப் பற்றி குழந்தைகளுக்கு தெரியாது, ஆனால் தாத்தாவிற்கு தெரியும். இதேபோல், 21 பிரபஞ்சங்களில் உள்ள அனைத்து தேவர்களும் ரிஷிகளும் ஜோதி நிரஞ்சன்-பிரம் அதாவது காலன் மற்றும் பிரகிருதி (துர்க்கை) மூலம் தோன்றியவர்கள். அதனால்தான் என் பிறப்பைப் பற்றி 21 பிரபஞ்சங்களிலும் யாருக்கும் தெரியாது, ஏனென்றால் எல்லோரும் என்னிடமிருந்து தோன்றியவர்கள் என்று கூறுகிறார். பூரண பிரம் மட்டுமே காலனின் (பிரம்) தோற்றத்தைப் பற்றி சொல்ல முடியும். ஏனென்றால் பரம் அக்ஷர் பிரம் (பூரண பிரம்) தான் காலனை படைத்தவர். இதை பற்றி கீதை அத்தியாயம் 3 ஸ்லோகம் 14, 15 இல், பிரம் தோன்றியதற்கான தெளிவான ஆதாரம் உள்ளது.

அத்தியாயம் 10 சுலோகம் 3 இல் கூறியதாவது, என்னை மற்றும் அனைத்து லோகங்களின் ஈஸ்வரனான அழிவற்ற பரமாத்மாவை அறிந்தவர், நான்கு வேதங்களையும் (ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம்) அறிந்த தத்துவதரிஷி ஞானி ஆவார். அவர் காட்டிய பக்தி மார்க்கத்தில் வழிபட்டால் அனைத்து பாவங்களும் அழிந்துவிடும். கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16, 17, 18 இல் கூறியதாவது, மூன்று லோகத்தையும் காக்கும் அழிவற்ற பூரண பரமாத்மா மற்றொருவர் என்று விவரிக்கப்பட்டுள்ளது. 21 பிரபஞ்சங்களில் உள்ள அழியக்கூடிய உயிர்கள் மற்றும் அழியாத ஆன்மாவையும் விட நான் சிறந்தவன் என்பதால், நான் (கால்) புருஷே ாத்தமன் என்று அழைக்கப்படுகிறேன். அதனால்தான் என்னை அறியாமையின் அடிப்படையில் புருஷோத்தமன் என்கிறார்கள், ஆனால் உண்மையில் நான் அழிவற்றவன் அல்ல மற்றும் காப்பவன் அல்ல. கீதை அத்தியாயம் 3 ஸ்லோகம் 14, 15ல், அனைத்து ஜீவன்களும் உணவால் பிறக்கின்றன, உணவு மழையிலிருந்தும், மழை யாகத்திலிருந்தும், யாகம் சுப கர்மத்திலிருந்தும், கர்மங்கள் பிரம்ம காலன் இடமிருந்து உண்டாகின்றன மற்றும் பிரம்ம காலன் பூரண பரமாத்மாவிடமிருந்து தோன்றினான் என்று கூறப்பட்டுள்ளது. அந்த அழிவற்ற பரமாத்மா யாகங்களில் நிறைந்திருக்கிறார், அவர் யாகங்களில் பூஜிக்கத்தக்கவர் ஆவார், அவர் யாகங்களின் பலன்களை தருபவர் அதாவது உண்மையில் அவர் மட்டுமே ஆதியக்ஞர்.

மேலும், கீதை அத்தியாயம் 10 ஸ்லோகம் 2 இல், எனது தோற்றம் பற்றி (பிரபவம்) யாருக்கும் தெரியாது என்று கூறியுள்ளார். இதிலிருந்து காலனுக்கு (பிரம்) பிறப்பு இறப்பு உள்ளது என்று நிரூபணமாகிறது. ஆகையால் சில இடங்களில் உருவத்தில் இருக்கிறான். இல்லையெனில், ஸ்ரீ கிருஷ்ணர் ஏற்கனவே அர்ஜுனன் முன் நின்று கொண்டிருந்தார். அவரால் நான் பிறக்காதவன் என்று சொல்ல முடியாது. இதெல்லாம் காலன் (புலப்படாத பிரம்) ஸ்ரீ கிருஷ்ணரின் உடலுக்குள் (ஆவியாக) புகுந்து கீதையின் வடிவத்தில் தனது நிலையை பற்றிய சரியான தகவல்களை

**கூறிவிட்டார். மேற்கூறிய கீதையின் விளக்கத்திலிருந்து, பூரண பிரம் இடமிருந்து கால பிரம்மன் தோன்றினார் என்பது நிரூபணமாகிறது. இதே ஆதாரம் அதர்வண வேதம் கண்டம் 4 அனுவாகியம் 1 மந்திரம் 3 இல் உள்ளது, அது பின்வருமாறு,**

**அதர்வண வேதம் கண்டம் 4 அனுவகியம் 1 மந்திரம் 3:**

ப்ர யோ ஜஞே வித்$_3$வாநஸ்ய ப$_3$ந்து$_4$ர்விஸ்வா தே$_3$வாநாம் ஜநிமா விவக்தி/
ப்$_3$ரம் பி$_3$ரம்மணா உஜ்ஜபா$_4$ர் மத்$_4$யான்னீசைருச்சை: ஸ்வதா$_4$ அபி$_4$ ப்ர
தஸ்தெ$_2$ள //3//

ப்ர – ய: – ஜஞே – வித்$_3$வாநஸ்ய – ப$_3$ந்து$_4$ – விஸ்வா – தே$_3$வாநாம் – ஜநிமா – விவக்தி – ப்$_3$ரஹம: – ப்ரம்மணா: – உஜ்ஜபா$_4$ர் – மத்$_4$யாத் – நீசை: – உச்சை: – ஸ்வதா$_4$ – அபி$_4$: – ப்ரதஸ்தெள /

**மொழிபெயர்ப்பு:–** (ப்ர) முதன் முதலில் (தே$_3$வாநாம்) தெய்வங்கள் மற்றும் பிரபஞ்சத்தின் (ஜஞே) தோற்றம் பற்றிய ஞானத்தை (வித்$_3$வாநஸ்ய) பக்தரின் (ப$_3$ந்து$_4$) உண்மையான துணை அதாவது பூரண பரமாத்மாதான் தனது பக்தருக்கு (ஜநிமா) அவரால் உருவாக்கப்பட்டதை (விவக்தி) தானே விரிவாக விளக்குவார், அதாவது (ப்ரம்மணா:) பூரண பரமாத்மா (மத்$_4$யாத்) தனது சபத் சக்தி மூலம் (ப்$_3$ரஹம்) பிரம் ஷர் புருஷ் அதாவது காலனை (உஜ்ஜபா$_4$ர்) உருவாக்கி (விஸ்வா) சர்வ லோகங்களை (உச்சை:) மேலே சத்யலோகம் போன்றவை (நீசை:) கீழே பரபிரம் மற்றும் பிரம் உடைய லோகங்கள் (ஸ்வதா$_4$) தனது (அபி$_4$:) ஈர்ப்பு சக்தியால் (ப்ரதஸ்தெள) இரண்டையும் நன்றாக நிறுவினார்.

**பொருள்: பூரண பரமாத்மா தன் மூலம் படைத்த பிரபஞ்சத்தின் ஞானத்தையும், அனைத்து ஆன்மாக்களின் படைப்பு பற்றிய ஞானத்தையும் தனது பக்தனுக்கு தானே சரியாக விளக்குகிறார். பூரண பரமாத்மா தனது வார்த்தை சக்தியால் பிரம்ம காலனை (ஷர் புருஷ்) படைத்தார், மற்றும் சத்யலோகம், அலக் லோகம், அகம் லோகம், அனாமி லோகம் ஆகியவை மற்றும் கீழே உள்ள பரபிரம் உடைய ஏழு சங்க் பிரபஞ்சங்களையும், பிரம் உடைய 21 பிரபஞ்சங்களையும் தனது ஈர்ப்பு சக்தியால் நிலைநிறுத்தியுள்ளார்.**

**பூரண பரமாத்மா கபீர் பரமேஸ்வர் (கவிர்தேவ்) தனது பிரியமான பக்தர் தரம்தாஸ் ஜி, மதிப்பிற்குரிய கரீப் தாஸ் ஜி போன்றவர்களுக்கு தான் படைத்த பிரபஞ்சத்தை பற்றிய ஞானத்தை அவரே கூறியுள்ளார். மேற்கூறிய வேத மந்திரமும் இதையே சொல்கிறது.**

**கண்டம் 4 அனுவாக்கியம் 1 மந்திரம் 7**

யோத$_2$ர்வாணம் பித்ரம் தே$_3$வப$_3$ந்து$_4$ம் ப்$_3$ரஹஸ்பதிம் நமசாவ் ச க$_3$ச்ச$_2$ாத்/
த்வம் விஸ்வேஷாம் ஜநிதா யத$_2$ாஸ்: கவிர்தே$_3$வோ ந த$_3$ப$_4$ாயத்
ஸ்வத$_4$ாவான் //7//

ய: – அத$_2$ர்வாணம் – பித்ரம் – தே$_3$வப$_3$ந்து$_4$ம் – ப்$_3$ரஹஸ்பதிம் – நம்சா – அவ் – ச – க$_3$ச்ச$_2$ாத் – த்வம் – விஸ்$^2$வேஷாம் – ஜநிதா – யத$_2$ா – ஸ: – கவிர்தே$_3$வ்: – ந – த$_3$ப$_4$ாயத் – ஸ்வத$_4$ாவான் /

**மொழிபெயர்ப்பு:–** (ய:) அந்த (அத$_2$ர்வாணம்) மாறாத அதாவது அழியாத (பித்ரம்) பரம பிதா (தே$_3$வப$_3$ந்து$_4$ம்) ஆன்மாவின் உண்மையான துணை (ப்$_3$ரஹஸ்பதிம்) எல்லோரையும்விட பெரிய ஞானி உலக குரு (ச) மற்றும்

(நம்சா) பணிவான முறையான சாதகனை (அவ்) பாதுகாப்புடன் (க$_3$ச்ச$_2$ாத்) சத்யலோகம் சென்றவர்களை அதாவது பூரண முக்தி அடைந்தவர்களை சத்யலோகத்திற்கு அழைத்து சென்றவர் (விஸ்$^2$வேஷாம்) அனைத்து பிரபஞ்சங்களையும் (ஜநிதா) உருவாக்கிய ஜக்தாம்பா அதாவது ஒரு தாயின் குணங்கள் உடையவர் (ந த$_3$ப$_4$ாயத்) காலனை போல ஏமாற்றாத (ஸ்வத$_4$ாவான்) சுபாவம் குணங்கள் கொண்டவர் (யத$_2$ா) அவர் (த்வம்) நீங்களே (கவிர்தே$_3$வ்:) கவிர்தேவ், பல்வேறு மொழிகளில் கபீர் பரமேஷ்வர் என்றும் அழைக்கப்படுகிறது.

**பொருள்:- இந்த மந்திரத்தில் அனைத்தையும் படைத்த பரமேஸ்வரரின் பெயர் கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வர் என்றும் தெளிவாகிறது. நிஜத்தில் அழிவில்லாத பரமேஸ்வரர் (ஆதாரம்: கீதை அத்- 15 ஸ்லோகம் 16, 17 இல்) அண்டத்தின் குரு, ஆன்மாவின் துணை, மோட்சம் அடைந்து சத்யலோகம் சென்றவர்களை அழைத்து செல்பவர், அனைத்து பிரபஞ்சங்களை படைத்தவர், காலனை (பிரம்) போல ஏமாற்றாதவர், அவர் கவிர்தேவ் அதாவது கபீர் பரமேஸ்வரர் ஆவார். அவர் தனது சக்தியால் அனைத்து பிரபஞ்சங்களையும் உயிரினங்களையும் படைத்தார், எனவே (ஜனிதா) அவர் தாய் என்றும் (பிதரம்) தந்தை என்றும் அழைக்கப்படுகிறார், (பந்து) உண்மையான துணையும் இவரேதான் மற்றும் (தேவ்) இறைவனும் இவரேதான். எனவே இந்த கவிர் தேவனைதான் (கபீர் பரமேஸ்வரரை) போற்றுகிறார்கள்.அன்னையும் நீயே, தந்தையும் நீயே..... எந்தன் ஆதி தேவனும் நீயே. இந்த பரமேஸ்வரரின் மகிமை, புனித ரிக்வேதம் மண்டலம் 1, சுக்தம் 24 இல் விரிவாக உள்ளது.**

**கேள்வி : வேதங்களில் கவிர் அதாவது கபீர் என்ற பெயர் எப்படி வந்தது? வேதம் படைப்பின் ஆரம்பத்திலேயே வந்தது, ஆனால் கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வர்) கிபி 1398 இல் தோன்றினார்?**

**பதில் : பூரண பரமாத்மாவின் நிஜமான பெயர் கவிர்தேவ் ஆகும், மேலும் சத்யபுருஷ், பரம் அக்ஷர் பிரம், பூரண பிரம் போன்ற பெயர்களும் உள்ளன. உதாரணமாக நாட்டின் பிரதமரின் உடலின் பெயர் வேறாகவும், பதவியின் பெயர் பிரதமர், பிரதம மந்திரி என்று வேறாக இருக்கும். இதே பூரண பரமாத்மா நான்கு யுகங்களிலும் வெவ்வேறு பெயர்களில் வந்துள்ளார். படைப்பு மற்றும் வேதங்களை உருவாக்குவதற்கு முன்பே, அனாமி (அனமே) லோகத்தில் கவிர்தேவ் என்ற பெயரில் மனிதனைப் போன்ற உடல் வடிவில் இருந்தார். கவிர்தேவ் பின்னர் சத்யலோகத்தை படைத்தார், அதன் பிறகு, பரபிரம் மற்றும் பிரம் உடைய அனைத்து லோகங்களையும், வேதங்களையும் படைத்தார், ஆகையால் வேதங்களில் கவிர்தேவ் உடைய விளக்கம் உள்ளது.**

## கபீர் சாகேப் விபீஷன் மற்றும் மண்டோதரியை சரணாகதியாக ஏற்றுதல்

**அநல் எனும் நல், அநீல் எனும் நீல் ஆகியோரை பரமேஸ்வரர் முனிந்தர் தனது அடைக்கலத்தில் ஏற்ற பிறகு இலங்கைக்கு சென்றார். அங்கு பதினாறு பேர் கொண்ட சந்திரவிஜய் என்ற பக்தனின் பக்தியுள்ள குடும்பம் வசித்து வந்தது. அவர் பாட் சாதியில் பிறந்தவர். பரமேஸ்வர் முனிந்தரிடம் (கவிர்தேவ்) குடும்பத்தினர் அனைவரும் தீட்சை பெற்றார்கள். பக்தரான சந்திரவிஜய்யின் மனைவி கர்மவதி, ராவணனின் மனைவி**

ராணி மண்டோதரியின் சேவகியாக இருந்தார். ராணி மண்டோதரியிடம் நகைச்சுவைகளை சொல்லி மகிழ்வித்தார். பக்தர் சந்திரவிஜய் ராவணனின் அவையில் பணிபுரிந்தார். சந்திரவிஜயின் மனைவி கர்மவதி தீட்சை பெற்ற பிறகு, தனது குரு முனிந்தரிடம் கேட்ட இறைவனின் படைப்புக்களை பற்றி ராணி மண்டோதரியிடம் விவரிக்கத் தொடங்கினார்.

ராணி மண்டோதரி மிகவும் ரசிக்க ஆரம்பித்தாள், கண்களில் கண்ணீர் பெறுக கர்மவதியிடம் மணிக்கணக்கில் இறைவனுடைய ஞானத்தை கேட்டு கொண்டிருந்தாள். ஒரு நாள் ராணி மண்டோதரி கர்மவதியிடம், இந்த ஞானம் யாரிடமிருந்து கிடைத்தது? என்று கேட்டாள். நீ எப்போதும் முட்டாள்தனமாக பேசுவாய், கடவுள் போன்ற மகான் இல்லாமல் இவ்வளவு பெரிய மாற்றம் நடக்காது என்றாள். அப்போது கர்மவதி, நாங்கள் பூரண குருவிடம் தீட்சை எடுத்துள்ளோம் என்றாள். ராணி மண்டோதரி தானும் அவரை தரிசிக்க வேண்டும், அடுத்த முறை உங்கள் குரு வந்தால் இங்கேயும் அழைத்து வாருங்கள் என்று கூறினாள். ராணியின் உத்தரவை கேட்டு மிக பணிவுடன் கர்மவதி சொன்னாள், உங்கள் கட்டளைப்படியே உங்கள் சேவகி செய்வாள்,

ஆனால் ஒரு வேண்டுகோள், பெரிய மகான்களை ஆணையிட்டு அழைக்கக்கூடாது, தானே சென்று தரிசனம் செய்தால் மிக்க நன்று என கூறினாள். உடனே ராணி மண்டோதரி, உங்கள் குரு வரும்பொழுது சொல்லுங்கள், தரிசனத்திற்கு நானே வருகிறேன் என்றாள். பிறகு பரமேஸ்வரர் மீண்டும் இலங்கை வந்தபோது ராணி மண்டோதரி அவரை தரிசனம் செய்து தீட்சை பெற்றாள். சில காலம் கழித்து தனது மைத்துனரான ஸ்ரீ விபீஷணனையும் தீட்சை பெறச் செய்தாள். தீட்சைக்கு பிறகு ராணி மண்டோதரி இறை பக்தியில் மூழ்கிப் போனாள். அவர் தனது கணவர் ராவணனிடம் சத்குரு முனிந்தரிடம் தீட்சை பெறுமாறு பலமுறை வேண்டினாள். ஆனால் ராவணன் அதை ஏற்கவில்லை, பதிலுக்கு, மகா சக்தியான சிவனின் பக்தியை செய்தேன். அவருக்கு நிகரான சக்தி எதுவும் இல்லை. உன்னை யாரோ ஏமாற்றி விட்டார்கள் என கூறினான்.

சில காலம் கழித்து, ராவணன் சீதையை கடத்தி வந்து தனது தோட்டத்தில் அடைத்து வைத்தார். மண்டோதரி பலமுறை வேண்டிய பிறகும் சீதையை திரும்பி விட்டு வர ராவணன் ஏற்கவில்லை. அப்போது மண்டோதரி தனது குரு முனிந்தரிடம் வேண்டினாள், குருவே! என் கணவர் ஒரு பெண்ணைக் கடத்தி வந்துள்ளார். என்னால் சகிக்க முடியவில்லை, அவளை திருப்பி விட்டுவர அவர் சம்மதிக்கவில்லை. கருணை காட்டுங்கள் ஆண்டவரே, என் வாழ்வில் இப்படி ஒரு துன்பத்தை பார்த்ததே இல்லை என்றாள்.

பரமேஸ்வர் முனிந்தர் சொன்னார், மண்டோதரி! இது சாதாரண பெண் அல்ல, ஒரு சாபத்தால் ஸ்ரீ விஷ்ணு பூமிக்கு வர வேண்டியிருந்தது. அவர் தசரதனின் மகன் ராமச்சந்திரர் ஆவார். அவர் அயோத்தியில் வசிப்பவர், 14 ஆண்டுகள் வனவாசம் செய்யப்பட்டார், சீதை வடிவில் ஸ்ரீ லக்ஷ்மி அவரது மனைவியாக வனவாசத்தில் இருக்கிறார். ராவணன் சாது ரூபத்தில் அவளை ஏமாற்றி கடத்தி வந்துள்ளான். லக்ஷ்மியே தான் இந்த சீதை, உடனே அவளை திருப்பிக் கொடுத்து, உயிர் பிச்சை கேட்டால் ராவணனுக்கு நன்மை என்றார்.

மண்டோதரி பலமுறை சொல்லியும் ராவணன் கேட்கவில்லை. பதிலுக்கு, “காட்டில் சுற்றும் அந்த இரண்டு கோமாளிகள் என்னை என்ன

செய்ய முடியும்? என்னிடம் எண்ணற்ற படைகள் உள்ளன, ஒரு லட்சம் புத்திரர்களும் லட்சகணக்கில் உறவினர்களும் உள்ளனர். என் மகன் மேகநாதன் சொர்க்கத்தின் அரசன் இந்திரனை தோற்கடித்து அவனது மகளை திருமணம் செய்து கொண்டான். 33 கோடி தேவர்களைச் சிறைபிடித்து உள்ளோம். நீ அந்த நாதியற்ற இரண்டு காட்டுவாசிகளைக் கடவுள் என்று சொல்லி என்னை பயமுறுத்துகிறாயா. நான் (சீதையை) அந்தப் பெண்ணை திரும்ப அனுப்ப மாட்டேன் என்றான்.

மண்டோதரி, குருவிடம் தான் கற்ற பக்தி மார்க்கத்தின் ஞானத்தை ராவணனுக்கு விளக்கினாள், விபீஷணனும் விளக்கினார். ராவணனோ விபீஷணனை அடித்து, ராமனுக்கு சாதகமாக பேசுகிறாய், அவனிடமே சென்று விடு என்றான். ஒரு நாள் மண்டோதரி தனது குருவிடம், "குருவே, எனது மாங்கல்யம் ஆபத்தில் உள்ளது. நீங்கள் ஒரு முறை அவருக்கு அறிவுறுத்துங்கள். அவர் கேட்கவில்லை என்றால் பிறகு நான் விதவை ஆனாலும் எனக்கு கவலை இல்லை என்றாள்.

பரமேஸ்வரர், மண்டோதரியின் வேண்டுதலை ஏற்று, ராவணனின் அரசவை முன் நின்று, ராவணனை சந்திக்க அனுமதிக்குமாறு காவலர்களிடம் கோரினார். அவையில் முக்கிய கூட்டம் நடப்பதாகவும் செய்திகளை உள்ளே அனுப்ப இயலாது என்றும் காவலர்கள் கூறினார்கள். உடனே பரமேஸ்வரர் அங்கிருந்து மறைந்து, ராவணனுடைய அவைக்குள் தோன்றினார். அவரைப் பார்த்து வெகுண்ட ராவணன், அவரை அனுமதித்த காவலரைக் கொல்ல உத்தரவிட்டான். பிறகு பரமேஸ்வரர் சொன்னார், "அரசனே, உங்கள் காவலர் அனுமதிக்கவில்லை, நான் எப்படி வந்தேன் என்று அவர்களுக்குத் தெரியாது" என்றார். பிறகு ராவணன், எப்படி உள்ளை வந்தாய்? என்று கேட்டான். அப்போது பரமேஸ்வர் முனிந்தர் மறைந்து மீண்டும் தோன்றி காட்டினார். ராவணன் வந்ததற்கான காரணத்தைக் கேட்டான். அப்போது பரமேஸ்வரர், "நீ வீரனாக இருந்து ஒரு பெண்ணைக் கடத்தி வந்துள்ளாய். உன் மரியாதைக்கும் வீரத்திற்கும் இது அழகல்ல. இது சாதாரண பெண்ணல்ல, லக்ஷ்மியின் அவதாரம். இவள் கணவர் ராமனும் விஷ்ணுவின் அவதாரம். சீதையை திருப்பி அனுப்பி விட்டு, நீ மன்னிப்பு கேட்டால் தான் உனக்கு நன்மை" என்று கூறினார். இதைக் கேட்டு, தமோகுணம் (சிவனின்) வழிபாட்டாளரான ராவணன் கோபத்தில், வாளுடன் சிம்மாசனத்தில் இருந்து குதித்து பரமேஸ்வரரை கொல்ல எழுபது முறை கண்மூடித்தனமாக வாளை வீசினான்.

முனிந்தர் வடிவில் இருந்த பரமேஷ்வர் கையில் துடைப்பத்தின் மெல்லிய குச்சியை பிடித்து நின்றார். ராவணன் எழுபது முறை அந்த குச்சியின் மீது வாளை அடித்தான். இரும்புத் தூணில் வாள் அடிப்பது போல் சத்தம் கேட்டது, ஆனால் குச்சி கொஞ்சம் கூட அசையவில்லை. களைத்துப்போன ராவணன் இவர் சாதாரண ரிஷி அல்ல என்று உணர்ந்தான். அப்போதும் ஆணவத்தால் சம்மதிக்கவில்லை. உங்கள் பேச்சை நான் கேட்கப் போவதில்லை, நீங்கள் போகலாம் என்று கூறினான். பரமேஸ்வரர் அங்கிருந்து மறைந்து, மண்டோதரியிடம் சென்று அனைத்தையும் கூறினார். ராணி மண்டோதரி தான் இனி விதவை ஆனாலும் கவலை இல்லை என்றாள்.

ஸ்ரீ ராமருக்கும் ராவணனுக்கும் போர் நடந்தது. ராவணன் கொல்லப்பட்டான். ராவணன் 10 முறை தனது தலையை வெட்டி தமோகுணக் கடவுள் சிவபெருமானுக்கு அர்ப்பணித்து கடினமான

வழிபாடுகளால் பெற்ற இலங்கையின் ராஜ்ஜியம் நொடியில் போய்விட்டது, பிறகு நரகத்திற்கு ஆளானான். மறுபுறம், சத்நாம் உடைய ஜபம் செய்த விபீஷணன், கடினமான வழிபாடுகள் செய்யாமல், பரம பிதாவின் அருளால் இலங்கை ராஜ்ஜியத்தைப் பெற்றான். விபீஷணன் பல்லாயிரம் ஆண்டுகள் இலங்கையை ஆண்டு அனுபவித்தான், இறைவனின் அருளால் ராஜ்யத்தில் பெரும் அமைதி நிலவியது. அசுர குணம் கொண்ட அனைவரும் அழிந்தன. மண்டோதரியும், விபீஷணனும், சந்திரவிஜயன் குடும்பத்தைச் சேர்ந்த 16 பேரும், மற்ற சிலரும் பரமேஸ்வரரிடம் தீட்சை பெற்று, சத்ய பக்தி செய்து இறுதிவரை பூமியில் சுகமாக வாழ்ந்து, கடைசியில் பரமேஸ்வரரின் விமானத்தில் அமர்ந்து சத்யலோகம் சென்றனர். அதனால்தான் புனித கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 12 முதல் 15 வரையில், மூன்று குணங்களின் (ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன்) வழிபாட்டால் கிடைக்கும் சுகங்களால் அறிவிழந்தவர்கள் அசுர குணம் கொண்ட தீயவர்கள், முட்டாள்கள் என்னை (கால் – பிரம்) வழிபடுவதில்லை என்று கூறப்பட்டுள்ளது.

பின்னர் கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18 இல், கீதையை அருளிய பிரபு (கால், பிரம்), தத்வதரிஷி குரு கிடைக்காத சில ஆன்மாக்கள் என்னை (பிரம்) மட்டுமே வழிபடுவார் என்று கூறுகிறார். அந்த புண்ணிய ஆன்மாக்களும் என்னுடைய (அனுத்தமாம்) மிகவும் தாழ்ந்த மட்டமான (கதி) முக்தியை சார்ந்து இருக்கிறார்கள், அவர்களுக்கும் பூரண முக்தி இல்லை. அதனால்தான் புனித கீதை அத்தியாயம் 18 ஸ்லோகம் 62ல், அர்ஜுனா! நீ ஒருமனதுடன் அந்த பரமேஸ்வரரின் (பூரண பரமாத்மா) அடைக்கலத்தை நாடு, அவருடைய அருளால் மட்டுமே நீ பரம சாந்தியும் சத்யலோகத்தையும் அடைவீர் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, புண்ணிய ஆன்மாக்களிடம் ஒரு வேண்டுகோள். இன்று பரமாத்மாவின் உண்மையான வழிபாட்டு முறை இந்த தாசனிடம் உள்ளது, இலவசமாக தீட்சை பெற்று பலன் பெறுங்கள்.

## துவாபரயுகத்தில் இந்திரமதியை சரணாகதியாக ஏற்றுதல்

துவாபரயுகத்தில் சந்திரவிஜய் என்ற அரசன் இருந்தான். அவருடைய மனைவி இந்திரமதி ஆன்மீக சிந்தனை கொண்ட பெண். சாதுக்களையும் மகாத்மாக்களையும் அதிகம் மதிப்பவர். அவருக்கு ஒரு குரு இருந்தார். அந்த குரு அவளிடம், "மகளே, மகான்களுக்கும் சாதுக்களுக்கும் சேவை செய்து, உணவு அளித்தால், பல நன்மைகள் கிடைக்கும் என்றார். குரு கூறியபடி அவளும் ஏகாதசி விரதம், மந்திர ஜபம், ஆகிய இறைவழிபாட்டில் தீவிரமாக ஈடுபட்டாள். சாதுக்களுக்கு உணவு அளித்தால், அடுத்த பிறவியிலும் ராணியாகி, சொர்க்கத்தைப் பெறுவாய் என்று அந்த குரு கூறினார். எனவே இது மறக்காமல் இருக்க தினமும் ஒரு சாதுவிற்கு உணவளித்த பின்னரே உணவு உண்பேன் என்று மனதில் உறுதிகொண்டாள். ஒவ்வொரு நாளும் ராணி, முதலில், ஒரு சாதுவிற்கு உணவு அளித்த பிறகே தான் உணவை உண்பாள். இப்படி பல ஆண்டுகளாக தொடர்ந்தது.

ஒருமுறை ஹரித்துவாரில் கும்பமேளா கூடியது. அனைத்து சாதுக்களும் கங்கையில் நீராச் சென்றுவிட்டார்கள். இதனால் ராணிக்கு அன்னதானம் கொடுக்க எந்த சாதுவும் கிடைக்கவில்லை. ராணியும் சாப்பிடாமலேயே இருந்தாள். நான்காவது நாள், ராணி தன் பணிப் பெண்ணிடம், யாராவது சாது தென்பட்டால் அழைத்துவா,

இல்லையென்றால், நான் உணவு உண்ணாது இறந்து போவேன் என்று சொன்னாள். கபீர் பரமேஸ்வர் தனது பூர்வ ஜென்ம பக்தையை தன்னிடம் சரண் அடைய வைக்க என்னென்ன லீலைகள் செய்கிறார்! பணிப்பெண் மாளிகையின் மாடியிலிருந்து தொலைவில் வெள்ளை நிற ஆடையில் ஒரு சாதுவை கண்டாள். துவாபர யுகத்தில் கபீர் பரமேஸ்வர் கருணாமய என்ற பெயரில் வந்தார். பணிப்பெண் ஓடிவந்து ராணியிடம் கூறினாள். ராணி உடனே அவரை அழைத்துவரச் சொன்னாள். பணிப்பெண் வெளியில் சென்று அந்த சாதுவிடம், ராணி உங்களை அழைக்கிறார்கள் என்று சொன்னாள். கருணாமய சாகேப் பணிப்பெண்ணிடம், ஏன் ராணி என்னை அழைக்கவேண்டும் என கேட்டார். பணிப்பெண் அனைத்து விவரத்தையும் கூறினாள். கபீர் சாகேப், ராணிக்கு தேவைப்பட்டால் அவள் இங்கே வரட்டும் என்றார். மேலும் நீ ஒரு பணிப்பெண் அவள் ராணி, நான் அங்கு வந்த பிறகு ராணி அல்லது ராஜா உன்னை யார் அழைத்தது என்று சொன்னால், மகளே, மகான்களை அவமதிப்பது மகா பாவமாகும். பணிப்பெண் ராணியிடம் வந்து விவரத்தை சொல்ல, ராணி பணிப்பெண்ணின் உதவியுடன் சென்று, அவர் பாதகமலங்களில் விழுந்து, கடவுளே! உங்களை தோளில் சுமந்து கொண்டு செல்ல விரும்புகிறேன்ஆனால் முடியவில்லை என்று வணங்கி, அழைத்து செல்ல வேண்டினாள். உனக்கு பணிவும் பக்தியும் இருக்கிறதா என்று பரிசோதிக்கவே நான் அப்படி சொன்னேன் என்று கருணாமய சாஹேப் கூறினார். ராணி அவரை அழைத்து வந்து, தானே உணவை சமைத்தாள். கருணாமய ரூபத்தில் வந்த கவிர்தேவ், தான் உணவு உண்பதில்லை, தனது உடல் வேறுபட்டது ஆகாரம் தேவையில்லை என்றார். ராணியும் சாப்பிட மறுத்துவிட்டாள். எனவே பிறகு கருணாமய சாகேப் உணவு உண்டார். பிறகு கருணாமய சாகேப் ராணியிடம், இந்த வழிபாடு யார் உனக்குச் சொன்னது? என்று கேட்டார். தனது குருவின் உத்தரவு என்று ராணி கூறினாள். கருணாமய சாகேப் வேறு என்ன சொன்னார் என்று கேட்டார். ராணி சொன்னாள், பிரம்மா விஷ்ணு சிவன் ஆகியோரின் பூஜைகள், ஏகாதசி விரதம், புனித யாத்திரை, சிரார்த்தம், கோவிலுக்குச் செல்வது மற்றும் சாதுக்களுக்கு சேவை செய்ய சொன்னார் என்றாள். பிறகு கருணாமய (கபீர் சாகேப்), உன்னுடைய குரு அளித்த வழிபாட்டால், நீ பிறப்பு இறப்பு, சொர்க்கம் நரகம் மற்றும் 84 லட்சம் உயிரினங்களின் துன்பங்களிலிருந்து விடுபட முடியாது என்றார். உடனே ராணி, மகாராஜ் ஜி, எல்லா சாதுக்களும் தன் புகழையே பாடுவார்கள், எனது குருவைப் பற்றி பேசாதீர்கள், எனக்கு முக்தி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை என்று பதில் அளித்தாள்.

இந்த அப்பாவி ஜீவனை திருத்த முடியாது என்று நினைத்து கருணாமய (கபீர்) சாஹிப் சொன்னார், மகளே, நான் உன் குருவை இகழவில்லை, உண்மையான பக்தி மார்க்கத்தைக் விளக்குகிறேன், சாஸ்திரத்திற்கு எதிரான இந்த பக்தி உன்னைக் கரை சேர்க்காது, உனக்கு வரும் துன்பங்களையும் நீக்காது, மேலும் கேட்டுக்கொள், இன்று முதல் மூன்றாவது நாள் நீ இறந்துவிடுவாய் அதற்கு மேல் உனக்கு ஆயுள் இல்லை. உன் குருவாலும், உனது தவறான பக்தியாலும் உன்னை காப்பாற்ற முடியாது என்றார். சாது சொன்னால் உண்மையாகதான் இருக்கும் என்று ராணி பயந்தாள். என் உயிரை காப்பாற்ற முடியுமா என்று கேட்டாள். (மரணம் நெருங்கும்போது தான் மனதிற்கு பயம் வருகிறது, இல்லையென்றால் கேட்பதில்லை). கபீர் சாஹிப் (கருணாமய), நீ தீட்சை பெற்று முந்தைய பக்தியை கைவிட்டால் பிழைக்கலாம் என சொன்னார். குருவை மாற்றுவது

பாவமல்லவா என இந்திரமதி வினவ, கபீர் சாஹிப் (கருணாமய) சொன்னார், “மகளே, இதுவும் உனது பிரம்மை, ஒரு மருத்துவரால் முடியவில்லை என்றால் மற்ற மருத்துவரிடம் செல்வதில்லையா? ஐந்தாம் வகுப்புக்கு ஒரு ஆசிரியர் இருப்பார், மேல் வகுப்புகளில் வேறு ஆசிரியர்கள் இருப்பார்கள், வாழ்நாள் முழுவதும் ஐந்தாம் வகுப்பிலேயே இருப்பாயா? நீ இதை விட்டு மேல் வகுப்புக்கு செல்லவேண்டும், நான் உனக்கு கற்பிக்க வந்துள்ளேன் என்றார். ராணி ஏற்கமாட்டாள், ஆனால் மரணம் நெருங்கியதால் ஒப்புக்கொண்டாள். கருணாமய (கபீர்) சாஹிப் இந்திரமதிக்கு தீட்சை அளித்து, பிறகு சொன்னார், ”மூன்றாம் நாள் என் ரூபத்தில் காலன் வருவான். நீ பேச வேண்டாம், நான் அளித்த மந்திரத்தை இரண்டு நிமிடங்கள் உச்சரித்த பிறகு, அவனை வணங்கவேண்டும், பொதுவாக குரு வந்தவுடன் அவர் பாதங்களில் பணிய வேண்டும், ஆனால் இந்த முறைக்கு மட்டுமே இந்த உத்தரவு என்றார். ராணி சரி என்றாள்.”

ராணி கவலையில் பக்தியுடன் ஜபம் செய்துகொண்டே இருந்தாள். காலன், கருணாமய (கபீர் சாஹிப்) வேஷத்தில் குரு ரூபத்தில் வந்து இந்திரமதி, இந்திரமதி என்று அழைத்தான். பயந்திருந்த இந்திரமதி, காலனை பார்க்காமலேயே மந்திரத்தை ஜபித்துக்கொண்டே இருந்தாள். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு பார்த்தபோது குரு வேஷத்தில் வந்த காலனின் ரூபம் தனது நிஜ ரூபமாக மாறியது. தனது ரூபம் மாறியதை கண்ட காலன், இந்திரமதியிடம் மிக பெரிய சக்தி இருந்ததை உணர்ந்து, இன்று தப்பித்துவிட்டாய், உன்னை பிறகு பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி அங்கிருந்து சென்றுவிட்டான். ராணி மகிழ்ச்சியில், தன் பணிப் பெண்களிடமும், அரசனிடமும், தன் குருநாதர் தன்னை மரணத்தில் இருந்து காப்பாற்றி விட்டதாகக் கூறினாள். அரசன் சொன்னான், “அரசி, காலன் வந்திருந்தால் உன்னை விட்டு வைத்திருப்பானா? நீ நாடகம் ஆடுகிறாய்”, எல்லா சாதுக்களும் இப்படித்தான் சொல்லி ஏமாற்றுவார்கள்” என்றார். பிறகு ராணி தன் படுக்கை அறைக்குச் சென்றுவிட்டாள். சிறிது நேரம் கழித்து, அந்தக் காலன் பாம்பு வடிவில் வந்து ராணியைத் தீண்டினான். ராணி கூச்சலிட, அனைவரும் ஓடி வந்து பார்த்தபோது, பாம்பு டிச்சி வழியாக ஓடிவிட்டது. தன் குருவை வேண்டிக்கொண்டே ராணி மயங்கிவிட்டாள். பிறகு கருணாமய (கபீர்) சாஹிப் அங்கு தோன்றினார். மக்களுக்கு காட்டுவதற்காக மந்திரம் ஓதி இந்திரமதியை உயிர்ப்பித்தார். உயிர் பெற்ற ராணி “இன்று உங்கள் அடைகலத்தில் இல்லாவிட்டால் நான் இறந்திருப்பேன்” என்று நன்றி கூறினாள். கபீர் பரமேஸ்வர் இந்திரமதியிடம் சொன்னார், நான் இந்தக் காலனை உன் வீட்டுக்குள் நுழையக் கூட விடமாட்டேன். அவன் உன்னை தாக்கி இருக்க மாட்டான், ஆனால் நீ என்னை நம்பியிருக்க மாட்டாய். எந்த ஆபத்தும் இல்லை, குருநாதர் ஏமாற்றி தீட்சை கொடுத்தார் என்று நினைத்திருப்பாய். எனவே, உனக்கு சிறிய அதிர்ச்சியை கொடுத்தேன். இல்லையெனில் மகளே, உனக்கு நம்பிக்கை வந்திருக்காது” என்று கூறினார்.

தர்மதாஸ் யஹான் கனா அந்தேரா, பின் பரிசய் ஜீவ் ஜம் கா சேரா //

இனி நான் விரும்பும்போது தான் உனக்கு மரணம் சம்பவிக்கும் என்று கபீர் பரமேஸ்வர் (கருணாமய) சொன்னார். கரீப்தாஸ் ஜி கூறுகிறார்:–

கரிப், கால் டரே கர்தார் சே, ஜெய ஜெய ஜெய ஜகதீஷ் //
ஜௌரா ஜௌரி ஜாடதி, பக் ரஜ் டாரே ஷீஷ் //

பொருள்: இந்த காலன் கபீர் பரமேஸ்வரருக்கு பயப்படுகிறான்.

மரணம் என்பது, கபீர் சாகேப் உடைய காலடி தூசிகளை தலையில் பூசி, இனி உங்கள் பக்தர்களிடம் வர மாட்டேன் என வேண்டுகிறது.

கரீப், கால் ஜோ பீசை பீஸ்னா, ஜௌரா ஹை பனிஹார்/
யே தோ அசல் மஞ்சூர் ஹைன், மேரே சாகெப் கே தர்பார் //

பொருள்: இந்தக் காலன் (பிரம்) 21 பிரபஞ்சங்களின் கடவுள் மற்றும் பிரம்மா, விஷ்ணு, சிவனுக்குத் தந்தையாவார். இவர் எனது கபீர் பகவானின் வேலைக்காரன் மற்றும் மரணம் என்பது வேலைக்காரி. இந்த இருவரும் எனது கபீர் பரமேஸ்வரரின் சபையின் வேலைக்காரர்கள்.

பிறகு சில காலம் கழித்து கருணாமய சாகேப், இந்திரமதியின் ஈடுபாட்டைக் கண்டு சார்நாம் (3வது மந்திரம்) அளித்தார். கபீர் பரமேஸ்வரர் அவ்வப்போது வரும் போதெல்லாம், இந்திரமதி தன் கணவனான அரசனுக்கும், அறிவுரை அருள் பிரார்த்தித்தார். கபீர் சாஹேப் சந்திரவிஜய்யிடம், நீங்களும் தீட்சை எடுத்துக் கொள்ளுங்கள், இந்த ராஜ பதவி சிறிது காலம்தான், பிறகு 84 லட்சம் உயிரினங்களில் பிறக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். சந்திரவிஜய் அரசன், தெய்வமே, நான் இந்திரமதியை தடுக்க மாட்டேன், உங்கள் சிஷ்யை எவ்வித சத்சங்கம் செய்தாலும் எவ்வளவு தானம் செய்தாலும் நான் மறுக்க மாட்டேன். ஆனால் நான் தீட்சை எடுக்க மாட்டேன், ஏனென்றால், நான் பெரிய பெரிய அரசர்களின் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும் என்றார். பிறகு கபீர் சாஹேப் ஜி (கருணாமய) கேட்டார், “கூட்டங்களில் கலந்து கொண்டால் என்ன? அங்கு பால் பழரசம் அருந்துங்கள் மது அருந்த வேண்டாம், மது அருந்துவது பெரும் பாவம்” என்றார். ஆனால் அரசன் கேட்கவில்லை.

ராணியின் வேண்டுகோளுக்காக, கருணாமய (கபீர்) சாஹேப் மீண்டும் மன்னரிடம், தீட்சை பெறாமல் வாழ்க்கை வீணாகிவிடும், நீங்கள் தீட்சை எடுத்துக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினார். மன்னர் மீண்டும், குருவே, இனி என்னை தீட்சைக்காக கட்டாயப்படுத்தாதீர், இந்திரமதியை நான் தடுக்கமாட்டேன் என்று சொன்னார். பிறகு கபீர் பரமேஸ்வரர் சொன்னார், மகளே! இந்த இருநாள் வாழ்க்கை சுகத்தை கண்டு இவனுக்கு புத்தி கெட்டுவிட்டது, நீ இறைவனை வழிபட்டு முக்தி அடைய பார். இங்கு யாரும் கணவனோ மனைவியோ இல்லை, எல்லாம் சிறிய காலம் உறவு தான் என்றார். பிறகு இந்திரமதி 80 வயது மூதாட்டியானவுடன் (40 வயதில் இறந்திருக்க வேண்டியது), கருணாமய சாகேப் வந்து இந்திரமதியிடம், “சத்யலோகம் செல்ல தயாரா? அல்லது பேரன் பேத்தியில் இன்னும் ஆசை மோகம் உள்ளதா” என்று கேட்டார். அதற்கு ராணி, ”கடவுளே நான் தயாராக உள்ளேன், இந்த கெட்ட உலகத்தில் ஆசைப்பட ஒன்றும் இல்லை, அப்படிப்பட்ட ஞானத்தை வழங்கியுள்ளீர்கள்”, என்று சொல்லி ராணி இறந்து விட்டாள். பரமேஸ்வர் கபீர் (கருணாமய), இந்திரமதியின் ஆன்மாவை மேலே பிரபஞ்சத்தில் உள்ள ஓர் அமுத குளத்திற்கு கொண்டு சென்றார். அங்கு ஆன்ம நீராட வேண்டி இருக்கும். கபீர் பரமேஸ்வர் குரு வடிவில் தோன்றி, உயிரினத்தை சிறிது நேரம் அந்த அமுத குளத்தில் வைத்திருப்பார். பிறகு கபீர் பரமேஸ்வர், இந்திரமதியிடம், உன் மனதில் ஏதாவது ஆசை இருந்துவிட்டால், நீ மீண்டும் பிறப்பாய், சத்யலோகத்திற்கு செல்ல முடியாது என்றார். அப்போது இந்திரமதி, “குருவே நீங்கள் எல்லாம் அறிந்தவர், எனக்கு எந்த ஆசையும் இல்லை, ஒரே ஒரு குறை உள்ளது, என் கணவர் என்னை ஒருபோதும் பக்திக்கு மறுத்ததில்லை. இல்லையெனில், இன்றைய கணவர்கள் அனுமதிப்பதில்லை. ஒரு வேளை அவர் என்னை

மறுத்திருந்தால் இன்று நான் உங்கள் சரணடியில் வந்திருக்கமாட்டேன். எனவே, அவர் உதவியதற்கு ஏதாவது பலன் இருந்தால், கடவுளே அவர்மீதும் கருணை காட்டுங்கள்” என்று கூறினாள். கபீர் பரமேஸ்வர், அவள் கணவனின் மோகத்தில் இருப்பதை கண்டு, மகளே, சில வருடங்களுக்கு நீ இங்கேயே இரு என்றார்.

பிறகு இரண்டு வருடங்கள் கழித்து, ராஜாவுக்கு மரணம் நெருங்கியது, எமனின் தூதர்கள் வந்தார்கள். மன்னன் சபையில் மயங்கி விழுந்தான். எமனின் தூதர்கள் அவன் கழுத்தை நெறிக்க, மல மூத்திரம் வெளியேறியது. கருணாமய (கபீர்) சாஹிப், ராணியிடம் சொன்னார், பக்தி செய்யாத அரசனின் நிலையை பார் என்று சொல்லி அங்கிருந்து காட்டினார். இதைப் பார்த்த இந்திரமதி, கருணை காட்டுங்கள் என வேண்டினாள். கபீர் சாகேப் (கருணாமய) அவள் கணவனின் மோகத்தால் மீண்டும் காலனின் வலையில் சிக்கிவிடுவாள் என்று நினைத்து, மன்னர் மயங்கி கிடந்த இடத்திற்கு சென்றார். கபீர் சாகேப் வந்தவுடன், எமனின் தூதர்கள் கழுகுகள் போல பறந்து ஓடிவிட்டன. பிறகு சந்திரவிஜய்க்கு சுயநினைவு வந்தது, சந்திரவிஜயனுக்கு மட்டுமே கபீர் சாஹிப் தெரிந்து கொண்டிருந்தார், வேறு யாருக்கும் தெரியவில்லை. சந்திரவிஜயன் காலில் விழுந்து, என்னை மன்னித்துவிடுங்கள், என் உயிரைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்ச ஆரம்பித்தார். கபீர் சாகேப், ”ராஜா, அன்றும் இதேதான், இன்றும் இதேதான், தீட்சை எடுத்து பக்தி செய்ய வேண்டும்” என்றார். ராஜா, ஒப்புக்கொள்ள, கபீர் சாகேப் தீட்சை அளித்து, இப்போது உனக்கு மேலும் இரண்டு வருட ஆயுளைத் தருகிறேன், இதில் ஒரு மூச்சு கூட ஜெபிக்காமல் காலியாக போனால் தண்டனை நிச்சயம் என்று கூறினார்.

கபீர், ஜீவன் தோ தோடா பலா, ஜை சத் சுமரண் ஹோ /
லாக் வர்ஷகா ஜீவ்னா, லேகே தரே நா கோ //

சுப காரியங்களில் உதவிய புண்ணியமும், இரண்டு வருட பக்தியையும் சேர்த்து, மூன்று மந்திரங்களையும் கொடுத்து, கபீர் சாகேப் சந்திரவிஜய்யை கரை சேர்த்தார். அவருடைய மகிமையே மகிமை.

கபீர் பரமேஸ்வர், உண்மையான பக்தனின் ஆயுளை நீட்டித்து அவனது குடும்பத்தையும் காப்பார் என்பது மேலுள்ள விவரங்களிலிருந்து தெரிகிறது. இந்த நிகழ்வு முந்தைய காலத்தில் நடந்தது, இன்று சாதாரண மனிதன் நம்புவதில்லை. தற்போது, பரமேஸ்வரர் கபீரின் அருளால், இந்த தாஸ் (ராம்பால் ஜி மூலம் துன்பங்கள் நீங்கி ஆயுள் அதிகரித்த பல பக்தர்களின் ஆதாரங்களை ”பரமேஸ்வர் கா சார் சந்தேஷ்” என்ற புத்தகத்தில் படியுங்கள்.

## புனித புராணங்களின் ரகசியம்

புராணங்களில், பிரம்மா புராணம், விஷ்ணு புராணம் மற்றும் சிவபுராணம் ஆகியவை பிரம்ம காலன் உடைய லீலையிலிருந்து தொடங்குகிறது என்பதை நினைவு கொள்ளுங்கள். கீதை அத்தியாயம் 7 ஸ்லோம் 25 இல், இதை முதல் அவ்யக்தம் (வெளிப்படாதவர் – புலப்படாதவர்) என்று சொல்லப்பட்டுள்ளது. கீதை அத்தியாயம் 11, ஸ்லோகம் 32 இல், “நான் தான் கால்” என்று கூறியுள்ளார். இவரை ஷர் புருஷ், ஜோதி நிரஞ்சன் என்றும், இவரே சதாசிவன், காலரூப பிரம் என்றும் அழைக்கப்படுகிறார். இதே பிரபஞ்சத்தில் ஒரு பிரம்மலோகத்தை உருவாக்கி அதன் மேல் பகுதியில் வசிக்கிறார்.

இவரே மகாவிஷ்ணு, மகாபிரம்மா, மஹாசிவன் என்றும் அழைக்கப்படுகிறார் மற்றும் அந்த பகுதி காசி என்றும் அழைக்கப்படுகிறது. அதில், ரஜோகுணம், சத்வகுணம் மற்றும் தமோகுணம் நிறைந்த மூன்று இடங்களை உருவாக்கி தன் மனைவி துர்க்கையை (மகா லஷ்மியை) தன்னுடன் வைத்து, ரஜோகுணம் ஸ்ரீ பிரம்மா, சத்வகுணம் ஸ்ரீ விஷ்ணு, தமோகுணம் ஸ்ரீ சிவன் என மூன்று மகன்களை உருவாக்கி அவர்களை மயக்கமடையச் செய்கிறார். மயக்க நிலையில் அவர்களை வளர்த்து, இளமையானவுடன், ஸ்ரீ பிரம்மாவை தாமரை மலர் மீதும், விஷ்ணுவை சேஷ நாகம் மீதும், சிவனை கைலாச மலை மீதும் வைத்து சுயநினைவை கொடுக்கிறார். இந்த மூவருக்கும் தன்னை படைத்தது யார்? என்றே தெரியாது. இதே பிரம்ம காலன் தான் விஷ்ணு வடிவில் வந்து, தனது தொப்புளில் இருந்து தாமரையை உருவாக்கி, அதில் பிரம்மாவை அமர்த்தி சுயநினைவு அடைய செய்கிறார். இவர் விரும்பும் போதெல்லாம் ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன் போன்ற வடிவங்களை எடுத்துக்கொண்டு காட்சியளிக்கிறார். இந்த காலன், பகவத் கீதையை அருளும் போது காட்டிய இயல்பான உருவத்தை ஒருபோதும் வெளிப்படுத்துவதில்லை. கீதை அத்தியாயம் 10 மற்றும் 11 இல் ஆதாரம் உள்ளது. கீதை அத்தியாயம் 11 ஸ்லோகம் 47, 48 இல், அர்ஜுனா! என்னுடைய இந்த இயல்பான கால ரூபத்தை உன்னைத் தவிர வேறு யாரும் இதற்கு முன் பார்த்ததில்லை, எதிர்காலத்திலும் யாராலும் பார்க்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது. உன்மீது கருணை கொண்டு காண்பிக்கிறேன். என்னுடைய இந்த ஆயிரம் கரங்களும் ஆயிரம் கண்களும் கொண்ட இந்த கால ரூபத்தை, வேதங்களில் உள்ள முறைகளாலோ அல்லது ஓம் மந்திர ஜபம் அல்லது தவம் போன்ற முறைகளாலோ ஒருபோதும் பார்க்க முடியாது. வேதங்களில் உள்ள முறையால் இறைவனை அடைய முடியாது என்பதே இதன் பொருள். அதனால்தான் ரிஷிகளும் மகரிஷிகளும், வேதங்களில் உள்ள “ஓம்” மந்திரத்தை இறை வழிபாடாக நினைத்து, இறைவனை அடைய யாகம் மற்றும் ஓம் மந்திரத்தின் தீவிர வழிபாடு செய்தார்கள், ஆனால் “பிரம்ம காலனின்” தரிசனம் கிடைக்கவில்லை. சிலர் தாமரைகளில் ஒளியை கண்டார்கள், சிலர் உடலில் ஜோதியை கண்டார்கள் மற்றும் ஒலியை கேட்டனர், இது காலனின் (பிரம்) தந்திரமாகும். சிலர் ஆயிரம் தாமரைகளின் ஜோதிகளின் ஒளியைக் கண்டு இறைவன் என ஏற்றுக்கொண்டனர். அதாவது ஒரே நிறத்தில் ஆயிரக்கணக்கான பல்புகள் ஒன்றாக ஒளிர்வது போல, தூரத்திலிருந்து பார்த்தால் மிக பெரிய ஒரே ஒளியாக தெரியும், அருகில் சென்று பார்த்தால் பல்புகளின் ஒளி என்று தெரியும். இதேபோல், சில சாதகர்கள் கடின யோகம் செய்து உடலுக்குள் தியானம் செலுத்தி, சில அதிசயங்களை கண்டு கடவுளை அடைந்ததாக நினைக்கின்றன. இதையே பேரின்பமாகக் கருதி விலைமதிப்பற்ற மனித வாழ்க்கையை வீணடிக்கிறார்கள். வேதத்தில், இறைவன் உருவம் கொண்டவர் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. யஜுர் வேதம் அத்தியாயம் 1, ஸ்லோகம் 15, மற்றும் அத்தியாயம் 5, மந்திரம் 1 இல் ஆதாரம் உள்ளது:-

அக்$_3$னே தநுர் அசி / விஷ்ணவே த்வா சோமஸ்ய தநுர் அசி /

பொருள் : இறைவனுக்கு உடல் உள்ளது. அனைத்தையும் காக்கும் அந்த அழிவற்ற புருஷ் (சத்புருஷ்) சரீரம் கொண்டவர் அதாவது பரமாத்மா உருவம் கொண்டவர். அதனால்தான் ரிஷிகள் இறைவனைக் காண கடினமான சாதனைகள் செய்தனர். ஆனால் வேதங்களில்

உள்ள முறையால் இறைவனை அடைய முடியாது. அதனால் இன்று வரை அனைத்து பக்தர்களும், முனிவர்களும் தங்கள் அனுபவங்களை புத்தகமாக உருவாக்கியுள்ளனர், அது வேதத்திற்கு எதிரானது. இப்பொழுது அனைத்து பக்த சமூகம் புனித வேதங்களுக்குப் பதிலாக மகான்கள் ரிஷிகள் எழுதிய புத்தகங்களைதான் நம்பியுள்ளது.

புனித வேதங்கள் மற்றும் பகவத் கீதையை அருளிய பிரம்ம காலன், மூன்று குணங்களும் (ரஜோகுணம்-பிரம்மா, சத்வகுணம்-விஷ்ணு, தமோகுணம்-சிவன்) பூஜைக்கு உரியவர் அல்ல, ஏனெனில் இவர்கள் அழியக்கூடியவர்கள் மற்றும் கர்மவினை படிதான் பலனைத் தருவார், பாவத்தைப் போக்க மாட்டார்கள் என்று கூறுகிறார். அவர்களுடைய பக்தர்கள் முன்வினைப் பாவத்தை அனுபவித்தே ஆக வேண்டும். இந்த மூன்று கடவுள்களின் வழிபாட்டால் நிலையற்ற உலக இன்பங்கள் கிடைத்தாலும், பூரண முக்தி கிடைக்காது. இவர்கள் மூலம் பெறும் பலன்களில் நம்பிக்கை கொண்டவர்கள், அசுர குணம் கொண்டவர்கள், என்னை (கால்-பிரம்) வணங்குவது இல்லை (ஆதாரம், கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 12 முதல் 15 வரை), ஏனெனில் பிரம்ம காலன் உடைய சாதகன், பிரம்ம லோகத்தில் உள்ள மகா சொர்க்கத்தில் அதிக காலத்திற்கு இருக்கிறான். அதனால் தான் முக்குண தெய்வங்களை விட என்னால் அதிக பலன் கொடுக்க முடியும் என்று காலன் கூறுகிறார். ஆனால் இந்த பிரம்மலோகமும் காலனும் (பிரம்) அழியக் கூடியவர்களே. கீதை அத்தியாயம் 8 ஸ்லோகம் 16 இல், பிரம்மலோகம் வரை உள்ள அனைத்து லோகங்களும் அழியக்கூடியவை என்று கூறப்பட்டுள்ளது. மேலும் கீதை அத்தியாயம் 2, ஸ்லோகம் 12 மற்றும் அத்தியாயம் 4, ஸ்லோகம் 5 இல், பிரம் காலன், “எனக்கும் பிறப்பு இறப்பு உண்டு, நானும் அழியக் கூடியவன்” என்று தானே சொல்கிறான். கீதை அத்தியாயம் 7, ஸ்லோகம் 18 இல், நான்காம் வகையான என்னுடைய (பிரம்) ஞானி என்ற பக்தர்கள் வேதங்களின் ஞானத்தின் அடிப்படையில், பூரண பரமாத்மா ஒருவர் மட்டுமே பூஜிக்க தக்கவர், பாவங்களை அழிப்பவர் மற்றும் பூரண மோட்சத்தை கொடுப்பவர், மற்றும் மனித உடல் இறைவனை அடைய மட்டுமே என்பதை அறிந்து கொள்கிறார்கள். வேதங்களிலிருந்து கடவுளை அடைவதற்கான ஒரே மந்திரம் “ஓம்” என்று சுயமாக முடிவு செய்தனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இந்த “ஓம்” மந்திரத்தின் ஜெபத்தை செய்து தங்கள் உடலையும் தியாகம் செய்தனர். ஆனால் இறைவனின் தரிசனம் கிடைக்கவில்லை. சில சித்த சக்திகளை பெற்று, சொர்க்கம் மற்றும் மகாசொர்க்கத்தை அடைந்தனர். பிறகு புண்ணியங்கள் குறைந்து, மீண்டும் பிறப்பு-இறப்பும், 84 இலட்சம் உயிரினங்களின் துன்பங்களும், பாவ பலன்களின் துன்பமும் நரகத்தில் நீடித்தன.

புனித யஜுர்வேதம் அத்தியாயம் 40 மந்திரம் 10 மற்றும் புனித கீதை அத்தியாயம் 4 மந்திரம் 34 இல், மேற்கூறிய இரண்டு சாஸ்திரத்தின் ஞானத்தை வழங்கிய பிரம்ம காலன், அந்த பூரண பரமாத்மாவைப் பற்றி எனக்குத் தெரியாது என்று கூறுகிறார். மேலும் அந்த பரமேஸ்வரர் பற்றிய முழு தத்வஞானமும், அடையும் முறை அதாவது பூரண முக்திக்கான பாதையை பற்றி அறிய, தத்வதர்ஷி ஞானிகளை நாடி அவர்கள் சொல்லும் வழிபாட்டு முறையைச் செய்ய வேண்டும். அதன் பிறகு அந்த பரம ஸ்தானமும் பரமேஸ்வரரையும் நாட வேண்டும். அங்கு சென்ற சாதகன் மீண்டும் உலகத்திற்கு திரும்புவதில்லை அதாவது பூரண முக்தி அடைந்து பிறப்பு-இறப்பு மற்றும் 84 இலட்சம் உயிரினங்களின் துன்பங்கள் மற்றும்

நரகத் துன்பங்களிலிருந்து நிரந்தரமாக விடுபட்டு பரம சாந்தி அடைந்து அழிவற்ற லோகம் அதாவது சத்யலோகத்தை அடைகிறார். (ஆதாரம்: கீதை அத்தியாயம் 15, ஸ்லோகம் 1-4 வரை, அத்தியாயம் 18, ஸ்லோகம் 62 மற்றும் ரிக் வேதம் மண்டலம் 1, சூத்கம் 24, மந்திரம் 1-2)

தத்வதரிசி ஞானி கிடைக்காததால் வேதங்களின்படி வழிபாடு செய்த பிறகும் அனைத்து ரிஷிகளும் மகா துன்பங்களை அடைகின்றன.

எனவே, கீதை அத்தியாயம் 7 ஸ்லோகம் 18ல், ஞானி ஆன்மாக்கள் சிறந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் அவர்கள் வேதங்களின்படி உடலாலும் மனதாலும் கடவுளை அடைய வழிபடுகிறார்கள், ஆனால் அவர்களும் என்னுடைய (அனுத்தமாம்) தாழ்வான கதி (முக்தி), அதாவது என் வழிபாட்டால் பெறும் பலனை நாடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு பூரண மோட்சம் கிடைக்காது. கர்மவினையால் பிறப்பு-இறப்பு மற்றும் நரகத்தின் துன்பங்கள் ஒருபோதும் முடிவடையாது. ஒருபோதும் என்னுடைய உண்மையான காலனின் வடிவில் யாருக்கும் தரிசனம் கொடுக்க மாட்டேன் என்று ஜோதி நிரஞ்சன் (கால் பிரம்) சபதம் செய்துள்ளார். அதனால்தான் இந்த பிரம்ம காலன் தனது மகன்கள் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) வடிவில் தோன்றி பல்வேறு குணாதிசயங்களைக் காட்டுகிறார். இதனால் பக்தர்கள் இது விஷ்ணுவின் லீலை, பிரம்மாவின் லீலை மற்றும் சிவனின் லீலை என்றும் நம்புகிறார்கள். அதாவது ஸ்ரீ விஷ்ணுவின் தொப்புளில் உள்ள தாமரையின் மீது ஸ்ரீ பிரம்மா தோன்றினார் என்று சாதாரண பக்தர்கள் கூறுகிறார்கள். அந்த நேரத்தில், ஸ்ரீ விஷ்ணு வடிவத்தில், கால் தனது தொப்புளிலிருந்து ஒரு தாமரையை வெளிப்படுத்தினார்.

பிரம்மா புராணத்தில் (படைப்பின் விளக்கம் என்ற அத்தியாயத்தில்) ஸ்ரீ லோமஹர்ஷன் ரிஷி தனது குரு ஸ்ரீ வியாசர் ரிஷியிடம் பெற்ற ஞானத்தை கூறியுள்ளார். ஸ்ரீ வியாசர், ஸ்ரீ நாரதரிடம் இருந்து கேட்டறிந்தார் மற்றும் ஸ்ரீ நாரதர் தனது தந்தை ஸ்ரீ பிரம்மாவிடமிருந்து கேட்டறிந்தார். ஸ்ரீ பிரம்மாவிற்கு, அவர் எங்கிருந்து தோன்றினார் என்பது அவருக்கே தெரியாது (ஸ்ரீ தேவி மஹாபுராணம், மூன்றாம் ஸ்கந்தம்). புராணங்களின் ஞானம் தவறானது என்று அர்த்தமல்ல. ஸ்ரீ பிரம்மா சுயநினைவு பெற்ற பிறகு கூறிய ஞானம் சரியானது. ஆனால் அதற்கு முந்தைய காலத்தை பற்றி கூறிய ஞானம் தவறானது. பூரண பரமேஸ்வரர் முதல் சத்யுகத்தில் சத் சுக்ரித் என்ற பெயரில் தோன்றி தத்வதர்ஷி ரூபத்தில் ஸ்ரீ பிரம்மா மற்றும் ஸ்ரீ மனு போன்றவர்களுக்கு தத்துவ ஞானத்தையும் படைப்பு பற்றிய ஞானத்தையும் விளக்கினார். ஆனால் அவர்கள் கண்டுகொள்ளவில்லை. அதன்பிறகு, ஸ்ரீ பிரம்மாவிடம் அவரது சந்ததியினர் கேட்டபோது, அவர் கேள்விப்பட்டதன் அடிப்படையில் சிலவற்றைக் கலந்து கடந்த கால ஞானத்தை கூறியுள்ளார். இதனால் எந்த புராணத்திலும் தீர்க்கமான ஞானம் இல்லை. சில புராணங்களில் ஸ்ரீ பிரம்மாவிடமிருந்து ஸ்ரீ விஷ்ணு தோன்றினார் என்றும், சில புராணங்களில் ஸ்ரீ விஷ்ணுவிலிருந்து ஸ்ரீ பிரம்மா தோன்றினார் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் அனைத்து ரிஷிகளும் மற்றும் ஸ்ரீ பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரும் சந்தேகத்திலேயே உள்ளனர்.

## ஸ்ரீ பிரம்மாவிற்கும் ஸ்ரீ விஷ்ணுவிற்கும் நடந்த போர்

ஸ்ரீ சிவபுராணம் (வித்யேஸ்வர் சம்கிதை, மொழி பெயர்ப்பாளர்: தீன் தயாள் சர்மா, வெளியீடு: ராமாயண் பிரஸ் மும்பை, அத்தியாயம் 6,

பக்கம் 67, மற்றும் ஆசிரியர்: பண்டித் ராம்லகன் பாண்டே ஷவிஷாரத், பதிப்பாளர்: சாவித்திரி டாகுர், வெளியீடு: ரதயாத்திரா வாரணாசி, கிலை-நாட்டி இம்ளி வாரணாசி. வித்யேஸ்வர் சம்கிதை அத்தியாயம் 6 பக்கம் 54, மொழிபெயர்ப்பாளர்: டாக்டர். பிரம்மானந்த் திரிபாடி, சாகித்ய ஆயுர்வேத ஜோதிஷ் ஆச்சார்யா, எம்.ஏ, பி.எச்.டி, டி.எஸ், சி.ஏ. வெளியீட்டாளர்: சௌகம்பா சமஸ்கிருத பிரதிஷ்டான், 38 யு.ஏ. ஜவஹர் நகர், பங்களா சாலை, டெல்லி, சமஸ்கிருத சாஹித் சிவ புராணம் வித்யேஷ்வர் சன்ஹகிதா, அத்யாயம் 6, பக்கம் எண் 45)

ஸ்ரீ பிரம்மா, விஷ்ணுவிடம் வந்தார். அப்போது ஸ்ரீ விஷ்ணுவும் லக்ஷ்மியும் பாம்புப் படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தனர். அருகில் சேவகர்களும் அமர்ந்திருந்தனர். ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணுவிடம், “மகனே, எழுந்திரு உன் தந்தை வந்துள்ளேன், நான் உன்னுடைய கடவுள்” என்றார். அதற்கு ஸ்ரீ விஷ்ணு, “வா மகனே, நான்தான் உன் தந்தை, ஏன் உன் முகம் வாட்டமாய் உள்ளது” என்றார். ஸ்ரீ பிரம்மா கூறினார், மகனே! உனக்கு ஆணவமாகிவிட்டது, நான் உன்னை காப்பவன் மட்டுமல்ல, நான் உலகம் முழுவதற்கும் தந்தை என்றார். ஸ்ரீ விஷ்ணு, “கள்வனே! நீ என்ன பெரியவன், உலகம் முழுவதும் எனக்குள் அடங்கியிருக்கிறது. நீ என் தொப்புள் தாமரையிலிருந்து பிறந்தவன், என்னிடமே இப்படிப் பேசுகிறாயா என்றார். இப்படிச் சொல்லிக் கொண்டே இரு கடவுள்களும் ஆயுதங்களுடன் சண்டையிட்டனர். ஒருவரை ஒருவர் மார்பில் அடித்துக் கொண்டனர். இதைப் பார்த்த சதாசிவன் (கால பிரம்மன்) அவர்களுக்கு இடையே ஒரு ஒளிரும் அக்னி லிங்கத்தை உருவாக்கினார், பிறகுதான் அவர்களின் போர் நின்றது. (இந்த மேற்கூறிய விளக்கம் கீதாபிரஸ் கோரக்பூரின் சிவபுராணத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது . ஆனால் மேலே குறிப்பிட்டுள்ள மூல சமஸ்கிருதத்திலும், மற்ற இரண்டு ஆசிரியர்கள் மற்றும் பதிப்பாளர்களின் சிவபுராணத்திலும் சரியாக உள்ளது)

சிந்தியுங்கள :- ஸ்ரீ பிரம்மா புராணம், ஸ்ரீ விஷ்ணு புராணம், ஸ்ரீ சிவபுராணம் மற்றும் ஸ்ரீ தேவி மகாபுராணத்தில் முக்ககுண கடவுள்கள், சதாசிவன் (கால ரூபமான பிரம்) மற்றும் தேவி (சிவா-பிரகிருதி-துர்க்கை) ஆகியோரின் வாழ்க்கையின் லீலைகள் உள்ளன. இதன் அடிப்படையில் தான் ஞானிகளும் ரிஷிகளும் ஞானத்தை வழங்கினார். புனித புராணங்களிலிருந்து வேறுபட்ட அறிவை ஒருவர் கூறினால், அது பயனற்றது.

மேற்கூறிய விளக்கம் புனித சிவபுராணத்தில் உள்ளது, அதில் இரண்டு கடவுள்களும் ஐந்து வயது சிறுவனை போல சண்டையிடுகிறார்கள். நீ என் மகன், மற்றவர் இல்லை நீ என் மகன், நான் உன் தந்தை என்று கூறுகிறார்கள். பின்னர் ஒருவரையொருவர் கழுத்தைப் பிடித்துக் கொண்டு உதைத்து சண்டையிடுகிறார்கள். மூன்று லோகத்தின் அதிபதிகளின் பாத்திரம் இதுதான்.

மேற்கூறிய மூன்று புராணங்களும் (ஸ்ரீ பிரம்ம புராணம், ஸ்ரீ விஷ்ணு புராணம் மற்றும் ஸ்ரீ சிவபுராணம்) பிரம்ம காலன் இடமிருந்து தொடங்குகின்றன, அதாவது மகாபிரம்மா, மஹாவிஷ்ணு, மஹாசிவன் வடிவில் பிரம்மலோகத்தில் இருக்கிறார் மற்றும் தனது உண்மையான கால ரூபத்தை மறைத்து மேற்கூறிய ரூபங்களில் தனது லீலைகளை செய்கிறார். பின்னர் ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு மற்றும் தமோகுணம் சிவன் ஆகியோரின் லீலைகள் செய்கிறார். மேற்கூறிய அறிவின்

அடிப்படையில் புனித புராணங்களைப் புரிந்துகொள்வது மிக சுலபம்.

## ஸ்ரீ விஷ்ணு புராணம்

(மொழிபெயர்ப்பாளர் திரு. முனிலால் குப்தா, கோவிந்த் பவன் அலுவலகம், கீதாபிரஸ் கோரக்பூர் வெளியீடு)

ஸ்ரீ விஷ்ணு புராணத்தை ஸ்ரீ பராசரர் ரிஷி தனது சீடர் ஸ்ரீ மைத்ரேயர் ரிஷிக்கு கூறினார். பராசரர் ரிஷி திருமணமானவுடன் வீட்டைவிட்டு வனம் சென்று தவம் இருக்க முடிவெடுத்தார். அவருடைய மனைவி, "இப்போதுதானே மணம் முடிந்தது. சந்ததிக்கு வழி செய்துவிட்டு வனம் செல்லுங்கள்" என்று சொன்னாள். அப்போது பாராசரர் ரிஷி, தவம் செய்த பிறகு குழந்தை பெற்றால் இன்னும் மகத்தானதாக இருக்கும் என்றார். நான் சிறிது காலம் கழித்து என் வீரிய சக்தியை ஒரு பறவை மூலம் அனுப்புகிறேன், அதை பெற்றுக்கொள் என கூறி வனம் சென்றுவிட்டார். ஒரு வருட தவத்திற்கு பிறகு தன் வீரியத்தை ஒரு இலையில் வைத்து தனது மந்திர சக்தியால் அதைப் பத்திரப்படுத்தி, ஒரு காக்கை இடம் தந்து தன் மனைவியிடம் கொடுக்கச் சொன்னார். காக்கை ஒரு நதி மேல் பறந்து கொண்டிருந்தபோது அந்த இலை நதியில் விழ ஒரு மீன் அதை விழுங்கிவிட்டது. சில மாதத்திற்கு பிறகு ஒரு படகோட்டி அந்த மீனைப் பிடித்து வெட்டியவுடன் அதிலிருந்து ஒரு பெண் வெளிப்பட்டாள். படகோட்டி அவளுக்கு சத்தியவதி என்று பெயரிட்டு (மச்சோதரி என்ற பெயரும் உண்டு) தன் மகளைப் போல வளர்த்தான்.

காக்கை எல்லா விபரத்தையும் ரிஷியிடம் சொல்லிவிட்டது. 16 வருடம் கழித்து தவம் முடிந்து திரும்பிய பராசரர், நதியைக் கடக்க வேண்டி மீனவரை அழைத்தார். அப்போது மீனவர் உணவு அருந்தி கொண்டிருந்தார் மற்றும் ஸ்ரீ பராசரர் மகரிஷியின் வீரியத்திலிருந்து மீன் மூலம் பிறந்த 14 வயது சிறுமி தந்தைக்கு உணவளிக்க வந்திருந்தாள். தவம் செய்யும் மகரிஷிகள் சக்தி நிறைந்தவர்கள், உடனே செய்யவில்லை என்றால் சபிப்பார் என்று மீனவர் அறிந்திருந்தார். மீனவர் உண்பதை பாதியில் விட்டால் பாவமாகும் என்பதால், மகளை அனுப்பி மகரிஷி பராசரரை அக்கரையில் சேர்க்குமாறு சொன்னார். தந்தை சொன்னவுடன், மகள் பராசரர் ரிஷியை படகில் ஏற்றி சென்றாள். ஆற்றை கடக்கும்போது, பராசரர் ரிஷி தனது வீரிய சக்தியால் மீனுக்குள் பிறந்த பெண் அதாவது தனது சொந்த மகளை கற்பழிக்க விரும்பினார். ரிஷிகளின் சாபத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சோக கதைகளை அந்த சிறுமி தனது தந்தை மீனவரிடம் கேட்டிருந்தாள். பயத்தில் நடுங்கிய அந்த பெண், நீங்கள் ஒரு பிராமணர், நான் ஒரு சூத்திரனின் மகள் என்றாள். ரிஷி பரவாயில்லை என்றார். தன் மானத்தைக் காக்க மீண்டும் ஒரு சாக்கு சொன்னாள்,

ரிஷிவரே! நான் மீன் வாடை கொண்டவள் என்றாள். பாராசரர் ரிஷி தனது சக்தியால் வாடையை நிறுத்தினார். அந்த பெண், இரு கரையில் இருந்தும் யாரும் பார்ப்பார்கள் என்றாள். பராசரர் ரிஷி கையில் கங்கை நீரை எடுத்து வானத்தில் வீசி தனது சித்த சக்தியால் பனி மூட்டத்தை உண்டாக்கி அவளை அடைந்தார். நடந்ததை சிறுமி தனது வளர்ப்புப் பெற்றோரிடம் தெரிவித்தாள், ரிஷி தனது பெயரை பராசரர் என்றும் வசிஷ்ட முனிவரின் பேரன் என்று சொன்னதை கூறினாள். நேரம் வந்ததும், அந்த கன்னியின் வயிற்றில் இருந்து ஸ்ரீ வியாசர் முனி பிறந்தார்.

இந்த பராசரர் முனி மூலம் தான் ஸ்ரீ விஷ்ணு புராணம்

உருவாக்கப்பட்டது. ஸ்ரீ பராசரர் முனி சொன்னார், “மைத்ரேயா, நான் உனக்குச் சொல்ல போகும் ஞானத்தை தக்ஷாதி முனிவர்கள் நர்மதா நதிக்கரையில் மன்னன் புருகுத்சனிடம் விவரித்தார்கள். புருகுத்சன் சாரஸ்வதனிடமும், சாரஸ்வதர் என்னிடம் விவரித்தார்.” மகரிக்ஷி பராசரர் அவர்கள் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் அத்தியாயம் 1, ஸ்லோகம் 31, பக்கம் 3ல், இந்த பிரபஞ்சம் விஷ்ணுவிடமிருந்து உருவானது, அவரால் தான் இயங்குகிறது என்று கூறியுள்ளார். அத்தியாயம் 2, ஸ்லோகம் 15, 16 பக்கம் 4ல், “மைத்ரேயா, பரபிரம் உடைய முதல் வடிவம் கடவுள் போல தோன்றும், ஆனால் உருவமாகவும் (மகாவிஷ்ணு வடிவத்தில் தோன்றுவது) அருவமாகவும் (இருபத்தியோராம் பிரபஞ்சத்தில் கண்ணுக்குப் புலப்படாத உண்மையான கால வடிவில் இருப்பது) மற்ற வடிவம் உள்ளது, மேலும் “கால்” அவரது உண்மையான வடிவமாகும். கடவுள் விஷ்ணு, காலன் வடிவில் மற்றும் உருவமாகவும், அருவமாகவும் இருக்கிறார், அது அவரது குழந்தைப்பருவ லீலைகள்.

அத்தியாயம் 2, ஸ்லோகம் 27 பக்கம் 5 இல் கூறப்பட்டது:- மைத்ரேயனே! அழிவின் போது, பிரதானின் அதாவது பிரகிருதி சமநிலையில் அமைந்திருக்கும் போது, அதாவது புருஷ் பிரகிருதியிலிருந்து தனித்தனியாக அமைந்திருக்கும் போது, கடவுள் விஷ்ணுவின் கால வடிவம் வெளிப்படுகிறது.

அத்தியாயம் 2, சுலோகம் 28 முதல் 30 வரை பக்கம் 5ல்:- உடனே (படைப்பின் போது) அந்த பரபிரம் பரமாத்மா பிரபஞ்ச வடிவமான, எங்கும் நிறைந்தவர், உயிரினங்களின் கடவுளான பரமேஸ்வரர் தனது விருப்பத்தால், விகாரி மற்றும் அவிகாரி மனிதநுல் நுழைந்து அவர்களை தூண்டிவிடுகிறார் ||*28-29*|| நறுமணம் எப்படி ஆர்ப்பாட்டமில்லாமல் இடத்தை ஆக்கிரமித்து, மக்கள் நாசியை தூண்டுகிறதோ அப்படிச் செயல்படுகிறார்.

சிறப்பு:- ஸ்லோகம் 28 முதல் 30 வரையில், புருஷ் (கால் கடவுள்) மற்றும் பிரகிருதி (துர்க்கை) இருவரை தவிர, வேறு ஒரு பரமேஸ்வரர் இருக்கிறார், அவர் இருவரையும் மீண்டும் படைப்பதற்கு தூண்டுகிறார் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அத்தியாயம் 2 பக்கம் 8 ஸ்லோகம் 66ல், இதே விஷ்ணுதான் படைப்பாளியாக (பிரம்) இருந்து தனது படைப்பை படைக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. ஸ்லோகம் 70 இல், கடவுள் விஷ்ணுதான் பிரம்மா மூலம் படைப்பைச் செய்பவர், அவர் தாமே படைக்கிறார், தாமே அழிகிறார் என்று எழுதப்பட்டுள்ளது. அத்தியாயம் 4 ஸ்லோகம் 4 பக்கம் 11இல், வேறு ஒரு பரமேஸ்வரர் இருக்கிறார், அவர் பிரம்மா, சிவன் போன்ற கடவுளுக்கெல்லாம் கடவுள் என்று எழுதப்பட்டுள்ளது. அத்தியாயம் 4, ஸ்லோகம் 14-15, 17, 22 பக்கம் 11, 12 இல், “பூமி சொன்னது: “கால ரூபனே! உங்களுக்கு வணக்கம். கடவுளே! நீங்கள் தான் பிரபஞ்சத்தின் படைப்பிற்காக, பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவ ரூபத்தை எடுத்தீர்கள். அவதார ரூபத்தில் தோன்றும் உங்கள் ரூபத்தை தேவர்கள் பூஜிக்கின்றன. நீங்கள் தான் ஓம்காரம்” என்று எழுதப்பட்டுள்ளது. அத்தியாயம் 4, ஸ்லோகம் 50, பக்கம் 14 இல், ஹரி பகவான், ரஜோகுணத்துடன் நான்குமுக பிரம்மாவின் வடிவத்தை எடுத்து பிரபஞ்சத்தைப் படைத்தார் என்று எழுதப்பட்டுள்ளது.

பராசரர் முனி ஸ்ரீ விஷ்ணு புராணத்தை கேள்விபட்ட கதைகளின் அறிவின் அடிப்படையில் இயற்றியுள்ளார் என்பது மேற்கண்ட விளக்கத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், பூரண பரமாத்மா முதல்

சத்யுகத்தில் தோன்றி, உண்மையான அறிவை ஸ்ரீ பிரம்மாவிற்கு அளித்தார். ஸ்ரீ பிரம்மா, தன் கற்பனை அறிவைக் கொஞ்சம் கலந்து, தன் சந்ததிகளுக்குச் சொன்னார். ஒருவரிடமிருந்து ஒருவர் கேட்டு சொல்லி வந்த செவிவழி ஞானத்தை ஸ்ரீ பராசரர் முனி பெற்றார். ஸ்ரீ பராசரர் முனி, விஷ்ணுவை காலன் என்றும், பர பிரம் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, விஷ்ணு அதாவது பிரம்ம ரூபமான காலன், பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் உருவத்தில் உலகைப் படைத்தார் என்பது தெளிவாகிறது. இந்த பிரம்ம காலன் தான் பிரம்மலோகத்தில் மூன்று ரூபங்களில் தோன்றி லீலைகளை செய்து ஏமாற்றுகிறார், அவர் தானும் இறக்கிறார். (மேலும் தெரிந்துகொள்ள, “கெஹ்ரி நசர் கீதாமே” புத்தகத்தில் “பிரளயம் பற்றிய விளக்கம்” அத்தியாயம் 8 சுலோகம் 17 இன் விளக்கத்தை படிக்கவும்) அந்த பிரம்மலோகத்தில் மூன்று இடங்களை உருவாக்கியுள்ளார். ஒன்று ரஜோகுணம் கொண்டது, அதில் இதே பிரம்ம காலன் பிரம்மா ரூபத்தை எடுத்து, தனது மனைவி துர்க்கையை தன்னுடன் வைத்துக் கொண்டு ரஜோகுணம் கொண்ட மகன் பிரம்மாவை பிறப்பிக்கிறார். அவர் மூலம் ஒரு பிரபஞ்சத்தில் படைப்பை செய்கிறார். அதே போல, அதே பிரம்மலோகத்தில் சத்வகுணம் கொண்ட இடத்தை உருவாக்கி, அதில் தானே விஷ்ணு ரூபத்தில் தனது மனைவி துர்க்கையை (பிரகிருதி) தன்னுடன் வைத்துக் கொண்டு சத்வகுணம் கொண்ட மகன் விஷ்ணுவை பிறப்பிக்கிறார். இவர் மூலம் மூன்று லோகத்தையும் (சொர்க்கம், பூமி, பாதாளம்) நிலையாக பாதுகாக்க வைக்கிறார்.

(ஆதாரம்: சிவபுராணம், கீதா பிரஸ், கோரக்பூர் வெளியீடு, மொழி பெயர்ப்பாளர்: ஹனுமான் பிரசாத் போத்தார், சிமன்லால் கோஸ்வாமி, ருத்ர சம்ஹிதா அத்தியாயம் 6, 7 பக்கம் 102, 103).

அதே பிரம்மலோகத்தில் மூன்றாவது தமோகுணம் கொண்ட இடத்தை உருவாக்கி, அதில் தானே சிவன் வடிவில் வசிக்கிறார், தனது மனைவி துர்க்கையை (பிரகிருதி) தன்னுடன் வைத்துக் கொண்டு, அதேபோல தமோகுணம் கொண்ட மூன்றாவது மகன் சங்கரனை (சிவன்) பிறப்பிக்கிறார். இவர் மூலம் மூன்று லோகத்தின் உயிரினங்களை அழிக்கிறார்.

விஷ்ணு புராணத்தில் 4 ஆம் அத்தியாயம் வரை, கால ரூபமான பிரம் அதாவது ஜோதி நிரஞ்சன் பற்றிய ஞானம் உள்ளது. அத்தியாயம் 5 முதல், கலப்படமான ஞானமும் காலனின் மகனான சத்வகுணம் விஷ்ணுவின் லீலைகள் மற்றும் அவரது அவதாரங்களான ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர் பற்றிய ஞானம் உள்ளது.

சிந்திக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், ஸ்ரீ விஷ்ணு புராணத்தை இயற்றியது ஸ்ரீ பராசரர் ரிஷி. இந்த ஞானத்தை தக்ஷாதி முனிவர்களிடம் இருந்து புருகுத்சன் கேட்டறிந்தார், புருகுத்சனிடம் இருந்து சாரஸ்வதனும், சரஸ்வதனிடம் இருந்து ஸ்ரீ பராசரர் ரிஷி கேட்டறிந்தார்.

பிறகு அந்த ஞானத்தை ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் எழுதப்பட்டுள்ளது, இன்று அது நம் கையில் உள்ளது. இதில், ஒரு பிரபஞ்சத்தின் ஞானமே முழுமையாக இல்லை அரைகுறையாக உள்ளது. ஸ்ரீ தேவிபுராணம், ஸ்ரீ சிவபுராணம் போன்ற புராணங்களின் அறிவும் ஸ்ரீ பிரம்மாவால் வழங்கப்பட்டது. ஸ்ரீ பாராசரரின் ஞானம் ஸ்ரீ பிரம்மா வழங்கிய ஞானத்திற்கு சமமாக இருக்க முடியாது. எனவே, விஷ்ணு புராணத்தை அறிந்துகொள்ள சிவபுராணம் மற்றும் தேவி புராணத்தைப் படிக்க வேண்டும். ஏனென்றால், இந்த ஞானம் தக்ஷாதி முனிவர்களின் தந்தையான ஸ்ரீ

பிரம்மா வழங்கியது. ஸ்ரீ தேவி புராணம் மற்றும் ஸ்ரீ சிவபுராணத்தைப் புரிந்து கொள்ள, ஸ்ரீ பகவத் கீதை மற்றும் நான்கு வேதங்களை படிக்கவேண்டும். ஏனெனில் இந்த ஞானத்தை பிரம்ம காலன் தானே வழங்கியது, அவர் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ஆகியோரின் தந்தை. புனித வேதங்கள் மற்றும் புனித கீதையின் ஞானத்தை புரிந்து கொள்ள, சூட்சும வேதத்தை படிக்க வேண்டும், இது காலனை (பிரம்) படைத்த தந்தை, பரம் அக்ஷர் பிரம் (கவிர் தேவ்) வழங்கியது. அது சத்புருஷரே தோன்றி (கவிர்கிர்பி) கவிர்வாணி (உரை–கவிதை) மூலம் கூறினார். (ஆதாரம் : ரிக்வேதம் மண்டலம் 9 சூக்தம் 96 மந்திரம் 16 முதல் 20 வரை)

## ஸ்ரீ பிரம்ம புராணம்

இந்த புராணத்தை இயற்றியவர் ஸ்ரீ லோமகர்ஷ ரிஷி. இவர் வியாசருடைய சீடராவார், சுத்திரர் என்றும் அழைக்கப்படுகிறார். இந்த ஞானத்தை முதன் முதலில் ஸ்ரீ பிரம்மா தக்ஷாதி முனிகளுக்கு விவரித்தார், அதை நான் விவரிக்கிறேன் என்று ஸ்ரீ லோமஹர்ஷ முனி கூறினார்.

இந்த புராணத்தில் படைப்பின் விளக்கம் என்ற அத்தியாயத்தில் (பக்கம் 277–279ல்), “ஸ்ரீ விஷ்ணு சகல உலகத்திற்கும் ஆதாரம் ஆவார், இவரே பிரம்மா, விஷ்ணு, சிவன் ரூபத்தில் உலகத்தை உருவாக்கி பாதுகாத்து பின்னர் அழிக்கிறார். அவருக்கு எனது வணக்கங்கள்” என்று கூறப்பட்டுள்ளது.

உண்மையான நித்திய ரூபம் மற்றும் அருவமான பிரகிருதியை பிரதான் என்று அழைக்கப்படுகிறது. அதன் மூலம் புருஷ் உலகத்தை படைத்தார். அளவற்ற ஒளி கொண்ட பிரம்மாவே அந்த புருஷ் என கருதுக. அவர் அனைத்து உயிரினங்களையும் படைப்பவர் மற்றும் பகவான் நாராயணனைச் சார்ந்தவர்.

சுயம்பு பகவான் நாராயணன் நீரைப் படைத்தார். அவரிடமிருந்து உருவானதால் நீரை நார் என்று அழைக்கப்பட்டது. கடவுள் முதலில் நீர்மீது அமர்ந்திருந்தார். அதனால்தான் கடவுள் நாராயணன் என்று அழைக்கப்படுகிறார். கடவுள் தனது சக்தியை நீரில் செலுத்தினார். அதிலிருந்து ஒரு ஸ்வர்ண முட்டை தோன்றியது. அதிலிருந்து சுயம்பு பிரம்மா பிறந்தார் என்று சொல்லப்படுகிறது. ஒரு வருடம் முட்டைக்குள் இருந்த பிரம்மா, அதை இரண்டாக உடைத்தார், ஒன்று தூலோகமாகவும் மற்றது பூலோகமாகவும் மாறின.

பிறகு பிரம்மா தனது கோபத்தால் ருத்ரனைப் படைத்தார். மேற்கூறிய விளக்கம் லோமகர்சன் முனியால் கூறப்பட்டது, அது கேள்விபட்டது ஞானம் முழுமையற்றது. ஏனென்றால், இதன் உரையாசிரியர் கேள்விபட்டதாக சொல்கிறார். எனவே, ஸ்ரீ தேவி மகாபுராணம், ஸ்ரீ சிவபுராணம், புனித கீதை, நான்கு வேதங்கள் மற்றும் பூரண பரமாத்மா வழங்கிய தத்வஞானம் சூக்ஷம வேதம் அதாவது கவிர்வாணி (கபீர் உரை) பற்றி முழுமையாக அறிய, “கேஹரி நசர் கீதாமே”, “பரமேஸ்வர் கா சார் சந்தேஷ்” ஆகிய நூலை படியுங்கள்.

(கவிர்தேவ் (கபீர் பரமேஸ்வரர்) கலியுகத்தில் தோன்றி, உண்மையான ஞானத்தை தனது சேவகனான ஸ்ரீ தரம்தாஸ் சாகேப் ஜியிடம் முழுமையாக சொன்னார். அது இந்தப் புத்தகத்தில் இயற்கையின் உருவாக்கத்தில் படிக்கவும்)

ஸ்ரீ பாராசரர் முனி அவர்கள் பிரம்ம காலனை, பரபிரம் என்றும்

பிரம்மா, விஷ்ணு என்றும் அழைத்துள்ளார், மேலும் இவரை அழிவற்றவர் என்றும் காலனுக்கு பிறப்பும் இறப்பு இல்லை என்று கூறியுள்ளார். இதிலிருந்து ரிஷியின் ஞானம் குழந்தைத்தனமானது என்று நிரூபிக்கிறது.

சிந்தியுங்கள் :- விஷ்ணு புராணம் கேள்விப்பட்ட கதைகளின் அடிப்படையில் ஒரு ரிஷியால் சொல்லப்பட்டது மற்றும் பிரம்மா புராணம் தக்ஷாதி முனிவர்கள் மூலம் ஸ்ரீ லோம்கர்ஷன் ரிஷியால் கேட்டறிந்து எழுதப்பட்டது. எனவே, மேற்கூறிய இரண்டையும் (விஷ்ணு புராணம் மற்றும் பிரம்ம புராணம்) புரிந்து கொள்ள, ஸ்ரீ தேவி புராணம் மற்றும் ஸ்ரீ சிவபுராணம் தேவைப்படுகிறது, இதை ஸ்ரீ பிரம்மா தனது மகன் நாரதருக்கு விவரித்தார், பின்னர் ஸ்ரீ வியாசர் முனியால் அறியப்பட்டு எழுதப்பட்டது. மற்ற புராணங்கள் ஸ்ரீ பிரம்மா வழங்கிய ஞானத்திற்கு சமமாகாது. எனவே, மற்ற புராணங்களை அறிந்துகொள்ள சிவபுராணம் மற்றும் தேவி புராணம் தேவைப்படுகின்றன. ஏனென்றால், இந்த ஞானம் தக்ஷாதி முனிவர்களின் தந்தையான ஸ்ரீ பிரம்மா வழங்கியது. ஸ்ரீ தேவி புராணம் மற்றும் ஸ்ரீ சிவபுராணத்தைப் புரிந்து கொள்ள, புனித கீதை மற்றும் நான்கு வேதங்கள் தேவைப்படுகின்றன. ஏனெனில் இந்த ஞானம் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரை படைத்த தந்தையான பிரம்ம காலன் வழங்கியுள்ளார். புனித வேதங்கள் மற்றும் புனித கீதையின் அறிவைப் புரிந்து கொள்ள, சூக்ஷம வேதம் தேவைப்படுகின்றன, இது காலனை (பிரம்) படைத்த தந்தை, பரம அக்ஷர் பிரம் (கவிர்தேவ்-கபீர் பரமேஸ்வர்) வழங்கியது. அதை சத்புருஷ் தாமாக தோன்றி (கவிர்கிர்பி) கவிர்வாணி அதாவது உறைகள் மூலம் கூறினார். (ஆதாரம் ரிக்வேதம் மண்டலம் 9 சூக்தம் 96 மந்திரம் 16 முதல் 20 வரை) மேலும் புனித கீதையில், பிரம்ம காலன் தனது உண்மையான நிலையை தானே கூறியுள்ளார்.

கீதை அத்தியாயம் 15, ஸ்லோகம் 18 இல், நான் (பிரம்ம காலன்) எனது 21 பிரபஞ்சங்களில் உள்ள அனைத்து உயிர்களை விட நான் உயர்ந்தவன் என்று கூறியுள்ளார். அதனால்தான் புராண கதைகளின் அடிப்படையில் நான் புருஷோத்தமன் என்று கருதப்படுகிறேன். உண்மையில், புருஷோத்தமன் என்பவர் என்னிடமிருந்தும் (ஷர் புருஷ் அதாவது காலன்) மற்றும் அக்ஷர் புருஷ் இடமிருந்தும் (பர பிரம்) வேறுபட்டவர் ஆவார். நிஜத்தில் அவர்தான் கடவுள் அதாவது பூரண பரமாத்மா இறைவன் என்று அழைக்கப்படுபவர். அவர் தான் மூன்று லோகத்தில் உள்ள அனைவரையும் காப்பவர், உண்மையில் அவர்தான் அழிவற்ற கடவுள் (கீதை அத்தியாயம் 15 ஸ்லோகம் 16, 17). கீதையை அருளிய பிரம் தானே கூறுகிறார், “அர்ஜ"னா! நீயும் நானும் பல பிறவிகள் எடுத்துள்ளோம், உனக்கு தெரியாது, ஆனால் எனக்குத் தெரியும்”. கீதை, அத்தியாயம் 4 சுலோகம் 5, மற்றும் அத்தியாயம் 2 ஸ்லோகம் 12 இல் இதன் ஆதாரம் உள்ளது. மேலும் அத்தியாயம் 7 ஸ்லோகம் 18 இல், தனது வழிபாடு சிறந்ததல்ல என்று கூறியுள்ளார். அதனால்தான் அத்தியாயம் 18 ஸ்லோகம் 62 இல், “அர்ஜ"னா, நீ முழுமனதுடன் அந்த பரமேஸ்வரரிடம் சரணடை, அவருடைய அருளால் நீ பரம சாந்தியும் என்றும் அழியாத சத்யலோகத்தை அடைவாய்”. அத்தியாயம் 15 ஸ்லோகம் 4 இல், தத்துவதரிசி குருவை (அத்தியாயம் 4 ஸ்லோகம் 34 மற்றும் அத்தியாயம் 15 ஸ்லோகம் 1 இல் கூறப்பட்டது) அடைந்த பிறகு அந்த பரம ஸ்தானத்தையும் பரமேஸ்வரனையும் நாடவேண்டும், அவரிடம் சென்ற பக்தர் மீண்டும் இந்த உலகிற்கு திரும்புவதில்லை அதாவது நீ பூரண மோட்சம் அடைவாய். எந்த

பரமேஸ்வரரிடமிருந்து இந்த உலகம் முழுவதும் தோன்றியதோ, அவர் அனைத்தையும் காப்பவர் ஆவார், நானும் (கீதையை அருளும் கால ரூப பிரம்) அதே ஆதி புருஷ் பரமேஸ்வரரின் சரணடியில் இருக்கிறேன். முழு நம்பிக்கையுடன் அவரைதான் வழிபட வேண்டும்.

## ஸ்ரீ தேவி மகா புராணத்தில் உள்ள ஞானம்

ஸ்ரீ தேவி மஹாபுராணத்திலிருந்து சில பகுதி மற்றும் அதன் சாரம்

(சன்ஷிப்த் ஸ்ரீமத் தேவிபகவத், ஹிந்தி, எடிட்டர்- ஹனுமன் பிரசாத் போதார் சிம்மன்லால் கோஸ்வாமி, வெளியீட்டாளர் - கோபிந்த்பவன் கார்யாலே, கீதா பிரஸ் கோரக்பூர்)

// ஸ்ரீ ஜகதாம்பிகாயே நமஹ // ஸ்ரீ தேவி பகவத் (முன்றாம் ஸ்கந்தம்)

பரிஷித் மன்னர் ஸ்ரீ வியாசரிடம் பிரபஞ்சத்தின் படைப்பு பற்றி கேட்டார். ஸ்ரீ வியாசர் முனி சொன்னார், "அரசே! இதே கேள்வியை நான் நாரதரிடம் கேட்டேன். இந்த பிரபஞ்சத்தைப் படைத்தது யார்? சிலர் சிவபெருமான் என்றும், சிலர் பிரம்மா என்றும், சிலர் விஷ்ணு என்றும், சில ரிஷிகள் எண்ணங்களை நிறைவேற்றும் பவானி ஆதி மாயையான மகாசக்தி என்றும், பரம புருஷிடன் சேர்ந்து படைக்கும் பிரகிருதி என்றும், பிரம் உடன் பிரிக்க முடியாத தொடர்பு உண்டு என்றும் சொல்கிறார்கள். (பக்கம் 114).

ஸ்ரீ நாரதர் சொன்னார் :- "வியாசரே! ஒரு காலத்தில் எனக்கும் இதே சந்தேகம் எழுந்தது. உடனே எனது தந்தை பிரம்மாவிடம் சென்று, இப்பொழுது நீங்கள் என்னிடம் கேட்ட இதே கேள்வியை நானும் கேட்டேன். தந்தையே! இந்த பிரபஞ்சம் எங்கிருந்து தோன்றியது? இதை படைத்தது நீங்களா அல்லது ஸ்ரீ விஷ்ணுவா அல்லது ஸ்ரீ சங்கரரா தயவு செய்து உண்மையைச் சொல்லுங்கள் என்று கேட்டேன்.

ஸ்ரீ பிரம்மா சொன்னார் :- (பக்கம் 115 முதல் 120 மற்றும் 123, 125, 128, 129) மகனே! இந்த கேள்விக்கு எப்படி பதில் சொல்வது? இது மிகவும் கடினமானது. ஆதியில் எல்லா இடமும், நீரில் மூழ்கி இருந்தன. அப்பொழுது தாமரையில் இருந்து நான் தோன்றினேன். நான் தாமரை மலரில் அமர்ந்து, நான் யார், இந்த ஆழமான நீரில் எப்படி தோன்றினேன்? என்று யோசிக்க ஆரம்பித்தேன். தாமரைத் தண்டைப் பிடித்து கொண்டு நான் கீழே இறங்கினேன். அங்கே சேஷநாகத்தின் படுக்கையில் பகவான் விஷ்ணுவை தரிசித்தேன். அவர் யோக நித்திரையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். இந்த நேரத்தில், எனக்கு பகவதி யோகநித்திரை நினைவுக்கு வந்தது. பின்னர் மங்களகரமான பகவதி விஷ்ணுவின் விக்கிரகத்திலிருந்து வெளியேறி ஆகாயத்தில் தோன்றினாள். தெய்வீக ஆபரணங்கள் அவரது உருவத்தை மேம்படுத்தின. மகா விஷ்ணுவின் உடலிலிருந்து யோகநித்திரை பகவதி பிரிந்தவுடன் ஸ்ரீ விஷ்ணு விழித்துக்கொண்டார். அப்போது நானும் விஷ்ணுவும் மட்டுமே இருந்தோம். பிறகு ஸ்ரீ ருத்ரனும் (சிவன்) அங்கே தோன்றினார். எங்கள் மூவரிடமும் தேவி சொன்னாள் :- நீங்கள் மூவரும் கவனமாக தங்களுடைய கடமைகளைச் செய்யுங்கள், படைத்தல், காத்தல், அழித்தல் இவை மூன்றுமே உங்களுடைய கடமைகள். அப்பொழுது அங்கே வானிலிருந்து ஒரு அழகிய விமானம் வந்தது. பிறகு தேவி எங்களிடம் கட்டளையிட்டாள், "தேவர்களே! அச்சமின்றி இந்த விமானத்தில் அமருங்கள். பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரா இன்று நான் உங்களுக்கு ஒரு அற்புதமான காட்சியைக் காட்டுகிறேன்".

நாங்கள் மூவரும் அதில் ஏறி அமர்ந்ததும், தேவியின் சக்தியால் எங்கள் விமானம் வேகமாக நகர்ந்து, மேலே தெய்வீகமான பிரம்மலோகத்தை சென்றடைந்தது. அங்கே மற்றொரு பிரம்மா அமர்ந்திருந்தார். சிவபெருமானும், விஷ்ணுவும் ஆச்சரியமடைந்து, என்னிடம் "நான்முக பிரம்மனே, இந்த அழியாத பிரம்மா யார்? என்று கேட்டனர். நான் சொன்னேன், "இந்த படைப்பாளர் யார் என்று எனக்கு எதுவும் தெரியாது, கடவுளை! நான் யார், நமது நோக்கம் என்ன என்று என் மனம் குழப்பத்தில் உள்ளது". இதற்க்குள் விமானம் மனோ வேகத்தில் பறந்து கைலாச சிகரத்தை சென்றடைந்தது. அங்கு ஒரு அழகிய மாளிகையிலிருந்து முக்கண்ணனான சிவபெருமான் வெளியில் வந்தார். அவர் நந்தி மீது அமர்ந்திருந்தார். கன நேரத்தில் அந்த விமானம் சிகரத்திலிருந்து காற்றின் வேகத்தில் பறந்து வைகுண்ட லோகத்தை சென்றடைந்தது. அது பகவதி லக்ஷ்மியின் மாளிகை ஆகும்.

மகனே நாரதா! அங்கு நான் கண்ட செல்வங்களை என்னால் வர்ணிக்க இயலாதது. அந்த அற்புத நகரத்தை கண்ட விஷ்ணு ஆச்சரியக் கடலில் மூழ்கினார். அங்கே ஸ்ரீ ஹரி நான்கு கைகளுடன் அமர்ந்திருந்தார்.

இதையடுத்து, அந்த விமானம், காற்றோடு பேசிக்கொண்டு, விரைவாக பறந்து அமிர்தம் நிறைந்த கடலுக்கு நடுவே ஒரு தீவிற்கு சென்றது. அந்த தீவில் ஒரு மங்களகரமான அழகான மேடை இருந்தது. அந்த மேடையில் ஒரு தெய்வீக தேவி அமர்ந்திருந்தாள். நாங்கள், "இந்த அழகி யார்? இவள் பெயர் என்ன? இவளை பற்றி நமக்கு தெரியவில்லையே என எங்களுக்குள் பேசிக்கொண்டோம்.

நாரதரே! சந்தேகம் நிறைந்த நாங்கள் அங்கேயே நின்றோம். பிறகு பகவான் விஷ்ணு அந்த அழகிய தேவியைக் கண்டு, அவள் பகவதி ஜகதாம்பிகை என்பதை உறுதி செய்தார். அப்போது அவர், இந்த பகவதிதான் நம் அனைவருக்கும் மூலகாரணம் என்றார். அவள் பிரகிருதி, மஹாவித்யா, மஹாமாயா, விஸ்வேஸ்வரி, வேதகர்பா மற்றும் சிவா என்று அழைக்கப்படுகிறாள்.

இந்த திவ்யாங்கனாவை நான் குழந்தையாக இருந்தபொழுது தரிசித்தேன். தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தாள். ஆலமரத்தின் இலையிலான படுக்கையில் நான் படுத்துக்கொண்டு வாயில் கால் கட்டை விரலை உறிஞ்சி விளையாடிக் கொண்டிருந்தேன். பாடல் பாடி தாலாட்டிக் கொண்டிருந்தாள். அந்த தேவிதான் இவள். இதில் எந்த சந்தேகமும் இல்லை. இவளை பார்த்ததும் கடந்த காலம் நினைவுக்கு வந்துவிட்டது. அவள் நமது தாய் என்றார்.

ஸ்ரீ விஷ்ணு அந்த புவனேஸ்வரி தேவியை துதிக்க ஆரம்பித்தார்:

பகவான் விஷ்ணு கூறினார்: பிரகிருதி தேவியே உங்களுக்கு வணக்கம். பகவதி விதாத்ரி தேவியை என்றென்றும் வணங்குகிறேன். நீ தூய வடிவமானவள், இந்த உலகம் முழுவதும் உன்னால் உண்டானது. நான், பிரம்மா மற்றும் சங்கர் அனைவரும் உன்னுடைய அருளால் நிலைத்திருக்கிறோம். நாங்கள் பிறப்பிலும் இறப்பிலும் இருக்கிறோம். நீ மட்டும்தான் நித்தியமானவள், நீயே உலகத்தாய், நீயே பிரகிருதி மற்றும் சனாதனி தேவி ஆவாய்.

பகவான் சங்கர் கூறினார்: "தேவி! ஸ்ரீ விஷ்ணு உங்களால் தோன்றியவர் என்றால், அவருக்குப் பிறகு பிறந்த பிரம்மாவும் உங்கள்

பிள்ளைதான். பிறகு தமோகுண லீலை செய்யும் நான் சங்கரும் உன் பிள்ளைதான். என்னையும் படைத்தவள் நீ தான். இவ்வுலகின் படைத்தல், காத்தல் மற்றும் அழிவில் உனது குணங்கள் திரனாக உள்ளது. அந்த மூன்று குணங்களிலிருந்து பிறந்த நாங்கள் பிரம்மா, விஷ்ணு, சங்கர் ஆகிய மூவரும் விதிகளின்படி கடமையில் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். பிறகு நானும், பிரம்மாவும், சிவனும் விமானத்தில் சென்று கொண்டிருந்தபோது, வழியில் புதிய புதிய உலகங்களைக் கண்டோம். பவானியே! அவற்றை உருவாக்கியது யார் என்று சொல்லுங்கள்? என்று கேட்டோம்.

எனவே இதன் ஆதாரத்தைப் பாருங்கள், ஸ்ரீமத் தேவிபகவத் மகாபுராணம் சபாஷ்டிகம் சம்ஹத்யம். கேம்ராஜ் ஸ்ரீ கிருஷ்ண தாஸ் பிரகாஷ் மும்பை வெளியீடு, இதில் சமஸ்கிருதத்துடன் ஹிந்தி மொழியாக்கம் உள்ளது. மூன்றாம் ஸ்கந்தம், அத்தியாயம் 4, பக்கம் 10, ஸ்லோகம் 42:-

பிரம்மா - அஹம் ஈஷ்வர்ஹ பில் தே பிரபாவாத்ஸர்வே வயம் ஜநி யுதா ந யதா தூ நித்யஹ: கே அன்யே ஸுராஹ ஷாத்மக் பிரமுகாஹ் ச நித்யா நித்யா த்வமேவ் ஜனனி பிரகர்ரதிஹ புராணா / (42)

மொழிபெயர்ப்பு :- அன்னையே! நான், பிரம்மா, சிவன் மூவரும் உன்னால் பிறந்தவர்கள், நாங்கள் நித்தியமானவர்கள் அல்ல, அதாவது அழியாதவர்கள் அல்ல. பிறகு மற்ற தெய்வங்கள் எப்படி நித்தியமாக இருக்க முடியும். நீ அழிவற்ற பிரகிருதி, சனாதன தேவி ஆவாய்.

பக்கம் 11-12, அத்தியாயம் 5, ஸ்லோக் 8:-

யதி தயார்த்ரம்நா ந ஸதாம்பிகே கதமஹ் விஹிதஹ ச தமோகுணஹ
கமல்ஜஸ்ய ரஜோகுணஸம்பவ: ஸுவிஹித் கிமு ஸத்வகுணோ ஹரி: / (8)

மொழிபெயர்ப்பு :- பகவான் சங்கர் கூறினார் : அன்னையே நீ எங்கள் மீது கருணைகொண்டால், ஏன் என்னை தமோகுணனாக படைத்தாய், தாமரையில் தோன்றிய பிரம்மாவை ஏன் ரஜோகுணனாக படைத்தாய்? விஷ்ணுவை ஏன் சத்வகுணமாக படைத்தாய்? அதாவது உயிர்களின் பிறப்பு இறப்பு என்ற தீய செயலில் எங்களை ஏன் ஈடுபடுத்தினாய்?

ஸ்லோகம் 12:- ரமயஸே ஸ்வபதிம் புருஷ்ம் ஸதா தவ கதிம் ந ஹி விஹ விதம் ஷிவே/ (12)

மொழிபெயர்ப்பு : நீ எப்பொழுதும் உன் கணவர் அதாவது கால் பகவானுடன் இன்பத்தில் ஈடுபடுகிறாய். உன் நிலை யாருக்கும் தெரியாது.

ஸ்ரீ பிரம்மா கூறுகிறார்: நானும் மகாமாயா ஜகதாம்பிகையின் காலில் விழுந்து கேட்டேன், தாயே! "ஏக்மேவாதிவ்திய பிரம்" என்று வேதங்கள் கூறுகின்றன, அது நீங்கள்தானா அல்லது வேறு ஒருவரா?

தேவி கூறினாள்:- நானும் பிரம்மனும் ஒன்றுதான். எங்கள் இருவரிலும் எந்த வித்தியாசம் இல்லை. கௌரி, பிராமி, ரௌத்திரி, வாராஹி, வைஷ்ணவி, சிவா, வாருணி, கௌபேரி, நாரசிங்கி, பாசபி - அனைத்தும் என் உருவம் தான்.

பிரம்மா! இந்த சக்தியை உன் மனைவி ஆக்கிக் கொள். "மஹாசரஸ்வதி" என்று அழைக்கப்படும் இந்த அழகான பெண் எப்போதும் உன் மனைவியாக இருப்பாள்.

பகவதி ஜகதாம்பா விஷ்ணுவிடம் கூறினாள்:- "விஷ்ணு! மனதை கவரும் இந்த "மஹாலஷ்மியை" எடுத்துக்கொண்டு நீயும் புறப்படு. இவள் எப்பொழுதும் உன் இதயத்தில் வீற்றிருப்பாள்."

தேவி சொன்னாள்:- சங்கரா! மனதை மயக்கும் இந்த "மஹாகாளி" கௌரி என்று புகழ் பெற்றவள். அவளை நீ மனைவியாக ஏற்றுக்கொள்.

இப்பொழுது என் காரியம் நிறைவேற விமானத்தில் அமர்ந்து புறப்படுங்கள். கடினமான நேரங்களில் நீங்கள் என்னை நினைத்தால் நான் உங்கள் முன் வருவேன். தேவர்களே! நீங்கள் எப்போதும் என்னையும் நித்திய பரமாத்மாவையும் நினைத்துக்கொண்டே இருங்கள், உங்கள் காரியம் வெற்றியடைவதில் துளி கூட சந்தேகம் இருக்காது.

பிரம்மன் சொன்னார்:- "இப்படிச் சொல்லி, பகவதி தேவி ஜெகதாம்பிகா எங்களிடமிருந்து விடை பெற்றாள். அவள், தூய நடத்தை கொண்ட சக்திகளிலிருந்து, விஷ்ணுவிற்கு மகாலட்சுமியும், சங்கரருக்கு மகாகாளி மற்றும் எனக்கு மகாசரஸ்வதியை மனைவியாக ஏற்றுக்கொள்ள கட்டளையிட்டாள். பிறகு நாங்கள் அங்கிருந்து விடை பெற்றோம்."

சிந்தனைச் சாரம்:- ஒரு பிரபஞ்சத்தின் உண்மை நிலையை பற்றி மகரிஷி வியாசர், நாரதர், பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ஆகியோர் அறியாதவர்கள். ஸ்ரீ துர்க்கை பிரகிருதி என்றும், (ஜோதி நிரஞ்சன்-கால்) பிரம் மற்றும் துர்க்கையும் கணவன்-மனைவி உறவைக் கொண்டுள்ளனர் என்பதும் தெளிவாகிறது. அதனால்தான் பிரகிருதிக்கும் பிரம்ம காலனுக்கும் பிரிக்க முடியாத உறவு இருப்பதாக எழுதப்பட்டுள்ளது. மனைவி அர்தாங்கினி என்றும் அழைக்கப்படுகிறது. ஸ்ரீ பிரம்மா எங்கிருந்து தோன்றினார் என்று அவருக்கே தெரியாது. ஆயிரம் ஆண்டுகள் நீரில் பூமியைத் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு ஆகாய ஒலியை கேட்டு ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தார். தாமரைத் தண்டை பிடித்துக்கொண்டு கீழே இறங்கியபோது அங்கு சேஷ நாகம் மீது விஷ்ணு மயக்கத்தில் படுத்திருந்தார். விஷ்ணுவின் உடலிலிருந்து அழகிய ஆபரணம் அணிந்த ஒரு தேவி வெளியில் வந்து ஆகாயத்தில் அமர்ந்தாள். பிறகு தான் ஸ்ரீ விஷ்ணுவிற்கு மயக்கம் தெளிந்தது. உடனே சிவனும் அங்கு வந்துவிட்டார்.

மேற்கூறிய விளக்கத்திலிருந்து, மூன்று கடவுள்களும் மயக்கத்தில் வைத்து பிறகு மயக்கம் தெளியவைக்கப்பட்டது என்பது நிரூபணமாகிறது. மேலும், வானில் இருந்து விமானம் வந்தது. மூன்று தெய்வங்களையும் விமானத்தில் அமர்த்தி தேவி மேலே கொண்டுசென்றாள். மேலே பிரம்மலோகத்தில் மற்றொரு பிரம்மா, விஷ்ணு, சிவனை பார்த்தார்கள்.

சிந்தியுங்கள்:- பிரம்மலோகத்தில் மற்றொரு பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ஆகியோர் காணப்பட்டனர், இது ஜோதி நிரஞ்சனின் (பிரம்) தந்திரமாகும். அவரே மற்ற மூன்று ரூபங்களை எடுத்துக்கொண்டு, பிரம்மலோகத்தில் மூன்று ரகசிய இடங்களை (ஒன்று ரஜோகுணம், இரண்டாவது சத்வகுணம், மூன்றாவது தமோகுணம் கொண்ட இடம்) உருவாக்கி பிரகிருதியை (துர்க்கை-அஷ்டாங்கி) மனைவியாக வைத்துக் கொள்கிறார். இவர்கள் இருவரும் ரஜோ குணப் பகுதியில் இருக்கும்போது மகா பிரம்மா, மகா சாவித்திரி என்று அழைக்கப்படுகிறார்கள். அங்கே, இவர்களின் சேர்க்கையால் ரஜோகுணம் கொண்ட பிரம்மாவை பிறப்பித்து, அவர் இளமையாகும் வரை மயக்கத்தில் வைத்து வளர்க்கிறார்கள், பிறகு இளமையானவுடன் பிரம்மாவை தாமரையில் வைத்து விழிக்க வைக்கிறார்கள். அதே போல இவர்கள் சத்வகுணப் பகுதியில் மகா விஷ்ணு மற்றும் மகா லஷ்மி வடிவில் (கால பிரம், துர்க்கை) இருந்துகொண்டு கணவன்-மனைவி உறவால், சத்வகுணம் கொண்ட விஷ்ணுவை பிறப்பித்து, பாலகனை மயக்கத்திலேயே வளர்த்து, பிறகு சேஷ நாகத்தின்

மீது வைத்து விழிக்க வைக்கிறார்கள். அதேபோல, தமோகுணம் கொண்ட பகுதியில் இவர்கள் இருவரும் சிவா மற்றும் மகாசிவா வடிவில் தமோகுணமான சிவனை பிறப்பிக்கிறார்கள். இருவரையும் மயக்கத்தில் வைத்து இளமையானவுடன் விழிக்க செய்கிறார்கள்.

பின்னர் மூவரையும் ஒருங்கிணைத்து, அவர்கள் தங்களை கடவுளாக எண்ணாமல் இருக்க விமானத்தில் உட்கார வைத்து மேல் லோகத்தின் காட்சிகளை காட்டுகிறார்கள். குணங்கள் கொண்ட இடத்தை பற்றி புரிந்துகொள்ள ஒரு உதாரணம். ஒரு வீட்டில் மூன்று அறைகளில், ஒரு அறையில் தேச பக்த தியாகிகளின் படங்கள் இருந்தால், அங்கு செல்லும்போது தேச பக்தி உணர்வு வருகிறது. மற்றொரு அறையில் மகாங்கள் மற்றும் முனிவர்களின் படம் இருந்தால், அங்கு சென்றவுடன் மனதில் அமைதியும் பக்தி எற்படுகிறது. மூன்றாவது அறையில் ஆபாச படங்கள், ஆண் பெண் நிர்வாண படங்கள் இருந்தால், அங்கு செல்பவரின் மனதில் காம உணர்வு ஏற்படும். இதே போல, பிரம்மலோகத்தில் பிரம்ம காலன் மூன்று வெவ்வேறு குணங்கலான இடங்களை படைத்துள்ளார். மூன்று கடவுள்கள் தங்கள் குணங்களை எவ்வாறு செலுத்துகிறார்கள் என்றால், உதாரணத்திற்கு, சமையலறையில் மிளகாய் மசாலா போடும்போது, மிளகாயின் குணங்களால் மற்ற அறையில் உள்ளவர்கள் தும்முகிறார்கள். அதாவது மிளகாய் சமையலறையில் உள்ளது, ஆனால் அதன் புலப்படாத சக்தியின் குணங்கள் வேறு அறைகளில் உள்ள மற்றவர்களையும் தாக்குகிறது. அதேபோல, மூன்று கடவுள்களும் அவரவர் லோகத்தில் இருந்துகொண்டே மூன்று லோகங்களிலுள்ள (சொர்க்கம், பூமி, பாதாளம்) உயிரினங்கள் மீது தாக்கத்தை செலுத்துகிறார்கள். அதாவது, மொபைல் போன் வேலை செய்வதுபோல, கண்ணுக்குத் தெரியாத குணங்களின் சக்தியுடன் முப்பெரும் தேவர்களும் தங்கள் தந்தை காலனின் உலகை அவரது உணவுக்காக இயக்குகிறார்கள். துர்க்கைக்கும் தனி லோகம் உள்ளது, அதில் தனது உண்மையான வடிவத்தில் காட்சி அளிக்கிறார். பிறகு அவர்கள் விமானம் துர்க்கையின் தீவை அடைந்தது. அப்போது ஜோதி நிரஞ்சன் அதாவது பிரம்ம காலன், ஸ்ரீ விஷ்ணுவிற்கு குழந்தைப் பருவத்தின் நினைவை கொடுத்தார். அப்பொழுது தான் ஸ்ரீ விஷ்ணு, இந்த துர்க்கை தனது மூவருக்கும் தாய், நான் தொட்டிலில் படுத்திருந்தேன், என்னை தாலாட்டி கொண்டிருந்தாள் என்று கூறினார்.

அப்போது ஸ்ரீ விஷ்ணு, அன்னையே! நீ எங்கள் தாய். நான் (விஷ்ணு), பிரம்மா மற்றும் சங்கர் உன்னால் பிறந்தவர்கள். எங்களுக்கு பிறப்பும் இறப்பும் உள்ளது. நீ தான் பிரகிருதி தேவி என்று கூறினார். ஸ்ரீ சங்கரரும் இந்த விஷயத்தை ஏற்றுக்கொண்டு, தமோகுண லீலை செய்யும் நானும் உங்கள் பிள்ளை தான், ஸ்ரீ விஷ்ணுவும் ஸ்ரீ பிரம்மாவும் உங்களிடமிருந்து பிறந்தவர்கள் என்று கூறினார்.

பிறகு இந்த தேவர்களுடைய திருமணத்தை துர்க்கை நடத்தினாள். துர்க்கை தனது சக்தியால் தன்னுடைய மற்ற மூன்று ரூபங்களை படைத்து, பிரம்மாவிற்க்கு சாவித்திரியும், விஷ்ணுவுக்கு லட்சுமியும், சிவனுக்கு (உமா) காளியை மனைவியாக்கி, மூவரையும் விமானத்தில் அமர்த்தி அவரவர் லோகங்களுக்கு துர்க்கை அனுப்பிவைத்தாள்.

ஜோதி நிரஞ்சன் தனது சுவாசம் மூலம் நான்கு வேதங்களையும் கடலுக்குள் மறைத்து வைத்தார். பிறகு முதன் முதலில் கடலைக் கடையும்போது, அதை மேலே தோன்ற வைத்தார். ஜோதி நிரஞ்சனின்

(கால்) உத்திரவால், துர்க்கை நான்கு வேதங்களையும் ஸ்ரீ பிரம்மாவிடம் கொடுத்தார். பிரம்மா தனது தாய் துர்க்கையிடம், வேதங்கள் கூறும் பிரம் (இறைவன்) நீங்களா அல்லது வேறு கடவுளா என்று கேட்டார்.

துர்க்கை பிரம்ம காலனுக்கு பயந்து உண்மையை மறைக்க, தானும் பிரம்ம காலனும் ஒன்று தான் என்றாள். இருப்பினும் உண்மை மறையவில்லை. துர்க்கை மீண்டும் சொன்னாள், "நீங்கள் மூவரும் என்னையும் பிரம்ம காலனையும் நினைத்துக்கொண்டே இருங்கள். அதனால், கடினமான காரியம் வந்தால் உடனே உங்கள் முன் தோன்றுவேன்".

சிறப்பு :- ஏனென்றால் காலன் துர்க்கையிடம், என்னுடைய ரகசியத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம் என சொல்லியிருந்தான். இதனால், துர்க்கை உலகம் முழுவதையும் உண்மையை அறியவிடாமல் வைத்திருக்கிறாள். அவள் தன் மகன்களையும் ஏமாற்றுகிறாள். ஏனென்றால், காலன் தினமும் ஒரு லட்சம் மனித உயிரினங்களை உண்ணும்படி சபிக்கப்பட்டான். எனவே, தனது மூன்று மகன்கள் மூலம் தனது உணவைத் தயாரித்துக் கொள்கிறான். ஸ்ரீ பிரம்மாவின் ரஜோகுணம் அனைத்து உயிரினங்கள் மூலம் சந்ததிகளை உருவாக்குகிறது. ஸ்ரீ விஷ்ணுவின் சத்வகுணம் மூலம் உயிர்களில் மோகத்தை ஊக்குவித்தும், ஒருங்கிணைத்தும் காலனின் வலைக்குள் சிக்கவைத்து, ஸ்ரீ சிவன் மூலம் அவைகளை அழித்து தனது உணவை தயார் படுத்திக் கொள்கிறான்.

பிறகு இந்த மூன்று தெய்வங்களையும் கூட கொன்று உண்கிறான். பிறகு புதிதாக மூன்று மகன்களை பிறப்பித்து தன் காரியத்தைத் தொடர்கிறான். மேலும் முந்தைய பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் சொர்க்கம்-நரகம், 84 நான்கு லட்சம் உயிரினங்களில் பிறப்பு-இறப்பு, என சுற்றிக்கொண்டே இருப்பார்கள். இதன் ஆதாரம் சிவமகாபுராணம், ருத்ர சம்ஹிதை, முதல் கண்டம், சிருஷ்டி, அத்தியாயம் 6 முதல் 9 வரையில் காணலாம்.

## ஸ்ரீ சிவ மஹா புராணத்தின் சிந்தனைச் சாரம்

## ஸ்ரீ சிவமகாபுராணம

ஸ்ரீ சிவ மகாபுராணம் (மொழி பெயர்ப்பு:- ஸ்ரீ ஹனுமான் பிரசாத் பொத்தார், வெளியீடு: கோவிந்த பவன் காரியாலயம், கீதா பிரஸ் கோரக்பூர்) அத்தியாயம் 6 ருத்ர சம்கிதை முதல் காண்டம் (படைப்பு)

ஸ்ரீ சிவன் மற்றும் ஸ்ரீ சிவா பற்றி தனது மகன் நாரதர் கேட்டபொழுது, பிரம்மா சொன்னார், (பக்கம் 100 முதல் 120 வரை) பரபிரம்மத்தைப் பற்றிய விளக்கங்கள், அறிவாலும் அறியாமையாலும் இப்படி முடிவு செய்யப்படுகிறது, அந்த உருவமற்ற பரபிரம்மன், உருவம் கொண்டு சதாசிவன் ரூபத்தில் மனித வடிவில் தோன்றினார். சதாசிவன் தனது உடலில் இருந்து ஒரு பெண்ணை உருவாக்கினார், அதை பிரதான், பிரகிருதி, அம்பிகா, திரிதேவ்ஜனனி (பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரின் தாய்) என்று அழைக்கப்படுகிறது. அவளுக்கு எட்டு கைகள் உள்ளன.

### ஸ்ரீ விஷ்ணுவின் தோற்றம்

சதாசிவனாகிய அவர், பரம் புருஷ், ஈஸ்வர், சிவன், ஷம்பு, மகேஸ்வர் என்றும் அழைக்கப்படுகிறார். அவர் தனது உடல் அனைத்திலும் சாம்பல் பூசி இருப்பார். அந்த பிரம்ம காலன் பிரம்மலோகத்தில் தமோகுணம்

கொண்ட காசி எனப்படும் ஒரு சிவலோகத்தை உருவாக்கினார். சிவனும், சிவாவும் இணைந்து விஷ்ணு என்ற மகனை பிறப்பித்தார். அத்தியாயம் 7 ருத்ர சம்கிதா, சிவபுராணம், (பக்கம் 103, 104)

**ஸ்ரீ பிரம்மா மற்றும் சிவனின் தோற்றம்**

அத்தியாயம் 7,8,9 (பக்கம் 105 முதல் 110 வரை) ஸ்ரீ பிரம்மா கூறினார்:- சிவன் மற்றும் சிவாவும் (பிரம்ம காலன் மற்றும் பிரகிருதி, துர்க்கை) கணவன்-மனைவி போல இணைந்து என்னை உருவாக்கி, மயக்கி தாமரையில் அமர்த்தினர். இந்த காலன், மகாவிஷ்ணு ரூபத்தில் அவரது தொப்புளில் இருந்து தாமரையை உருவாக்கினார். பிறகு சுயநினைவு பெற்று தாமரையின் வேரைத் தேடினேன், ஆனால் தோல்வியடைந்தேன். பிறகு வானத்திலிருந்து தவம் செய்யும்படி ஒலியை கேட்டேன். நான் தவம் செய்தேன். பிறகு ஒரு பிரச்சினையால் எனக்கும் விஷ்ணுவுக்கும் இடையே சண்டை வந்தது. அப்போது, எங்களுக்கு இடையே ஒரு அக்னி லிங்கம் மற்றும் "ஓம் ஓம்" என்ற நாதம் தோன்றியது, அதில் அ-வு-ம என்ற மூன்று எழுத்து இருந்தது. பிறகு சதாசிவன் ருத்ர ரூபத்தில் ஐந்து முகம் கொண்ட மனிதனாக துர்க்கையுடன் தோன்றினார்.

பிறகு திடீரென்று சங்கரரை தோன்றவைத்தார் (இவர் முதலில் மயக்கத்தில் இருந்தார், பிறகு விழிக்கவைத்து மூவரையும் ஒருங்கிணைத்து மேலும் நீங்கள் மூவரும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவை மேற்கொள்ளலாம் என்று கூறினார். ஸ்ரீ பிரம்ம ரஜோகுணமும், ஸ்ரீ விஷ்ணு சத்வகுணமும் மற்றும் ஸ்ரீ சிவன் தமோகுணம் கொண்டவர் ஆவார். இவ்வாறு மூன்று தெய்வங்களுக்கும் குணங்கள் உள்ளன, ஆனால் சிவா (பிரம்ம காலன்) குணம் அற்றவர். (பக்கம் 110)

சிந்தனை சாரம் :- மேற்கண்ட விளக்கத்திலிருந்து, பிரம்ம காலனான சதாசிவன் மற்றும் பிரகிருதி (துர்க்கை), ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு மற்றும் ஸ்ரீ சிவன் ஆகியோரின் தாய் தந்தை என்று தெளிவாகிறது. மேலும் துர்க்கை, பிரகிருதி, பிரதான் என்றும் அழைக்கப்படுகிறது, அதற்கு எட்டு கைகள் உள்ளன. அவள் சதாசிவன் அதாவது ஜோதி நிரஞ்சன் உடலில் இருந்து அதாவது வயிற்றில் இருந்து வெளிப்பட்டவள். பிரம்ம காலன் மற்றும் பிரகிருதி (துர்க்கை) அனைத்து உயிரினங்களையும் குழப்பத்தில் வைக்கின்றன. தங்கள் மகன்களிடம் கூட உண்மையைச் சொல்வதில்லை. காரணம், பிரம்ம காலனின் 21 பிரபஞ்சங்களில் உள்ள உயிரினங்களுக்கு, காலன் (பிரம் - ஜோதி நிரஞ்சன்) அக்னிபறையில் சுட்டு உண்பது தெரியக்கூடாது. அதனால்தான், நம்மைப் பிறப்பிலும் இறப்பிலும் துன்புறுத்துகிறார் மற்றும் தனது மூன்று மகன்கள், ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு மற்றும் தமோகுணம் சிவன் ஆகியோர் மூலம் படைத்து, காத்து, அழித்து தனது உணவைத் தயாரிக்கிறார். ஏனென்றால் காலன் தினமும் ஒரு லட்சம் மனித உயிரினங்களை உண்ண சாபம் பெற்றுள்ளான். கால் (பிரம்) மற்றும் பிரகிருதி (துர்க்கை) ஆகியோரின் கணவன்-மனைவி உறவால் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரின் பிறப்பு பற்றிய விவரம் புனித கீதையில் பார்க்கவும்.

## மூன்று குணங்கள் யாவை ஆதாரங்களுடன்

மூன்று குணங்களும், பிரம்மா ரஜோகுணம், விஷ்ணு சத்வகுணம், சிவன் தமோகுணம் ஆவார். பிரம்ம காலன் மற்றும் பிரகிருதி (துர்க்கைக்குப்)

பிறந்த இந்த மூவரும் அழியக்கூடியவர்கள்.

ஆதாரம்:- ஸ்ரீ சிவ மஹாபுராணம், கீதாபிரஸ் கோரக்பூர் வெளியீடு, எடிட்டர் ஸ்ரீ ஹனுமான் பிரசாத் போதார், பக்கம் 110, அத்தியாயம் 9, ருத்ர சம்கிதா:- "இவ்வாறு பிரம்மா விஷ்ணு சிவன் மூவரும் குணங்கள் கொண்டவர்கள், ஆனால் சிவா (பிரம்ம காலன்) குணமற்றவர் எனப்படுவார்".

இரண்டாவது ஆதாரம் :- ஸ்ரீமத் தேவி பகவத்புராணம், கீதாபிரஸ் கோரக்பூரிலிருந்து வெளியீடு, எடிட்டர் ஸ்ரீ ஹனுமன் பிரசாத் போதார், சிமன் லால் கோஸ்வாமி, மூன்றாம் ஸ்கந்த், அத்யாயம் 5, பக்கம் 123:-

பகவான் விஷ்ணு துர்க்கையை துதித்தார், "நான் பிரம்மா மற்றும் சிவன் உன்னால் பிறந்தவர்கள். எங்களுக்கு பிறப்பும் இறப்பும் உண்டு. நாங்கள் நிலையானவர்கள் அல்ல. நீயே நித்தியமானவள், உலகத்தாய், பிரகிருதி மற்றும் சனாதன தேவி ஆவாய்."

பகவான் சங்கர் துதித்தார்: "பகவான் விஷ்ணுவும் பிரம்மாவும் உன்னால் தோன்றியவர்கள் என்றால், அதன் பிறகு பிறந்த நான் தமோகுணம் கொண்ட என்னையும் படைத்தவள் நீயே. இந்த உலகத்தை படைத்து, காத்து, அழிப்பதில் உன் குணங்கள் திரனாக உள்ளன. இந்த மூன்று குணங்களால் பிறந்த நாங்கள் மூவரும் கடமையில் விதிகளின்படி அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

மேற்கூறிய விளக்கம் ஹிந்தியில் மட்டுமே மொழிபெயர்க்கப்பட்ட ஸ்ரீ தேவி மகாபுராணத்தில் உள்ளது. அதில் சில உண்மைகளை மறைக்கப்பட்டுள்ளன.

எனவே சமஸ்கிருதத்துடன் ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஸ்ரீ மத்தேவி பாகவத் மஹாபுராணம் சபாஷ்டிகத்தில் உள்ள ஆதாரங்களை பார்க்கவும் (வெளியீடு: கேம்ராஜ் ஸ்ரீ கிருஷ்ணதாஸ், மும்பை, மூன்றாம் ஸ்கந்தம், அத்தியாயம் 4, பக்கம் 10, ஸ்லோகம் 42)

பிரம்மா - அஹம் ஈஷ்வர்ஹ பில் தே பிரபாவாத்ஸர்வே வயம் ஜநி யுதா ந யதா தூ நித்யஹ: கே அன்யே ஸுராஹ ஷாத்மக் பிரமுகாஹ் ச நித்யா நித்யா த்வமேவ் ஜனனி பிரகர்ரதிஹ புராணா / (42)

மொழிபெயர்ப்பு:- அன்னையே! நான், பிரம்மா, சிவன் மூவரும் உன்னால் பிறந்தவர்கள், நாங்கள் நித்தியமானவர்கள் அல்ல, அதாவது அழியாதவர்கள் அல்ல. பிறகு மற்ற தெய்வங்கள் எப்படி நித்தியமாக இருக்க முடியும். நீ அழிவற்ற பிரகிருதி, சனாதன தேவி ஆவாய்.

பக்கம் 11-12, அத்தியாயம் 5, ஸ்லோக் 8:-

யதி தயார்த்ரம்நா ந ஸதாம்பிகே கதமஹ் விஹிதஹ ச தமோகுணஹ
கமல்ஜஸ்ய ரஜோகுணஸம்பவ: ஸுவிஹித் கிமு ஸத்வகுணோ ஹரி: / (8)

மொழிபெயர்ப்பு :- பகவான் சங்கர் கூறினார் : அன்னையே நீ எங்கள் மீது கருணைகொண்டால், ஏன் என்னை தமோகுணனாக படைத்தாய், தாமரையில் தோன்றிய பிரம்மாவை ஏன் ரஜோகுணனாக படைத்தாய்? விஷ்ணுவை ஏன் சத்வகுணமாக படைத்தாய்? அதாவது உயிர்களின் பிறப்பு இறப்பு என்ற தீய செயலில் எங்களை ஏன் ஈடுபடுத்தினாய்?

ஸ்லோகம் 12 : ரமயஸே ஸ்வபதிம் புருஷ்ம் ஸதா தவ கதிம் ந ஹி விஹ விதம் ஷிவே/ (12)

மொழிபெயர்ப்பு : நீ எப்பொழுதும் உன் கணவர் அதாவது கால் பகவானுடன் இன்பத்தில் ஈடுபடுகிறாய். உன் நிலை யாருக்கும் தெரியாது.

## முடிவுரை

ஸ்ரீமத் பகவத் கீதையை இதே பிரம்ம காலன் தான் ஸ்ரீ கிருஷ்ணரின் உடலுக்குள் ஆவியாக புகுந்து கூறியுள்ளார். மேற்கூறிய புனித புராணங்கள், துர்க்கை தான் பிரகிருதி என்று நிரூபித்துள்ளது. மேலும் சதாசிவன் அதாவது பிரம்ம காலனும் பிரகிருதியும் கணவன் மனைவி போல் இணைந்து ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன் ஆகியோரை உருவாக்கியுள்ளனர். புனித கீதையும் இதற்3கு சாட்சி. கீதை எல்லா சாஸ்திரங்களின் சாரமாகும். எனவே அதில் சுருக்கமான விளக்கங்கள் குறியீட்டு வார்த்தைகளில் உள்ளது. இதை ஒரு தத்துவதரிஷி ஞானியால் மட்டுமே விளக்க முடியும்.

இப்போது புனித கீதைக்குள் செல்வோம். அத்தியாயம் 14, ஸ்லோகம் 3, 4, 5 இல், புனித பகவத் கீதையை அருளிய பிரம்ம காலன், ஸ்ரீ கிருஷ்ணரின் உடலில் ஆவியாக புகுந்து கூறுகிறார், பிரகிருதி (துர்க்கை) என் மனைவி ஆவாள், பிரம் ஆகிய நான் அவள் கருவில் விதையை விதைக்கிறேன், அதிலிருந்து அனைத்து உயிர்களும் பிறக்கின்றன. அனைவருக்கும் நான் தந்தை ஆவேன், பிரகிருதி (துர்க்கை) தாய் ஆவாள். பிரகிருதி (துர்க்கை) மூலம் உருவான மூன்று குணங்கள் கர்மவினைப்படி ஆன்மாவை உடலில் பிணைக்கின்றன, இந்த முக்குணங்கள் தான் அனைத்து உயிர்களையும் பாவபுண்ணிய அடிப்படையில் உருவாக்கி, பாதுகாத்து, அழித்து சிக்க வைக்கின்றன. அத்தியாயம் 11, ஸ்லோகம் 32 இல், நான் தான் கால்(காலன்), அனைவரையும் விழுங்குவதற்கு தோன்றியுள்ளேன் என்று கூறப்பட்டுள்ளது. அத்தியாயம் 11, ஸ்லோகம் 21 இல் அர்ஜுனன் சொல்கிறான், “நீங்கள் ரிஷிகளையும் கூட விழுங்குகிறீர்கள், தெய்வங்களும் சித்தர்களும் உங்களிடம் பாதுகாப்புக்காக மன்றாடுகிறார்கள். ஆனால் நீங்கள் அனைவரையும் சாப்பிடுகிறீர்கள். சிலர் உங்கள் பற்களில் சிக்கியுள்ளார்கள், சிலர் உள்ளே செல்கிறார்கள்.”

## ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, தமோகுணம் சிவன் ஆகியோரின் வழிபாடு பயனற்றது

கீதையை கூறிய கடவுள் அத்தியாயம் 7 ஸ்லோகம் 12 முதல் 15 வரையில், மூன்று குணங்களை பூஜிப்பவர்கள் தங்கள் அறிவை இழந்துவிட்டார்கள், இதற்க்கு மேலான என்னுடைய வழிபாட்டையும் செய்வதில்லை என்று கூறுகிறார். மேலும் மூன்று குணங்களை (பிரம்மா, விஷ்ணு, சிவன்) வழிபடுபவர்கள் அக்ஞானிகள், இந்த மூவரை விட மேலான என்னை பூஜிப்பது இல்லை. கீதையை கூறிய பிரபு, அத்தியாயம் 7, ஸ்லோகம் 18 இல், தன்னுடைய வழிபாடும் சிறந்ததல்ல என கூறுகிறார். எனவே, அத்தியாயம் 15 ஸ்லோகம் 4, அத்தியாயம் 18, ஸ்லோகம் 62 மற்றும் 66 இல், வேறு ஒரு பரமேஸ்வரரிடம் சரணடைய கூறுகிறார். கீதையின் ஞானம் சொல்லப்பட்டபோது, 18 புராணங்களும் 11 உபநிஷ ங்களும், ஆறு சாஸ்திரங்களும் இல்லை. இந்த நூல்கள் பிறகு ரிஷிகளால் தங்கள் அனுபவங்களின்படி புத்தகங்களில் எழுதினார்கள். அப்பொழுது புனித நான்கு வேதங்கள் மட்டுமே சான்றாக இருந்தன. அவைகளே சுருக்கமாக புனித கீதையில் விவரிக்கப்பட்டுள்ளன.

*****

# சாஸ்திர விவாதத்தின் பொருள்

**சாஸ்திர விவாதங்கள் இறைவனுடைய தத்துவஞானத்தைக் குழப்பின**

**சாஸ்திர விவாதங்கள் என்றால் என்ன?**

**இரண்டு அறிஞர்கள் விவாதம் செய்வதை, அதிக அளவிலான பார்வையாளர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். வெற்றி தோல்வியின் முடிவு பார்வையாளர்களின் கையில் இருந்தது, விவாதகாரர்கள் என்ன சொல்கிறார்கள் என்று இவர்களுக்கே தெரியாது. தொடர்ந்து சமஸ்கிருதத்தை அதிகமாக உச்சரிப்பவர்களை, பார்வையாளர்கள் கைதட்டி வெற்றிச் சான்று வழங்கினர். இவ்வாறே அறிஞர்களின் வெற்றி தோல்வியின் முடிவு படிப்பறிவு இல்லாதவர்களின் கையில் இருந்தது.**

ஆதாரம்:- "ஸ்ரீ மத் தயானந்த் பிரகாஷ்" புத்தகத்திலிருந்து ஒரு பகுதி, எழுத்தாநர்:- ஸ்ரீ சத்யானந்த் ஜி மகராஜ், பதிப்பாளர்: சர்வதேஷிக் ஆர்ய பிரதிநிதி சபா 3ஃ5 மகரிஷி தயானந்த பவன், ராம் லீலா மைதானம், புது தில்லி - 2, கங்கா கண்டம், 8வது சர்க், பக்கம் 89, உள்ளது அப்படியே தரப்படுகிறது".

மூன்று நாட்கள்வரை, மாலை வேளை கிருஷ்ணானந்தர் மற்றும் சுவாமி ஜி இடையே விவாதம் நடைபெற்றது. ஒரு நாள், ஒருவர் கிருஷ்ணானந்தரிடம் கடவுள் உருவம் பற்றிய விவாதத்தைத் தொடங்கினார். சுவாமிஜிக்கு இது மிகவும் பிடித்த தலைப்பாக இருந்தது. அவர், சரளமாக சமஸ்கிருதம் பேசிக்கொண்டு, கடவுள் உருவமற்றவர் என்று நிரூபிக்க வேதங்கள் மற்றும் உபநிஷங்களிலிருந்து தொடர்ச்சியான ஆதாரங்களை இடைவிடாமல் வாசித்தார், அவற்றின் அர்த்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி கிருஷ்ணானந்தரை வற்புறுத்தினார். கிருஷ்ணானந்தர் ஒன்றும் பேச இயலவில்லை. அவர் மக்கள் பக்கம் திரும்பியபடி யதா யதா ஹி தர்மஸ்ய கிலானிர் பவதி பாரத....... என்ற கீதையில் உள்ள ஸ்லோகத்தைப் படிக்கத் தொடங்கினார். சுவாமி ஜி சத்தமாக, நீங்கள் என்னிடம் விவாதம் செய்கிறீர்கள், என்னைப் பாருங்கள்" என்றார். ஆனால் கிருஷ்ணானந்தருக்கு வேர்த்த்துவிட்டது, தொண்டை அடைத்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு சாஸ்திரத்தில் இருந்து ஒரு கேள்வி கேட்டார். லட்சணத்தின் லட்சணம் சொல்லுங்கள் என்றார். உடனே சுவாமிஜி சொன்னார். காரணத்திற்கு காரணம் கிடையாதது போல, லட்சணத்திற்கு லட்சணம் கிடையாது என்றார். மக்கள் தங்கள் சிரிப்பால் கிருஷ்ணானந்தரின் தோல்வியை வெளிப்படுத்தினார்கள், அவர் வெட்கப்பட்டு சென்றுவிட்டார்.

**எனவே, அறிஞர்களின் வெற்றியும் தோல்வியும் படிப்பறிவு இல்லாதவர்கள் முடிவு செய்து வந்தனர் என்பது மேலே குறிப்பிட்டுள்ள கட்டுரையில் தெளிவாகிறது. சுவாமி தயானந்தர் சமஸ்கிருதத்தை தொடர்ந்து வாசித்தார், பார்வையாளர்கள் சிரித்து கைதட்டி மகரிஷி தயானந்தரை வெற்றியாளராக அறிவித்து கடவுளை உருவமற்றவர் என்று ஏற்றுக்கொண்டார். ஆனால், யஜுர் வேதம், அத்தியாயம் 1, மந்திரம் 15, மற்றும் அத்தியாயம் 5, மந்திரம் 1 இல், இறைவன் உருவத்தில் உடலுடன் உள்ளார் என்பது தெளிவாக உள்ளது.**

சுவாமி தயானந்தர் சமஸ்கிருத மொழியில் பேசியதற்கு ஆதாரம்: “சத்யார்த் பிரகாஷ்” முன்னுரையின், பக்கம் 8ல், இது வெளியிட்டபோது, எனக்கு ஹிந்தி தெரியாது, ஏனென்றால் சிறுவயது முதல் கி.பி 1822 (சம்வத் 1939) வரை நான் சமஸ்கிருதத்தில் பேசிக் கொண்டிருந்தேன் என்று கூறியுள்ளார். எனவே அவர் சமஸ்கிருதத்தில் விவாதம் செய்வது நிரூபணமாகிறது. பிறகு 1883 இல் சுவாமிஜி காலமானார். எனவே அவர் இறப்பதற்கு ஒரு வருடம் முன்பு தான் ஹிந்தி அறிந்திருந்தார் என்பது தெளிவாகிறது. இதற்கு முன், அவர் சமஸ்கிருதத்தில் தான் விவாதங்களை நிகழ்த்தினார். சமஸ்கிருதம் தெரியாத மக்கள் அவரது விவாதத்தின் வெற்றி தோல்வியை முடிவு செய்தார்கள். இப்போது, இந்த தாஸ் (சந்த் ராம்பால் ஜி கூறுவது, புனிதமான அனைத்து மதங்களையும் சார்ந்த இறைவனை நேசிக்கும் பக்தர்கள் தத்துவஞானம் அறிந்து, மாணிக்கத்திற்கும் மண்ணாங்கட்டிக்கும் உள்ள வேற்றுமையை அறிந்து கொள்ளுங்கள்.

கதை : ஒரு ஜமீன்தாரருக்கு 16 மற்றும் 18 வயதில் இரு மகன்கள் இருந்தனர். ஜமீன்தாரர் இறந்து போனார். தாயானவள், தந்தையிடம் பெற்ற மாணிக்கக் கற்களை ஒரு துணியில் சுற்றி, பிள்ளைகளிடம் கொடுத்து, பணம் இல்லாததால் இதை பெரியப்பாவிடம் கொடுத்து, தொழில் எதுவும் தெரியாததால் அவர்களை வியாபாரத்தில் இணைத்து கொள்ளும்படி சொல்லச் சொன்னார். பிள்ளைகள் பெரியப்பாவிடம் சென்று மாணிக்கத்தை கொடுத்து அனைத்தையும் கூறினார்கள். அவர் மாணிக்க கற்களை பார்த்துவிட்டு, “குழந்தைகளே, இந்த மாணிக்கத்தை உங்களுடைய தாயிடமே திருப்பிக் கொடுத்துவிடுங்கள். சமயம் வரும்போது பயன்படுத்தலாம்.” என்று சொன்னார். பிறகு அவர் இரண்டு பிள்ளைகளையும் வேறு நகரத்திற்கு அழைத்துச் சென்று வியாபாரத்தில் ஈடுபடுத்தினார். ஒருநாள் அவர் பிள்ளைகளிடம் வேறு ஒரு மாணிக்கத்தைத் தந்து அடகு வைத்து விற்றுவருமாறு சொன்னார்.

பிள்ளைகளும் அடகுகாரரிடம் சென்று மாணிக்கத்தை கொடுத்தனர். அதை சோதனை செய்த அடகுகாரர், “இது மாணிக்கம் அல்ல, போலிக்கல், உண்மையான மாணிக்கம் ஒன்பது லட்சம் ரூபாய் ஆகும், இந்த போலிக்கல் நூறு ரூபாய்க்குக் கூட போகாது என்று சொல்லி திட்டிவிட்டு அதைத் திருப்பிக் கொடுத்து அனுப்பிவிட்டார். பிள்ளைகள் அழுதுகொண்டே பெரியப்பாவிடம் வந்து இது மாணிக்கம் அல்ல கற்கள் என்று நடந்ததைச் சொன்னார்கள். பெரியப்பா அடகுகடைகாரர் சொன்னது சரி தான், இது மாணிக்கம் அல்ல தவறு நடந்துவிட்டது, தெரியாமல் போலிக்கல்லை கொடுத்துவிட்டேன் என்றார். பிறகு உண்மையான மாணிக்கத்தை கொடுத்து திருப்பி அனுப்பினார். இரு பிள்ளைகளும் மீண்டும் அந்த அடகுகாரரிடம் சென்று முன்பு தனது பெரியப்பா தவறுதலாக மாற்றி கொடுத்துவிட்டார் என்று சொல்லி மீண்டும் மாணிக்கத்தை கொடுத்தார்கள். அதை சோதித்த அடகுகாரர் இது தான் உண்மையான மாணிக்கம் என்றார். பிறகு பிள்ளைகள் பணம் வாங்கி கொண்டு திரும்பினர். பிறகு அந்த பெரியப்பா, பிள்ளைகளிடம், இது போதாது, உங்கள் தாயிடம் கொடுத்து வைத்துள்ள மாணிக்கத்தையும் கொண்டு வாருங்கள் என்றார். பிள்ளைகளும் தாயிடம் சென்று துணியில் சுற்றி வைத்திருந்த மாணிக்கத்தை வாங்கிப் பார்த்தனர், அத்தனையும் போலி எனத் தெரிந்தது. பிள்ளைகள் மீண்டும் பெரியப்பாவிடம் வந்து தனது தாயிடம் உள்ளது போலியான மாணிக்கம் என்று சொன்னார்கள்.

பிறகு பெரியப்பா சொன்னார், இது போலி தான், ஆனால் இதை நீங்கள் கொண்டுவந்த அன்றைக்கே நான் சொல்லிருந்தால் என்னை நம்பி இருக்க மாட்டீர்கள். தந்தை இல்லாததால் நான் ஏமாற்றி விட்டதாக சொல்லியிருப்பீர்கள். பிள்ளைகளே, இன்று உங்களை மாணிக்கத்திற்கும் மண்ணுக்கும் மதிப்பிடும் திறனுடையவர்களாக ஆக்கினேன் என்றார்.

சிறப்பு : அதேபோல், இன்று இந்த தாசனாகிய நான் உங்களுக்கு தத்துவஞானத்தை போதித்து, வேதங்களை புரிந்துகொண்ட நீங்களே உண்மை மற்றும் போலி சாதுக்களை பிரித்து அறியும் திறனை உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன். இறைவனை நேசிக்கும் புண்ணிய ஆன்மாக்கள் முதலில் சாஸ்திரங்களை புரிந்து கொண்டு, இந்த ரிஷிகளும் மகான்களும் என்ன கற்பிக்கிறார்கள் என்பதை நீங்களே அறிந்துகொள்ளுங்கள்.

## மகரிஷி சர்வானந்தரும் (கவிர்தேவ்) பரமேஸ்வரரும் சாஸ்திர விவாதம்

சர்வானந்தர் எனும் ஒரு மகரிஷி இருந்தார். அவருடைய தாயார் ஸ்ரீமதி சாரதா தேவி, தனது பாவ கர்மவினைகளின் பலனாக நோய்வாய்பட்டிருந்தார். உடல் நோய் தீர எல்லா பூஜைகளும், மந்திரம், தந்திரம் எல்லாம் வருடக்கணக்கில் செய்தார், வைத்தியர்களிடமும் சென்றார் ஆனால் எந்த பயனும் இல்லை. அன்றைய மகரிஷிகளிடம் தீட்சை பெற்றார், ஆனால் அனைத்து ரிஷிகளும் சாரதாவிடம், இது முன்ஜென்ம கர்மவினை அனுபவித்தே ஆக வேண்டும் என சொல்லிவிட்டனர். ராமர் வாலியை வதம் செய்த பாவத்திற்காக அவர் மீண்டும் பூமியில் கிருஷ்ணனாகப் பிறந்தார். வாலி வேட்டைக்காரனாகப் பிறந்து கிருஷ்ணனின் காலில் விஷ அம்பை எய்தி அவரை கொன்றான் என்று சொன்னார்கள். இதெல்லாம் கேட்ட சாரதா, இது எனது முன்ஜென்ம கர்ம பலன் என்று எண்ணி துக்கம் அனுபவித்தாள். ஒருமுறை, ஒரு உறவினர் சொன்னது கேட்டு காசியில் (ஸ்வயம்பு) தானே தோன்றிய (கவிர்தேவ்) கபீர் பரமேஷ்வரரிடமிருந்து தீட்சை பெற்றார், அதே நாள் நோயிலிருந்து பூரணமாக விடுபட்டார். ஏனென்றால், புனித யஜுர்வேதம், அத்தியாயம் 5, மந்திரம் 32 இல், “கவிரங்காரிரசி” அதாவது (கவிர்) கபீர் (அங்காரிரசி) பாவத்தின் பகைவன். அத்தியாயம் 8 மந்திரம் 13ல், பரமாத்மா (ஏனஸஹ ஏனஸஹ) கொடிய பாவங்களையும் அழித்துவிடுவார் என்று எழுதப்பட்டுள்ளது. கபீர் பரமேஸ்வரர் சொன்னார், “மகளே சாரதா, இந்த சுகம் உங்களுடைய விதியில் இல்லை. நான் என்னுடைய சக்தியிலிருந்து தருகிறேன். நான் பாவங்கள் அழிப்பவன் என்பதற்கு ஆதாரம் அளித்துள்ளேன். உங்கள் மகன் மஹரிஷி சர்வானந்தன், “இறைவன் பாவத்தை அழிப்பதில்லை.” என்று சொல்கிறார். எனவே, நீங்கள் தீட்சை பெற்று மோட்சம் அடையுங்கள்” என்றார். சாரதா அவர்கள் கபீர் பரமேஸ்வரரிடம் தீட்சை பெற்று நலம் பெற்றாள். சாரதாவின் மகனான மகரிஷி சர்வானந்தர் சாஸ்திரம் நன்கு கற்றவர். தனது காலத்து வித்வான்களை எல்லாம் விவாதத்தில் ஜெயித்தவர் ஆவார். எனவே அவர் தன் தாயிடம் சென்று தன் பெயரை சர்வஜித் (எல்லோரையும் ஜெய்தவர்) என்று மாற்றச் சொன்னார். சாரதா, இன்னொரு வித்துவானான தன்னுடைய குருவான கவிர்தேவன் அவர்களை, ஜெயித்து விட்டு வந்தால் அவன் பெயரை சர்வஜித் என்று மாற்றுவதாக வாக்களித்தார். இதை கேட்டு

சர்வானந்தன் சிரித்தான், அந்த (தானக்) நெசவாளர் கபீர் படிக்காதவர். அவரை தோற்கடிக்க என்ன? இதோ வந்துவிடுகிறேன் என்றான்.

மஹரிஷி சர்வானந்தர் அனைத்து சாஸ்திர நூல்களையும் ஒரு மாட்டு வண்டியில் வைத்து கபீர் பரமேஸ்வரர் குடிசைக்கு சென்றார். அங்கு கிணற்றருகில் கபீர் பரமேஸ்வருடைய வளர்ப்பு மகளான கமாலியை சந்தித்தார். பிறகு குடிசை வாசலில் நின்று சர்வானந்தர் ரிஷி கமாலியிடம், ஒரு கிண்ணத்தில் வழிய வழிய நீரை நிரப்பி கபீர் சாகேப் ஜியிம் கொடுத்து அவருடைய பதிலை பெற்று வரச் சொன்னார். கமாலி, சிறிதும் நீர் சிந்தாமல் அந்த கிண்ணத்தைக் கொண்டு சென்று, கபீர் ஜியிடம் கொடுக்க, கபீர் சாகேப் ஜி கிண்ணத்தில் ஒரு ஊசியைப் போட்டு அனுப்பினார். கமாலி கிண்ணத்தை திரும்பக் கொண்டு வந்ததும், சர்வானந்தர், கபீர் ஜி என்ன பதில் சொன்னார்? என்று கேட்டார். கமாலி, அவர் ஒரு ஊசியைப் போட்டுக் கொடுத்தார் என்றாள். அப்போது மகரிஷி சர்வானந்தர் உள்ளே கபீர் பரமேஸ்வரிடம் (கவிர்தேவ்) வந்து என் கேள்விக்கு நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள் என்று கேட்டார். கபீர் ஜி உங்கள் கேள்வி என்ன என்று கேட்டார். சர்வானந்தர் சொன்னார், "நான் எல்லா வித்துவான்களையும் சாஸ்திர விவாதத்தில் ஜெயித்தவன். என் பெயரை சர்வஜித் என்று மாற்ற அம்மாவிடம் கேட்டபோது, உங்களை தோற்கடித்த பிறகே பெயரை மாற்றுவதாக கூறியுள்ளார். நான் ஞானத்தில் நிறைந்தவன் என்று காட்டித்தான் நீரால் நிரம்பிய கிண்ணத்தை அனுப்பினேன். இனி, யாரும் எனக்கு ஞானம் புகட்ட முடியாது என்பதுதான் இதன் பொருள். எனவே நீங்கள் தோற்றுவிட்டதாக எழுதிக் கொடுங்கள் என்றார். கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்) கூறினார், எனது தத்துவஞானம் மிகவும் கனமானது (உண்மையானது) ஊசி தண்ணீரை வெளியேற்றி உள்ளே செல்வது போல உங்கள் பொய் ஞானத்தை வெளியேற்றி இதயத்தில் குடியேறும்.

மஹரிஷி சர்வானந்தர், கேள்விகளை கேட்க சொன்னார். நெசவாளர் காலனியில் புகழ்பெற்ற அறிஞரைப் பார்த்ததும், அருகிலுள்ள அப்பாவி படிப்பறிவில்லாத நெசவாளர்கள் சாஸ்திர விவாதத்தைக் கேட்க கூடினர். கபீர் சாகேப் ஒரு கேள்வி கேட்டார்."

கவுன் பிரம்மா கா பிதா ஹை, கவுன் விஷ்ணு கி மா /
சங்கர் கா தாதா கவுன் ஹை, சர்வானந்த் தே பதாயே //

பொருள்: பிரம்மாவின் தந்தை யார், விஷ்ணுவின் தாயார் யார். சங்கரின் தாத்தா யார் என்று சொல்லுங்கள் சர்வானந்தரே.

சர்வானந்தர்: ஸ்ரீ பிரம்மா ரஜோகுணம், ஸ்ரீ விஷ்ணு சத்வகுணம் மற்றும் ஸ்ரீ சிவன் தமோகுணம் ஆவார், இவர்கள் மூவரும் அழிவற்றவர்கள், சர்வேஸ்வரர்கள், அவர்களுக்கு தாய் தந்தை கிடையாது. நீங்கள் அறியாதவர், உங்களுக்கு சாஸ்திர ஞானமே இல்லை, இது இடக்கு முடக்கான கேள்வி என்று கூறினார். அங்கு கூடிய அனைத்து மக்கள் கைதட்டி சர்வானந்தரை ஏற்றனர்.

கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்) சொன்னார், நீங்கள் ஸ்ரீமத்தேவி பகவத் புராணத்தின் 3வது ஸ்கந்தமும், ஸ்ரீ சிவபுராணத்தின் ருத்ர சம்கீதையின் 6வது மற்றும் 7வது அத்தியாயத்தையும் படித்து, கடவுள் சாட்சியாக, கீதை மீது கையை வைத்து அதன் பொருளை கூறுங்கள் என்றார். மகரிஷி சர்வானந்தர், புனித கீதையின் மீது கையை வைத்து, உள்ளதை கூறுவேன்

என்று சத்தியம் செய்தார்.

கவிர்தேவ் சொன்ன பிறகு புனித புராணங்களை கவனமாகப் படித்தார். ஸ்ரீ சிவ புராணத்தில் பக்.100 முதல் 103 வரையில், பிரம்ம காலன் மற்றும் பிரகிருதி (துர்க்கை) இணைந்து, ரஜோகுணம் பிரம்மா, சத்வகுணம் விஷ்ணு, மற்றும் தமோகுணம் ஸ்ரீ சிவன் ஆகியோரைப் பிறப்பித்தார் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த பிரகிருதி (துர்க்கை) அஷ்டங்கி (எட்டு கை அம்மன்) என்றும் பிரம்மா, விஷ்ணு, சிவனின் தாயார் என்றும் அழைக்கப்படுகிறாள். ஸ்ரீமத்தேவி புராணத்தில், பக்கம் 114-123 வரையில், "தாயே, நான் (விஷ்ணு), பிரம்மா மற்றும் சிவன் ஆகியோர் அழியக்கூடியவர்கள், எங்களுக்கு பிறப்பு இறப்பு உள்ளது" என்று விஷ்ணு கூறுகிறார். பகவான் சங்கரர்: "தாயே, பிரம்மாவும் விஷ்ணுவும் உன்னிடமிருந்து பிறந்தவர்கள் என்றால், சங்கரராகிய நானும் உன்னுடைய பிள்ளைதான், அதாவது என்னுடைய தாயும் நீயே" என்று கூறுகிறார்.

மகரிஷி சர்வானந்தர் முன்பு அறியாமையால் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் மூவரையும் அழிவற்ற கடவுள் என சொல்லி கொண்டிருந்தார். ஏனென்றால், அனைத்து உயிரினங்களின் புத்தியும் என் கையில் உள்ளது என்று பிரம்ம காலன் புனித கீதையில் கூறியுள்ளார். பரமாத்மா கூறிய பிறகு பிரம்ம காலனின் அழுத்தம் நீங்கி, சர்வானந்திற்கு உண்மை தெளிவாக புரிந்தது. ஆனால் அவமரியாதைக்கு பயந்து, எல்லாவற்றையும் படித்துவிட்டேன், அப்படி ஒன்றும் எழுதவில்லை என்றார். கபீர் பரமேஸ்வரரை, ஒரு பொய்யர், வேதத்தைப் பற்றி என்ன தெரியும்? நாங்கள் தினமும் படிக்கிறோம் என்று கூறினார். பிறகு சர்வானந்தர் தான் மனப்பாடம் செய்த மற்ற சமஸ்கிருத ஸ்லோகங்களை வெகு நேரம் சரளமாக படித்தார், புராணங்களை படிக்கவில்லை. சமஸ்கிருதம் அறியாத சுற்றி உள்ள மக்கள் சர்வானந்தரை புகழ்ந்து பாராட்டி கைதட்டி ஆதரித்தனர். அவர் ஜெயித்து விட்டதாக அறிவித்தார்கள்.

கபீர் பரமேஷ்வரர் (கவிர்தேவ்) சொன்னார், சர்வானந்தரே! புனித கீதை மீது சத்தியம் செய்து, கண்முன் எழுதப்பட்ட வேதத்தின் உண்மைகளைக் கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளாதபோது, நான் தோற்றதாகவே இருக்கட்டும் என்றார்.

ஒரு உதாரணம்: ஒரு ஜமீன்தார், ஏழாம் வகுப்பு படிக்கும், ஆங்கிலம் சற்று அறிந்த தன் மகனுடன் மாட்டுவண்டியில் சென்று கொண்டிருந்தார். எதிரே வந்த ஒரு ஆங்கிலேயர் வண்டிக்காரரிடம் ஆங்கிலத்தில் ஊருக்கு வழியை பற்றி கேட்டார். கர்வம் பிடித்த ஜமீன்தார் தன் மகனிடம் சொன்னார். மகனே, இந்த ஆங்கிலேயன் திமிராக எதையோ கேட்கிறான். உனக்கு தான் ஆங்கிலம் தெரியுமே ஒரு வாங்கு வாங்கு என்றார்.

அந்த மகன் தன் பள்ளியில் படித்த விடுமுறை கடிதத்தை ஆங்கிலத்தில் சரளமாக ஒப்பித்தான். ஆங்கிலேயர் அந்த அப்பாவிச் சிறுவனின் முட்டாள்தனத்தை கண்டு தலையில் அடித்துக் கொண்டு சென்றுவிட்டார். தந்தையோ, தன் மகன் ஜெயித்து விட்டதாக எண்ணி மார்பை தட்டிக் கொண்டான். மகன் சொன்னான், அப்பா, எனக்கு "மை பெஸ்ட் பிரண்ட்" என்பதும் தெரியும், அதைச் சொல்லி இருந்தால் ஆங்கிலேயர் ஓடியே போய் இருப்பான் என்றான். இதேபோல, கவிர்தேவ் கபீர் சாகேப் ஜி கேட்டது வேறு, சர்வானந்தர் பதில் அளித்தது வேறு, இப்படிப்பட்ட வேத

விவாதங்கள் மக்களை பாழாக்கிவிட்டது.

கபீர் பரமேஸ்வர் தான் தோற்றதாகக் கூறியவுடன் சர்வானந்தர் அதை எழுதித் தருமாறு கேட்டார். “அதையும் நீங்களே எழுதிக் கொள்ளுங்கள். அதில் நான் கைநாட்டு வைக்கிறேன்,” என்றார். மகரிஷி சர்வானந்தர், “சாஸ்திர விவாதத்தில் சர்வானந்தர் வெற்றி பெற்றார், கபீர் ஜி தோற்றார்” என எழுதிக்கொண்டு கபீர் பரமேஸ்வரரிடம் கைநாட்டை வாங்கிக்கொண்டார். உடனே சர்வானந்தர் தனது தாயிடம் சென்று, அம்மா, உங்கள் குருவின் தோல்விக்கான ஆதாரத்தைப் பாருங்கள் என்றார். தாய் சாரதா அதை படித்து காட்டச் சொன்னார். சர்வானந்தர் அதை படித்தபோது, அதில் “சாஸ்திர விவாதத்தில் சர்வானந்தர் தோற்றார், கபீர் பரமேஸ்வர் (கவிர்தேவ்) வென்றார்” என்று எழுதப்பட்டிருந்தது. சர்வானந்தின் தாய், மகனே, நீ வென்றதாக சொன்னாய், ஆனால் தோற்றுவிட்டாய் என்றாள். மகரிஷி சர்வானந்தர், “அம்மா, நான் பல நாட்களாக தொடர்ந்து வேத விவாதத்தில் இருந்ததால் தூக்க களைப்பால் தவறாக எழுதிவிட்டேன், மீண்டும் சென்று சரியாக எழுதிய பிறகு கொண்டு வருகிறேன் என்றார். ஆதாரம் எழுத்துப்பூர்வமாக இருக்கவேண்டும் வாய்மொழியாக அல்ல என்று தாய் நிபந்தனை போட்டாள். சர்வானந்தர் மீண்டும் சென்று, கபீர் பரமேஸ்வரரிடம் எழுதுவதில் தவறு நடந்துவிட்டது என கூறி மீண்டும் எழுதி கைநாட்டை பெற்று தாயிடம் வந்து காட்டியபோது மீண்டும் தோற்றதாகவே இருந்தது. மீண்டும் தவறு நடந்து விட்டது என கூறி, மூன்றாம் முறை மீண்டும் எழுதி வந்த பிறகு வீட்டுக்குள் நுழையும் முன் படித்துப் பார்த்தபோது சரியாக இருந்தது, அதை அப்படியே கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டே வீட்டிற்குள் சென்று தாயிடம் படிக்க ஆரம்பித்தபோது, அவர் கண் முன்னே எழுத்துக்கள் மாறிவிட்டன. மூன்றாவது முறையும் சாஸ்திர விவாதத்தில் சர்வானந்த் தோற்றார், கபீர் ஜி வென்றார் என்று எழுதப்பட்டது. ரிஷி சர்வானந்தரால் பேச முடியவில்லை. “மகனே, ஏன் மௌனம்? படித்து காட்டு என்று தாய் சொன்னாள். மகன் மலையோடு மோதி வந்ததை அறிந்து, சர்வானந்தரிடம், மகனே கடவுள் வந்திருக்கிறார், அவர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு தீட்சை பெற்றுக்கொள் என்றாள். சர்வானந்தர் தாயின் காலில் விழுந்து அழுதுகொண்டே, அவர் உண்மையில் கடவுள் தான், எனக்கு வெட்கமாக இருக்கிறது நீங்களும் என்னுடன் வாருங்கள் என்றார். சர்வானந்தரின் தாயார் கபீர் பரமேஸ்வரரிடம் தன் மகனை அழைத்துச் சென்று தீட்சை பெற வைத்தார். பூரண பிரம் கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்) கூறினார், சர்வானந்தர், எழுத்து அறிவு இருந்தும் கூட நீங்கள் வேதங்களைப் புரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால் என்னிடம் வரும்வரை கால பிரம்மன் யாருடைய புத்தியையும் முழுமையடைய விடுவதில்லை. இப்போது இந்த புனித வேதங்களையும் புனித கீதையையும் புனித புராணங்களையும் மீண்டும் படியுங்கள்.

இப்போது உண்மையான பிராமணர் ஆகிவிட்டீர்கள் “பிராமண் சோய் பிரம் பிச்சானே” அதாவது பூரண பரமாத்மாவை அறிந்து மோட்சம் பெறுபவன் உண்மையான பிராமணர் அறிஞன்.

சிறப்பு: 550 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த புனித வேதங்கள், புனித கீதை, புராணங்களில் உள்ள அறிவை கபீர் பரமேஸ்வரர் (கவிர்தேவ்) தனது சாதாரண கவிதைகளில் தந்துள்ளார். அன்றிலிருந்து இன்று வரை

உள்ள ரிஷி குருமார்கள் அதை படிக்காமலேயே தவறானது என்று சொல்லி, கபீரை அறியாதவர், அவருக்கு எழுத்து அறிவும் இல்லை, சமஸ்கிருதத்தில் உள்ள சாஸ்திரங்களின் ஞானம் பற்றி இவருக்கு என்ன தெரியும் என கேலி செய்தனர். நாங்கள் அறிஞர்கள், நாங்கள் சொல்வது சாஸ்திரங்களில் எழுதப்பட்டுள்ளது, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோருக்கு தாய் தந்தை கிடையாது, அவர்கள் பிறக்காதவர்கள், அழியாதவர்கள், சர்வேஸ்வரர்கள், அனைத்தையும் படைப்பவர்கள் என்று இன்றுவரை சொல்லிவந்தனர்.

இன்று அதே புனித சாஸ்திரங்கள் நம்மிடம் உள்ளன. அதில் மூன்று (ஸ்ரீ பிரம்மா ராஜோகுணம், ஸ்ரீ விஷ்ணு சத்வகுணம், ஸ்ரீ சிவன் தமோ குணம்) கடவுள்களின் பெற்றோரின் விவரம் தெளிவாக உள்ளது. நம் முன்னோர்களுக்கு அப்போது கல்வியறிவு இல்லை, படித்தவர்களுக்கு வேதத்தின் அறிவு இல்லை. ஆனாலும், கபீர் பரமேஸ்வர் (கவிர்தேவ்) சொன்ன உண்மையான ஞானத்தை வேண்டுமென்றே பொய்யாக்கினார். ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன் ஆகியோர் கடவுள் இல்லை என எந்த வேதத்திலும் எழுதப்படவில்லை என்றார்கள். ஆனால், ஸ்ரீ பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் அழியக்கூடியவர்கள், பிறப்பு, இறப்பு உள்ளவர்கள், மற்றும் இந்த மூவரின் தாய் பிரகிருதி (துர்க்கை) மற்றும் தந்தை ஜோதி நிரஞ்சன்-பிரம்ம காலன் என்பதற்கு புனித புராணங்கள் சாட்சியாக உள்ளன.

இன்று மனித சமுதாயத்தில் அனைவரும் படித்தவர்களாக உள்ளனர். இன்று சாஸ்திரங்களில் உள்ளதை, யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. (கவிர்தேவ்) கபீர் பரமேஸ்வரர் தனது புனித உரைகளிள் கூறியது போல.

**கபீர் பரமேஷ்வரின் (கவிர்தேவ்) புனித உரைகள்:**

தர்மதாஸ் யஹ் ஜக் பௌரானா / கோயி நா ஜானே பத் நிர்வாணா //
அப் மைன் தும்சே கஹோன் சிதாய் / த்ரேய்தேவன் கி உத்பத்தி பாயீ //
ஞானி சுனே சோ ஹிர்தை லகாயி / முர்க் சுனே சோ கம்ய நா பாயி //
மா அஷ்டங்கி பிதா நிரஞ்சன்/ வெ ஜம் வெ ஜம் தாருண் வன்ஷன் அஞ்சன்//
பஹிலே கீன்ஹ நிரஞ்சன் ராய் / பீச்சே சே மாயா உப்ஜாயீ //
தர்மராய் கின்ஹான் போக் விலாசா / மாயா கோ ரஹி தப் ஆசா //
தீன் புத்தர் அஷ்டங்கி ஜாயே / பிரம்மா விஷ்ணு சிவ் நாம் தாராயே //
தீன் தேவ் விஸ்தார் சலாயே / இஸ்மேம் யே ஜக் தோகா காயே //
டீன் லோக் அப்னே சுத் தின்ஹா/ சுன் நிரஞ்சன் பாசா லின்ஹா //
அலக் நிரஞ்சன் சுன் டிகானா / பிரம்மா விஷ்ணு ஷிவ் பேத் ந ஜானா //
அலக் நிரஞ்சன் படா பட்பாரா / தீன் லோக் ஜிவ் கின்ஹ ஆஹ //
பிரம்மா விஷ்ணு ஷிவ் நஹின் பசாயே / சகல் காயே புன் தூர் உடாயே //
தின்கே சுத் ஹைன் தீனோ தேவா / ஆந்தர் ஜீவ் கரத் ஹைன் சேவா //
தீனோ தேவ் அவுர் ஔதாரா / தாகோ பஜே சகல் சன்சாரா //
தீனோ கணோங்கா யஹ் விஸ்தாரா / தர்மதாஸ் மைன் கஹோன் புகாரா//
குண் தீனோ கி பக்தி மே, பூல் பரோ சன்சார் /
கஹே கபீர் நிஜ் நாம் பின், கைசே உதரைன் பார் //

மேற்கூறிய புனித உரையில் கபீர் பரமேஸ்வரர் தனது சேவகனான ஸ்ரீ தர்மதாஸ் ஜியிடம் இவ்வாறு கூறுகிறார்:- இந்த உலகமே தத்துவஞானம் இல்லாததால் குழப்பத்தில் உள்ளது. யாருக்கும் பூரண முக்தி மார்க்கமும்,

பிரபஞ்ச படைப்பின் ரகசியமும் தெரியவில்லை. எனவே, நான் உருவாக்கிய படைப்பின் கதையைச் சொல்கிறேன். அறிவாளிகள் உடனே புரிந்து கொள்வார்கள். ஆனால் எல்லா ஆதாரங்களையும் பார்த்த பிறகும் நம்பாதவர்கள், காலனின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்கள் பக்திக்கு தகுதியற்றவர்கள். அந்த முக்குண தேவர்களும் (ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன்) எப்படி வந்தார்கள் என நான் சொல்கிறேன். அஷ்டங்கி (துர்க்கை) அவரது தாய் ஆவாள் மற்றும் ஜோதி நிரஞ்சன் (பிரம், காலன்) அவரது தந்தை ஆவார். முதலில் பிரம் (காலன்) முட்டையிலிருந்து தோன்றினார். பிறகு துர்க்கை பிறந்தாள். துர்க்கையின் அழகில் மயங்கி, காலன் (பிரம்) தவறாக நடந்து கொண்டார். பின்னர் துர்க்கை (பிரகிருதி) அவன் வயிற்றில் தஞ்சம் அடைந்தார். பிறகு நான் அவளை காலனின் வயிற்றிலிருந்து வெளியேற்றி 21 பிரபஞ்சங்களுடன் 16 சங்க் கோஸ் கி.மி (ஒரு சங்க் என்பது ஓர் ஆயிரம் கோடி கோடி, 1 கோஸ் என்பது 3 கி.மி) தொலைவிற்கு அனுப்பிவிட்டேன். ஜோதி நிரஞ்சன் பிரகிருதி தேவியுடன் (துர்க்கை) இன்பம் கொண்டார். இவர்களின் சங்கமத்தால், மூன்று குணங்கள் (ஸ்ரீ பிரம்மா,ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சிவன்) பிறந்தன. இம்மூன்று குணங்களையும் வழிபடுவதால் அனைத்து உயிர்களும் காலனின் வலையில் சிக்கிக் கொள்கின்றன. உண்மையான மந்திரம் கிடைக்காத வரை பூரண மோட்சம் எப்படி சாத்தியாமாகும்.”

*****

# வழி தவறியவர்களுக்கு சத்திய மார்க்கம்

குருஜியால் புற்றுநோய் குணமானது.

என் பெயர் விரேந்திர தாஸ், நான் மகேந்திரகட் மாவட்டம், கேரானி கிராமத்தில் வசிக்கிறேன். சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் தீட்சை பெறுவதற்கு முன்பு, நான் துர்க்கை பூஜை மற்றும் பாரம்பரிய பூஜை அனைத்தும் செய்து வந்தேன். என் தந்தைக்கு புற்றுநோய் இருந்தது. இவ்வளவு வழிபாடுகளை செய்தும் எந்த பலனும் இல்லை.

நான் 2014ல் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் தீட்சை பெற்றேன். ஒரு நாள் ராணுவத்தில் இருந்த எனது நண்பர் திடீர் என இறந்துவிட்டார், நமக்கும் ஒரு நாள் இறப்பு வரும் என கருத்தில் கொண்டு தீட்சை எடுத்தேன். தீட்சை பெற்ற பிறகு ஒரு நாள் அதிகாலையில் காரில் அடேலி என்ற ஊருக்கு சென்று கொண்டிருந்தேன், வழியில் தூக்கத்திலேயே கார் சுமார் 5 கி.மீ வரை சென்றது. அதுவரை முதல் தீட்சை தான் எடுத்திருந்தேன். அப்போது கார் மரத்தில் மோதி அப்பளம்போல் நொறுங்கிவிட்டது. ஆனால் கடவுள் அருளால் என் தலை மற்றும் கால்களில் சிறிய கீறல் மட்டும் தான் ஏற்பட்டது.

கடந்த 2017ம் ஆண்டு எனது தந்தைக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு அவரது சிறுநீர் நின்று விட்டதாகச் சொன்னதால், அங்கிருந்து ஜுன்ஜுனு நகரத்திற்கு கொண்டு சென்றேன், அங்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். பிறகு நார்னால் நகருக்கு பரிசோதனைக்கு சென்ற போது, உங்கள் தந்தைக்கு புற்றுநோய் இருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள். அதுவரை என் தந்தை தீட்சை பெறாமல் இருந்தார்.

ஜுலை 2, 2017 அன்று நார்னாவில் காண்பித்த பிறகு, ஜெய்பூருக்கு கொண்டு சென்றேன், அங்கேயும் கேன்சர் என்று சொன்னார். அதன் பிறகு என் தந்தைக்கு சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் தீட்சை பெற வைத்தேன். இன்று என் தந்தை சந்த் ராம்பால் ஜியின் அருளால் பூரண நலமாக இருக்கிறார். தற்போது 82 வயது ஆகிவிட்டது. ஓர் இரு மருந்துகள் கொடுத்தாலும், சந்த் ராம்பால் ஜியின் அருளால் மட்டுமே புற்றுநோய் பூரணமாக குணமானது. என்னிடம் அனைத்து ரிப்போர்ட்களும் உள்ளன, இன்னும் பல பலன்கள் கிடைத்துள்ளன. இரண்டு இடங்களில் சிகிச்சை பெற்றும் அறுவை சிகிச்சை செய்தும் என் தந்தையின் புற்றுநோய் குணமாகவில்லை. ஆனால் சந்த் ராம்பால் ஜியிடம் தீட்சை பெற்று, அவரது வழிபாட்டு முறையால் புற்றுநோய் முடிவுக்கு வந்தது. இது மிக பெரிய அதிசயம்.

புற்று நோய் அல்லது தீராத நோயால் பாதிக்கப்பட்டுள்ள எனது சகோதர சகோதரிகள் அனைவரும் சந்த் ராம்பால் ஜியிடம் தீட்சை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் நோயும் நீங்கும் முக்தியும் கிடைக்கும்.

*பகத் வீரேந்தர் தாஸ் தொடர்பு எண் : **89010-15838***

## பரமாத்மா ஆயுளை நீடித்தார்

என் பெயர் ரூபாலி பாட்டில், மராத்திய பட்டதாரி, புனே மாவட்டம் மகாராஷ்டிராவை சேர்ந்தவள். நான் பாரம்பரிய தெய்வங்களை வழிபட்டு வந்தேன். எனது கணவர் ஆட்டோமொபைல் வியாபாரம் செய்துவந்தார். தினமும் நண்பர்களுடன் குடித்துவிட்டு வீட்டுக்கு வரும்போது சண்டை போடுவது வழக்கம். வீட்டில் பிரச்சனைகள் இருந்து கொண்டே இருந்தது.

அவரது போதைப் பழக்கத்தால் நிம்மதி இல்லாமல் இருந்தேன். நான் செய்து வந்த வழிபாட்டால் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. நானும் என் கணவர் இப்படியே போதைப் பழக்கம் இல்லாமல், ஒழுக்கமான நடத்தையோடு, நேர்மையாக இருக்கவேண்டும் என்று கருதி நானும் குருஜியிடம் தீட்சை பெற்றேன்.

தீட்சை எடுத்த பிறகு, என் கணவர் குடிப்பதை நிறுத்திவிட்டதால், எங்கள் தினசரி சண்டை நின்றது. எனக்கு தொண்டையில் ஒரு பெரிய கட்டி இருந்தது. மருத்துவர்கள் புற்று நோய் போல் தெரிகிறது என்று பரிசோதனை செய்தார்கள். மருத்துவ அறிக்கையில் புற்று நோய் என வந்தது. நான் குருஜியிடம் வேண்டினேன், மகளே! இறைவன் கருணை காட்டுவார் என்று குருஜி சொன்னார்.

எனது தாத்தா மற்றும் மாமா மருத்துவராக இருந்தார், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இளம் வயதிலேயே இறந்துவிட்டார். மூன்றாம் தலைமுறையில் நான் மட்டுமே இருந்தேன், எனக்கும் புற்றுநோய் இருந்தது. ஒருமுறை காலேஜில் என் உள்ளங்கையைப் பார்த்த ஒரு ஜோசியர், நீங்கள் 40 வயது வரை தான் இருப்பீர்கள், உங்களுக்கு ஒரு கொடிய நோய் வரும், அதில் இருந்து உங்களால் மீள முடியாது என்றார். பிறகு மீண்டும் மாலையில் அறிக்கை வந்ததும், அதில் வைரஸ் தொற்று இருப்பதாக எழுதப்பட்டிருந்தது. சந்த் ராம்பால் ஜி மகாராஜ் என் புற்றுநோயை குணப்படுத்தினார்.

ஒருமுறை என் கணவருக்கு மும்பை நெடுஞ்சாலையில் பயங்கர விபத்து ஏற்பட்டது. கார் மீது ஒரு கன்டெய்னர் பின்னால் இருந்து இரண்டு முறை மோதியது. கன்டெய்னர் மோதியதால், என் கணவர் ஸ்டீயரிங் மீது சாய்ந்து, குரு ஜி அளித்த மந்திரங்களை ஜபிக்க ஆரம்பித்தார். அப்போது என் முகமும், மகனின் முகமும் அவர் கண் முன்னே நின்றது, கடைசி மூச்சு போல் அவர் உணர்ந்தார். ஆனால் 5 நிமிடங்களுக்குப் பிறகு அவர் நன்றாக காரை ஓட்டுவதை உணர்ந்தார். பிறகு நிறுத்தாமல் நேராக வீட்டுக்கு வந்துவிட்டார்கள். காரை பார்த்தபோது, பின்பக்கம் முற்றிலும் நொருங்கிவிட்டது. காரைபார்த்தவர்கள் எல்லோரும், கார் கவிழ்ந்திருக்கும் கடவுள் தான் காப்பாற்றினார் என கூறினார்கள்.

என் மகன் பெங்களூரில் படிக்கச் சென்றான். அங்கு அவனுக்கு சிக்கன் பாக்ஸ் வந்தது. என் படிப்பு ஒரு மாதம் வீணாகிவிடும் என்று அழ ஆரம்பித்தார். நாங்கள் ஆசிரமத்தில் குருஜியிடம் பிரார்த்தனை செய்தபோது, குருஜி விளக்கை ஏற்றச் சொன்னார். விளக்கை ஏற்றியபோது, அவனுக்கு ஏற்பட்ட சிக்கன் பாக்ஸ் மாயமானது. டாக்டரிடம் காண்பித்தபோது, நேற்றுதான் சொன்னேன், இன்று சிக்கன் பாக்ஸ் மறைந்துவிட்டது, இது கடவுளால் தான் முடியும் என்றார்.

சந்த் ராம்பால் ஜி மகராஜ் போன்று, பீடி, புகையிலை, மது அருந்தக் கூடாது என்று சொல்லும் பல குருமார்களை நான் பார்த்திருக்கிறேன், ஆனால் எந்த சீடரும் அதை பின்பற்றுவதில்லை. மற்ற குருமார்கள் போதை பழக்கம் இருந்தாலும் பரவாயில்லை, தீட்சை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். அரசாங்கம் காகிதங்களில் எழுதுவதற்கு மட்டுமே விதிகளை உருவாக்குகிறது. ஏனென்றால் பல ஆண்டுகளாக விதிகள் உருவாக்கப்பட்டு வருகிறது, இன்னேரம் ஒட்டுமொத்த சமுதாயமும் மாறிருக்க வேண்டும்.

என் ஜாதகத்தில் என்னுடைய ஆயுள் காலம் 40 ஆக உள்ளது. எனக்கு கொடிய நோய் வரும், அதை என்னால் மீள முடியாது என்று எழுதப்பட்டிருந்தது. டாக்டர் எனது தொண்டையில் புற்றுநோய் என்று

சொன்னார். அப்போது எனக்கு வயது 37. ஆனால் சந்த் ராம்பால் ஜி மகராஜ் என் விதியில் எழுதப்பட்டதை மாற்றி என் ஆயுளை நீடித்தார்.

அனைத்து சகோதர சகோதரிகளும் சந்த் ராம்பால் ஜி மகராஜின் சொற்பொழிவை கேட்டு, அவரிடம் தீட்சை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் புனித நூல்களையும் அவரது அறிவையும் ஒப்பிட்டு பாருங்கள். அனைவரும் படித்தவர்கள், ஆனால் பாரம்பரிய பக்தியையே செய்து வருகிறோம், அனைத்து தெய்வங்களையும் வழிபடுகிறோம், ஆனால் ஒரு பலனும் இல்லை. சிலருக்கு புற்று நோய், சிலருக்கு பண நெருக்கடி, சிலருக்கு ஏதோ ஒன்று, பிறகு பக்தி செய்தும் ஏன் இப்படி நடக்கிறது?.

எனவே, சந்த் ராம்பால் ஜி மஹாராஜின் சொற்பொழிவுகளைக் கேட்டு, அவரது அறிவை புரிந்துகொண்ட அவரிடம் இலவசமாக தீட்சை பெற்று பக்தி செய்து மோட்சம் பெற உங்கள் அனைவரையும் கை கூப்பி கேட்டுக்கொள்கிறேன்.

*ரூபாலி பாட்டில், தொடர்பு எண்:- **89994-33249***

## கடவுளின் அருளால் புற்றுநோய் மறைந்தது

நான் நீலம் தாசி, ஹத்ராஸ் மாவட்டம் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவள். முன்பு நான் சிவபெருமானை தீவிரமாக வழிபட்டேன், அதோடு மற்ற தெய்வங்களையும் வழிபட்டேன், சிவபெருமானுக்கு விரதங்கள் இருந்தேன், பிறகு துர்க்கை மாதாவின் விரதங்களும் இருந்தேன், ஆனால் எனக்கு எந்த பலனும் கிடைக்கவில்லை. நான் மிகவும் சிரமப்பட்டேன், வீட்டின் நிதி நிலைமை மோசமாக இருந்தது. கணவருக்கு வேலையும் இல்லை, இருவரும் உடல்நலம் இல்லாமல் இருந்தோம், அடிக்கடி நோயால் பாதிக்கப்பட்டு மிகவும் சிரமத்தில் இருந்தோம்.

நான் பிப்ரவரி 4, 2011 அன்று சந்த் ராம்பால் ஜி மகராஜியிடம் தீட்சை பெற்றேன். டெல்லியில் உள்ள ஒரு உறவினர், சந்த் ராம்பால் ஜி மகாராஜின் பக்தராக இருந்தார். ஒருமுறை அவர் எங்கள் வீட்டிற்கு வந்தபோது, எங்கள் நிலைமையை கண்டு, எங்களை சந்த் ராம்பால் ஜியிடம் தீட்சை பெறுமாறு சொன்னார். என் தொண்டையில் கட்டி இருந்ததால் நான் மறுத்துவிட்டேன், நான் தாந்திரீர்களிடம் காட்டவேண்டும், உங்கள் குரு தாந்திரீகம் செய்பவர்களிடம் போக கூடாது, பக்தி செய்தாலே போதும் சரியாகிவிடும் என சொல்கிறார் என்று சொன்னேன்.

எங்கள் உறவினர், நீங்கள் குருஜியின் சொற்பொழிவுகளை கேளுங்கள், உங்கள் அனைத்து பிரச்சனைகளும் சரியாகும் என்றார். பிறகு அவர் பிரபஞ்ச படைப்பை பற்றி விவரித்தார், எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் என் கணவருக்கு சற்று புரிந்தது. உங்கள் குரு கூறுவது உண்மைதான் என்று கணவர் சொன்னார். நாங்கள் சத்சங்கம் கேட்ட பிறகு பார்ப்போம் என்றோம். பிறகு 10-15 நாட்களுக்கு டிவி யில் நாங்கள் சந்த் ராம்பால் ஜி மகராஜின் சொற்பொழிவுகளை கேட்டோம். அதன் பிறகு சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் சென்றால், நம் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்று தோன்றியது. பிறகு நாங்கள் சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் செல்ல முடிவு செய்தோம். பிறகு உறவினருக்கு போன் செய்து சொன்னபோது, அவர் எங்களை டெல்லி ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார், நாங்கள் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் இருந்து தீட்சை பெற்றோம்.

சந்த் ராம்பால் ஜி மகாராஜிடமிருந்து தீட்சை பெற்ற பிறகு எனக்கு

பல நன்மைகள் கிடைத்தது. முன்பு வருமானம் இல்லாததால் எந்த பொருள் வாங்கினாலும் பல முறை யோசிப்பேன். என் கணவருக்கும் வேலை இல்லாததால் கவலையில் இருந்தேன். பிறகு ஒரு நாள் வீட்டில் மனமுடைந்து சோகமாக இருந்தபோது, சந்த் ராம்பால் ஜி மகாராஜ் எங்களுக்கு வீட்டிலேயே தரிசனம் கொடுத்து, மகளே, கவலை படாதே பக்தி செய்துகொண்டே இரு, எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னார். பிறகு 15 நாட்கள் கழித்து குஜராத்தில் இருந்து கணவருக்கு வேலை கிடைத்ததாக போன் வந்தது. என் கணவர் அங்கு வேலைக்கு சென்று விட்டார். அதன் பிறகு நாங்கள் சிரமமில்லாமல் வாழ ஆரம்பித்தோம்.

இரண்டாவது பலன், எனக்கு தொண்டையில் கட்டி இருந்தது. பரமாத்மாவின் அருளால் அந்தக் கட்டியும் குணமானது. நானும் பல மருத்துவர்களிடம் காண்பித்தேன், ஆனால் பலனில்லை. சந்த் ராம்பால் ஜி மஹாராஜிடம் இருந்து தீட்சை பெற்ற பிறகு என் தொண்டையில் இருந்த கட்டி குணமானது.

மூன்றாவது பலன் என்னவென்றால், ஒருமுறை எங்கள் வீட்டில் சிலிண்டரில் தீப்பிடித்து, நாங்களும் அக்கம் பக்கத்தினர் அணைக்க முயற்சி செய்தோம், ஆனால் தீ அணையவில்லை. அப்போது திடீரென என் கணவர் அந்த சிலிண்டரை எடுத்து வெளியில் வீசினார். வெளியே வீசியதும் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. காவல் நிலையம் அருகிலேயே இருந்ததால் காவல் நிலையத்திலிருந்து வாகனம் வந்தது, அவர்கள் தீயணைப்புப் படையை அழைத்து தீயை அணைத்தனர். சுமார் ஒன்றரை மணி நேரம் சிலிண்டர் தீப்பிடித்து எரிந்தது. அந்த சிலிண்டர் அன்று வெடித்திருந்தால், குடும்பமே அழிந்திருக்கும், மற்றும் அக்கம் பக்கத்தினரும் அழிந்திருப்பார்கள். ஆனால் சந்த் ராம்பால் ஜி மகராஜ் காப்பாற்றிவிட்டார். பிறகு மாலையில் சந்த் ராம்பால் ஜி மகராஜ், என் கணவருக்கு தரிசனம் கொடுத்து உங்களுக்கு ஒன்றும் ஆகாது, பரமாத்மாவின் பக்தி செய்து கொண்டிருங்கள், பரமாத்மா அருள்வார் என்றார். பிறகு குரு தரிசனம் தந்ததாக என் கணவர் என்னிடம் சொன்னார், சந்த் ராம்பால் ஜி மகராஜ் ஜி எதையும் செய்ய முடியும். அதன் பிறகு எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை.

என் மாமனாருக்கு 80 வயதாகிறது, அவரையும் குருஜியிடம் தீட்சை எடுக்க பல முறை சொன்னோம். அவர் புகையிலை பழக்கம் போகாது என்று சொன்னார். நாங்கள் சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் தீட்சை பெற்றால் போய்விடும் என்று அடிக்கடி சொன்னோம். அவர் அதைத் தவிர்த்து வந்தனர். ஒரு நாள் அவருக்கு பக்கவாதம் வந்து கழுத்தில் எரிச்சலும் கொப்பளங்களும் வந்தது. அப்போதும் சந்த் ராம்பால் ஜி மஹாராஜிடம் தீட்சை எடுத்துக் கொள்ளுங்கள் என சொன்னேன், அவர் சரி ஆனவுடன் தீட்சை எடுத்துக்கொள்கிறேன் என்றார், பிறகு டாக்டரிடம் சிகிச்சை பெற்று சற்று நலம் ஆனார். அப்போது தீட்சை எடுக்க சொன்னபோது அவர் மீண்டும் புகையிலை பழக்கம் போகாது என்றார். நான் தீட்சை எடுத்துதான் பாருங்கள் உறுதியாக போய்விடும் என்று சொன்னேன். அதன்பிறகு தீட்சை எடுத்தார். சுமார் 10, 15 நாட்கள் மருந்துகள் சாப்பிட்டு குருவின் அமிர்த நீரை உட்கொண்டபோது, அவர் பூரண குணமடைந்தார். 2 ஆண்டுகளுக்குப் பிறகு அவருக்கு மற்றொரு பிரச்சனை ஏற்பட்டது, அவருடைய மூக்கில் நீண்டகாலமாக ஒரு கட்டி இருந்தது, அது சின்ன வயதுமுதல் இருந்ததாக சொன்னார். பிறகு அதிலிருந்து நீர் மற்றும் ரத்தமும் கசிய ஆரம்பித்தது.

பிறகு அவரை ஹத்ராஸ் நகரத்திற்கு அழைத்துச் சென்றேன்.

அவரை பரிசோதித்து, மருத்துவர்கள் சிகிச்சைக்கு மறுத்துவிட்டனர். நான் அவரை வேறு மருத்துவரிடம் அழைத்துச் சென்றபோது, புற்றுநோயாக இருக்கலாம் என்று பரிசோதனை செய்தார்கள். 8 நாட்கள் கழித்து அறிக்கை வந்தது, என் மாமனாரிடம் உங்களுக்கு புற்றுநோய் என்று சொன்னார்கள். அதைக் கேட்டு அவர் பயந்துவிட்டார். நாங்கள், சந்த் ராம்பால் ஜி மகாராஜ் இருக்கிறார் உங்களுக்கு ஒன்றும் ஆகாது பயப்பட வேண்டாம் என்றோம். அவர் சரி எனக்கு எதுவும் ஆகாது என்றார். ஆனால் வெளியில் இப்படி சொல்லி உள்ளுக்குள் பயந்துகொண்டே இருந்தார்.

8 நாட்களுக்குப் பிறகு நடக்க முடியாத அளவிற்கு அவர் உடல் நிலை மோசமடைந்துவிட்டது. அவருக்கு படுக்கையிலேயே மலம் சிறுநீர் வெளியேற ஆரம்பித்தது. பின்னர் அவரை கோசி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவர் I.C.U. வார்டில் சேர்க்கப்பட்டார். பின்னர் நாங்கள் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் ஆசிரமத்தில் பிரார்த்தனை செய்தோம். அங்கிருந்து, மகளே! எல்லாம் சரியாகிவிடும் பக்தி செய்யுங்கள் பரமாத்மா கருணை காட்டுவார் என்று பதில் வந்தது.

பிறகு அன்றைக்கே டாக்டரிடம் டிஸ்சார்ஜ் செய்யச் சொன்னேன். டாக்டர் இவரை இந்த நிலையில் கொண்டு செல்ல வேண்டாம் என்றார். நாங்கள் மீண்டும் அவரை டிஸ்சார்ஜ் செய்ய சொன்னோம். பிறகு அவரை I.C.U. வார்டில் இருந்து சாதாரண வார்டிற்கு அனுப்பினார், மேலும் அவரை கொண்டுசென்றால் பிழைக்க மாட்டார் என்று டாக்டர் சொன்னார்.

பிறகு மறுநாள் எது நடந்தாலும் குருஜி பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கையில் நாங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தோம். சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள், 2 வருடம் ஆகிவிட்டது அவருக்கு எந்த பிரச்சனையும் இல்லை. அவரது புற்றுநோயின் அறிக்கை இன்னும் உள்ளது, சந்த் ராம்பால் ஜி மகராஜின் அருளால் அவரது புற்றுநோய் முற்றிலும் குணமாகிவிட்டது. சந்த் ராம்பால் ஜி மகராஜின் அடைக்களத்தில் சென்ற பிறகு சிதைந்த எனது குடும்பம் சீரானது. முன்பு இருந்த பண கஷ்டங்கள், சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் தீட்சை பெற்ற பிறகு தீர்ந்துவிட்டது. சந்த் ராம்பால் ஜி மகராஜ் ஆல் என் மாமனாரின் புற்று நோய் குணமானது, என் கழுத்தில் இருந்த கட்டியையும் குணப்படுத்தினார் அவர் பூரண பரமாத்மா ஆவார். நீங்களும் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் இணைந்து, மிகவும் கஷ்டத்தில் இருந்த எனக்கு கிடைத்த பலன்களை போல் நீங்களும் பலன் பெற்று மோட்சம் அடைய பக்தசமூகத்தை நான் கை கூப்பி வேண்டிக் கொள்கிறேன்.

*பக்தை நீலம் தாசி, செல் : **95207-10329***

## பூரண குருவால் மட்டுமே போதை பழக்கத்திலிருந்து விடுவிக்க முடியும்

என் பெயர் சேதுராம் தாஸ். நான் கராகோன், மத்திய பிரதேசத்தில் வசிப்பவன். சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் வருவதற்கு முன்பு, நான் காயத்ரி குழுவை பின்பற்றி வந்தேன். அங்கு நான் 20 வருடங்கள் பக்தி செய்தேன். நான் ஆன்மீக தேடலில் இருந்தேன், ஆனால் காயத்ரி குழுவில் எனக்கு எவ்வித ஞானமோ, திருப்தியோ கிடைக்கவில்லை. அவர்களின் பக்தியால் எனக்கு எந்த பலனும் இல்லை. எனக்கு எல்லா போதைப் பழக்கமும் இருந்தது. என் போதை பழக்கம் விலகவில்லை. நான் 2014 ஜனவரி 24 அன்று சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் இருந்து தீட்சை பெற்றேன். ஞான

கங்கா புத்தகத்தைப் படித்த பிறகு, எனக்கு சந்த் ராம்பால் ஜி மஹாராஜிடம் இருந்து தீட்சை பெற முடிவு செய்தேன். எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் சந்த் ராம்பால் ஜி மகாராஜின் பர்வாலா ஆசிரமத்திற்குச் சென்றாள். திரும்பி வரும்போது ஞான கங்கா புத்தகத்தை கொண்டு வந்தாள். அந்தப் புத்தகத்தைப் படித்த பிறகு உண்மையான ஆன்மீக ஞானம் கிடைத்தது, அதன் பிறகு நானும் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் சென்று தீட்சை எடுத்துக் கொண்டேன்.

சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் இருந்து தீட்சை எடுத்த பிறகு எனக்கு பல நன்மைகள் கிடைத்தன. முதலில் என் மகள் ரேகா புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தாள். அவரை பெரிய பெரிய மருத்துவர்களிடம் காட்டினோம். மும்பை மருத்துவமனையில் இரண்டு முறை அறுவை சிகிச்சை செய்தும் பலன் இல்லை. அவளுக்கு மார்பக புற்றுநோய் இருந்தது. என் மகளை பல டாக்டர்களிடம் அழைத்துச் சென்றேன், நிறைய பணம் செலவழித்தேன், ஆனால் எந்த பலனும் இல்லை. ஏமாற்றம் தான் அடைந்தேன். ஆனால் சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் இருந்து தீட்சை பெற்ற பிறகு, நான் அவளை எந்த மருத்துவரிடமும் அழைத்துச் செல்லவில்லை, அவள் முழுமையாக குணமடைந்தாள். இன்று அவள் சந்த் ராம்பால் ஜி மகாராஜின் ஆசியுடன் பூரண நலமாக இருக்கிறாள்.

என் சகோதரிக்கு சர்க்கரை நோய் இருந்தது. அவர் சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் தீட்சை எடுத்ததிலிருந்து, அவர் முற்றிலும் நலமாக இருக்கிறார். எனக்கு போதை பழக்கம் அதிகமாக இருந்தது சாப்பிடாமல் இருந்தாலும் என்னால் போதை இல்லாமல் இருக்க முடியாது. என்னால் போதையிலிருந்து விடுபட முடியாது என்று நினைத்தேன். ஆனால் சந்த் ராம்பால் ஜி மகாராஜின் கருணையால் இன்று எனக்கு எவ்வித போதை பழக்கமும் இல்லை. சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் வந்த பிறகு, பக்தர்கள் எப்படி இவ்வளவு நன்மைகளைப் பெறுகிறார்கள் என்பதை அறிந்தேன். ஏனெனில் சந்த் ராம்பால் ஜி மகராஜ் சொல்லும் பக்தி சாஸ்திர முறையானது. எல்லா சாஸ்திரங்களிலும் அதன் ஆதாரம் இருக்கிறது. இன்று பல கோடி ரூபாய் செலவழித்து அரசு போதையை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, ஆனால் முடியவில்லை. மறுபுறம் சந்த் ராம்பால் ஜி மகராஜ் ஜி இந்த வேலையை தனது ஆன்மீக அறிவால் செய்கிறார்.

நீங்களும் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் வந்து தீட்சை எடுத்து மோட்சம் பெற அனைத்து மக்களுக்கும் நான் கூற விரும்புகிறேன். சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் இருந்து தீட்சை பெற, பல்வேறு தொலைக்காட்சி சேனல்களில் அவரது சத்சங்கம் வருகின்றன. அதில் வரும் மொபைல் எண்களை தொடர்புகொண்டு அருகிலுள்ள தீட்சை மையத்திற்கு சென்று இலவசமாக தீட்சை பெறலாம்.

*பகத் சேதுராம் தாஸ், தொடர்பு எண் : **62662-20589***

## சீரழிந்த குடும்பம் சீரானது

நான் ரமேஷ், தந்தை பெயர் ஸ்ரீ உமேத் சிங், ஹிசார் மாவட்டம், பேட்வாட் கிராமத்தை சேர்ந்தவன், இப்போது ஜீந்த் என்ற நகரத்தில் வசிக்கிறேன். தீட்சை எடுப்பதற்கு முன்பு நாங்கள் பூதங்களை பூஜித்தோம். பாபா சாரியாவிற்கு ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஜோதியை ஏற்றுவோம். மேலும் கிருஷ்ணர் ஜெயந்தி, சிவராத்திரி விரதம் மற்றும் சிரார்த்தம், பித்ருக்களுக்கு பிண்டதானம் ஆகிவை செய்தோம். இருந்தும்

எங்கள் குடும்பம் மிகவும் பின்தங்கி இருந்தது. 12 வயதில் என் தந்தை இறந்துவிட்டார். குடும்பத்தில் உள்ள மூவருக்குள் சண்டை இருந்தது, பூதங்களின் தொந்தரவால் மூவரும் நோய்வாய்ப்பட்டோம். மருத்துவர்களால் சிகிச்சை அளித்தும் பயன் கிடைக்கவில்லை. பின்னர் மந்திரவாதிகள் சிலரிடம் சென்றபோது, சிலர் ஐயாயிரம், சிலர் பத்தாயிரம் என கேட்டார்கள். நாங்கள் மிகவும் நொந்து போனோம். என் உறவினர் ஒருவர் ரகுபீர் சிங்க் அடிக்கடி சொன்னதால் 1996ல் என் தாய், சந்த் ராம்பால் ஜி மகராஜியிடம் தீட்சை பெற்றார். என் மனைவிக்கு ஐந்து வருடம் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை. என் தாய் சொல்ல, என் மனைவியும் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் தீட்சை பெற்றாள். அடுத்த ஒரு வருடமே ஒரு குழந்தை பிறந்தது. எனக்கு நம்பிக்கை போனதால், நான் தீட்சை எடுக்கவில்லை. என் தாயையும் மனைவியையும் சந்த் ராம்பால் ஜியிடம் செல்ல மறுத்தேன். 15 நாட்களை ஆன என் குழந்தைக்கு நோய் வந்தது. மருத்துவர்கள், இந்த சிறுவன் பிழைக்க மாட்டான் அதனால் வீட்டிற்கு கொண்டு செல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். மாலையில் ஒரு பக்தர், சத்குரு ராம்பால் ஜி மகராஜ் அவர்கள் ஜிந்த் நகரில் உள்ள ஆசிரமத்திற்கு வந்திருக்கிறார், அவரால் மட்டுமே இந்த குழந்தையை காப்பாற்ற முடியும் என்று சொன்னார். மருத்துவர்களிடமும் மந்திரவாதிகளிடமும் அடிக்கடி சென்று வெறுத்துப்போனதால், எனக்கு கடவுள் மீது நம்பிக்கை போய்விட்டது, அதனால் நான் அந்த பக்தரிடம் மறுத்துவிட்டேன். சந்த் ராம்பால் ஜி மகாராஜ் அவர்கள் கருணை காட்டினால் இந்த சிறுவனை குணப்படுத்தலாம் என்று அவர் மீண்டும் மீண்டும் சொன்னதால் நான் என் தாயிடம் சொல்லி அனுப்பினேன். என் தாய் அந்த சிறுவனை சத்குரு ராம்பால் ஜி மகராஜின் பாதங்களில் வைத்து, இந்தக் குழந்தை இறந்துவிட்டது காப்பாற்றுங்கள் என்று அழுதுகொண்டே பிரார்த்தனை செய்தார். அப்போது சத்குரு ராம்பால் ஜி மகராஜ், கபீர் பரமேஸ்வரரின் அருளால் குழந்தைக்கு ஒன்றும் ஆகாது என்றார். மறுநாளே என் மகன் குணமடைந்தான். சத்குரு ராம்பால் ஜி மகராஜிக்கு ஜெய்.

சீரழிந்த என் குடும்பம் சந்த் ராம்பால் ஜி அவர்களுடைய கருணையால் சீரானது. இதை பார்த்த பிறகும் நான் தீட்சை எடுக்கவில்லை. முந்தைய பூத பூஜையை செய்து வந்தேன். சந்த் ராம்பால் ஜி மகராஜ் எங்கள் வீட்டில் சந்த் கரீப்தாஸ் ஜி மகாராஜ் ஜியின் புனித உரைகளின் பஜனை செய்வார், அப்போது நான் வெளியே சென்று மது அருந்துவேன். பிறகு ஒரு வருடம் கழித்து, ஒருமுறை எங்கள் வீட்டில் சந்த் ராம்பால் ஜி அவர்கள் சத்சங்கம் செய்தார், அதை கேட்டு நானும் தீட்சை பெற்றேன். அது முதல் எங்களுடைய வீட்டில் துக்கம் என்கிற சுவடே இல்லாமல் மறைந்தது. சிலர் சொன்னதை கேட்டு என் தாய் தீட்சையை விட்டுவிட்டார். பிறகு 2000 ஆம் ஆண்டு என் தாய்க்கு திடீரென்று காலில் எரிச்சல் ஏற்பட்டது.

மருத்துவர்கள் பரிசோதித்து ரத்தப் புற்றுநோய் என்றும், 10-15 நாட்களில் இறந்துவிடுவார் என்று சொன்னார்கள். பிறகு சண்டிகரில் உள்ள P.G.I மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம், அங்கு அதிகபட்சம் ஓராண்டு இருக்கலாம், ஆனால் வலி குறையாது, ஒன்றரை லட்சம் செலவாகும் என சொன்னார்கள்.

சத்குரு ராம்பால் ஜி மகராஜ் ஜியிடம் முறையிட்டபோது, உங்கள் தாய் தீட்சையை விட்டுவிட்டார்கள். மின்சாரம் துண்டித்தபிறகு அதன் பலன்கள்

நின்றுவிடுகிறது. பிறகு மீண்டும் மின்சார இணைப்பை இணைக்க வேண்டும் என்று சொன்னார். அதுபோல, என் தாய் தான் செய்த தவறுக்கு வருந்தி மீண்டும் யாசித்து தீட்சை பெற்றார். மகராஜ்ஜி தலையில் கை வைத்து ஆசிர்வதித்தவுடனே கால்களின் எரிச்சலும் வலியும் நின்றுவிட்டது. பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, பல் பிடுங்கியதால், பல்லில் இரத்தம் வர ஆரம்பித்தது. மருத்துவர் தையல் போட்ட பின்னரும் ரத்தம் வருவது நிற்கவில்லை. பின்னர் டாக்டர் பரிசோதித்து, இவருக்கு ரத்த புற்றுநோய் இருக்கிறது, அது வெடித்து விட்டது, இனி குணப்படுத்த முடியாது, வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள் என்று கூறிவிட்டார். இரத்தம் வெளியேறுவதால் இவர் இரண்டு நாளில் இறந்துவிடுவார் என்றும் கூறினார்கள். பிறகு அடுத்த நாள் சிறு நீரிலும் மலத்திலும் ரத்தம் வெளியேறியது. நான் சந்த் ராம்பால் ஜி அவர்களுக்கு தொலைபேசி மூலம் கூறினேன், அப்போது அவர் பரமாத்மா எது செய்தாலும் நன்மைக்கே என்று சொன்னார்.

பின்னர் மறுநாள் இரவு இரண்டு மணியளவில் எம தூதர்கள் வந்தனர். என் தாய் என்னிடம், உன் தந்தை (பத்து வருடங்களுக்கு முன்பு இறந்தவர்) என்னை அழைக்கிறார் என்று கூறினார். உடனே அந்த எம தூதன் அம்மாவின் உடலில் நுழைந்து இவளுக்கு ஆயுள் முடிந்துவிட்டது, இவளை அழைத்துச் செல்கிறேன் என்று கூறி எங்களிடம் தேநீர் கேட்டார். பிறகு நாங்கள் தேநீர் செய்யும் பொழுது, எம தூதன் உங்கள் வீட்டில் மிக பெரிய சக்தி இருக்கிறது என்னால் இங்கு இருக்க முடியவில்லை சீக்கிரம் தேநீர் கொடுங்கள் என்று சொல்லி சூடான தேநீரை அப்படியே குடித்துவிட்டு சென்று விட்டான். போகும் பொழுது அந்த எம தூதன், உங்கள் வீட்டில் பூரண பரமாத்மா இருக்கிறார் என்னால் இவளை கொண்டு செல்ல முடியவில்லை என கூறிவிட்டு சென்றுவிட்டார். சிறிது நேரம் கழித்து என் தாயின் உடலில் ரத்தக் கசிவு நின்றுவிட்டது. கறுத்து போன நாக்கும் வெண்மையானது. சந்த் ராம்பால் ஜி அவர்களின் கருணையால் என் தாய் பூரண நலம் பெற்றாள். கபீர் பரமேஸ்வரர் என் தாயின் ஆயுளை ஐந்து வருடங்களுக்கு உயர்த்தினார். சத்பக்தியை செய்து 2005 ஜுலை 24 அன்று சத்யலோகம் சென்றார்.

*பக்தர் ரமேஷ் தாஸ், தொடர்பு எண். 74044-38000*

## சிறுநீரகத்தை சீராக்கி அசுரனை மனிதனாக்கியது

நான் பக்தன்ஜெகதீஸன், தந்தை பெயர் ஸ்ரீ பிரபு ராம், பஞ்சாப் கோட கிராமம், தில்லியில் வசிக்கிறேன். நான் டெல்லி போக்குவரத்து கழகத்தில் மெக்கானிக்காக உள்ளேன். மது என்னை அசுரனாக மாற்றியிருந்தது. மது, மாமிசம், புகைத்தல் என்பதே என் பழக்கம் ஆயிற்று.

நான் மாலை 7-8 மணிக்கு வேலையிலிருந்து வீடு திரும்புவேன். தினமும் குடித்துவிட்டு 9-10 மணிக்கு தள்ளாடிய படியே வீட்டிற்கு வருவேன். வந்ததும் மனைவியையும், குழந்தைகளையும் அடிப்பேன். அப்பா தீனி கொண்டு வருவார் என்று காத்திருக்கும் குழந்தைகள் பயந்து கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொள்வார்கள்.

என் மனைவி சுமித்ரா தேவியும் தன் துயரமான வாழ்க்கையை நகர்த்திக் கொண்டு இருந்தாள். அவளுடைய இரண்டு சிறுநீரகங்களும் பழுதாகிவிட்டது. மருந்து உண்டாலும், 6 மாதத்திற்கு மேல் அவள் உயிர் வாழ மாட்டாள் என மருத்துவர்கள் சொன்னார்கள். ஆல் இந்தியா மெடிக்கல்

மற்றும் டில்லியில் டாக்டர். ராம் மனோகர் லோஹியா மருத்துவமனையில் சிறுநீரகம் பழுதடைந்துள்ளதாகவும், ஆறு மாதங்களுக்கு மேல் உயிர்வாழ முடியாது என்றும் கடைசி வரை மருந்து சாப்பிட வேண்டும் என்றும் அறிக்கை வந்தது. அப்பா குடிகாரன், அம்மா மரணப் படுக்கையில், அப்பாவிப் பிள்ளைகளின் கதி என்னவாகும். அம்மா ஆறு மாதத்தில் இறந்துவிடுவாள் என தெரிந்ததும் அந்தக் குழந்தைகள் கதறி அழுதனர். அந்த குழந்தைகள் தாயின்மடியில் விழுந்து, கடவுளே அம்மாவுடன் எங்களையும் அழைத்துக்கொள் என கதறி அழுதனர்.

குழந்தைகளின் பிரார்த்தனை கடவுளுக்கு கேட்டது. எங்கள் பக்கத்து வீட்டில் ஒரு பக்தை நிகாலி தேவி என்பவர் சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் உத்தரவு பெற்று 1996 ஆம் ஆண்டு டிசம்பர் 30 அன்று மூன்று நாட்களுக்கு சத்குரு கரீப்தாஸ் ஜி மகராஜின் புனித உரைகளின் தொடர் பஜனை ஏற்பாடு செய்திருந்தார். இதில் சந்த் ராம்பால் ஜி மகராஜ் 31 டிசம்பர் 1996 அன்று இரவு 9 மணி முதல் 11 மணி வரை சத்சங்கம் (சொற்பொழிவு) செய்தார். என் மனைவி சுமித்ரா தேவியும் சத்சங்கம் கேட்க அங்கு சென்றிருந்தாள். சிறிது நேரம் கழித்து நானும் (ஜெகதீஸ்) என் பணிமுடிந்து வீட்டிற்கு வந்தேன். மனைவி பக்கத்தில் நிகாலி தேவி வீட்டிற்கு சத்சங்கம் கேட்கச் சென்றத்தை அறிந்து கோபமடைந்தேன், அவளை அடித்து அழைத்து வர அங்கு சென்றேன். நான் மது அருந்தியிருந்தேன். நான் நிகாலி தேவியின் வீட்டிற்கு சென்றபோது, சந்த் ராம்பால் ஜி அவர்களின் சொற்பொழிவு நடந்து கொண்டிருந்தது. திரளான பக்தர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். எல்லோரையும் பார்த்ததும் ஒன்றும் பேசாமல் அமைதியாக பின்பக்கம் அமர்ந்துவிட்டேன்.

**சத்சங்கத்தில் மகராஜ் ஜி அவர்கள் கூறியதாவது:**

ஷராப் பீவை கத்வா பானி, சத்தர் ஜன்ம ஷ்வான் கே ஜானி /
கரீப், சௌ நாரி ஜாரி கரைன், சுரபான் சௌ பார் /
ஏக் சிலம் ஹுக்கா பரைன், துபைன் காலி தார் //
கபீர், மானுஷ் ஜன்ம பாய் கர், நஹின் பஜைன் ஹரி நாம் //
ஜெய்சே குவா ஜல் பினா, குத்வாயா கிஸ் காம் //

மகராஜ் ஜி சொற்பொழிவில் மதுவின் பாவத்தை விவரித்தார். தந்தையால் மார்போடு கொஞ்ச வேண்டிய குழந்தைகள், குடிகாரனைப் பார்த்ததும் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொள்கிறார்கள். குடிகாரன் செல்வமும் மரியாதையை இழந்து, உற்றார் உறவினர் நண்பர்களைத் துன்புறுத்தி சாபங்கள் பெறுகிறான். கட்டிய மனைவியும் குழந்தைகளும் கண்ணீர் வடிக்கின்றனர். கூடவே மனைவியின் உறவினரும் இரவு பகலாக கவலை படுகிறார்கள். அந்த பாவங்களை அவன் தன் தலையில் சுமக்க வேண்டி வரும். கடவுள் தந்த நல்ல மனித வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்ளக்கூடாது. மாணவன் பள்ளி செல்லாது, ஊர்சுற்றினால் பிற்காலத்தில் கூலி வேலை செய்ய வேண்டிவரும். பின்னால் தன் சக நண்பர்களைப் பார்த்து வருத்தப்படுவான், அப்போதே யோசித்திருக்க வேண்டும். பரமேஸ்வர் கபீர் ஜி கூறியது :

அச்சே தின் பீச்சே கயே, குரு சே கியா ந ஹெத் /
அப் பச்தாவா க்யா கரே, ஜப் சிடியா சுக் கயி கேத் //

பக்தி செய்யாதவன் பறவையாகவும், விலங்காகவும், பல

உயிரினங்களில் பிறக்க வேண்டி வரும். நாயாய் பிறந்து, வெயில், மழை, சாக்கடை, சகதியில் உழல வேண்டிவரும் வீடு வீடாக நுழைந்து அடி வாங்க வேண்டி வரும். பசியால் மனித மலம் திண்ண வேண்டி வரும். மனிதப்பிறவி கிடைத்த பொழுது அவன் பக்தி செய்து குடும்பத்தைக் காப்பாற்றி, நல் வழியில் நடந்திருந்தால் சுகமான வாழ்க்கை அமையும். சாராயத்தின் போதை கொஞ்ச நேரம்தான். பக்தியின் வழி பாதை நிரந்தரமான ஆனந்தமாகும் என்று விவரித்தார். மேற்கண்ட சந்த் ராம்பால் ஜி மகராஜ் ஜியின் சொற்பொழிவு கேட்டு என் போதை இறங்கியது. பிறகு அழுதேன் எனக்கு தூக்கம் வரவில்லை. 1.1.1997 மதியம் என் மனைவியுடன் சென்று சந்த் ராம்பால் ஜி அவர்களை வணங்கி தீட்சை பெற்றேன். பிறகு இன்று வருடம் 2005 வரை மது புகையிலை, மாமிசம், இவைகளைத் தொடவில்லை. என் மனைவியும் தீட்சை பெற்றாள். அவளும் பூரணமாக குணமடைந்தாள், மருத்துவரின் அறிக்கைகளும், எக்ஸ்ரே படம் இன்றும் எங்கள் வீட்டில் உள்ளன.

நீங்களும் பிரபு பாதங்களை சரண் அடையுங்கள் என்பதே என் பணிவான வேண்டுகோள். சந்த் ராம்பால் ஜி மகராஜை பரமேஸ்வரரின் தூதராக குரு ரூபத்தில் வந்துள்ளார். இலவசமாக தீட்சை பெற்று நலம் பெற வேண்டுகிறேன். சத் சாகேப்!

*பக்தன் ஜெகதீஷ், மொபைல் எண்: 92684-75242*

## பாதை தவறிய பக்தர் ஹன்மத் தாஸை மீட்பது

சத்குரு ராம்பால் ஜி மகராஜின் கருணை.

எனது பெயர் பகத் ஹன்மத் தாஸ், மத்தியப் பிரதேசத்தில், சாகர் மாவட்டம், ஹினோத் கிராமத்தில் வசிக்கிறேன். சத்குரு ராம்பால் ஜி மகராஜின் ஆசீர்வாதத்தால் என் வாழ்வில் நடந்த சில அதிசயத்தை சொல்ல விரும்புகிறேன்.

நான் ஜுலை 2014 இல் தீட்சை எடுத்தேன், மேலும் பர்வாலா ஆசிரமத்தில் சத்குரு தேவ் ஜியிடம் ஆசி பெற்றேன். ஆனால் நவம்பர் 18, 2014 அன்று பர்வாலாவில் நடந்த சம்பவத்தால் இந்த பக்தியை விட்டு விட்டு முந்தைய வழிபாட்டை செய்ய ஆரம்பித்தேன். அதன் பிறகு, எங்கள் மாவட்டத்திலும் ஆசிரமம் திறக்கப்பட்டது. இதை அறிந்ததும், நான் ஆசிரமத்திற்குச் சென்று மீண்டும் தீட்சை எடுத்தேன். ஆனால் தீட்சைக்கு முன்பு சொல்லும் நிபந்தனைகள், மது, மாமிசம் உண்ணக் கூடாது, மற்ற வழிபாடு செய்யக் கூடாது போன்ற விதிகளை நான் பின்பற்றவில்லை.

பின்னர் எனக்கு ”அப்லாடிக் அனீமியா” (aplastic anemia) என்ற தீராத நோய் ஏற்பட்டது. அதாவது நோயாளியின் உடலில் இரத்தம் உண்டாகாது, இரத்த பாட்டிலை ஏற்ற வேண்டும் அதாவது இரத்தம் குறைந்தவுடன் மீண்டும் இரத்தத்தை ஏற்ற வேண்டும். சந்த் ராம்பால் ஜி மகராஜ் சத்சங்கத்தில் கூறுகிறார்:–

ஜப் லக் ஹம்ஸா ஹமரி ஆனா, கால் லகே நஹீம் தேரா பானா /

அதாவது பக்தன் விதிகளை பின்பற்றும் வரை அவனுக்கு எந்த பிரச்சனையும் வராது, ஆனால் நான் விதிகளை சரியாக பின்பற்றவில்லை. இந்த நோயின் சிகிச்சைக்காக நான் இங்கு உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றேன், பின்னர் 2018 ஏப்ரலில்

நான் நாக்பூருக்கு பரிந்துரைக்கப்பட்டேன், பிறகு நாக்பூர் **C.I.H.O** சிஹோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அங்கு டாக்டர். அவினாஷ் போப்லி அனைத்து பரிசோதனைகள் செய்த பிறகு, உங்களுக்கு ரத்தப் புற்றுநோய் உள்ளது, அதனால் உங்கள் ரத்தம் தண்ணீராக மாறுகிறது என்று கூறினார். பிறகு 2018 மே 18 அன்று மீண்டும் ரத்தம் குறைந்ததால் நாக்பூர் சென்றோம்.

மருத்துவ ரிப்போர்டில், சத்குரு ராம்பால் ஜி மகராஜின் அருளால் ரத்த புற்றுநோய் வரவில்லை. ஆனால் டாக்டர். அவினாஷ் பொப்லின், உங்களுக்கு "aplastic anemia" இருப்பதால், உங்கள் உடலில் இரத்தம் உண்டாகுவதில்லை,அதற்கு தற்காலிக சிகிச்சை இரத்தமாற்றம், நிரந்தர சிகிச்சையானது "**Bone Marroew Transplant**" சிகிச்சை ஆகும், அதிலும் 80 சதவீதம் சரி ஆவதில்லை, மற்றும் இந்த சிகிச்சைக்கான செலவும் கிட்டத்தட்ட 19 லட்சம் ஆகும் என்றார்.

பின்னர் நான் தொலைபேசி மூலம் சத்குரு ஜியிடம் பிரார்த்தனை செய்தேன், பின்னர் சத்குரு தேவ் ஜியிடமிருந்து மீண்டும் தீட்சை எடுத்து விதிமுறைகளை பின்பற்றி பக்தி செய்யவும், பரமாத்மா கருணை காட்டுவார் என்று உத்தரவு வந்தது. குருஜியின் உத்தரவு பெற்ற பிறகு என் உடல் படிப்படியாக முன்னேறியது. முதலில் குருஜியின் கருணையால், இரத்தத்தின் தேவை சரியான நேரத்தில் கிடைத்தது, பின்னர் 2019 ஏப்ரல் மாதத்திலிருந்து எனக்கு இரத்தம் மாற்றம் நிறுத்தப்பட்டது. சுமார் 1 வருடம் நோயால் பாதிக்கப்பட்டு இன்று நான் ஆரோக்கியமாக இருக்கிறேன், ரத்தம் ஏற்ற வேண்டிய அவசியமில்லை. இந்த நோயால் எனக்கு ஹீமோகுளோபின் 2 – 3 கிராமாகவே இருந்தது, பிளேட்லேட்டுகள் 2000 மாகவே இருந்தது. நான் டெல்லி எய்ம்ஸில் மற்றும் இந்தோரில் டாக்டர். ஏ.கே.திவேதியிடம் மேலும் ஜபல்பூர், போபால், நாக்பூர் மற்றும் பல இடங்களில் சிகிச்சை எடுத்தேன், ஆனால் எந்த பலனும் இல்லை. சத்குரு ராம்பால் ஜி மகராஜ் அளித்த பக்தி மூலம் மட்டுமே நான் இப்போது ஆரோக்கியமாக இருக்கிறேன். இன்று எந்த மருந்தும் இல்லாமல், முற்றிலும் ஆரோக்கியமாக இருக்கிறேன். எல்லாம் சத்குரு ராம்பால் ஜி ஜியின் கருணை.

*பகத் ஹன்மத் தாஸ், ஹினூத் கிராமம், சாகர் மாவட்டம்,*

*மொபைல் எண்: 93035-77415*

## ஆவியாலும் நோயாலும் பாதிக்கப்பட்ட குடும்பத்தை சீராக்குதல்

நான் பக்தை அப்லேஸ் தேவி, கணவர் பெயர் ராமேகர், மிரச் கிராமம், பிவானி மாவட்டம் (ஹரியானா). என் சோகமான வாழ்க்கையின் சிலவற்றை சொல்கிறேன். நானும் எனது குழந்தைகள் ராகுல் மற்றும் ஜோதியும் கடந்த காலங்களை நினைக்கும்போது உடல் நடுங்குகிறது.

1995ல் டிசம்பர் 6 அன்று இரவு பணியில் இருந்த எனது கணவரை மர்ம நபர்கள் கொன்றுவிட்டனர். ஆனால் கபீர் பரமேஸ்வரர் என் கணவருக்கு உயிர் பிச்சை கொடுத்தார், அதனால் இன்று நாங்கள் சத்குரு ராம்பால் ஜி மகராஜின் கருணையால் பூரண பரமாத்மாவின் சரணடியில் இடம் பெற்றுள்ளோம். என் கணவருக்கு இடுப்பைச் சுற்றி நாடா இருக்கும்

இடத்தில் ரத்தம் கசியும். குழந்தைகளின் சளியிலும் ரத்தம் வரும். நானும் இதய நோயால் அவதிப்பட்டேன். என் கணவர் தில்லி போலீசில் வேலை பார்த்தார். எனக்கு உடம்பு முழுவதும் சிரங்கு புண் வந்தது. என் கணவர் ராமேகரின் மன நிலையும் கெட்டுவிட்டது.

நாங்கள் 1995 முதல் 2000 வரை சுமார் பத்துக்கும் மேற்பட்ட பேராசை பிடித்த குருக்களிடம் சென்றோம். மேலும் கங்கை, யமுனா, ஹரித்வார், ஜவாலா ஜி, சாமுண்டா, சிந்த்பூர்ணி, நாகர் கோட், பாலாஜி, மெஹந்திபூர், குர்கான் வாலி மாய், கவுரக் திலா ராஜஸ்தான் போன்ற தலங்களுக்கு குழந்தைகளுடன் பலமுறை சென்றோம், ஆனால் எந்த பயனும் இல்லை. நாங்கள் ஹோலி, தீபாவளி பண்டிகைகளின் போது மசூதிக்குச் சென்று அமர்ந்து கொள்ளும் அளவிற்கு எங்கள் குடும்ப நிலை இருந்தது.

எங்களுக்கு சந்த் ராம்பால் ஜி மகராஜ் மூலம் கபீர் பரமேஸ்வரரின் அருள் பெறும் பாக்கியம் கிடைத்துள்ளது. எங்கள் நோய்களும், பேய்களும் சத்குருதேவரின் பாதத் தூசிக்கு முன்னால் கூட நிற்க முடியவில்லை.

பிப்ரவரி 25, 2001 அன்று, எனக்கு ஒரு பேய் ஓட்டும் மந்திரவாதி போன் செய்து, உங்கள் பெயர் அப்லேஷ் தானே? என கேட்டார். நான் ஆம், நீங்கள் யார் என்று கேட்டேன். அப்போது அந்த மந்திரவாதி, இந்த பல்வான் யார், அவருக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்டான். உடனே நான், நீ யார் இதையெல்லாம் ஏன் கேட்கிறாய்? என்று கேட்டேன். அப்போது அந்த மந்திரவாதி, மகளே, நான் பெயரை சொல்ல விரும்பவில்லை, நான் ஹன்சி நகரத்திலிருந்து பேசுகிறேன். இந்த பல்வானும் மற்ற ஒருவனும் வந்து, உங்கள் மீது செய்வினை செய்து பூதங்களை ஏவி உங்களை நாசமாக்க பணம் கொடுத்து சென்றார்கள். செய்வினை நடந்ததா இல்லையா என்று தெரிந்துகொள்ள உங்கள் தொலைபேசி எண்ணை பல்வானிடம் வாங்கினேன். நான் இந்த பாவ காரியத்தை நேற்று இரவு செய்து முடித்தேன். இரவு தூங்கும் போது வெள்ளை உடை உடுத்திய உங்களுடைய குரு வந்தார். “இதன் பலனை நீயே அனுபவிப்பாய்”,என்று கூறினார். மேலும் இந்த குடும்பம் பரம சக்தியான கபீர் பரமேஸ்வரரின் வழிபாட்டில் இருக்கிறார்கள். நீ என்ன? எமனே வந்தாலும் இந்தக் குடும்பத்துக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியாது என்றும் சொன்னார்.

கரீப், ஜம் ஜௌர ஜாஸே தாரே, மிதேயின் கரம் கே லேக் /
அட்லி அடல் கபீர் ஹைன், குல் கே சத்குரு ஏக் //

பொருள்: கால் மற்றும் காலனின் தூதர்கள் மற்றும் மரணம் கூட கபீர் பரமேஸ்வரருக்கு பயப்படுகிறது. அவர் தலையெழுத்தையும் மாற்றி விடுவார். பிறகு அந்த மந்திரவாதி சொன்னான், ”மகளே, நீ பூஜிக்கும் குருநாதர் மிகவும் சக்திவாய்ந்தவர், 25 வருடங்களாக இந்த செய்வினை தொழிலை செய்கிறேன், பல குடும்பத்தை சீரழித்தேன், ஆனால் இன்று முதல்முறையாக தோற்றுவிட்டேன். மகளே, இந்த குருவை விட்டு போகாதே, இல்லையென்றால் நாசமாகிவிடுவாய். பல்வான் என்பவர் உன்னை நாசமாக்க அலைகிறான் என்று சொன்னார். நான் சொன்னேன், நாங்கள் பூரண பரமாத்மாவை பூஜிக்கிறோம், பல்வான் என் கணவரின் மூத்த சகோதரர், அவர் தெரிந்த எதிரிதான். நாங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்,

எங்கள் தேவைகள் அனைத்தையும் சத்குருதேவ் கபீர் சாகேப் தானாக நிறைவேற்றுகிறார்.

சகோதர சகோதரிகளே, உலக துக்கங்களிலிருந்து விடுபட்டு, சத்யலோகம் பாதையையும், பூரண முக்தியையும், சகல இன்பத்தையும் அடைய விரும்பினால், நீங்களும் சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் இருந்து சத்நாம் மந்திரம் பெற்று விலைமதிப்பற்ற மனித பிறவியின் பலனை பெறுங்கள் என குடும்பத்துடன் கேட்டுக்கொள்கிறோம்.

*சத் சாகேப்!*

*பக்தமதி அப்லேஷ் தேவி.*

*தொடர்பு எண்: **94680-35569***

## பக்தர் சதீஸின் சுய சரிதை

நான் சதீஷ் தாஸ். 193, செக்டர் 7, ஆர் கே புரம், புது டெல்லியில் வசிக்கிறேன். டிசம்பர் 1997 அன்று டெல்லியில், பிரீதம்பூரில் சத்குரு ராம்பால் ஜி மகராஜ் ஜியின் சத்சங்கம் நடந்தது. ஒரு நண்பன் அழைத்ததால் நான் சொற்பொழிவை கேட்கச் சென்றேன். ஆனால் பாரம்பரிய வழிபாட்டை விட சொன்னதை கேட்ட பிறகு, எனக்கு சத்சங்கத்தின் மீது ஆர்வம் குறைந்தது. சத்குருஜி வேதத்தை காண்பித்து விளக்கிக் கொண்டிருந்தார், எனக்கு புத்தகங்களை வீட்டிலேயே படித்து கொள்ளலாமே என்று தோன்றியது. இப்படி ஜோதி நிரஞ்சன் (கால்) எங்களை நினைக்கவைத்து எங்கள் பக்தி அறிவை நிறுத்திவிட்டான். சத்குருஜி சொல்கிறார்:

குரு பின் கின்ஹெய்ன் ந பாயா ஞானா, ஜ்யோன் தோதா பூஸ் சதே கிசானா/
குரு பின் பரம் ந சூட்டீன் பாய், கோடி உபாய் கரோ சதுராயீ//

பொருள்: குரு இல்லாமல் ஞானம் பெற இயலாது. குரு இல்லாமல் பெற்ற அறிவு நெல் உமிக்கு சமம். குரு இல்லாமல் உங்கள் மனது தெளிவு பெறாது. கோடி தந்திரங்கள் செய்தாலும் அது நடக்காது.

எனவே என் புத்தி நிலையாக இல்லாததால் நான் வீடு திரும்பினேன். 1999 இல், என் மனைவி மஞ்சுவிற்கு (பிரைன் கேன்சர்) மூளைக்கட்டி தாக்கியது. சப்தர்ஜங் மருத்துவமனையில் சிகிச்சை செய்ததில் இது தெரிந்தது. பிறகு நான் பன்த் மருத்துவமனையிலும், மேலும் எய்ம்ஸ் (**A.I.I.M.S**) மற்றும் அப்பல்லோ மருத்துவமனை புது டெல்லில் காட்டினேன்.

அனைத்து டாக்டர்களும் உடனே அறுவை சிகிச்சை செய்ய சொன்னார்கள் மற்றும் சிகிச்சையின் போது கையில் பக்கவாதம் ஏற்படலாம் என்று கூறினார். அறிக்கையைப் பார்த்த அப்பல்லோ மருத்துவர் கூட, அவருடைய கண்கள் எப்படி நன்றாக இருக்கிறது என்று ஆச்சரியப்பட்டார். அதே சமயம் கண் மருத்துவரிடம் காட்ட சொன்னார். பின்னர் கண் மற்றும் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரும், கண் பார்வை எப்போது வேண்டுமானாலும் போகலாம், எனவே மாதம் இருமுறை கண்களைப் பரிசோதிக்குமாறு சொன்னார்கள், ஏனென்றால் மூளைக் கட்டி அத்தகைய இடத்தில் உள்ளது. நானும் என் மனைவியும் கால்களால் ஊனமுற்றவர்கள், கை மற்றும் கண் போய்விடும் என்று கேட்டதும் மூச்சு நின்றுவிட்டது. இறுதியாக புதுதில்லியில் உள்ள பன்த் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்ய நினைத்தேன். மருத்துவர் கூறியபடி டெல்லி, திமார்பூரில் உள்ள இன்மாஸ் மருத்துவமனையில் ஏம்.அர்.ஐ. மற்றும் மற்ற

பரிசோதனைகளும் செய்தேன். ஆபரேஷன் தேதி மட்டுமே குறிக்க வேண்டி இருந்தது. அப்போது சந்த் ராம்பால் ஜி மகராஜின் சத்சங்கத்தில் கேட்ட ஒரு உரை நினைவுக்கு வந்தது:

ஜின் மில்தே சுக் உபஜே மிடேன் கோடி உபாத் /
புவன் சதுர்தஷ் தூண்டியோ, பரம் ஸ்நேஹி சாத் //

அப்போது பரமேஸ்வரர் எங்கள் பக்தி அறிவை திறந்து வைத்தார், ஆப்ரேசனுக்கு முன்பு தீட்சை எடுத்து பார்ப்போம் என்று தோன்றியது. பிறகு நண்பருடன் சென்று 2001 பிப்ரவரி 4 அன்று, சந்த் ராம்பால் ஜி மகராஜிடம் தீட்சை பெற்று, முந்தைய பூஜைகளை விட்டுவிட்டோம். சத்குரு ஜி, வீட்டில் புனித உறைகளின் தொடர் பஜனை செய்யுமாறு அறிவுறுத்தினார், மேலும் கடவுள் விரும்பினால், எல்லாம் சரியாகிவிடும் என்று கூறினார். சத்குருவின் உத்தரவின்படி மூன்று நாட்கள் வீட்டில் புனித உறைகளின் தொடர் பஜனை செய்தோம். பிறகு மருத்துவரிடம் ஆபரேஷன் தேதியைப் பெற புது தில்லி, பந்த் மருத்துவமனைக்குச் சென்றோம். மருத்துவர் மீண்டும் எம்.ஆர்.ஐ. (MRI) செய்து பார்த்து ஆபரேஷன் தேவையில்லை என்றார். அப்போது எனக்கு சத்குரு சொன்ன உரை நினைவுக்கு வந்தது:

சத்குரு தாதா ஹைன் கல் மாஹின், பிரான் உதாரன் உத்ரே சாயீ /
சத்குரு தாதா தீன் தயாலன், ஜம் கிங்கர் கே தோடேன் ஜால் //

நாங்கள் சத்குருவை தியானித்து கண்ணீர் மல்க அழுதோம். "பரமேஸ்வரா உமது புகழை பாட வார்த்தையே இல்லை." சந்த் ராம்பால் ஜி மகராஜின் அருளால், எங்கள் ஆப்ரேஷன் தவிர்க்கப்பட்டது. அதன் பிறகு எந்த மருந்தும் இல்லாமல் மகிழ்ச்சியாக வாழ்கிறோம்.

நவம்பர் 20, 2004 அன்று இரவு காலனின் தாக்குதலால், என் மனைவி சவம் போல படுத்துவிட்டாள். பரமேஸ்வரரின் அமுத நீர் பருக அவள் தெளிந்தாள். பின்னர் அவரை சத்குருவிடம் அழைத்து வந்தபோது, அன்றோடு இவருக்கு ஆயுள் முடிந்துவிட்டது, கபீர் பரமேஸ்வர் இவள் ஆயுளை பக்தி செய்வதற்கு நீடித்துள்ளார் என்று சொன்னார்.

நவம்பர் 22, 2004 அன்று சோனிபத்தில் சத்சங்கம் நடந்து கொண்டிருக்கும்போது என் மனைவிக்கு பக்கவாதம் வந்தது. கைகளும் வலுவிழந்தன. அப்பொழுது சத்குருவின் கை என் மனைவியின் கையில் தென்பட்டது. அந்தக் காட்சி 5 நிமிடங்கள் நீடித்தது. என் மனைவியின் கைகள் சீரானவுடன் சத்குருவின் கைகளும் மறைந்தன. இன்றுவரை என் மனைவி ஆரோக்கியமாக இருக்கிறாள்.

சத்குரு தத்துவதரிஷி சந்த் ராம்பால் ஜி மகராஜ், கபீர் பரமேஸ்வரரின் அவதாரம் என்று நிரூபித்துவிட்டார்.

கரீப், ஜம் ஜௌரா ஜாசே டேரைன், மிடேன் கர்ம கே அங்க் /
காகஜ் கீரேன் தர்கஹ் தயீ, சௌதஹ கோடி ந சம்ப் //

*பக்தன் சதீஷ் மெஹ்ரா,*

*டெல்லி, செல் நம்பர் - **97181-84704***

## சத்பக்தியால் புற்றுநோயும் சிறுநீரக நோயும் குணமானது

நான் ஜெயஸ்ரீ தாசி, கண்டவா மாவட்டம் (எம்.பி.), சுல்காவ் கிராமத்தில் வசிப்பவள். திருமணமாகி எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு எனது உடல்நிலை மோசமடைந்தது. என் கணவர் என்னை கிராமத்தில் உள்ள

மருத்துவர்களிடம் அழைத்துச் சென்றார், ஆனால் பயனில்லை. என் உடல்நிலை மேலும் மோசமடைந்தது, பின்னர் நான் இந்தோர் மெடிகேர் மருத்துவமனையில் 15 நாட்கள் அனுமதிக்கப்பட்டேன். நான் மும்பையிலும் பரிசோதனை செய்தேன். இதில் 25 ஆயிரம் செலவானது, இதில் எனது இரண்டு சிறுநீரகங்களிலும் தொற்று ஏற்பட்டு வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிட வேண்டும் என்பது தெரிய வந்தது. நான் 6 ஆண்டுகள் டாக்டர் அன்ஷுத் ரியாஸிடம் சிகிச்சை பெற்றேன். ஆனால் பலன் அளிக்கவில்லை. அதன் பிறகு நாங்கள் இந்தோரில் உள்ள டாக்டர். நரேஷ் பஹ்வா எம்.டி. (மருத்துவம்), டி.எம். (நெப்ராலஜி, பி.ஜி.ஐ. சண்டிகர் சிறுநீரக நோய் மற்றும் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்) அவர்களிடம் சிகிச்சை பெற்றேன். எனது சிகிச்சைக்கு ஐந்து லட்சமும், மருந்துகளுக்கு மாதம் பதினைந்து ஆயிரம் செலவிடப்பட்டது. அப்போது எனக்கு 26 வயதானது, எனக்கு ஒரு மகன் இருந்தான். ஆனால் ஒரு வருட சிகிச்சைக்குப் பிறகு, டாக்டர். நரேஷ், இந்த பெண் 10 வருஷத்துக்கு மேல் வாழ முடியாது என்று சொன்னதும் என் குடும்பத்தின் மீது இடி விழுந்தது. ஏனென்றால், மரணம் நிர்ணயிக்கப்பட்டால், வாழ்க்கையின் மீதமுள்ள நேரம் மரணத்தை விட கடினமாகிறது.

அப்போது, பூரண பரமாத்மா கருணை காட்டினார். எனது அத்தை மகள் ரேகாவிற்கு புற்று நோய் இருந்தது. 2013 இல் அவள் சந்த் ராம்பால் ஜி மகராஜிடமிருந்து தீட்சை பெற்றாள். தீவிரமாக பக்தி செய்ததால் அவளுடைய புற்று நோய் குணமானது. அவள்தான் என்னை தீட்சை எடுக்க கூறினார். நான் 22 ஏப்ரல் 2018 அன்று தீட்சை எடுத்துக் கொண்டேன், முழு நம்பிக்கையுடன் பக்தி செய்தேன், 15 நாட்களுக்குள் என் மருந்து மாத்திரை நிறுத்தப்பட்டது. சத்குரு ராம்பால் ஜி மகராஜ் ஜியின் அருளால் இன்று நான் முற்றிலும் நலமாக இருக்கிறேன். இன்று எல்லா வேலைகளையும் முன்பு போலவே செய்கிறேன். நான் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவள், வயல்களில் வேலை செய்கிறேன். அதேசமயம், நோய்வாய்ப்பட்ட நேரத்தில், என் உணவைக் கூட என்னால் தனியாகச் சாப்பிட முடியவில்லை.

சந்த் ராம்பால் ஜி மஹாராஜிடம் இருந்து நாம் தீட்சை எடுத்து, உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் நலம் பெற நமது உலக சகோதர சகோதரிகளுக்கு ஒரு வேண்டுகோள்.

மனுஷ்ய ஜென்ம துர்லப் ஹை, யே மிலே நா பாரம்பார் /
தருவர் சே பத்தா டூட் கிரே, ஃபிர் பஹுர் ந லகதா டார் //

*பக்தமதி ஜெயஸ்ரீ தாசி,*

*தொலைபேசி எண் : **99774-13652***

## குருவருளின் மகிமை

நான் திரிலோக தாஸ் பைராகி, டிமர்கேடா கிராமம், கட்டனி மாவட்டம், மத்தியபிரதேசத்தை சேர்ந்தவன். நான் 27.6.2010 அன்று தீட்சை பெற்றேன். இது வெறும் தீட்சை அல்ல, அமுதம் பருகுவதற்கு சமம் என அப்போது தெரியவில்லை. நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. குருதேவரை வணங்கி சொல்கிறேன். எனக்கு நேர்ந்த அதிசய அனுபவங்களை நான் கற்பனை கூட செய்து பார்த்ததில்லை. தீட்சை எடுத்து ஆறு மாதங்களுக்குப் பிறகு என் மகன் நோய்வாய்ப்பட்டான்.

அவன் ஐந்து மகள்களுக்குப் பிறகு பிறந்தவன். அவனுக்கு ஒருமாதம் தொடர்ந்து டாக்டரிடம் சிகிச்சை அளித்தும் நோய் குணமாகவில்லை. ஒரு நாள் திடீரென்று காலை 9 மணிக்கு என் மகன் மயக்கமடைந்தான். அவனை உமரியாபான் நகரத்திற்கு கொண்டு சென்றேன். அனைத்து மருத்துவர்களும் சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டனர். பிறகு சிஹோராவுக்கு கொண்டு சென்றேன். அங்கு அனைத்து மருத்துவர்கள், மகனின் நிலையைப் பார்த்து, இறந்துவிட்டான் என்று சொல்லாமல் சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டனர். அவனுக்கு ஒரு வயதுதான் ஆகிறது. அவனுக்கு பிராணவாயு கொடுத்தால் பிழைக்கலாம் என ஒரு மருத்துவர் சொல்ல, வாடகை கார் கொண்டு குழந்தைகள் ஆராய்ச்சி மையம் உள்ள ஜபல்பூர் சென்றேன். அங்கு இருந்த மருத்துவர் குழந்தையின் நிலையைப் பார்த்து, இவன் உடம்பில் ஊசியை போட்டாலும் எந்த அசைவும் இல்லை, அதனால் அனுமதிப்பது ஆபத்தானது என்று கூறினார். நான், சிகிச்சை கொடுங்கள் மற்றவை கடவுள் மீது விட்டுவிடுங்கள் என்று கோரினேன். 6 மணி நேரத்தில் சுயநினைவு வரவில்லை என்றால் அவ்வளவுதான் என்று டாக்டர் சொன்னார். 12 மணிநேரம் ஆகியும் மகனுக்கு சுயநினைவு வரவில்லை. நானும் மனைவியும் அழுதுகொண்டே இருந்தோம். திடீரென எனக்கு “ஞான கங்கா”, மற்றும் “பக்தி சுதாகர் கோ சந்தேஷ்”, என்ற புத்தகங்களில், பக்தர்கள் கூறிய அதிசயங்கள் நினைவுக்கு வந்தது.

நான் குருவின் பாதத்தை நினைத்து, என் மகனைக் காப்பாற்றுங்கள், குரு மகிமை மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டினேன். சுமார் 12 மணி அளவில் டாக்டர் ரவுண்சில் வந்ததும், குழந்தையின் உடலில் ஏதும் அசைவு வந்ததா? என்று கேட்டார். நான் காலையில் இருந்தபடியே இருக்கிறது என்று சொன்னேன். பிறகு டாக்டர் குழந்தையின் தொடையில் ஒரு ஊசி போட்டார், உடனே குழந்தை அழ ஆரம்பித்தது. எங்கள் மனதில் மகிழ்ச்சி அலை பாய்ந்தது. மருத்துவர் என் தலையில் கையை வைத்து இதுபோன்ற நிகழ்வு அதிசயமானது என சொன்னார்.

சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், பத்து அல்லது இருபது நிமிடத்திற்கு பிறகுதான் ஊசி தனது வேலையை செய்யும், ஆனால் ஊசிமுனை பட்டவுடன் மகன் உயிர்த்தெழுந்தான் என்றால் அது கபீர் பரமேஸ்வரரின் அருளின்றி வேறு ஏது.

“சத்குரு ஷரன் மே ஆனே சே ஆயி டலே பலா
ஜை பாக்ய மே மிருத்யு ஹோ‌ா காண்டே மே டல் ஜா”

முழுமனதுடன் மந்திரம் ஜபித்தால் அதிசயங்கள் நடக்கும் என்று குருஜி கூறுகிறார். வியந்துபோன நான் குருவின் பாதங்களைப் போற்றி, நன்றி கூறி அழுதேன். மருத்துவர் எட்டு நாட்கள் சிகிச்சை அளிக்க வேண்டும் என சொன்னார். நாள் ஒன்றுக்கு ஐந்தாயிரம் செலவானது. நான் டாக்டரிடம் காலையில் டிஸ்சார்ஜ் செய்ய கூறினேன், டாக்டர், வீட்டிற்கு கொண்டு சென்றால், இந்த குழந்தை இறக்க கூடும் என்றார். நான் பார்த்துக்கலாம் என கூறி டிஸ்சார்ஜ் செய்ய சொன்னேன். 6 மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது அவனுக்கு காய்ச்சல் கூட வரவில்லை. சைக்கிள் கூட வாங்க முடியாத நிலையில் இருந்த எனக்கு ஸ்டேட் பேங்க் மேனேஜர் கடன் தர தானாக முன்வந்தார். ஒன்றரை லட்சம் ரூபாய் பணம் லோன் கிடைத்தது. சைக்கிள்

கூட வாங்க முடியாத நான் 55,000 ரூபாய்க்கு ஒரு பைக் வாங்கினேன். இன்று பெருமையுடன் பைக்கில் சுற்றுகிறேன். அரசு பள்ளியில் பியூனாக 16 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் எனது குடும்ப நிலை சீரடையவில்லை. ஜபல்பூர் பிரிவில் பதவி உயர்வுகள் நடந்தன, அதில் எனக்கு மட்டுமே பதவி உயர்வு கிடைத்தது. மற்றவர்களுக்கு நாற்காலியை போடும் நான், அதிகாரியாகி நாற்காலியில் அமர்ந்தேன். நான் நினைத்துக்கூட பார்க்காத அளவிற்கு என் சம்பளம் அதிகரித்தது. எனது சகோதரன் பி.எட் படிக்க சீட் கிடைக்காமல் சோகமாக இருந்தான். ஒரு நாள், திடீரென்று அவருக்கு கவுன்சிலிங் கடிதம் வந்தது, அவனால் நம்ப முடியவில்லை ஏனென்றால் அவன் மதிப்பெண்கள் 29, பி.எட் செய்வதற்காக 33 மதிப்பெண்களுக்கு மேல் தேவை, ஆனால் இந்த முறை 28 மதிப்பெண்கள் பெற்றவர்களும் தேர்வு செய்யப்பட்டனர். அதனால் வாய்ப்பு கிடைத்தது. இந்த நான்கு அதிசயங்களும் நாங்கள் நினைத்துப் பார்க்க முடியாதவை, ராமாயணத்தில் படித்தது நினைவிற்கு வந்தது. தாய் தந்தை குருவின் சொல்லை தட்டாமல் கேட்டால் கட்டாயம் அதிர்ஷ்டம் தானே வரும். இவை அனைத்தும் ஒரே வருடத்தில் நிகழ்ந்தன. தீட்சை பெற்ற ஆறு மாதங்களுக்குள் இவைகள் நிகழ்ந்தன. ஆனால் தீட்சை மட்டும் பெற்றால் போதாது, மேலும் குரு காட்டிய வழியில் செல்ல வேண்டும்.

"ஹரி ரூடை குரு டௌர் ஹை, குரு ரூடை நகீம் டைளர்"

"இறைவனை விட்டால் அடைக்கலம் குரு. குருவையே விட்டால் வழியே இல்லை." இந்த சீடனுடைய அனுபவங்கள் குருவிற்கு அர்ப்பணம்

*பக்தர் திரிலோக் தாஸ் பைராகி,*
*அரசு மேல்நிலைப்பள்ளி, முர்வரி. மாவட்டம் கட்னி (எம்.பி.)*
*மொபைல் எண்: **96858-54733.***

## 11000 வோல்ட் மின்சாரத்தில் இருந்து விடுபடுதல்

நான் சுரேஷ் தாஸ், தந்தை பெயர் ஸ்ரீ சந்த் ராம், தனானா கிராமம், சோனிபத் மாவட்டம், தற்சமயம் ரோத்தக் இல் உள்ள சாஸ்திரி நகரில் வசிக்கிறேன். சத்குருவிடம் தீட்சை பெறுவதற்கு முன்னர் என் குடும்ப நிதிநிலை மோசமாக இருந்தது. குடும்பத்தில் அனைவரும் நோய்வாய்ப்பட்டனர். மனைவி பூதங்களால் அவதிப்பட்டாள். இவ்வளவு துன்பங்கள் இருந்தும் நாங்கள் தெய்வங்களை அதிகமாக வணங்கினோம், மேலும் ஹனுமார் மீது எனக்கு அதிக நம்பிக்கை இருந்தது. ஆனாலும் துன்பங்கள் கூடின. எந்த ஒரு வேலையும் வெற்றிபெறவில்லை. பூரண பரமாத்மா சத்குரு ராம்பால் ஜி மகராஜ் என் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால், அவரை எங்களால் கடவுளாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிங்புரா கிராமத்தைச் சேர்ந்த விகாஸ் என்ற பக்தர் என்னிடம் உங்கள் வீட்டில் பூரண பரமாத்மா ஜகத்குரு ராம்பால் ஜி மகராஜ் வந்துள்ளார், நீங்கள் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்றார். அப்போது நாங்கள், இதை அறியக்கூட நேரம் இல்லாத அளவிற்கு காலன் எங்களுக்கு துன்பங்களை அளித்துள்ளான் என்று சொன்னேன். எல்லா நேரமும் மருத்துவரைப் பார்ப்பதிலும் நிதி நெருக்கடியிலும் கழிந்தது. அந்த பக்தர் அனைத்தையும் விளக்கினார், பிறகு பரமாத்மாவின் அருளால், அக்டோபர் 2010 இல் சந்த் ராம்பால் ஜி மகாராஜிடம் இருந்து தீட்சை எடுக்க நான் சத்லோக்

ஆசிரமம் பர்வாலாவிற்கு சென்றேன். தீட்சை எடுத்த பிறகு, சத்குரு ஜியின் அருளால் விவரிக்க முடியாத சுகத்தை நான் அனுபவிக்க ஆரம்பித்தேன். என் மனைவி ஆவிகளால் துன்புறுத்தப்பட்டாள். சத்குருவின் அருளால் இப்போது நலமாக இருக்கிறாள். நவம்பர் 7, 2011 அன்று 12 வயதான என் மகன் மோஹித் மேஸ்திரியை அழைத்துவரச் சென்றான். என் மகன் மேஸ்திரி வீட்டுமாடியில் ஏறி பால்கனிக்குச் சென்றான். பால்கனியில் மேலே 11000 (பதினோராயிரம்) வோல்டேஜ் கொண்ட மின் கம்பிகள் இருந்தன. எனது மகனுக்கும் மின்கம்பிக்கும் இடையே வெறும் ஒரு அடி இடைவெளி இருந்தது. அருகில் சென்றதும் மின்கம்பிகள் அவனை இழுத்து தலையில் ஒரு அங்குலம் ஆழமாக ஒட்டிக்கொண்டது.

அவன்வாய் எரிந்து, மின்சாரம் உடல் முழுவதும் புகுந்து பெருவிரல் எலும்பை உடைத்து வெளியில் வரத் தொடங்கியது. அதே சமயம் சத்குரு ராம்பால் ஜி மகராஜ் ஆகாயத்திலிருந்து ஒளியைப் போல பிரகாசிக்கும் உடலுடன் வந்து என் மகன் முன் தோன்றினார். சிறுவனின் கையைப் பிடித்து மின் கம்பியிலிருந்து விடுவித்து பால்கனியில் படுக்க வைத்தார். பிறகு அவர் செல்ல தொடங்கியதும், சிறுவன் அழைத்தான், அப்போது குருஜி, மகனே, உன்னுடன் இருப்பேன் பதற்றப்படாதே என்றார். அப்போது எனது மனைவியும் அங்கு இருந்தாள். இந்த காட்சியை தன் கண்களால் பார்த்து மிக பதட்டமானாள். ஏனெனில் சிறுவனின் உடலில் இருந்து மின் தீப்பொறிகள் வெளியேறின.

பிறகு மகனை ரோத்தக்கில் உள்ள பி.ஜி.ஐ. மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கேயும் சிறுவனுக்கு குருஜி காட்சி அளித்தார், குருஜி என்னுடன் இருக்கிறார் என்று மகன் கூறினான். இன்று குருஜியின் அடைக்கலத்தில் நாங்கள் இல்லாவிட்டால், இன்று என் மகன் உயிருடன் இருந்திருக்க மாட்டான், என் மனைவியும் பேய்களால் இறந்திருப்பாள். நாங்கள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டோம். இது சத்குரு ராம்பால் ஜி மகராஜின் கருணை.

எனது உண்மைக் கதையைப் படித்து, நீங்களும் சத்குரு ராம்பால் ஜி மகராஜின் அடைக்கலத்தில் வந்து முக்தி பெற, வாசகர்கள் அனைவரையும் வேண்டுகிறேன். மேலும் உங்கள் விதியில் எழுதப்பட்ட துன்பங்களிலிருந்து பிழைப்பீர்கள். சத்குரு ராம்பால் ஜி மகராஜின் சொற்பொழிவுகளில், கபீர் பரமேஸ்வரர் நம் அனைத்து பாவங்களையும் நீக்குவார் என்று கேட்டிருக்கிறேன். ரிக்வேதம் மண்டலம் 10 சூக்தம் 161 மந்திரம் 2 மற்றும் மண்டலம் 9 சூக்தம் 80 மந்திரம் 2 இதையே கூறுகிறது. ஒரு நோயால் சாதகனின் உயிர் சக்தி குறைந்து ஆயுள் இல்லை என்றாலும், நான் அவனுக்கு உயிர் சக்தியை கொடுத்து 100 ஆண்டுகள் ஆயுளை நீடித்து எல்லா சுகங்களையும் வழங்குகிறேன்.

அன்பர்களே, ஒவ்வொரு உயிரும் தன் கர்மவினைப்படி இன்பமும் துன்பமும் அனுபவிக்கிறார்கள். பாவம் செயலால் துன்பமும், புண்ணிய செயலால் சுகமும் பெறுகிறார்கள். இதுவரை எல்லா ரிஷி, முனி, ஆச்சாரியார்கள், பாவங்களை அனுபவித்து தான் தீரவேண்டும் என்று சொல்கிறார்கள். அன்பார்ந்த வாசகர்களே! சத்குரு ராம்பால் ஜி மகராஜ் கூறுவது, பாவங்களால் துன்பம் ஏற்படுகிறது, பாவங்கள் அழிந்துவிட்டால் துன்பம் தானாக முடிவடையும். பக்தி (வழிபாடு) செய்துகொண்டே

பாவ வினையின் துன்பங்கள் அனுபவித்தே ஆக வேண்டும் என்றால் பிறகு வழிபாடு எதற்காக? நவம்பர் 7 ஆம் தேதி, 2011 முன் ஜென்ம கர்மவினைப்படி என் மகன் இறக்க வேண்டி இருந்தது. சந்த் ராம் பால் ஜி அவர்களது கருணையால் கபீர் பரமேஸ்வர் எங்களது பாவங்களை அழித்து, மகனின் ஆயுளை நீடித்தார். ஒருவேளை அன்று அவன் இறந்திருந்தால், எங்கள் குடும்பமே நாஸ்திகர்களாக மாறி இருப்போம். ஏனென்றால், அப்பொழுது பரமாத்மாவை பற்றி நாங்கள் அறியவில்லை. இன்று கபீர் சாகேப் அவர்கள் தான் பரமேஸ்வர் என்று அறிந்து கொண்டோம். அவர் பாவங்களை அழிப்பவர், அனைத்து இன்பங்களையும் பூரண மோட்சத்தையும் தருபவர் மற்றும் சத்குரு ராம்பால் ஜி மகாராஜ் அவருடைய அவதாரமாக வந்துள்ளார்.

எனவே அன்பர்களே, நீங்கள் பர்வாலா ஆசிரமம் வந்து தீட்சை பெற்று முக்தி பெற அனைவரையும் வேண்டுகிறேன். என்னைப் போன்ற துன்பம் அடைந்த அனைவரும், என்னுடைய சுயசரிதையைப் படித்து, நீங்களும் என்னைப் போல பலன் பெறவேண்டும் என்பதே நான் உங்களிடம் பிரார்த்தனை செய்வதன் நோக்கம் ஆகும்.

*அன்புடன் சுரேஷ் தாஸ், செல் நம்பர்:* ***09829588628***

## கபீர் சாகேப்ஜியின் கருணை

சத்குரு ராம்பால் ஜி மகராஜிக்கு ஜெய்

யஜுர் வேதம், அத்தியாயம் 8 மந்திரம் 13 இல், பரமேஸ்வர் பாவிகளின் பாவங்களையும் போக்கி, நோய்களையும் தீர்ப்பார் என்று குறிப்பிட்டுள்ளது. அதற்கு நானே முன் உதாரணம்.

என் பெயர் கேசவ் மைனாலி, இந்திர பிரசாத் மைனாலியின் மகன், விகாஸ் சமிதி ஹரிஒன் கிராமம், சர்லாஹி மாவட்டம் நேபாளம்.தற்சமயம் காட்மண்டுவில் வசிக்கிறேன். நான், சுரே பாவர் (நேபாளம்) என்ற அரசியல் கட்சியின் தலைவர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். எனது மொபைல் நம்பர் 00977 9841892583. சத்குரு ராம்பால் ஜி அவர்கள் என்மீதும் என் குடும்பத்தினர்மீதும் கருணை பொழிந்து எங்களது துன்பங்களை நீக்கி சுகம் அளித்துள்ளார்கள். உலகப் பார்வையில் நான் சுகமான வாழ்க்கை வாழ்ந்தாலும், நோயால் நான் துன்பத்தில் இருந்தேன். நான் கடந்த 20 ஆண்டுகளாக ரத்தக் குவியல் நோயால் அவதிப்பட்டு வந்தேன், மலம் கழிக்கும் போது தாங்கமுடியாத வலி ஏற்படும், மேலும் 8 ஆண்டுகளாக நாள்பட்ட மூச்சுக்குழாய் அலர்ஜியால் அவதிப்பட்டு வந்தேன். அரசியல்வாதி என்பதால், பலரை சந்தித்துப்பேசும் போது வாயில் துணி வைத்து பேச வேண்டியிருந்தது. சிகிச்சைக்காக பெரிய பெரிய மருத்துவர்களை அணுகினேன். ஆனால் பலனில்லை. நான் என் 62 வருட வாழ்க்கையை அறிவற்ற சாதுக்களின் பின்னால் வீணாக்கிவிட்டேன்.

இது எனக்கு சத்குரு ராம்பால் ஜி மகராஜ் அவர்களிடம் தீட்சை பெற்ற பிறகு புரிந்தது. நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால், நான் உலகில் எந்த மருத்துவரிடமும் அரசு செலவில் சிகிச்சை பெற முடியும். ஆனால் நேபாள மருத்துவ வாரியம் இதை பரிந்துரைக்கவில்லை, ஏனெனில் எனது நோய் எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியாதது. இனி வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிட வேண்டும் என்று நினைத்தேன். ஒரு நாள்

சோகத்தில் அமர்ந்திருந்தபோது, பல ஆண்டுகளாக சத்குரு ராம்பால் ஜி மகராஜின் சீடரான எனது நண்பர் பகத் போலா தாஸ், எனது துன்பங்களை கேட்டு, சத்குரு ஜியிடம் தீட்சை பெற்றால் துன்பம் அனைத்தும் நிச்சயமாக தீரும் என்று சொன்னதால் நானும் நம்பிக்கை கொண்டேன். பெரிய பெரிய சாதுக்களின் உபதேசங்கள் கேட்டு களைத்துப் போயிருந்த எனக்கு என் நண்பனின் அறிவுரை பிரகாசமான ஒளியைத் தந்தது. நான் மூன்றாவது நாளே, (இந்தியா) ஹரியானாவில், பர்வாலாவில் உள்ள சத்லோக ஆசிரமத்திற்கு புறப்பட்டேன். என் மனைவியையும் அழைத்துச் சென்றேன், ஏனென்றால் மூட்டு வலி மற்றும் கண்ணில் நீர்க்கட்டி எனப்படும் தீராத நோயால் அவளும் அவதிப்பட்டாள். என் இளைய மருமகளும் கூட வந்தாள். நேபாளைச் சேர்ந்த பலரும் சத்லோக ஆசிரமம் சென்று கொண்டிருந்ததால் எந்த சிரமமின்றி நான் சத்லோக ஆசிரமத்திற்கு வந்தேன். நான் சாதுக்களின் சுய நலத்தை அறிவேன். ஆனால் நான் சந்த் ராம்பால்ஜி அவர்களின் புத்தகமும் சொற்பொழிவும் கேட்டதில்லை. சிலர் சொன்னதால் வந்தேன். எனவே, உடனே தீட்சை பெற விரும்பவில்லை. என் அதிர்ஷ்டவசமாக, சத்சங்கக் கூட்டம் கூடி இருந்த சமயம் நான் அங்கு சென்றதால் சத்குருவின் சொற்பொழிவு கேட்கும் வாய்ப்பு கிட்டியது. அதில் நான் புரிந்து கொண்டது. “உலகத்தின் எல்லா குருமார்களும், பண்டிதர்களும், தங்களது சுயநலத்திற்காக மதத்தின் பெயரால் நம்மைப் போன்ற அப்பாவி ஆத்மாக்களை காலனின் வலையில் சிக்க வைத்து நரகத்திற்கு அனுப்புகிறார்கள். அவர்கள் கடவுளை பார்த்ததும் இல்லை, அவரைப்பற்றிய ஞானமும் அவர்களுக்கு இல்லை. காசுக்காகவும் சமூகத்தில் மதிப்பு பெறவேண்டும் என்பதற்காக செய்கிறார்கள். “இதைக் கேட்ட பின்னரும், நான் தீட்சை பெறத் தயாராக இல்லை. என் மனைவி தீட்சை பெற தயாராக இருந்தாள். ஏனென்றால், தீட்சை பெறாமல் குருவின் தரிசனமும் ஆசி பெறுவதும் இயலாது. ஒருவேளை அரசியலின் தாக்கம் என்மீது இருந்ததால் நான் நம்பிக்கை கொள்ளவில்லை. நாங்கள் கலந்து ஆலோசித்த பிறகு 2-5-2012 அன்று தீட்சை பெற்றோம்.

பிறகு அவரை தரிசிக்க சென்றபோது அங்கே கருணைக் கடல் போல எங்கள் மீது ஆசிகளைப் பொழிவதற்கு தயாராக நின்று கொண்டிருந்தார். நான் என் நோய்கள் பற்றி சொன்னவுடன், அவர் எல்லாம் சரியாகிவிடும் என்று என் தலைமீது கை வைத்து ஆசீர்வதித்தார். உடனே அதிசயம் நிகழ்ந்தது. மறுநாள் காலை மலம் கழியும்போது எனக்கு ரத்தம் கொட்டியது. அத்தோடு என் மூலம் நோய் முடிந்துவிட்டது. 2 நாட்கள் ஆசிரமத்தில் தங்கியதில் எனது சுவாச நோய் 80 சதவீதம் சரியானது. இப்பொழுது முற்றிலும் குணமடைந்துவிட்டேன். சில நேரம் மட்டும் லேசான இருமல் இருக்கும். என் மனைவியின் மூட்டு வலியும் குணமானது. காட்மண்டு வந்த பிறகு அதே மருத்துவமனையில் என் மனைவியின் கண்ணை பரிசோதித்த மருத்துவர் ஆச்சரியப்பட்டார். நீர்க் கட்டி மறைந்து பார்வை சரியானது. எனது நோய்கள் தீர்ந்த அதிசயம் எல்லா பக்கங்களிலும் செய்தியாகப் பரவியது. என் குடும்ப உறுப்பினர்களும் சில நோயால் அவதிப்பட்டனர். எனது அண்ணன் ஒரு மருத்துவர். அவரது காலும், உடலும் வீக்கம் கண்டிருந்தது. என் மகள் மாதவிடாய் சமயங்களில் வலியால் துடித்தாள். என் இளைய மகள் ஒரு வக்கீல். அவள் கழுத்து எலும்பு பிசகியதால் அவதியுற்று

வாழ்க்கையை வெறுத்தாள். என் சகோதரியின் கணவனின் கண்ணில் நீர்க்கட்டி வந்து துயருற்றான். சத்குரு என்மீது காட்டிய கருணையால் அனைவரும் ஈர்க்கப்பட்டனர். அது வரை எனக்கு ஆசிரமத்தின் விதிகள் மற்றும் பக்தி ஓரளவு புரிந்தது. ஞான கங்கை புத்தகம் படிக்க நான் அனைவரையும் வலியுறுத்தினேன். மறுமுறை வந்தபோது அனைவரையும் அழைத்து வந்தேன். தீட்சை பெறுவதில் அவர்களுக்கு எந்தத் தடையும் இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் பக்தியால் நோயிலிருந்து நிவாரணம் பெற்று சுகமாக வாழ்கிறார்கள்.

சத்குரு ராம்பால் ஜி அவர்கள் பூரண பரமாத்மாவின் ரூபம் அல்ல, அவரே பூரண பரமாத்மா! தன்னைப் பூரண பரமாத்மாவின் தாசன் என்றும் சொல்கிறார். நம் அனைவரையும் ரட்சித்து சத்யலோகம் அழைத்துச் செல்லவே அவர் வந்துள்ளார். நமது புனித நூல்களில் “கலியுகத்தின் 5505 ஆண்டுகளுக்குபின் உலகை ரட்சிக்க குரு வருவார்.” என்று எழுதப்பட்டுள்ளது.

"கபீர். பாஞ்ச் ஹஜார் அரு பாஞ்ச் சௌ பாஞ்ச் ஜப் கலயுக் பீத் ஜாஏ
மகாபுருஷ ஃபர்மான் தப் ஜக் தாரண் கோ ஆயே"

அன்புள்ள பக்தர்களே, நேரம் வந்துவிட்டது. பூரண குருவும் வந்துவிட்டார். அமுத மழை பொழிகிறார். தற்போது உள்ள போலியான குரு சாதுக்களை தவிர்த்துவிட்டு, விரைந்து சத்குருவிடம் சரணடைந்து, இலவசமாக தீட்சை பெற்று, பூரண முக்தி அடைந்து நலன் பெறுங்கள்.

*சத் சாகேப்!*

*கேசவ் பிரசாத் மைனாலி (தாஸ்),*
*காத்மாண்டு (நேபாளம்)*
*தொலைபேசி எண். **00977.9841892583***

*****

ओ३म्

सच्चिदानन्दायेश्वराय नमो नमः

# भूमिका

सत्यार्थप्रकाश को दूसरी वार शुद्ध करके छपवाया है क्योंकि जिस समय मैंने यह ग्रन्थ 'सत्यार्थप्रकाश' बनाया था, उस समय और उससे पूर्व संस्कृतभाषण करना, पठन–पाठन में संस्कृत ही बोलने और जन्मभूमि की भाषा गुजराती थी, इत्यादि कारणों से मुझ को इस भाषा का विशेष परिज्ञान न था। अब इसको अच्छे प्रकार भाषा के व्याकरणानुसार जानकर अभ्यास भी कर लिया है, इस समय इसकी भाषा पूर्व से उत्तम हुई है। कहीं--कहीं शब्द वाक्य रचना का भेद हुआ है, वह करना उचित था, क्योंकि उसके भेद किए विना भाषा की परिपाटी सुधरनी कठिन थी, परन्तु अर्थ का भेद नहीं किया गया है, प्रत्युत विशेष तो लिखा गया है। हाँ, जो प्रथम छपने में कहीं–कहीं भूल रही थी, वह वह निकाल शोधकर ठीक–ठीक करदी गई है।

यह ग्रन्थ १४ समुल्लास अर्थात् चौदह विभागों में रचित हुआ है। इसमें १० दश समुल्लास पूर्वार्द्ध और चार उत्तरार्द्ध में बने हैं, परन्तु अन्त्य के दो समुल्लास और पश्चात् स्वसिद्धान्त किसी कारण से प्रथम नहीं छप सके थे, अब वे भी छपवा दिये हैं।

१२ सत्यार्थप्रकाशः

यद्यपि इस ग्रन्थ को देखकर अविद्वान् लोग अन्यथा ही विचारेंगे, तथापि बुद्धिमान् लोग यथायोग्य इसका अभिप्राय समझेंगे, इसलिए मैं अपने परिश्रम को सफल समझता हूं और अपना अभिप्राय सब सज्जनों के सामने धरता हूं। इसको देख दिखला के मेरे श्रम को सफल करें और इसी प्रकार पक्षपात न करके सत्यार्थ का प्रकाश करना मुझ वा सब महाशयों का मुख्य कर्त्तव्य कर्म है।

सर्वात्मा सर्वान्तर्यामी सच्चिदानन्द परमात्मा अपनी कृपा से इस आशय को विस्तृत और चिरस्थायी करे।

।। अलमतिविस्तरेण बुद्धिमद्वरशिरोमणिषु।।

।। इति भूमिका।।

स्थान महाराणाजी का उदयपुर (स्वामी) दयानन्द सरस्वती

भाद्रपद सम्वत् १९३६

சந்தேகத் தீர்வு: 1. மகரிஷி தயானந்தரின் “சத்யார்த் பிரகாஷ்” என்ற நூலை விற்று பிழைப்பு நடத்தும் விரோதிகள் சிலர். மகரிஷி தயானந்தர் 1882 வரை சமஸ்கிருதத்தில் பேசியதாக “ஞான கங்கை” நூலில் “சாஸ்திர விவாதம்” அத்தியாயத்தில் எழுதப்பட்டது தவறானது, ஏனெனில் மகரிஷி தயானந்தர் “சத்யார்த் பிரகாஷ்” முன்னுரையில் 1874 ஆம் ஆண்டு “சத்யார்த் பிரகாஷ்” நூல் முதன்முறை எழுதப்பட்டதற்கு முன்பு அவர் சமஸ்கிருதத்தில் உரை ஆற்றினார், பிறகு இந்தி கற்றுக் கொண்டார் என தெளிவாக்கியுள்ளார் என்று சிலர் கூறுகிறார்கள்.

சந்தேகத் தீர்வு : மேலே உள்ள புகைப்பட நகல் “சத்யார்த்த பிரகாஷ்” நூலின் தொடர்புடைய விவரங்கள். அதில் மகரிஷி தயானந்தர் “சத்யார்த் பிரகாஷ்” நூலை இயற்றியபோது எனக்கு ஹிந்தி முழுமையாக

தெரியவில்லை என்று விளக்கியுள்ளார். அதாவது 1882 ஆம் ஆண்டு சத்யார்த் பிரகாஷ் இரண்டாவது முறையாக வெளியிடப்பட்டது, அதுவரை மகரிஷிக்கு ஹிந்தி முழுமையாக தெரியாது. பிறகு 1882 ஆம் ஆண்டில் ஹிந்தி மொழி முழுமையாக கற்றபின்னர் சத்யார்த்த பிரகாஷ் நூலை அவர் திருத்தி வெளியிட்டார். எனவே மகரிஷி தயானந்தர் 1882 வரை சமஸ்கிருதத்தில் வேத விவாதங்களைச் செய்தார் என்பதையும் இது நிரூபிக்கிறது.

இரண்டாவது காரணம்: அறிஞர்கள் விவாதங்களை சமஸ்கிருதத்தில் செய்தார்கள். ஏனெனில் அனைத்து வேதங்களும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவை. மகரிஷி தயானந்தரால் அவற்றை இந்தியில் மொழிபெயர்க்க இயலாதது. ஏனென்றால், 1882 ஆம் ஆண்டு வரை எனக்கு ஹிந்திமொழி முழுமையாக தெரியவில்லை என்பதை அவரே ஏற்றுக்கொள்கிறார். மகரிஷி 1883 ஆம் ஆண்டு இறந்தார். எனவே மகரிஷி தயானந்தர் 1882 வரை சமஸ்கிருத மொழியில் சாஸ்திர விவாதங்கள் செய்து வந்தார் என்பதை இது நிரூபித்தது மற்றும் அவரது வெற்றி தோல்வியை சமஸ்கிருத மொழி தெரியாத மக்கள் முடிவு செய்தனர். அதனால் தயானந்தர் போன்றவர்கள் தொடர்ந்து மகரிஷி என்று அழைக்கப்பட்டனர். மகரிஷி தயானந்தர் மற்றும் கிருஷ்ணானந்தரின் விவாதத்தில், கிருஷ்ணானந்தரின் வாதம் உறுதியாக இருந்தது. இதில் கிருஷ்ணானந்தர், ஸ்ரீ பகவத் கீதை அத்தியாயம் 4 ஸ்லோகம் 7 இன் ஆதாரத்தை அளித்து கடவுள் உருவம் கொண்டவர் என்பதை நிரூபித்தார். யதா, யதா, ஹி, தர்மஸ்ய, க்லானி, பவதி, பாரத் .... இதன் பொருள், கீதா பிரஸ் கோரக்பூரில் இருந்து வெளியிட்ட ஸ்ரீமத் பகவத் கீதையில் எழுதப்பட்டுள்ளது பின்வருமாறு : பாரதா! எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து, அநியாயம் பெருகுகிறதோ, அப்போதெல்லாம் நான் என் வடிவத்தை உருவாக்குகிறேன், அதாவது உடல் வடிவில் மக்கள் முன் தோன்றுகிறேன்.

நினைவில் கொள்ளுங்கள்: மகரிஷி தயானந்தர் பேச்சை மாற்றி சமஸ்கிருதம் பேசியதால், சமஸ்கிருத மொழி தெரியாத பார்வையாளர்கள், தங்கள் சிரிப்பால் வேதம் தெரியாத தயானந்தரை வெற்றி பெற்றதாக அறிவித்தனர். மகரிஷி தயானந்தர் வெற்றி பெற்றது, ஏழாம் வகுப்பு படித்த ஜமீன்தாரரின் மகன் ஆங்கிலேயர் ஒருவர் வழி கேட்டதற்கு, ஆங்கிலேயத்தில் விடுமுறை கடிதத்தை படித்தது போல உள்ளது.

Note: for circulation amongst the followers of
Sant Rampal Ji maharaj & like minded people only.

*****